உ

கணபதி துணை.

தெய்வீகபுராணம் என்னும்

# திருக்கோவலூர்ப்புராணம்

இது

சண்பகக்கொல்லை

ம-ள-ள-ஸ்ரீ

வேங்கடாசல உடையாரவர்கள்

குமாரர்

## சௌந்தரராஜ உடையாரால்

பரிசோதித்து

ஆங்காங்கு வேண்டியசெய்யுள்களையுஞ் சேர்த்து

**பார்க்கவகுலத்தவர்கள்**

பொருளுதவியால்

கும்பகோணம்

ம-ள-ள-ஸ்ரீ

ஜி. வெ. பத்துருசாமி செட்டியாரவர்கள்

"லார்ட் ரிப்பன் யந்திரசாலையில்"

பதிப்பிக்கப்பட்டது.

**1901.**

உ

சிவமயம்.

திருக்கோவலூர்ப்புராணச்

# சிறப்புப்பாயிரம்.

---

சிதம்பரம் சித்தாந்த சைவப் பிரகாச வித்தியாசாலை

அதிபதியாயிருந்த

**ஸ்ரீ தர்க்கசூடாரதாலுதாரியவர்களின்**

மாணாக்கருள் ஒருவரான ஆலங்குடி

கோபாலையர் அவர்களால்

இயற்றிய

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

*திருவுறு ஞானக் குறளினை யுரைத்துத் தெளிவிலே மு-
தரற் பொருட்டா, மருவுறு மநுப வப்பய னுறும் வினாயக
ரதுவலை வருத்த, பொருவறு மவ்வை வாக்கினு னெய்பா
றதியினைப் பொருந்திய பெண்ணை, பெருகுறு நடுநாட்
டிற்குநேத் திரமாப் பிறங்கியுள் ளதுதிருக் கோவல். (க)*

*அத்தகு திருக்கோ வற்கணே தகனை யட்டிடு வீரட்டே
சுரன்ற, னுத்தம மான மான்மிய மதனை யுயர்நள கூபரன்
றனக்கிங், கத்தமார் நிமிடல் லாமல கம்போ லறிந்தின்
வருளினிற் சூதன், வித்தக மாக வுரைவட மொழிமுன்
மேலவர் தமிழினின் விரித்தே. (உ)*

*சொற்றமற் றதனிற் சிற்சில விடயந் தொகுத்திடப் பட்
டவா மதனாற், கற்றிடு புலவர் வியப்புற வவற்றைக் கரு
தருஞ் செய்யுளான் விரித்துக், குற்றமங் கணுகா வுகை
யின்டீ யிலூட்யே கோத்தனை தருகெனக் குறித்துப், பெற்
றம துயர்த்தோன் சமயமே மெய்மைச் சமயமாப் பேணி
னன் கொண்டோன். (ங)*

*அறிவினால் வாக்காற் றனத்தினாற் கொடையா லழகினால்
வாய்மையா லான்ற, பொறுமையா லறத்தின் புத்திர னிச்
சந் திரன்புக ழங்கசன் பொருவி, னெறியினா லிலங்கு நள
னிநிந் கிழவ னிகழ்சுரா சாரிய னனந்த, னுறுமிவ ரெழுவ
ரொருரு வெடுத்தா லெனநனி யுலகினிற் றிகழ்வோன். ()*

வேட்டவலத்தின் ஜமீன் சக்ரவர்த்தி விளங்குமண் டார்
யே முதலா, நாட்டு மெய்ப்பிருகுலத்தவ ரனேகர்
நிபொரு ளீய்ந்துவேண் டுறவுட், கோட்டமி னல்லாட்
பிள்ளைமுன் வில்லி கூறுபா ரதத்தினுக் கிடையே, தீட்டி
நற் செய்யுள் சேர்த்தமை போலச் சிறப்புறு செய்யுளா
னமைத்தே. (௫)

சூன்றடக கூறன் மிசைபடக் கூறல் கூறிய கூறலே முத
லாத், துன்றுதோ டய்ந வொருசிறி தின்றிச் சுருங்குறக்
கூறனற் பொருளை, மன்றவே விளங்க வைத்திட லாதி வ
னப்புந ளியையுற வமைப்பு, மாண்புறநனி இலங்க வீட்டி
டை சேர்த்து நிலவுல கத்தின ருவந்தே. (௬)

எத்திடச் சோறு டதனினே ருடைத்தா யின்னுயிர் பொ
ன்னியின் றென்பால், நீத்தவர் துதிக்க வுறுவதாய் வா
ேனார் நிலவிடு மகிகொளும் வளத்தாய், ஆத்தர்க ளுரைக்
கு மாகமங் களைக்கிள் ளைகளுங்கேட் டறையுநீர் மைத்
தாய், மாத்திகழ் கின்ற சண்பகக் கொல்லை மன்னிவாழ் நு
ண்ணிய மதியோன். (௭)

மன்னியாழ்ப் பாணச் சுன்னைமா நகரின் வந்துய ரிலக்க
ணந் தருக்க, மென்னுமிவ் விருநேத் திரங்கொடு சித்தாந்
தத்தினை யெளிதினி னோர்ந்து, னனிடு சிவோகம் பாவனை
யதனைப் பணுமுரு கேசபண் டிதன்பா, லன்னவ னுளம்
வேட் டுரைத்திட வேண்டு மவைகளை யன்பொடு கற்றோன்.

வேதநற் பசுவா விளங்குமா கமங்கள் விரவுபா லானயப்
புறுமக், கோதறு நால்வ ரோதிய தமிழே கூறுநெய் யா
வுயர் தவத்த, ரோதுமெய் கண்டா னுணாசிவ ஞானபோ
தமுங் குறுசுவை யாகத், தீதற வுணர்ந்து கற்றுயர் சீலாச
சேர்ந்துசெய் திருப்பணி யுடையான். (௯)

குகமுனி வான்சீர்க் கோத்திரத் துதித்த கோதறு வேய்
கடா சலனைச், சயநனி வியக்க வுதித்திடு தநயன் சங்கரன்
திருவுரு வதனை, யிகமதிற் பேணு குணத்தின னீகை யியலி
சை யின்சொலென் றின்ன, வகமென விரவு சௌந்தர ராச
னச்சினின் மருவுவித் தனனே. (௰)

# திருவிடைமருதூர் வித்துவான்

## கோவிந்தசாமிப்பிள்ளையென்கிற

# சுந்தரமூர்த்திப்பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தருக்கோவு மனந்தனையார் தருக்கோவச் சயனமதாய்த் தூதத கோவுங், குருக்கோவின் சிறையுறந்த மறைக்கோவு முபனிடதக் குலமியாவு, மிருக்கோவ லாகமமு மினுங்கேளு தோலமிடு மிறைவ ஞார்ந்த், திருக்கோவன் ஞான்மியத்தின் றிறங்கண்டாங் கன்னதனிற் சிந்தைகூர்ந்தே. (௧)

யாப்பிலுறுஞ் சிதைவிரித்தங் கேற்பைதிகஞ் செய்யுள்களா யமைத்துச் சேர்த்தும், ஆப்பவருஞ் சூசனமும் புகுவித்துப் பொன்னுடர் போற்றுந் தெய்வ, மாபபதுமை நிகொளவை வாய்ப்பனுவல் பதின்மூன்றும் மற்றுஞ் சேர்த்துக், கோப்பமையச் சரிதமச்சிற் கொடுத்தளித்து முள்ளானைக் கூறுவேனால். (௨)

தண்டமிழ்தே ரணியுடையான் சங்கரன்பாற் பணிவுடையஞ் றக்கோர் வாய்மை, கொண்டருள் சண்பகக் கொல்லைக் குலவுதல மாவுடையான் கொடையாறனு, மெண்டருமா தவமுடையான் வேங்கடா சலவுடையா னீன்றபிடான், சண்டகவித் தலைவர்புகழ் சௌந்தரரா ஜப்பெயர் கொடக்கோனுமால். (௩)

இந்நூலைச் செவ்வனே யுளங்கொண்டு பரிசோதித் தினிதி னீந்த, வன்னுவன்யா ரெனிலறைநூமகத்தை யொழித் தகத்திலுறு மகத்து வான, சின்னிகரில் பரசிவமே பதிப்பொருளா வகத்துறுத்த தகைமை யாளன், பொன்னேபோற் றவம்பெறும் புனிதனயிட் டிகவிரதம் பூண்டினானே. (௪)

சந்தமுறு மியாழ்ப்பாண நல்லூர்வந் தோன்றருக்கா மிர்தப்பேர் தந்த, நந்தலிலா நூன்முதலாப் பன்னூலு நவின்றளித்தோ னுள சேள்வி, வந்தவட மொழிக்கடலுந் தமிழ்க்கடலு முண்டமைந்த பழைநா வல்லோன், பந்தமறு திருஞான சம்பந்தப் பிள்ளையெனும் பாக் லோனே. (௫)

உ

அம்மையப்பன் கருப்பூர் வசிக்கும்

ஸ்ரீமத் பரைவரப்ரசாத

# முருகானந்தஸ்வாமிகள் அருளிச்செய்த

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

பண்புமிகோர் ஞிமிறுதாரப் பண்கண்மந் தரத்தி லாக்குந்
தண்டகக் கொல்லை வைகுஞ் சௌந்தர ராஜ னென்பான்
விண்பகர் வீரட் டேசன் வியன்கதை யியல்வி ளக்கி
நண்பமை யவர்க்கு மீந்தா † னலாப்பிள்ளை கவியின் மாதோ.

---

உ

கும்பகோணம்

பேட்டைப் புதுத்தெருச்

சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையுபாத்தியாயர்

## அருணாசலச்செட்டியாரவர்களியற்றிய

நேரிசையாசிரியப்பா.

சீர்பூத் துலவு திருவீ ரட்ட
மேர்பூத் துலவு மெட்டினிற் சிறந்த
விந்தையார் கோவலூர் மேவெம் பிரான்சீர்
நந்தலி லாநள கூபரன் கேட்ப
பண்டிறை திருமா லுக்குப் பகரக்
கொண்டவன் முண்டகக் கோவுக் குரைப்ப
வக்கோ சனற்கு மரற்கே யுரைப்பவம்
மிக்கோன் வியாத னுக்கு விளம்பக்
கேட்ட வன்மகிழ் சூதற்குக் கிளக்க
வேட்டவப் பதினெண் புராணத் துண்மிக்க
காந்தத் தந்தரர் காண்டத் திற்சொல்
லேந்தற் கதையை யெடுத்தச் சூதன்
சொற்ற வண்ணமும் பிறவுந் துலங்க
நற்றமி ழிலங்கு நானிலந் தன்னின்

---

† நல்லாப்பிள்ளை = நலாப்பிள்ளை - எனவாயது.

## சிறப்புப்பாயிரம்.

முச்சங் கத்தின் முதிர்தமிழ் தன்னு
விச்சகத் துள்ளோ ரீடே றுதற்கு
முன்னோ ரியற்றிய முதுநூலி னெஞ்சிய
பன்னருஞ் சரிதம் பலநூலிற் சொல்வ
தழிந்திம்பர் நாற்பொருட் பயன்பெறற் காகவுஞ்
செறிந்தவெம் மிறைசீர் திகழ்தற் காகவும
வெள்ளி குலத்தியல் விளங்கற் காகவுந்
தெள்ளிதி னாய்ந்துமுற் செய்யுளி னிடையிடை
யொன்றுற விருத்தமா யுரைத்துச் சேர்த்துத்
துன்றுசீர் வேட்ட வலந்துறை முதலோர்
பரவசங் கொளவெம் பரமறை யத்தில்
வரவிநா யகன்வாழ் வசந்தமன் டபத்திருந்
தற்புதக் கவியை யாயிரத் திரண்டில்
விற்பனர் துதிக்க விளம்பினன் றன்றி
லெழுதா வெழுத்தி னிசைவித் தெவருந்
தொழுதகட் பரன்சீர் துலக்குமெய் விக
புராணமென் றுந்திருக் கோவலூர்ப் புராண
மாவினை யாவையு மழிக் தகவி னலரு
நம்பரு ளோர்பெ றின்பரு வழியா
லும்பரின் மேலா யுன்றி தனிக்க
தந்தன னப்பாற் றவப்பெருங் கொல்லை
யிந்தளன் வேங்கடா சலமொரு மேந்தல்
முன்னைமாத் தந்தை முதிர்ச்சி யான்மைந்தரு
பின்னரிவ முப்பயப் பிறந்தவ னென்றெம்
பன்னருங் கலையையாய் பபாணைச் சுன்றுக
மன்னுயர் முருகே சப்பன் றந வரன்பால்
நல்லோர் வியந்துற நவத்துதிக் திருநிலைச்
சொல்லூர் புலமைச் சதுர னில
மிக்க கயிட்டி சவிரதக் கவிராத்
தர்க்க குடார தாளுதாரி யின்பால்
கற்றவன் மெய்ப்புக ழுற்ற சதுரவ
நற்றவச் சௌந்தர ராஜ நாவலனே.

**ஆக்கியோன் பெயர்முதலிய பதினொரு சிறப்பும்**
**இந்நேரிசையாசிரியப்பாவிற்காண்க.**

உ

## வேடம்பூர்

## உபாத்தியாயர்

# பஞ்சாக்ஷரப்பிள்ளையவர்களியற்றிய

### எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கண்ணகன் ஞாலமொரு கழற் கமைத்த கடவுண்முன் கடலினின் றெடுத்துப், பண்ணவற் கிமையாக் கண்ணவர்க் கமிழ்தும் பகர்மறை யுந்தரு பண்பின், மன்னவர் மேம்பட் டுய்யமேற் கதியின் வாக் கொடு செவிக்கினி தாக, நுண்ணிய வறிவாற்கூறுக வென்றே நோற்றலு மாற்றலும் புகழும். (க)

மேல்வரு மற்றை விஷயங்க ளனைவக்கு மேலென வாரிறும் பெயரா, வேல்வரும் வேட்டவலஞ் சக்கரவர்த்தி யியலேந்தல் கேட்ட சொற்படி முன், னூல்வழக் கறிந்து கோவலன் மின்மியநா னுவன்றனன் சண்பகக் கொல்லைப், பால்வளரியலோ டிசையறி பிள்ளை சௌந்தர ராஜ பாவலனே. (உ)

---

உ

ஷை உபாத்தியாயர் பிரதமமாணாக்கரும்

அரிச்சந்திர வெண்பா வியற்றிய

வேங்கடாசலப்பிள்ளையவர்கள் குமாரரும் ஆகிய கண்டியூர்.

## சோணாசலப்பிள்ளையவர்களியற்றிய

### நேரிசை ஆசிரியப்பா.

வையகங் கரைப்பவான் முகில்பொழிக் கன்ன
செய்ய போதியுஞ் செழுங்கொழுங் கனியுதிர்ந்
தண்டலை வண்டொடு தாஞ்சொரி தேறல்
வண்டலை புரள வரக்கண் டோரிருவ
முண்டோ வவ்வையா றுணாவெண் பாவிலென்
றெண்டிசை புகல வேய்ந்தும் பெண்ணை
நதியுலா வகன்பணை நனியுலா நெடுஞ்சென்
மதியுலாம் வான்பாய்ந் தெய்துகான் மாளிகை
மாதர்நோக் கைக்கண் டினமென மருவியாங்

## சிறப்புப்பாயிரம்.

கா[illegible]ம் வெஃகி யவுனொரீஇக் கமலவீச்
சேக்கை யின்னாந் திகழ்கம்பு ளிரிதர
பூக்க ளலைதரப் புக்குலாம் பொய்கையும்
பாவருங் கல்வியர் பழிச்சிப் பரவு
நாவலூ ரார்முத னவிற்றுபல் பண்களுந்
தேவர்தம் மூரிற் சிறந்தவென் றுரைறயுங்
கோவலூ ரென்னுங் கோநகர்ப் பாலை
பாரட்ட திசையும் பணிய வருள்புரி
வீரட்டா காச விமலன் மான்மியம்
வேதமா தியில் விரிஞ்சனன் றுரைத்தபோற்
சூத னளகூபரற்குச் சொற்ற நம்
றாமரா வாரிய சுரமொழி பிறவறீஇ
தேமா வரிய திகழ்சம்புத் தீவில்
குமரிவேலுங் கடங்கூட குருண கடல்சுலா
விமருந் தமிணிலத் தன்பின் முன்னோர்
பல்வகைச் சீர்தழீஇத் திராவிடப் பாவிற்
சொல்வகை யறிந்தோர் சோதிக் குண்மைக்கு
மத்தனு மாமனு மாம்வளை யரசன்
மத்தனு நன்னெறி வரப்புவி யுதித்த
தைவீக வேந்தன் றன்மை வன்மைகளு
மூய்வீ தீர்த்தந் தலத்தி னுயர்வு
மண்ணுனல்வீ ரட்டத் தருளென் றுன்றோர்
நுண்ணரிய வறிவா லுவன்றநூல் பற்பல
சரிதஞ் சான்றாய்ச் சாற்றின விருப்ப
விரிதீக மொழியா தேன்விடுத் தனமொன்
றக்குன்ற நிரம்ப வறைந்து தருகென
இக்கெலாம் புகழுஞ் ‡ சிம்ம புரிமே
லைந்துபண் டாரிய ராதிய ராகச்
செந்திரு வாதிமுச் சீர்மகளா ருறைந
தடல் கலைசெல்வ மகலா தருளு

---

‡ சிம்மபுரி=வேட்டவலம்.

# சிறப்புப்பாயிரம்.

மிடல்பார்க் கவகுல மேம்படு ஜமீன்றாய்
வாய்ந்த சக்கர வர்த்திபண் டாரியும்
ஆய்ந்த வறிவோ டலகில் செல்வமுந்
தோய்ந்த புகழுஞ் சுத்தந் தாழ்வு
மீய்ந்த கரமு மினிய வசனமோ
டேய்ந்த சாந்தமு மெதுத்தவர் தம்மை
காய்ந்த வலியுங் கண்ணுத லடியனை
யிறைவனென் றெண்ணி யேற்று மொழுக்கமு
முறைமுறை கொண்ட முளரியா ணீங்காப்
பழைய னூரிற் பண்டா ரியர்களும்
மழையூ ரச்சுத மங்கல முதலுளார்
கேட்டசொற் படியருள் கிளர்திருக் கோவலூர்
நாட்டிமூன் றுளவென் னம்பனூர் சரிந்த
செவ்வவே விளங்கமுறச் செய்யுள்க ளோடங்
கவ்வையார் முதலான் றோர்கள்சொற் றமிழீஇ
சைவசித் தாந்தவே தாந்தசன் மார்க்கங்
கைவளர் கனியென வெளிநிற் காண
விளங்கு நற்பொருள் வழாஅது வியப்புடன்
களங்கமின் மணித்தார் காட்டுந் தன்மையி
னோசங்கொள் செய்யுளாய் நவின்றகி லவ்வின்
கிரங்கொண் மதுவின் கேண்மையி னளித்தன
ஞருடைப் பிள்ளையா ரருள்திருப் பண்கொளுங்
கீளுடை யானுடை யான்கிளர் சேறை
நாலூர் மயானத் தலங்களி னணித்தாய்
மாலூர் மனத்தர் வரின்மா லாக்குஞ்
சண்பகக் கொல்லையிற் றவக்குக முனிக்குல
விண்பகர் புகழுடை வேங்கடா சலமா
[illegible]ருந்தவத் துதித்தங் கமனவர்க் கினிமை
[illegible]ருந்தியர் கவல்வி புரியரு ளாற்கலை
[illegible]கண விலக்கியத் தியல்பா லிசையொடு
மா கநய் வன்மையன் றேமிலெண் குணத்தனே

## சிறப்புப்பாயிரம்.

முழுதுணர்ந் திறையுரை மொழிந்தரு ளரிகர
தாரதன் மெய்த்தையச் சமைத்துத் தந்தவன்
பாரதந் தனைப்பதி னாறுசெய் யுளாட்
டிலக்குத லொடுநிறை த்தொளபதை சந்தி
யிலக்கு முறையென் றோர்நூ லிசைத்தவன்
ஆகமமத்து விதநெறி யகத் தவன்
மோகமற் றவர்தாண் முடிக்கணி யாக்குவ
னிடம்பொரு ளேவலு மேற்றவ னடைவோர்
யுடந்தணங் திடக்கலை வகையிற் புகல்வோன்
குலமுறை விளக்கவங் குரித்த
நலமுறை சௌந்தர ராஜநா வலனே.

மைசூர்-மகா. நாராயணப்பிள்ளையவர்கள் குமாரரும்
பூஞ்சாசுந்தரப்பிள்ளையவர்கள் மாணாக்கர்களிலொருவரும் ஆகிய
சோமசுந்தரப்பிள்ளையவர்களியற்றிய
எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கொண்டல்கண் படிக்குந் தண்டலை சூழ்ந்த கோவலூர் வீரட்டப் பெருமா, னண்டர்கள் போற்று மான்மியங் களைமுன் னுரைத்தவச் சூதமா முனிவன், மண்டலத் தவர்க ளுய்ந்திட எகூட பரற்குரை வடமொழிப் பெயர்ப்பைத், தண்டமிழ்ப் பாவைந் நூற்றின் மேன் முன்னோன்சாற்றின ரவையுளெம் மான்றன். (௧)

எண்ணருஞ்சரித மிலதவை சொலிச் சேர்த் தியுதி யென்று பல் லோர்க, ளுண்ணெகிழ்ந் துரைத்த வகையின்மூ வகையாலுளங்கொள் நாற்பொருட் பயனு, நண்ணுற வெளிதினே வருங் களிப்ப நல்கி னன் சண்பகக் கொல்லைக், கண்ணுறை புலமைச் சௌந்தர ராஜன் கவிசகஞ் சநத்தின்மேற் சேர்த்தே. (௨)

சிறப்புப்பாயிரங்கள் முற்றிற்று.

ஆ பாக்கள்-௨௨.

உ

கணபதிதுணை.

# திருக்கோவலூர்ப்புராண

# முகவுரை.

சீர்சால் எண்ணிறந்த உலகங்களிலுள்ள சகல வான்மாக்களுங் கருமங்களை நிவர்த்திக்கவருந் தன்மைத்தாகிய, இப்பூலோகத்தில் மூர்த்தி தலதீர்த்தவிசேடங்களையுடையனவாய் விளங்கும் பு[illegible]க்ஷேத்திரங்களுள், முற்றறிவும் முற்றுத்தொழிலும் உடைய அநாதிமல ரகிதனாகிய சிவபெருமான் திருவருள்கொண்டு துஷ்டர்களையடக்கிச் சிஷ்டர்களைப்பரிபாலித்து ஆதிகாலந்தொட்டு விளங்கிவரும் வீரட்டஸ்தலம் எட்டனுள்,

அந்தகாசுரனைவதைத்து ஹரிப்ரமேந்த்ராதியர்களை யிரக்ஷித்தன் முதல் அனந்தவிசேடங்களை நாளுளுங்கொண்டு எம்பெருமான் விளங்குந் திருக்கோவலூர் ஸ்தலப்புராணத்தை அச்சிட்டு வெளிப்படுத்தப்புல்லறிவுள்ள எளியேன் துணிந்தவகை யாதோவெனில்,

தமியேன் ஒருசிறிபன் அற்பத்துக்கற்பமாகிய கல்வியுடையேன் ஆயினும் இச்சனனமெடுத்த குலத்தோற்றத்தைப் பெரியோர் வழக்கப்படித் தெரிந்துகொள்ளக் கொஞ்சம் பிரியமுற்று விசாரிக்குங்கால், பிரப்பட்டியென்னுங் கிராமாதிபதியும் மலையமன்னர் குலதிலகரும் ஆகிய பொன்னுச்சாமியுடையாரிடஞ் சில நூற்களிருப்பதாய்த் தெரிந்து அவர்கள்பாற்சென்று கேட்க வெகுபிரியத்தோடு திருக்கோவலூர்ப்புராணம் இறைவாசநல்லூர்ப்புராணம் அச்சிட்ட அண்ணாமலைசதகம் இம்மூன்று நூற்களையும் கொடுத்தார்கள்.

அம்மூன்று நூற்களையும் பார்க்குங்கால் அவை யொன்றுக்கொன்று சிலவிஷயந்தழுவியுந் தழுவாது இருந்ததால் முன்னறியாமையாலிருந்த சந்தேகத்துக்குப் பதின்மடங்கதிகமாய்ச் சந்தேகமுண்டாக அதை எந்தவிதமேனும் நிவர்த்திசெய்து நிச்சயந்தெரிந்துக்கொள்ள வேண்டுமென்ற துணிவுண்டாகித் திருக்கோவலூருக்கடைந்து ஸ்ரீ வீரட்டேசுரரையும் பெரியநாயகியம்மையாரையும் தரிசித்து அங்கு நூல்விசாரிக்குங்கால் கிடைக்காது வருந்தி எம்பெருமான் அம்மை சந்நிதியின் முறையிட்டு வாரமொன்றுவரை

யங்கிருக்குங்கால தலவிசேடந்தெரிய விரும்பிய எளியேன் உள்ளம் நாள்நாள் விளங்கியான்மிய தலவிசேடங்களினுஞ் சிக்குண்டது.

அங்கு ஸ்ரீதேவிக்கிராமாதிபதிகளாகிய விசுவநாதநயினார் பொன்னம்பலநயினார் இருவரும் வந்தகாரியத்தை விசாரித்து இவ்விடத்துள் பிரதமஸ்தானமாகிய வேட்டவலம் ஜமீந்தார்களன்றிக் குறித்த காரியத்தைச் சரிசெய்யக் கூடியவர்களில்லையென்று ஜமீந்தாரவர்களுக்கொருகடிதங்கொடுத்து போகும்படிச் சொல்லினார்கள்.

அப்படியே ஸ்ரீவீரட்டப்பெருமானை வந்தித்து விடைபெற்றுக்கொண்டு வேட்டவலம் அடைந்து ஜமீந்தாரவர்கள்பால் கடிதத்தைக்கொடுத்துக் காரியத்தைச்சொல்லிக் காத்திருக்க, அவ்விடத்து வழங்கப்படிப் பரீட்சித்த விஷயமனந்தம் பிறகு உண்மையென்று தெரிந்து ஜமீந்தார்கள் மகேசர் முதலானோர்களுங் கையிலிருந்த நூற்களைப்படிக்கக்கேட்டு யாருங்களிப்படைவதோடு நூற்களொன்றுக்கொன்று வித்தியாசமாயிருப்பதையுங் கண்டுபிடித்து இப்படியொன்றுடனொன்று முரணியிருப்பது சரியன்று கிரமத்தைக்கண்டுபிடித்தல்லவோ நூலைச்சீர்ப்படுத்தவேண்டுமென்றும் முன்னோன் இங்கிருந்த ஜமீந்தார்கள் இது விஷயப்பிரயத்தினம் அளவிலாது செய்தும் பூர்த்தியடையாது போய்விட்டதென்றும் அதுபோலாது சீக்கிரம் நூலைச்சீர்ப்படுத்தி வெளிப்படுத்தவேண்டுமென்றும் சொல்லி முற்காலத்துள்ளோர்கள் திருக்கோவலூர்ப்புராணத்தைத் திருத்திக் கொடுக்கும்படிச் சிட்டிலிங்கஞ் சிவானந்தஸ்வாமிகளிடங்கொடுக்க அவர்கள் மடத்துத்தங்கியிருந்த புராணத்தையும் வரவழைத்துக் கொடுத்துக் கூடியசீக்கிரத்தில் நூலையொருவழியாய்த்திருத்தி முடித்துக்கொண்டும் அவ்விடத்துள்ளோர்களிடத்தும் இவ்விஷயத்தையறிவித்து ஒப்பம் பெற்றுக்கொண்டுந் தெரிவித்தால் வசூலாகுந்தொகைபோகப் பாக்கித் தொகையை நாமேபோட்டு அச்சிடுவோமென்றுதிடமாயுத்தரவளித்தார்கள். என்னவுத்தரவளித்தும் மனஞ்செய்யுள்களைப் பேதித்துத் திருத்தப்பயந்து வீரட்டப்பெருமானை வந்தித்து ஊர்வந்து சேர்ந்தேன்.

இங்குள்ள பழயனூர்ப் பண்டாரத்தாரவர்களிடத்தும் * தண்ணீர்க்குன்றம், அச்சுதமங்கலம், மழையூர் முதலியவூர்களில் உள்ள உடையாரவர்களிடத்தும் வேட்டவலந் துரையவர்கள் சொன்ன விஷயங்களைச்சொல்ல யாவரும் களிப்போடு அவசியம் செய்யவேண்டியதென்றே யுத்தரவளித்தார்கள்.

* தண்ணீர்க்குன்றம்=தண்ணீர்க்குடமென்று வழங்குகிறது.

ஸ்ரீவீரட்டேசருடைய மான்மியத்தோடு கலந்திருக்கும் குலத் தோற்றத்தை யெல்லோரும் வெளிப்படுத்துவதாக வளித்திருக்கி றார்களே நாமும் அப்படியே முடிப்பதாயொப்புக்கொண்டோமே நாம் சொற்பப்படிப்புடையோம் நூலோ பலவகைப்பட்டிருக்கிற தே யென்னசெய்கிறதென்று பெருமான்றிருவடியை நமபி நூற்க ளையாராயுங்கால் திருக்கோவலூர்ப்புராணம் பாயிரமுதல் கண்ணு வச்சருக்கமுடிவுவரை யெழுத்துப்பிழைதவிரச் செய்யுளொருவகை யாகவேயிருந்தமையால் அதுவரையில் எழுதிவருவோம் அதற்கு மேல் பெருமான் அருள்விட்டபடி செய்வோமென்றுத்தேசித்து கண்ணுவச்சருக்கமுடிவுவரையில் புல்லறிவுக்கெட்டியமட்டும் சோ தித்துக் காப்பிசெய்து வந்தேம்.

அக்கால் பெண்ணைநதிப்புராண ஆக்கக்காப்பியொன்றுகிடை த்துப்பார்க்குங்கால் அதில் தெய்வீகராஜன் உற்பவச்சருக்கமுதலா ன சரித்திரங்கள் [illegible] இருக்கக்கண்டு மிகு தியுங் கிலேசங்கொண்டு [illegible] திருக் கோவலூருக்கடைந்து [illegible] பருள்வாயென்று வீரட்டநெஞ்சை [illegible] அங்கிருக்குங்கால் எம்மான் அருளால் [illegible] ஞானியார் மடத்தி ருந்து [illegible] சுவாமிகள் சமாதி மடாதிபர்களைத் தரிசித்து [illegible] தெரிவித்தேன். சுவாமிகள் [illegible] தெழுந்து தெய்வீகராஜன் [illegible] சருக்கமெ ன்ற பழய ஏட்டுப்பிரதி [illegible] கொடுத்தார்கள். அதில் சருக்க மாய் தெய்வீகராஜனுற்பவ [illegible] சங்கவை கலியாணம் வரையில் வசனமும் [illegible] சொல்லிய திருப்பாடல்களும் எழுதியிருந்தமை பார்த்தேன் பிறகு [illegible] சுவாமிகள் என் னையழைத்துக்கொண்டுபோய் அங்கு [illegible] சிலவிம்பங்க ளையும் எழுத்துக்களையுங்காட்டி இந்தப்புராணத்து [illegible] னந்த ஐதிகங்களையெல்லாம் எடுத்துச்சொல்லிவிட்டார். இட்டுப்போன சரித்திரங்களை பழயநூற்களுக்கிணங்கப்பாடிச்சேர்க்கலாம் யாதொரு தோஷமுமில்லை. ஸ்ரீவீரட்டப்பெருமானும் அப்படியே யருள்செய் வார் பயப்படாதே செய்யென்று உத்தரவளித்தார்கள்.

பிறகு எம்வள்ளலை வந்தித்துக்கொண்டு குஞ்சரம் சபாபதி யுடையாரால் வாங்கிக்கொடுக்கப்பட்ட இறைவாசநல்லூர்ப்புராண

உபைப்பிடியும் பெற்றுக்கொண்டு இறையானசல்லூருக்கு அவர்கள் அனுமதியாலனுப்பு தேவஸ்தான மணியம் நரசிங்கவையரால் சிரோசிகாமணிநாதர் தரிசனஞ் செய்விக்கப்பெற்று அவ்வாலயத்தும் அறிகுறிகளாகிய பிம்பங்களினாலும் எழுத்துக்களினாலும் பலசரித்திரங் காட்டத் தெரிந்துகொண்டு வந்து சேர்ந்தேன்.

பழைய செய்யுளிடத்துச் சொல்லாத சரித்திரங்களைப் பலபிரமாணங்களாலறிந்து ஸ்ரீ புராணமுடையாது பாரதம், பெரியபுராணம், கந்தபுராணம், முதலிய பெருங்காவியங்களையு மாராயுங்காலத்தில் புதிதாய்க் கண்டெடுத்த விஷயங்களுக்கு ஒற்றுமையாகவே சில பிரமாணங்கள் அகப்பட்டன.

பழைய திருக்கோவலூர்ப்புராணத்தில் தெய்வீகராஜனுற்பவச்சருக்கமுதல் அடைவு வரையில் சொல்லப்பட்டுள்ள சரித்திரங்களையும் பிறநூற்களின் மூலமாய் ஏற்பட்ட பிரமாணங்களால் தெரிந்தசரித்திரங்களையும் ஒத்துப் பார்க்குங்கால் அநேகவிஷயங்களாலும் பின்னிட்டே தேவதேவ ஸ்ரீ வீரட்டேசுரருடைய கிருபாசாமார்த்தியங்கள் விசேஷமாய் விளங்குகின்றன.

அவையெல்லாம் எடுத்துக்காட்ட வடங்குவன அல்ல ஆயினுஞ் சிறிது காட்டுகின்றேன்.

தெய்வீகராஜன் அங்கவை சங்கவை யென்னுங் கன்னியர்களைச் சிங்களதேசத்தரசனாகிய பாரிசாலனால் வியாகஞ்செய்து கொடுக்கப் பெற்றானென்று பழையசெய்யுளில் சொல்லப்பட்டிருக்கிறது.

அச்சரித்திரத்தைப் பிரமாணங்களோடு கண்டுகொள்ளப்பட்டதாவது.

**திரிலோகப் பிரசித்திபெற்ற அவ்வையாரால் அக்கன்னியரையும் பாரிசாலனையும் வியந்து ஒருவெண்பாவும் கலியாணவோலையெழுத விநாயகமூர்த்தி குமாரக்கடவுள் வர இரண்டு வெண்பாக்களும் சேரசோழ பாண்டியர்கள் கலியாண எதுக்களோடு வர மூன்றுவெண்பாக்களும் பொன்மாரிபெய்யப் பருத்தியாடையாய்க்காய்க்க வயல் அரிசியாய்விளைய பெண்ணைநதியில் நெய்பால்தயிர்வரநான்குவெண்பாக்களும் வெட்டிப்பட்ட பனைமரத்துண்டம் தழைத்துக்காய்த்துப் பழுக்கவொரு கலித்துறையும் வணங்கிய மணமகனையும் பெண்களையும் ஊரையும்வாழ்த்தி இரண்டுவெண்பாக்களும் ஆகப்பதின்மூன்**

றுசெய்யுள்களை யருளிச்செய்து திருக்கலியாணஞ் செய்வித்தாளென்று வதுவைச்சருக்கத்திலும் பெண்ணைநதிப் புராணத்திலும் அவ்வையார்கூறிய பாசுரங்களோடு விளங்குகின்றன. தனிப்பாடற்றிரட்டிலும் எவர்களும் அறிய அவையுள் பத்துப்பாசுரங்களும் விளங்குகின்றன. (இவையன்றிப் பாரதத்தில்,)

அவ்வைபாடலுக்குத் தநிநெய்பால் பெருகி யருந்தமிழறி விஞர் சிறந்து,
(என்றும்.)

உருகுங்கமிழ்நெய்பா லிருபாலுங் கூளையொற்றுப் பெருகுந்துறையே யேழுபிறப்புங் கெடமூழ்கி,
(என்றும்.)

பெண்ணைநதிப்புராணத்தில்.

ஒருபுறத்தி லமுதமன்ன பாலுமோர் புறத்திலே
தருதலுற்ற நெய்யுமோர் புறத்தினிற் சரச்சசி
பொருவலுற்ற நதியுமாய்ப் பொருந்தியே விரிந்தலை
திரிதலுற்று நிலவித் திகழும்வந்த பெண்ணையே. (என்றும்)

அண்ணாமலைசதகத்தில்.

சிங்களமெனுந் தேசமுழுதாளு மன்னன் சிறந்தபேர் பாரிசாலன், செய்மெய்த் தவத்தாலுதித்து நற்குணமேவு சிறுமியங்கவை சங்கவை, மங்கையோ ரிருவரை வளர்த்தெடுத் தவ்வையார் மாமுகக்கணபதி கையான், மணவோலை யெழுதி மும்மன்னரைக் கோவலூர் வரவழைத்தறுகிடற்கே, தேங்கிப் பனைந்துண்ட மரமாகியே பழந்தர நதிப்பெண்ணை நெய்பால் திரன்வரப்பாடியப் பெண்களைத் தெய்விகத் தலைவன் மணம் புணரவே, யங்குதவு மவ்வைதொழு மைங்கரன் றந்தையே யருள்பெறு வசந்தராயர், அண்ணாவி னிற்றுதிசெய் யுண்ணாமலைக்குரிய வண்ணாமலைத்தேவனே. (என்றும்)

விளங்குகின்றன. அக்கலியாணத்துநடந்த மான்மியங்களோடு பிறவுஞ்சேர,

### இறைவாசநல்லூர்ப்புராணத்தில்.

அவ்வைதிரு வாககால் வெட்டுண்டபனை பழமும்மூன்
றளித்ததன்றி, வெவ்வமற வயற்சென்னெ லுடன்முளைத்தங்
கரிசிவிளை வித்தநாடு, கவ்வைவினை யகற்றிவியன் கதியுத
வும்பெண்ணைநதி கலந்துசெய்பால், பவ்வமுறப் பெருகு
திசை திசைபுனைந்த திருமுனையப் பாடிநாடு.

பொன்மாரி பொழிநாடு பருத்திகலை காய்த்தருளும் புங்
கநாடு, சொன்மாண் புக்கடங்காத வெம்மிறைவன் றேட்
கோப்புச் சுமந்தநாடு, தன்மாண்பு தெரியாவத் தனிமுத
லூர்ப் பாதிகொள்பேர் தரித்தநாடு, நன்மாவென் றெழிற்
சிங்கந்தனை மருட்டிநியக்குவித்த நத்தநாடு.

(இங்கே சிங்கம் என்றது தெய்வீகவேந்தனை.)

### கந்தபுராணத்தில்.

மண்ணுல கிறைவன்செய்யு மணந்தனை விலக்கியெண்டோ
ளண்ணலோர்விருத்தன்போல் வந்தாவண வோலைகாட்டித்
தண்ணெனவழக்கிலென்று சுந்தரன்றனையாட்கொள்ளும்
பெண்ணையம் புனல்சூழ் வெண்ணெய்ப் பெரும்பதி தனையுங்
கண்டான்.

(இங்கே மன்னுலகிறைவனென்றது நரசிங்கமுனையரை.)

என்று விளங்குகின்றயாவும் பிறவும் தெரிந்தாலோசிக்கத் தோன்றியதிடமாவது இப்படிப் பிறநூற்களெல்லாம் வியந்து வியந்து சொல்லப்பட்டுள்ளவையாவும் எம்பெருமான் ஸ்ரீவீரட்டேசருடைய கிருபாவிசேஷமல்லவா. அச்சரித்திரங்களை யெல்லாம்விட்டு நூலாசிரியர் யாதுகாரணஞ் சொல்லினரோ நாமும் அச்செய்யுட்களையே திருத்திச் செய்வோமாகில் நூலுக்கும் எம்மிறைவனுக்கும் என்ன பெருமை யிருக்கிறது என்றவைமுதலிய பலவேதுக்களால் எளியே னுள்ளத்து ளெழுந்த எம்பெருமானது திருவுருவங்களை நீங்காது தியானித்துக்கொண்டு தெய்வீகராஜன் உற்பவச்சருக்கமுதல் மேற்கூறிய விஷயங்களமைந்த சரித்திரங்களை எங்கெங்க இடங்களில் அவசியமாய்ச்சேர்க்கக்கூடியதோ அந்த அந்த இடங்களில் பழயசெய்யுட்களிணங்க என் அற்ப அறிவுக்கெட்டியவரைகூடக் கற்பனைகூறு

யெளியநடையிற் செய்யுளாயமைத்துச்சேர்த்து மூதறிவாளர்களிடத்துக் கூடியவரைபரிசோதிப்பித்து நூதனச்செய்யுள்களுக்கு முதலில் * இச்சார்மார்க்கை யடையாளமாகவைத்து.

செய்யுள்களில் உள்ள அரும்பதங்களுக்கு மார்க்குடன் அந்தந்தப்பக்கங்களில் கீழ் அர்த்தமும் நூலுள் அடங்கியவிஷயங்கள் இன்ன இன்ன இடத்திருக்கின்றதென்பதை யாரும் எளிது அறியும்படி விசேஷகுறிப்பும் பிறநூலில் அகப்பட்டவரையில் நடுநாட்டின் விசேஷங்களுக்குச் செய்யுள்களும், மூர்த்திதலதீர்த்தங்களுக்கும், அத்தலத்து உற்பவித்த தெய்வீகராஜன் முதலோர்களுக்கும், அகப்பட்டவரையில் பரியாய நாமங்களும், அத்தெய்வீகராஜன்முதலிய சிலர்கள் உற்பவபதவித் திருநக்ஷத்திரங்களும்,அவையடக்கச்செய்யுள்களும், அகப்பட்டவரையிற் பிழைத்திருத்தங்களும், சமயகுரவர்களாகிய மூவர்களால் அருளிச்செய்த ஸ்தலத்தேவாரப்பன்களும் சேர்த்துப் பிற்குறிக்கப்படும் ஜாப்தாவில் காணப்படும் பார்க்கவகுலத்தவர்களின் பொருளுதவியால் ஸ்ரீ வீரட்டேசுரர் திருபாதார்விந்தத்தாலும் பெரியோர்கள் ஆசிர்வதிப்பாலும் அச்சிட்டிருக்கிறது.

திருவண்ணாமலையில் உடையார்கள் மடபரிபாலன அப்பாசாமி பிள்ளையவர்களால் கல்லக்குறிச்சியில் வாங்கிக் கொண்டுவந்துகொடுத்த திருக்கோவலூர்ப் புராணபிரதியில் தெய்வீகபுராணமென்றும் திருக்கோவலூர்ப் புராணமென்று எழுதியிருந்தமையாலும் தெய்வீகராஜனுடைய சரித்திரங்கள் நூலுள் மிகுதிப்பட்டிருந்தமையாலும் தெய்வீகமென்ற வாக்கியார்த்தமுமிக்க விசேஷமுடைத்தாயிருந்தமையாலும் நூலின் முதல் டைட்டில் பேஜினும் கரையிலும் தெய்வீகபுராணமென்னுந் திருக்கோவலூர்ப்புராணமென்று போடப்பட்டது.

முன்பாடிய நூலாசிரியர் பெயர் கூடியவரையில் விசாரித்துந் தெரியவில்லை. இந்நூலாசிரியரே பாயிரத்தில்,

முன்னம் சத்தமாக்கரைகண்டன் மான்மியம் மொழிந்தேம்,
( என்றார். )

இங்கே சத்தமாகரைக்கண்டன் மான்மியம் என்றது சத்தகாரகண்டபுரம் என்னும் பெயரை உடைய திரிசூலகிரிப்புராணம் ஆம் அப்புராணத்தினும் நூலாசிரியர் பெயர்போடாதால் அதை அச்

சிட்டவர்களைக்கேட்டும் அவர்களும் எம்போலியர்களாய்த் தெரிய வில்லையென்றார்கள். ஆதலால் டயிட்டல்பேசின் நூலாசிரியர்பெயர் போடவில்லை.

முதல் அந்தகாசுரன் வதைச்சருக்கத்தில் சொல்லப்பட்ட ஸ்த லவழிபாடுடையோர்களில் சுவேண்முனிவர் குண்டிகவிருவர்களு டைய வழிபாடுகள் பின் நூலினாலும் வேறு நூல்களாலும் தெரிய வில்லை.

எந்தவிதமேனும் இந்நூல் அச்சிட்டு வெளிப்படவேண்டுமென்று பொருள் அளித்து முயர்ச்சித்தவர்களில் விடாமுயற்சியோடு என்னை அடிக்கடி ஜாக்கிரதை செய்துகொண்டிருந்த மன்னார்குடி தாலூக்கா பழையநூரில் வசிக்கும் பாரம்பரிய பிரபுகுலதிலகக் கல்லூ ராதிபதிப் பண்டாரியர்களில் ஒருவராகிய அம்மையப்பன் கருப்பூ ராளி சந்தானகோபாலசாமி அய்யா அவர்களை நிமிடமேனும் மறக்கப் பாலதோ.

எப்போதும் என்னைவிட்டு நீங்காது பலகஷ்டங்களைத் தாமும் பிரியத்தோடு கொண்டு அனுபவித்த சண்பகக்கொல்லை ஈ. கிருஷ் ணசாமியுடையாரவர்கள் நன்றியை யொருக்காலும் நினையாதிருக்கத் தக்கதோ.

மூதவுரை முற்றிற்று.

---

வே. சௌந்தரராஜன்,

சண்பகக்கொல்லை.

c

உ

சிவமயம்.

# திருக்கோவலூர்ப்புராண


| | விசேஷக்குறிப்புகள். | |
|---|---|---|
| 1 | பெரியபுராணமுதலிய நூற்களிற் சொல்லப்பட்ட நடுநாட்டின் விசேஷங்களுக்கு செய்யுள்கள் ... | 1 |
| 2 | 1. நடுநாட்டின் பெயர்கள். ... | 3 |
| 3 | 2. திருக்கோவலூரின் பெயர்கள். ... | ,, |
| 4 | 3. பெண்ணையாற்றின் பெயர்கள். ... | ,, |
| 5 | 4. ஸ்ரீ வீரட்டேசுவரர் திருநாமங்கள். ... | ,, |
| 6 | 5. குகமுனிவர் பெயர்களும் பதவிகளும். ... | 4 |
| 7 | 6. தெய்வீகராஜன் பெயர்கள் அவ்வரசனுக்குரியனவாகிய. ... | ,, |
| 8 | பன்னிரண்டு மலர்மாலைகள். ... | 5 |
| 9 | பன்னிரண்டு மணிமாலைகள். ... | ,, |
| 10 | பன்னிரண்டு மனைவியர்கள். ... | ,, |
| 11 | அவ்வேந்தன் உற்பவ பதவிமாத நாள்கள். ... | ,, |
| 12 | 7. குலசேகரவேந்தன் பெயர்களும் உற்பவபதவி மாதநாள்களும். ... | ,, |
| 13 | 8. நரசிங்கமுனையரையர் பெயர்களும் உற்பவ பதவி மாதநாள்களும். ... | ,, |
| 14 | 9. மெய்பொருணாயனார் பெயர்களும் உற்பவ பதவி மாத நாள்களும். ... | 6 |
| 15 | அவையடக்கச்செய்யுள்கள். ... | 7 |
| 16 | அட்டவணை. ... | 9 |
| 17 | பிழைதிருத்தம். ... | 10 |
| 18 | திருஞானசம்பந்தசுவாமிகள் தேவாரப்பண்கள் ... | 13 |
| 19 | திருநாவுக்கரசுசுவாமிகள் தேவாரப்பண்கள் ... | 14 |
| 20 | சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரப்பண்கள் ... | 16 |
| 21 | புராண ஆரம்பம் பாயிரம் ... | 17 |
| 22 | சிவபெருமான் அருளால் நடக்கப்படும் பஞ்சகிருத்தியங்களின் மூன்று கிருத்திய விஷயம். ... | 24 |
| 23 | எண்ணிறந்த சிவ[illegible]கள் உத்தமசீலர்களால் அனுசரிக்கப்படும் விஷயம். ... | ,, |

| | விசேஷக்குறிப்புகள். | பக்கம். |
|---|---|---|
| 24 | சரியை கிரியை யோக ஞானங்கள். ... | ,, |
| 25 | குருலிங்கசங்கமங்கள் ... | ,, |
| 26 | பிரத்யக்ஷ அனுமானப் பிரமாணங்கள். ... | ,, |
| 27 | கரும உபாசனா ஞானகாண்டங்கள். ... | ,, |
| 28 | உப சந்தகாண்ட விசேஷமுமல்லியும். ... | ,, |
| 29 | சிவபூசைசெய்வதற்கும், சிவபுராணங்கேட்பதற்கும், தக்கவர், தகாதவர்கள் இன்னாரின்னாரென்ற உபமானங்களுடன். ... | 25 |
| 30 | சிவபெருமான் வீரட்டம் எட்டின் ஐதிகங்களும் தலப்பெயர்களும் ... | 27 |
| 31 | சோமசூரியர்கள் வசிக்குமிடம். ... | 28 |
| 32 | சிரத்தைக்கு முதன்மை பின்னதென்பது. ... | 29 |
| 33 | சிவபெருமானுக்கு ஒருகணக்காலம் தேவர்களுக்கு ஆயிரம் ஆயிரம் ஆண்டென்பது. ... | 30 |
| 34 | அந்தகாசுரன் உற்பவம். ... | 31 |
| 35 | மகாவிஷ்ணுவின் சயனமாகிய திருப்பாற்கடல் வைபவம். ... | 32 |
| 36 | ஸ்ரீவீரட்டேசுரர் திருவருட்டோத்திரம். ... | 34 |
| 37 | சிவகணங்களின் பெயர்கள். ... | 37 |
| 38 | ஸ்ரீவீரட்டேசுரர் அந்தகாசுரனைச் சூலத்தேற்றிநின்றது. ... | 41 |
| 39 | அந்தகாசுரன் சூலத்திருந்து ஸ்ரீவீரட்டேசுரனை ஸ்தோத்திரஞ்செய்தது ... | 42 |
| 40 | நான்கு கடல்களின் உற்பவம். ... | 53 |
| 41 | தவஞ்செய்யும் விதிகள். ... | 58 |
| 42 | முற்றத்துறந்து தவம்புரியும் முனிவர்கள் யாதேனுமொரு பொருளைக் கருதுவராஞல் பஞ்சபாதகத் தலைவராவர்கள் என்பது. ... | 59 |
| 43 | பஞ்சபாதகமுங் குருநிந்தையுஞ் சிவலிங்கத்தையருச்சிக்க நிவர்த்தியாம் என்பது. ... | ,, |
| 44 | ஸ்ரீவீரட்டேசுரர் உருவத்தியானம். ... | 61 |
| 45 | காரண்டகல்லூரர் உற்பவம். ... | 63 |
| 46 | பிரமதேவர் ஸ்தோத்திரம். ... | 64 |
| 47 | தானேவரங்கொடுத்து அழித்தல் கூடாதென்பது. ... | 65 |
| 48 | கைலைமலைச் சிறப்புஞ் சிவபிரான் தோத்திரமும். ... | 66 |
| 49 | நாஸ்தியான அரக்கர்குலத்தை விருத்திசெய்து தேவர்களுக் கிடையூறுசெய்வித்த சுக்கிரபகவானுக்குப் பிருகுமுனிவர் சாபங்கொடுத்தது. ... | 69 |

| இலக்கம். | விசேஷக்குறிப்புகள். | | பக்கம். |
|---|---|---|---|
| 50 | சுக்கிரபகவான் மேகரோகநிவர்த்தியும் வெள்ளி யென்ற பெயரும் ஓர் புத்திரனும் பெற்றது. | ... | 71 |
| 51 | அப்புத்திரன் குமாரக்கடவுளை வேண்டிக் குக முனியென்ற பெயர்பெற்றது. | ... | 72 |
| 52 | குமாரக்கடவுள் வேலேவியது. | ... | 75 |
| 53 | வேல்வரும் சிறப்பும் அது தங்கியதும். | .. | ,, |
| 54 | பெண்ணைநதியுண்டாகிய காரணம். | ... | 77 |
| 55 | குகமுனிவர் புத்திரகாமேட்டியாகம் செய்தது. | ... | 79 |
| 56 | குமாரக்கடவுள் யாகங்காணவந்தது. | ... | 80 |
| 57 | இறைவாசநல்லூர்ப் பெருமைகளை குமாரகடவுள் கூறியது. | ... | ,, |
| 58 | யாகத்தில் தெய்வீகனென்ற புத்திரன் பிறந்த வைபவங்களும் புகழ்ச்சியும். | .. | 81 |
| 59 | தெய்வீகன் முற்சென்மத்துப் பருவதராஜனாயிருந்து சாபம் பெற்றது. | | 84 |
| 60 | திருக்கோவலூரில் அ[illegible]கொண்டு காசிக் கங்கையில் ஸ்நானஞ்செய்து தீர்த்தங்கொண்டு சேதுவிலுள்ள சிவபெருமானுக்கபிஷேகித்து மத்தியானத்தில் சிதம்பரநடேசர் தரிசனமும் ஓர் நாளிற்செய்வாரடையும் பயன். | ... | 90 |
| 61 | தெய்வீகராஜன்மேற் கண்டவிதம் நாடோறும் ஸ்நானஞ்செய்து தரிசனஞ்செய்தது. | ... | 91 |
| 62 | நடராஜப்பெருமானுக்கு நவவிதமதுரமுக் ஸ்தோத்திரமும் | ... | 93 |
| 63 | தெய்வீகராஜன் மகிநாடாத்தும் பக்கைக்குறிஞ்ஞா யைவேண்டி சேரசோழ பாண்டியர்கள் தில்லையில் புரிந்தயுத்தம். | ... | 94 |
| 64 | அபசயப்பட்ட மூவரசரும் சபாநாதர்முன் தங்கள் மூன்றுகிரீடமும் நாடுங்கொடுத்தது. | ... | 97 |
| 65 | பச்சைப்புரவியிற் றெய்வீகராஜன் வலம் வந்ததும் நடுநாட்டின் எல்லையும். | ... | 98 |
| 66 | அம்மூவரசரும் தங்கள் புத்திரிகள் மூவரைத் தெய்வீகராஜனுக்கு மணஞ்செய்வித்தது. | .. | 109 |
| 67 | சற்றடி யொரோவிதமான ஸ்ரீவீரட்டேசுரர் தோத்திரங்கள். | ... | 119 |
| 68 | தெய்வீகராஜன்முன்னர் சிவபெருமான் ஒரு மானாய் வந்து செய்தவிசித்திரம். | ... | 125 |

| அத்தியா யெண். | விசேஷக்குறிப்புகள். | பக்க எண். |
|---|---|---|
| 69 | அரசனுக்கும் சைனியங்களுக்கும், இறைவாசநல்லூர் எம்பெருமான் வயோதிக மறைவனாய் வந்து ஜலமுங் கட்டமுதும் அளித்து மறைந்தது. | ...128 |
| 70 | அரசன் இறைவாசநல்லூர்ச் சிகாசிகாமணிநாதரைக் கண்டு தரிசித்துக் காரண்டவல்லூரனைச் சயிக்க உத்திரவுபெற்றது. | ...130 |
| 71 | சிகாசிகாமணிநாதரும் நந்திகேசப்பெருமானும் யுத்தங்காண மேற்குமுகந் திரும்பியது. | ... ,, |
| 72 | காரண்டன் பக்கல் அரசன் தூதனுப்பல். | ...131 |
| 73 | மூர்க்கருக்கு நன்மையானது தண்டிக்காதவரையிலாமென்பது பிரமாணத்தோடு கூறியது. | ...132 |
| 74 | சிவனடியார்களுக்கு [illegible] தீங்குசெய்வார் கெடுவார்களென்பது. | ...136 |
| 75 | அரசனுக்குங் காரண்டனுக்குஞ் சம்வாதம். | ... ,, |
| 76 | காரண்டன் அரசனோடு யுத்தஞ்செய்ததைமறந்து வல்லூரன் எதிர்த்தல். | ...137 |
| 77 | வல்லூரனை யமசபைப்படுத்தி யானுஞ் சங்கந் தொனித்ததும் தேவர்கள் [illegible]. | ...138 |
| 78 | அரசனுக்கும் வல்லூரனுக்குஞ் சம்வாதம். | ...139 |
| 79 | வல்லூரன் அரசனோடு கதாயுத்தம் செய்தது. | ...140 |
| 80 | அரசன் அக்கினியாஸ்திரம் பெற்றது. | ... ,, |
| 81 | வல்லூரன் அரசன் மார்பில் கதாயுதம் மோதியது [illegible] | 14 |
| 82 | மூர்ச்சையடைந்த அரசனை இறந்தானென்று வல்லூரன் களியாடல் செய்தது. | ... ,, |
| 83 | உயிர்ப்படங்கச் சோகித்த அண்ணனுக்கு தேர்ப்பாகன் இரங்கல். | ...142 |
| 84 | கடவுள் பெரியோர் முதலானோர்கள் சொல்லியபடி நடத்தும் விஷயத்தில் வெற்றி அன்றியூணைப் பார்க்கினும் அவமதிப்பில்லாமல் உயிர்நீக்குதல் நன்மையென்பது. | ...143 |
| 85 | நல்லோர்களுக்கடைந்த தீமையும் கெட்டோர்களுக்கடைந்த நன்மையும் சீக்கிரம்கெடும் என்பது. | ... ,, |
| 86 | இறக்க உத்தேசிக்கும் அரசன் கனவில் சிவபெருமான் அளித்த உத்தரவு. | ... ,, |
| 87 | சிவபிரான் மறையவனாய்வந்து மடிந்தசேனைகளை யெழுப்பிக் கட்டமுதளித்தது. | ...144 |
| 88 | அரசனோடு சம்ப குசம்பர் விசித்திர யுத்தமும் அவர்கள் மரணமும். | ...147 |

| அத்தியாயம் | விசேஷக்குறிப்புகள். | பக்கம் |
|---|---|---|
| 89 | வல்லூரன் கொடியயுத்தஞ் செய்தல். ... | 148 |
| 90 | வல்லூரன் மாயையால் யுத்தம் புரிதல். ... | 151 |
| 91 | சிவபிரானை இறை அல்லவென்று நினைப்போர்கள் உள்ளத்துள்ள இருளும் இறையென்று கண்டகாலத்து உள்ளத்துள்ள வொளியும். ... | 152 |
| 92 | அரசன் முதுகு வெயர்த்தமையால் அந்த ஊருக்கு முதுவேத்த ஊரென்று பெயரெய்தியது. ... | 153 |
| 93 | அசுரன் மறைந்து அரசன் சிரத்துப்போட்டமலையை அசரீரிவாக்கால் கண்டு வெட்டியது. ... | 154 |
| 94 | ஓர் மலையின் மறைந்த வல்லூரனை அரசன் மலையோடு வெட்டியது. ... | 155 |
| 95 | அம்மலைக்குக் கவர்த்தியென்று பெயருண்டாயது. ... | ,, |
| 96 | ஆங்காரசித்தனென்னும் காரண்டன் படைத்தலைவனை அனகசுந்தரனென்னும் அரசன்மந்திரி கொன்றது ... | 158 |
| 97 | காரண்டனுடைய எண்ணிறந்த சயினியங்களை நிமிஷத்துள் அரசன் கொன்றது. ... | 160 |
| 98 | காரண்டனுக்கும் தெய்வீகராஜனுக்கும் சம்வாதமும் யுத்தமும். ... | 161 |
| 99 | காரண்டன்விடும் பிரமாஸ்திரத்தை அரசன் அகோராஸ்திரத்தால் வென்றது. ... | 162 |
| 100 | தெய்வீகராஜன் சொல்லிய நீதிகளுக்குக் காரண்டன் மானங்கெட இவ்வுடலுடன் வாழேன் என்றது. ... | 163 |
| 101 | அரசனேறு காரண்டன் கதை, வாள், யுத்தஞ்செய்து நான்குகரங்கள் அறுபட்டது. ... | 165 |
| 102 | அசுரனை கொல்லும் உபாயத்தை அரசனுக்கு நந்திகேசப்பெருமான் ஆகாயத்தினின்று கூறியது. ... | 166 |
| 103 | காரண்டன் முச்சிரத்தை அரசன் அறுத்தது. ... | 167 |
| 104 | தெய்வீகராஜன் வெற்றியைக்கண்டதே வேந்திரன் அரசனுக்கு வாகைமாலை தரித்தது. ... | 168 |
| | தெய்வீகவேந்தைப்பிரமஹத்திபற்றியதும்அதன்சிறப்பும் | 169 |
| 105 | சிவபிரான் அருளிருக்கின் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லையென்பது. ... | ,, |
| 106 | காசிப்பிராமணரை அரசன் கோவலூருக்கடைவித்ததும் அவர்கட்கு வீடுகளமைத்துவைத்ததும். ... | 171 |
| 107 | மிருகண்டுமகாரிஷி சொல்லிய ஆரியர் எண்ணிக்கையில் நானூற்றைமறந்ததற்கரசன் இரங்கல். ... | 172 |

| தொ. | விசேஷக்குறிப்புகள். | பக்கம். |
|---|---|---|
| 108 | சிறந்த நானூறுமறையோர்கட்கமைந்த இல்லைச் சிகாமணிநாதர் வைதீகமறையவராய் வாங்கவரும் விதம். ... | 173 |
| 109 | அரசன் வேதியர் ஆசைக்கு அளவில்லையென்றது. ... | 174 |
| 110 | வாங்கிய நானூறில்லங்களுக்கும் கணங்களை மாயமாய்க் குடிபுகச் சிவபெருமான் வைத்தது. ... | ,, |
| 111 | ஞானயோக கிரியை சரியை விதங்கள். ... | 175 |
| 112 | சிவாகமங்களின் துணிவுகூறியது. ... | ,, |
| 113 | ஒருபொருளை யொருவர்க்கு தத்தமன்றிக் கொடுக்கின் பயனில்லையென்பதுங் கொடுக்கும் விதியும். ... | 176 |
| 114 | சிவபெருமான் தனது அருளைப்பலவாகப் பெற்றோரையும் அவர்களையும் சோதிப்பார் என்றது. ... | ,, |
| 115 | அரசன் பெருமான்முன் தனக்கு அடைந்ததைக்கூறி வாளால் தன் கழுத்தையறுத்துக் கொண்டது. ... | 177 |
| 116 | அரசன்கையைச்சிவபிரான் பிடித்தலும் மறைதலும் ... | 178 |
| 117 | பெருமான் இறைவாசநல்லூரின் மூர்த்திதல தீர்த்தப் பெருமை கூறியது. ... | ,, |
| 118 | அரசன் பிரமஹத்தி நிவர்த்தியும் திருப்பணிசெய்ததும். | 179 |
| 119 | சிகாசிகாமணிநாதர் ஊர்ப்பாதி கொண்டானென்னும் பெயர்கொண்டது. ... | ,, |
| 120 | அரசன் இறைவாசநல்லூரைத் திருக்கோவலூராகக்காணப்பட்டதும் திருக்கோவலூருக்கடைந்ததும் ... | [illegible] |
| 121 | அற்பசெந்துக்களுக் கிடையூறுசெய்யினும் பாதகமுண்டென்பது. ... | 181 |
| 122 | செய்நன்றிமறத்தலைப் பார்க்கினும் வேறுதீங்கில்லையென்றது. ... | ,, |
| 123 | தெய்வீகராஜன் சிவபூஜை செய்தது. ... | 182 |
| 124 | பூசாவிலிங்கங்களுக்கு அரசன் பெயரமைத்தலின்யுக்தி. | ,, |
| 125 | சிவபிரான் பிரத்தியக்ஷமாய் அரசன்முன்றோன்றி சப்தபுரிசெல்லுமபடி யுத்தரவும் பூசித்த இலிங்கங்களின் மேன்மையுங்கூறியது. ... | 18[illegible] |
| 26 | தெய்வீகராஜன் அயோத்திமுதலிய சப்தபுரிகளுக்குஞ்சென்று ஸ்நான தரிசனஞ்செய்து அந்தந்தநகர அரசர்கன்னியரொருவரை மணம்புரிந்து கோவலூரை அடைந்தது. ... | 184 |
| 127 | ஈழநாட்டின் பெருமைகள். ... | 186 |
| 128 | சிவாகமம் போதிப்போர் மடத்தியல்பு. ... | 187 |

| தொ. | விசேஷக்குறிப்புகள் | பக்கத் தொ. |
|---|---|---|
| 129 | சிவஞான நிட்டையுறுமவர் மடத்தியல்பு. ... | 187 |
| 130 | சிவபெருமானைத்தவிர முத்தியீவார் இல்லையென்பார்கள் மடத்தியல்பு. ... | ,, |
| 131 | காசினிசுருதாவையுடைத்தென்போர் மடத்தியல்பு. .. | ,, |
| 132 | ஈசனுளன் என்னுஞ் சித்தாந்த மடத்தியல்பு ... | ,, |
| 133 | பாரிசாலவேந்தன் பத்திமார்க்கங்கள். .. | 188 |
| 134 | அவ்வரசன் அரசாளுந்தகுதிகள். | ,, |
| 135 | அரசன் மனைவியின் குணவிஷயம். .. | ,, |
| 136 | புத்திரர் இல்லாதவர்க்கு இருவகையின்பமும் இல்லையென்பது. ... | 189 |
| 137 | புத்திரன் இல்லாமனைவியின் சுகப்பிரயோசனம் இல்லையென்பது. ... | ,, |
| 138 | தவஞ்செய்து முத்தியடையும் விதம். .. | ,, |
| 139 | உலகவிர்த்தியையும் முத்தியையும் எளிதில் அடையும் விதம். | 190 |
| 140 | கதிர்காமவேலவர்பால் பாரிசாலவேந்தன் புரிந்ததொண்டுந் தோத்திரமும். ... | 191 |
| 141 | அப்பெருமான் அரசன்கனவிற்றோன்றிய உருவவிசித்திரங்கள். ... | 192 |
| 142 | வேலவர் அரசனுக்குப் புத்திரிகள் இருவர் அனுக்கிரகஞ்செய்தது. .. | 193 |
| 143 | அனுக்கிரகப்படி பிறந்தபுத்திரிகளிருக்கில் நாட்டுக்காகாதென்று சோதிடர்கள் சொன்னது. ... | 194 |
| 144 | எல்லாவற்றையும் பெறலாம் மகவினைப்பெறுதல் அரிதாமென்று அரசன் கூறியது. ... | ,, |
| 145 | வீரசெனனென்னுமொருவன் பாரிசால அரசன் நாட்டைக்கவர்ந்தது. ... | 195 |
| 146 | பாரிசாலவேந்தன் அந்நாட்டைநீங்குதல். ... | ,, |
| 147 | சோணாட்டில் கவியாற்றின்பக்கம் சிறுகுடிசையில் அரசன் இருந்தது ... | 196 |
| 148 | ஔவையார் பெருமைகளும் மழையில் நனைந்துவந்து அரசன் குடிசையிற்புகுந்ததும். ... | |
| 149 | அரசபுத்திரியிருவரும் அம்மையாரையுபசரித்து நீலச்சிற்றாடையளித்ததும் குளிர்நீக்கியதும். ... | 197 |
| 150 | அரசன் அம்மையாரையுபசரிக்குக் கந்தமூலம் அருத்துவித்ததும் அம்மையார் பாரியென்றோர் பாக்கூறியதும் | ,, |
| 151 | அரசன் வரலாற்றை யம்மைகேட்டுத் தெய்வீக அரச | |

| பாட்டு. | விசேஷக்குறிப்புகள். | பக்கம். |
|---|---|---|
| | னுக்கு இக்கன்னியர்களை யடைவிப்பேனென்றது. ... | 198 |
| 152 | அரசன் ஒப்பிவித்த கன்னியருடனே அம்மையார் திருக்கோவலூருக்கடைந்தது. ... | 199 |
| 153 | தெய்வீகராஜன் அம்மையாரை யுபசரித்தது. ... | 200 |
| 154 | கன்னியர் வரலாறுசொல்லி அரசனை மணம்புரியும்படி அம்மையார் சொல்லியது. ... | ,, |
| 155 | அரசன் பத்தினியர்களை யுடையேனுக் கிவ்விருவரும் வேண்டாமோ வேண்டியனும் மூவரசர்கள் சம்மதிப்படாரே யென்றதற்கு அம்மையார் அம்மூவரசர்களை யிம்மணம்புரிவிக்கயழைப்பேன் என்றது. ... | 201 |
| 156 | மணவோலையெழுத அம்மையார் விநாயகமூர்த்தியை அழைத்த வெண்பா. ... | ,, |
| 157 | குமாரக்கடவுளை யழைத்தவெண்பா. ... | 202 |
| 158 | குகமுனிவர் குமாரக்கடவுள் இடத்தில் தன்னையுலகத்தில் புத்திரபேறையுடையும்படி விட்டவிஷயத்துக் கிரங்கல். ... | 203 |
| 159 | எவ்விசித்திபெற்றோரும் உலகில் தாரபுத்திராதி ஏடணையடைந்து கருமநிவர்த்தித்தடைவார் என்றும் உன்போலெவரிதில் அளவிலாமேன்மைபெற்றோர் இல்லையென்றும் குகமுனிவருக்குக் குமாரக்கடவுள் கூறிப்பின்னுஞ் சிலஞாயஞ்சொல்லியது. ... | ,, |
| 160 | அம்மையார் சேரசோழபாண்டியர் மூவருங் கலியாணத்திற்கு வரச்சொல்லியருளிய மூன்றுவெண்பாக்கள். ... | 204 |
| 161 | உலகிற்குப்பொன்னே முதற்பொருளென்றது. ... | 205 |
| 162 | அம்மையார் பொன்மாரி பெய்யச்சொல்லிய வெண்பா. | ,, |
| 163 | வருணராஜன் புட்கலாவர்த்தமேகத்தைப் பொன்மாரி பெய்யும்படி சொல்லியவிதம் பெய்த தன்மை. ... | ,, |
| 164 | திருக்கோவலூர் அலங்காரவிதங்கள். ... | 206 |
| 165 | வயல் அரிசியாய்விளைய அம்மையார்சொல்லியவெண்பா | 209 |
| 166 | பருத்திச்செடிகள் கலைகளாய் காய்க்கும்படி அம்மையார் சொல்லிய வெண்பா. ... | ,, |
| 167 | மூவரசருங் கலியாணத்திற்கானவைகள் கொண்டு திருக்கோவலூருக்கடைந்தது. ... | 210 |
| 168 | அம்மையார் பெண்ணைநதியில் நெய், பால், தயிர், வரப்பாடிய வெண்பா. ... | 211 |
| 169 | நெய்,பால், தயிர்ப்பிரவாகங்களின் கற்பனுவிசேஷங்கள் | ,, |

| தொடக்க எ. | விசேஷக்குறிப்புகள். | பக்க எ. |
|---|---|---|
| 170 | வெட்டுப்பட்ட பனந்துண்டந் தழைத்துக்காய்த்துப் பழுத்துப் பழம்விழ அம்மையார் அருளிய கலித்துறை | 215 |
| 171 | அங்குள்ளோர் அம்மையாரைப் புகழ்ந்தது. ... | ,, |
| 172 | அங்கவை சங்கவையென்னுங் கன்னியரை அரசன் மணம் புரிந்தது. .. | 216 |
| 173 | வணங்கிய தம்பதிகளை அம்மையார் வாழ்த்தியவெண்பா | 217 |
| 174 | குகமுனிவர் மூவரசரைச் சிவலிங்கபூசை செய்யச்சொல்லியபடி யவர்கள் பூசித்தது. .. | 218 |
| 175 | பாரிசாலன் வேண்டுகோளின்படி அம்மையார் தெய்வீக அரசனைப் பதினெண்புவிகளை வெற்றிகொள்ள வாக்களித்தது. .. | 219 |
| 176 | அம்மையார் திருக்கோவலூரைப்புகழ்ந்துபாடிய வெண்பா | ,, |
| 177 | தெய்வீகராஜன் சிங்களதேசம் அடைந்தது. ... | 220 |
| 178 | அரசன் பகைவனைச் சயித்து பாரிசாலவேந்தனுக்குச் சிங்களதேசத்தை மகுடாபிஷேகஞ் செய்வித்தது. .. | 221 |
| 179 | தெய்வீகவேந்தனைச் சிங்களதேசத்தார் புகழ்ந்தது. ... | 222 |
| 180 | சிங்களதேசத்துள்ள ஸ்தலங்களை அரசன் தரிசித்தது ... | 223 |
| 181 | தமிழ்நாடு சிங்களநாடொழியப் பதினாறுநாட்டை அரசன் வெற்றிகொண்டது. ... | 224 |
| 182 | பதினெண்புவிகளின் பெயர்கள். ... | 225 |
| 183 | பதினெண் புவிகளுக்கரசன் தெய்வீகராஜனென முடிதரித்தது. ... | 227 |
| 184 | சிங்காதனத்திருந்த தெய்வீகவேந்தனை யரசர்கள் குமாரக்கடவுள் திருமால் முதலான கடவுளர்களே இவனும் என்ற சிலேடை கூறியது. ... | ,, |
| 185 | பிருகுமகாருஷி அரசர் சொற்களை மறுத்துத் தெய்வீகவேந்தன் இதுவரைக்கும் நடத்தியவிஷயங்கள் ஸ்ரீ வீரட்டேசுரர் கிருபாசாமர்த்தியமென்று ஒவ்வொரு விஷயங்களையுங்கூறி யேற்றபடி தெய்வீக நரசிங்கராஜ உடையான் எனப்பெயர் தந்தது. | 229 |
| 186 | தெய்வீகராஜன் பதினெண்புவிபுரக்கும் நீதிகள். ... | 232 |
| 187 | தெய்வீகராஜன் மனைவியர்கள் மூவர்கள் கருப்பத்துக்கேற்பட்ட புஞ்சவன சீமந்தம். ... | 233 |
| 188 | அதற்கேற்பட்ட தருமங்கள். ... | ,, |
| 189 | சுருதிமன்னவர்கள் பிரதம பிதாவாகிய குலசேகரப்பெருமான் உற்பவகாலம். ... | ,, |
| 190 | மலைமன்னவர்கள் பிரதம பிதாவாகிய நரசிங்கமுனையரையர் உற்பவகாலம். ... | 234 |

| தொடர்ச்சி எண். | விசேஷக்குறிப்புகள். | பக்கம் எண். |
|---|---|---|
| 191 | நந்தமன்னவர்கள் பிரதம பிதாவாகிய மெய்பொருணாயனார் உற்பவகாலம். ... | 234 |
| 192 | சாதகன்ம சூதக உத்தாபன விதிகள். ... | ,, |
| 193 | முப்புத்திரர்களுக்குங் காரணங்கருதிய நாமகரணங்கள். | 235 |
| 194 | உபநிட்டானம கன்னவேதனம் அன்னப்பிராசனம் பிண்டவர்த்தனம் இவைகளின் விதிகள். ... | ,, |
| 195 | சௌளம், உபநயன விதிகள். ... | 236 |
| 196 | சமையதீட்சை கல்விப்பயிற்சி விதிகள். ... | ,, |
| 197 | தீக்ஷை யில்லார்கள் இழிவு. ... | ,, |
| 198 | பிள்ளைகள் விளையாடல் காலத்தில் செய்யும் நற்செய்கைகள். ... | 237 |
| 199 | பிதா பிள்ளைகளுக்கு ஏற்படுத்திய விசாரணைகள். ... | 238 |
| 200 | பிள்ளைகளுக்கு மணப்பெண் பார்க்கும் விதிகள். ... | 239 |
| 201 | மணப்பெண்கொடுப்போர்கள் கொள்வோர் உள்ளத்தில் கொள்ளவேண்டிய நிதானம். ... | 241 |
| 202 | மணப்பெண் கொடுக்கவருவோர்கள் முறையும் அவர்களை யெதிர்கொள்ளவரும் கொள்வார்கள் செய்யும் மரியாதையும். ... | 243 |
| 203 | மூன்றுபுத்திரர்களுக்கும் மூன்றுகன்னியர்களைக் குலமுறைமைக்கேற்றபடி வைத்துத் திருமணநடத்தியது. ... | 244 |
| 204 | சிவபெருமான் அருளைத்தவிர மற்றைய நோக்குவது அருவருப்புடையதென்பது. ... | 245 |
| 205 | உலகிற் சனனமரணங்களுக்கேதுவாய் மூன்றாசையைக்கொள்ளாது முத்தியை விரும்பல். ... | 246 |
| 206 | சுகமுனிவர் சுபடமாய் உலகவின்பங்களே சிறந்தனவென்று சொன்னது. ... | ,, |
| 207 | பூர்வகாலப் புண்ணியத்தால் நரசனனமும் மிகுசெல்வமும் பெற்றும் நித்தியபதம்விரும்பாதென்னேவென்றது | ,, |
| 208 | செல்வமுடையோர்கள் மேன்மையான சாஸ்திரங்களைத் தாமறியாதால் மனோவாக்குக் காயங்களால் ஏற்படுங்கெடுதியும் அடையுந்துன்பமும். | 247 |
| 209 | உலகத்தில் அநேகர்கள் முத்தியை அடையவேண்டுமென்று எளிதாய்ச்சொல்வதைத்தவிர அடைவதற்கான யோகஞானங்களை விதிப்படியறிந்து நிற்றல் அரிதாகுமென்றது. | 248 |
| 210 | தத்துவ இலக்கணமுணர்தல். ... | ,, |
| 211 | யோகநிஷ்டை விதிகளும் அடையும் பயன்களும். ... | ,, |
| 212 | ஞானநிஷ்டை விதிகளும் அடையும் பயன்களும். ... | 249 |

| குறிப்பு | விசேஷக்குறிப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 213 | பெரியோர்களைச் சமாதிசெய்விக்கவேண்டிய காரண காரியம். .. | 250 |
| 214 | அவர்கள் சரீரத்தை சமாதிசெய்யாது கெடுத்தவர் அடையுந்துன்பம். ... | ,, |
| 215 | யோகஞானங்களைச் சுயவல்லமையால் மாயையைநீக்கி யெளிதிலடையப்படமாட்டாதென்பது. ... | 251 |
| 216 | சைவசித்தாந்த நூல்களையும் அந்நூல்களின் விதிப்படி நடப்பவர்களையும், தூஷிப்போர்கள் அடையுந் துன்பத்தையும் கூறியது. | ,, |
| 217 | உபாசனா விசேஷத்தாலன்றி யெளிதில் யோகஞானத்தையடைதல் முடியாதென்பது. ... | ,, |
| 218 | வினைவுள்ளவர்களுக்கு காரியலட்சியம் யாதொன்றுந் தெரியாதென்பது. ... | ,, |
| 219 | உலகத்தில் அவதரிக்கும் சீவர்களில் உத்தம சீவர்கள் அவதரிக்கும் விதிகூறியது. | ,, |
| 220 | இல்லறத்தினின்று சமையாதி முத்தீட்சை விதிப்படி பெற்று நடப்பார் எளிதில் முத்தியடைவாரென்றது. | 252 |
| 221 | சைவாகமத்திற்கூறிய உலகவிர்த்திப்படியாயுர் நடக்கவேண்டுமென்றது. | ,, |
| 222 | கருப்பாதான முகூர்த்தவிதி. | ,, |
| 223 | நாயகன் நாயகியுந் தனியேயோரிடத்திருந்தும் அந்த நாயகி புணர்ச்சியை நாயகன் வெறுத்திருந்த அருமை கூறியது. | 253 |
| 224 | மன்மதன் பஞ்சபாணங்களை மாறிமாறிவிடினும் பயன்படாத விசித்திரம். ... | ,, |
| 225 | புருடர் உள்ளநெகிழ மன்மதன் செய்யும் விசித்திரங்களுக்கேற்றபடி நாயகன் நாடகிசெய்யுங் கலவிக்குறிய வண்ணங்கள். | ,, |
| 226 | நாயகனுடைய ஆசையெனுங்காற்று வீசாவண்ணமில் காமாக்கினி யவிந்துபோமென்றது. .. | 254 |
| 227 | குருலிங்கவிக்யம் அவ்விரண்டை நிலைபடுத்துஞ் சங்கமவிதியுங் கூறியது. .. | ,, |
| 228 | சிவசின்னங்கள் ஆவன. .. | |
| 229 | சித்தசுத்தியொன்று போதாதா வென்றதற்கு, சிவகுருநாதன் அருளன்றிச் சித்தசுத்தி அடைவதெளிதல்லவென்றது. | 255 |
| 230 | சிவசின்னந் தரித்தோர்களுடைய தவபதவியைச் சொ | |

| செ. | விசேஷக்குறிப்புகள். | பக்கம் |
|---|---|---|
| | ல்வித் தூஷிப்பாரடையுந் துன்பம். ... | 255 |
| 231 | சைவசமயத்தாரெவரும் விபூதியுருத்திராக்கம்பஞ்சாக்கரத்தியானம்இல்லாதிருப்பாரேயாயின்சைவசமூகத்தினின்று விலக்கப்பட்டவராவார்கள். | ,, |
| 232 | சிவபூசை சிவாலயதெரிசனம் சிவனடியார் தொண்டு. ... | ,, |
| 233 | தெய்வீக அரசன் மைந்தர்களிடத்துமகிழ்ச்சியும் பயமுமடைந்து மகுடாபிஷேகஞ்செய்ய எத்தனித்தது... | ,, |
| 234 | தெய்வீகராஜன் எழுநூறுவருஷம் அரசாண்டமுறைகள் | 256 |
| 235 | இகத்தின்பங்கள் உச்சிட்டம் உண்டவகையாம் என்றது | ,, |
| 236 | அறிவுசொல்லியபடி நடவாது இவ்வுடலை மசானத்திலெரிக்குக் கொடுப்பேனென்றது. .. | ,, |
| 237 | உலகவின்பத்தால் அடையும் பயன்யாது. ... | ,, |
| 238 | சகோதரர்கள் முறைமைகள். ... | ,, |
| 239 | தந்தைசொல் மறுத்தமைந்தர்கள் தாழ்ச்சோர்களானர். .. | 257 |
| 240 | சுகமுனிவர்விதிப்படித்தெய்வீகராஜன் மூன்றுபுத்திரர்களுக்கும் மகுடாபிஷேகஞ் செய்வித்து ஞானதீக்ஷை பெற்றிருந்தது. ... | ,, |
| 241 | தெய்வீகராஜன் துரியபாவனை செய்திருந்தவிதம் ... | 258 |
| 242 | சுகமுனிவர் குமாரக்கடவுளைத் தியானித்தல் ... | ,, |
| 243 | குமாரக்கடவுள் அனுப்பிய விமானத்தில் சுகமுனிவர் புத்திரன் குலந்தழைக்க ஆசிர்வதித்தெழுந்தருளி ஆறுமுகப்பெருமானிடமின்றும வலப்பாகமிருக்கப்பெற்றது. | ,, |
| 244 | சுகமுனிவர் பதவிபெற்றநாள் ... | 259 |
| 245 | பச்சைக்குதிரை வீரட்டேஸ்பரரைத் தியானித்தது. ... | ,, |
| 246 | ஸ்ரீவீரட்டேஸ்பரர் திருவருளால் பச்சைவாசி பதவி பெறும் விதம். ... | ,, |
| 247 | தெய்வீகராஜன் பச்சைக்குதிரையின் முற்சென்மவரலாறுகூறியது .. | 260 |
| 248 | சமூகசே வேறுசமுதைத வரலாறு. ... | ,, |
| 249 | தெய்வீகராஜன் ஸ்ரீவீரட்டேஸ்வரரைத் தோத்தரித்தல். | 262 |
| 250 | ஸ்ரீவீரட்டேஸ்பரர் இடபவாகனமுடையராய் அரசன்முன் ஆகாயத்துத் தோன்றல். ... | ,, |
| 251 | தெய்வீகராஜன் மலைபரசனெனப்படுதும் பருப்பதஞ் சார்ந்ததும். .. | ,, |
| 252 | தெய்வீகராஜன் இகபரங்களின் அடைந்த விசேஷங்களை பல்லோர்கள் துதித்துக்களித்தல் ... | 263 |
| 253 | தெய்வீகராஜன் பிறந்தநாளும் பதம்பெற்றநாளும். ... | 264 |

| தொகை எண். | விசேஷக்குறிப்புகள். | பக்கம் எண். |
|---|---|---|
| 254 | குலசேகரப்பெருமான் உலகத்துள்ள முத்தொடர்ச்சிக் கருண்டு யாத்திரைக்கெழக்கண்ட மனைவிதடுக்க மறுத்து முன்னரேசென்றது. ... | 265 |
| 255 | புருஷனுக்கு மதங்கமானி சாபங்கொடுத்தது. ... | 266 |
| 256 | மதங்கமானி ஸ்ரீ பெரியநாயகியம்மையைத் துதித்துப் பதம்பெற்றது. ... | ,, |
| 257 | குலசேகரப்பெருமான் தம்பிமார்களுக்குத் தனது நாடுகள் ஆளுமையுங்கொடுத்தது. .. | 267 |
| 258 | குலசேகரப்பெருமான் ஞானதீக்ஷைபெற்று சோழன் மாளிகைக்கணிருந்தது. ... | ,, |
| 259 | அம்மாளிகையிற் புருடனை வேண்டாது ஒடுக்கத்திருந்த சோழன் வர்க்கத்துள்ளவொரு கன்னியைப் பெருமான் சந்தித்தது. | ,, |
| 260 | புருடனோடு மாதர்கலத்தல் கருமமென்றது. ... | ,, |
| 261 | புருடசம்பந்தத்தாலன்றி மாதர்கள் கருமம் நீங்காதென்றது. ... | ,, |
| 262 | உமாதேவியருந் தொண்டால் கருமமொளிதினீக்குவேனென்றது. ... | 268 |
| 263 | நீதொழும் அம்மைக்குப் புருடன் உண்டோவென்றது. | ,, |
| 264 | உலகவிர்த்தியின் பொருட்டு புருடன் வேண்டினனென்றது ... | ,, |
| 265 | எவ்விதமேனும் புருடனைவேண்டிய அம்மையாருக்கு நீமேன்மையுறவளா தாழ்மையுற்றவளா என்றது. ... | ,, |
| 266 | புருஷர்கள் மாதரை நீக்கலாமோவென்றது. ... | ,, |
| 267 | புருஷர் மாதர் அல்லாதிருக்கலாம் புருஷர்கள் அல்லாது ஒருக்காலு மாதர்களிருக்கப்படாதென்று த்ரௌபதை தேவிமுதலிய பதிவிரதைகள் வழக்கங்கள் கூறிய | ,, |
| 268 | ஆகையால் நீயதிவிரையில் சன்மார்க்கம் உள்ளபுருஷனைச் சேரவேண்டுமென்றரசன்கூறியது ... | ,, |
| 269 | நின்னையன்றி வேறுபுருஷன் உளவோவென்றது. ... | ,, |
| 270 | அரசன் முன்னெருதலிமையெறுத்துவிட்டு இப்போதுன்னைவேண்டேனென்றதற்கு அரிவை நீர்மீறுக்கின் எரியினைடை புகவேனென்றது. ... | 269 |
| 271 | இருவர் சொல்லியவைகேட்டிருந்தசோழன் அவ்விருவர்களுக்கும் பெயர்தந்து மாதின் பூர்வவரலாறுகூறி மணஞ்செய்வித்தது. ... | ,, |
| 272 | குலசேகரபெருமான் அம்மங்கைபோடுசிலநாள்வதித் | |

| இலக்கம் | விசேஷக்குறிப்புகள். | பக்கம் |
|---|---|---|
| | து நீங்கித் திருக்கோவலூரின் கிஷ்டைபுரிந்தது. ... | 271 |
| 273 | பெருமானிங்குமுன் கருசகொண்டிருந்த மூப்பியென்ற அம்மாது ஓர் புத்திரன் பெற்றது அப்புத்திரனுக்கு மூப்பநம்பியென்ற பெயர் வைத்தியதும். ... | |
| 274 | அம்மூப்பநம்பியென்ற புத்திரன் சோழராஜனிடத்து மந்திரியாயிருந்து நடத்திய விதம். ... | ,, |
| 275 | குலசேகரப்பெருமான் பதவிபெற்றநாள். ... | 272 |
| 276 | மூப்பநம்பியை சோழராஜன் மந்திரியாய்க்கொண்டதற்கு மெய்ப்பொருள் நாயனார் இரங்கல். ... | 273 |
| 277 | மூப்பநம்பிக்கு சோழன் தன்புத்திரியை மணஞ்செய்வித்தது. ... | ,, |
| 278 | திருக்கோவலூர் வந்த மூப்பநம்பியைச் சோழனழைக்க ஸ்ரீ வீரட்டப்பெருமான் சேவையைவிட்டு வருவதில்லையென்றது. ... | ,, |
| 279 | மெய்ப்பொருளையருளா புதல்வனைச் சோழன்பால்போகச்சொல்லச் சிவபெருமான்றரிசனம் விடலாம் தந்தைசொல் விடலாகாதென்று மைந்தன் சோழநாட்டையடைந்தது. ... | 274 |
| 280 | மூப்பநம்பி யுலகைநீதியோடு புரக்குந்தன்மை. ... | ,, |
| 281 | நரசிங்கமுனையர் அடியார்களே சிவபெருமானென்றுட்கொண்டு அரசுபுரிந்தது. ... | 275 |
| 282 | நரசிங்கமுனையர் நன்னெறியுள்ள வொருபுத்திரன் எவ்வகையிலாயினுங் கிடைத்தால் அவன்வசம் அரசையொப்பிவித்து வீண்காலமின்றி அடியார்தொண்டு புரியலாமே யென்றது. .. | ,, |
| 283 | சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவவதாரம் ... | 276 |
| 284 | நரசிங்கமுனையர் சுவாமிகள் பாலியதிருவுருவைக்கண்டு தன் அரசுக்கிவர்உரியாரென்று அவர்பிதாவைக்கேட்டல் | ,, |
| 285 | பிதாமறுப்பும் அரசன்சொல்லும் ஞாயமும் ... | ,, |
| 286 | அரசனிடம் சுவாமிகள் வளருந்தன்மை. ... | 277 |
| 287 | அரசனுக்கு நம்பியார் தம்பியென்ற வொருபுத்திரன் பிறந்தது. ... | ,, |
| 288 | இன்னுமெத்தனை சுதர்கள் பிறந்தாலும் சமதரசு ஆரூரர்க்கென்றே அரசன் கொண்டகருத்து. ... | 278 |
| 289 | சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குக் கலியாணவெத்தனிப்பு | ,, |
| 290 | சிவபெருமான் வயோதிகப் பிராமணனாயெழுந்தருளிக் கலியாணத்தைத்தடுத்து அனேக அற்புதங்காட்டிச் சு | |

| [illegible] | விசேஷக்குறிப்புகள். | பக்கத் தொ. |
|---|---|---|
| | சாமூர்த்திசுவாமிகளைத் தடுத்தாட்கொண்டது. .. | 278 |
| 291 | சுவாமிகள் பித்தா பிறைசூடி யென்ற பதிகமெடுத்துப் பாடியது. ... | 281 |
| 292 | நரசிங்கமுனையர் இவ்வற்புதங்களைவிட்டுநீங்கேனென்றது | 282 |
| 293 | சுவாமிகள் அரசனை அடியார் தொண்டாற்றப் படியுத் தாவளித்து விபரித்திருக்கோவலூர்ப் பதிகத்திற் கூறியது | ,, |
| 294 | அரசன் சுவாமிகள் சொல்லை மறுத்தற்கஞ்சித் திருக்கோவலூர் அடைந்து இராசாங்கமும் அடியார் தொண்டும் ஆலயத்தொண்டும் நடத்தியது. ... | 283 |
| 295 | அரசன் இரண்டாவது பிறந்தசுதனுக்கு ஆட்கொண்டானென்றபெயரிட்டது. ... | ,, |
| 296 | அரசன்புத்திரர்கள்வசம் அரசையொப்பித்தது. ... | 284 |
| 297 | அரசன் ஒரு திருவாதிரைத்தினத்து மிகக்கேடுள்ள கொடியவியாதி கொண்டவரொருவர் வெண்ணீறணிந்தங்கு வரக்கண்டமற்றைய அடியார்கள் இகழ முனையர் அவர்களைமறுத்துவந்த அடியவரையுபசரித்தல். ... | ,, |
| 298 | திருநீற்றையணிந்தவர்களையவமதித்திகழ்வார்கள் இகழ்ந்தவிதம் அடையுந்துன்பம் ... | 285 |
| 299 | எத்தன்மையுடையாராகினும் திருவெண்ணீறணிந்தாரேல் அவர்களைச் சிவபெருமானெனக்கொள்ளவேண்டுமென்றது. ... | ,, |
| 300 | துதித்த அடியார்க்கு முனையர் சிவசின்னத்தோர்கள்மகிமையைப் பிரமாணத்தோடுகாட்டியது. ... | ,, |
| 301 | குருபியாய்வந்த அடியாருக்கு இருநூறுபொன் கொடுத்து முனையர் போற்றினமையால் இனியுலகில் அடியார் இழிவு எண்ணுதுபோற்ற ஒருசாட்சியாய்விட்டதென்றது. ... | ,, |
| 302 | நரசிங்கமுனையர் பதவிபெற்ற விசேஷநாளும். .. | ,, |
| 303 | முனையர் விசேஷப் பெருமைகுலப்பெருமை. .. | 286 |
| 304 | பாரதம்பாடுவித்தவர் அக்குலத்தாரொன்றது. .. | ,, |
| 305 | முனையர் புத்திரவர்க்கங்களுக் கேற்பட்ட குலஞ்சாதிப் பெயர்களுஞ் சிறப்புப்பெயர்களும். ... | ,, |
| 306 | அம்மரபின் வர்க்கமலைமன்னர்கள் வல்லமையுஞ்செல்வமுங் கௌரவமுந் தொண்டும் கூறியது. ... | ,, |
| 307 | முனையர் பதிக்கு மலைமன்னரென்பது மூவகையால் பாண்டியராசனாலும் சேரனாலும் ஆண்டகராலும் உண்டாயின. ... | ,, |
| 308 | மெய்ப்பொருள்வேந்தனுக்கு மலையமானெனப்பெயர் | |

| திடர்க்கு ரு. | விசேஷக்குறிப்புகள். | பக்கம் ரு. |
|---|---|---|
| | வந்தகாரணம். ... | 287 |
| 309 | திருவரையிற் சர்பாதிசயபொருளைச் செலவிடுமியல்பு. | ,, |
| 310 | மெய்ப்பொருணாயனார் பிள்ளைகள் மூவருக்கும் பெயர் வைத்த உளகிப்பு ... | 288 |
| 311 | முன் றெய்வீசராஜனால் வெற்றிகொள்ளப் புத்திரர்கள் ஆளப்பட்டநாடுகளில் சித்ரசேநாதியாகிய புத்திநாதன் மெய்ப்பொருணாயனாரோடு யுத்தத்துக்கு வந்தது. ... | ,, |
| 312 | நாயனார் விபூதியுருத்திராக்கம் பூண்டு யுத்தஞ் செய்து புத்திநாதனை வெற்றிகொண்டது. ... | 289 |
| 313 | தோற்றபுத்திநாதன் முத்தநாதனென்றபேர்பூண்டு சிவவேடங்கொண்டவிதம். ... | ,, |
| 314 | பொய்வேடத்தான் வரக்கண்டதத்தனென்றவோர் காவற்காரன் சந்தேகித்துத் தடுத்தது. ... | 290 |
| 315 | வேடத்தான் மறுத்துச் செல்லதத்தன் அஞ்சியவிதம்... | ,, |
| 316 | அந்தப்புரத்துப் பனிமலர்ப்பள்ளியிற் றிருக்கண்சயனஞ் செய்திருந்த நாயனார்பால் சென்றபொய் வேடத்தானை மனைவி கண்டு நாயகனையெழுப்பிப் பணிவித்தலும் நாயனார் கொண்ட சாந்தகுணமும். ... | ,, |
| 317 | பொய்வேடத்தான் நாயனாருக்குத் தான்வந்தவரலாறு கூறுதல். ... | 291 |
| 318 | நாயனார் மனைவிசொன்ன நியாயமறுப்பு. .. | ,, |
| 319 | பொய் வேடத்தான் தலைமோசஞ்செய்ய வாளெடுப்பதையறிந்தநாயனார் உட்கொண்ட ஞாயங்கள் ... | ,, |
| 320 | பொய் வேடத்தான் தான்கருதிவந்தவிதமுடித்தும் நாயனாரே வெற்றியடைந்தாரென்றது. ... | ,, |
| 321 | மோசங்கண்ட தத்தன் பொய்வேடத்தானை வெட்டவருவதைத்தடுத்து நாயனார்சொல்லும் ஞாயங்கள். ... | 292 |
| 322 | பொய்வேடத்தானை யாதொருதீங்கு செய்யாது விட்டுவரும்படி நாயனார்தத்தனுக்குச் சொல்லல். .. | ,, |
| 323 | தத்தன் அப்பொய்வேடத்தானையழைத்துப் போங்காலை யவனை கொல்லவந்தோர்க்கு அரசன் உத்தரவுசொல்லக் கேட்டவர்கள் சொல்லும் ஞாயங்கள். ... | 293 |
| 324 | பொய்வேடத்தானைவிட்டுவரும் வார்த்தைகேட்டநாயனார் ஆன்மாவை நிறுத்தியவிதம். ... | 294 |
| 325 | அதிகப்பட்ட துக்கத்துடன்வந்த மனைவிமைந்தர் முதலோர்களுக்கு நாயனார் சொல்லிய சமாதானம். ... | 295 |
| 326 | நாயனார்தம் உள்ளத்துள்ளவைகளை வெளியிட்டு வீரட் | |

| இலக்கம் நெ. | விசேஷக்குறிப்புகள். | பக்கம் நெ. |
|---|---|---|
| | டேஸ்பரரைத்துதித்தல். ... | 295 |
| 327 | வீரட்டேஸ்பரரெழுந்தருளி நாயனார்தொண்டைவியந்து கபடிகதல். ... | 296 |
| 328 | அண்ணலை நின்றிருவடிதொழுந்தொண்டன்றி வேறொன்றும் வேண்டேனென்று நாயனார்சொல்லுதல். ... | 282 ,, |
| 329 | நாயனார்நீர் என்று மொருசாட்சியாணிவொன்று சன்பதத்தைவென்றுங் கும்பிம்பவரதத்தை ஸ்ரீ வீரட்டேஸ்பரர் அளித்து ... | 297 |
| 330 | சிவவேடமே மெய்ப் பொருளெனக்கொண்ட நாயனார் பெருமைகள். ... | ,, |
| 331 | சுந்தரமூர்த்திஸ்வாமிகள் நாயனாரையுபசரிக்க விதமும் மெய்ப்பொருளென்றேற்பட்ட பெயருக்கேற்றபடிநடந்து பதவிபெற்றவிதமும். ... | ,, |
| 332 | நாயனாருத்தரவின்படி காமாரிக்கு முடிசூட்ட அரசானுந்தகைமை. ... | 298 |
| 333 | நாயனார்வம்சம் அதிகவிர்த்தியடைய வேற்பட்ட வாக்கின் விசேஷம். ... | ,, |
| 334 | நாயனார் வம்சத்தார்களுக்கேற்பட்ட குலப்பெயரும் சாதிப்பெயருஞ் சிறப்புப்பெயரும் வல்லமையும். ... | ,, |
| 335 | நரசிங்கமுனையர் மெய்ப்பொருளனார் இருவர்களின் வம்சத்தார்களுக்கு உலகத்துள்ளோர் முனையாவம்சத்தார்களை மலைமன்னரென்றும் நாயனார்வம்சத்தார்களை நத்தமன்னரென்றும் அழைத்தபான்மை. ... | ,, |
| 336 | மூன்றுமரபினர்கள் விசேஷங்களெல்லாம் வீரட்டேஸ்பரர் திருவருளேயென்றது. ... | 299 |
| 337 | அடியார் தொண்டால் முத்திபெற்றோர்கள் இவ்வளவென்று சிவபெருமானைத்தவிரச் சொல்லவல்லனரில்லையென்றது. ... | ,, |
| 338 | திருக்கோவலூருக்குச் சிவபுரமென்ற காரணம். ... | 300 |
| 339 | திருக்கைவேலூரென்ற காரணம். ... | ,, |
| 340 | திருக்கோவலூரென்றபெயர் ஏற்பட்டதற்குக் காரணங்கள். ... | ,, |
| 341 | கண்ணுவபுரம், கபிலபுரம், காமபுரம், கணேசபுரம், திருட்டிஞானியம், உருத்திரபுரம் என்னும் பெயர்கள் உண்டானவகை. ... | 301 |
| 342 | திருக்கோவலூரின்கண் ஒவ்வொருவர்கள் இருந்து பூசித்த காலங்கள். ... | ,, |

| அத்தி. தொ. | விசேஷக்குறிப்புகள். | பக்க. தொ. |
|---|---|---|
| 343 | திருக்கோவலூரில் இருந்து பதவிபெற்றபேர்கள். ... | 302 |
| 344 | திருக்கோவலூரில் அடைந்தபேர்கட்கு அடையும்பயன் | |
| 345 | சிவபுரமென்னுங் கோவலூருக்கு நாற்பக்கமுள்ளநான்கடையாளங்கள். ... | ,, |
| 346 | க்ஷேத்திரத்தின் யோசனை தூரத்துள்ளோர்களும் அங்கு அடைந்தோர்களும் அடையும் விசேஷங்கள். ... | ,, |
| 347 | க்ஷேத்திரத்தில் ஒருதவாபஞ்சாட்சரத்தியானஞ் செய்தோர்களும் அருச்சனைபுரிந்தோர்களும் அடையும்பயன்கள் | ,, |
| 348 | ஸ்நானதரிசன ஸ்தலவிசேஷம் விரும்பாது கெட்டகாரியத்தை விரும்பியாயினும் ஓரிரவுவசிப்பாரேல் அவர்கள் அடையும் பயன். ... | 303 |
| 349 | சைவபுரத்தில் அற்பபுண்ணியஞ்செய்தாலும் அதிகவிர்தியாகிச்சிவலோகத்தையடை விக்குமென்றது. ... | ,, |
| 350 | அவர்கள் அக்கோவலத்துப் பிரியத்தொடு வசிக்கிறார்களோ அவர்களுக்கு அடையும்பயனைப் பற்றிபுதுமைசொல்லவேண்டுமோ வென்றது. ... | ,, |
| 351 | கோவலத்தெம்மானைத்தரிசித்துப்பெண்ணைநதியில் ஸ்நானஞ்செய்தவர்கள் தேவர்களாவார்கள் என்றது. ... | ,, |
| 352 | ஸ்தலதரிசனஞ்செய்தவர்களுக்குவேறொருதலத்திலாசையும் பாவங்களும் கொடிய உலகங்களுமில்லை யென்றது ... | ,, |
| 353 | அத்திருக்கோவலூரின்கணணடையும் பயனைப்போல எவ்வெவ்விடத்துங்கோவலூரென்றபெயரிட்டு எம்மிறைவனைஸ்தாபித்துப் பூசிப்பார்களும் இஷ்டசித்திகளை யடைவார்களென்றது. ... | 304 |
| 354 | முன்சொற்ற மூப்பநம்பி மெய்ப்பொருணயனார் உத்தரப்பாக சோழநாட்டில் கோவலூரென்றோர் க்ஷேத்திரப்பெயரிட்டாலயமமைத்து சிவபெருமானை ஸ்தாபித்து பூசித்து முத்தியடைந்தான் அந்நகருக்கு மூப்பகோவல் எனறபெயரெய்திய தென்றது. ... | ,, |
| 355 | காரணக்குறிப்புடை மூப்பனார்கட்கேற்பட்ட பெயர்கள். | ,, |
| 356 | இன்னும் அனேகம்பேர்கள் இப்படிவேறுவேறுஸ்தலங்களினுங் கோவலென்றபெயரிட்டு பூசித்துமுத்தியடைந்திருக்கிறார்களென்றது. ... | 305 |
| 357 | கோவலென்றபெயர் உலகிற்றிரிந்து கோயிலென்றாயது | 306 |
| 358 | பெண்ணைநதியில் ஸ்நானஞ்செய்து வீரட்டேஸ்பரனைத்தரிசிப்போரடையும்பலன்கள். ... | ,, |
| 359 | சிவபெருமான், விஷ்ணு, பிரமதேவன், உமாதேவி, குமா | |

| [illegible] தொ. | விசேஷக்குறிப்புகள். | பக்க தொ. |
|---|---|---|
| | ரக்கடவுள், தெய்வீகராஜன் இவர்களாகவும் அமுதமாகவும் பெண்ணைநதி விளங்குகின்றதென்றது. ... | 307 |
| 360 | கங்கையாதி நதிகள் அப்பெண்ணை நதியில் வசிக்கின்றதென்றது. ... | ,, |
| 361 | உருத்திரதீர்த்த விசேடம். ... | ,, |
| 362 | உத்தரவாகினிப் பெண்ணைநதி ஸ்நானபலன். ... | 309 |
| 363 | அக்கினி திக்கில் கபிலதட ஸ்நானபலன். ... | ,, |
| 364 | வடக்குக் கண்ணுவதீர்த்த ஸ்நானபலன். ... | ,, |
| 365 | மேற்கு இராகவதீர்த்த ஸ்நானபலன். ... | ,, |
| 366 | மேற்கு பாசிராமதீர்த்த ஸ்நானபலன். ... | 310 |
| 367 | தெற்கு தருமதீர்த்த ஸ்நானபலன். ... | ,, |
| 368 | வடக்குப் பத்ரசங்கமத்துப் பிதிர்தீர்த்தஸ்நானபலன். ... | ,, |
| 369 | கிழக்குச் சத்தவிருடியர்தீர்த்த ஸ்நானபலன். ... | ,, |
| 370 | கிழக்குச் சூரியதீர்த்த ஸ்நானபலன். ... | ,, |
| 371 | தெற்கு அக்கினிதீர்த்த ஸ்நானபலன். | ,, |
| 372 | பத்ரசங்கமதீர்த்த ஸ்நானபலன். ... | 311 |
| 373 | தன்மப்பிரகலாதனன் ஆசாரிய சுதனைக்கொன்ற தோஷ நீக்குதல். ... | 312 |
| 374 | கங்கையாதிநதிகளின் பாவம் நீக்குதல். ... | ,, |
| 375 | எசுவையர் பசுங்கன்றின்கொலை நீக்குதல். ... | ,, |
| 376 | பதுமயோனியன் வேதாளத்துரு நீக்குதல். ... | ,, |
| 377 | சுதவன்மன் பராமுகத்தாலடைந்த சோகத்தி நீக்குதல். | 313 |
| 378 | அச்சுதன் சிவலோகமடைதல். ... | 314 |
| 379 | குச்சகௌசிகமுனிவர்கள் தவத்திட நிச்சயித்தல். ... | ,, |
| 380 | மண்டுகன் பிரமராக்ஷதனுதல் நீக்குதல். ... | 315 |
| 381 | விநாயகக்கடவுள் மகோதர நீக்குதல். ... | ,, |
| 382 | நின்மலன் குஷ்டரோக நீக்குதல். ... | ,, |
| 383 | அனகன் குஷ்டரோக நீக்குதல். ... | ,, |
| 384 | பெண்ணைநதி மகிமையை வசிட்டமுனிவர் நிமிசக்கரவர்த்திக்குச் சொல்லினரென்றது. | 316 |
| 385 | அந்நதிமகிமையைப் பிரமாண்ட புராணத்திலுஞ் சொல்லியிருக்கின்றதென்றது. ... | ,, |
| 386 | இவ்வெல்லாஞ் சூதர்சொல்லக்கேட்ட நைமிசமுனிவர்கள் அந்நதியில் ஸ்நானமாடி இஷ்டசித்தி பெற்றாரென்றது. | ,, |
| 387 | அந்நதிப்பெருமையெல்லாம் ஸ்ரீ வீரட்டேசுரர் கிருபாவிசேடத்தாலென்றது. ... | ,, |

| தொடர் எ. | விசேஷக்குறிப்புகள். | பக்க எ. |
|---|---|---|
| 388 | பூலோகத்துள்ள தீர்த்தங்கள் யாவும் பெண்ணைநதியிற் படிந்து விசேஷம் பெறுங்கால் அப்பூலோகநதிகளை மேன்மைமேன்மையென்றார்களுக்கு என்னசொல்லுகிறதென்றது. | ,, |
| 389 | பெண்ணைநதியின் உற்பத்திமகிமைகளை யார்சொல்லவடங்குமென்றது. ... | 317 |
| 390 | பெண்ணைநதியின் பரியாயநாமங்கூறியது. ... | ,, |
| 391 | அந்நதியுற்பத்திமுதல் எவ்விடத்தில் ஸ்நானஞ்செயினும் இஷ்டசித்தி பெறலாமென்றாலும் ஸ்ரீவீரட்டேசுரரைத் தியானித்து ஸ்நானஞ்செய்து அவரவர்க்கியன்றவரை அன்னமாதி கொடுப்பாராகின் ஒன்றுகோடியாய் புண்ணியவிருத்தியடைந்து எளிதில் பரகதியடைவாரென்றது. | ,, |
| 392 | ஸ்ரீவீரட்டேசுரரை யருச்சித்தவர்கள் கைலையடைவதற்குச் சந்தேகமில்லையென்றது. ... | ,, |
| 393 | பெண்ணையில் ஸ்நானஞ்செய்து ஸ்ரீவீரட்டேசுரரை யாருச்சித்து ஒருநாள் வசித்தவர் சிவபெருமான் உருவத்தை யடைவாரென்பதற்கு யாதொருசந்தேகமும் இல்லையென்றது. | 318 |
| 394 | திருக்கோவலூருக்குச் சுற்றிலும் ஐந்து நாழிகைதூரவரையிலுள்ள ஜலமெல்லாம் கங்காஜலம் என்றது ... | ,, |
| 395 | திருக்கோவலூருக்குச் சுற்றிலுமைந்துநாழிகை தூரத்துக்குள் யிறந்தவர்கள் சிவவடிவத்தைப்பெறுவார்கள் என்றது | ,, |
| 396 | புராணஞ்சொன்ன சூதமகாருஷியுங் கேட்ட நைமிசாரணியவாசிகளும் தென்றிசைநோக்கி ஆனந்தபரவசத்தர்களாய் ஸ்ரீவீரட்டேசுரர் திருவருளைப்பெற்றார்களென்றது. | ,, |
| 397 | கொடுந்தன்மையுடையேனை ஸ்ரீவீரட்டேஸ்பரர் மன்னித்து ஆண்டவிஷயத்துக்கு அவர்பாதங்களில் நீங்காத ஆசையடைவதைத்தவிர யான்வேறு யென்ன செய்யத்தகுமென்றது. | ,, |
| 398 | ஸ்ரீவீரட்டேஸ்பரர் என்னுள்ளத்திலுள்ளே நீங்காதிருக்கின்றாரென்றது. ... | 319 |
| 399 | திருக்கோவலூர்ப்புராணத்தை யெவ்விதமேனும் அனுசரிப்பார் அடையும் பயன் .. | ,, |
| 400 | திருநீறு முதலிய வாழியும் செய்யுட்டொகையும். .. | 320 |


திருக்கோவலூர்ப்புராண விசேஷக்குறிப்புமுற்றிற்று.

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல்
தமிழ்ப்பண்டிதர்
பின்னத்தூர் மகா-ள-ள-ஸ்ரீ
அ. நாராயணசாமி ஐயரவர்களால்
இயற்றியது.

பொன்மேவத் துறைகடொறும் புலமேவ வலைகொழிக்கும் பொன்னியாற்றின், சொன்மேவு கிளையாய முடிகொண்டா னதிக்கரையின் சூழ லோங்கி, விண்மேவு மணிமாட மிடைதருசண் பகக்கொல்லை யெனும்பேர் மேய, மண்மேவு வளம்பதியின் வயினுதித்தோன் பலகலைதேர் மாண்புமிக்கோன். (௧)

வேறு.

கடம்படச் செருக்கு நால்வாய்க் கடுங்களிற் றுரித்தல் வன்றோற்
படம்பெற வுடீஇய நங்கள் பரம்பரன் கழற்காற் கன்பன்
றடம்பெறு மறிவின் மிக்க சௌந்தர ராஜ னென்னுந்
திடம்பெறு பெயரோன் சீர்சால் சிறப்பொருங் கமைந்த வள்ளல்.

நற்றவப் பெருக மைந்த னலனமை கவியென் பானன்
பெற்றசொல் குலத்திற் றோன்றிப் பிறங்குமக் கவிக்குப் பின்னர்ச்
சொற்றசெந் தமிழிற் பாடுங் கவியிவ னென்று சொல்ல
வற்றவ னெடுத்த தோற்றத் துறுதியி தென்ன வன்றோ. (௨)

ஆடலஞ் செருவிற் றன்போ லாகவந் தகனைக் காய்ந்த
நீடலங் கிளைய குலமேங்கிய கோவ னித்த
சூதநன் புராணம் பண்டே நவின்றது சாங்கிற் றென்னா
வூதிள காதை யாவு மொருங்குறப் பாடிச் சேர்த்து. (௩)

எணுறா ழியனூற் றென்று மிலக்கிய மிஃதொன் றென்ன
வாணியி னென்ற கல்வி வல்லராய்ச் சோலை மல்க
நீணில வுவமைப் பில்லா யாண்டு நிலவுற வச்சிற் சேர்த்திப்
பேணியர் ராருளி னீந்து பெரும்புகழ் கொண்டா னாதோ. (௫)

ஆக மூன் பாக்களுள்பட-௨௭.

சிவமயம்.

# நடுநாட்டின் விசேஷங்கள்.

## பெரியபுராணத்துள்.

கங்கையுமதியும் பாம்புங் கடுக்கையுமுடிமேல் வைத்த
அங்கணர் ரோலைகாட்டி யாண்டவர் தமக்குநாடு
மங்கையர் வதனசீத மதியிரு மருங்குமோடிச்
செங்கயல் குழைகளோடுந் திருமுனைப் பாடிநாடு. (க)

## பாரதப்பாயிரத்துள்.

அவ்வையொடனார்க்கு § நதிநெய்பால் பெருகியருங் கயிறுமி விழுந்திறந்து, பௌவ நீராடைத் தரணிமான் மார்பிற்ப யிலு முத்தரியம்போன்று, மொய்வரால் செந்நெல் வாளை சேர் மலைந்து மற்றவ ளெதிர் கொள்ளத், தெய்வமா நதிநீர் பரக்குநாடுந்தத் திருமுனைப்பாடி நன்னாடு. (உ)

பாவருந் தமிழாற் பேர்பெறு பனுவற்பாவலர் பாதிரா விரவின், மூவருநெருக்கி மொழிவிளக்கேற்றி முகுந்தனை தொழுதநன்னாடு, தேவருமறையு மின்னமுங்காணச் செஞ் சடைக் கடவுளைப்பாடி, யாவருமறிந்தோர் மூவரிலிருவர் பிறந்தநாடிந்தநன்னாடு. (ங)

## இறைவாசநல்லூர்ப்புராணத்துள்.

குருகுலமன்னவர்தம்மிற் குலநிருப னருச்சுனன் றன்கு மரன்றந்த, பருவரூலிலாத நெறிப்பரிட்சித்து கண்டுகெந்த ப்பழனநாடு, பொருவரிய புகட்போகப் பூமியினும் போத வளம் பொலிந்தநாளும், பெருகுமிசை நந்திமால் வரைச் சாரல் பெண்ணைநதி பெருகுநாடு. (ச)

---

§ நதிநெய்பால்-என்று-ஏட்டுப்பிரதிகளிலிருக்கின்றது.

தருமநெறி யுதிட்டிரன்றன் றம்பிதிறல் வீமனுக்குந் தவமே பூண்ட, புருடமிருகந் தனக்கும் பொருளுணர்த்து நெறி பூண்ட புநிதநாடு, கருமுகில்கள் பொழிமுத்துங் கமலங்க டருந்தரளங் கன்னலீன்ற, பெருகொளி நித்திலங்குழுமி யெப்போது நிலவெறிக்கும் பெண்ணைநாடு. (௨)

பந்தவினைச் சூலைநோய் பணிக்கநாவுக்கரசர் பரவியந்நோய் சிந்தவுமை யிடத்தானைச் செந்தமிழ் மாலைகள் புனைந்த தெய்வநாடு, முந்தையடி யானிவனென் றுவணமுங் காட்டிய வை முன்னேயேறிச், சுந்தரனைப் பரஞ்சோதி தடுத்தடிமைகொண்டருளுந் தூயநாடு. (௩)

இரவிதரு திருமதலைக் கிராமனருள் வாய்மைநெறி யிருந்தநாடு, பரவுமொரு பாதிரியங்கயங்கழுநீர் பலமலரும் பயந்தநாடு, மரபுரிமை வேளாளர் மகிழ்ந்துகுல விளக்கிநடத்த வண்மைநாடு, பிரசமலர்ச் சோலைமது நதிக்கடலி னிடைப் பெருக்கும் பெண்ணைநாடு. (௪)

பொய்கைபேய் பூதமெனும் புலவரொரு மூவர்களும் பொருந்திச்சங்கங், கைகொள் நாரணன் றனக்குங் கங்குலிடை சொற்றீபங் காட்டுநாடு, மைகொண்மா மனத்துரி யோதனன்புரிந்தவஞ்சகத் தால்வந்து ஞானச், செய்கையார் தருமன்முதலைவர்களுந் திருந்துதவஞ் செய்தநாடு. (௫)

சேரன் பாண்டியன் சோழன் கன்னியரைத் தெய்விகன் றிருக்கல்யாண, மாரன்போற் புரிந்து சத்தபுரியரசர், மகாராமணந் தருநாடு, விரிஞ்சா ரிருநூற்றி யிருபத் தெண் மைந்தருக்கு மேவுநாடு, சேரவரும் பிறவியகற்றிடு முதுகுன்றினையுடைய தெய்வநாடு. (௬)

சொற்ற இத்தன்மையும் பிறவுமாயுள்ள

பலவிசேடங்களைப்படைத்த

## நடுநாட்டின் விசேஷங்கள்.

### 1. நடுநாட்டின் பெயர்கள்.

திருமுனைப்பாடிநாடு, சேதிநாடு, நத்தநாடு, மாவலநாடு, பெண்ணைநாடு, கோவலநாடு, தெய்வீகநாடு, இவ்வேழு நாமங்களும் பிறவுமாம்.

*அந்நடுநாட்டின்கண் சமயகுரவர்கள் முதல் ஆன்றோரால் பாடல்பெற்றுள்ள இருபத்திரண்டு சிவக்ஷேத்திரத்துள் தெய்வீகம்பெற்ற*

### 2. திருக்கோவலூரின் பெயர்கள்.

சிவபுரம், சைவபுரம், வீரட்டபுரம், திருக்கைவேலூர், கண்ணுவபுரம், கபிலமாபதி, காமபுரம், கணேசபுரம், திருட்டித்துரணியம், உருத்திரபுரம், வெள்விபுரி, குபேரச்சுரம், வினைவெல்புரி, தெய்வீகபுரி, திருவிக்ரமம், கோவலம், கோவல், ஔவலக்ஷேத்திரம், ஏமவருடநிலயம், இப்பத்தொன்பது நாமங்களும்பிறவுமாம்.

*அத்திருக்கோவலூருக்கணித்தாயும் எண்ணிலாத விசேடங்களையுடைத்தாயும் விளங்கும்*

### 3. பெண்ணையாற்றின் பெயர்கள்.

பிநாகிநதி, கங்கை, வேகவதி, பாறநிவேயதரங்கிணி, நந்திதீர்த்தம், வாரநதி, ஔஷவவாக்கனுசாரி, அகண்டகுடிஞை, சருவதீரகருணி, இவ்வொன்பது நாமங்களும் பிறவுமாம்.

*அப்பெண்ணையாற்றின் வலப்பாகத்து மேற்கபிமுகத்தராய்த் திருக்கோயில் கொண்ட*

### 4. ஸ்ரீ வீரட்டேசுரர் திருநாமங்கள்.

வினைவென்றான், அந்தகாந்தகன், இருட்கூடறுத்தான், திரிசூலன், பச்சிமாபிமுகத்தன், திருக்கோவலத்தன், பெண்ணைவலத்தன், வீரட்டாகாயன், இவ்வெட்டுநாமங்களும் பிறவுமாம்.

*அப்பெருமான் சந்நிதிமுன்னர் குமாரக்கடவுள் வேல்குறித்த இடத்துப் புத்திரகாமேட்டி யாகஞ்செய்த*

### 5. துகமுனிவன் பெயர்கள்.

*வேள்வியுதித்தான், சானவிக்கனையன், புகர்மைந்தன், பிருகுகொட்பேரன், கவிநற்பேரன், குமரனருள்பேரான், மாதவன், அந்தணன், வரன், யோகி, அமலன், விமலன், வேற்றொடர்பன், தெய்வீகனத்தன், மகம்புரிமான், நித்தியன், குமாரவலத்தன், சமரசி, விமானம்பெற்றோன், பேராசிரியன்.*

*இம்முனிவர் பங்குனிமாதம் குருவாரம் அவிட்டநக்ஷத்திரத்தில் பதவிபெற்றனர்.*

*அக்குகமுனிவர் செய்தயாகத்தில் ஸ்ரீ வீரட்டேசுரர் திருவருளால் பிறந்து எண்ணிலாத விசேஷங்கள் நாட்டிய*

### 6. தெய்வீகராஜன் பெயர்கள்.

மகத்தழலுற்பவன், ஆபிசாரன், அயோனியன, இமயவேந்து, உமையூத்தன், பைம்பரியன், நந்திப்பொருப்பன், நத்தநாட்டேந்தல், பைம்பொற்கிரீடி, பதினெண்பதாகையன், §பன்னிருமணிமலர்மாலையன், மேழியன், உபவீதன், பெண்ணைத்துறைவன், நாரசிங்கன், நரசிங்கன், நான்முடியோன், அனலரணன், சேதிநாடன், ¶ பன்னிருமாதான், காரண்டவயிரி, வல்லூராரி, குகமுனிமைந்தன், முதுவோர்த்தான், வெள்ளிகுலோத்தமன், இறையாபுரியன், ஊர்ப்பாதிரிந்தான், தோட்கோப்புடையடான், பதினென்புலியன், வாகைமலையான், பொன்மாரிகொண்டோன், மர்வலநாடன், கோவல்வேந்து, வீரட்டேசுரனுமி, பிருகுபசாரன், வலாரித்திரியன், தெய்வீகநரசிங்கராஜஉடையான், வாரிகடந்தான், முக்குலக்காரணன், ஔவைவாக்கன், சத்தபுரிவேட்டான், முப்பெருக்கன், துறவோன், பதினெண்பாடையன், வில்வாளன், சாமளவருணன், கோமளகஞ்சுகன், யௌவனன், கவசகுண்டலன், அரும்பதன், பரித்தியாகி, முக்கொற்றன் கவர்த்தி. ஆக-ருரு. நாமங்களும் பிறவுமாம்.

§ பன்னிரண்டு மலர்மாலைகளாவன:—

கொன்றை, மல்லிகை, மகிழ், கோங்கு, சண்பகம், துளவம், மந்தாரம், புன்னை, தும்பை, செங்கழுநீர், நொச்சி, வாகை.

பன்னிரண்டு மணிமாலைகளாவன:—

*வெள்ளி, பொன், அபரஞ்சி, மரகதம், பவளம், நீலம், கோமேதகம், மாணிக்கம், வைடூரியம், வயிரம், புட்பராகம், முத்து.

¶ பன்னிரண்டு மனைவியர்களாவன:—

பத்மாவதி, காஞ்சனமாலை, சண்பகமாலை, கனகை, கலாவதி, உற்பலமாலை, கமலக்கண்ணி, உற்பலலோசனை, அன்னப்பிரபை, கமலாவதி, அங்கவை, சங்கவை.

இவ்வேந்தன் தைமாதம் திருவோணநக்ஷத்திரத்து யாகத்துட் பிறந்து எழுநூற்றறுபதாண்டு பூவுலகாண்டு ஆவணிமாதம் அவிட்ட நக்ஷத்திரத்து இமோத்பருவதராஜனாய்ப் பதவிபெற்றனன்.

அதிதெய்வீகராஜன் பட்டத்திற்குரிய நாயகிமார்கள் மூவருக்கும் புத்திரர்களாயுற்பவித்த சைவசித்தாந்தவேதாந்த ஸ்தாபனர்கள் மூவருள்

மெய்ஞ்ஞான நிஷ்டாநுபூதி பெற்ற முதலாவது புத்திரனாகிய

## 7. குலசேகரவேந்தன் பெயர்கள்.

நரசிங்கன்மைந்தன், சண்பகமாலைசேயன், கிள்ளிமகன்மகன், உலகருளுமன், மதங்கமாளிகொழுனன், சுருதி[illegible] விரதன், வாரணவாசி, மாலினிமணாளன், அ[illegible]நாட்டுடைந்தல், மூப்பர்பிதாமகன், வேதமுணர்ந்தோன், சீமந்தன், குணபாகத்தன், ஞானதீட்சிதன். ஆ௩-௧௫.

இவ்வேந்தர் பங்குனிமாதம் ஞாயிற்றுக்கிழமை அவிட்டநக்ஷத்திரத்துப்பிறந்து சித்திரைமாதம் ஞாயிற்றுக்கிழமை புனர்பூசநக்ஷத்திரத்துச் சமாதியடைந்தனர்.

எத்தன்மை யிழிவுடையராயினுந் திருவெண்ணீறணிவாரைச் சிவபெருமானெனக் கொள்ளார்க்கிழிவும் கொள்வார்க்கு மேன்மையுங்கூறிய இரண்டாவது புத்திரனாகிய

## 8. நரசிங்கமுனையரையர் பெயர்கள்.

தெய்வீகன்புதல்வன், பத்மாவதிசுதன், சேரன்மகண்மகன், மகாமளாங்கிகொழுநன், திருமுனைப்பாடிநாடன்,

மலைமன்னன், மேனாட்டான், நவநாட்டான், கொங்குராயன், கொங்கர்கோன், மலாடன், ஆளுடைவேந்தையரசுக்கமைத்தான், தடுத்தாட்கொண்டார் சாற்றுநெறி நின்றான், ஆதிரைநோற்றான், பூதியன், சிவாகமக்கரியன், அடியார்பூசிதன். ஆக-கஎ.

இந்நாயனார் மாசிமாதம் புதவாரம் உரோகணிநக்ஷத்திரத்துப்பிறந்து புரட்டாசிமாதம் சதையநக்ஷத்திரத்து அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராய் ஸ்ரீவீரட்டேசுரர் திருவடிபெற்றனர்.

திருவெண்ணீறுடையார் தன்னைக்கொல்லினும் அவர்க்கொரு தீங்குஞ்செய்யக்கூடாதென்று மூன்றுவகையானுங்காட்டிய மூன்றுவது புத்திரனாகிய

## 9. மெய்ப்பொருணாயனார் பெயர்கள்.

சத்தியார்த்தன், தெய்வீகன்மைந்தன், காஞ்சனமாலைசுதன், வழுதிமகண்மகன், மதனசிந்தாமணிகொண்கன், நகமுனிசுகசேனன், சேதிநாடன், கோவலூராளி, மலையநத்தன், நத்தநாடன், ஒன்பானுடன், புத்திநாதன்றாய், புரிசாதலி, நீற்றின்வெற்றியன், அடியானாயரனெனக்கொண்டோன், ஆகமி, துவிதி, வைராக்கி, வெள்ளிகுலன், சித்தாந்தபிரன், நத்தமன்னன். ஆக-உக.

இந்நாயனார் ஆடிமாதம் சுக்கிரவாரம் அஸ்தநக்ஷத்திரத்துப்பிறந்து கார்த்திகைமாதம் உத்திரநக்ஷத்திரத்து அறுபத்துமூன்றுநாயன்மார்களில் ஒருவராய் ஸ்ரீவீரட்டேசுரர் திருவடிபெற்றனர்.

* எம்பிறை சொற்றவாறே யிருவினைத் துனியற் றின்றுங்
கைம்முகிழ்த் தீசன்பாங்கர் கைலையிலுறையா நின்றார்
செம்மைசே§ஊர்ச்சத்திங்கட் ‡செங்கதிர்பிறந்தநாட்டொட்
டெம்மையாட்கொளுஞ்சத்யார்த்தநாயனாரெனுமோரேந்தல

இச்செய்யுள் மெய்ப்பொருணாயனார் சருக்கத்தில் எழுபத்தொன்றாஞ் செய்யுளாயிருக்கவேண்டியது தவறிப்போய்விட்டமையால் பின்னங்கு சேரும்படிக்கு இவிடத்துச் சேர்க்கப்பட்டது.

---

§ ஊர்ச்சத்திங்கள் = கார்த்திகைமாதம்.
‡ செங்கதிர் பிறந்தநாள் = உத்திரநக்ஷத்திரம்.

சிவமயம்.

# திருக்கோவலூர்ப்புராண

## அவையடக்கம்.

முன்னந்தென் மொழிப்பாவை மொழிந்தவரோ காந்தத்தி ருகர்ஞாண்டஞ், சொன்னமுறை யும்பிறவு மறிந்தவரைச் சொற்றிடுவா மென்றுசொன்றார், அன்னவகை யானுமே யவ்வைதிருப் பாவாதி யனேகந் தேர்ந்து, பன்றும்வகை துணிந்தேனிவ் வையத்தோ ரென்னையிகழ் பகருவாரோ. ()

அலகில்வலித் தைவிகலெவ், வைதக்குறித்தெம் மவ்வை சொற்பா வாதியாக, வுலகிலெங்க ளும்பரவு மைதிகங்கள் சைவப்புராத் துறையெம்மான்ற, விலகருளா யன்றியுண்டோ வவ்வருளாற் செவ்வனிதைக் காமல்விட்ட, நிலைமையினாற் பிழையிசெய்யு மிடையிடைப்பா சோக்கவ்வன் னொருசமுந் துணிந்த. (உ)

கலந்திறக்குந் திருக்கோவலெம்பெருமான் றனிப்புகழை நவையில் ருதன், பொலஞ்சிறக்க வுரைத்தவட மொழியுட பேறு திருவழுக்கும் புகல்வ தோர்ந்து, நிலஞ்சிறக் கவுரைத் ததமிழ்ப் பாக்களொடு மறிவிலிபா னிகழ்த்திச் சேர்த்தல், கலந்திறக்க மணிக்கோவை யிடைநொய்ய கரியமணி கலந்த தேய்க்கும். (ங)

இனியபுகழ் மலிந்ததிருக் கோவலூ ரெம்பிறைதா னிச் சையாலே, நனிவருந்தா மென்றறியா தெழிலுடைச் செய் யுளினிடைப்பா நவிற்றிச்சேர்த்தல், பனிவருமாழ் தடத்தெண்ணில் பங்கயச்செம் மலர்க்கிடைமேற் பான்மை யில்லாத், தொனிவருநொய்யரக்காம்பல் கொட்டிமலர் பூத் தனந்தஞ் சூழ்தல்போலாம். (ச)

இருளிருக்கி னெல்லொளிக்குப் பெருமையுண்டா மாந்தருளத் தியல்பு நீக்கு, மருளிருக்கி னான்றோர்க ளருளினுக்கோர் வலியுண்டாம் வண்மை போலத், தெருளிருக்கு முளத்தேன்புன் செய்யுளிருந் திடின்மேன்மை திகழாநின்ற, பொருளிருக்கும் பழையசெய்யுட் கணிமேலுண் டாமென்றும்புகன்றே னம்மா. (ரு)

மலிந்தபுகழ்த் திருக்கோவ லிறைமலர்ச்சே வடியருளை மருவ நாயேன், சொலிந்தவகை யல்லாது மற்றெந்த வகையானுந் துன்னற் குண்டோ, மெலிந்தநார் மலர்சார்ந்தும் வீணர்பெரி யரைச்சார்ந்து மிடியா னாரு, நலிந்தவர்செல் வரைச்சார்ந்தும் பயன்பெறுவ தன்றியுண்டோ நானிலத்தே.

எழுத்தாதி யிலக்கணமைந் திலக்கியமேற் றெழினடைகொண் டியலிசைக்கு, முழுத்தகை மாவர்கண்முன் றோசைவேட்க மறியாமூ டன்புறப் பாக்கள், வழுத்தாநின் றுநாங் கூழ் பொறியரவ முனமாடும் வகையுங் காரி, செழிப்பா யந்தணர் முன்னர் வேதம்வை கற்புகல் வகையுஞ் சிவனு மாதோ. (எ)

இந்தவே தக்களன்றி யிச்சென்மங் கெஞ்சித்தி டேயு தற்குச், சந்தமா தியபிறழ்ந்த முகமன் சொல் கல்பிலத்தி சரும மர்க்க, முந்துகொண்டா னீதுகொள்வா னவன்றெழும்போ ருங்கொள்வா னென்றுமுன்னிக், கந்தவே ளீத்தந்த கண்ணுதல்வார் கழற்றொழும்பாங் காதை சொற்றும். ()

வண்டிதம்பா டும்பொழில்சூழ் யாழ்ப்பாண நல்லூரான் வானீர் திங்கட், டுண்டிதழி முடித்தான்குஞ் சிதவடிநெஞ் சிடைகொள்குறி சுலவுஞ் ஞான, பண்டிததர்க் ககுடார தாலுதா ரிப்பெயர்கொள் பாவல் லோனுட், கொண்டிதமா யிந்நூலை யாய்ந்துதந்த நன்றியென்றுங் கூறற் பாற்றே.

அவையடக்கம் முற்றிற்று.

# திருக்கோவலூர்ப்புராண அட்டவணை.


| சருக்கத்தொகை | சருக்கங்களின் பெயர்கள். | பக்கம். | விருத்தத்தொகை |
|---|---|---|---|
| ௧ | பாயிரம். ... | ௧௭ | ௧௫ |
| ௨ | புராணவரலாறு ... | ௨௨ | ௨௪ |
| ௩ | அந்தகாசுரன் வதைச்சருக்கம். ... | ௨௭ | ௩௩ |
| ௪ | திருமுருகச்சருக்கம். ... | ௪௫ | ௯ |
| ௫ | கிருஷ்ணச்சருக்கம். ... | ௪௬ | ௬ |
| ௬ | இந்திராதியர் சருக்கம். ... | ௪௮ | ௧௫ |
| ௭ | கபிலச்சருக்கம். ... | ௫௧ | ௧௮ |
| ௮ | இராகவச்சருக்கம். ... | ௫௫ | ௫ |
| ௯ | பரசுராமச்சருக்கம். ... | ௫௬ | ௮ |
| ௧௦ | கண்ணுவச்சருக்கம். ... | ௫௭ | ௨௨ |
| ௧௧ | தெய்வீகராஜன் உற்பவச்சருக்கம். ... | ௬௧ | ௧௬௮ |
| ௧௨ | தெய்வீகராஜன் நாடுகொண்டசருக்கம். ... | ௯௦ | ௫௧ |
| ௧௩ | தெய்வீகராஜன் மும்மணச்சருக்கம். ... | ௧௦௦ | ... |
| ... | ௧-வது பதுமாவதிமணம். ... | ... | ௨௮ |
| ... | ௨-வது காஞ்சனமாலைமணம். .. | ௧௦௫ | ௪௪ |
| ... | ௩-வது சண்பகமாலைமணம். ... | ௧௧௨ | ௪௧ |
| ௧௪ | காரண்டவல்லூரர் வதைச்சருக்கம். ... | ௧௧௩ | ௩௦௭ |
| ... | முதனாட்போர். ... | ௧௩௩ | ... |
| ... | இரண்டாநாட்போர். ... | ௧௪௫ | ... |
| ... | மூன்றாநாட்போர். ... | ௧௫௬ | ... |
| ௧௫ | தெய்வீகராஜன் பிரமஹத்திநீங்கியசருக்கம் | ௧௭௦ | ௭௯ |
| ௧௬ | தெய்வீகராஜன் சத்தபுரிசென்றசருக்கம்... | ௧௮௧ | ௩௦ |
| ௧௭ | தெய்வீகராஜன் அங்கவை சங்கவை மணச்சருக்கம். | ௧௮௬ | ௧௮௭ |
| ... | ஷை சருக்கத்திலௌவையார் திருப்பாடல். | ... | ௧௩ |
| ௧௮ | தெய்வீகராஜன் அரசாட்சிச்சருக்கம். ... | ௨௨௦ | ௭௫ |
| ௧௯ | தெய்வீகராஜன் புத்திரபேற்றுச்சருக்கம்... | ௨௩௩ | ௭௮ |
| ௨௦ | சுகமுனிவன் உபதேசச்சருக்கம் ... | ௨௪௫ | ௭௪ |
| ௨௧ | பதவிச்சருக்கம், ௧-வது சுகமுனிவன். ... | ௨௫௮ | ௬ |
| ... | ௨-வது பச்சைக்குதிரை.. | ௨௫௯ | ௧௩ |
| .. | ௩-வது தெய்வீகராஜன். . | ௨௬௧ | ௧௯ |
| ௨௨ | குலசேகரச்சருக்கம். ... | ௨௬௫ | ௬௦ |
| ௨௩ | நரசிங்கமுனையரையர் சருக்கம். .. | ௨௭௫ | ௭௨ |
| ௨௪ | மெய்ப்பொருணாயனார் சருக்கம். ... | ௨௮௭ | ௮௨ |
| ௨௫ | தானவிசேடச்சருக்கம். ... | ௩௦௦ | ௪௧ |
| ௨௬ | தீர்த்தவிசேடச்சருக்கம். ... | ௩௦௭ | ௭௨ |
| | ஆக சருக்கம், ௨௬-க்கு செய்யுள். | ... | ௲௭௨௫ |

சிவமயம்.

# திருக்கோவலூர்ப்புராணப் பிழைத்திருத்தம்.

| பக்கம். | பாடல். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௨௦ | ௮ | ௪ | ௧௮ | ௮ |
| [illegible] | ௬ | ௪ | ௧௬ | ௬ |
| ௨௪ | ௯ | ௫ | திருர்தாளும் | திருத்தாளும் |
| ௨௫ | ௧௨ | ௧ | கமலங்களுக்குக் | கமலங்களுக் |
| ௫௨ | ௫௪ | ௪ | வெதநிறஞ் | வெத்திறஞ் |
| ௫௫ | ௫௧ | ௧ | புரிர்நுங்கர்தகளை | புரிந்தங்கந்தளை |
| ௫௮ | ... | ௨௫ | *விவிதம்—பலவிதம் †சபலை=மின்னல். | *சபலை=மின்னல் †விவிதம்—பலவிதம் |
| ௫௬ | ... | ௨௭ | பெற்றது மடுக்க | பெற்றது+மடுக்க |
| ௪௫ | ௮௭ | ௭ | கொளுந்தின | கொளுத்தின |
| ௫௧ | ௧ | ௪ | மறுத்துரைபான் | மறுத்துரைப்பான் |
| ௫௪ | ... | ௨௨ | கோசம் | பகோசம் |
| ௫௭ | ௮ | ௫ | இருடகடல் | இருட்கடல் |
| ... | ... | ௫ | மைந்தகேளுமைக்கு | மைந்தவெளுமைக்கு |
| ... | ௧ | ௧ | மணணன் | மண்ணான் |
| ௬௧ | ௪ | ௧ | நுதலி | +நுதலி |
| ௬௭ | ... | ௨௮ | பிரணயர்=அன்புள்ளோர், சாதி=பிரம்பு. | சாதி=பிரம்புபிரணயர்=அன்புள்ளோர் |
| ௭௦ | ௪௪ | ௫ | காலமீ | காலமி |

| பக்கம். | பாடல் | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| எசா | சாகூ | ௩ | காண்குது | காண்குவ |
| எஅ | அச | ச | செப்பிட | செப்பவு |
| எகூ | அ௫ | உ | உரைப்பநாமம | உரைப்பர்நாமம் |
| ... | அ0 | க | அந்தவேலையிற் | அந்தவேலையில் |
| அ0 | ௩ச | உ | மூன்னம் | முன்னர் |
| அக | ௩௩ | ச | சுளித்தோங்கு | சுளிபோங்கு |
| அ௩ | ககக | க | விண்மனி | விண்மணி |
| அசா | எஉ | ௩ | வீபூக | வீபூக் |
| அஎ | க௩க | ௬ | பிற்பபாயே | பிறப்பாயே |
| கூச | உ௩ | க | கடலதிர்ந்தெழுது | கடலதிர்ந்தெழுந்து |
| ... | ... | ௩ | றசினைசெய்யுந் | றசினைஞ்செய்யுந் |
| கூ௫ | உசா | ௫ | குறித்தறிகுது | குறித்தறிவா |
| க00 | ... | ... | ஆக சகூஉ | ஆக சகஉ |
| ககச | கூக | உ | சிறப்பிறேனெற்றி | சிறப்பிறேனெடற்றி |
| கஉச | ௩௩ | க | உயன்முதற | அயன்முதற் |
| க௫0 | கூக | உ | பொற்றி | போற்றி |
| கசஉ | கசஅ | ௩ | குலவும் | குலவுவம் |
| கசச | கசுக | ௩ | வேந்தற்கிதயதிற் | வேந்தற்கிநயத்திற் |
| க௫0 | ககஎ | ச | வன்றிறக்கொள் | வன்றிறற்கொள் |

| பக்கம். | பாடல். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| க௬க | உ௭ | ௬ | றேக்கி | நோக்கி |
| க௬௩ | ௪உ | க | துறைத்து | துளைத்து |
| க௬௭ | ௩௭ | ௪ | புதல்யியர் | புதல்வியர் |
| க௯௩ | ௭௪ | ௪ | இளைத்நதரணி | இளைத்ததாரணி |
| ... | ... | உ௮ | | [illegible] |
| உ௦௬ | ௩௭ | ௬ | தவிரி | தவிரி |
| ... | க௦௪ | ௫ | நருக்காதனமல் | [illegible] |
| உகக | க௪௦ | ௪ | சடெறா | சடேறா |
| உக௫ | க௩௫ | க | ந்த | நந்த |
| உ௩௩ | உஉ | உ | புரணங்கள் | புராணங்கள் |
| உ௩௭ | ௩௦ | உ | லுள் | தொழிலுள் |
| உ௩௮ | ... | ௩ | தொழி | |
| உ௪௦ | ௪௭ | க | இராச்குடா | இராசகுடா |
| உ௪௫ | உ | ௫ | நெறிவை | நெறியை |
| உ௪௭ | ௮ | க | இரங்கிதாமே | இரங்கித்தாமே |
| உ௬௮ | ... | ௩௦ | என்பவையிற்று | என்பவையீற்று |
| உ௫௦ | ௩௦ | ௩ | உடலினுக்குரவு | உடலினுக்குறவு |
| உ௮க | ௩௯ | க | கரிவி | கருவி |
| உ௯௭ | ... | உ௮ | மிகவில்ல | மிகவல்ல |
| ௩கஉ | ௩௮ | க | அலகில் | ௦ அலகில் |
| ... | ... | ... | சாரூராரூரில் | சாரோரூரில் |

## திருக்கோவல் வீரட்டம்.

# திருஞானசம்பந்தசுவாமிகள் அருளிச்செய்த

### திருவிராகம்; பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

படைகொள் கூற்றம்வந்து மெய்ப்பாசம் விட்டபோதின்க
ணிடைகொள் வாரெமக் கிலையெழுக போதுநெஞ்சமே
குடைகொள் வேந்தன் மூதாதை குழகன் கோவலூர்தனுள்
விடையதேறுங் கொடியினான் வீரட்டானஞ் சேர்துமே.(க)

கரவலாளர் தம்மனைக் கடைகடோறுங் கானிமிர்த்
திரவலாழி நெஞ்சமே யினியதெய்த வேண்டினீர்
குரவமேறி வண்டினங் குழலொடியாழ்செய் கோவலூர்
விரவிநாறு கொன்றையான் வீரட்டானஞ் சேர்துமே. (உ)

உள்ளத்தீரே போதுமின் னுறுதியாவ தறிதிரே
லள்ளற் சேற்றிற் காலிட்டங் கவலத்து ளழுந்தாதே
கொள்ளிப்பாடு கூத்தான் குழகன்கோவ லூர்தனில்
வெள்ளந்தாங்கு சடையினான் வீரட்டானஞ் சேர்துமே. ()

கனைகொளிருமல் சூலைநோய் கம்பதாளி குன்மமு
மினையபலவு மூப்பினோ டெய்திவந்து நலியாமுன்
பனைகளுலவு பைம்பொழிற் பழனஞ்சூழ்ந்த கோவலூர்
வினையைவென்ற வேடத்தான் வீரட்டானஞ் சேர்துமே ()

உளங்கொள் போகமுய்த்திடா ருடம்பிழுக்க போதின்கட்
டுளங்கிநின்று நாடோறுந் துயரலாழி நெஞ்சமே
வளங்கொள் பெண்ணைவந்துலா வயற்கள்சூழ்ந்த கோவலூர்
விளங்கு கோவணத்தினான் வீரட்டானஞ் சேர்துமே. (ரு)

கேடுமூப்பு சாக்காடு கெழுமிவந்து நாடொறு
மாடுபோ னமைகளா யாக்கைபோக்க தன்றியும்
கூடிநின்று பைம்பொழிற் குழகன்கோவ லூர்தனுள்
வீடுகாட்டு நெறியினான் வீரட்டானஞ் சேர்துமே. (சா)

உரையும் பாட்டுந்தளர்வெய்தி யுடம்புமூத்த போதின்க
ணரையுந்திரையுங் கண்டெள்கி நகுவர்நமர்க ளாதலால்

வரைகொள்பெணைவந்துலாவு வயல்கள்சூழ்ந்த கோவலூர்
விரைகொள்சீர்வெண்ணீற்றினான் வீரட்டானஞ்சேர்துமே.

ஏதமிக்க மூப்பினோ டிருமலீளை யென்றிவை
யூதலாக்கை யோம்புவீர் ருறுதியாவ தறிதிரேற்
போதில் வண்டுபண்செயும் பூந்தண்கோவ லூர்தனுள்
வேதமோது நெறியினான் வீரட்டானஞ் சேர்துமே. (அ)

ஆறுபட்ட புன்சடை யழகனாயி ழைக்கொரு
கூறுபட்ட மேனியான் குழகன்கோவ லூர்தனி
னீறுபட்ட கோலத்தா னீலகண்ட னிருவர்க்கும்
வேறுபட்ட சிந்தையான் வீரட்டானஞ் சேர்துமே. (௯)

குறிகொளாழி நெஞ்சமே கூறைதுவ ரிட்டார்களும்
நெறியிலாத வமணர்சொல்ல வத்தமாவ தறிதிரேல்
பொறிகொள் வண்டுபண்செயும் பூந்தண்கோவ லூர்தனில்
வெறிகொள் கங்கைதாங்கினான் வீரட்டானஞ் சேர்துமே.

கழியொடுலவு கானல்சூழ் காழிஞான சம்பந்தன்
பழிகடீரச் சொன்னசொல் பாவநாச மாதலா
லழிவிலீர் கொண்டேத்து மினந்தண்கோவ லூர்தனில்
விழிகொள் பூதப்படையினான் வீரட்டானஞ் சேர்துமே.()

திருச்சிற்றம்பலம்.

௨

## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த

## திருக்கோவல் வீரட்டானம் திருநேரிசை.

திருச்சிற்றம்பலம்.

செத்தையேன் சிதம்பநாயேன் செடியனே னழுக்குப்பாயும்
பொத்தையே போற்றிநாளும் புகலிடமறிய மாட்டேன்
எத்தைநான் பற்றிநிற்கே னிருளறநோக்க மாட்டாக்
கொத்தையேன் செய்வதென்னே கோவல் வீரட்டனீரே.

தலைசுமந் திருகைநாற்றித் தரணிக்கே பொறையதாகி
நிலையிலா நெஞ்சந்தன் றுணித்தலு மைவர்வேண்டும்
விலைகொடுத் தறுக்கமாட்டேன் வேண்டிற்றே வேண்டியெய்த்தேன்
குலைகொண்மாங் கனிகள்சிந்துங் கோவல் வீரட்டனீரே.()

வழித்தலைப் படவுமாட்டேன் வைகலுந் தூய்மைசெய்து
பழித்திலேன் பாசமற்றுப் பரமநான் பரவமாட்டேன்
இழித்திலேன் பிறவிதன்னை யென்னினைந் திருக்கமாட்டேன்
கொழித்துவந் தலைக்குந் தெண்ணீர்க் கோவல்வீரட்டனீரே.

சாற்றுவ னைவர்வந்து சந்தித்த குடிமைவேண்டிக்
காற்றுவர் கனலப்பேசிக் கண்செவி மூக்குவாயுள்
ஆற்றுவ ரலந்துபோனே னாதியை யறிவொன்றின்றிக்
கூற்றுவர் வாயிற்பட்டேன் கோவல் வீரட்டனீரே. (௪)

தடுத்திலே னைவர்தம்மைத் தத்துவத் துயர்வு நீர்மைப்
படுத்திலேன் பரப்புநோக்கிப் பன்மலர்ப் பாதமுற்ற
அடுத்திலேன் சிந்தையார வார்வலித் தன்பு இன்னங்
கொடுத்திலேன் கொடியவாநான் கோவல் வீரட்டனீரே.()

மாச்செய்த குரம்பைதன்னை மண்ணிடை மயக்கமெய்து
நாச்செய்த நாலுமைந்து நல்லனவாய்தல் வைத்துக்
காச்செய்த காயந்தன் றுணித்தலு மைவர்வந்து
கோச்செய்து குமைக்கவாற்றேன் கோவல்வீரட்டனீரே.

படைகள்போல் வினைகள்வந்து பற்றியென் பக்கனின்றும்
விடகிலா வாதலாலே விகிர்தனை விரும்பியேத்தும்
இடையிலே னென்செய்கேனோ னிரப்பவர் தங்கட்கொன்றுங்
கொடையிலேன் கொள்வதேநான் கோவல் வீரட்டனீரே

ஏசிலேனை பிறவிதன்னைப் பேதையேன் பிணக்கமென்னுந்
துச்சுவே யருந்திவீழ்ந்து துயரமே யிடும்பைதன்னுள்
அச்சனை யாதிமூர்த்திக் கன்பிலால் வாழமாட்டாக்
கொச்சையேன் செய்வதென்னே கோவல் வீரட்டனீரே.()

நிணத்திடை யாக்கைபேணி நியமஞ்செய் திருக்கமாட்டேன்
மணத்திடை யாட்டம்பேசி மக்களே சுற்றமென்னுங்
கணத்திடை யாட்டப்பட்டுக் காதலா லுன்னைப்பேணுந்
துணத்திடை வாழமாட்டேன் கோவல் வீரட்டனீரே. (௯)

விரிகட லிலங்கைக்கோனை வியன்கயி லாயத்தின்கீ
ழிருபது தோளும்பத்துச் சிரங்களு நெரியவூன்றிப்
பரவிய பாடல்கேட்டுப் படைகொடுத் தருளிச்செய்தார்
குரவொடு கோங்குசூழ்ந்த கோவல் வீரட்டனாரே. (கo)

க்ஷேத்திரக்கோவை - திருத்தாண்டகம்.

தில்லைச்சிற் றம்பலமுஞ் செம்பொன்பள்ளி தேவன்குடி திருப்பள்ளி தெங்கூர், கொல்லிக் குளிரறைப்பள்ளிக் கோவல்வீரட்டங் கோகரணங் கொடிக்காவு, முல்லைப் புறவமுருகன் பூண்டி-முழையூர் பழையாறை சத்திமுற்றங், கல்லிற் றிகழ் சீரார்காளத்தியுங் கயிலாயநாதனையே காணலாமே.

உ

## சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிச்செய்த

திருநாட்டுத்தொகை, பண்-இந்தளம்.

வீழக்காலனைக் கால் கொடுப்பாய்ந்த விலங்கலான்
கூழையேறுகந்தானிடங் கொண்டதுங் கோவலூர்
தாழையூர் தகடூர் தக்களூர் தருமபுரம்
வாழைகாய்க்கும் வளர்மருகல் நாட்டுமருகலே.

திரு இடையாற்றுத்தொகை, பண்-கொல்லி.

பேரனூர் பிறைச்சென்னியி னான்பெரு வேளூர்
தேறனூர் திருமாமகள் கோன்றிரு மாலோர்
கூறனூர் குரங்காடு துறைதிருக் கோவல்
ஏறனூ ரெய்தமா னிடையா றிடைமருதே.

திருக்கோத்திட்டையும் திருக்கோவலூரும் பண்-இந்தளம்.

கோத்திட்டையுங் கோவலுங் கோயில்கொண்டீ ருமைக் கொண்டுழல் கின்றதோர் கொல்லைச்சில்லைச், சேத்திட்டுக் குத்தித் தெருவேதிரியுஞ் சிலபூதமு நீருந்திசை திசையன, சோத்திட்டு விண்ணோர் பலருந்தொழ நும்மரைக் கோவணத்தோ டொருதோல் புடைசூழ்ந், தார்த்திட்டதும் பாம்புகைக் கொண்டதும் பாம்படிகே ளுமக்காட் செயவஞ் சுதுமே.

திருச்சிற்றம்பலம்.

தேவாரப்பதிகம் முற்றிற்று.

சிவமயம்.

# திருக்கோவலூர்ப்புராணம்.

## பாயிரம்.

### மூத்திவிநாயகர்துதி.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சுருதிவனத்துலவு சுகமதம் பொழியு மொருகோட்டுத் தூங
லர் *வெள்ளக், கருணை பொழி மதமாவை யானதிறையா
கமலத்தி னகத்தினன்பு, பெருகு தொடர் தனிற்சரண கம
லத்தை யினமாகப் பிணித்து நம்மை, மருவுமிடை யூறென்
னுங் கவளமென்மேற் பணித்திவிரி மன்னுவாமே. (க)

### ஸ்ரீ வீரட்டேசுரர் துதி.

வேறு.

பரிதிமதி வலம்புரியும் § பராரை வரையைக் குனித்தங்
† கிரசிதவால் வரையினிருந் திமையவரை யுயிர்த்தமணி [ட்
‡ மரகதமால்வரையினிருவனச்சுவர்க்கவரையைவண்டோ
டிருவரையிற் புணர் கோவல் வீரட்ட னடிபோற்றுவாம். (உ)

---

* உள்ளமெனுங்கூடத்தி லூக்கமெனுந் தறிநிறுவியுண்மையாகத்
தள்ளரிய வன்பென்னுந்தொடர் பூட்டியிடைபடுத்திச் சிறுகட்பாசக்
கள்ளவினைப்பசும்போதங்கவளமிடக்களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம்பொழிசிந்தைவேழத்தைநினைந்து நவினைகள்தீர்ப்பாம்.
வெள்ளக்கருணை மதவேழமென நின்றருட்கென் கள்ளக்கருத்தே
கவளம் பராபரமே." என்ற சான்றோர் வாக்கின்படிக் கூறினார்.

§ பராரை=உள்ளோசை.

† இரசிதவால்வரை=ஒளிபொருந்திய வெள்ளிமலை.

‡ மரகதமால் வரையின் இருவனச்சுவர்க்கவரையை=பெருமை தங்கிய மரகதமலைபோன்ற ( உமாதேவியார் ) உடைய அழகிய இரண்டு தனமலைகளை.

## ஸ்ரீ பெரியநாயகியம்மையார் காப்பு.

செங்கமலை கலைமடந்தை திருமானுமுகன் வெண்ணிற்
றங்கமலை யிறையறுத்தான் சுரரன்பர் † சிரநாக்க
ணங்கமலை மறையங்கம் சேவியகந் திருக்கோவற்
பொங்கமலை பெரியநாயகி பொற்றாண் மலர்தொழுவாம். ()

## பெரியானை விநாயகர் துதி.

வேறு.

மடியாத பெரும்பாச வலையறுத்துப் பவக்கடலைப்
பொடியாகச் சுவற்றியெமைப் பொருகாலன் படைதுரந்து
குடியாகத் திருக்கோவற் புரங்குலவும் புனிக்குன்றப்
பிடியானை யளித்தருளும் ‡ பெரியானை யடிபோற்றி. (௨)

---

† சிரம், நா, கண், அங்கம், அலைமறை, அங்கம், சேவி, அகம், (அதற்குரியதொழில்களால்) வழிபடும் இடம்-முன் அங்கம் சரீரம் பின் அங்கம் சாஸ்திரம் அலைமறை (தேடி) யலைந்தவேதம் என்றும் அல்லது(நான்கு)கடல்(போன்ற) வேதமென்றும் அமையும்.

### நிஷ்டானுபூதியிலும்.

அரியானை யரன்மாலுக் ககண்டபே ரொளியானைத்
தெரியானை யன்பிலர்தந் தேகமனம் வாக்கதனுக்
குரியானை யன்பர்தமக் குயர்பெரியா னீன்றெடுத்த
பெரியானைக் கணபதியின் பிறங்கிய பொற்பதம் பணிவாம்.

‡ பெரியயானை—என்பது-பெரியானை-யெனமருவியது.

இப்பெரியயானைக்கணபதியை ஆதிகாலம் ஔவையார் உபாசித்து சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கு முன்னே கையிலையிற்கொண்டுபோய் விடுக்க எடுத்தவிக்கிரம உருவத்தனென்றுஞ் சொல்லுகிறார்கள்.

## சண்முகப்பெருமானார் துதி.

¶ பாயூரம் பணிவடமால் பலநாளும் பகையவுணர்க்
கேயூரன் பனத்தனொடு மிடைந்தோடா திளைப்பாற்றுங்
கேயூர மீராறுகிளர் தோளன் றிருக்கோவன்
மாயூரன் றிருச்சரணஞ் சரணாக மன்னுவாம். (௫)

## கலைமகள் துதி.

எம்பெருமான் றிருக்கோவலிறை சீர்த்தியியற் றமிழா
லிம்பரினு முறைப்பதனுக் கணிமதுர மினிதளிப்பா
டம்பெருமான் சரிதமெனத் தனிமகிழ்ந்து வணங்காமுன்
னும்பரெலாந் தொழுதேத்து முயர்ஞானக் கலைமகளே. ()

## திருஞானசம்பந்தசுவாமிகள் துதி.

அஞ்ஞானத் துவராடை யமண்மூகர் முதலான
விஞ்ஞாலத் திரிசமய விருங்கடலி னிடைப்படாஅ
மெய்ஞ்ஞானத் துறுவிக்கும் வியன்காழிக் கவுணியர்கோன்
றன்ஞானச் சரண்டொழுவார் சரணமக்குச் சரணமே. ()

---

ஊர் அம்பணிவடம் பூராய் மால்-ஊரும் (தொழிலையுடைய
அம்-அழகிய பணி-சர்ப்பத்தையும் வடம்-ஆல் (இலையையும்) பாய்
பாயாவுடைய மால்-விட்டுணுவும்-ஊர் அன்பு அனத்தன்-அன்பு-பிரி
யத்தோடு-ஊர்-(ஏறி) நடத்துகின்ற அனத்தன்-அன்ன (வாகனத்தை
யுடைய) பிரமதேவனும் - பலநாளும் பகையவுணர்க்கே இடைந்து
ஓடாது இளைப்பு ஆற்றும்-கேயூரம்-வாகுவலயம்-திருக்கோவலன்-மா
யூரன் திருக்கோவலூரின்கண் (யாகங்காணவெழுந்தருளிய) மயில்
வாகனத்தையுடைய சண்முகப்பெருமான்.

## அப்பர்சுவாமிகள் துதி.

வினைக்கடலும் பவக்கடலும் வெறுஞ்சமயத் தீனிக்கடலு
மனைத்துலகும் புகுஞ்சரியை கிரியைபிற வருங்கடலுந்
தனித்தகல்வான் றிரைக்கடற்கற்புணைதரித்துக்கரையேறுங்
கனித்தவருட் கடனாவுக் கரசடியே கருதுவாம். (கஅ)

## சுந்தரமூர்த்திசுவாமிகள் துதி.

முன்றொண்டைக்கனிச்செவ்வாய் மொழிப்பரவை மணம்புணர்ந்து
மென்றுண்டக் குளிர்நிலவு விரவுசடை யெம்பெருமான்
றன்றொண்ட ரினத்துறவு தரித்ததவக் கிழமைபெறும்
வன்றொண்ட ரடிக்கமல மறவாது மனங்கொள்வாம். (ககூ)

## மாணிக்கவாசகசுவாமிகள் துதி.

பெருந்துறையி னிருங்கணங்கள் புடைபிறங்கச் சிவஞானக்
குருந்தடியி னெழுந்தருளுங் குரவனருட் கொள்ளைகொண்ட
திருந்துமருந் தவனெனது சிறுபிறவிப் பிணியினுக்கு
மருந்தனைய கழற்கமல மலரிணையைத் திடங்கொள்வாம். (உ0)

## திருநந்திதேவர்முதலாய அடியார்கள் துதி.

மையடருங் களத்தண்ண றிருவாணை வழிசெலுத்துங்
கையடரு மணிச்சூரற் றிருநந்திக் காறொழுது
செய்யவட னிழலிருந்தார் செழுஞ்சரணம் பணிந்தவர்தம்
மெய்யடியார் தமதடிகள் விழைந்து விழுந்திறைஞ்சுவாம்.

## சண்டேசுரர் துதி.

† தந்தைசெலு மிருபதமுந் தனதுவினை யிருபதமுஞ்
சிந்துவினை முடித்தானைச் சிந்துவினை முடித்தானைச்
சுந்தரஞ் சேரவனடிக்குந் தொழுமிதய மவனடிக்குச்
சந்தகம்பூண் மணிந்தொழுவார் தலைவனிருசரண்டொழுவாம்.

---

† தனது தந்தைபாதங்களையும் இருவினைக்குரிய மேல்கீழ்பதங்
களையும் கெடுந்தொழிலை முடித்தானும், அழகியநீரைச் சிரமுடித்த

## சற்றையடியார்கள் துதி.

பத்தராய்ப் பரமனையே பணிவார்கள் பதமிறைஞ்சி
யத்தனூர் சரணுணர்வா லருச்சிப்பார் கழற்றூழ்ந்து
நித்தமாஞ் சிவயோக நேர்ந்தவத்து விதசுத்த
முத்தரா னவர்க்கெல்லா முழுதடிமை புகுவாமே. (கரு)

## அவையடக்கம்.

கரும்பிரதந் தெரிந்தயில்வார் கறுவளவைக் குறியார்போல்
விரும்புகவிப்பயன்கொள்வார் விரியு§மெழுத்தாதியைந்தில்
வருந்திறனிற் குறைபாடு மதியாரொம் பெருமானூர்
திருந்துபுகழ்நாமமிதிற்செறிபொருளாந்திறத்தன்றே. (கச)

## வேறு.

முன்னஞ் ‡சத்தமா கறைக்கண்டன் மான்மிய மொழிந்தேம்
பின்னஞ் சொற்களைக் குழித்திடா திசைந்தனர் பெரியோர்
பொன்னங் கற்சிலை யாளனும் புனைந்தன னென்றே
யின்னஞ் சிற்பரன் கோவன்மான் மியமினி திசைப்பாம். ()

---

§ எழுத்தாதி ஐந்தாவன — எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம்-என்னும் இலக்கணங்கள்.

‡ சத்தமாகறைக்கண்டன்மான்மிய மென்றது — சத்தகாளகண்டபுரமென்னுந் திருசூலகிரிப்புராணம் ஆம்.

திருக்கோவலூர்ப்புராணம்

பாயிரம் முற்றிற்று.

---

வனும். அதிநுட்ப எழிலைப்பொருந்தினவனும் ஆகிய சிவபிரானுடைய நடிக்கும்பாதங்களுக்குஎப்போழுதும்வணங்கும் உள்ளத்தையுடையானும், மணிகள்பூண்ட நிறைந்த பசுக்கூட்டங்களுக்குத் தலைமையையுடையானும் ஆகிய, சண்டேசுரநாயனாருடைய இரண்டுபாதங்களையும் யாம் வணங்குவாம்.

உ

# திருக்கோவலூர

# புராண வரலாறு

வேறு.

$பிரம்மபதுமம் வைணவஞ்சீர்ச்சைவம் பாகவதம்பெரியோர்
பரவும் பவுடிகந்தோர் தம்மார்க் கண்டம் பாவகனாம்
பிரமகை வர்த்தம் லிங்கம் வராகங் காந்தம் பெருவாம
னரிய கூர்ம மச்சங்கா ருடம் பிரமாண் டந்தொன்றால் ()

இன்ன தொன்றாம் பதினெட்டி னினியவிமல காந்தத்தின்
மன்னு மும்பரி பாகத்தின் வழுவி றுநூர் கீரண்டத்தி
னுன்னற் கரிய திருக்கோவ லூர்வீ ரட்ட மான்மியத்தைச்
சொன்ன முறையும் பிறவுந் தேர்ந் தமிழ்த்த வாறு சொற்றிடுவாம்.(௨)

இறைவன் முன்றுட் டிருமாலுக் கிசைப்ப வவனும் முன்
கேட்ட, மறைமன் றுரைப்பச் சனற்குமாரற் கவனும் வழு
த்தவியாதனுக்கு, முறைமுன்றெரிந்த வியாதமுனி சூதன்
றனக்கு மொழியவவ, னெறியானைகூ பரற்கறைந்த வட்டா
ற்றமிழி னியற்றுவாம். (௩)

வேறு

யாதேனு மொருகலத்திற் கறிகயலைத் திடலிசைந்த மூர்
த்தி தானம், போதாரும் புனற்றீர்த்தந் தனைக்கூறித் துப்ப

---

$ பதினெண்புராணங்களும் அவைகளுக்கு உரியவர்களும்-ஆக்கி
னேயம் ௧-ம் அக்கினிபுராணம்,பிரமகைவர்த்தம்௧-ம் சூரியபுராணம்,
பிரமம் பதுமம் ௨-ம் பிரமபுராணங்கள், நாரதீயம் பாகவதம் காரு
டம் வைணவம் ௪-ம் விட்டுணுபுராணங்கள், சைவம் காந்தம் இலிங்
கம் கூர்மம் வாமனம் வராகம் பௌடிகம் மச்சியம் மார்க்கண்டே
யம் பிரமாண்டம் இப்பத்தும் சிவபுராணங்கள்.

யன்மகிமை புகல்வார்க்குக், இதாரப் பொருள்கடமைத்
தொகுத்திதனின் மூர்த்திதலந் தீர்த்த மென்று, மாதேவ
விசேடமெனப் பொர்வினைந்து வல்லவா வழுத்துவாமே.()

விமல * கேவலஞானப் § பவித்திரவெண் பொடியணிந்து
விளங்கு மெய்யர், வழுக்கிலவிட்டகலா மதிநெறியினைநாடிக்
கலந்த வன்பின், பிரமாதிக விருதயன்முச் செயிர்த்திரான்
குதமற்றுமி யனைதை செல்வன், குமரன்மகி ழியக்கர்புடை
குழுகவிருந் தருடானைக் குழுமி றுறைவன். (௫)

நுதல்வி மருவுதவு மனைவிருந்த வியக்கரொடு மெழுந்து
தாயோன், பாதமலர் வீழ்ந்திறைஞ்சி யாதனமு மருக்கிய
மும் பாதவிக் கன்பால்; யாதுதவ் மொழிடத்தி னன்பிறை
டியான்வருந்தி யனையபா முன்னம், 'போதாப்பெற் றேனெ
ன்று நளகட ராஜமினிதிற் புகன்று ளன்றே. (௬)

வேறு.

இனிதின்முகமனுரைத்துவழிவருத்தமாற்றியிருந்ததற்பின்
றனதன்றனயனளிவளையங்கித் தவபுங்கவனை முன்முரைத்த
முனிவன்வலியத் தகற்செய்ற மூர்த்திவையாம் வீரட்டப்
புனிதவிபவமின மொருக்காற்புகல் விராடியேன் † றெறு
மாறே.

போது ஞானத்தைக் கடந்திலிய பொருண் ஞானத்திற்
றிகழ்ந்திலங்கு, தமிழ்முனியே யிட்டமெலாங் கழிந்து
மேலாம் புண்ணியங்க, னிதியாய்மருவு முத்திதரு நிமலத
லத்தின் றிறமுரைப்பாய், விதியாலென வங்கவன்கேட்ப
மிகவு மகிழ்ந்து முனியுரைப்பான். (௭)

* கேவலம்—மோக்ஷம். § பவித்திரம்—தூய்மை.
† தேறுமாறு—தெறுமாறென்றுயிற்று.

நிலவும் புனலும் புறத்தகத்து நிகழ வீழுங்கு மனற்சிகை
போற், பொலியுஞ் சடையு நுதல்விழியும் புயங்கவிடகண்
டமும்வெண்ணீ, றிலகுமுருவுந் திருந்தாளு மெண்ணற்
கரியபெருமானை, மலியுமறிவிற் றியானித்துமகிழ்வீரட்டத்
திறநினைந்தான். (௯)

நினைந்து நினைந்து சைவபுர நிலையின் மகிமைதனை யெல்லாங்
கனிந்து கனிந்து மெய்புளகங் கவினவுரோமஞ் சிலிர்ப்ப
மகிழ், வனைந்துவனைந்து முககமல மலர்ந்து மனத்தால் வீ
ரட்டங், குனிந்து குனிந்து பணிந்துணர்ந்து நளகூபரனுக்
கிவைகூறும். (௧௦)

இறைவன் றொழிலைந் தினுக்கிடையே யிறந்தும் பிறந்து
முயிர்களெல்லா, மறியுந்துயர்க ணீங்குமற வழிகள் பல
வுண்டவைசரியை, நிறையுங் கிரியையோகமென நிகழுமி
வற்றுள் மெய்ஞ்ஞான, முறு மங்கதுவுங் குருலிங்க சங்க
மத்தா லென்றுணர்வாய். (௧௧)

வழுத்துமூன்று தானத்தும் வனையும்பத்தி பிறபத்தி
முழுத்தஞானமெனமூன்று முறைமையாகு மம்முறையாற்
செழித்தகருணைச் சிவலிங்கத் திடையிற் புரியக்கதிசேர்வர்
தழுக்கொண்டவத்தின் முன்னோர்க ளிழைத்ததுண்டோ
வெனிற்கூறும். (௧௨)

கூறுமிதற்குப் பிரமாணங் காண்டலனுமா னங்குரவோர்
தேறும்வியனு கமமாகு மவற்றிற் செறிந்தவாகமத்தின்
வீறுங்கரும முபாசனம்பின் மேவுஞான காண்டமென
விறின்மூன்று பகுதியினு ளிடை ‡ யுபாச காண்டத்தின்.

‡ உபாசனு=உபாச-எனவந்தது.

மூன்றுங்காட்டுமுறைமையதா முன்னோர்சொன்ன விதி
முறையே, தோன்றுமிலிங்க மூர்த்திதனிற் றொக்கபயனும்
பெற்றாரு, மான்றவுரைப்ப னதற்குரிய ரல்லாரினையுங
கூறிடுவ, னான்றுங்கருத்திற் கேட்டருள்க வுணர்மா னவ
கூபர வென்றே. (௧௪)

பிள்ளைபிணியன் பேய்பித்தன் பெரிதும்விட்டமன் பொரு
ளொக்கிக், கள்ளன்களியன் றனைமேற்கொள் காமக்குரோ
தன் லோபத்தன், றெள்ளியடக்க மிலியிவரே சிறியதவத்
தாற் காணாத, வள்ளன்மதிய முடித்தபிரான் மகிமைநூற்
குப் பிறராவார். (௧௫)

அட்டையூன முன்னிடத்தை யடுத்தாற்போலக் கேட்பாரு
மட்டிற்கிளிபோற் சொல்லிற்றே சொல்லுமவரு மனை‡வெ
ருகு, துட்டமிலிபோ லிருந்துயிர்கள் வவ்விப்புசிக்குஞ்
சூட்சிபோற், சிட்டர்போல வுயிர்க்கின்னா செய்தானுகருந்
திறத்தாரும். (௧௬)

மேடமெல்லாக் || குளகினையு முண்பபோல வியன்கலைக
ளாடுங்கடவு ளனுவலில மெனவே யவையைப்பகுத்தறியா
மூடரவரு மேதிதெண்ணீர் பருகாதகின் மூழ்கிக் கலக்கிக்
கேடுபடுத்தல் போற்பரம னூற்குங்குற்றங் கிளர்ப்பாரும்.

சிறை§வல்லூகம் பற்றினதை விடாதுபோலச் செறிந்தகில
முறுமன்னுயிர்நித் துயர்பிரமே யுறுதியாக மதியாம, லிறு
திவரினும் பற்றிற்று விடேனென் றிருக்கு மஞ்ஞனும்,
பொறிகொளரவப் பணியானூற் புகலற்குரியா ரல்லாரோ

இல்லிக்குடம் பைம்புனல் கொள்ளா வியல்போ லிறைவ
னறங்கேட்டுப், புல்லிக்கொள்ளாச் சூனியரும் புகலு ¶மு
பல நெடுநாட்கள், செல்லப்புனலிற் கிடந்தாலுஞ் சிறிது

‡ வெருகு=பூனை. || குளகு=இலை. § வல்லூகம்=குரங்கு.
¶ உபலம்=சிறுகல்.

மெத்தெ ளுபோலச், சொல்லச்செ சால்லுஞ் சிவதருமங் தோ ன்ருவிருள்வன் சிந்தையரும். (க௯)

மண்ணீர்கண்டக் காமெனக்குக்காணுக்காலம் வலித்ததுபோற் றெண்ணீர் முடியானறங் கேட்பிற் சிந்தைநைந்து பின்வலி க்கு, முண்ணீரவரு நெய்யரிநெய் யொழித்துப்பிற கொள் வதுபோல, விண்ணோரெவர்க்கு மருஞ்சிவனூல் விடுத்துச் சிறிய கொள்வாரும். (உ0)

பொருவிலிறைவன் றிருச்சரிதம் புகலக்கேட்ப வின்னருக் குரியதன்று மற்றெவரா லுரைப்பக்கேட்பப் படுமென்றுன் மருவுமனம்பா னீர்பருத்து வவ்வுமதுபோற் பிறதணைந்து பரமன்றரும நெறிவினவும் பான்மையுடையா ராமன்றே.

பின்னுமிதனுக் குரியார்கள் பெரியோர் வழிபாடுடையார் கண், மன்னும் பொறியின் வழிபோகார் வலியசாந்தம் பொ றையுடையார், துன்னுமழுக்கா றவாவில்லார் சூட்சிமிகவுந் தேர்ந்துணர்வார், பொன்னங்குன்ற வரிவில்லான் புகழே விரும்புந் தொண்டுளரோ. (உஉ)

இலையநெறியின் மிகுத்துள்ளா யீசனடியர்ச் சனைசெய்யுங் கனிவுபெருகுஞ்சிந்தையுளாய்நினக்கேதகுமிக்கதைகேட்ப தெனநன்குணர்ந்த சூதமுனி யிசைத்துமறித்தி தறைகின் றுன், றனதங்ளகூ பரனென்னுந்தனிமாமதலைதனக்கன்றே.

பூதகாலப்புண்ணியத்தாற் பூதகாலச்சிவகதையைப் யோதக் கேட்ப நிகழ்காலத் துறுங்கான் முத்திபயன்றரும, வீதுக மச்சு முற்காலத் திலகும்பயனுய் நிறைதலினுற், றீதில்பனு வல் விரும்பினருக் கென்றேகுறையாஞ் செப்புதற்கே. ()

புராணவரலாறு முற்றிற்று.

ஆக செய்யுள்—உ௩.

உ

ஸ்ரீ பசுபதே நம:

# திருக்கோவலூர்ப்புராணம்

## அந்தகாசுரன் வதைச்சருக்கம்.

பிரமன் சிரத்தைக் கடிந்தானெம் பெருமான் றிருக்கண்டி யிலியமன், புரமங்கினன்று யுறவுதைத்தான் புகழ்சேர் கடவூர் தனிப்புரங்க, ளெரிய நகைத்தா னதிகையினில் யானை யுரித்தான் வழுவூரிற், சரமைந் துடைய கழைத்தனுவோ றனுவை யெரித்தான் கொறுக்கையிலே. (க)

திருவிற் குடியிற் சலந்தரனைச் சிதைத்தான் பழிய றனிற் §சிறிய, பிரமன் மகத்தைத் தவிர்த்தலொடு பிழைசெய் தன்னாற்பிறங்கிருளே, யுருவமாமந்தகனை யட்டுயர்ந்தான் சைவ புரந்தன்னி, லரியவன்னகோவலத்தி லருச்சித் தானை யறைகுவாம். (உ)

வலவனெடுமாலிராகவன் பொன் வசிகொள் பரசுராமனயன புலவன் குருவா தவன்சந்தன் புயங்கத் தலைவன் சுவேண முனிவேள், மலைமாதிபமா முகன்காளி வைவச்சுதன்வாண மிருகண்டன், புலியின் காலன் பதஞ்சலிசீர் புரியுங்கபிலன் கண்ணுவனால். (ங)

வாணன் காமசுரபி தருமகிழ்வச் சிரரோ மசன்குண்டு மாணத் தவத்துக் குகன்றனதன் வருமாவலிநீ ளுருத்திரன் சீர், பூணூர் தெய்வீகன் சோழன் வழுதி பொருன னரசிங் கன், பேணுங் குலசேகர னெடுமெய்ப் பொருள் விறட்டப் பேறுற்றார். (ச)

---

§ சிறியபிரமன்=தக்கன்.

இன்ன வாறு முனியுரைப்ப வியக்கர் கோன்கான் முனி கேட்டுச், சொன்ன சூதனடிவணங்கித் துதித்து மகிழ்ந்து வாஞ்சிதனுய்ப், பொன்னினிடுதனிச் செல்வம் வறியார்புக் கமகிழ் புகுந்து, கன்ன லமுதி னமுதாகிக் கனிந்த கதை யின் றிறமுன்னி. (ரு)

வேறு.

கொன்றை வேணிய னந்தகற் றொலைத்ததுங் கோதின்
மன்றலந் துழாய்த் தொடையனே முதலிய வல்லோர்
சென்ற வண்சிவ புரத்திறைக் கருச்சனை செய்து
பொன்றிலா வரம் பெற்றதும் விரித்துநீர் புகல்வீர். (சா)

என்னவே நளகூ பர னிசைத்தலு மியைந்து
மன்னு மாதவச் சூதனும் வாண்முக மலர்ந்து
முன்ன மாடிறை யந்தகன் றனைமுடித் ததனை
யின்ன வாறுகே ளெனவிரித் துரைத்தன னம்மா. (எ)

கணங் குழுக்கொடு நிரம்பிய கைலைமால் வரையி
னிணங்குதற் கரிதா யிசைந் துறுமந்தப் புரத்தின்
வணங்கி னர்க்கெளி யான்மது மாமலர்ச் சயனத்
தணங்கி னோடிருந் தமருமவ் வரியதோர் வேலை. (அ)

இமய மாமலை மகளொரூந் திறையடி வணங்கி
விமலனே யுலகினி லிருள் விலக்கிய சுடர்க
ளமது காரண மெமக்குநீ சாற்றுதி யென்னு
நமைதி யெம்பிரா னகமகிழ்ந் திவ்வண மறைந்தான். (கூ)

பவள வட்டிலி னிந்திலஞ் செறித்தன பான்மைத்
துவரிதழ்க் கடிமூ ரலின் சொல்லமு தனையா
யிவரொளிக் கதிர் மதியன லென்னுமுச் சுடர்கள்
நவி னெமக்குமுக் கண்ணெனக் கழறின னம்மா. (க0)

பரம னிவ்வண மிசைத்தலும் பார்ப்பதி மகிழ்ந்தே
யுரைசெ யித்திற மறிகுது மெனவுயர் கரத்தாற்
றிருமுகத் தொளிர் முக்கணைப் புதைத்தனள் சிறிதின்
விரியுமா புவனங்களி னிருண்மிடைந் துறவே. (கக)

மங்கை கைக்கம லங்களுக்குக் கஞ்சிவாண் மதன
னங்க நீறெழக் கொளுத்திய வம்பக முதலாய்ப்
பொங்கு முக்கணம் புயங்களு மொளித்தன போன்ற
செங்கை யிற்றிரு நயனங்கண் மூடிய திறமே. (கஉ)

அக்கணத் தினி லுலகிட மெங்கணு மாழப்
புக்கு நீடிருண் மயமதாய்ப் பொலிந்தன வண்ட
மெக்க ணுற்றினி நாடுவ தென்றுயி ரொல்லாந்
துக்க முற்றன துறக்கவா யதிபரு மன்றே. (கங)

உடலி னிற்சிர மதிகமச் சிரத்தினி லுயர்ந்த
படிவிலம் பொறிய வற்றினுக் கதிகமென் பனவுங்
கட்வு டன்விழி பிறவினுக் கழிவிக்குங் கட்ணுந்
திடமெனும்படி யுமைகாஞ் செலுத்திய தன்றே. (கச)

வெள்ளி வெண்பிறை கரும்பிறை யாயின வேணி
யுள்ளி லங்குநீர் தனினைங் கிடுமழ லொப்ப
வள்ளல் பூண்பணி வாயுமிழ் மாமணி நீலங்
கொள்ளு மோர்மணி யாயின கோலங்க ளன்றே. (கரு)

¶ கஞ்சுகக் கரியுரி யன்றிக் கவின்மலி யுடையு
மஞ்சு நேர்புலி யுரிகரி யுரியென வயங்கு
மஞ்சனம் பொரு பாதிமெய் யன்றியொண் டுகிர்போல்
விஞ்சு மெய்யுமஞ் சனமென விளங்கிய விறைக்கே. (கசு)

திருவுருத் தழல் போன்றன வத்திரு வுருவிற்
பொருவெண் ணீறழற் பொடியெனத் திகழ்ந்தன பொடி
பரவி மூடிய கரும்புகை யெனப்பர வியதால் [மேற்
விரி ‡துணங்கறற் படலங்கள் கலந்தவவ் விதமே. (கஎ)

¶ கஞ்சுகம்=சட்டை. ‡ துணங்கறல்=இருள்.

### வேறு.

மலையின்மாமகள்செங் கையான் மறைத்தநேத்திரங் களாலே
நிலவுவெண் ணீற்றின் மேனி நீலஞ்செய் மேனியாகி
வலியுறு மழுமா னேந்தி வதிந்தருள் கடவுட் டேவை
யலைபுனற்கடலிற் றுஞ்சு மரியென்கோ வரனென் கேனோ

சுரர்முத் லுயிர்க ளெல்லாந் தொழிலின்றி நடையு மின்றி
விரவிய விருளால் வாடி மெலிந்துடல் கிடத்தலாலும்
பரிதியு மதியு மெங்கும் பரந்துநின் றுலவலாலு
மிருள்படு மிக்கா லத்தை யிரவென்கோ பகலென் கேனோ.

கயிலையும் வெளுமை மாறிக் கருநிறங் கொண்டு நீலச்
சயிலமா யிற்றியாண்டுந் தக்கவல் லிருளாற் றத்தம்
வயி §னணுவநுக்க மன்னிக் கிடத்தலான் வழுவி லெந்தை
செயலுறு திறமிலா முற்றிதியென்கோ முடிவென் கேனோ.

இத்திறந் $துவாந்த மீண்டி யெங்கணும் புதைந்து பூசப்
பத்துநா றாண்டு தேவ மானத்திற் படர்ந்து சென்ற
வெத்தலத் துயிரு மின்ன லியைந்துடல் தளரும்போது
முத்தொழில் புரியு மூர்த்தி முடிவிலா வருளையுற்றான். (

உற்றுமை தன்னை நோக்கி யுரைசெய்வா னுமையே யென்
நற்றிரு விளையாட் டிற்றாய் நல்லுயிர்த் தொகுதி வீய[ஞே
நிற்கொரு கணக்கா லம்பின் னிகழ்சுரர்க் காயிரஞ் சூழ்
பற்பல வாண்டு சென்ற தென்கொனின் பரிவ தென்றான்

என்றது மிறைவி கேட்டே யிதைய மாறுறவெர் இயக்
கொன்றையங் கண்ணிமாலைக் குளிர்மதி வேணி யண்ண
னன்றிசெய் நயனத் துற்ற கரங்களை விடுத்து ஞாங்கர்
நின்றன ளதற்பின் பெம்மா னிகழ்த்தரு ணிகழ்த்துவாமே.

### வேறு.

இயபா லிறைவன் றிருமுன் னயனத் திகழ் வில்சோதி
தப்பாத விருஞ் சுடர்சே ணிடையிற் றயங்கலோடு

---

§ அணுவநுக்கம்=ஆன்மாக்கள் பயம். $ துவாந்தம்=இருள்.

மெய்பாலு மீணதுட புவனம் புதைத்த விருட்படாமல்
வெய்பாலொளிர்துங்கித்திரண்டோர் மருங்கின்விளங்கியதால்.

விளங்குந் துவாந்தப் படலந் திரண்டு விண்ணவர்க
டுளங்குங் கடுமா விடம்போற் பொலிந்து தொல்லுயிர்கள்
வளங்குன் றகஞ்செய் வினைபோல் வளர்ந்து மைமலைபோற்
களங்கஞ் செறிந்த களத்தா னருளிற் கவின்றதுவே. (௨௫)

வேறு.

மாவமல னைந்தெழுத்து மன்றுத மனத்திருள்போன் மலிந்துபோகக், காவியல்மையவத்தாக்கிக் கமலனொடு மாலிதையங் கலங்கநீண்ட, மூவுலகுக் கொருதாம கேதுவெனத்தீயவினை முளைத்தன் மானத், தாவிலிரு டனிவிறைவ னுணையினிற் றயித்தியனுங் குதித்தா னன்றே. (௨௬)

உதித்தகொடுந் தயித்தியனு மிருள்வடிவா லந்தகனென் றுறும்பேர் மத்தான், கொதித்தசின மீறத்தினொடுங் குலவயிரமெனவளர்ந்து கொன்னேற வேய்ந்த, மதிச்சடிலன் றனையுன்னி வானவர்க்கு மரக்கருக்கும் வாய்த்த வொண்ணுக் கதத்தழலிற் செய்யவருங் கடியதவங் கனைப்புரிந் தான்கால மம்மா. (௨௭)

புரிந்ததவ முணர்ந்திறைவ னெழுந்தருளி வரமே துபுகலுகென்ன, வருந்தியருந் தவம்பெருக்கு மந்தகனங் கடியிறைறஞ்சிவழுத்துவானுல், விரிந்தபுவனங்கடொறு மிருந்த†விருதிணையுயிரான் மெலிந்துவீயா, முரண்டனொடு மெக்காலு மழியாத முதியவர மருள்கவென்றான். (௨௮)

அருளென்று மவ்வாறே யந்தகனுக் கிறையருளி யகன்றான்பின்னர்க், கருதுமுளந் துளக்குவிறற் கடியநிசா சரர்கணங்கள் புடையிற் சூழப், பிரமனொடு சதமகனே முதலானோர் திறைகொணரப் பெற்றுச்செல்வத், திருவினொடு மலிந்தமரா ரகங்கலங்க வவருலகுஞ் சூறை செய்தான். (௨௯)

---

† இருதிணையாவன—மக்கள், தேவர், நரகர், உயர்திணை. மற்று, உயிருள்ளன, இல்லன—அஃறிணை.

வேறு.

மந்தர முறழ்புய வரைவலி வயிரம தெனவளர்வா
னந்தகன் வெருவருமுருமென வெடிபடு மதிர் குரலான்
பைந்தரு நிழன்முத லமருல கிறுதொழில் பயிறருவா
னந்தக னெனுமொரு பெயருடை யவுணர்த மதிபதியே.()

சதமக முயற்று பயனரு டரவரு தட‡வயிரன்
பதவியு முயிர்கவர் வினை¶மற லரிதியை பதவியு *மின்
முதிர்தவ னிடைவரு மகனிரு பதவியு முழுவளமன்
னிதிபதிபதவியு மெளிதினி லிவனிடைநிகழ்வனவே.(கூக)

அறைதரு மிவரிவர் பதவியு ணிலையமு மதிகமுமே
யறவலி யமர்பொரு தனிகமு மிறவலி யடைவிலராய்
முறையொடு மிடைபட வினனி தவர்கொடு முழுதமரர்
நிறையிட நிசிசரர் குழுவொடு மலிதரு செயலினனே. ()

வேறு.

அந்தகனிப்படி தங்கள்பதத்தினை யஞ்சமரிற்கவரச், சிந்தை தவித்தொளி சந்தமிருத்தவெள் சிந்துரன் † முற்புலவோர், கந்தமலர்க் கதிபன் சரணத்திடை கண்டுதுதித் தடியேம், வந்தமுறைக் கினிதஞ்ச லெனப்பணி வண்கரமெட்டவனே. (கூ௩)

வேறு

இத்திறஞ் சரண்புகு மிமைப்பி லார்களை
யத்திற மெதிர்மொழிந் தயனு மந்தகன்
முத்திறங் களையமான் முறிக்க லாகுமோ
வெத்திறஞ் செய்வதென் றெண்ணி னனரோ (கூச)

எண்ணியெண் கணனிமை யவர்க ளீட்டமோ
டண்ணலங் கடலிடை யனந்தன் பாயலிற்
றண்ணெனத் திருவொடு துயிலுந் தாமரைக்
கண்ணனைச் சரணமாய்க் கடிதின் மேவினான். (கூரு)

---

‡வயிரன்—வச்சிராயுதன். ¶மறல்—எமன். *மின்முதிர்தவன்—இருளாய் † முதற்புலவோர்-என்பது—முற்புலவரென-விகாரமாயிற்று.

பாற்கட லுதித்தவுண் பாவை யாளொடு
மாற்கட லிடத்துமா சுணத்தின் வைகுதல்
நாற்கட லுடுத்தவிந் ஞாலத் தாய்ந்தக
லூற்கடற் புலவரா னுவலும் பான்மைத்தோ. (௩௬)

இரவா ரிதிதிரை கிளர்க்குஞ் சிகரங்
கூரனீள் புயங்கமேற் குலவு மாதவ
னாரணே ருடுக்கண மடர்ந் திலங்குவான்
காருறுந் தன்மைபோற் கவினத் தோன்றினான். (௩௭)

அனந்தநற் பணைமுடி யாயிரத் தினும்
வனந்திகழ் மணித்துழாய் மருவு மாதவ
னினம்படர் நீலமா லெழிலி யிந்திரன்
கனம்படர் தனுவொடு கவினலைத் தனன். (௩௮)

அனையதோர் வேலைமின் னடை பொன்னம்பரந்
தனைவனந் திலங்குத றடங்கட் கேசவன்
வனமுறு நீலமால் வரையைச் செஞ்சுட
ரினமுறச் சூழ்ந்ததோ ரியல்பு மானுமே. (௩௯)

பாற்றிரைக் கவரிகா லசைப்பப் பான்மணி
தோற்றணி வலம்புரி தொனிப்ப மீனினம்
வேற்றினம் வெருவர நடிப்ப மேம்படு
மாற்றிரு மார்பினன் வைகி னானரோ. (௪௦)

வைகுபூந் தாமனை வனச னாதியோர்
யெய்துபூ மாரியின் பெட்பி னேடிரு
கைகுவித் தெளியரோங் காவ லாளனே
யுய்குமா றருளென வொருங்கு போற்றினார். (௪௧)

போற்றலு மரிது புனிதன் வெண்ணகை
தோற்றிய முகத்தன யருள் சுரக்குநல்
லூற்றியை மலர்விழி யுவந்து நோக்கியே
யாற்றரும் வர்க்கினி தறைந்திட் டானரோ. (௪௨)

### வேறு.

வந்தகாரண மறிகுது மமரர்காள் வலிய
வந்தகன்றனை வதைத்திட யாவரா லாகு
மிந்தணிந்தமா கோவலத் திறைக்கன்றி யினியா
முந்தவன்கழல் பேணலே முறையென மொழிந்தான். ()

மொழிந்து பின்பவர் குழுவொடு மாதவன் முயன்று
தழங்கு மந்தகற் சிதைக்குமா துணிந்து தான்போந்து
விழைந்த வன்பர்கள் விழவய ரினம்பல நின்று
முழங்கு சைவமா புரத்தினி தடைந்தனன் முகுந்தன். ()

### வேறு.

அணைந்து முகுந்தன் கடவுளர்தம் மருநீர் கொடுமஞ்சன மாட்டி, இணைந்தபுளகமுலைப்பாக னிறையுமிலிங்கத் தருச்சித்து, வணங்கி வணங்கு வார்க்கருளு மணியே சைவபுரத் துறையுங், கணங்கள் புடைசூழ் பெருமானே யென்னத் துதிகள் கழறுவான். (௪௫)

சிருட்டித் தளித்துச் சிதைத்து மறைத் தருளிச்சிதைவில் பல்லுயிரா, வருத்திச் சுகத்தை யருத்து விக்கும்வலியைத் தொழிலும் வனைந்திகழ்ந்த, கருத்திற்செறிந்த கணிதமுருக் கருணைக்கடலே சிவபுரத்தி, லிருத்துத் திகழ்ந்த பெருமானே யுனக்கே யாங்க ளடைக்கலமே. (௪௬)

வெறுப்பும் விருப்பு மில்லானே யுள்ளா மெங்கள் விகல மெல்லா, மறுக்குங் கருணைப் பெருமானீ யல்லால் வேறிங் கர னுண்டோ, செறுக்கும் பகையாற் சரணடைந்தோர் சிந் தை நோவப் பார்த்திருந்தா, லொறுத்துன் னுளத்தைத் துளக்காதோ வுறுநாப் புரக்கு மிரக்கமே. (௪௭)

ஆதிநாப் பணந்தமலா வரனே யாமுன் றிருக்கழல்க ளோதித் தொழுமா றெங்ஙனே புலவாப் புனித ஞானமே யேதத் துயர்ந்த செயல்புரியு மிகலந்தகனுந் தயித்தியனுந்

காதிப் பொருத வலித்துன்றன் கழற்பொற் சரணே சரணு
னேம். (௪௮)

விரிந்த வுயிர்கள் பலவிடத்தும் விளைவதெல்லா நின்கருணை
புரிந்த தன்றோ வானந்தப் புனிதமெய்ஞ் ஞானத்தலைவா
கரிந்த கடன்மா விடமுண்ட சண்டா வெம்மைக் கருணை
யினும், பரிந்து காவா விடின் வேறு பாதுகாப்பார். கீண்
கிலமே. (௪௯)

இன்னவாறு மான்முதலா †மிலேகர் நவின்ற துதியெலாம்
பொன்னின் வேணிப்பெருமானு ருணர்ந்து மகிழ்ந்து புல
வோர்கண், முன்னமா யவ்விலிங் கத்தின் முளைத்தா னக்
கான் முழுதியாருந், துன்னங் கழலின்முறை முறையே
தொழுதா ரழுதார் துடித்தாரே. (௫0)

அமரர் குழுவைத் திருநோக்கா லஞ்சல் புரிந்தங் கர்த்தனை
விமலன் பொருமா றுன்னியன்ன விசும்போர் தமைமுன்
னேவினுற், கமையில் காலன் வெருவரும் போர்க் கடிய
வரக்கர் கணங்க ளொடும், திமிரவடிவன் முனிந்தெழுந்த
செயல்யாங்கூறுந் திறத்தன்றே. (௫௧)

வேறு.

மண்டுகநாசினி கும்பன் காகன் சங்கன் மகரவனுவுழுவை
முகன் கரன்கபாலன், கண்டன் விலாளன் கொடியா ரிவர்க
ளென்னுன் கதமுடைய படைத்தலைவக் கணங்களின்னுர்,
கொண்டுமறந் தனைக்கூறக் கொழுநாவஞ்சுங் கொலைகேட்
பஞ் செவிஞ்சுங் குறித்துக்காண, விண்டலத்தோர் விழியு
மஞ்சு நினைக்குநாளும் விரைந்துளத்தைப் புகுந்தலைக்கும்
§ வீமந்தானே. (௫௨)

வேறு.

இக்கணங்கள் படைமறமு மந்தகன்ற னிகன்மறமு மிகல்
வெஞ் சேனை, தொக்கு நின்ற திறமாமுந் தொலைவிலாமற
த்திருவுஞ் சூழ நோக்கு, மக்கண னெஞ்சயர்ந்து தளர்ந்தி

---

† இலேகர்=தேவர். § வீமம்=பயம்.

றைய நுனிசின் றிறனினைந்தங் கமர்ந்து நின்றான், முக்கணன்
றன் கணத்தலையுண் முயன்றுநின்ற சதக்கிருது முதல்வன்
றானே. (௫௩)

வேறு.

திடுக்கிட வமர்த்தலை சுரத்திரள்க ளெல்லா
முடிக்கைப்பணை யம்பறை யொலித்தனுமைபேரி
தடத்தவின் முதற்பல தனிக்குர லெழுப்பும்
விடக்கொடி யரக்கர்கள் விரிந்தனர்க ளன்றே. (௫௪)

விரிந்தவர் முழங்கிசை விளங்கு பலவண்ட
முரிந்திட வதிர்ந்தன முழங்கு கடலூழி
பரிந்தன திறங்கொடுரு மேறதிர் பரப்பி
யெரிந்த சிகைவன் கனுயேற்றன ரரக்கர். (௫௫)

சம்பன்முத லாயின தாபித்தியர்க ளெல்லாங்
கும்பதர ரேடுறு குழூக்குழூவ தாகி
யிம்பர்முத லும்பரையு மின்றுகொலு மென்று
வம்பினொ டிரும்பயி லணிந்தனர்க ளன்றே. (௫௬)

கோபநகை யாரசனி நாணவறை கூறுந்
தாபமனை யாரொருப தாமருவு கோடி
தூபமொடு தீயனைய நீடுவச தேரிற்
பாபசமு தாயமுறழ் பாமர ரடைந்தார். (௫௭)

வீறுபதி னாறனுகு கோடியிர தம்மே
லேறிய நிசாசரரோர் பாலினி லெதிர்ந்தார்
கூறிரத மேலிரத ராயபல கோடி
யாறுபடு மாலையணி தானவ ரடைந்தார். (௫௮)

இரண்டு பதினைந்துபெரு கோடி யிரதத்தார்
திரண்டொரு மருங்கிடை சினத்தினி லெதிர்ந்தார்
பெருங்கிரிக ளோடுவரு பேரிமய மென்னக்
கருங்கிரி பொரும்படை கலந்திரத மீதே. (௫௯)

வேறு.

மருவுந்தொகளணி யலகில் கோடிமலை வனிதிலே கலை
யாம ருவமே, விரவுமாரிமுகி லுறழமாகமத மிருவிபாசமுக
மங்கியமே, யுரகராதனொளி படாடாவுபரி யுலகுருக்கணமிவை
யே, யிருளலா முருவுபடு நிசாசரனு மிணையிறானொடு
தழுகின்றன். (௬0)

குழுகுமோ தமரர் வெருவுறு தருள்கொள் குணதயா
மணிமுன் முனிவரர், மழுகியே வுபடு கடகடா கரியை
வதைசெய்தா யகனுமி லையிலா, நெறியினு லைவழி கயிலை
கா வல்புரி நிலைமையா லன்விரி கணமொடே, கறுவுதா னவ
ர்க ளிகல்களோ டுறுதி கதுவவே வினனம் மிறைவனே. ()

வேறு.

ஏவலயர் சிவகணத்திற் நிலைமைபெறு மாகாள
னந்தியேயற்றங்
காவிம்குஹன் விநாயகன்குண டோதரன்சாத் தனிகும்பன்
றண்ட பாணி
வீவில்விறல் வயிரவன்மா வீரபத்ரன் வக்ரமுகன்
சுஞெபி விண்ணனிற்
றேவர்புகழ் களத்தொனிகேத் திரபதியா மிக்கணங்கள்
சென்ற வன்றே (௬௨.)

வேறு.

இளையர்சங்கமொடு மதிதுரந்தியெனு மிறைவன் மன்டு
நிசிசரர்கணமே, லனிகசிந்துவொடு மலையுமங்கணயி லயில்
டெம்பரசுகட கம்வா, ளுனிசிவந்துவருகழுமுட ண்டமணி
துவலருந்திகிரி வரிவிலான், முனியுமம்புபல படைகடங்க
ளொளி முருடர்கொண்டவிரு ளுகருமே. (௬௩.)

தமதவேடமணி யவுணர்நீடுபடை தருமிராவினிலு
தரிதமாய்த், திமிர நூறுகதிர்விரவுமாயிரமதுடையசேயிரவி

தழுவெனு, விமலனேவுபடை புடைகளுடுவர வெருவியம
ளாடிபடியுமா, வமலசோதியென வுதைபோயினன் முன்ன
மன தாணைவழி புரிகுவான். (௬௪)

உதயசூரியர்கள் காமெனுமருவி யுலகம்யாவுமொளிர்
*சபலைநேர், பொதிசடாமகுட முடியுமாநிலவு பொழியுநாத
ன்விழி மணியுமூர், மதியராவணியு மிறைதியானமிறை மன
னதும்மேவலர்கள் பணிகொளு, மதிகசூலமொடு திகழ்வார்ந
ள்கடொறு மழிவிலாதசிவகணமரோ. (௬௫)

அடிகள் பேரவெழு கிரிகள் பெருமுல களவுமேருவடி
வெயருமே, விடிகள்பேருமொரு மொழிகள்போரில்விழி
யிமைகள் பேரகமனுயிர்பரூஉ, வுடலகள்பெருமிவர் முனி
யிமேலமுலகு முறுதிபெருமுர ணடையலார், குடிகள்பெரு
மொழு கடல்கள் பெருமதி கொடியாகாநிலை பெயருமே. ( )

சகடமீதுமத கரியின்மீதுமுனை தழையமீதுலகு பயமு
று நகைசெய் வாள்†விவித புரவிமீது நதன யனுபமா ய
மவுணரும், விகடமாகியிக லொருவர்மீ தொருவர் விருது
பேசி யமர் பொருதுமா, மகுடமீதுமணி கவசமீதுமணிம
ருமமீதுமுறு கணைகளே. (௬௭)

கணைகள்கோடிபட வரைகள்கோடிபுரை களநிசாசரர்க
ள் குழுவிலே, மணிகள் கோடிபடு கரிகள்கோடிபரி வகை
கள் கோடியிரதமுமுளோ, ரணிகள்கோடியவர் தவமதான்ம
ருவுமயில்கள்கோடிகுடை கொடியுமே, துணிகள்கோடிபட
வடரமேலுலகு சுடரினிடு பொறி படருமே. (௬அ)

வேறு.

இருவர் மாறுகொள் படையினுமெழு மிணையிலாவி
றல் கதுவவே, திசைக ளேழ்புனல் குமுற வாளொடு சிதற

*விவிதம்=பலவிதம். †சபலை=மின்னல்.

வானவர் பதறவே விரியு மாபுகை புவன மீதெழுவெளியு
மூடுற மலியவே, முரியு நீள்வன மெரியு மாறெனமுதிய
தானவர் கறுவினார். (௬௯)

வலிய தானவர் நெடிய தானையு மருவினார்தமை யரு
ளுமர், பலிகொ ளாயகர் படையுமூடுதல் பரமசோதியுமிரு
ளுமே, மலிய மேல்வரு பகையி னாலமர் மருவு மாறென
வளையவே, கலிகொ டானவ ரிறைவர் தானைகள் கறுவினார்
வீதி குழுகினார். (௭0)

கொடிய தானவர் அடலெ லாமிகு *குரக தானன வா
னவ போன், † மடிகவாளெனுமுரிய வாய்கொடு மதியு லாமு
டியவனரு, ணெடிய தானைகள் கணக ணாதிப நிருப ரான்
முழு தவுணரா, ரிடலும் வானகமு மொழிய வேயல ரரிய
தானன மீருவினார். (௭௧)

இவுறவ னந்திகன் மலிக ணம்பொர விகலு றும்பனை
பிரிய வே, பொறைத ணந்தி வெகுளி யோங்கிய புலவு
வெண்பிறை யெயிறினான், மறமொ டுந்தட வதரமென்றமர்
வருக வென்றறை கொளுவியே, நெறிக டந்துறு சகடு யாந்
துட னெடிய வந்தகன் மருவினான். (௭௨)

மருவ லுஞ்செரு முரச றைந்திட மலிக றங்கொலி
திசையெலாம், விரிய வம்பர முகடு விண்டிட வெடிபடு நிங்
குர னகையினா, னரணி ரும்படை பரிமு ரண்புய வடல்
கொ ணர்ந்தியு மமரினு, லொருவ ரும்பொர வரியவந்தக னு
டன்கெ டும்படி முடுகினான். (௭௩)

வேறு.

சூலமுடனேமிகதை வாள்மழுகுடாரமயி
ரோமர மகோர குணினீள்

---

*குரகதஆனனமென்பது=குரகதானனமென வடமொழிச் சந்தி பெற்றது. மடிக்கவென்பது=மடிகவென நின்றது.

வெள்ளிவைக ளாறுபல கோடிபடை யாளிருவர்
மேகமெனு மாறு பொரவே
காலன்முத லானவர்கண் மாபயமோ டோடினர்கள்
காணவிழி நாணி வெருவி
யோலமென வானவர்க ளுயகனை மேவினர்க
ளூழிவரு போதி லெனவே.

இந்தகனு மெங்கையெனு நந்தியு மொருங்கிருவ
ரண்டமுழு தும்புகை யவே
செந்தழலி னுங்கடிது சென்றுயிரு ணுங்கொடிய
செஞ்சரக ணங்கண் முறையா
லுந்திட மருங்குறுக ணங்களவை யும்பொ
டொடிங்கினர் நெருங்க வுணரால்
வெங்கெரி நிறம்பொருது *கிஞ்சுக மலர்ந்தென
விளங்கினன்மெய் யந்த கனுமே. (௭௫)

தெருக்களி லெருத்தொடு பலிக்குழ லிறைக்கொரு
செருச்செய்படை யுற்று டையதோ
வுரித்தென நகைத்தவர் படைத்திர ளனைத்தையு
முறுக்கிவிற விற்பொருதனன்
வெருக்கொடு புறத்திட வமர்த்தலை விடுத்திட
விளித்திறை வனைக்கரு தவே
யரக்கர்க டுதித்தடி முறைப்பட மிகுத்துள
வகத்தொடு புரத்தி மிரனே. ௭௬

அப்பொழுது முக்கணர வப்புடை மதிச்சடில
வப்பருள முட்கரு தியே
குப்பமுழு திற்பல சமர்த்தொழில் விளைத்தெழு
கொலைக்குண தயித்திய ரெலாந்
தப்பறு மழற்கனை முனைக்குளெரி யக்கொளுவு
சட்சமய மெய்த்தலைவ னும்

---

*கிஞ்சுகமென்பது = முண்முருங்கை.

வெப்புறு சிலைக்கடவுளெனத் தகு மரக்கனை
வெருக்கொள வெதிர்த்தணுகினார். (௭௭)

களத்திடை *கறுப்புறு கறைக்களனு முட்பொரு
கறுப்புடை யரக்கர் பதியும்
விளைத்தனர் சமர்த்தொழில் கறுத்தனர் சமர்த்தனர்
வெறுத்தபிறை யிட்கு ளியவே
வளைத்தனர் வரிக்கொடு மரத்தினை யழற்கணை
மன்ழப்பொர விடுத்தனர் விடுந்
துளிப்பொரு மழற்கணை மறித்தனர் நெருக்கினர்
துணித்தனர் மணிக்கொடிகளே. (௭௮)

வேறு.

இவ்வண்ண மிறையும் பொல்லா வரக்கனு மெதிர்த்தபோரின்
செவ்வண்ண நுவலற்பாற்றே சிலைவண்ண நுவலற்பாற்றே
கைவண்ண நுவலற்பாற்றே கடவுளோ டெற்றப்பெற்றான்
மெய்வண்ண நுவலற் பாற்றே விசய மியார்க் குரைக்கற் பா
ற்றே. (௭௯)

இருவருட் பிசித ஊண னெதிர்த்திடும் போதி லெங்கை
தெருவிளை யாட்டி னின்ற செய்தியார் கூற வல்லார்
ஒருவனன் கணைய னெல்லா மூர்தியோ டகற்ற மல்லார்
திரட்பியாந் தகனைச் சூலச் சிகைதரித் தாரவ முற்றான்.

வேறு.

வீரநகையி லந்தகனை வெருவப்பொருது விறற்கழுமுட்
கோரநுனியிற் கோத்தெடுத்து மகிழ்வானடிக்குங் கோமானு
பாருமிறுமிட்ட முடித்துத் தானேநின்றுங் கிரும்பாவத்
காருமுயிர்க டேமச்சூலத் தேத்தியாடல் போன்றனவே.

கங்கை வேணிப் பெருமானார் கரத்திற்சூலக் கடுநுதியிற்
றங்கவமரர் பதமெல்லாஞ் சூறையாடு மவன்பதைத்தல்
ஓங்குமிருளாங்கழாயர்மீப்புதுக்காம்பேறிச் சுழனடஞ்செ
யங்கம்போலு மிருட்படல மகல்வான் பரந்தாற்போலுமே.

*கறுப்பு—கோபம்.

கழுமுட்கடையி லந்தகனோர் காலுமுறாவுத் துயர்கலந்து குழுமிக்கணங்கள் கொண்டாடுங் குணமாமணியைக்குணக் காலே, தொழுதுட் கனிவாற்சிறியனேன் றுயர்போமாறு துணியென்ன, வழுதுட்கசிந்து நெக்குநெக்காமன்பிலேனுடுக் துதிக்கின்றேன். (அ௩)

வேறு.

இராசதத்துச் சிருட்டித்துஞ் சாத்துவிகத் தினிதளித்து
மிணையி லாத
பார*நமதத் தழித்துமதன் மேற்பரம வருட்குணமே
பாங்காய் நின்ற
வராவணியும் பெருமானே யடைந்தார்கள்கொடுஞ்செய்கை
மறந்தன் பாகிச்
சராசரத்திற் பிறந்திறவாத் தனிவாழ முகந்தளிக்குந்
தயையினானே. (அச)

அன்பிலார் தாம்புரியுஞ் செயல்கடந்து மெய்ஞ்ஞானத்
தவர்பா லேக
வின்புளாய் முதன்மொழிலோர் வணங்குதிருத் தாளனே
யார்க்கு மெட்டா
முன்பிலாய் பின்பிலாய் நடுவிலா யளவிறந்த
முப்பத் தாறு
†மன்பனையாந் தத்துவங்கட் கதீதனேகலா தீத
வாம தேவே. (அரு)

அறிமடனுற் சிறியனிழை பிழைபொறுத்திங் கடியேனுங்
கருடந் தாள்வா
யிறையவநின்சினத்தினுக்கு மொருபொருளோ வஞ்ஞானத்
திடர்கூர் பொல்லா
நெறிபயின்று நன்குணரா வனீதனே னதுவன்றி
நின்னை யல்லாற்

---

*நாமதம்=நமதமெனக்குறிகிற்று.
†மன்பனை=மக்கட்பரப்பு.

பிறிதுண்டோ. வெனக்கருளி சகல†பிரேரகமுடிக்கும்
பெருமவென்றான். (அசு)

அந்தகனிவ் வணங்குதிக்க வறவாழிப் பெருமானு
ரகமகிழ்ந்து
சிந்தைநயந் தவன்றுயரஞ் சிதைத்தவனைத் திருமுன்விடுத்
திவைகள்கூறும்
பந்தமுறு மந்தகநின் பவமெல்லாஞ் சூலநுனி
ப்டார்ந்துநின்ற
வெந்தழலிற் கொளுந்தினையிங் கினியுனக்கு வரமேது
கூறுகென்றான். (அஎ)

அவ்வமைய மியந்தகனும் விழுந்துவிழுந் தடிபணிந்தெம்
மானைவாழ்த்தி
யிவ்விடத்தி லடியனேன் புரிதவன்பி னினையிறைஞ்ச
மியல்பினுய
செவ்விய சிந்தையினு லென்னவ் வியந்திர் சிவஞானஞ்
செறியநல்கா
லெவ்வரத்து நாயேனுக் கிவ்வரமே யாகுமென
விரைத்தானன்றே. (அஅ)

இசைத்தமொழி செவிப்புகலுந் திருவுள்ளங்களிகூர்ந்தெம்
மிறைவன் றன்பால்
வசித்தகணத் திரட்கெல்லா மதிபதியாம் படிவனத்திற்
றூகையிற் பன்னாட்
பசித்தரிய தவம்புரிந்துங் கிடையாத பெருவரத்தைப்
பாலித்தாண்டு
நசித்தசிவ லிங்கத்திற் புக்கொளித்தான் வானோர்க
ணயந்துபோற்ற. (அகூ)

பின்னர் துழாய்த் திருமாலே முதலானோ ரவ்விலிங்கப்
பெருமான்றன்னைத்

†பிரேரகம்=காரியப்படுத்தல்.

துன்னரிய வன்பினொடும் பலபொருளா லீராட்டிச்
 *சுமாலிப்போதா
லின்னலற வருச்சித்து வழிபட்டு மறைவிதியா
 லேத்தித் தத்தம்
பொன்னுலகி னினிதடைந்தா ரவ்விலிங்கம் பூசித்த
 புனிதத் தம்மா. (௩௰)

முன்வணங்கு மான்முதலா மமரர்குழு முழுதடைந்த
 முதிய துன்பத்
தின்மடங்கா வினைக்குலமு மிகற்சூலாக் கிரத்தேற்ற
 விகலிற் றேற்றுப்
பின்வணங்கு மந்தகன்ற னெடுவினையுங் களைந்தருளெம்
 பெருமா னார்க்குப்
பொன்வணங்குஞ் சிவபுரத்தில் வினாசயவென் றொருநு
 நாமம் பொலிந்த தன்றே. (௩௧)

மூவுலகுந் தனிவருத்து மந்தகனை யடலமரின்
 முனைந்து சிழித்
தாவிலசீர்வீ ரநகைதனிற் சூலாக்கி ரத்திருந்த
 தகைமை யாலே
தேவர்தொழுஞ் சிவபுரத்தின் வீரட்ட மெனுநாமஞ்
 சிறந்த தென்ன
நாவலனற் சூதமுனி நளகூப ரனுக்கினிது
 நவின்றா னன்றே. (௩௨)

மாவரறிந்து சொலற்பாலர் சதகோடி கற்பத்து
 மிதனை யென்னே
இவ்வகையொடு சொலற்பாற்றோ வறிந்தமாத் திரமிதனை
 யொருக்காற் கேட்டோர்
புவியிடையிற் சகலகா மியமுமணைந் திறுதியினிற்
 புராரி பாதத்
தவிர்நிழலிற் கைலையடைந் தரியமுத்தி யுறுவரா
 ரருளா லாமால். (௩௩)

அந்தகன்வதைச்சருக்கமுற்றுப்பெற்றது ஆ விருத்தம் ௪௩௨.

---

*சுமாலி—மீனை.

உ

சிவமயம்

# திருமுருகச்சருக்கம்

மதியணி சடில மகுடபாண் டரங்கன் மாசறு கோல
ங்கிரீடம், விதிமுறை யாரா தனைபுரிந் ததிக மெய்ப்படு மு
த்தியை யடைந்தார், விதம்பித மாகப் பலர்சிலர் சரிதம்
விருப்பொடு சிறிதுணாக் குதுமென், றதிகவன் பியற்று
மனைகயான் புதல்வற் கருள்கொடு குகனு மறைவான். ( )

கடவுளர்க் கிடுக்கண் புரிந்தவர் பதத்தைக் கீர்ந்துகொ
ண்டாயிரத் தெட்டா, மடைந்தரு மண்டங்களைத்தன தாணை
யறிசெலுத் தரக்கர்கள் வணங்கிடம், படைமலிசூர பதும
னஞ்சனமெய்ப் பகையெழிற் றாரகன் முதலோர், கொடிய
தானவரை வெட்டடையங்காடிச் சுரர்பதி திருவினன் குமர
ரன். (௨)

பிசிதவூ ணரக்கர் தமைக்கொலும் வீர பத்திரனுட
ம்பிடி முருகன், அசனியே போலும் விரட்டகாசத் தந்த
கற் றொலைத்தவெம் பெருமான், முரியிலாக் கோவன் மாபு
ரத் தெய்தி முன்னரும் பூசனை புரிந்து, வசையில் றன்பெய
ரா லவ்விடத் திலிங்க மறைமுறை பிரதிட்டை செய் தன
றேல். (௩)

பிரதிட்டைசெய் தனைய குகேச்சுரன் றன்னைப் பெருகிய
வன்பினு லலர்ந்த, மதுக்கடி யிணரார் புனிதவா னீரான்
மந்திர விதியினுற் களங்க, முதித்திடா மனத்தா லங்களுற்
சதுர யுகமுவந் தருச்சனை செய்தா, னதற்பினர் முருகன்
பூசனைக்கிரங்கி யரனெதி ரடைந்தன னன்றே. (௪)

முன்புறுந் தாதை திருவடிக் கமல முடியுற முறை
முறை யிறைஞ்சி, யன்புடன் றுதியாற் றுதித்தனனக்கா
ரன்மகிழ்ந் தினிதுரை செய்வான், வன்புடை யரக்கர் குழு
வெலாந் தொலைக்க வரும்பவ மெவையுமிங் கொழித்தே,
யின்புற வினியுன் வரமென்கொ லென்ன வீரறு புயத்தவ
னிசைப்பான். (௫)

ஐயனே நின்றன் றிருவுளத் தகலா வருளெனக் கரு
ளுதி யென்னத், துய்யசோ தியனு மவ்வுரை மகிழ்ந்து தோ
மிலா வரம்பல வளித்துப், பையரா முடிமேற் பரந்தமண்
ணுலகில்யாவரும் பணிசிவ புரத்திற், செய்யதா மிலிங்கத்
திடையினிற் கலந்தான் சேவலங் கொடியினான் மகிழ. (௬)

மயிலவன் பின்னர்க் கோவலூ யகன்றன் றிருவரு
பலத்தினான் மலிந்த, செயல்வினை செகுத்துக் கைலையினை
டைந்தான் சிவபுரத் தவன்பெய ரிலிங்க, மியல்பின் வின்
னும் விளங்கிநின் றதுதான் யாவரும் வந்தனை புரிந்து,
கயிலையின் மருவத் திருவரம் பலிக்குங் காரண வருட்புனை
தம்மா. (௭)

திருமுருகச்சருக்க முற்றுப்பெற்றது ஆ_கஅ.

உ

சிவாய நம:

# கிருஷ்ணச் சருக்கம்.

வேறு.

மற்று மன்ன சிவபுர வள்ளலை
யுற்ற ருச்சனை செய்தன ரோங்கிய
கொற்ற நேமிக் குணிலெனக் கன்றினான்
முற்றும் வெள்ளி லெறிந்த முதல்வனே.

பூசை யஞ்சிறப் புரிந்த கிருட்டினன்
மாசின் முனிவர் வயங்கு மிலிங்கத்திற்
றேசொ டும்மெழுந் தான்சிவ நாயகன்
ஆசை யால்வல வன்பணிந் தானரோ. ௨

பணிந்தவன் றனைநோக்கிப் பரம்பரன்
றணிந்தவன் புடையாய்த் தருந்திறல்
பிணங்கி வன்றொறு மேதெனக் கூறினான்
பிணங்கொ ளருந்துள பத்தன் வழுத்துவான். ௩

விடபு ரத்தர் கலிங்க விளங்கிய
தபு ரத்து வசித்த தயித்தியன்
வபு ரத்தடல் வச்சிர நாட்டினை
கோபு ரத்தொடுங் கோறுவ னென்றனன். ௪

அம்மொழிப் பாவிச்சை யணிலிங்கத்தின்
செவ்வி திற்பெருந் தான்பிறைப் பேறவிக்
கெவ்வு லோகமு மேத்துங் குமாரனை
மெய்வளவன் மாலயன் செய்திவழுத்துவாம். ௫

கோவலைத் திப வல்லருள் கொண்டமா
பாவிவச்சிர நாபன் பனை மொரு
தாவி சிந்திய னந்த சயனோர்
தேவர் மாந்தர் பயநனி தீர்த்தனர். ௬

கிருஷ்ணைச் சருக்க
முற்றிற்று.
ஆ. ௧௪௬.

—:*:—

உ

ஸ்ரீபஞ்சாட்சரபதயேநம:

# இந்திராதியர் சருக்கம்.

## தேவேந்திரன்.

பின்னுங்கோவற் பெருமானார் தம்மைப் பூசைபே ரன்பாற்
பொன்னந் தலத்துப் புலோமசை யோடரியும்புகுந்து புக
லைந்து, மன்னுஞ் சதுரி யுகம்புரிந்து மழுமான்கரத்தர் திரு
வருளாற், றுன்னுமசுரன் விருத்திரனைத் தொலைத்தபாவந்
தொலைந்திட்டான். ௧

## உரோமசமகாமுனி.

எள்ளற்கரிய வுரோமசன் முன்னிரண்டு சதுரியுகங்கோ
வல், வள்ளற்கினிய வருச்சனை செய்தயன் மான்முதலாம்
வானவர்கள், கொள்ளற்கரிய தனியாயுட்கொண்டான் வி
னைவென் றவனருளாற், றெள்ளித்தெளிந்த சிந்தையார்வ
ணங் காரியாரோ சிவபுரத்தில்.

## கற்பகதரு.

அசரந்தளர்ந்து சரமாகி யன்பினாற் கற்பகத்துருமம், வ
சைதிர் கோவல் புகுந்திறையை வழிபட் டருச்சித்தரன
ருளான், முசியாதெவர்க்கும் பலவமுத முறையினளிக்குந்
திருவரத்தை, நிசமாயடைந்து மகிழ்ந்தகல்வானிலத்தி னு
யர்ந்து செறிந்ததுவே. ௩

## காமதேனு

காமதேனுமுன் னொங்கருணைக்கோவல்வீரட்ட, வாம
தேவனி லிங்கத்து வழியா லருச்சித்தடிவணங்கி, யிமடித்
தார் திருவருளாற் கபிலையாவுந் தனதிடத்திற், றேமிலா
துற்பவஞ் செய்யுந்தொலையா வரமங்கடைந்ததுவே. ௪

### வேறு-தருமராஜன்

தூவளை கண்டைத்தமடை திறப்பமெறி கயல்வயல்சூழ்
கோவலன்மேவி, நடுவன் முன்னாட் சதுரியுக மூன்றளவுநட
ம்புரிஞ நாதன்றன்னைத், திடமுளசிந் தையனாகிப் பூசைபு
ரிந்தவ னருளாற் றென்றிசைக்கு, மிடைபடுகென் புலத்த
வர்க்குங் குரிசிலாந் தனிவரத்தை மேவினனே (ரு)

### வேறு-நபோன்

கன்றன்னமுறைக் கொடுமரத்து நிமலனிலிங்கத்தருச்சனைசெய்
தின்றுங் கொலையா கனிநிதியு மியக்கர் பகைக்குமாகர்க ணாம்
பின், பொன்றி லடற்கின்னர ரினக்கர் வியங்கோள் புரிய
ம் பொருவில்வாழ், குன்றங்குனிந்த வினைவென்றுன்குலவு
மந வாசவினி தவைடந்தான். (௬)

### வாதராசன்.

வன்னிவாறு சரன்கோவின் மங்கல வரியனைப் பூசித்துச்
சொல்லிலாத் தினிதுயர்ந்த கடம்பமைகொட்டா யிருந்துமினை,
மலிபுந் திருவிக் கிராமமது வழியைக்கான் றிபிர பாலகிறப்,
புண்புகாவும் பெருமொயிற்றன் றன்னைப் பொருதான் றிரு
வாழனான். (எ)

### வேறு. பதஞ்சலி வியாக்கிரபாதன்.

பதஞ்சலியும் புலிபாதனும் திருக்கோவற் பதியமை
ந்து பரனைப் பூசித், திதம்பட்டுமன் விடையருளா லிருவருந்
தம் மிசைக்குட்டிய பிரமன், விங்கம், விளம்பமெந் திருமுறை
யாற் பதிட்டைபுரிந் தருச்சிக்க விமைக் கண்ணு, னிதம்பர
மன் றிருமணம் கொடுக்கக் கண்டிருப்ப நெடுது
ம் பற்றுர். (அ)

### ஆதிசேஷன்.

புன்னைமிறு நாட் சதுரியுகம் புகழ்ந்தசெடன் முப்புரமு
மனைந்துவென்று, மன்னவன்றன் றிருக்கோவன் மாநகர
மடைந்தமைக்கமைய வழிபாட்டெடுத்தி, யன்னவன்றன் றிரு

யருளா லாயிரம்மைத் திருமுடியா லங்கீற ஞாலம், தன்னை மிகப் பரித்திருக்கும் தனியாண்மை யினிதடைந்தான் தருமவன்றே. (௫௯)

## மிருகண்டுமகாமுனி

இருந்தவத்து மிருகண்ட னெடுங்காலந் தருணிப்பு ரிழியில்செர்முற், புரத்தனின் வந்தடைந் திறையைப் பூசனைசெய் தகமகிழ்ந்தப் புரத்திலிங்கம், இருந்து முறைமை யிற்பதிட்டை மிருகண்டேசரனெனச் செய்து நீணா மரும்பலம் கொண்டாராதித் தியல்பினால் வழிபாட்டாயினனால். (௬0)

### வேறு.

மெய்யன்பி னருச்சனையா மிருகண்டு மாமுனிவன்
பொய்யிலொரு சதுரியுகம் புரிந்திறைவ னருளாலே
வையமுழு தாம்புகழ மார்க்கண்ட னெனுஞ்சுதனை
யையமறப் பெற்றின்ப வாழ்வினின் முனன்றே. (௬௧)

### பார்ப்பதி.

இமையமகள் முன்காள வருணத்தாம் காளியென
வமைமையவளங் கோவலூ ரந்தகாந் தகன்றன்னைத்
திமியமற வுளத்தருச்சித் தொருசதுரி யுகஞ்செய்திட்
டமர் *கௌரவருண மடைந்தவிர் கௌரியாயினள். (௬௨)

### சூரியன்.

ஆதவன் முன் சதுரியுக மைந்தளவுங் கோவலூர்
நாதனடி யருச்சனை செய்தன்பினொடு நவக்கிரகத்
தேதமற முதற்றலைமை யெய்தினனந் தகனைக்
காதுதிரிசூலியை வேற்கரத் தண்ணற்கு வருனால். (௬௩)

### விக்கினேசுரன்.

கயமுகன் முன்சிவ புரத்திற் கண்ணுதலை மதுமலரா
லயர்வறவங் கொருமூன்று சதுரியுக மருச்சித்து
வியன்கி லமுதலான புவனமெலாம் விக்கினத்துங்
கயமென்ன வடிவணங்க வெழின்மௌலி புனையுற்றான். ()

*கௌரவருணம் = மஞ்சணிறங்கலந்த வடிவம்.

வேறு. வியாழபகவான்.

கோவனைக நிறையையொரு சதுரியுகங் கொழுமலராம்
குருமுன் பூசை
யாவரொடும் புரிந்திறைஞ்சி யங்ககாங் ககரருளா
லமரர் போற்றுந்
தேவகங்காப் பிரவாகம் பொன்மலிந்த கெம்பீருந்
தெறிந்த வாக்கைத்
தவநிவங் கனை டிந்தனா னன்றுட்ட காமியமெல்லாந்
தாங்தா னன்றே. (௩௫)

இந்திராதியர்சருக்க முற்றிற்று.

ஆ. ௩௩௦.

௳
சிவமயம்.

# கபிலச் சருக்கம்.

நாவிற்றவக் கபிலமா விருடிமுன்னாட் டிருநீர்வாழ் சகரர்தந்தை, யாவரொடு மாராதித்தி விரதத்திறொகலே க்கா னென்றேதக், தேவர் புகழ்தனத கதன் மறுந்துரையான் செயிரின் மனக்கபிலன் கோறல், துவிலையடுத்து துவமற்தகன்றதுவு விரித்தெனக்குப் புகல்வாயென்றான்.

வேறு.

அன்றதனு மகிழ்ந்து ருதனிருஞ் சிவபுரத் துளான்றன்
துன்றுதலிலாத செய்கை குறித்தவன் பதத்தை வாழ்த்தி
வென்றியம் புயக்குபேரன் மிருதவப் பேற்றின் வந்த
மன்றல மிதழ்த்தார் மாலை மைந்தனுக் கறையலுற்றான். ()

நிலமக ளணிபோற் றோன்றி நிருபராற் கவின்வொண்ணு
வலையகழ் மதில்சூழ் மாடவயோத்தி மாநகரங் காப்பான்

மலிதி னத்ததிபனாய வாட்கடர்ப் பரிதித்தொன்மைக்
குலநெறி புரந்த வேந்தன் கொற்றவர் மதியமன்னன். (௪)

ஒன்னலர்க் கடந்தவொள்வே லூரன்புகு சகரனென்னு
மன்னவன் பரிமேதத்தை மறைவல்லோர் முறையிற்கூறத்
தன்னமர் மைந்தரோடுந் தரணியோர் வியப்பவேண்டும்
பொன்முதற் பொருள்கள் கொண்டுபுகழ்பட வருந்தினானே

வேறு.

கண்டை நின்றுகறங்க நான்கு கரம்பொறித்த மணிக்கிரு, வெண்டையங்கள் சிலம்பநன்னுதன் மீதுவென்றி போரித்த பொற், கொண்ட பட்டமு மின்பரப்ப வெழுந்தலம்வரு கொய்புளை, யண்டர்கண் கவருந் துரங்க மலங்கரித்து விடுத்தனன். (௫)

விடுத்தநற் பரியைப் புரந்திட வென்றி மைந்தர்களாறுபா, னடுத்த வாயிர மக்க ணேவினனவர்கள் போவருமறிவுறு, தெடுத்தகன்றனை யிந்திரன் றனதிந்த்ர சாலவியற்கையா, விடுக்கணின்றி யருந்தவம் புரிகபிலர் பாலிலித்தரோ. (௬)

இந்திரன் கவருந்துரங்க மியற்று பாதல மூடுபோய்த் தந்தவங் கொடிருந்த *காபிலர் தன்பினங்க கலாமலை, பதனஞ் செய்த கன்றுவானிலே பாகசாதனன் மேவினு, னத்தவங் கெழுதெங்கினீர் படுதேனா யென்ன நவிற்றவே. (௭)

பாகசாதன னின்னவாறு பரித்தபின்பரி பாதுசெய்ய வேகவென்றி விளக்கு மன்னவர் வேள்விக்கரம்பரி காண்கிலார், மேகவூர்தியன் யாகவிக்கின னென்றுணர்ந் தறியாமன்மே, ஞகமும் படர் ஞாலமுங்கெடு மாறுவெஞ்சின நண்ணினார் (௮)

நண்ணி வெஞ்சின ஞகபூமியை ஞாலமாக விழுத்துமோ, மண்ணிலந்தனை மாகமாக மறித்து மோவிரி பாத

*கபிலர் = காபிலரென நீண்டது.

லங், துண்ணெனும்படி மண்டுமோர வலைகுறை கொள்ளு து மென்றுதா, மெண்ணிமு வுலகும் படந்தரி தேடினு ரிசை கூடினர். (கூ)

நாடி நாகமு ஞாலமும் பினர்காக வேறுறழ் மன்ன வா, கூடி மண்டல மங்ககழ்ந்து குலாய பாதல மேவி யே, தேடி யெங்கு மொருங்கு மாதவ கீரஞ்ங் கபிலன் பிற, கூடு நின்றருள் கிருதுமாவினை யுற்றடைந்தனர் பரிவிஞர். (க0)

வேள்வி வாசிகொணர்ந்த கள்வனென்றெண்ணியே மிருமாதவங், தாழ்விலாக் கபிலன்றனைப் பலசாடினர் சின கடினர், ஊழ்வருந் துயர்தன்னினு விடருற்ற மாமுனி யோகமுன், போழவெந்துய காலகன்றனன் பொருவின் ஞானநியானமே. (கக)

ஞான மாதவன் முனைமுனிந் தெழுசாகர நந்தனர் தங் களா, வானமாதவ நெறியினுவிடமின்றி மாயையுடன்றனி, போனதி வெகுளிக்கணம் வரப்பொங்கு வெங்கனி னோக்கி னுன், வெளில்வேள்பட முக்கணைந்தை விழித்தகண்ணின் வியப்பவே. (கஉ)

கபிலநாயனும் வெஞ்சினத்தழல் கதுவசாகர முனி பரும், விபினசால மெரிந்து போயின மன்னர் செற்ற விற ற் கொலைத், *தபுதன்மாமுனியைத் தொடர்ந்தன தன்மையா லும் வெம்பியே, விபுதர் தாழ்கழலயனை நண்ணிமுன் வினாவிவிப்படி யுரைசெய்தான். (கங)

## வேறு.

சகரனருளுறு பதினுயிரந்தனையர் தமைக்கோபத் தழ லாற் கொன்ற, மிருகொடிய பாவமதா விட்டுநெறி யே னைக் குறைப்பா யென்ன வேதன், மகிழ்வினெடு மினிது ரைப்பான் மணிகண்டன் கைலையினு மகிழ்ந்து வாழும்

---

*தபுதல்—கெடுதல்.

திகழ்புனித சிவபுரமாந் திருக்கோவ லினிதடைந்து சிவ
னைப் போற்றி. (௧௪)

திருவிலிங்க தாபனஞ்செய் தருச்சித்தா லப்பாவந்
தீருமென்றான், விரைவினொடு கபிலமுனி யத்தினமே மகி
ழ்ந் தடைந்தான் விளங்குங் கோவற், புரமதனிலான் று
றைவன் வீரட்டந் தொழுதேத்திப் பூசித்தன் பான், மரு
வுமிறை யிடத்தினையில் வருந்தெய்வப் பெண்ணைநதி யருவி
னுறைல். (௧௫)

தம்பெயரால் கபிலதட மெனப்புரிந்து மூழ்கியதிற்
றவிலாத, நம்பன் மகிழிலிங்க மொன்று பதிட்டை யிழை
த்தனைநாளுநயந்து கால, வம்பலரானதும் புனலால் வ
ழிபட்டான் சதுரயுக மிரண்டுசெல்ல, வம்புக மூன்றுமை
யப்பிரானவ்வி லிங்கத்திடை யெழுந்தா னந்தவேலை. (௧௬)

விழுந்திறைதன் கழலிறைஞ்சி யெழுந்துபுகழ்ந் தக
மகிழ்ந்து விமலற்போற்றத், தழும்பிரண் டெம்மன்னை
யினுற்படைத்த பிரான் றனிமகிழ்ந்து வரமேதென்னக்,
கொழுந்துபடுங் கதவழலிற் சுடுவீரக் கொலையினாற் கொண்
டபாவத், தழுந்துறுய ரொழித்துனதின் னருட்குருவா யெ
னவரனங்குவே யிந்தான். (௧௭)

ஈந்தபினரி லிங்கமதிற் கலந்தனன் பின்னவ்விலிங்க
மியல்பாற்றீது, இந்த கபிலேசனெனச் செபிந்தது மற்ற
து தொழுதார் தீமைசிந்து, மாந்தர் புகழ்கபில முனிபாவ
விமோசனனுகி வதிந்தானிப்பாற், சாந்தகுணத் துலகளி
க்க மிராகவனு ரருச்சனையுஞ் சாற்றுவாமே. (௧௮)

கபிலச்சருக்கம் முற்றுப்பெற்றது.

---

கபிலேசுரர் சேவடி வாழ்க.

சிவமயம்.

# இராகவச்சருக்கம்

அநகன் ஞாலத் தொன்னலர் தம்மூழ் பிரிந்திடப் புகழ்
நாட்டி மணிமே யொன்றன், மனைஞாலத் தினிதொழிந்தும் தார
தன் றன்றவப் புதல்வன் பரவைதுஞ்சு, முகில் மேனி யிராக
வன் றன்கனிட்டனொடு மிலங்கையொழு மூதூர்புக்குப்
பகைகோலிச் சார்க்கிடர் செயிராவணனைக் கொந்திறனொடு
பறித்தானன்றே. (௧)

வேறு.

அவணவனந்த ராவணனுந் தாருமந்தை யடுபலிய,
விவிதமார்ந் கிளையோடு முலரநனி வீட்டுயர்ந்த, கவியது
பரனிகந்தாழ் கழற்கோமான் கொலைப்பாவம், புவியகத்தி
ற் நான்மொழிப்பச் சிவாரத்திற் புக்கனால். (௨)

வேறு.

புகியுரி லக்குமனொடு தவக்கோலம் புரிந்து சடைபுனைந்து
*கோச, மிக்கபுனற்பிணைக்கு நதிகுடைந்தாழ் திருவெண்ணீ
றணிந்து மெய்யிற், றக்கதிரி புண்டரமுந் துலங்க நுதற்றனி
ற் சாத்திச் சைவமாகித், தொக்கவி லிங்கமுந் தாபித்தி
ராமேசனெனு நாமஞ் சூட்டியம்மா. (௩)

அருச்சனை செய்தா னருளா லிராவணனைத் தொலைத்த
பழியகற்றி வாழ்ந்தான், றிருத்தகுமற் போர்க்கிழையைச் சேர
ச் சீதை நாயகனு மமைசெய்யக்கூடா, வருந்தமுவ வுயிர்
க்கெல்லா மரியமுத்தி யெளிதினருள் வான் வீற்ற,
வருந்த திருக்கோவனகர் தனிலென்றன் ஆதனெனு மூா
மேவான்றனே. (௪)

---

*கோசம் = செல்வம்.

வேறு.

திருக்கோவ லூர்வாழி ராமேசு ரன்றன்-றிருசேவை
கண்டார் திருக்காறுகாணூர், மருக்கா மலர்க்கொண் டருச்சி
த்தோர்கள்-வாரா வரங்கொண்டு தீராத பாவக், கருக்கோ
றி யீசன் கழற்கூடி யின்பக்-கடற்கூடி மீளாக் கதிக்கூடி
வாழ்வர், திருட்கூ டறுத்திட்ட வீரட்ட நாத-னியற்றேவ
ரொட்டா வருட்கூடி யம்மா. (௫)

இராகவச் சருக்கம்முற்றிற்று.

இராமேசுரன் றிருவடி வாழ்க.

ஆ. ௧௮௩.

உ
சிவமயம்

## பரசுராமச் சருக்கம்.

மறுவறு தவமெலா மன்னிமான்மிய
முறுசம தக்கினி யுள்ளங் கூர்ந்தரு
ளற முறைதனு மறையறிந்த மைந்தனாஞ்
செறிபரசு ராமனுந் திகழ்செம்பியனே. (௧)

தீரக வீரன் விற்செறிந்த தோளினான்
பாரின்மூ வேழிருபா னென்*றெல்லி காற்
வீரமா லனையனை மிடைந்து போரிடைக்
காரிய மொன்றினாற் காய்ந்திட் டானரோ. (௨)

காய்ந்தபின் றுதைதான் கழுறு சொன்மரு
தாய்ந்தசீர்த் தாயையு மரிதில் வீட்டினான்
மாய்ந்த மன்னவர் கொலைப்பவமும் வாள்விழித்
தேய்ந்த நுண்ணிடை யனைக்கொலையுஞ் சேர்ந்தனன்.

சேர்ந்தவிக் கொலைகளாற் பிரமதேசு மெய்
கூர்ந்தகாற் புயமலி கொற்றத்தேசும் போ

*எல்லி=சூரியன்; கால்=வழி.

யார்ந்து ஐம்புலர் புரட்டனாகி வெந்துயர்
சார்ந்திலை போக்கு மாகோவல் சார்ந்தனன். (௪)

கோவன்மா நகரினிற் குறுகி யாங்குறை
தேவ தேவேசனைச் சிந்தை யன்பினாற்
பூவளர் பொருளினாற் பூசை செய்தனன்
றவிலாவிரு சதுர்யுகமுந் தாமரோ. (௫)

இத்திற மருச்சனை யியற்ற வங்கதை
நித்தனு முணர்ந்தெதிர் நிகழ்ந்து நல்கினன்
பத்தியிற் பூசை செய்பரசு ராமனுக்
கத்தியால் வரும்பவ மகல வாங்கன்றே. (௬)

ஆனருட் பேற்றினா லரியபாவம் போய்
பிரமனற் றேசு மன்பிறங்கத் தேசுமெய்
யுருவியங் கொளிர்ந்தனன் வானனுர்கள்
விரவிநின் றேத்தினர் வீரட்டானத்தே. (௭)

வேறு.

சந்ததமி லாதவரு மும்பர்கள் பெறக்கருது தண்டமு தவத்தினி லுறு, மிந்திர பதத்தின்மிகு வண்சிவ புரத்தினிடை யெண்படைத நடுக்க மறவே, யந்தக னிருப்பிட மாங்கெட வடுத்திடுமோரம்பர விடைப்பர மனை, வந்தனை முனிச்சநறுவன் முன்புரி விதத்தியல்பு மைந்தரிக ளறைக்குது மரோ. (௮)

பரசுராமச் சருக்கம்.
முற்றிற்று.
ஆ. ௧௯௧.

உ

சிவாயநம:

## கண்ணுவச்சருக்கம்.

விண்ணவர்க்கரு-மண்ணனன் மாதவ
நண்ண மாமுனிக்-கண்ணுவ னன்னரோ. (௧)

அன்ன கண்ணுவன்-மன்னு மாதவர்
மின்ன வாறெனப்-பன்னு பான்மைத்தே. (௨)

முதிர்ந்த வேனிலில்-விதங்கொ ளுயிருண்
மதிர்க்க கார்பனி-பொதிந்த நீரினும் (௩)

தரையி னோர்பெரு-விரலி னுனிலை
மருவி மீசா-முருவு னையனாய். (௪)

முக்குறும் பட-னொங்க வைம்பொறி
தொக்க துன்பமு-முக்கவன் பினை. (௫)

புரிபு மாதவ-மெரியி னுவல
கரிய நீடெயி-மருவ வியிழுனன். (௬)

அசல மாயுய-ளிசியி னுழுய
வகையி னான்கு-துசித னுழுனன். (௭)

நாழி னானாப-மாழு னனடி
கூழு னன்பிற-வீழு னனோ. (௮)

உரைக்கு மாதவ-முராந்தி னுலிவன்
விரிப்ப தென்னனை-சுராந்தா ழுனர். (௯)

வேறு.

நம்பந்தத்தைக் குறித்திசைந்தா னெனநெடுமா லென்னிணையின் றான்கு சென்னி, தம்பதத்தைக் குறித்தானென் றுங்கயர்ந்தான் சதக்கிருது கனியவ நாழு, மெய்மபதத்தைக் குறித்தானென் றுளத்துண்ணாந்து வஞ்சகனே யெய்தியன்று, னமபதத்தைக் குறித்திறைஞ்சியவன் முனிவ னன்மறவேட வேடத்தன்றே. (௧௦)

வேடவடிவுடைப் புலவன் கண்ணுவன்றன் றிருவடியிலே வீழ்ந்து போற்றி, நீடுதவப் பெருமானே யானகன்று வருமளவும் நெறியிற் காத்துக், கேடபடா தடியேற்குக் காவேணு மென்றொருகை கிளர்த்தவாளைத், தோடவிழ்ந் தய னளித்துச் சுவர்க்கநிலை பெற்றிருந்தான் றுணிவிலம்மா. (௧௧)

பின்னர், யவ்வள்ளிக் கருணருஞ் சுரிகையினைப் புரந்தரு
வருமம் பெற்றியாலே, யன்றரிய கண்ணுவனு மம்மே சிங்
கைதயனுகி யார்ந்தானப்போ, வென்றிதரும் புயத்தனன்
றிருமந்தை யாரோனு மிடைந்த வன்பி, னென்றைய யனைக்
கலமாகக் கொடுக்கவவர் விடைனிய முறுவலொன் றே.(கஉ)

பின்னுமந்தப் பரிந்தரும் பான்மையினு லறன்மற
ந்தி விபரீயங்களா, டன்னையெடுத் தங்கையிலேற் றரித்தனா
யற் றிலைக்கியப்பு தரிந்து நெஞ்சத், தின்னமுயுஞ் சினங்
கொள வியபிர்கள்பால வெறிந்தனங்கித யம்பரவ, மன்னி
யுறு கலமேபரிந்து பிறம்பேரி னலங்களைந்து மயங்கி
னனே. (கங)

பெருமிழியின் மல்கப்புதுந்து காமமொடு வெதுளிமயக்
கர் இருமொங்கி, நெகிழ்ந்து பிரபத்தை பரிந்தனிட்ட
கிழ்ந்து மதுநாடிந்து வியப்பர்க், குறிவழிந்து பல்லோ
ரிம மதங்களர்ந்து பிக்குறையத் திரிந்தாருங்கு, வெறிந்து
மடலையுறையாளருளாற் பிடிபிடித் துர்விணையுந் தவெரு
க்கொண்டமமா. (கச)

“திருக்கோவன் மாநகரத் தடைந்தாண்டு வெறிந்திருந்த
பெயிர்கிர் மாண்ட, கருத்தாருந் தவமுனிவர் கணம்புகுந்
து பணிந்திறைஞ்சிக் கனிவாலென்றன், பொருப்பான
பவந்தொலைய நெறியெமக்குப் புகலுமெனப் போற்றவன்
னூர், விரித்தோது மறைமுறையினறந் தேர்ந்தங் குய்திய
னை விதித்துச் சொல்வார். (கரு)

கொலைகளவு கட்காமம் பொய்யென்னும் பஞ்சபாதகங்
கொண்டோரு, மலிய *முதுக்குறைந் குரவோர்க்கிடை
யூறு புரிந்தவரு மடிவில் பாவத், தலையுறினும் தமனியப்
புதரங் குவித்தான் சிவலிங்கத் தருச்சித்தேத்தத், தொலை
யுமிது நிச்சயமாதலினு லீண்டிடைவுநீயுந் துணிவாயென்ரூர்.

*முதுக்குறை=பேரறிவு.

முனிவரரு ணெறிவழியே திருக்கோவல் வீரட்ட முறையிலாரா, தனைபுரிந்து தம்பெயராற் கண்ணுவேசுர னெனச் சங்கரனைத்தாபித், தினிதிலிங்க மூர்த்தியைப் பூசனை புரிந்தான் சிலகால மியல்பின்பின்னர்க், கனிவினொடு மெம்பிறைவ னங்கெழுந்துகருணைசெய்யக்கவின்றனன்றே.

சிவபுரத்து வீரட்ட மணிகண்டன் றிருவருளாற் செயிர் தீர்ந்தின்புற, தவமடைந்து முனிவனைய்ப் பலகாலும் புரிந்தவினைச் *சாகரநீந்திப், பயமகற்று மெய்ஞ்ஞானப் †பாராவாரத்தடைந்து பணிவாய்ப் பீண்ட, வழிரொளிபட் களங்கமிலா நிறைமதிபோ லொளிர்த்தனன் கண்ணுவனெனு நாமால். (௧௮)

வேறு.

ஆதனிவ் வண்ணம் பலமுறை வழுத்தலும் பொருது
காதல்பேர் கருத்தொடு முககமல மலரத்
தீதிலாக்கர கமலங்கள் குவியமெய் சிலிர்த்த
போத முங்கனி யொரமுமிக வவ னுவந்தான். (௧௯)

வெளி லாதவன் சடைசடை பொய்யெலாங் கருதி
வான னாவியந் தெம்பொழின் மலிநதண் வாவி
யான தீம்புனற் கிடைத்தன வாவலிற் சொலர்
தான வேணியான் கருணையங் கதையமு துண்டான். (௨0)

கனிந்து மாபதி கதையினும் வினவலும் முனிவன்
அனந்த சித்தரந் தாமுமும் பாவம் மகற்றி
முனைந்த வொன்னலர் செருக்கறச் வீசனீர் முன்னி
வனைந்த வின்பமே தருங்கதை கேளென வழுத்தும். (௨௧)

ஆக்கு மின்பமுஞ் செல்வமு மாங்கவே தான்று
போக்கு தற்கரும் பாவமும் போக்குமெய் வியப்புந்
தேக்கு மிக்கதை சீர்கள கூடா வென்றே
யூக்கு மப்பொரு ளுணர்ந்தருள் சூதனுஞ் சொல்வான். ()

கண்ணுவச்சருக்க முற்றிற்று. ஆ. ௨௧௧.

---

*சாகரம்=சமுத்ரமெனக் குறியிடுது. †பாராவாரம்=கரை.

சிவமயம்.

# தெய்வீகராஜன் உற்பவச்சருக்கம்.

* பூக்கொன்றை மதிநதியும் புனைசடைசேர்திருமுடியும் பொருவின்மூன்று, நோக்குஞ்செம் பவளவிதழ்ச் சிறுமு றுவ றிகழ்முகமு மொய்தினஞ்சு, தேக்கின்ற மணிமிடறு மான்மழுசேர் திருக்கரமுஞ் செழும்புலித்தோ, லார்க்கின்ற விடையுஞ்சே வடியுமுனி யுளத்தெழுதி யறைவதானுன்.

இந்திரனை முதலான கடவுளரை யிடர்புகுத்தி யெரி யிற்சீறி, யந்தகன்போ லுயிர்வவ்வி நிருதியமர் தொலைத் தலைகூர் வருணனழிச், சிந்துவினைத் தனிகலக்கிச் சதாகதி போற்றிரிந்துநிதி செல்வங்கொண்டு, புந்தியிடை யீச னுக்குஞ் சினங்கொளுத்து மோரவுணன் பொருவிலாதான்.

கடுங்கால கேயர்குலத் துதித்தமறத் திறலான கறுத்த நெஞ்ச, னடுங்காளவிடமனையசூரியசக்கரனென் பானவனை யன்னான், கொடுங்காமக் குடும்பிசுதன் றனைவேண்ட வசீ தடையுங் குணத்தினலே, நெடுங்காலந் தவம்புரிந்தான் கமலயோனியைக் கருதிநிலத்தினன்றே. (௧)

இவ்வியற்று மரியதவந்தனை + நுதலிமகிழ்ந்தய னுமிசை மர்தோடுங், கவினெகின மிவர்ந்தடைந்தா னவ்வமைதி கடிதெழுந்து கழலிற்றாழ்ந்து, புவனமெலாம் படைத்தளி க்கும் பிதாமகநம் பெருமவெனப் போற்றவிண்டுன், றவனெ டிது மகிழ்ந்தனமிங் கினியுனக்கு வரமேது சாற்றுகென் றான். (௨)

---

* தைவீகன் என்பது தெய்வீகன் என மருவியது. [illegible]

போதனுமா சென்னிபுனைந் தசுரோ ன்னிவைபுகலும் பொருவிலாத, வேதமொழித் திசைமுகனே வியனடல்கூ ரிருமதலை வேண்டுமென்ன, வாதரவி னவ்வசுரற் கவ்வா மே யனுக்கிரகித் தடைவவோர்ந்து, தாதுகமழ் மார்போய் சொற்றிடு மனைவிக் கிருபுதல்வர் சாராரொன்று. (ரு)

* அரசவனத் திரவுணர் கன்னியர்கண் மிருகண்டனடி யைப்போற்றி, யிருபுதல்வா தங்களுக்குண்டாம் படி பெற ழிருக்கின்று றொழிலன்றுரைச, சரசமுட னீமணந்து குறி த்தபடி மைந்தர்சுகரு சார்வாயென்றே, பிரசமல ரவனுமை த்துத் தன்னுலகிற் பெட்புடனே போயினனால். (சு)

* வஞ்சனைகோ வகையென்று மேற்குறித்த கன்னியா பால் வதுவைவேண்டிக், கஞ்சனுரைத்தவை புரைத்தசூரிய சக்கர னிடத்திற் காதன்மீறி, விஞ்சுமலர்க் குழன்மாதர் கடிமுறையிற் சேர்ந்திடவு மீளி நெஞ்சன், பஞ்சமலர்க் கணைதனக்கே யிலக்காகிச் சுரதவலை படிந்திட்டானே. (எ)

* இம்மாத ரிருவர்கண்முன் சிறுபருவ விளையாட்டி லிருந்தவஞ்செய், செம்மாண்பு சேருமிரு கண்டுமுனி பூவ னத்தைச் சிதைப்பவக்கா, னன்மாதவன் பூசைக்கலரொடுக்க வினைவின் வுனநண்ணும் வேதச், சொன்மாண்பு சேர்பிரம சாரி யிருவருங்கண்டு துணுக்கமெய்தி. (அ)

* வேறுவனஞ் சென்றவர்கண் மலரொடுத்து வருமுன் னேவி மலன் பூசை, கூறுமுனி முடித்திடவும், பின்வந்த கீடர்முகங் கொதித்து நோக்கி, மாறுபடுஞ் செயலுணர்ந் து நீவிரந்தவரக்கியர்க்கே மைந்தராகி, வேறுபடக் கடவீ ரென் றுரைத்தனன்கா லனைவேன்றோன் மெய்ப்பிதாவே.

* அச்சாபங் கேட்டலுமெய் நடுங்கிமுனி யடிமுடிக்கொ ண்டைய யரங்க, விச்சாபந் தணந்தடைய வாநாள்கவென

விமயவண்ண, லுண்மையாள் பாகன், மெய்ச்சாபக் தரப்புவி யில் வேதியிடை பசும்புரவி மிசையே வெற்றிக், கைச் சாபத் துடன்றேன்றும் வீரனே நமர்கள்வினை கடத்து மென்றான். (கo)

அந்தவுரை கேட்டுமிரு பிரமசாரிய ரிருடியடியைத் தாழ்ந்து, சிந்தைநொந்து—விபினமடைந்தருந்தவத்தா லுடலைவிடத் × கிரணம் வென்றி, மந்தரநேர்புயத்தவுணன் மனைவியர்கள்வருசனைகோவதையென்பார்தம், முந்தியிடைக் கீழுருப்பெற் றிரைந்தா வுறுமதிக + ளோவுங்காலை. (கக)

மலரவன் முன் சொற்படிக்குச் சூரிய சக்கரன் மனை யார் வயிற்றினின்று, விலகொளி சேரிரு மதலை யுலகட் ருநசண்ட மாருதமு மினனன், மலிபொறி யூழித் தீயுமுருவின போலங்குதித்தார் மதிபோழ்ந்தன்ன, வலகில்சுடர் மழுங்கு நகைமறலியையு முயிர்கவருமடலினீரார். (கஉ)

அன்னவர்கள் பெறுநாமங் காரண்டன் வல்லூரனுரு மன்னர், மன்னுணர்வி னிளம்பால வயதிலே மலரவனை வந்தித்தேத்தித், துன்னரிய பெருந்தவத்தைப் புரிந்தா ரங்கவர் திறமை சொல்லற் பாற்றே, முன்னிலமும் பொன்னிலமுந் தந்நிலமாம் படிமல்கு முறையினரோ. (கங)

× பதங்கன்வெங் கிரணத்தாலுருப்பமலிமுதிர்வேனில்பட்ட நாளில், விதநகொள்பஞ்சாக் கினியிடத்துஞ் சீதளத் தா லுயிர்வீவும் வியன்கார் காலத், திதம்புகா + வழாறிடத் து, மிருந்துலர்ந்த சருகருந்தி நன்கி னேகா, மதம்படுமைம் பொறியடக்கி யுறுசயனந் தரையாகி வருந்திச்செய்தார். (கச)

---

—விபினம்—வனம். × கிரணம்—ஆன்மா. + ஓவும்—ஒழியும்.
× பதங்கன்—சூரியன். + வழாறு—நிறைபுனல்.

வருந்திநின்று செயற்கரிய வலியதீவிந் தனைப்புரிந்து மலரோன் றன்னை, யிருந்துயரந் தவிர்த்தருளக் கலைஞான த்திருமகளோ டெகினத் தேகிப், பொருந்தியருள் வாமைய ன்றே யுன்றுநீது மவ்வமைதி பொருவிலாத, வருந்தவஞ் செய் மாட்சிமையார்க் கருளுமவா வுடனடைந்தா னலரின் மேலோன். (௬௫)

அகத்திலுறு தியானத்தின் முறைமுன்ன ரினிதடை ந்த வயனைக்கண்டு, மிகுத்த மகிழ்க் கடலாடி மலரடியில் விழுந்து விழுந் திறைஞ்சி யன்பாற், பகைத்ததுயர்க் கணா மெல்லாம் படந்தரிக்குந் தவக்கிழமைப் பாலர் வேதந, தொகுத்துரைக்கு முபநிடதப் பொருணெறியாற் றொல்ல யனைத் துதிக்கலுற்றார். (௬௬)

உருத்திரமா தவரிருவர் பூவாமுன் னென்செய்வா ரென்னவுன்னித், ‡தரித்திரியி லுயிரெல்லாம் படைத்தவர்கட் களிக்குமுதற் சதுரானந்தேச, வருத்தமுறீ யடைந்தவரோ ப் புரந்தருள வாங்கடையும் வாணி கேள்வ, கருத்திருந த படிமுடிக்குங்கருணை *வருணாலயமேகமலத்தேவே. ௬௭

எனவிவர்க டுதித்ததுதிக் கயனுவந்து நீர்வேண்டிற் றென்கொ லென்ன, வனையவருந தாழ்ந்திறைஞ்சிக் கந்த ருவ ரியக்கர்சித்த ரமரர்வென்றி, மனிதர் பலர் கின்னரர கிம்புருடர்சா ரணரவுணர் மற்றையோனி, தனிலுடையா ரெவராலுங் +தபுவாதவரம்பெருகத்தருகவின்னும். (௬௮)

இகலுறநன் கியற்று பல வாயுததது மழியாத வரமு மெங்கட், ககமகிழ வருள்கவென வவ்வரமே யயன்பாலித் தகன்றுன் பின்னர்ச், சகமுழுதுந் துயர்கூர வருந்தூய

---

‡ தரித்திரி—பூமி. * வருணாலயம்—சமுத்திரம். +தபுவாத—கெடாத.

மேதுவெனத் தாழ்விலாது, திகழ்வரத்தாற் காரண்ட வல்லூரர் கொடியதிறற் செயலிற்புக்கார். (கக)

பிரமநிட்டை யகத்தரையுஞ் சாந்தரையும் *தாந்தரையும் பெரிது வேள்வி, புரியுமுதல் வருணரையும் பொடியாக்கி மகஞ்சூறை புரிந்துமாகச், சுரர்சுவர்க்க வநர்திமையுந தடிந்துதுணைத் தயித்தியரைச் சூழ்ந்து பொல்லா வெரியவ்வுண ரிவ்வண்ண மூவுலகுங் கடுங்குறும்பே யியற்றி நின்றார். (உ0)

வேறு.

காரண்டனும் வல்லூரனு மிவ்வாறு கறுத்துப்
பாரண்ட நடுங்கும்படி புரியப்படர் துயரங்
கூரண்டர்தி ரண்டங்கொரு குழுவாகி யடைந்தார்
பேரண்டம ளிக்கும்பிர மன்பாற்சரண் பெறவே. (உக)

சரணுய்மல ரயனைப்பெருந் தருநீழலில் வாழுஞ்
சுரர் நாயகன் முதலோர்பலர் துதிகூற மகிழ்ந்தே
வெருவேலென வருணன்முகன் வரலாறது வினவி
யரணுயிமை யவர்தங்களுக் காமோருரை யறைவான். (உஉ)

÷பன்னுட்படுந் தவமாற்றிடும் பண்பாலவர் தம்பா
லென்னுற்பல வரநதந்திடு மியல்பாற் கொணு மியல்பா
லுன்னுவகை யான்வேறினியுன்னுவகை சென்று
முன்னுண்முறை போன்முன்னவன் முன்னேயிது மொழிவோம. (உங)

துள்ளங்கிரொன ×வாதித்தர்க டொகுதித்திர ளோடும்
விளங்கோதிமன் கைலாயம திடைமேவினன் வல்லைக்

* தாந்தர்—தவஞ்செய்வதா லுண்டாகுந் துன்பத்தைச் சகிப்பவர்களாகிய முனிவர்கள்.

× ஆதித்தர்கள்—தேவர்கள். [அதிதியின் புத்திரர்.]

களங்கூர்கெழு மணிமேனிய னெடும்பேர்ரிகல் கருது
தளங்காவலி யசுரோசனைச் சாய்க்குந்திறஞ் சமைந்தே. உச

வேறு.

அக்கைகலை வங்கமலை யாத லாலோ வரனணிந்தபொடி
யினிற மவிர்தலாலோ, செக்கர்புனை யவன்சடிலஞ் சே
ர்ந்து சேணிற் றிகழ்மதியி னிலவுலவிச் செறிந்ததாலோ,
முக்கணுடை யவன்முழுத்தசீர்த்தி போல மூதண்ட கடா
கமெலாம் வெளுத்த நாளுட், புக்கும்வளி யுளக்கணங்க
ணைறிதோன்றுது புராரிதிரு வருள்பின்மேற் புகுந்தன் னை
த்தே. (உரு)

✻ இனையமலை தனினுப்பணிரவி யாதி யிருஞ்சுடர்நா னொ
ளியுமொப்பி லெழில்சேருச்சி, நனினிலைகொள் காப்புடை
னை காப்புக்கொண்டு தகமமூலா மணிக்கற்றை தரித்தகோ
யி, னினைவினுக்கு நிண்ணயித்த 'விலதாய்த் தாமே, நிகழ்ந்
தபல சுற்றுநடு நின்றிலங்குந், துனிவினைமா சகன்றியரு
ங் கொள்ளத்தாமே சூழ்ந்தமைந்த நவமணியின் றொகை
சேர் மாடம். (உசா)

அன்னமணி மண்டபத்து ளமைந்த சாம்பு நதபீட
மிரசிதம்போ லவிர்ந்த வந்த, மன்னுமரி யாதனத்தி லிரு
ந்த வெம்மான்வனைந்தவிறற்கஞ்சுகமங் கியானைதோலோ,
பொன்னவிர்பஞ் சானனத்தின்வடமோ வென்னப், பொலி
ந்தனவாங் கரன்பாங்கர்ப் பொருந்துநீதின், மின்னிடை
யாண் மலைமகளோ வாணிதானோ வேணியுறு புனன்மரி
திற்றாளோ போலும். (உஎ)

வெண்புனல்போன் மலிகைலைத் தடத்திற் றுதுவிரிந்
த கயி ரவநீல மிரண்டுமாங்கோர், தண்பொலியு ஞாலத்
தி லமருந்தேநற்றந்தனைப்போலுந்தழனிறத்துத் தடந்தொ
டன்றைல், விண்புலங்கண் டளவுமக மேருக்கோலி வில்லாக

வளைத்தவனுமீனநோக்கான், மண்புலமே முதலான வண்ட
மெல்லா முயிர்த்தவளுங் கைலைதனில் வதிந்ததம்மா. ௨௮

நுவலரிய காட்சியொடும் பொலிந்து சிற்ப நுணித்து நுணித் தறிமயனு னுவலற்கெட்டாக், கவின்மலியம் மண்ட பத்துண் மலங்க மூர்த்த கணத்தொகுதி புடைசூழக் கை லைக்காவல், விவிதமணி மௌலிநந்தி ×சாதியோச்ச வியன் கொளழ கொழுகவுமை சகிதனாகத், தவிசிலிருந்தனன்பொ லியுந் தவத்தோர்க் கெட்டாத் தானுவவ ணவ்வமைதி யம ரர் சார்ந்தார். (௨௯)

உம்பர்புகுந் தணிவாயி லாளர்க் கோத வுற்றவர லாறி னையங் கவர்களோடி, யெம்பெருமாற் கறிவிப்ப வருணி றைந்த வெந்தைவர விடுகவென விமைப்பினெய்தி, யம்ப ரனை விடவேகி யன்பி னூலே யருஞ்சூறை கொளுமஃபோ லயன்முன் னோர்கள், வம்பவிழுந் தருமலர்க்கண் மழையி ற்பெய்து வள்ளலடிக் கமலமதின் வணங்கினோரே. (௩௦)

வேறு.

அடியொழி மரமென்ன முறைமுறை தொழுதா ரழுது ள முருகினர் விழிதுளி கொளமா, லுடல்புள கெழவினை யுறுதுய ரலைகூ ருததிகள் சுவறிட மகிழுத தியினர், நடமது மருவினர் கரமுயர் சிரமே னகைமுகிழ் சலசம தெனநணு கினர்தீ, விடநுக ரிறையுறு துதிபலமொழிவார் விதிமுத லமரர்கள் கணமினி துறவே. (௩௧)

† பிரணயர் வினைகெட மலிதிரு வருளே பிரசம தென் வடி யவர்புகு மலரோ, யிருள்படு மிதயம திருள்கெடு மொ ளியே யிமவரை மகண்முலை புணர்மணி மலையே, மருமல ரடுகணை மதனுறுமனமேல் வழிபடு மதலைதன் னுயிர்பரி யர ணே, திருமலி கைலையி னிலையெழுசுடரோ சிவசிவ ஹர ஹர சிவசிவ சிவனே. (௩௨)

†பிரணயர் — அன்புள்ளோர். × சாதி—பிரம்பு.

மறலித னுடல்கெட வுதைதரு சரணுமருவலர் புர
மெரி யெழவெழு நகையா, யறிபவ ரறிவினி லறிவெனு
மறிவே யருமறை முடிவினி னடமிடு பரமே, நெறியுல
கருள்புரி யழிவிலெண் குணனே நிருமல வொளிகண் மூ
ன் றருளுமுக் கணனே, தெறு $மிர சதமலை வசிமணி மலை
யே சிவ்சிவ ஹரஹர சிவசிவ சிவனே. (௧௩)

வழிவழி யெமர்களை யடிமைகொ ளிறையே ‘வ்விதெ
ளி துளதில தெனநிறை நிறையே, யழிவற நிலைபடு மூ.மூ
முத லரசே யகிலமு மிடனுடை கருதருவெளியே, பிழை
யற வெமையினி நினதருள் புரிவாய் பிறிதொரு துணை
நெறி யறிகில மமுதே, செழுமதி முடிபுனை கைலையி லு
றைவோய் சிவசிவ ஹரஹர சிவசிவசிவனே. (௧௪)

இவ்வண மிமையவர் துதிகொடு பணிய விறையவ
னருளுட னவரொடு மொழிவான் செவ்விதி னுமர்குறை
தவிர்படும்வகையைச்செப்புவ மெனவயன் முதலியவிபுத,
ரவ்விய மறுமன துடனர னடியிலகமிக மகிழ்வுடன் முறை
முறை தொழுதே, தெவ்வர்கள் கெடும் வகை யெவ்வகை
யாமோ தெரித்தரு ளெனவிறை தெரித்திட லானான். ௧௫

* கமலநீ யருள்சுதர் களிலொரு பிருகுக் கதிமுனி யுத
வியகவிதரு சுதனும், விமலம துள §பிரசுரனரும்விஞ்சை
விதங்களு மறிந்தசு ரர்க்கினிதாக, வமலமி றெழில்பயிற்
றிடுமனமச் சனுமா யமைத்திட வமைந்தவர்க் கானசொற்றி
டவுந், தமருடன் குழுமி விண்ணவர்க்கிடையூறு தரவிம்ம
யவரொதிர்த் தவர்களைச் சதித்தார். (௧௬)

---

$இரசதமலை—கைலாசமலை. [இரசதம்—வெள்ளி.] §பிரசுரன்—
சுக்கிரன்

* தானவர் குலஞ்சுர ரான்மெலி வடைந்தே தபனன் முன்னிருளென வொடுங்கவும் வெள்ளி, யானவ னதிர்ந்தி ரங் கியவனைத்துடனே மாயையென் றுரை யெழில்வனிதை ய டனக்கு, மினமே தனன்கலை முதலிய மாயாவிச்சைகள் பயிற்றுவித் திச்சையின்படியே, கானகந் தவம்புரி காசிப முனிபாற்கவருதிமருடடிமெய்க் கலவியையென்றான். ௩௭

* காசிபன் றனைவெள்ளி கழறிய படியே கலந்துசூரனை முதற் காதலாப்பெற்று, டேசிக ளுளையிலப் புதல்வர்க ளிடும்பை செய்வது தேர்ந்தெவர் செல்வமுங்கொண்டே காய்சினத் துடன்பல கடும்வினை புரியக் ககனமோ டவனி யுங் கலங்கினதுரைப்ப, மாசறு தவபிரு கந்தண னிரங்கி மகன்மகன் சூட்சியென் றவன்றனை மதியா. ௩௮)

* உன்னலும் பார்க்கவன் பிருகுமுன் னடைவுற் றெ ள்ளிய சீரடி பணிந்தெதிர் நிற்ப, வன்னவன் றனையுறத் துக்கினுக் கிடையூ றமைவுற வசுரருக் கருவினை யாமா, லென்னலும் புகருமுன் னியமித்த படியே யியற்றின னெ னவிறு மாந்துரை செய்தான், சொன்னவச் சொன்முனி கேட்டெளங் கொதித்துச் சுக்கிரன் விதிர்ப்புறச் சொல்லுவ னம்மா. (௩௯)

* தவஞ்செறி வேதியர் குலத்துநீ யுதித்துஞ் சாந்தம துடையராற் கோளெனக் கதித்தும், பவஞ்செறி தானவா குலம்வசி பெறவே பண்ணவா முதலினோர் செயுநன்மை யிறவே, யுஞ்செயும் வினைசெயப் புகுந்தனை யுனக்கியா னுறைந்தநல் லுரைமறுத் தவமதிப் புரைத்தாய், நவஞ்செ றிந் திடுமுன்றன் வழியிலன் னவர்கண சித்திடு வாரென விற்றிய பின்னும். (௪௦)

* அலகில் வெம் பவம்பசுத் தோல்கொண்ட புலிபோ லமர்ந்துபன்னுட்புரிந்தாயந்தப் பவத்தா, லிலகுமெய்யொ

ளிகெடக் ×கார்ப்பட ரடைவா யென்றனீ னிரு முகத்தவன் மதலை, சலமுடன் றுதைசொற் புகரவன் கேட்டுத் தளர்ந்துள நடுங்கிமுன் றாழ்ந்திவை சாற்று, முலகினிற் றசவுரு மாயவ னெடுக்க வுரைத்திடு மடிகளுக் கியானொரு பொருட்டோ. (சக)

* என்றுபல வுரையெடுத் திரைத்தசல் வியனை யிதையமன் புறத் தழி யெழிமிக மூறுந், துன்றிய முருகுகண் டோன்றிய சருணைத் தொலைத்திடக் காலுனைச் சுளித்திடு மதற்பின், மின்றிகழ் வரநதி படிந்துசெவ் வேளை வீறுப் பொடு தவம்புரிந்தவ னருளாலே, யுன்றன்மெய் வினைகெட வொள்ளிய னுவா யுரைத்தவர் கெடுவிக்கு மொருசுதன் பெறுவாய். (சஉ)

* அஞ்சலை யெனப் பிருகறைந்திடப் புகருமவீணிரிந்தறைந்துயரடைந் திருந்தனனாற், கஞ்சனும்மிருந்துயர் கெடவுமுன் னருளுங் கந்தனுமாயை தன் மைந்தர்கள் செயுமால், விஞ்சைவெம் போரறிந்தில ளவுமிமையோர் மேவுறக் கொளுத்தினன் வெள்ளியென் †றெள்ளி, வெஞ்சினங்கொண்டுமோர் சாபந்திலன்முன் மெய்ப்பிரு குரைதுயர் மேவினனென்றே. (சங)

* காசிபன் சுதர்வலிகெடப் புரிந்தேவருங் கைதொழ விருந்தனன் கடம்பனு மசுரர், தேசிகனாகிய புகரஃதறிந்து செப்பியகாலமீ §தொப்பியதென்றே, காசியினடைந்துமர்க் காகினியாடிக் கந்தனை நாடொறும் வந்தனைபுரிந்தே, மாசறுந் தவஞ்சுராரா யிரவாண்டு வதிந்தினி திருந்தனன் மற்றவை கேண்மோ. (சச)

---

× கார்ப்படர்—மேகரோகம். † எள்ளி—இகழ்ந்து.
§ஒப்பியது—பொருந்தியது. ‖உளவிழைவினை--உள்ளவிருப்பத்தை.

* வெள்ளிசெய்புத்தவத்தினை யறிந்தநங் குமரன் விருட் பொடு மயிற்பரிமிசைத் தெய்வயானை, வள்ளியோ டெழுந் தவன் றவத்தின்முன் னனுகமந்திரியறிந்தெழுந்த வனடி வணங்கி, யொள்ளியவ யிற்கரவள் ளலைத்துதிக்க வுகந்தெ ழிற்சேயும் புன்னகை கொடுவிருப்பை, விள்ளுக தருது மென் றறைந்திடச் சுங்கன்மெய் புளகெழ /வுளவிழை, வி னைவிரிப்பான். (சரு)

**வேறு.**

* ஐயனே யெனைமுந்தை நாளரக் கர்க்கமைச்சனுய் விதி த்திடும் வகையாலே, வெய்யதானவர்க் காகிய வினையம் வி ளம்பினே னன்றி மெய்யறியேனே, மையுலாவிய மனத்து மானுடர்போல் வருந்துகின்றதேர் பெருந்துயர்வாட்டித் துய்யமெய் யெனக்கருளிவல் லசுரர் தொடக்ககற்றெனத் துணையடி தொழுதான். (சசா)

* துட்டராகிய நிசிசர ரொடுங்குஞ் சூட்சிமுற்றுறவுனை நியமித்து, மிட்டமாயவர் குலவிர்த்திக்கிதைய மெண்ணி ச் செய்தனை யியல்பலாததனுற், கட்டமெய்யினி லெய்தி யுமின்னுங் கருணைகொண் டொர்சொற் கரந்தனையவர்க, ணட்டமெய்துறு வகையதுசுரர்க்கந் நாளமைந்தவா றெ னச்சொலி நகைத்தே. (சஎ)

தொழுதுகர்க் கறுமுகன் சொலுமிவணிதோ மிலோர் மகமியற்றுதி யதனிற், பழுதிலோர்சுதன் வரும்பிருகு முன் சொற்படி செய்விக்கு மெய்படர்துயர் கெடநீ, வழுவி லொள்ளிய ருகிமுன் போலவானவர்க்கு மாற்றல ர்க ளாய்வருவோர்க், கொழுகுவாயுண்மைத் தீபம்போலெ ன்றே யுரைத்துச்சென்றன னுடம்பிடி முருகன். (சஅ)

* பின்பநாவிலான் பிதாமகன் றன்பாற் பெட்புட னடைந் துரைத்திட வவனு, மன்புகொண்டுகோசிப்பதியடைந்தே யருமகக்கிரு துளுற்றிட வதனின், முன்பு கும்பசம்பவனுமிவ்வாறாய் முளைத்தனன் கொலோவெனக்கண்டோருரைப்ப, வின்புமீக்கொளோர் சுதனும் வந்தெழுந் தானிரு விசும்புவனியு மெங்கும் களிப்ப. (௪௯)

* கண்டு காப்பிய னனந்தக் கடற்குக்கரையுங் கண்டிலனு யிருகரத்திற், கொண்டெடுத்து மார்பணைத்து மோந்துச்சி *குமரன் றந்தி டென்குமரனே யென்று, பண்டெடுத்த வாரணமு தற்பயிற்றிப் பாவகி பதம்பர சிடவிடுத்தான், எண்டொடுத்தி டாவிருந் தவமுளுற்று மெழிற்சுதன் முனமெய்தினல் வேளே. (௫௦)

* மைந்தநீ சிறுவயதினி லென்னை மனங்கொண்டியாவை மறந்தனையுன்போல், நநநலில் தவஞ்செய்த வருளரோ வென்று நாயகனு விற்றிடக்கேட்டுச், சுந்தரப்பதமெழுந்தவன் வணங்கித் துதித்துநிற்க முன்விதித்தலை குட்டுங், கந்தனன்புடனோக்கி வேண்டுவதைக் கழற வீகுவன் கட்டுரை யெனவே. (௫௧)

* எந்தநாளினு முன்றனை நீங்கா திருந்துநற் றவமியற்றிட நின்பேர், தந்தெனக்குயிர்க்குயிர தாங்குகனே சமயமீ தருளெனவு மைபளித்த, மைந்தன்வெள்ளியின மைந்தனைக்கருணை மாரியாட்டியே நினைமுன் யாங்கவிக்குந், தந்ததாலு நோற்றிடுந் தன்மையாலுஞ் சாரவெனபெயர் வேண்டியதாலும். (௫௨)

---

* குமரன்—சுப்பிரமணியக்கடவுள். 1. ஆன்மாக்களுடைய அஞ்ஞானத்தைக் கெடுப்பவன். [கு—குற்சிதம், மரன்—கெடுப்பவன்.] 2. மரித்தல் இல்லாதவன். [கு—இல்லாமை, மரன்—இறப்பவன்.]

* அகநிரம்பிய வன்புட னென்னை நீ யறைந்திடும் பெயரே யுனக்கணியாய்க், குகனென்றே திடவென்று நம்பாலுங் குவலயத்தினுங்குலவுகவென்றே, யிகலுறுஞ் *சிகிவாகனன் கூற விருந்தவக்குகமுனிவ ரனுங்கண், முகசரோ ருக மலர்ந்திடத் தெவ்வன்மொய்ம்பு நீக்கொளிச் சுதனருள் குவனால். (௫௩)

* இனையதன்மையினாற் கந்தன்பாலே யெய்திருங்கடன் பிசைத்திடுமென்று, நனைமணங் கமழ்கொன்றை வேணிய ஓ[illegible]விற்றத்தாழ்ந்து கேட்டயன் முதற்புலவோர், துனி யகன்று நற்கைலையை யகன்று சூர்தடிந் தவன்றன்னேம கூடந், தனையடைந்து வேடா டலைசூடிச் சரண்புக்கோர்க ளைச் சண்முகனோக்கி. (௫௪)

வேறு

* அடைக்கலமாக நீரடைந்த பான்மையைத்
தடைப்படா துரையுமென் றருளிற் சாற்றலு
மடற்படைச் சூர்முதலள விருனவர்
கெடத்தொடு ×முடம்பிடி கிளருங் கையனே. (௫௫)

* ஏறிய மயிற்பரி யிறைவநான் மறை
கூறிய பரற்குபதேசங் கூறிடு
மாறுமா முகத்தநல் லடியர் தீவினை
நீறுசெய் வித்திடு நிமல சோதியே. (௫௬)

* எனப்பல துதியெடுத்தியம்பிப் பின்னரு
மனைத்துல களித்திடும யனையாதியோர்
மனித்துய ரளிக்கும் வல்லூர காரண்டர்
கினத்தலைத் துரும்பெனத் திரிந்து துன்புற்றே. (௫௭)

---

*சிகி—மயில். சிகை—சூடு அதனையுடையது.
×உடம்பிடி=வேல்.

* கண்ணுதற் பரனிடங் கழறநுங் களைபா
னண்ணு*தற் பதமறி ஞான நோன்புசே
ரெண்ணுதற் கருங்குக முனிவனையிட
ரொண்ணுதற் கின்றியே யுய்குவீ ரென்றான். (௫௮)

* அவ்வுரை கேட்டயா மையநின்பதஞ்
செவ்விதா யடைக்கலஞ் சேர்ந்தனங் கொடுந்
தெவ்வர்கள்கெடும் வகை சிந்தை செய்கென
வவ்வவர் குறைசொலி யடிவணங்கினார். (௫௯)

* மணங்கமழ் நீபமார் மாலைமார்பனும்
வணங்கிய வயனுடன் வலாரியைக் குறித்
+ தணங்கியற் றருவரை யழிவிப்பாம்வழி
யிணங்கிய மனத்துட னேகுமென்றனன். (௬௦)

* அந்தநல் லுரைசெவி யடையுமுன்னரோ
சிந்தின பகையெனச் சிந்தை மீக்கொள
வுந்தின களிப்பொடு முந்திவந்தவ
னிந்திரன்முதற் சுரரிறைஞ்சியேகினார். (௬௧)

வேறு.

* அன்னவ ரகன்றபின்ன ரறுமுகத் துடனேதோன்றி
முன்னவிர் சூரற்கொன்று முகுந்தனே யாதியோரை
நன்னயத் துடன்புரந்த நவிலருந் தன்மைபோல
வுன்னின னகத்தி னேங்கு நகங்களி னுறையுங்கோவே. ()

* ஓர்ந்திந்த வாறு மென்பதுளங் கொடுமுருகன். பின்னர்க், கூர்ந்திடுந் தவத்தின் மிக்க குகமுனி தனைவிளித்தே,

---

*தத்பதம் என்பது தற்பதம் என்றாயிற்று: அதுஎன்னும் பதத்தான் உணர்த்தப்படும் கடவுள் என்பது இவ்விடத்து அர்த்தமெனக.
+அணங்கு=துன்பம்.

யார்ந்திடோர் முகமீயற்றற் காமிடங் குறியாயென்னத், தே
ர்ந்திடு முனிவன் செவ்வேள் சேவடி முடியிற்சூடி. (சுங)

* அடிகட்குத் தோன்றுதுண்டோ வதனையான் சொல்
லற் பாற்றோ, படிகட்கு மண்டங்கட்கும் பரிவுள்ள தாயா
ய்வந்த, பிடிகட்கு நடைபயிற்று மிமாசலப் பிராட்டிதந்த,
கடிகட்குட் சிறந்த நின்கைக் கதிர்ச்சத்தி குறிக்குமென்
றான். (சுச)

* குகமுனி யோதக்கேட்ட குமரனு மகிழ்ந்தவ்வாறே
யகமுனிக்கை வேலோச்சியருந் தவவிதுகரித்த
விகமதின் மகமகத்தை யியற்றுதி நாமங்கெய்திப்
புகழ்பெற முடிப்பாம் வேற்பின் பேர்கெனப் போக விட்
டான். (சுரு)

* விடைகொண்ட முனிதன்பாங்கர்மேவு வோருடனெ
ழுந்தே, யடல்கொண்ட வையனேவு மயிற்பினர் விடாது
சென்றான், தடையொன் றிலாதவ் வேலுஞ் சண்டமா
ருதத்தோ டேழிக், கடைகொண்ட கனலை யெய்ப்பச் சென்
றதுகாலன் றிக்கில். (சுசு)

வேறு.

* குமரன் கையினின் றெழுந்து தென்றிசை தனைக்குறி
த்துச், சமரவேல் விசும்பெழுந் தொளியுடன் செலுந்தகை
மை, விமலபானு கீழ்மேற் றிசைமேவற்குச்சலித்தே, யம
லமேரு நின்றெழுந்து தெற்கடைதல் போலாகும். (சுஎ)

* வீறிவேல் செலுந்த தகைமை யைக்கண்ட விண்ணோர்
க, ளூறுமா மகன் குலிசமோ மாயவனேய்தி, னீறுகாண
வே வாழியோ விதழிமா மதிய, மாறுதாங்கியோன் சூல
மோ வெனநனியயிர்த்தார். (சுஅ)

* ஐயர்பின் செலக்காண்டலு மையும் *விட்டவராய்,
வெய்யசூர் தடிந்தவ னமர்குறைகளை வீட்டக்
கையுடம்பிடி யேவினுன் காண்குதுமென்றே
செய்யவானவர் துதித்தன ரதன்பினர்ச் சென்ருர். (சுகூ)

வேறு.

* அண்டங்க ணடுங்கப் பாதா ளத்தராவொடுங்க வொன்பான், கண்டங்கள் பிதிரவெண் ணக்கதியினைக் கடுத்துத் தெவ்வைத், தண்டங்கள் செயவேன்மேவுந் தகையுணர்ந்தி லராயேதோ, *சண்டங்களோர்ந்தவென்றே யுலகுள்ளார் தவிப்புற்ருரால். (எ0)

*பண்டுபோ லசவோரேதைபகைகொண்டுற்றன கொலென்பார், மண்டிய கடலோ வூழித்தீகொலோவென்பார் வள்ள, லுண்டவல் விடங்கொலென்பா ருடம்பிடியா மீதென்பார், கொண்டநங் குமரன் பாதம் யாவருங்குறிமினென்பார். ()

* மயிலவனயி லென்ருேர் சொல்வழங்கிடச் செவியிற் கேட்ட, குயிலன மொழியார்தத்தங் கொழுநரைக் கூவு கின்றார், பயிலுறுமொளிபொருந்தப்பரந்தகாந் தட்கையா லே, செயிராறு கண்புதைத்துத் தியங்கியே தேடித்தேடி ()

* அன்னாரிற் சிலர்சங்கண்கட் கயிலொப்பா மெனவான் ருேர்கள், சொன்னுரோ யதனையீதிற் சோதிப்போ மென்று நோக்கின், முன்னுரும் விரலிடுக்கிற் பார்த்திட முகிழ்த்த காலை, பின்னற்கண் ணொளிமழுங்கி வேல்காணுர் வெள்கி விழ்ந்தார். (எக)

* நன்மையாமடியார் மெய்யுணடுக்கமுங் களிப்புநன மை, யின்மையாந் கொடியார் மெய்யுளிறு மாப்பும் பய

*சண்டம்=தீங்கு.

ழு முன்பின், றன்மையாம் படியளித்துச் சண்முகனெஃ
கமென்றுஞ், செம்மையா நடு நாட்டின்கட் சேர்தனிற்
சேர்ந்ததன்றே. (எச)

* உலகினி லுள்ளதீர்த்தம் யாவும்வந் தொருங்காயாட,
வலகிலாப் பவங்களைந்து புனிதமா யடையச்செய்யுந், தொ
லைவிலா மகிமைக்கெல்லை சொல்லொணாப் பிணகியாற்றி
னிலகொளி பரப்பு மெஃகம் வரம்பினிலெய்திற்றம்மா.எரு

என்றிந்த வாறுகூ தனியம்ப*மந்திரிகால் கேட்டு, நன்
றுநன்றென்று போற்றிநவையறு முனியேபெண்ணை, யெ
ன்றதோர் நதிக்கம் மேன்மை யெய்திய வகையுமற்றை
யொன்றொழி யாமலேயுற் றுரையென வுரைக்கலுற்றான்.

* ஆதியைப்பணிவா னெண்ணிச் சனகர்கள் கயிலையண்
ணி, யோதியுத் தரம்பெறாதே யுட்புகத் தடுத்தநந்தி, மீது
கோபத்தாற் பூமிமேவெனச் சபித்தார் கேட்ட, பூதநாய
னவ்வாறே போய்வரும் வகைபுகன்றான். (எஎ)

* கயிலையிற் காவனீங்கிச்சனகர்சொற் கடத்தவெம்மான்
குயிலிய படியேநந்தி†கூவின்முன் கௌரிநோற்ற, சயிலப
தடைந்தியாருஞ் சாரருந் தவமுஞற்றக், குயிலன மொழி
யாளோடுகோவுகைத் திறையங்கெய்தி. (எஅ)

* நந்திதேவனை வியந்து நவிலருந் தலைமைநலகிக், +க
திகழ் கங்கைதன்னைக் கடுந்தவத் தழலடங்கச், சுந்தரமுடி
யின் மீது பிணகத்தாற் சொரியப்பொங்கி, வந்திடப்பெண்
ணை யாற்றின் றென்கரை மாட்டேயுள்ள. (எகூ)

---

*மந்திரிகால்=குபேரன் புத்திரன். †கூ=பூமி. கு நீண்டதி.
+கம்—சிரம்.

*விந்தையா ளாவிமேவு மெய்த்திருக்கோவலூரி, னந்த கா சுரனைவாட்டி யரிமுத லோர்க்கெஞ் ஞான்று, நந்தலில் பதமளிக்கு நமதிறை வீரட்டேசன், சுந்தரி பெரியநாய கியினெடு துலங்குகின்ற. (அ௦)

*பொன்னவிரும் பரிம்பர்ப் பொருவிலா *நிகேதனத் தின், முன்னர்வந்திறைஞ்சியங்கு நின்றதுமுருகன்வைவே, மன்னதன்பின்னர்வந்தமுனி வரண்டர்கடாங்கண்டே, துன் னருள் வீரட்டேசன் றுணையடி துதித்துச்சூழ்ந்தார்.(அக)

* அண்ணல் வேல் பெண்ணையாடி யாலயம் வலம்வந் துற்றுக், கண்ணொரு மூன்றோன்கோட்டமுன் × வேதிகுறி த்துக் காட்டிப், பெண்ணொரு, பாகத்தானைப் பணிந்து பெண்ணையைக் கடந்து, நண்ணியுத்தரத்தின் ஞாங்கர்க் §குழகன்கை நண்ணிற்றம்மா. (அஉ)

* வேல்காட்டு மிடத்தின் பாங்கராகம விதிப்படிக்குச, சேல்காட்டுங் கண்ணிபாகச் செழுஞ்சுடர்தனைத்தாபித்து, மால்காட்டுஞ் சிந்தைநீர்ந்து மாதவர் வானேருய்யச், சூல் கர்ட்டீரச் சுதனளிக்கக்குக முனியெண்ணஞ் சூழ்ந்தான்.()

* மருக்கமழ் நீபமாலை வள்ளல்செங் கையாலோச்சு, முருக்கிளர்வை வேனின்றகாரணத்துயர்விறலே, திருக் கைவேலூரா மென்றநிம்பரிற் றிரிந்து செய்யீ, திருக் கோவலூ ரென்றெங்குஞ் செப்பிட நின்றதன்றே. (அச)

* நந்திகோற்றதற் பின்கூறுங் கௌரிமாமலையை நல் லோர், நந்திமா மலையென்ப நளிர்கங்கை பிறைகத்தா

---

*நிகேதனம்—தேவர் கோயில். × வேதி—வேள்வி செய்தற்காம் இடம், §குழகன்—குமரக்கடவுள்.

லே, சிந்திய ஷுதிபிறுகி யெனக்கங்கை யெனச்சிச்வேகத், துந்துகாரணத்தால் வேக வதியென வுரைப்பாரமும். ()

வேறு.

பின்னரந் தணனுன மாதவப் பெருமையாலுயர் சுக முனி, மன்னுமைந்தனை வேண்டியே யருண் முருவுமாதிரு, க் கோவலூர்ப், பன்னுசெஞ்சடை யானை நோக்கியிலிங்க மொன்று பதிட்டைசெய், தின்னறீர் கருணைக்கு கேசரனெ ன்னுநாம மியற்றியே. (அசு)

மகரமது கரமலர்களான்மறை மந்திரப் படிபூசனை திகழவிழை பொழுதிறைவ னங்கெழீ விடபமீதி லெழுந் தன, னகசரோ ருகமலர மாமுனி யடிபணிந்தி யிறுதிகளா ற், புகலவந்த கவதைசெ யெந்தையு மகமகிழ்ந்திவை புக லுவான். (அஎ)

இனிய*சந்ததி காமவேள்வி யியற்றுவாயதி னடலெ ழில், வனையுநமர் கணமகிழு மிமவிறையவனு மொருதிரு மைந்தனுய்க், கனிவின்வருமென வுரைசெய் வரமது கடி தளிதொருகணமதிற், சனனமரண மதிரியவேயுயர் †தாப ரத்திறை சார்ந்தனன். (அஅ)

பூதகண மிருபாலு மிடைபடப் பொருவிலுமையொடு மிறையுவன், றீதில்வர மஃதருளி மறைபொழு தடிபணி ந்து செழுந்தவ, வூதியம் பெறுசுகனு மகிழ்சுத காமகிரு திதயு ஞற்றினன், கோதினெறி படர்பிருகு வாதிமுனிக் குழாம்புடை சூழவே. (அகூ)

* அந்தவேளையிற் சுகமுனிப் பெயரந்தணன் றனகந் தனிற், சந்தவேளை நினைத்தலு மஃதினையதிந் தொருகண

*சந்ததி காமவேள்வி=புத்திரகாமேஷ்டி. †தாபரம்—சிவலிங்கம்.

மதி, னெந்தவேளையி னடியரொங்க னினைப்பரோ வவனெ
ய்துறும், வந்தவேளை யெரித்தவன்மகன் மயிலின் மீதினில்
வந்தனன். (கூ0)

* வண்டுதங்கிய தொங்கன்மோலி வயங்குமாறு முகங்க
ளும், * வண்டுதங் குளரஞ்சுபடை மலிமருவிராறு கைவா
குவுங், கண்டுதங்கிய கிளவியாரொடு கதிர்கொள்காமர் செய்
வடிவமுங், கண்டுதங்கிய வன்பொடுங்குக முனிபணிந்துக
சிந்தனன். (கூக)

* ஏவரும்பணி குமரனுங்குக முனியைநோக்கி யியம்பு
வான், நீவருந்தலி லாதுவேள்வி நிகழ்த்துவாய் வருவோ
மெனத், தேவரும்பணி § யரசவன மடைந்தையும் வள்ளல்
செழும்பதந, தூவருந்தவ மளவில்புரி மிருகண்டுமுடி
மிசை சூடினன். (கூஉ)

* மற்றைமுனிவரு மெதிர்பணிந்திட வந்துசிகர சிகாம
ணிக், கற்றைவேணிய னாலயத்திலடைந்து கைதொழு தவ
ணிருந், தற்றையத் திருநகரின்மேன்மைகண் முனிவர்கே
ட்பு வறைந்தனன், பொற்றை யேழுருவத்துளைத்திடு பொ
ருவயிற்படை முதல்வனே. (கூந)

* பின்னரந்நகர் தன்னிலேயுறு பெருமையாவும் விரித்
தரன், முன்னம் விடைகொடு குமரவேண் மிருகண்டுமுனி
முதலோரொடுஞ், செந்நெலென்றும றுதுதந்திடு செய்மி
குந் திருக்கோவலின், மன்னுமறை முறைவிதியியற்றுமக
த்தகத்தினில் வந்தனன். (கூச)

* தனது பின்வரு வாரையுங் குகமுனி யொரடேய்பவர்

---

*வண்டுதங்குளர்=குற்றம்பொருந்திய உள்ளத்தை யுடையவர்.
§அரசவனம்=இறைவாசநல்லூர்.

தம்மையு, மனைதுவழ்புட னேக்கி யீண்டுவளர்க்க வோங்கு
மகத்திடைக், குனிசிலைப்படை முடிதயங்குபுகுரகதத்தின்
மூவுலகரு, நனிவிருப்புற மதனுருக்கொடுநண்ணுவானெ
ரு நம்பியே. (கூ௫)

* அந்தநம்பியு நாரசிங்கமதானபேர்கொடு தெவ்வராஞ்,
சிந்துரங்களை வென்றனேக செழிப்புடன்றிகழ்வானெனக்
கந்தனன்புனை தந்துசென்றிடு காலயன்முத லோர்களு,
முய்ந்தனம்மினி யென்றகங்களித் தோங்குவேள்வியுமாற்றி
னார். (கூ௬)

வேறு.

குகமுனிதன் புத்திரனை யடைந்துமகிழ்ளங்கொளவுங்கொ
டிய சீற்றத், தகமருவு காரண்ட வல்லூரர் வதம்படவும
பிசாரத்து, மகமதனை யுஞற்றினார் முறைமுறையாற் பிருகு
முதன் முனிவர்மாணத், திகழ்கருணைக் குகேசுரனை முன்
னிடாக் கொண்டாங்குச் சிறப்பினன்றே. (கூ௭)

பிருகுமுத விருடியர்கள் புடைசூழ மறையினொலி
பிறங்கச்செய்யுங், கிருதுவினிற்றிருக் கோவல்வீரட்டன்
றிருவருளாற் கிளர்ந்தகாட்சிப், புனையின்மலர் மகளான
பொருட்செல்வி காமுறுதோட் பொருப்பன் முந்நீர்த்,
திரை முழுகி யெழுவதுபோ லனலெழுந்தான் குகமுனி
வன் சிறப்பவன்றே. (கூ௮)

வேறு.

அன்னவன் வைபவ—மிந்நிலத்தோர்க்கிலை
யன்ன தறிந்தவை—பன்னுது மன்னே. (கூ௯)

தாமோதரன்போற்—பூமிபுரப்பவன்
சாமவருணமோ—டோமத்தெழுந்தான். (௪00)

காமர்கொள்பைம்பரி—யாமெழு வாசியி.
னேமத்தில் வந்திடு—சாமப்புரவியான் (க0க)

வேறு.

பூமன்வந்தித—வீமன் முன்பணி
தாமவுரிநிகர்—சாமகஞ்சுகன். (க0உ)

செழித்ததருநனி—நிழற்று புரந்தரன்
முழுத்தகு விசும்—பழித்தவாளினன். (க0ங)

வேறு.

உலப்பிலாக் கணையுற்றசீர்-வலித்தூணியன் வண்மைசேர்
சலித்திடாக் கவசத்தினன்-கலித்த*காள கொக்கரையினன்.
எட்டிரண்டெனும் வயசினன்-சிட்டமார்க்கண்டன் சீர்மை
[போல்
விட்டொளிர்நவ வின்மணி-கட்டுபொற்சுடிகையினன். ()
குமரன் யௌவனங் கொண்டுளா-னமரர் துன்னரு மாண்
[மையா
னிமிரு முப்பத்திரண்டுசீர்-நிமிரிலக்கணநேர்மெய்யான்.()

வேறு.

* கவசகுண்டலந் திகழுங்காதினன்
றவசமருண் மேழிகை தரித்துளா
னவசமிலு ரத்தினு லமைந்துளான்
றுவசமீரொன்பா னுடையதேர்ன்றலான். (க0எ)

சிற்பரனடிக்கணுறு சிந்தையான்
விற்புருவ நங்கையர்கண் விந்தையான்
கற்புவட தென்கலை கதித்துளான்
பற்பல நெறியுளம் பதித்துளான். (க0அ)

---

*காயகொக்கரை=மேகம்‘போன்ற’ வில்.

கோடரசர் யர்ணையெனும் வன்குழா
மோடவட வேலொடுமுழை யூடெழுந்
தேடரிய சாமநிற மண்டுசி
ராடுமொரு சிங்கநிக ராகுவான். (க0௯)

வேறு.

கொன்றைமல் லிகைமகிழ் கோங்குசண்பக
நன்றுறுந்துள சிமந்தார நாகமோ
டொன்றியதும்பைசெங் கழுநீ ரொண்ணொச்சி
மன்றலம் வாகைபன் னிரண்டு மாலையான். (கக0)

* வெள்ளிசெம்பொன் னபரஞ்சி வின்மணி
யள்ளொளிமரகத மரத்தநீலமோ
டெள்ளில் கோமேதக மிவருமாணிக்கம்
விள்ளும் வைடூரிய மின்கொள் வச்சிரம். (ககக)

* காண்டகு புட்பராகங் கவின்கொளுஞ்
சேண்டகு நிலவிரி நித்திலஞ்செழித்
தீண்டுபன்னிரு மணிமாலை யோடெழிற்
பூண்டகு திருமரு மம்பொலிந்துளான். (கக௨)

* இயக்கொளியலர்மணித் தார்கொண்டேர்தரு
புயக்கிரி துலங்கிடப் புகன்றவண்ணந்தன்
சயத்தினை மரபருந் தரிப்பச்சாமமா
வியத்தகு புரவிமேல் விளங்கித்தோன்றினன். (ககங)

*அங்கனெழுஞ்சுதன் றனைக் கண்டந்தணர்
சங்கணை சுரத்தனோ வேள்கொல் சண்முகத்
துங்கணனோர்முகத் தடைந்தனன் கொலோ
விங்கிவன் யார்கொலென்றி தயம்பூரித்தார். (ககச)

மகத்திடை யுதித்தவம் மகனைமாண்பினு
லகத்திடை மகிழ்ந்தெழு மன்பினுங்குறுங்

துக ... வ முனிகரங் கொண்டங் குச்சிமோர்
திகற்குறங் கூடுவைத் தினிது போற்றினன். (௧௧௫)

விரிந்தமூவுலகினும் விறல்கொள் வேலிறே
யருந்திற லமைந்துளோ ரூமாதலாற்
றிருந்துகண் ணிலாதவர் திருட்டி பெற்றபோ
லிருந்துளங் குகன் மிகமகிழ்வை யீட்டினன். (௧௧௬)

* திகடிருக் கோவலூர்த் தேவன் மெய்யருண்
மிகையினிற் றெய்விக னென்னு மெய்யுரை
குகமுனி முதலிய குழாங்கள் கேட்டினி
தகமகிழ் வுறவினி னெழுந்த தன்றரோ. (௧௧௭)

சான்றநற் பிருகுவே முதலருந்தவ
ரூன்றிய குகமுனி தனையுவந்தழ
ரேன்று மிப்புத்திரன் றென்மை வண்மைக
டான்றனி புகுந்தவா றென்கொல் சாற்றென்றார். (௧௧௮)

எனவுரை ரூதன்று ளெழுந்து தாழ்ந்துநின்
றெனதுளத் தையம்போ லவர்க்கு மெய்திற்று
லனகயா னறிந்துய வறைதிநன் றெனத்
தனதனன் மகன்சொல முனிவன் சாற்றுவான். (௧௧௯)

வேறு.

* வினவினார்க்கு விளம்புங் குகமுனி
சனகனாதியர் நோற்புத் தடஞ்செறி
கனகமால்வரைக் காட்சியோ டாயதா
லுனகனன்புமிகு மிமயம்மரோ. (௧௨0)

* அம்மலைக்கிறை யானவன் முன்புநீள்
கைம்மலைத் ‡தல்லி காதலி யாய்வர

‡தல்லி=தாய்.

விம்மலைக்கொண்டு மெய்த்தவஞ் செய்துநஞ்
செம்மலைத்தனி செய்து பெற்றனன்றே. (கஉக)

* பூத பௌதிகத் திற்பொலி யண்டங்க
ளோதலின்றரு ளோனுயிர் கன்னிதன்
காதற்புத்திரியாய் வரக்கண்ணுதற்
காதரத்தின் மணஞ்செய் தளித்தனன். (கஉஉ)

* கருகு கண்டன்றன் காதலியைக்கொண்டு
மருகனாய் வந்தவண்மைம்பினனந்தம்
பெருகுவான்றனை விட்டுப்பிரிதலா
துருகுசிந்தையுடன் றவிராமலே. (கஉங)

* வண்மைசேர் கயிலாய வரைக்கணே
திண்மையோடுறை செல்வியை யுமிளிர்
வெண்மைசேர்விடை யானையுங் கண்டுகண்
டுண்மை யங்குவைத் தானுள்ளொருமித்தே. (கஉச)

* அன்னநாளினி மாசலத் தண்ணலுங்
கன்னியைக்கொழு நன்றனைக் காணுற
வுன்னிமற்றவ ருற்றகைலைபுண்
மின்னுநந்தி விடையின்றி மேவினன். (கஉரு)

* தென்றலங்கள் சிறப்பவுர் கோவலூ
ரொன்றுமற்புத மேறவுந்தியவர்
யொன்றவுநந்தியுட் புகுவானரன்
மன்றன்மாதுல னென்றெண *மாழ்கினன். (கஉசா)

* எம்பிராட்டியோ டீசனு மேகமா
யன்புகாட்டிமே வந்தப்புரத்தினி
னம்பன் மாதுல னண்ணிக்கண்டே யுளம்
வெம்பிசிறப்ப விமலனு நோக்கினன். (கஉஎ)

* மாழ்கினன்=மயங்கினன்.

* நன்றுநன்றுநீ நானில மாந்தர்போ
லென்றுங்கொண்டனை யேழைமைசேர்மதி
நின்றகாவலன் றன்னுட னோர்ந்துமே
யின்றிவண் சமயந் தெரிந்தெய்திலை. (கஉ அ

* உமையோர் பாகனிவ் வாறுரைத்துப்புவி
யமையமானுட னாகவென் றேதினு
னிமையமன்னா னிணையடி தாழ்ந்துவீழ்ந
தமையுமோவடி யேற்கென்றல முற்றான். (கஉ-கூ

வேறு.

* அண்ணலேநிற் சாணுமாசைபி டருந்துதவா
லெண்ணலேன் காவல் வலி *யீடோ நீசமயங்
கண்ணகன் ஞாலத்து நின்றுள்கண் டென்பிறப்பித்த
நண்ணுமுறை மாற்றியருணால்கென்று தோத்திரித்தான். ( )

* அன்னதுகண் டம்மை யகநெகிழ்ந்து மெம்மிறைபின்
முன்னர்வந்து தாழ்ந்து முளரிநகர் கைகுவித்தே
யென்னவியப் பெம்பெருமா னிதகாண வேபதியவன்
றன்னையுலகிற் பிறக்கச் சாற்றுகின்ற சாபமுமே. (கந க)

* பொன்மாதான் வெண்மாதான் போற்றிய நின்மலனுக்
சொன்மாண் புக்கெட்டாச் சுடரொளிநீ யானுமு
நின்மாதுலனென்றோர் பேர்கொண்ட விருநிருப
னம்மாநிலம் போய்ப்பிறப் பதழகாமோ. (கங-உ)

* முன்னேய மில்லான் முடிதடிந்தாற் போலன்றே
நின்னேயத் துற்றோ னிலத்திற் புகவுரைத்தல்
தன்னே ரில்லாத தலைவாத பியோன்மே
லென்னே நின்னேய மிருந்தவா றென்றுரைத்தாள். (கங-ங)

* என்றென் றுபன்னி யெடுத்துரைப்பத் தான்கேட்டு
நன்றென்றுந் தீதென்று மில்லான கைசெய்தே

---

* நடு=பெருமை.

யொன்றென் னூரண்டென்றி லாப்பணையே யாமுரைத்த
தென்றுந்தவி ராதினைய வினையு முண்டென்றான். (௧௩௪)

* தொல்லைவினை யெத்துணையவாறு லுநின்றுணைத்தாண்
மல்லென் மலர் கண்டோர் பின் வந்து தொடர்ந்திடுமோ
வல்லமர்கண்டா னீயறைசாப மன்னிக்குஞ்
சொல்லருள வேறொருவ ருண்டோவெனாத்தொழுதாள.()

⁂ இமையான் வெருளோ டிசைத்தமொழியும் புனாயி
லுமையாள் பணிந்தே யுரைத்தமொழியுங் கேட்டுச்
சமயாதி தங்கடந்தான் சாந்தமுடன் புன்முறுவ
லமையாமின் றேபார்த் தறைவான் றயைகொண்டே. ௧௩௫

⁂ சொன்னவுரை மாறாது தோகையே யின்றேனுங்
கன்னியரீக ளுந்திக் கருக்கொண்டு வீராது
வன்னியிடைத் தோன்றி யகிமையள வில்லகொண்டு
சின்முட்சறித் திங்ஙன் சேர்வாளென்றே யுரைத்தான். ()

* இவ்வா றிறைசொல்லக் கேட்டவிமை யத்தரசன்
செவ்வாய் புதைத்தேமுன் னின்று தேம் பித்தேம்பி
யெவ்வா றிவணிருந்து பாரெய்தி மூவகையாந்
தெவ்வாற்கெடாது திருவருளைச் சேர்வனென்றான். (௧௩௮)

⁂ மன்னுநீயஞ்சற்க மாமகிமைப் பெண்ணைசூழ்
நன்றுடாஞ் செய்யதிருக் கோவலூர் நம்மருண்மிக்
கெந்நாளு மேவுமதி லெய்திக் குகமுனிவன்
றன்னு லியற்றுந் தழலிற் பிறப்பாயே. (௧௩௯)

* அக்கணத்தி லுன்னைமம் யாமருளித் தீவினையிற்
புக்குவருந்தா தருள்வோம் போகம்பல துய்த்து
மிக்கபுகழ் கொண்டிங்ஙன் மேவுவா யென்றுரைத்தான்
முக்கோலமான முடிவின் முழுச்சோதி. (௧௪௦)

புற்கூட நீங்கப் பொருந்தாக் கைலையைவிட்
டெற்கூடறுத்தேக வெய்திற்றே யென்றுவரை
விற்கூடங் கையானை மீட்டுமீட்டும் பணிந்தே
தெற்கூடடைந்தான் றிகம்பரியை யின்றேனே. (கசக)

* அந்தவிமயத் தரசனுகு மிவளுமென்றே
விந்தையுடன் குகமாமுனிவன் விளம்பக்கேட்டே
சிந்தைகளித் தேமுனிவர் தெய்விகளைத்தழுவி
யந்தகனை வாட்டுமிறை யன்புன்னியாசரித்தார். (கசஉ)

வேறு.

*வேதி முற்றுற மேவிய மெய்ப்பிரு
காதி மாதவர் யாரும் வீரட்டன் சீர்ப்
பாத மேத்திப் பரவியருள் பெற்று
யாதரத் தொட வணவணேகினார். (கசங)

* கவி குலத்துக் குகமுனி காதலோ
டவி ரழற் படி மண்ணலைக் கோவலிற்
* சவி யுறப் புரந்தங் கட்டரித் திட்டா
னவிகொள் வீரட்டத்தை யணைவந் தித்தே. (கசச)

* வேத மாதி விளங்கு பல் விஞ்சைகண்
மாதவன் சொலமைந் தனுட் கொண்டனன்
யாதுமோர் குறையின்றியும் யாறுகொள்
ளோத வாரிதித் தன்மையை யொப்பவே. (கசரு)

வேறு.

ஆண்மையு மாடலு மழகு மாய்ந்தவர்
கேண்மையும் வாய்மையுங் கீர்த்தியும் புகழ்
சேண்மை யினேனைய குணங்களுஞ் செறிந்
தேண்மையின் வேளென நனியிலங்கினான். (கசசா)

---

* சவி=செவ்வை.

இத்திறமியல் பீசும் புரவி யேறியே
யெத்தகை யுலகினுங் கணத்தி னெய்திவந்
தத்தனற் பரசிவ னடிவணங்கிப் பல்
வித்தகக் குமரரோ டினிது மேவினான். (௧௪௭)

**வேறு.**

* சூதனிவ்வணந் தெய்விக னுற்பவஞ் சொற்ற
போதவன் பதப்போதினை முடிக்கொடு புகல்வா
யோதவன் புவிகொண்டதை யெனநிதிக் கொருவன்
காதலன் செவிக்கமுதென முனிவனுங் கழறும். (௧௪௮)

தெய்வீகராஜன் உற்பவச்சருக்கம்

முற்றிற்று.

---

ஆகூ ௫௱௧.

உ

சிவமயம்.

# தெய்வீகராஜன் நாடுகொண்ட சருக்கம்.

* குகமுனி தெய்வீகனெனும் பசும்புரவி வலியுலகோர்
குறித்துக் காண்டபா, னகமதி லொன்றுன்னி மகன்றனைத்
தழுவி மடிமிசை வைத்தறையா நின்று, னிகலுமுடையர்க்
கிடியேறே யிறைஞ்சுபவர் தஞ்சிரோ யென்னவாவே, புகழ்
சுதனே மறைமுறையின் முதலான பணியொன்று புகல்
வன் கேண்மோ. (க)

* ஓர்தின்த்திங் கனுஞ்ஞை கொடுகாசிந்தி தோய்ந்தறல்
கொண்டொப்பில் சேது, மாதொருபா கனுக்காட்டி மான்
முதலோர் வணங்குதில்லை மன்றிற்சென்று, போதவிர்குஞ்
சிதபாதந் தரிசித்து விதிமுறையிற் புரிந்தோர் முன்செ,
யேதமெலாந்தவிர்ந்துல காண்டானடிநீழலிலென்று மிருப்
பர்மன்னோ. (உ)

* இந்தமுதல் விழுப்பணியைச் செய்துபயன் பெற்றார்க
ளில்லை நீயு, மிந்திவர் செஞ்சடை வீரட்டேசனுயர் திரு
வருளா லெய்து வாயென், றந்தணன் கூறக்கேட்ட தெய்
வீகனவ்வகை செய்தடைவே னென்று, னந்தகனைப் புறங்
கண்டோ னருள்கொண்டோர்க் கிதியற்ற லரியதாமோ. ( )

* அத்தனிடம் விதிதேர்ந்து மற்றைநாட் காலையெழுந்தணி
வீரட்டச், சித்துருவாஞ் சிவனடியைப் பரவி வன
னுஞ்ஞைகொடு தேசியூர்ந்து, கொத்தலர் பூம்பொழிற்
காசிப்பதியடைந்து கங்கைநீர் குடைந்து முக்கண், வித்தக
மார் விசுவேசற்றொழுது கங்கைகொடுதுரங்கமீதினேறி.()

* இரவிகுலாதிபன்கண்ட சேதுதனுக்கோடிமுத லிசைநீ
ராடிப், பரசிவன்றன் றிருமுடியிற் பண்டாட்டுந் தாசரதி

பண்பின் மேவா, விரவவபி டேகித்துக் கந்தனைவேத் திய
மாதி விழைந்தீந் தன்பிற், பரவிநனி வணங்கிவிடை
கொண்டுமெண்டு வேகமிகு பரியினேறி. (௫)

* அந்தமிலா முத்திதனை யுதித்திடினு மரித்திடினு மாண்டே
யெய்திச், சிந்தைமகிழ் வுடன்றரிசித் திடினுநனி யளிக்கு
மெழிற் றில்லை மன்றிற், சந்ததமு நடம்புயிலு மிந்துவளர்
சடைமுடியா னடியைச் சார்ந்து, வந்துதரி சித்திடவே
யுன்னியவ னெழுந்தைந்து மனத்தழுந்தி. (௬)

* மனவேகத் தினிலடைந்து பரியிழிந்து கோபுரத்தை
வணங்கி வாழ்த்திக், கனிவினொடு புரம்புகுந்து பானுரு
வாஞ் சிவகங்கைக் கமலமூழ்கி, முனிவிலாப் பொரு
ளொன்றுன் றோருநாமக்கு நீற்றினையு மோக நீக்குந், தனி
வலியையுறு ‡மக்க மாலையையுந் தரித்து யர்சிற் சபை
யைச் சார்ந்தே. (௭)

* ஒருகோடி பருதிகடா மொருங்குதிரண் டாலன்ன
வொளியு மோரும், பெருகார்வத் தடியர்தமை யென்று
வந்தி னுங்குறிப்பிற் பேணுகின்ற, முருகாரு நகை
யரும்பு திருமுகமு நேத்திரமோர் மூன்றுமோத, மருகாத
சரநதிநன் மதியிதழி யணிந்துபின்றாழ்ந் தசை § வேணி
யும். (௮)

* †கோடுதோ டார்ந்தவல விடச்செவியுங் கொண்டணிகர்
நீடறுமை கொற்றத், தோடளிக்குந் துடிக்கரமு மோங்கு
திதி செய்யபயமுந் துன்பமோவப், பாடுசெய்தீ யகறிருந்து
திருக்கரமும் வீசுதிருக் கரமும் பாசம், வீடுறுவார் தமைப்
புரக்கு மெய்ஞ்ஞான நூலினிது விளங்கு மார்பும். (௯)

* வேங்கையத ளுடுத்ததன்மேற் கச்சணிந்து நெறிப்புடைத்
தாய் விளங்கித்தோன்று, மோங்குதிரு வரையுமுய ருருவு

---

* கமலம்=சலம். ‡ அக்கமாலை=உருத்திராக்ஷமாலை.
§ வேணி=சடை. † கோடு=சங்கக்குண்டலம்.

மம் முயலகன்மே லூன்று தாளுங், தேங்கிநின்ற ஞானியர்பா லுளவருளான் மந்திரமாஞ் சிலம் பணிந்து, தாங்கவெடுத் தருளியவோர் திருவடியுஞ் சிற்சபையிற் சாலவோங்க. (க0)

* சிவப்பிரா ஞானந்தத் திருநிருத்தம் புரிவதனைத் தெரிசித்தான்ற, வவமிலா வின்பசா கரத்தமிழ்நதி யுயிர்ப்பிலாதயர்ந்த முன்னைத், தவமதா னெஞ்சமெரி யிடைப்பட்டவெண்ணெயென வுருகத்தாவில், §புவனமாழ் மதகினின்றுபுறப்படல்போ னேத்திரநீர் பொழிய நின்றே. (கக)

*சீராரு முலகதனை மாயையினின் றுதிப்பித்துத்திதிப்பித்தங்க, ணோரார வொடுக்குவித்து மறைப்பித்துப் பின்னருளை யியற்று வித்துப், பேராரும் பஞ்சகிருத் தியநிருத்தம் புரிந்தடியேம் பிழைக்கும் வண்ணங், காராரும் பொழிற்றில்லைச் சிற்சபைநின் றருள்கருணைக் கடலே போற்றி.

* கடல்கடைந்த் விண்டுமுண்ட காசனனிந் திரன்முதபேரர் கடுவைக் கண்டாங், கடல்புரியு மாற்றலின்றிக் கைலாச வேதண்ட மடைந்து நின்றுள், விடலரிய புகலென்றுமிகவேண்டிக் கோடலுமவ் விடத்தை யுண்டு, நடலைபெரிதோட்டியிட மிடறதனி னடக்கிநடி நாத போற்றி. (கங)

* பெருமைபெறு சாந்தோக்கி யம்பிருக தாரணியம் பெரியோர் பேணு, மருமையுறு கைவல்லி யம்முதலாஞ் சுருதிமுடி வநேகஞ் சித்த, வொருமையுறத் தகரமென்னுங் குகைநடுவுட் டியானிக்க வோதுந் தேவு, மிருமையறச் செயுநாமே யென்றுணர்த்தி நடமிடுநல் லீச போற்றி. (கச)

* துயக்கமதி லின்பையறு பவித்தாலு நிரயமதிற் றுன்பையென்று, மிறக்கவறு பவித்தாலு மிச்சகத்தி லின்பத்துன்பெய்தி னுலுஞ், சிறக்கவிது வதுதரித்த செல்வா†வை வச்

---

§ புவனம்=சலம். † வைவச்சுவதன்=யமன்.

சுவதற் செற்ற நின்றான், மறக்கொணா வரமருள்க விஃ
தொன்றே யான்வேண்டும் வரநின் பாலே. (௧௫)

* என்றின்ன வீறுதுதி யியற்றியர னருளுறீஇ யிறைஞ்சிக் கோவல், சென்றின்ன மீர்த்தவீ ரட்டேசன் றிருவடிக டொழுதிற் சென்று, மன்றினட மனத்துன்னி நண்பகலிற் பாயசத்தை மகிழ்வி னுண்டு, குன்றரச னென்றுமிவ்வா றியற்றினா லவன்பெருமை கூறற் பாற்றோ. (௧௬)

* தசும்பனலில் வருந்தெய்வீ கத்தண்ணன் மனமூக்கந் தவி ராவண்ணம், பசும்புரவி மீதிவர்ந்து மின்னலென வருந் தகைமை பார்த்தோ ரன்றே, னிசம்பாவு மனத்தினுக்கு நேரிலா விவ்வேக நிகராதாயின், விசும்பிரவி புரவிமருத் தின்வேக நிகரென்றல் 'வெறும்பொய் யென்பார். (௧௭)

* உலகினர் தெய்வீகனையு மவனூரும் பரியினையு முவந்து கூறு, மலகின் மொழியாத்தி நிம்பந்தா, லத்தாரவர்கள் கேட்டாசை மீக்கொண், டிலகு பசும்புரவியைத் தஞ்செ ருக்காற் கொண்டுறும் படிக்கே யவமைச்சர், விலகில் வலிப் புயத்தண்ணல் பாற்கோவ லடைந்துபரி விரும்பிக் கேட்டார். (௧௮)

* மன்னவர்மூ வருமனுப்பு *மமாத்தியர்க டனித்தனிவாம் பரியைக் கேட்ட, வன்னபோ தனலுதித்தோன் புன்னகை யுற் றியானங்க மடையே னென்றுந், தன்னிகராந் திருநாடு மீதலாந்தனூராங்கந்தாஞ் சார்ந்தோ மென்று, முன்னியாங் கரத்தாற் பரிகொளவோ விடுத்தனனொன் றுரைத்துப் பின்னும். (௧௯)

## வேறு.

* வடவரைமீது தம்பெயர்பொறித்து மாசறுநிதிபல வீட டிப், புடவியாண்டவரும் வலியுளானொ ருவன் பொருந்து

* அமாத்தியர்=மந்திரிகள்.

முன் யாவையும் விடுத்தே, யடவிசென் றுய்வு மரியதாந்
தகைமை யரசர்கள் மறப்பினுங் கலையினூ, றிடம்விடா
நீவிர் நனிகழறிடாது செபபுவாரென்றெனச் செயிர்த்தே ()

* வலத்தினிற் பெரியானெனிலெமைச் செயித்து மாவினைக்
கொளலன்றிலேவறெந், நலத்தினுங் கொடேமென றுரைத்
திடுமங் கணரபதி கட்கென வுரைத்தான், குலத்துய
ரண்டக் குவைகண்முன் படைத்தகுமரவே ளன்னையைப
பெற்ற, புலத்தனித்துகின வளாதணநதிம்பர்ப் புரர்ந்தகன்
விதிப்படி போந்தோன். (உக)

* அறநெறிகோடாத் தெய்விகளிவ்வா றறைந்திடக்கேட
டனு மமைச்சர், புறநெறித்தந்த மரசர்பானுரைபபப் பொ
ருக்கெனவுருந்தன ரொருங்கே, யிறைவர்மூவர்களுங் குழு
மிவெல்ருட்சி யெண்ணி யீரிருபடை திரட்டி, நிறைகட
னடுவண் வடவனலூழி நிமிர்ந்தவாறென நெறிக்கொண்
டார். (உஉ)

* வல்லையில்யாமக் கடலதிர்ந்தெழுந்து வருதல்போலணியுட
ன் மன்னர், தில்லையிலடைந்து தினமுநண்பகலிற் றரிசன
ஞ்செய்யுந தைவிகன், றொல்லைநாள்வினைபோற் சூழ்ந்த
னர்நின்றார் தோன்றல்வந்தவ்வயி னிறுத்தா, னெல்லையில்
புகழ்சோ மூவரும் பொறையி னெந்தலை நோக்கியி
சைப்பார். (உங)

* உருக்கிளர்மதனும் வெருக்கொணலுருவோ யுனக்கு
வேண்டிய செழுநாடுந், திருக்கிளாநிதியு மூரந்தமூடண்
மூஞ் சேனையின்றிரள்களுந் தருவாங், கருக்கிளர்முகிலை
நிகர்த்தவிப்பரியைக் கனன்றிடா தெங்களுக்களித்து, மரு
க்கிளரலங்கன் மணிமுடிதரித்திவ் வசுந்தரை புரந்திடு
வாயால். (உச)

* என்றுமூவேந்த ரிசைத்திடுமுன்ன ரிருதயங்கருகி வெய்
துயிர்த்துத், துன்றுநோக்கெரியிற் சிவந்தருத்திறையீர்

*சூழ்சியின் றுணைவர்பாற்சொற்ற, தன்றெனலுண்டோ வலி
யுளீராயி னமர்செய்திம்மாக் கொண்மினென்றான், மன்ற
லம்மலர்கண் மணிமுதலீரா றலங்கலுழ் மார்புடைவள்ளல்.

*கேட்டனுமிவனோர்துணையிலாச சிறுவன் கேடிலேங் கிள
ததிய கொள்ளா, கிட்டமும் வலியுமுடையம்யாம் கெடுரு
மை யிசைத்தன னென்னவே யுன்னி, காட்டமில் பொன்
னிபொருணை வைகைகளா மாநதித்தலைவர் தெய்வீக, கோ
டட்மி லுனதுவன்மைமை யமரிற் குறித்தறிகுதுமெனக்
கொதித்தார். (உ௬)

வேறு.

*மன்னர்தஞ்சேனை மலிந்த சேனைகள் வளைந்து தெய்வீகனை
மலையவே, புன்னியமாமுர சறைந்துபல்படை யுடன்+றுணங்
கறலெவ் லுதயமினார், துன்னுமாறெறி படர்க்கவெள்ளிகுல
தொன்றுமேலுமொரு தொடையினார், சின்னபின்னமொ
டுசிந்தொளிந்தனர்கள் போனதூற தெரியாமலே. (உ௭)

*தங்கள்சேனைபுற கிடுதலகண்டரசர் தமனியத்திகிரி யூர்ந
துளம, பொங்குகோபமுட னங்கிவந்தவனை நோக்கிவெய்ய
வுனா புகலுவா, ரங்குமுள்ளமத னென்னவந்துநல லனங்
கனுமமதை யடைவதை, யிங்குவல்லை யறிவாயெனசசிலை
யெடுத்துவெங்கணை தொடுத்தனர். (உஅ)

*எடுத்துவெங்கணை தொடுக்குமுன்னருய ரிவுளிமேலிவரு
திருபனும், தொடுத்துறுங்கள்வலி கிடமொன்றினனி காண்ப
லென்றுபல கணைகளைத், தொடுத்துவாசிகொடி சூதனோ
டிரத முந்தொலைந்திட வுஞற்றினன், விடுத்துவையமதை
வையமீதுவினைவிற் குதித்தனர்கள் வேந்தரோ. (உ௯)

*குதித்தமன்னவர்க ளிவனைமல்லமர் குறித்துவென்றிகொள
லன்றியே, விதிக்கும்வெல்லலரி தாகும்வில்லமரி லென்று

---

* சூழ்ச்சியின்துணைவர்=மந்திரிகள். + துணங்கறல்=இருள்

ளங்கருதி விள்ளுமுன், மதித்தயிர்ந்திடு தெய்வீகனும் பரியி
ழிந்துநுங்கண் மனதின்படி, கதித்தபோர்புரிய வம்மினெ
ன்றொருநகை கட்டிவாகுமிசை கொட்டினான். (௫௰)

* பொன்னிநாடனும் வெகுண்டுமல்லமர் பொருந்துமாறெ
திர் பொருந்தவும், வன்னிதன்னில்வரு வானுமொய்யமர்
மடங்கலிற்செய யரீஇயினான், சென்னிவாகுமுத லாயவங்க
மவை மோதி*யத்தமவை சேரவே, பின்னியாதுமுண ராது
சாரிகை சுழன்றுவாகைபல பேசியே. (௫௧)

*ஒருவருக்கொருவர் பலவிதத்தும லுடற்றுபோதபயனுள
ளமெய், வெருவுறத்தகமை கண்டகேரளனும் மெலிவில
+ சென்னியை விலக்கியே, கருவருத்தமடை யாதகாலை
யொடு காணுமல்லமர் கலந்தனன், இருவருக்குமுள வலி
யுரப்பினர்க ளிபமிரண்டுமெலி யற்றல்போல். (௫௨)

*பூழியன்சிறிது நேரமல்லமர் புரிந்துவெந்நிடவு மினவன்
பாழியம்புயமலங்கநக்குழைவயிற் றைவீகனெதிர் பாய்ந்த
னன், ஏழிரண்டுலகொ டெண்டிசாமுக நடுங்கவிந்திரனை
யரிதியோ, ரூழிகொல்லென வயிர்ப்பவெம்மையி னுடற்றி
னார்சம ரொருங்கரோ. (௫௩)

*அங்கயற்கணமையருள்வலிக் கொடுபினனடைவுறுதிகல் செ-
ய்தானலாற், சிங்கவேறனைய தெய்விகத்தலைவனைச் செயிக்
கும்வகை தேர்கிலான், றுங்கநிம்பமலரணிகுவான்பினொரு
சூட்சியுள்ளமதி லுன்னினா, னிங்கிவன்றனொடு பொருது
நாமுமவர் போலிருந்திடுத லெய்தினே. (௫௪)

**வேறு.**

*கொழித்தமூன் றெழினாடு மிவன்கொள்ளு நம்பெருநை
குலையும்பாரிற், பழித்தல்வாரா நிற்குமெனத்தெய்வீகனை
விளித்துப்பகர்வான் முன்னாட், செழித்தகனகனை வென்ற

* அத்தம்=கை. + சென்னி=சோழன்

சிங்கமெனப் புகழ்ந்துமத்திறலோய் நீமல், லொழித்திடுதி
யென வேண்டிநின்றானம்பிகை யுயிர்த்தவுயர்குலத்தோன்.

*அந்தவுரை கேட்டலுந் தென்கால்கண்ட புணரியைப்போ
லார்ந்து வேள்வி, வந்தவனும் புன்னகையோ டொழிந்து
நின்று னதுகண்டமன்னர் மூவர், சந்தணியும் புயதோ
யுன் சரவலியுந் தோள்வலியுஞ் சார்ந்தறிந்தாம், நந்தலிலா
வுனக்கென்று நரசிங்கப் பேர்வழங்க வென நவின்றார். ()

முன்பிறப்பிலா நிலையுங்குகமுனி யாகத்தெழுந்த நிலையு
முத்த, மின்பிறப்பிலா நிலையுந் திருக்கோவற் பதிநிலவும்
வீரட்டேச, னன்பிறப்பிலாநிலையுமடலெழிற்பைம்பரிநிலை
மரியுமேத்து, மூன்பிறப்பிலா நிலையுமிவ்வுலகத் தெய்
போல் வாருனைக்கற் பாற்றோ. (கஎ)

* என்றுமூ வேந்தர்களு மேனையரு மவன்றிறலை யெண்ணி
யேத்திப், பொன்றலிலா முகமனுரை புகன்றழைத்துக்
கொடுபோந்து பொருவின்ஞான, மன்றதனினடித்தபிரான்
றிருமுன்னோர்+ மந்திரத்தில் வனைந்த *மாழை, மின்றவிசி
னிடைச்செயித்த மீளிதனை யிருத்திமன்னர் விளம்பாநின்
றார் (கஅ)

*பைங்குரக தத்திவர்ந்து நிமிடம்வலம்வரும்புவியைப்பரித்
தெஞ்ஞான்றுஞ, சங்கநிதியாதியுற வாழ்ந்திடுக விரு
வகைவெஞ் சமரின்மன்னு,! மெங்கண்முடி யளித்தருளுந்
தெய்வீகவென்ற வன்றனெழின் முடிக்குத், தங்கண்முடி
யொளிருமணி முடியெடுத்துத் தனித்தனியே தரித்து
வந்தார். (ககூ)

மூவேந்தர் தரித்தமணி ✕ முகுடமூன் றுடனியல்பா முகு
டமொன்றுங், காவேந்தன் வியந்துரைக்குந் தெய்வீகன்
றிரு முடியிற் கவினக்கண்ட, பாவேந்தர் கோவேந்தர்

---

+ மந்திரம் = கோவில். *மாழை=பொன். ✕ முகுடம்=கிரீடம்

பண்ணவர் பாற்கடலினிடைப் படுத்தோனுங்கிப், பூவேந்த னுன்குமுடி யிவனுன்கு மாமுடியைப் பொருமோவென் ருர். (சo)

*குமரன்வேல் காட்டிடத்துக்குகமுனியாகத் தனலங்குரித் தலாலத், திமிரவுருவந்தகனைவெல்வீரட்டேசனருள் சேர்த லாலோங், கமரர்வியப் புறுவலிசேர் மூவேந்தர் தத்தமுய ரடலாலாற்றுஞ், சமரில்வென்றி பெறலாலீங்கிவற்கு நர சிங்கப்பேர் தகுமென்முர்கள். (சக)

* இவ்வண்ணம் பல்லோரும் வியந்துரைப்பத் தெய்வீக னிறை வீரட்டச், செவ்வண்ண திருவருளீ தென்றெழுந்து சபேசனடி சென்று தாழ்ந்து, மூவ்வண்ணல் களும்பிறரு மிமையவரி னிற்கவவண் முடிவில் வேக, மைவண்ணப பரியேறி வலம்வந்தா னொரு /விருத்த மயில்வேலோன் போல். (சஉ)

* நல்லதிரு வாத்துறையோர் வதிட்டகுடி வெள்ளாறு நவில் தெற் காகக், கொல்லிமலை குடக்காகக் கடியாறு வடக்கா கக் குணதிக் காகச், சொல்லுநட லிவ்விருத்தங் கணத்தி னிரு புரின்காதஞ் சூழ்ந்துவந்தா, *னல்லுறமூங் கிரீவ னருண் மருவிடினித் தரணிதனி னரிதொன் றுண்டோ ()

* கூறுமூ வேந்தர்நிற்கு மிடமடைந்தங் கவர்களொடுங் கோவலூர்க்கு, வீறுநாலங்கங்கடனைச்சூழப் புறப்பட்டான் விரவா ரோத்தத், தேறுமீ துயர்ஞான திருட்டியின்ற் குக முனியுந் தெரிந்தான் கோவ, லீறிலா வீரட்டத் தெம்மடிக டிருவருளை யெண்ணி யேத்தி. (சச)

* தென்ன கேரளசோழ ரெனுமூவர் சூழவுயர் தில்லைநீங்கி, யுன்னுபே ரிகைமுதலைங் கருவிகளி னோசைதிசை யுறவே சென்று, மின்னுசிவ புரத்தடைந்தெம்வீரட்டன்+சினகரத்

/ விருத்தம்=வட்டம். * அல்லுறழுங் கிரீவன்=சிவபிரான். [ கிரீவம், கழுத்து. ] + சினகரம்=கோயில்.

தை வியந்து தாழ்ந்து, தன்னிகரில் குகமுனிவன் றாளி
ணையை வேந்தரொடுந் தகையாற் போற்றி. (௪௬)

* எம்பிரா னாலயத்துட் புக்குவிதி முறையிறைஞ்சி
யிமையோரொத்து, கும்பமுனி யன்னகுக முனியைநடு வு
யர்தவிசிற் குறித்திருத்தி, நிம்பமார் போந்தின்றார் நிருப
ரொடு பன்னிருதார் நிருபராங்குச், செம்பொனா னியன்ற
வரி யணைமீது வீற்றிருந்தான் றேவர் போற்ற. (௪௭)

* கிரீட்ட சதுர்முடிசே ரொருமுடியுஞ் செம்முகமுந் திக
ழ்முந்நான்கு, தாரிட்ட மணிமார்ப முதலுறுப்பு மொவ்
வொன்றாய்த் தமிழ்மூ வேந்தர், நேரிட்டுப் பார்த்தெழிலி
னிலைகாணா துவப்புவரி நிலையுங் காணா, தேரிட்ட கனதன
நம் மின்னார்க்கே நிலைக்குமென வெண்ணங் கொண்டார். ()

* கொண்டகுறிப் பினையகத்திற் குகமுனிவ னறிந்துமகிழ்
கூர்ந்து நோக்கி, விண்டலத்தோர் விளம்புபுகழ் மூவேந்தர்
காளிந்த விடலைக் கன்பாய், மண்டலத்தை மும்முடியை
நரசிங்கப் பெயரையருள் வகைபோன் மூன்றாட், கொண்
டதவச் சிறுமியரை விதிமுறையின் மணம்புரிந்துகொடுப்
பீ ரென்றான். (௪௮)

* அம்மொழிகேட் டடல்வேந்த ரகமகிழ்வுற் றருந்தவத்
தோ யகிலமீன்ற, செம்மொழிசேர் பெரியநா யகிபாக
னருடானை சேர்க்கு மன்றி, நம்மொழியாற் பயனென்னை
யாயினுநாங் குறித்தபடி நம்மூர் நண்ணி, வெம்மொழிய
சிறுமியரை வேந்தனுக்கு வதுவைசெய்க விதியினென்றார்

* பரியேறி வலம்வருமிந் நாட்டைநடு நாடென்று பகர
மண்ணோர், கரியேறு மரியைநிகர் தெய்வீக புரத்தியெனக்
கழறி வில்லாக், கிரியேறு கரத்தண்ண றொடொழுது வேந்த
ரவர் கிளர்ந் துயர்ந்த, வரியேறித் தத்தநகர் புகுந்தாரன்
னவனடுநா டாண்டிருந்தான். (௫௦)

வேறு.

* எனவுரைத்திடென்றுதனிணையடி
த்னதனற்சுதன்றாழ்ந்துதெய்வீகனும்
வனிதைமாமணந்ததுமோதெனக்
கனிவினோடுமுனிவன்கழறுமால். (௫௧)

தெய்வீகராஜன் நாடுகொண்டசருக்கம்
முற்றிற்று.
ஆ. சகஉ.

உ
சிவமயம்.

# தெய்வீகராஜன் றிருமணச்சருக்கம்.

க-வது-பதுமாவதி மணம்.

*அரசர்மூ வருமளித்த நடுநாட்டிற்றெய்வீகனனைவருக்கு, முரசறைவித் திறைகொடுத்தோர் தோத்திரிப்ப +, முதத் திறனோடு மோங்குகோவற், பிரசமலர் வேணியன் †கைங் கரியமதை யியற்றுவித்துப் பெட்பினோடுஞ், சுரசமுகம் வியக்கு*மாமரசியலையடைந்தரவோர்துதிக்க வாழ்ந்தான்.

* எண்டிசையும் புகழ்ந்தேத்தத் திருக்கோவ விறையருளா லிவனீண்டெய்த, மண்டுமலைக் கிறைவனங்கட் கனிகர்பாற் றைவிகற்கும் வரத்தாற் பெற்ற, வொண்டொடிபத் மாவதி க்குமணஞ்செயுநாட் குறித்துவப்பி னோலைதீட்டித், தெண் டிரைசூ ழுலகனைத்துந் தூதுவர்பா லனுப்பிநனி தெரி வித்திட்டான். (உ)

* தன்னகரை யலங்கரிக்கப் பறையறைவித் தமைச்சர் தமைத் தானேசூழப், பொன்னகரைப் புறங்காணுங் கோவ லூர்தனக்கேகிப் புரையில்சிங்க, மன்னவனை மணக்கோலம்

+ முதம்=சந்தோஷம். † கைங்கரியம்=தொண்டு.
* அரசியல்ஆறு=படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண், என்பன.

புரிவித்துக் கௌகமுனியை மற்றுளோரை, யிந்நகர்க்கு முறையினொடு கொடுவருக வெனப்போக்க வேவினரோ .(௩)

* அண்ணன்மக் டனக்குமண மென்றுபறை யறைந்திடு மவ் வமலைகேட்டோர, ரெண்ணரிய களிப்புடனே யந்நகர் பொன் னகர்நாணு மெழிலைக்காட்டச், சுண்ணமிளிர் சாந்தான்மா ளிகைபுதுக்கி யோவியங்க லங்கத்தீட்டி; விண்ணவர்நா டரிஞ்சுகின்ற கொடிகடமை யேற்றரசர் வியக்க வீக்கி. (௪)

* தோரணமெங் கணுநாட்டி விசித்திரகோ லங்கள்பல துலங்கத்திட்டிப், பூரணகும் பங்கணிறைத் தெழிற்பசிய காரகின் புகைவிடுத்தங், கோரணிபல் விதங்களினு *லொப்பனைசெய் தொப்பனையி லெழிலந்நாட்டோர், சீரணிகட் கழகிட்டுக் களிப்புவரி னெருமுங்கிவனை தெரியாநின்றார்.

* கொங்கன்றன் வளமாடத் தணிக்கணிகள் குயிற்றுவித்துக் † குணிக்கைநார, சிங்கள்ற னெழிற்கேற்ற திருமணமண் டபமமைப்பித் தெய்துவோர்க, டங்கண்மனத் துவப்பவறு ரசநான்கு வகையுண்டி தரச்செய்வித்துப், பங்கயம் பைம் பரியோனைப் பார்த்தலிற்றை விகன்வரவு பார்த்திருந்தான். (௫)

வேறு.

* வென்றிமாறனு மிக்கவிற் சோழனு
நன்றிமிக்கபன் னுனில வேந்தரு
மன்றலார்ந்த பங்கண்டம் மாநகர்க்
கன்றுதத்த நகளைவிட் டண்ணினர். (௬)

வண்மைசேர்திருக் கோவற்கு மந்திர
ரொண்மையோ டெய்திக் கேரளனேவலு
முண்மை சேர்குக மாமுனிக்குய்த்தன
ரொண்மை சேருமம் மாமணவோலையே. (௭)

* ஒப்பனை = அலங்காரம் † குணிக்கை = வில்லையுடைய காம்.

* கண்டமாமுனி வீரட்டக் கண்ணுத
லெண்டரும்மரு ளென்றுளத் தெண்ணினன்
வண்டுகிண்டுறு பன்னிரு மாலையான்
கொண்ட னோன்பெனக் கூறுபகோவலார். (௯)

* எண்ணருங் களிப்போடங் ககமொழி
னண்ணவாற்றி நளிர்முலை யாரொடுஞ்
சுண்ணஞ்சாந்த நறுமலர் தூவியே
யண்ணன் முன்றிற்குழுமின ராடவர். (௧0)

* ஒப்பிலாத தெய்வீகனும் பெண்ணை தோய்ந்
தப்புலாஞ்சடை யண்ணலை வந்தித்தே
தப்பிலாவிடை கொண்டரண் சார்ந்தன
னிப்புவிக்க ணிமையவர் போற்றவே. (௧௧)

* ஈறிலாதமுநிவர்க ளேந்தல் பான்
மாறிலாதமர் மன்னவர் கோவலின்
வீறியன்புடன் மேவின ரன்னவர்
தேறலுண்டி தெவிட்ட வுண்டாரரோ. (௧௨)

* வேந்தர் மைந்தரும் வேதியர்மைந்தரும்
வாய்ந்தீடுஞ்சீர் மணத்தணி செய்திட
வாய்ந்தபேரழ கோடு மகிழ்ந்தன
னேந்துநான்கு முடியுடை யேந்தலே. (௧௩)

* வாரியேழு மதங்கொளெண் மாக்களும்
மாரியேழு மருவி யொலித்தென
மூரி வாயிலினின்று முழங்கின
பேரிகைதுடி யாதிய +பேரியே. (௧௪)

* மங்கலத் துரைமாதர் சொலச்சுர
ரெங்களின் னு[illegible]வாயென வேத்திட
வங்கணற்றவ ராசி சொலநர
சிங்கன் றெய்வதத்தேசியி னேறினன். (௧௫)

+ பேரி=வாத்தியப்பொது.

* அவரவர்க் இயல்பாய நல்லூர்தியி
னிவர மெய்த்திருக் கோவலிகந்தவன்
கவர்தல் கொள்ளுளச் சேரன்கடி நகர்க்
கெவரு மேமத்தொ டண்ட வழிக்கொண்டான். (௧௬)

* அஞ்சி லோதியுமாட வரும்புல
னஞ்சி லோதியறிந்த வரும்புயம்
வஞ்சி வேய்ந்தவருங்கு ழீஇயண்மினர்
வஞ்சி வேந்தன் வளநகர்ப் பாங்கரின். (௧௭)

வேறு.

கோளனு ழையரால் வரவுகேட் டுயர்
பாரின் மெய்மறந்திடுங் களிப்பிற் பார்த்திப
ராரொடு மூரொடு மளப் பிலங்கலை
மாரொடு மெதிர்சென்று மன்னைக்கண்டனன். (௧௮)

மன்றலமு பன்னிரு மாலைமார்பினன்
வென்றியை யெழிலினை மிகவுங்கேட்டுளா
ரன்றவற் காண்டனு மரிவைசெய்த நோன்
பென்றுமே லென்றுளத் தெண்ணி யேத்தினர். (௧௯)

விற்றொழின் முதலிய விளங்கத் தேர்ந்துள
தொற்ற நற்றைவிகக் குமரற்கன்பினு
லற்றமின்முக மனுங்கறைந்து கொண்டு புக்
குற்றனன் மலையன் மாதவர்களோடரண். (௨௦)

மடங்கலந் தவிசின் மேலிருத்தி மாதர்கண்
மிடைந்து வெண்கவரிகா லசைப்ப மேயபின்
னிடும்பை தீர்த்திடுமுப் பத்திரண் டிலக்கண
மடந்தையைப் பாங்கரோ விதியின் வைத்தரோ. (௨௧)

ஓனலராங் கரியையாழிக்குஞ் சிங்கநேர்
மன்னவன்றன் மகள்வனப்புந் தைவிகன்
கன்னல்வே ளுனுறுங் கவினுமந்தர
மன்னும்வின் மற்புய வலியுநோக்கினன். (௨௨)

அற்பொடு நோக்கியே யனைத்துந் தூக்கியே
யுற்பன மிஃதரி தெனவுவந்துயர்
முப்பொழு தறிபிரு காதிமோனநூன்
விற்பன முனிவர்கள் வேள்வியாற்றிட. (௨௩)

* ஐவகைக் கருவிதிக் கதிர்ப்ப வும்பர்நா
முய்வகைக் கிடமென வுளங்களிப்புறச்
செய்வகை திறம்புறுச் செல்விதன்னையத்
தைவிகன் கரத்தினிற் சலத்தொடீந்தனன். (௨௪)

திருமகட் சிவனருடி கிரியங்கரன்
மருவின போற்செழும் வஞ்சி மன்னவ
னருள்பது மாவதி யணங்கை வேட்டனன்
சுருதியின் விதிநர சிங்கத்தோன்றலே. (௨௫)

தோன்றலுக் களித்தரு டோகைக்கன்பிறு
லேன்றடி யேவல்செ யியற்கைமாதர்க
ளான்றவானுல கணங்கனைய ராயிர
மீன்றிகழ் விழியினை விருப்பி னீந்தனன் (௨௬)

வேறு.

* கங்கைகரந்த மௌலியுடை வீரட்டேசன் கழனினைந்து
பொங்குகளிப் பாற்குகமுனிவன்முதலோராசிபுகன்றிடநல்
லங்கிவலம் வந்/தமி மிதிப்பித்த கல்வான்சாலி $கரி காட்டி
யெங்கும் வாழ்த்தி நெறிகலிப்ப விருந்தாங்கன்னி யுட
னேந்தல். (௨௭)

*வழுதிசேரன்களிப்புந்தைவிகன்மணக்கோல்முங்கண்டுள்,
ளிழுதை நிகர்த்தான் வளவன் முதலெவரு மந்தத் தகை
யானோர், பழுதின்மூவேந்தர்கடமக்கு முதல்வனுகும் பனங்
தாரான், வழுவின் றுயசந்தொடு தாம்பூல மாதி வழங்கின
னால். (௨அ)

/ அம்மியென்பது, அமியென இடைகுறைந்தது. $ கரி=சாக்ஷி.

## ௪-வது காஞ்சனமாலை மணம்.

*எவருங்குழீஇய பேரவையி னிருந்த மாற னெழுந்துருக னிரும் பதத்தை வணங்கமுனியருள்கொண்முகம னறைந் திடலு, நவையி லெனதுசிறு மிக்குநம்பி தனக்கு மணக் காலங், தவறிலாதாய் குறியென்னக் குறித்தான் காலந் தவத்தோனே. (௨௯)

* மொழிந்த வசனஞ் செவிவழியி னுளத்தி னிரம்பியம் மொழியே, வழிந்ததென்ன மாறனுயர் சபையைநோக்கி வனையனைய், மொழிந்த தீதுமற்றெம்மூர்மணத்திற்குறுக வெனவுரைத்துப், பொழிந்த கருணை யங்கயற்கண் விழை யுமதுரை புக்கனனால். (௩௦)

* அடைந்துகூட லிறைவ னனையடியை வணங்கிப்பாற் கடலைக், குடைந்துவருந் தாதமைந்த சுதைதனக்கு மிறை வன் கட்டியின், மிடைந்துகருகா வுருவ னெனவிளங்கு மவற்கும், விளைமணத்தை, யடர்ந்த வுலகுக்கொற்றர்கள் பா ணிருபந்தம் மினறிவித்தான். (௩௧)

*பின்புமாற னெஞ்ஞான்று மாறுக்காமர் பிறங்குநக, ரன் பின் மேனு மலங்கரிப்பித் தவிருமணி மண்டபமதனைத், தன்பின்னுறு வோரதிசயிக்கச் செய்வித்தடிசிற் சாலைகளு மின்பு மலிய வியற்றித் தெய்வீகன் வரவை யெதிர்பார்த் தான். (௩௨)

* அளவிலாத சிறப்புஞற்றிச் செழியனவ் வாறிருப்ப விவண், வளமார்புயத்துத் தைவீக னிருந்தவாறு வசனிப் பாங், தளவநூரற் கிளவிபத்மா வதியோடவனுஞ் சலசையு டன், துளவமார்ப னென்னும் வகைசுரதவின்பந் துய்த் தனனால். (௩௩)

பிருகுமுதலாமுனிவர்களும் பிறங்குகோவனின்றுகடிக், குருகியுற்ற வெல்லோரு முயர்ந்த சேரனகருறுங்காற், பெருகுமுள்ளச் செழியன்முனர்ப் [illegible]பசும்பிடியே மண

நிருப, மருகா துறுதல் கண்டெவருந் தமிழ்ந் டடையவார்
வழுற்றார். (௩௪)

வேறு.

உற்றிட வார்வ மங்குவரி போன்றிடு
கொற்றவங் கம்மொடுங் குலவு தைவிகன்
பொற்றொடி யாளொடும் பொறையன் றனைக
நூற்றிட விருப்புடைய பெருவெறிக் கொண்டான். (௩௫)

* ஈண்டிய பல்லியஞ் செவியை யீர்க்கவு ந
தூண்டியதுகள்களெற் சூழ்ந்துபோர்க்கவும்
வேண்டியவின்பங்க டெய்த்த மேவினார்
பாண்டியன் வளஞ்செறி நகரின் பாங்கரே. (௩௬)

சேரலனுதிய ரொடுந்தை வீகன்றன்
னூர்புக வெழுந்தநல் லுரையைக் கேட்டுயர்
பார்பரி பாண்டியன் பழிப்பிறனையோ
டேர்பெறப் புகுந்தன னெதிர்கொ ளற்கரோ (௩௭)

உயர்ந்தவ ருறுவரோ வுலகத்தோர்களில்
வியந்துகொளா ருண்டோ விருதினுய்புகழ்
பயந்தனை வீகனைப் பரிவின்மாறனு
நயந்தெதிர் கொண்டன னகரத்தோடுமே. (௩௮)

வழுதியு மகிழ்வொடு வாகை பூர்பனைத்
தழுவிநற் குகமுனி தவத்தைப்போற்றியே
விழுமிய சேரனே முதலவேந்தர்க்குக்
கெழுமிய முகமனைக் கிளத்தி னனரோ. (௩௯)

* எத்திசையினுந் தனக்கிணை யிலாததாய்ச்
சுத்தமா யுயர்ந்திடு துவாத சாந்தமாய்
நித்தனுக் குறையுளாய் நிமித்தமாயுள
வித்தக மதுரையிற் கொண்டுமேவினன். (௪0)

## வேறு.

* திங்கடன்குலத் துதித்திடுஞ் சுந்தரச் செல்வியன
பைங்கதிர்ப்படிபு பரிமிசைச் சதுர்முடிப் பிடைந்த
சிங்கவேற்றினைப பரிவொடு கொண்டுசெல் சீர்மை
யங்கண் மாநிலத் தறிஞரா லறைந்திடப் படுமோ.

* எந்தநாளினுஞ் சிறப்பிரியாத தோரிசைகொ
ளந்தமாநகர் ‡ ஞெள்ளலிலன்ரு பைம்பரியின்
வந்ததை விகன்றனைக் கண்டோ ரகமுக மலர்ந்தா
ரிந்தையே யிந்தவாறும் வந்தனன் கொலோவென்று. ()

* உமையைச் செல்வியாய்ப் பெற்றுமன்னவ டனக்குலக்
தமையளித்திட வளித்திடா வகையினும் *சமழ்ப்புற்
றிமையவண்ண விவ்வாறுரு வெய்தினன் கொல்லோ
சுமைகொளங்கயற் கண்ணியாளிங்கர் காண்பான். (௪௩)

* அந்தநாளிறை மருகனுப் வந்துநம் மரசின்
முந்தவேண்டிலன் முத்தன மினைமண முடித்து
விந்தையாற் செய்தவரசினைக்காணுவான் விரும்பி
யிந்தவாறிம வானெய்தினன் கொலோவென்பார். (௪௪)

* சோமசுந்தர னுமிறை தொன்னகர் வீதி
யேமமாய்த் தூரகதந் திவர்ந்தெய்திய வியற்கை
நேமமால் விஞ்சையாதலி னேருமோ வென்பார்
தாமமன்னுமிப் பரியின்மேலிவன் செல்தன்மைக்கே. ௫

* கங்கைவார்சடைக் கண்ணுத னம்முனோர் காண
வங்கயற்கண்ணினை மன்றல் விதிமுறை யடைந்தான்
சிங்கவேற்றுத் தெய்வீகனு நாமெலாந்தெரிய
விங்கதொத்த மன்றலுக் கெழுந்தன னெனவிசைப்பார். ()

தனித்த வேல்குறி யிடத்திய மகத்து மாதாங்கச்
சனித்ததன்மையும் பெயர்கொண்ட தன்மையுந் தரணிக்

---

‡ ஞெள்ளல்=வீதி * சமழ்ப்பு=நாணம்.

இனித்ததன்மையு முடிகள்சேர்தன்மையு மேற்ப
மனித்தருக் கிவைவாய்க்குமோ வெனமன மதிப்பார். சஎ

* நான்முகத்தனே பாற்றினாத் துயிலுநாற் கடலிற்
றுன்முகத்த கார்வண்ணனே விண்ணிறைதானே
வேன்முகத்தனே மாரனே யிவ்வுரு விரவி
யூன்முகத்த நாமுவப் பவந்தன னெனவுரைப்பார். (சஅ)

* கன்னிநாடு செய்தவங்கொ னற்கதிர் மதிமரபின்
மன்னிவந்தவர் தவங்கொலிக் காஞ்சனமாலை
தன்னை யீன்றவர் தவங்கொல் யாஞ்செய்த முன்றவங்கொ
லின்னகன்னிசெய் தவங்கொ லீண்டிவன் வந்ததென்பார்.

*பசுத்தமேகத்தின் மின்னல்போலிவன்" செலும்பான்மை,
நசித்தநுண்ணிடை நங்கையர் காண்டலு நளிவார், ரசைத்த
கொங்கைநற் கலையணி குழனெகிழ்ந்தலைய, நசைத்த சிந்
தைகொண் டோடிப்பின் றொடர்ந்துமெய்நலிவார். (ருO)

* மங்கலில் லவன் பரிமிசை வரச்சில மடவார்
தங்கண் மெய்மறந்துற் றனர்சாலவுஞ் சில்லோ
ரோங்குஞ் காண்டலு மெமைக்கவர்ந்தேகின னிதயம்
பொங்கு §நேயமோ *பூதரமோ வெனப்புகல்வார். (ருக)

* கழுதருந்த வூனீய ரிக்கரத்தனைக் காணும்
பழுதருஞ்சில மாதரார லட்சியம்பகர்ந்து
கெழுதரும் விழிக்கோலினுற் கிளர்புயத்தவன்ற
னெழுதரும்முரு விதய †பித்திகை யெழுதுவரால். (ருஉ)

*அண்ணல் வீதிவாய் வரும்வகை யறிந்துமுன்னடைந்தே
சுண்ணஞ் சாந்துநன் மலர்சொரிந் தினியவை சொல்வார்
நண்ணுகாஞ்சன மாலையு நண்ணிவாழுதியென்
றெண்ணருந் திறையுவரியு ளடங்குமேந்திழையார். (ருங)

§ நேயம்=நெய். * பூதரம்=மலை. † பித்திகை=சுவர்.

* பிறந்தநாண் முதற் காணுருவிவனுருப் பெற்றி
மறந்தநாளொன்று வருங் கொலோ வராதுநாமண்ணி
லிறந்தநாளினு மாதலா லிவனுடனில்லந்
துறந்துபோவதே துணிபென்பர் சிற்சிறேழைகயரே. (௫௪)

* ஓடுவா ரெதிர்கொள்ளு வாரெதிரி னின்றுயர்கூத்
தாடுவார் வந்துசுகி யெனவிசை யுடனராகம்
பாடுவாருநப்பார்த்துப் பார்த்தொசி பசுங்கொடிபோல்
வாடுவாரவன் வரவறிந்திடும் பலமாதர். (௫௫)

* என்றிவ்வாறு தாய் மதுரையுள்ளோர் களிப்பெய்த
மன்றற் பன்னிரு மாலைமார்பனைக் கொடுவந்தான்
வென்றிமீனவன் விருப்புளங் கொண்டுதான் மேவுந்
நன்றரண்டிகழ் கோபுரவாயிலின் சூழல். (௫௬)

வேறு.

* எங்குநல் லியங்களார்ப்ப விமையவர் மலர்கடூர்ப்பச
அங்கையின் மகளிர் வாழ்த்தச்சரண்முடி சில்லோர்தாழ்த்த
மங்கையர் நடனமாட + வண்டர்மங்கலங்கள் பாட
விங்கித மெங்குமுட னெவர்களும் புகழ்கொண்டாட. ௫௭

* வன்னியிற் பிறந்த தெய்வப் பரியினின் றிழிந்துவந்த
கன்னியருபசரிக்கக் கடிமனை யதனிற்புக்கான்
முன்னவள் சுதையாய்மேவ முதல்வனுக் களித்தவோங்கன்
மன்னவுன் வேந்தர்போற்று மதிக்குலத் துதித்தானேடும்.

* சேரசெம்பியனைச் சேரன்செல்வியைச்சேர்ந்தோர் தம்மை
ச்,சீர்பெறுமு குகனையாதிமுனிவரைச் செய்யகோவ
லூரிருந் தெய்தினோரை யுவப்பின்வந் திடுமற்றோரை
மாரனேர் மாறனேங்கு மணமனைக்கழைத்துச்சென்றான்.()

* அவ்வவர்க்கியைந்த செம்பொ னாதனத்திருப்பச்செய்தே
யெவ்வமில் பிருகைவேளா லெய்தருண் முனியையேத்தி

---

\+ வண்டர் = மங்கலப்பாடகர்.

நவ்விநேர் நோக்கினுட்கு நரசிங்கன் றனக்குமன்றல்
செவ்விதிற் செய்கவென்று செழியனும் வணங்கிச்செப்பும்

* பிரசாபத்தியமணத்தை விதிப்படி பிருகையாதி
சிரசானு முனிவராற்றத் தெய்வீகனுனமாடி
முரசானகங்களார்ப்ப முதல்வனு லயமுன் னெய்திட
பரசாங்கை யண்ணலம்மை பதமலர் பரசிச்சார்ந்தான். கூக

* மதிக்குலக் கன்னிதன்னை மன்னு மஞ்சனத் தாறூட்டி
நிதிக்குலத்தி யற்றுவித்த நிகரில்பூணினங்கண் மாட்டிப
பதிக்குலப் பிலதாயென்றும் வாழ்கவென் றுரையாராட்டி
விதிக்குலப் பிலதாய் வேட்கும் வயின்வைத்தார் வியன்சி
ராட்டி. (கூஉ)

* தொழத்தகு நாரசிங்கன் றோகைபால் வதுவைக்குற்று
ணிழைத்தநற் றவமுருக் கொண்டெய்தியவாற தேய்ப்பத்
தழைத்தநற் றவத்தோர் மன்றற் சடங்கியற் றிடநல்லன்பு
குழைத்த வுள்ளத்தாரானோர் குவலயத்துள்ளாரெல்லாம். ( )

வேறு.

காஞ்சனை மாலையாங்க வின்செய்தன் சுதைப்
பூஞ்சினைக் கொடியினைப் பொன்னெ டுந்தனன்
வாஞ்சையால் வைகையந்துறைவன் வாய்ந்திடு
நாஞ்சிலம் புரிசைசூ ணகரத்தானுக்கே. (கூச)

* ஓய்ந்திடு புலத்தர்செ யங்கி யோங்கவுஞ்
சாய்ந்திடா வமரர்தஞ் சரீரம் வீங்கவுங்
காய்ந்திடு செறுநர்கள் கண்ணியேங்கவுந்
தேய்ந்திடு நுசுப்பின்×மா வுள்ளந்தேங்கவும். (கூரு)

* மங்கலதுந்துபி வாரி யார்க்கவு
மங்கைய ருண்ணிறை மறந்துநோக்கவு

× மா = இலக்குமி.

மங்கண னருளிதென் றையர்பார்க்கவு
மங்கணன்னி மித்தங்களனந்த மொக்கவும். (சுசு)

* மின்னிகர் வடிவினாள் வேய்மென் றோளினாள்
பொன்னின்மாலைப் பெயர்பொருந்தி னாள்களைத்
துன்னிவீ ரட்டன்றா னுயர்தை வீகனா
மன்னன் மங்கலத்தினாண் வயங்கப்பூட்டினான். (சுஎ)

* எங்கணு மலர்மழை யிறைப்பவானவ
ரெங்கணும் வாழ்த்தொலி யிசைப்பவந்தண
ரெங்கணு மங்கல மிசைப்ப வேழையா
ரெங்கணு முகமனை யிசைப்பயாருமே. (சுஅ)

* மின்னுலோ டெழில்*வித்துரும்க் கானகா
தன்னினித்தில மழைசொரியுந் தன்மையிற்
கன்னியொ டேந்தலுங் கடகக்கைகளால்
வன்னியிற்பூம் பொரிவழங்கி னனரோ. (சுகூ)

* முருந்துறழ் நகையின் கான்முளரிப் போதினைத்
திருந்துகை முளரியி னேந்தநீண்டியே
கருஞ்சிலை யம்மிமேல் வைத்துக்காதலோ
டருந்ததி யந்தரத்தவட்குக் காட்டினான். (எ0)

* இன்னண மணஞ்சிவா கமத்தியற்றிநற்
கன்னியொ டண்ணலுங் கனலில் காய்மழுத்
றன்னுகையிறைமுனந் தோகை தன்னைவேட்
டன்னபான்மைத் தெனவறைவர் யாருமே. (எக)

* வழுதிநற் சோடச தானமாரிபோன்
முழுதுணர் வோர்க்குமுன்னவாவின் முன்னியீந்
திழுதுறு நாலுண வெவர்க்கு நல்கிப்பின்
பழுதறு குகமுனி பதம்பராவியே. (எஉ)

---

* வித்துருமம் = பவளம்.

### ௩-வது சண்பகமாலை மணம்.

* ஐயவிவ் விருமண மமைந்தவாறுபோற்
செய்யபொன்னிச் செழுநாடன் செல்விக்குந்
துய்யவோர் மணத்தினஞ் சொல்லுகென்றனன்
வையயிலுக்கிரன் மரபின் மன்னனே. (எ௩)

* குகமுனி வதுவைநாள் குறித்துக் கூறக்கேட
டகமகிழ் வுடன்மணிச சோழனும் மன்றல்
புகுமெவர்களும் வரப்புகன்று நீங்கிமா
மகமிவர் குடநதைபால் வந்து சார்ந்தனன். (எ௪)

### வேறு.

*பொங்குறு களிப்பின் முன்னர்ப் புரிமண மிரண்டினுக்கு
மங்கவர் செய்தவாற்றிற் பதின்மடங் கதிகமாகத்
துங்கநாடனே வானிற் சூழ்மனை சிறப்பித்தியாங்கு
மங்கலவோலைநீட்டி மாநிலத்துணர்த்தவெண்ணி. (எ௫)

* ஒற்றர்களிடத்துப்போக்கி யுவப்புடன் கிளைகளோடு
செற்றமில் குணத்தின்மிக்க செம்பியன் றென்றலெய்து
மற்றநோக் †கிரதமென்ன விருந்தன னப்பாற்றென்று
டுற்றநன்னிரு பங்கண்டாரனை வருமுவகை பூததார். (எ௬)

* குகமுனி பிருகேயாதி முனிவருங் கோவலூர்நின்
றகமகிழ் வுடனேவந்தோ ரனைவருங் குடகின்கோவு
நிகரிலங்க யற்கணம்மை நிமலன்றாள் பணிந்துவிண்ணை
நகுதரு பொன்னிநாட்டுக் கெழுந்திடு நன்மைபூண்டார். ()

### வேறு.

அரிதினிற் பாண்டிய னளித்தநங்கைக்கும்
பரிவுடன் மலையமான் பயந்தசெல் விக்குந்
தெரிவையர் முதற்பல சீர்களுங்கொடுத்
தரிவையர் தம்மைக் *கஞ்சிகையிலாக்கியே. (எ௮)

---

† இரதம் = மாமரம்.
* கஞ்சிகை = ரெத்தினச்சிவிகை.

* ஈரிரு மௌலியர்னெழிற் கெழிற்செய்து
சீரியல் பைம்பரி மிசையிற் சேர்த்துமேற்
பேரிகைமுதற்பல பீலியார்ப்பநற்
சாரிகொள் பரியினிற் றானுமேறினான். (எகூ)

*ஏவருமிறையிரு தாளையேத்திமேற்
றேவரும்பணி திருவாலவா யொரீஇ
யோவருங்களிப்புட னீண்டி யொன்றினா
பூவரும்பெழிற் பொழிற் பொன்னிநாட்டரோ. (அ0)

* + கோதுக ளேழின்றிக் குறைவில் செல்வமே
யாதியா ×மறுவகை யமைதிநோக்கியே
காதல்கொ ளெவரொடுங் காளைமேவுத
றாதுவரோடிமுன் செல்லினார்களே. (அக)

* கேட்டலு மாலுளங் கிளர்ந்து ள்தவிக
ஞட்டுறு முன்னமே நணுகிக்கொண்டுபுக்
கீட்டுறு பரிசனர் சூழவெய்தினான்
றோட்டணி மகடவந் தோன்றிற் றின்றென்றே. (அ௨)

* தகறரு மிரண்டுமின் னனையர் தம்மொடும்
புகர்பௌத்திரன் ஞளல் புகுதல் காண்டலு
நகருளோர் களிப்பலை நானமாடியே
புகழ்வன வெமானனி புகலற்பாலவோ. (அ௩)

*. மாயனே குமரனே மாயன் மாமனச்
சேயனே வுந்தியிற் சேயனே யெனத்
தாயன கருணையோ டியாருநஞ் சாற்றினார்
மேயசீர் நான்முடி வேந்தன் றன்னையே. (அச)

---

+ கோதுகள் ஏழு = (நாட்டின்) குற்றங்கள் ஏழாவன; தோட்டியர், கள்வர், யானை, பன்றி, விட்டில், கிள்ளை, பெருமழை என்பனவாம்.
× அறுவகை அமைதி = (நாட்டின்) அமைதி ஆறாவன; செல்வம், விளைநிலம், செங்கோல், நோயின்மை, வளம், குறும்பின்மை என்பனவாம்.

* கற்பினுக்கணிகல மாகுங்கன்னிய
ரற்புத வுளம்பெரி தயர்ந்து தேறிடிற்
பொற்புடை மற்றைய பூவைமார்பட்ட
விற்பனவேட்கையை விளம்பலாகுமோ. (அரு)

* விடந்தைகண் டத்தன்சீர் மேவுவோனைக்கண்
டடந்தையை நம்பெறு வோமென் றுன்னியே
குடந்தைமா நகரினிற் குலாவுகின்றபன்
மடந்தைய ராடவர் தொடர்ந்து மல்கினார். (அசு)

* வாய்ந்தசீ ருடைமணிச் சோழன் மா மனைக்
கேய்ந்தசீர்த் தைவிக னொடுங்கொண் டெய்தினா
னாய்ந்தசீர்க் குகபிரு காதி மாதவர்
தோய்ந்தசீ ரிறைவர் தோகையர்மற் றியாரையும். (அஎ)

* அவரவர்க் கேய்ந்தபொன் னாதனத்தினி
லிவரமங் கலமனை யிருத்தி*நேரிய
னவமலி மணவிதி நடத்து மின்னென்றுன்
றவமலி முனிவரர் சடங்கியற்றினார். (அஅ)

நண்பகங்கொண் டிருமன்னர் நல்கிய
பண்பெனப் புலிக்கொடிப் பார்த்திபன்றவச
சண்பகமாலையைத் தந்தனன் பொனே
டெண்புகா வலிநர சிங்கவேந்தற்கே. (அகூ)

* கொண்டகோமங்கல நாணைக் கைக்கொடு
விண்டல மகிழ்விய னழலின் முன்னரோ
டெயண்டிசை யோருமேத் தெடுப்பவீக்கினா
னெண்டொடிக் கெம்மிறை தாளையுன்னியே. (கூ0)

* இருமணங் களுக்குமே லீரைந்தாம்வகை
யொருமணஞ் சிறப்பினோ டுற்றிச்செல்வியைக்

*நேரியன் = சோழன்.

கருமணந்தோய்வுறுக் காளையைக்கண்டே
மருமண மலர்ப்புய மால்களித்தனன். (கூக)

*செம்பியனற்றவச் சிறப்பின் வந்ததோர்
வம்பணி சண்பக மாலை தன்னையிங்
கும்பரில் வேட்டன னுயர்வுபூண்டன
னிம்பரி லிவனிக ரில்லையென்றரோ. (கூஉ)

எம்முடி யரசரு மிறைஞ்சு தாளுடை
மும்முடி யரசரு முனைவன் முன்றருந்
தம்முடி மூன்றெனத் தந்துமேம்பட்டார்
செம்முடிச் சதுரற்குச் செல்வியாரையும. (கூ௩)

முத்தமி ழுடன்சதுர் முடிகொளுன்மறை
யத்தனே வென்னமூ வரசர் தந்திடுந்
தத்தையர் தம்மொடு மௌலி தம்மொடும்
வித்தகத் தைவிகன் விளங்கினனரோ. (கூச)

வான்முதல் வணங்கலால் ‡வசுதை போற்றலாற்
றேன்புரை சொல்லினாற் செறுநர்த் தேய்த்தலா
னொன்முடி யரசனென் றகன்ற ஞாலமேற்
றான்முடியாதுயர் சதுருற்றனரோ. (கூரு)

* இவ்விய லேந்தரு னெவரும் போறறவே
செவ்விய குடந்தையிற் ×செல்லநீர்ந்திருந்
திவ்வியந்தவிர் திருக்கோவ லண்ணுறத்
தவ்விலா நரசிங்கன் செப்பினனன்றே. (கூசா)

* சோழனுந் தன்றவத் தோகைக்குமிரு
மோழையுண் கண்ணியர் தமக்கும் வண்மையா
$யீழமோ டணிகளு மேவன் மாதருந்
தாழ்விலா தளித்தனன் மேன்மை தங்கவே. (கூஎ)

---

‡ வசுதை = பூமி.
× செல்லல் = துன்பம். $ ஈழம்=பொன்.

* செகம்பணி தைவிகன் றெரிவைமா ரோடீங்
குகன்பிரு காதியாங் குரவரைப்பணிந்
துகந்துவீ ரட்டன்று ளுன்ன மாமிசைத்
திகழ்ந்தனன் மாதருஞ் சிவிகைமேற் கொண்டார். (௯௮)

* தானையங் கடலுடன் றலைவர் மூவருஞ்
சேனையங் கடன்முகில் சொரிந்த பான்மையி
னேனையர்க் கிருநிதி யீய்ந்தெழுந்தன
ரானக மதிரத்தை விகனையண்ணியே. (௯௯)

* ஆரணன் றருபிரு காதி மாதவர்
வாரணி கொங்கை மங்கையர்க ளாடவ
ரோரணிகோவலின் றெய்தினா ரொலாஞ்
சீரணிந் தெழுந்தனர் +சேதியுட் கொண்டே. (௫00)

* மடந்தையர் புலவரந் தணர்கள் வாழ்த்தவுந்
தொடர்ந்து பல்லோரெதிர் துதைந்துபோற்றவுங்
கடந்துநற் குடந்தையை யெவருங்காதலோ
டடைந்து தில்லையி னிறையடியை யேத்தினார். (௫0௧)

அதுபொழு தங்கணின் றகன்று கோவலின்
மதகசத் தரசரோ டினிது மன்னினான்
சதுர்கொளுநத்த ×சாமந்த ராதியோ
ரெதிர்கொள வஞ்சிய ரேய்ந்த வேந்தலே. (௫0௨)

மூவர சர்கடரு மூன்று மாதரோ
டேவருஞ் சூழவந் தெய்துமேறனைக்
கோவலு ளோரொலாங் கோக்கன் றென்னவே
யாவலோ டெதிரடைந் தகங்குழைத்தனர். (௫0௩)

வேறு.

* வணங்கினா ரெழுந்துமணங் கொண்டுபரிமேல்வருமிறை

---

+ சேதி = சேதிநாடு. × சாமந்தர் = மந்திரிகள்.

யெழிற் கெழில்வாய்ந்த, வணங்கினார் மூவர்தம்மையுங் கண்டா ரகமகிழ்ந்தியுங்கண்டார், ரிணங்கினா ருடலையுடன் வெறுத்தார் மூவேந்தல்போ லெய்திலமென்று, பிணங்கி ளார் களித்தார் கோவன் மாநகரிற் பிறந்திடு பெருமையை யெண்ணி. (கOச)

* தப்பிலா தென்றுமுய ரிராமேசர் சானுவி னீரினானட்டி, யொப்பிலாத்தில்லை தரிசித்துக் கோவலூற்ற தாலொரு நர சிங்க, வப்பெய ருறீஇமும் முடியை மூவரச ரிவையர் மூவரைப்பெறல, விப்புவிக் கவ்வான் றியாண்டுமிங் கிவனே ரொருவரு மிலையென விசைத்தா. (கOரு)

* எம்பிரா னெஸ்ரம் வந்தது மகத்தி லெழிற்பரி மிசை வியப் புடனித், தம்பிரானெழுந்த வதுமுடிநான்கு தரிப்ப தற் கேய்ந்ததன்மையது, மிம்பரின் முதன்மூவரசர் கன்னி யரோ டெய்திய வீதுங்காணியல்பா, லும்பர்கணம்போற் பெற்றிலர்நோக்கிற் குயர்வென்று ரங்கருள்ளார். (கOசு)

* இப்படியனந்தவித மெடுத்தியாரு மிசைத்தசொற் கேட் டகங்களித்தா, னெப்படி களினுமீடிலாவவியுஞ்செல்வமு மெய்து தைவீகன், மைப்படிகண்ணி பெரியநாயகியை வாமபாகத்தினில்வைத்த, வொப்பிலாவீரட்டேச னம்பால் வைத்திடு மருளீ தெனவுன்னி. (கOஎ)

* பராவருங் களிப்போ டியாவருஞ்சூழப் பாவையர் மூவ ரோ டண்ணல், தராவரும் பெண்ணைசூழ் திருக்கோவற் றற்பரத்தெம் மிறையோடு, மிராவருமைம் பாலம்மைதாள் பழிச்சி யிமையவர் புகழ்ந்திடப் புகுந்தான், விராவருந் தமிழ்மூ வேந்தர்கள் குழுவோ டெழிலரண் விழைவுடன் மாதோ. (கOஅ)

* புகுந்ததெய்வீக னேவருந் தேவர் மருந்தெனப்போனக மருந்த, வுகந்தளித் தரிவைமாரொடுங் களித்தா னொப்பில்

வீரட்டன்றனுன்னி, மிகுந்தபேரன் பான்மூவரசருந் தம
மிட றருசதுர்விததளத்தைத், திகழ்ந்தநுண்மதி சேரமைச
சர் மூவரைநற்றிருமரு கனுக்களித்துப்பின். (கய)

* சிவபுரத்திறைவனிறைவிதாள் பணிந்துதிரு வருள்பெற்று நற்குகமரி, தவன்விடையுங் கொண்டவ னேரீஇத்தத் தந்தனிநகர்சென்றுசார்ந்தனராற், றுவணுசுப்பேரைமூவர் தம்பேறுந் தோன்றறைவிகன்மெய்ச் சீரு, நவமுறப்புகழ்ந்து பேசியுட் கருத்தை நாஞ்சில்சூழ் கோவல்பானல்கி.

x ஆவலோடரசர் மூவருமளித்தவ நகசுந்தரன் சுகுணேச மேறுவலில் சமயதந்திரன்முதலா முயர்மதியமச்சர்கள்சூழ, மாவலங்கொண்ட தனிநடு நாட்டை வரிசையிற் புரந்துவந் தனனாற், கோவலெம் பெருமான் றிருவருள் கொண்டு குலவிய சதுர்முடி கொண்டோன். (ககக)

வேறு.

புவியமுதனையசீர் பொருந்துகோவலிற்
றவமுடை யவர்மறை யவர்மெய்ச்சை வரை
யவமறப் பரித்துல களித்துவைகினான்
குவலயந்தொழ நரசிங்கன் கோவினால். (ககஉ)

வேறு.

அருணகாந்திகொள் §பேரத்தெய் வீகனுடரிய
கருணையார் திருக்கோவ லெங்கண்ணுத லருளாற்
செருவிற்காரண்ட சீற்றவல் லூரனைச் சிந்தை
யொருவவீட்டிய காதையும் விளம்புதுங் கேண்மோ. (ககங)

தெய்வீகராஜன் மும்மணச்சருக்கம்

முற்றிற்று.

ஆக. இஉஙி.

---

§ பேரம் = உடல்.

சிவமயம்.

# காரண்டவல்லூரர் வதைச்சருக்கம்.

* கோவன் மாநக ருறைந்துநல் லரசிறைகொண்டு
மேவலார் தொழப் பரமத மாழ்குற விரிந்த
பாவலார்புகழ் சைவம்வாழ் வுறச்சிவற் பரவிக்
காவல்செய்துவாழ்ந் தனனுயர்கவி பௌத்திரனே. (௧)

* முன்னமே சொற்ற கீரண்டவல் லூரரான் முதிய
சொன்னநாட்டின்வா ழிந்திரன் முதலிய சுரரு
மன்னருந்தவ மியற்றிடு மாதவர் குழாமு
மின்னலுற்றுயர் குமரவேலு ளுணாயுளத் தெண்ணி. (௨)

* அற்ற மீதெனவ ரக்களை முருக்குமக் கால
நற்றவத்தினுற் றெளிந்துமால் கோவலை நண்ணிக்
கற்றுணர்ந்தவர் பரவிடு சிவபிரான் கழலை
யுற்றுவந்துநின் றும்பரு முனிவரு மோர்ந்தே. (௩)

* அந்தகன்றனை முருக்கியு மருந்தியு மாலம்
முந்துமுப்புர மெரித்துமுத் தெறிதிரைப் பரவை
வந்திடுஞ்சலந் தரற்கொன்று மெம்மனோர் வாணுட்
டந்திடும்பர சிவவெமைப் புரந்தரு டருவாய். (௪)

* கோரரூபங்க டரித்தெமர் பகைவர்தங் கொற்றம்
வீரமோடுதாக் கியுமுயர் மிருகண்டு புதல்வற்
சாருமந்தகற் சாடியுந் தமியர்க டமக்கா
தாரமாம்பர சிவவெமைப்புரந்தரு டருவாய். (௫)

* கங்கைவேணிய திகம்பர பரசுறு கரத்த
மங்கையாமுமை பாகத்த மாதவற் கரியாய்
திங்கடங்குறு சிரத்தநற் றீர்த்தவீரட்ட
சங்கராபர சிவவெமைப் புரந்தரு டருவாய. (௬)

* சிங்கமாமுக னுதியாந் தெவ்வரைச் செருவிற்
பங்கமேபுரிந் தயன்முதற் பண்ணவர் தம்மைத்
துங்கமெய்திடப் புரந்தருளியவற்பெற்ற
சங்கரா பரசிவ வெமைப் புரந்தரு டருவாய. (எ)

* சங்கமேதிகழ் சக்கரந் தரித்திடு நார
சிங்கமாயவற் கோபமாக்கிழித்தவன் சேய்த
னங்கமாவொரிக் கவிர்விருந் திட்டவீ ரட்ட
சங்கராபர சிவவெமைப் புரந்தரு டருவாய. (அ)

* பொங்கராவணி புண்ணிய புண்ணியர்ப்போற்று
மங்களுவிறன் மேருவில் லவிருறு கரத்துத்
தங்கவேவளைத் திட்டவீ ரட்டநற் றகைசால்
சங்கராபர சிவவெமைப்புரந்தரு டருவாய். (கூ)

துங்கமார்ந்திடு சுருதியை யருளியச்சுருதி
தங்கு முட்பொரு ளினைச்சிவா கமத்திறுற்சால
வெங்குளோர்களு முணர்வுற விரித்தரு ளிசெய்
சங்கராபர சிவவெமைப் புரந்தரு டருவாய். (க0)

கொற்றமார்ந்தவல் லூரகா ரண்டர்தங் கொடுமை
சற்றுந்தாங்கிலே மவரைநின் சொற்படி சாடிப்
பற்றுநின்கழற் குற்றிடு மெமைப்பரிந் தளியா
துற்றுவாழ்வையேல் வேறியா ருளரளிப்பவரே. (கக)

*என்றுவேண்டலும் வீரட்ட விறைதிரு வருளான்
மன்றல்வாகைத் தைவிக நரசிங்கத்தின் மாட்டு
நன்றுநீர்சென்று நுங்குறை நவின்றவற் கொடுநாட்
டுன்றுநும்பகை தடிந்திடு வீரெனச் சொற்றான். (கஉ)

* சொற்றகாலையிற் பண்ணவர் விண்ணவர் துகடீர்
பொற்றை யண்ணலு டொழுதவன் விடைகொடு போந்து
கற்றையஞ்சடைக் குகமுனி யெம்பரற் கண்ணி
யுற்றவப்பெருங் கோலங்கண் டுவப்புடன் றொழுதார். ()

* தொழுது நின்றவர் தூயவன் விழித்திடா மையினு
லழுத கண்ணின ராயிந்த முனிவனை யழைப்பிற்
பழுதுறுங்கொலென் றெண்ணியே பணித்தனர் நின்றார்
வழுவறுங் குகன் மனத்திவர் வரவினை மதித்தான். (கச)

*மனத்தி னுன்னினன் விழித்தவர்ப் பார்த்துமானன் பினிர்
றுமம், மினத்தொ டண்டுவந் தெய்திய தெவன்கொலென்
றியம்பத், தனத்தினு லுப ரிந்திரன் முதலியோர் தாழ்ந்து,
சினத்தினீங்கிய முனிவர்க்கு நிகழ்ந்தன செப்பி. (கரு)

* அன்னவன்றனை யழைத்தனர் கொண்டுதெய்வீக
மன்னவன்றிக ழவைக்கணுற்றுசிகள் வழங்க
மின்னுவேலினு னெழுந்தவர்ப் பரவிவெவ் வேறு
துன்னுமர்சனை மீந்துயர் தந்தையைத் தொழுதான் (கசு)

* இந்திரன்முத லந்தரத் தவருமந் தணிந்த
சந்தவேணியன் றனையகந் திருத்தருந் தவரு
மெந்தை யீண்டுவந் திடுதற்கே தியாதென வினவச்
சந்ததந்தவர் வந்தனை செயுமுனி சாற்றும். (கஎ)

* பாவமேசெயுங் + கரண்டவல் லூரராற் படரா
யோவலின்றி யீண்டுற்றிடு கோவலி னுற்றெம்
மாவியன்னவற் புகழ்ந்திட வன்னவ னின்பான்
மேவியன்னரை வென்றிசெப் கென்றனன் விறலோய். கஅ

வேறு.

* சிவபிரான் றிருவாக்கைச் சிரந்தரித்துச் செயவேண்
டு மெனுந்திறத்தாற், பவமியற்று வோரையழித் திடலரா
சர்க் கியைந்தவுயர் பண்பினுனற், றவமுடையா ரிட்டபணி
தனையுமவர் குறைநீக்கு தலையுஞ்செய்த, லவமிலா நின்
போல் வார்கடனாதலா னெழுந்தவ்வசுரர்க்கொல்வாய்.(ககூ)

---

+ காரண்டன் என்பது கரண்டன் எனக் குறுகியது.

* எனவுரைக்குந் தனதுபிதாமன முவப்பத் தைவிக னி
சைப்பான் யாருஞ், சினவுரைக்கு நலிந்திரியு மவ்வசுரர்
வந்த வகைசெப்பு கென்றான், வினவுரைக்குச் சதக்கிருது
விள்ளுவான் வள்ளன்முகம் விரும்பிநோக்கிக், கனவுரைக்கு
ம் படிநின்ற கண்டகர்தம் வரலாற்றைக் கருத்திலுன்னி. ()

* வன்கால கேயர்குல சூரிய சக்கர னிரண்டு மதலைவே
ண்டி, முன்காலந்தவம்புரிந்து முண்டகத்தோ னுரைப்படி
மொய் யிரண்டரக்கர், மின்கால விடமனை யகன்னியரைக்
கூடியிருகண்டின் சாபப், பின்காலங் கழிக்கவரும் பிரம
சாரிய ரிரண்டுபேர்கடம்மை (உக)

* முச்சிரத்தை யுடையவலிக் காரண்ட வசுரனென்று
முழுத்தவென்றி, வச்சிரத்தை நிகர்த்தபுய வல்லூரனென்
றுமிரு மைந்தர் தம்மை, நற்சிரத்தை யுடன்பெற்றா னவ்
விருவர் தம்வலியு நவிற்றக்கேண்மோ, கற்சிரத்தை வணக்
கிவில்லாய்க் கைக்யேற்றோன் செய்யேற்றங்கலங்கிலாதோய்.

* அந்தவிரண் டசுரர் தவம் புரியவயன் வந்துவர மளித்
து வாற்று, விந்தவுல கென்றனுல கெங்கணுந்தம் வலிநாட்
டி யிடையூறாட்டி, விந்தையுள நிதியீட்டித் தம்மினத்தோ
ர் களைக்கூட்டி விழைந்துண்டாட்டி, நந்தலிலா திருக்கின்
றார் கடல்விடமும் வடவனலு நடுங்கு நீரார். (உங)

* அன்னார்கள் செயுங்குறும்பால் வேள்வியொடு தவமி
ழந்தா ரந்தணாளர், பொன்னாடென் றுரைபரப்பு மென்னாடு
தன்னாடாய்ப் போகத்தேவ, ரந்நாடு புகுவோமென் றெ
னைக்கேட்பவித்துயர்போ லெய்துந்தோறு, முன்னாடு மிட
மடைவோ மென்றயனோ டிறைகைலை முந்தினோமே.(உச)

* ஆங்கரனைப்பரவி யெங்கள் குறைகூறத் தயைகூர்ந்
தெம் மண்ணல்கூறும், நீங்குடைய வசுரகுல விருத்தியுங்
குளாற் பண்டுசிதைந்ததுன்னி, யோங்குவெள்ளி சூரபன்மா

முதலோருண்டாம் படிசெய்தொப்பிறுண்டைப, நீங்களடை
யப் புரிந்தகாலத்துப் பிருகுமுனி மெஞ்சிரங்கி. (௨௫)

* பார்க்கவனை நோக்கியுன்கால் வழியிலவர் நசித்திடுக
படியோரும்ப, ரொக்கமுறப் பலநாண்முன் புரிவித்த பவ
ங்களுக்கு னெழில்சேர் மேனித், தீர்க்கவொளி கெடப்பட
ணா யெய்திடுக வென்றுநனி சீறிச்சொற்றான், சீர்க்கொள்
பொன்னோரகத்தென்னைக் குமரனிற்பஞ் சாக்கரத்தைத் தெ
ரியச்செய்தோன். (௨௬)

* அவ்வுரைகேட் டிடும்வெள்ளி நடுநடுங்கியவனடியை
முடியினுக்கிச், செவ்வுரையேத் துறமகிழ்ந்து *தன்பெயரு
×மகன்பெயருஞ் சிறப்பினீந்து, தெவ்விழிக்க வருங்கும
ரன் றிருவருளான் மெய்த்துயரந் தீர்ந்தோர்மைந்த, னெவ்
வமறவன லளித்திட்டவன் சுதனி லசுரர்கெட வியற்று
விப்பாய். (௨௭)

* என்று பிருகுரைத்த படிபுகரவனுங் குமர னருளெ
ய்தி மேனி, துன்று துயரது தவிர்ந்தோர் சுதனளித்தங்
கவனடியைச் சூழவிட்டான், குன்றுதவி லப்புதல்வன்
குகன்பெயர்வாய்ந் தவன்பாலே குலவுகின்றான், வென்றி
யவனாற் பெறுகென் றெங்களையுங் குழகன் பான் மேவச்
சொற்றான். (௨௮)

* அரனுரைத்த படிவேளி னடிபணிந்தங் கறையுவுண்
ண லருள்வானுந்தம், +பார்கடமைக்கெடுவிப்பேனென்று
வேலோச்சி யருட்பாங்கிருந்த, வரகுகமாமுனியை யிது
தரித்தவிடமகஞ்செயங்குவருவேனென்றான், செருநர்தமை
க்தேய்ப்பதற்குச் சேனாதிபதியாகு மெங்கள் ○ சேந்தன்.()

---

* தன்பெயர்=பிருகு என்னும் பெயர்.
× மகன்பெயர்=கவி என்னும் பெயர்.
+. பார்=பகைவர். ○ சேந்தன்=சுப்பிரமணியக்கடவுள்.

* வேல்தரித்த விவணிந்தக் குகமுனியா முனதுபிதா விரும்பி நோக்கிற், சேல்தரித்த வுமைபாகத் திறைவீரட் டேசனருட் செயலும் பெற்று, மால்தரித்த சிந்தைதீர்ந் தியாங்களுயப் பிருகுவினால் வளர்த்தசெந்தீக், கால்தரித்த வலிவனப்பு முடையனாய் நீதோன்றக் காணுற்றேமே. ()

* அன்னமுதலிது காறு மிகழ்நீங்கும் புகழோங்கு மரசர் மூவர், வென்றிகணன் மௌலிக ளுடரிவையர் கண் மூன்றாக விடலைசீய, னென்றுபெயர் கொண்டவைகண் டோந்தகுவ ரிருவரைக்கொன் றெங்களுக்கு, நன்றிதந் துன்புய வாகை மிலைச் சிவரக்காண்பதற்கு நச்சினேமே.()

* இளையபல வுரையெடுத்துப் புரையில் சதக் கிருதுரைப்ப வேந்தன்மேரு, வளையதோள் குலுங்காக்கு வினை வென்றோனருள் வலியுறவ் வசுரர்த்தேய்த்துக், வளையளித் தா ரகலத்தோய் புரிந்தளிக்கும் யான்றுணைக்கா ரணனு மாவேன், றினையுளவு மயிர்ப்பின்றி யேகுமென்று வீகலி னர சிங்கமென்றான். (௩௨)

வேறு.

அயன்முதற சுரர்களங் ககன்றபின்னரு
மியல்பினி லுள்ள பூவுலக மெங்கணும்
பயில்பவ ரெவரும் பயத்தின் வாடினார்
தயவறவ் வசுரர் கடணப் பில்வாதையால். (௩௩)

முனிவரு மனித்தரு முடிவி றானவர்
பணிவருங் கொடுமையை நலிப்பத் தைவிகன்
றுணிவளர் கோவலிற் சார்ந்தவன் முனங்
கனிவொடு முறைபல கழறி னாரரோ. (௩௪)

கூறுமம் முறைகளுங் கொண்டுதைவிக
ளுறணி சடையினா னடியார்க் கன்புசெய்
தேறிய குணத்தினா னிகலி னார்களை
மீறிய சினத்தினான் வீட்ட வுன்னினான். (௩௫)

## வேறு.

தந்தை மாதவக் குகமுனி தாடொழு தவிரு
மிந்துவேணிய னேவலின் படியமர்க் கெழுந்தான்
சந்தனுசல மனையதோட் பன்னிரு தாரான்
முந்து காரண்ட வல்லூரர்க் கொல்லுற முனைந்தே.* (௩௬)

முனிந்து தானையங் கடலெழ மொழிந்தமைச சர்கட்குக்
கனிந்த கம்மிறை வீரட்டன் கழலருட் கலந்து
முனைந்த வொன்னலர் கீறுற நாணுமொய்க் கோலம்
வனைந்தெழுந்தனன் பண்டுமை யைத்தரு மன்னன். (௩௭)

கார்மு ழங்கின வெனவெணக் கடும்பரி பூண்ட
தேர்மு ழங்கின கடகரி முழங்கின செறிபொற்
றார்மு ழங்கின முழங்கின பல்லியங் × தண்டா
வூர்மு ழங்கின மங்கல வொலியொடு மம்மா. (௩௮)

நரம்பு தோன்றிட றொடுதுளை நன்கொலி கஞ்சத்
தரும்பு பேரிசைப் பஞ்சமாக் கருவியு மார்ப்ப
நிரம்ப வோசைகொ டானையோ டெழுந்தன னித்த
மருந்த ளுன்றவக் குகமுனி மகத்துதி மைந்தன். (௩௯)

*மைந்த னிவ்வணம்படைகளோடெழுந்துவண்மைகடோய்
சந்த மாதியார் காரண்ட வனத்தினற் சாரல்
வந்து தங்கிய காலையி னவ்வின மருவு
மெந்தை விந்தையா னேருழை யவன்முனெய் தியது()

* முன்னா வந்தமா னிளமையை யெழிலினை முன்னி
யின்ன பான்மையிற் கண்டிலோ மெனவியந் திதனை
நன்ன கர்க்குயி ருடன்கொள்வா னவின்றெழுந் தனன்மும்
மன்னர் மான்களைத் தழீஇக்கொண்ட மாநில மன்னன். ()

* புள்ளி மானரு கெய்தியும் பொற்பினை நோக்கித்
தெள்ளி மான்முரு கப்பெரு மான்மனஞ் செறிய

---

× திண்டா=கெடாத.

வள்ளி மான்றனைத் தரவொரு முனிதனை மருட்டு
மெள்ளின் மானிமாறுகவெய்தினகொலென்றெண்ணும். ()

* பங்க யாசனத் திருந்தசா னகிமயல் படைக்கச்
சங்க யாசனத் தான்பற்றச் சார்தரு மானோ
கங்கயாசனந் தெம்பெரு மான்கர மானோ
விங்க யாசனத் தாரறிவார் கொலோ விம்மான். (சஙு)

* திருகு கோட்டுமா தவனையின் றருளுஞ்செம் மானோ
முருகு கோட்டுமா மலர்முக வைவ்வை முன்னம்
பெருகு கோட்டுமா வதர்செலப் பெயர்த்தமா னோவீ
தருகு கோட்டுள கொம்பிலா தாங்கொலென் றயிர்த்தே.()

* காரங்கத் தினைப்பலவகையினும் வெற்றிகண்டோன்
சாரங்கத் தினைப்பற்ற நீட்டுறு மிரு தடக்கை
சிரங்கத் தினைச்சேரவும் வழுவிச்சென்றதுவேற்
றுரங்கத் தினையுள்ளிச் செல்லரிவைநேராக. (சரு)

* கிட்டும் பற்றுதற் கெளிதென நின்றிடுங் கெழுமித்
தட்டுஞ் சார்வுறு செவியினை விறைப்பொடு தணவு
மொட்டு மோடுவா னிமிருறக் குப்புறு முலகத்
தெட்டு மாதிரம் யாவுமோர் நொடியதி னியங்கும். (சகூ)

* இயங்கு காலுக்கு மனத்திற்கு மிலையிந்த விரைவென்
றுயங்கு கின்றவன் முன்னிற்கும் பின்னிடா தோடித்
துயங்கு கின்றவன் றனைக்கொடு செல்லுறு மாழ்கித்
தியங்கு கின்றவர் தமக்குமுண் டுகொறெளி சிந்தை. (சஎ)

* இன்ன பான்மையின் மருட்டிமா னெங்கணுஞ் சென்று
மன்னர் மூவர்தம் முருகனுய்ச் சதுர்முடி மருவுங்
கன்னல் வேளினை யாளெடுங் காரண்ட வனத்தின்
மன்னி யெய்தலுமறைந்ததெம் பிரானருள் வழியின். (சஅ)

* மறைந்து நிற்றலுங் கதிர்வடி வேற்கான் வருந்தி
நிறைந்து காதலி னேடினேன் காண்கிலேனோ

பறந்த விந்திர சாலங்கொலோவெனப் பதைப்புற்
றறைந்தி டற்கரி தாகிய × வஞர்க்கட லாழ்ந்தான். (சக)

* ஆய காலையிற் சேனையி *னளக்கரோ டமைச்சர்
சேய சாலைக டிரிந்தெங்குந் தேடியே திகைத்துத்
தாயை நேடுமான் கன்றெனச் சார்ந்தனர் +தாவ
வாயு மூலையி னோர்வட்டப் பாறையின் மன்னே. (ருo)

வேறு.

* அங்கண்மே வுறுதமன்னை யுடலஞ்சென் றாவிதன்னைப்
பொங்கவே கண்டாலென்னக்கண்டனர்பொற்றாள்வீழ்ந்து
மங்கவெங் களைநீத்து மான்பினே வருதன்மாண்போ
சிங்கமே யெனக்கலுழ்ந்து புரண்டனர் தெருண்டாரம்மா.

* ஆயிடை யுறைந்தவண்ணலமைச்சர்க டம்மைநோக்கித்
தீயிடை யுற்றெழுந்தா லெனவிவண் சேர்ந்தேனென்றன்
வாயிடை நீரிலாது வறளுற்றேன் × வனமிருக்குஞ்
oசேயிடையெனினுஞ்சென்றுகொணர்குவீரென்றுசெப்ப.

* ஏவியவுடனெழுந்தோர் நிமிடத்தில்யான்முன்யான்முன்
றாவிநீர் கொணர்வே னென்றுதனித்தனி யெங்குந்தேடிக்
காவினீர் தத்தம்வாய்நீர் காணார்கண் ணீர்கலுழ்ந்தே
யாவியை யினிப்பெறேமென் றவணவ ணயர்ந்தாரந்தோ.

* இனையது தெரிந்தகாலை யெறுழ்வலி யிபிடியேறன்னான்
வினையொன்றைத்தின்னவொண்ணாச்சிற்றெறும்பொன்றினா
பினையிற்கொள்ளுரத்தியானை படுந்துயர் படுவனால் [மேல
வினைவென்றா னருளிலாதார் படுந்துயர் விளம்பற்பாற்றோ.

காரட்டா நின்றவந்த காசுரன் றுயர்க்கா டெய்த்த
வீரட்டா காசனற்றாள் விழைந்தவர் தமக்கெஞ்ஞான்றும்
பாரட்ட திசையும் விண்ணும் பணிசெய வினைவென்றானும்
பேரொட்ட நின்றானங்க ணருளுருப் பெற்றுமேவும்.(ருரு)

---

× அஞர்=துன்பம். * அளக்கர்=சமுத்திரம். + தாவம்=காடு.
× வனம்=நீர். o சேய்மை=தூரம்.

* எண்ணிய வினைத்துந்தோய வடியவர்க் கீயும்வான்றோய்
புண்ணிய காமதேனுப் புரந்திடும் புனிதன்றனே
மண்ணுறு * சிகரசிகா மணிநாத னெனப்பேர் வாய்ந்தவ்
வெண்ணிய னூல் பிறங்க விருசெவி குழையிலங்க. (ருகூ)

* கயனமுள்ளஃ: புறழ்ந்த கேசங்களுங் கொளுந்தளுஞ்
சென்னீயு, மயமின்றித் திரைதோன் மெய்யும்வழி யின்
றித் ததும்புகாலுஞ், சயமுண்டா மெனக்கலைத்துத் தண்
டின்றித் தானே பேசி, நயமுண்டாம் பொதிசோ றேந்தி
நராரிமு னணுகினனே. (ருஎ)

* கண்டனன் றைவிகன்றாய் காணுமச் சேயைமானக்
கொண்டனன் சென்னிமீது குவித்தனன் றிருக்கரங்கள்
விண்டனன் மெவியுநோயை விகசித்தான் வதனமேலா
மண்டர்நா யகன்றன்பாதம் வீழ்ந்திவை யறையலுற்றான்.

* எங்கிருந் திவணிவந்தீர் நும் பெயரியா தென்னவண்ண
லிங்குறை வோஞ்+சிகார சிகாமணி நாதனென்போ
மங்கிவந் தவனுந்தாப வங்கியைத் தவிர்த்தெனுவி
தங்குற வாவியொன்று காட்டுமென் றடியிற்றாழ்ந்தான். ()

அங்குற வாகவந்த வண்ணறு னனந்தன் சென்னிக், கங்
குறக் கைச்சூலத்தை யெறிந்தனன் கிழித்துக்× காண்டம
பொங்குற வெழுநதேயண்ட கடாகத்தைப் பொதுத்தப்
போதன், பங்குறமீண்டுசெங்கை மேவியேபதிந்ததன்றே.

ஆயபோ தவனுஞ்சேனு வளக்கரு மாவிபுக்கு
ஞாயமாய் வந்ததீதற் புதமென மருவியாடித்
தோயமுண் டெவருமுண்மெய்துளும்புறக் களிப்பினுற்றார்
தீயதீ நரகத்துற்றோர் திகழ்முத்தி சேர்ந்ததேய்ப்ப. (சுக)

---

* சிகாமணியென்பது சீகாமணியென நீண்டது.

+ சிகரவென்பது சிகாரவென நீண்டது.

× காண்டம்=சலம்.

* ஆய்ந்தசீர் நாரசிங்க னலர்முக நோக்கியெம்மா, னேய்
ந்தசீர்ப் பொதிசோறீ வோமுண்ணுதியென் றிசைத்தான்,
வாய்ந்தசீரதியன்யாரும்வருந்தவஞ்சித்தெல் × குக்ஷி, நோய்
ந்திட வனங்*துறுத்த றகையதோ வென்று சொற்றான். ()

* ஏவரும் புசிக்கவீவே னீயுண்முன் னென்றுனெம்மான்
றாவருந் தவவிச் சொற்பமெவருக்காமென்றான் றேன்ற
னீவருந்தாதே நட்பஞ் சயிலமாய் நேருமென்றான்
றேவருய்ந்திட வாலத்தை யுண்டமு தளித்தசெம்மல். ()

* இலையெனல் வேண்டாமென்றேயெண்ணிலாவிலைபரப்பி
யிலையென விலையென்றியார்க்குமெடுத்திடக் குறைவுறுவம்
மலையென வெவழ்க்குமிட்ட துண்டிட வாரி வெள்ளி
மலையென வளித்தான் மேருமலைச்சிலை வாங்கும் வள்ளல்.

* பாலொடு தேன்கலந்த பாளிதமோ கற்கண்டோ
வேலையினமு தோவென்ன மிசைந்தனர்தாந் தேக்குற்றே
யாலவா யுடையான் வந்தி யாளென வமைந்தான் றந்த
சாலுறு முணவைப்போல வினிமையைச் சார்ந்தாரன்றே.

* இவ்வண நிகழ்ந்தபின்ன ரிறைமறை யவனுய்வந்த
செவ்வணத் துருக்கரந்து மறைதலுந்திகைப் புற்றேங்கிப
பைவணப் பரியூரண்ணல் பரிவுடனே டுங்காலை
மெய்வணத் தரசார்கோவின் மேவுமோரி லிங்கங்கண்டான்

வேறு.

* காண்டலுங் கண்கணீர் கலுழக்கை குவித்
தாண்டுற்ற வீழ்ந்து தாழ்ந்தன்பு போர்க்கவே
பூண்ட ரங்கப்பெரும் பரமனேயென
வேண்டினன் பன்முறை விருப்பமெய்தியே. (கூஎ)

வேறு.

* கள்ளுறு மனத்த னுள்ளங் கரைந்தவ னாகி முன்னரு
சென்றுமெய் யடிய வர்க்குத் திருவமு தளித்தன்மானை

× குக்ஷி=வயிறு * துறுத்தல்=நிறைத்தல்.

வின்றுமிவ் வெளியேனுக்கு மியாவர்க்கு மளித்தலாலே
யென்றுஞ் சீவர்க டயாள னென்பதை யிதனூற்றேர்ந்தேன்

* சங்கரா போற்றிவான தற்பரா போற்றிகங்கை
பொங்கரா வணிந்தவேணிப் புனிதனே பொற்றிமேருச்
செங்கரா வரசாரண்ய சிவபரஞ் சுடரோபோற்றி
வெங்கரா சலதயிநால் போர்த்த விமலனேபோற்றிபோற்றி.

* நாவெலாம் வறண்டுவற்றாநண்ணுகண் ணீர்வறண்டு
பூவெலாம் வறண்டுதுன்பப் புணரியுட் புரண்டேயிந்தக்
காவெலாந் திரிந்தெய்த்திட்ட கடையனேற்கமுதுந்தந்தாய்
பாவெலாம் புகழ்தற்கெட்டாப் பரசிவபோற்றிபோற்றி. ()

* எனப்பல துதிகளன்பா லெடுக்தெடுத்திசைக்குங்காலைக் கனப்பருங் களத்தெங்கோமான் கருணையி னகமலர்ந்தே யினப்பெருங் குழுவொடேகி யெறும்பிவலி யசுரர்க்கொல்வாய், வினைத்தொழில் யாமுங்காண்பாம் விளைவின்றிப் போதியென்றே. (எக)

* விண்ணினின் மொழிந்தமாற்றம் விமலையை யளித்தோன் கேட்டுப், பண்ணக வேதநாதன் பதுமத்தா டனையு மாங்க, ணண்ணுறு மிருகண்டென்பா னளினத்தா டனையும்போற்றித், திண்ணகங் கசியச்சென்றான் பச்சிமந் தெவ்வைநோக்கி. (எஉ)

* அன்னையர் சிறார்சடம்மை விளையாட்டி னகல்விட்டுப், பின்னிருந் துவந்துநோக்கும் பெற்றியி னெம்மானந்தி, தன்னொடு குடக்குநோக்கி யிருந்தனன் றனிப்போர்காண்பா, னின்னமு மந்தவாறே யிருவருமிருக்கின்றாரோ. (எங)

வேறு.

* நெடியகா ரண்டன்றவம் புரிந்ததினிந்த நெடும்பேர்
படியிலோ துமப்பழுவத் தையொருவியே பரம
நுடிலோநா தனைச்சிவானந்த நாதனைக் குறையா
வடிசிறந்த நாதனை யகங்கொடு கடிதகன்றான். (எச)

பேயு நீங்கரும் வனத்தினைப் பிரிவுற லுற்றே
காயு மாரழ லதரெலாங் களிமலர் துளிர்ப்பப்
பாயு மானொடு புலியுறழ்ந் தேயன்பு படர
மேவயுங்காரண் டனுறைபுரை யூர்ப்பக்கலியைந்தான். (எரு)

இருந்தங் கிரிரு முடிமன்ன னமைச்சனை யிருகண்
பொருந்த நோக்கிபொற் றின்றிராம் போர்நாக நீடுந்தல்
பெருந் தகைக்கழ கன்றதாற் பெயர்கென விடுத்தான்
பிருந்து காரண்டன் பாற்செலச் சமயதந் திரனே. (எசு)

* மாவி யப்பினைச் சூட்சியி னுய்தரு மதியோன்
றாவியப்புரை யூரினுற் றவனிடஞ் சாரக்
கூவி யானொரீ யென்னலுங் கோவலூர்க் கதிப
னேவு தூதனு னின்கண்வந் தன்னென விசைத்தான். (எஎ)

* பயினைத் தீய்க்குறுங் கிர்ங்கர் கொடுமைசேர் பதக
தயினைத் தாக்குறு மத்தெனத் தேவனைத் தாக்குஞ்
செயினை நீக்குதி யன்றெனிற் செருக்களத் துற்றுன்
னுயினை நீக்குதி யென்றனன் கருணையி னுருவான். (எஅ)

* என்னக் கேட்டலு மிரக்கமி லரக்கனு மெளிதா
யுன்னைச் செல்கென வொற்றுவிட் டிடுமுன விறைவன்
றன்னைக் கொல்லுவ னோவிப்போதுனைச்சமனூர்
துன்னக்கொல்லுவன் செல்குதி முனமெனச்சொற்றான்.

சொற்ற கேட்டுடன் சமயதந் திரன்முடி துளக்கி
யிற்றை நீர்வரை கேட்டிலேன் றாதரை யிகழ்ந்து
பற்றி லாதுகொல் லுதலினை யுரைத்தனை பழுதாற்
கொற்ற முன்வயி னீங்குதற் கிதறி குறியாம். (அ0)

* ஆயினும்முனு லாம்வகை புரிதியென் றறைந்தான்
காயிரும்பினிற் காரண்டன் கனன்றுமுன் னின்ற
பேயினுங்கொடி யார்கட்கிப் பேதையைக் கொண்டு
போயிரண்டுதுண் டாக்குமின் கடிதெனப் புகன்றான். (அக)

* அந்தவெய்யசொற் கேட்டலும் வெகுண்டெழுந் தவலச்
சிந்தையார்கையிற் சிக்கியான் மடிவனோ தீயோய்
வந்தமர்க்களங் குறுகச்சொல் வாயென வகுத்து
நந்தவில்லதோர் சமயதந் திரனுமுன் னடந்தான். (௮௨)

* சொற்றகுட்டிடத் துண்ணென் நடந்தனர் துவன்றிச்
சிற்றெறும்பெல்லாமேருவைச் சாய்த்திடச் செலல்போற்
கற்றுளாரொடு மமர்செயக் கரத்தின்வாள் கொண்டே
முற்றுறத்தொலைத் தேகித்தன் மன்னன்பான் மொழிவான்.

* பார்க்கவன்மகன் மகனெனும் பார்த்திப பகர்வான்
போர்க்குமாலபலா வாகுமோ வாயசம் புகல
வேற்குமோவிழி நாயின்வா னேரிலேய் வீறுமோ
மூர்க்கர்தங்கட்கென் னறிவித்து மாவரோ மொழியின். ()

* ஆயதாற்பொன்னுந் துடியும்பரிய் பரியுமக் கருப்பு
நேயமில்லதோர் மனைவிகட் செவியோடெண் ணீள்வார்
ரேயும்வேழநற் றெங்கிள நீருந்துற் சனருஞ்
சாயுறும்படித் தண்டியார்க் கென்பயன் றருமோ. (௮௫)

* 'என்றமைச்சனிவ் வகைசொலக் கேட்டலு மிறைவ
னன்றுநன்றெனக் கண்ணெரி பறந்திட நகைத்துக்
குன்றுறழ்ந்திடும் ரதகச துரகமாட் குழுவோ
டன்றெழுந்தன னனந்தனு யிரமுடி யழுந்த. (௮௬)

* நன்மைநன்மையென் றமரர்கள் வாழ்த்தொலி நண்ணத்
தின்மையின்மையிற் கடலுலக கெங்கணுஞ் செழிப்பப்
புன்மைசெம்மையாய்க் குடிபுகுந் தாலென்ன புரையூர்
வன்மைசேரரண் கீட்டிசைப் பால்வந்து வதிந்தான். (௮௭)

* காரண்டன்முத லோர்கணம் போர்க்கெய்தக் கருதிப்
பாரண்டங்கய முள்ளவெண் டிக்குமெண் பரம்பி
யோரண்டத்தினு மேலுள தாகியே யோங்கிச்
சாரண்டத்தினு நடுக்குற முழக்கினர் சங்கம். (௮

## முதனாட்போர்.

* வலியதானவன் செவிதனில் வலித்தறை கூவி
யொலிசெயும் வலம் புரிவளை யோதைசென்றோங்கி
யிலகவங்கவன் கேட்டலுங் கடுஞ்சின மெய்தித்
தலநடுங்குறத் தானையோ டெழுந்தவண் சார்வான். (௮௯)

* கொம்மை சேர்முலை ஞெமுங்குறக் குலவுந்தாட கோமா
னிம்மெனும்படி யெழுந்தமர்க் களத்தினி லெய்த
வம்மெனும்படி யழைத்திடன் மானவா யதனாற்
பொம்மெனும்படி முழக்கினான் சங்கொலி பொம்ம. (௯௦)

எழுந்த வன்படை யெங்கணு மெழுந்தன வியமா
யழுங்க வீறின திக்கெலா முறழன வச்ச
முழங்கி நின்றன நரசிங்கள் படைகளு மூரித்
தழங்கு தெண்டிரைக் கடலென வார்த்தெதிர் சார்ந்த. (௯௧)

அணிவ குத்திரு படைகளு மமர்பொரு மாங்கட்
குணில்பொ ரக்கறங் கிடிபுரை முரசங்கள் குமுறத்
தணிவில் சீற்றமோ டிருபடைத் திறத்தரு சமரிற்
கணினெ ருப்பெழக் கனைத்தனர் வெருக்கொளக் ககனம்.()

### வேறு.

பண்ணூரு மடற்பரியும் பரியுந்
திண்ணார் கரியுங் கரியின் றிரளு
மொண்ணூ யக ௦ வை யமும் வையமுமோர்
விண்ணோரும் வியப்ப வெதிர்ந்தனவே. (௯௩

கறுத்தா ரொருவர்க் கொருவர் கறுவிப்
பறித்தார் கொடியுங் குடையும் பதறி
முறித்தார் முனைவேன் முதன்மொய் கணைகள்
பொறித்தார் முடிமார் பொடுபொற் புயமும். (௯௪

---

௦ வையம்=தேர்.

சிவப்பே றினைகை விழிசீர் வதன
முவப்பே றினவெஞ் சமர்மீ துயருந்
தவப்பே றினர்சாப மெனச்சாப
மவப்பே றிலதா ரமரா ரவரோ. (௯௫)

மல்லால முதற்பன் மரங்களினுங்
கல்லானு மிருத்த கடுங்கணை கொள்
வில்லானு முடற்றின வெஞ்சின மேய்
பல்லார் புலியன்ன படைக் குழுவே. (௯௬)

கறுவோடு புலித்திரள் கண்டதென
மறவோர் மறவோ ரொடுமெண் டினர்வா
னுருவே கமணிப் பரியோ டுபரித்
திறமீ ளியர்கண் டனர்செஞ் சமரோ. (௯௭)

பரிநற் றிரளிற் பரிநற் றிரளாற்
செருவுற் றலுவா னமிடைந் ததிறற்
சுர + ரக்கமுமஞ் சியகன் றனர்சூர்
வெருவப்பல சாரிகைமே வினரோ. (௯௮)

வேறு.

வாசி வைய மதகரி யாளருங்
காசி லாது கறங்க வெழும்புவித்
தூசி வானிடைத் துன்னுத லாலந்தக்
கூசினார்விழி மாகர் குழுக்களே. (௯௯)

யானை மைந்தர்கள் யானையி னூடுறல்
வான ளந்த வரைகள் வரைகளின்
மேனடந்தன மானுமவ் வேழங்க
டான திர்ந்தன வவ்வரைச் சாரலின். (௧00)

மீளி மன்னரை வாள்கொடு வீட்டிமா
வாளி மல்லரைக் காலிற்று வைத்துமேற்

+ அக்கம்=கண்.

றாளி கொள்ளக் களத்திடைத் தோன்றினு
ராளி யன்ன மடற்கரி யாளரோ. (௧0க)

நிறைசெய் வேலினர் தூவெழ நீள்பரிக்
கறைசெய் மாக்கடற் றானைக லங்கியே
பிறிய * வும்பலி னங்கள் பிளந்திற
விரத மூர்ந்தனர் நான்கிர தத்தரோ. (௧0௨)

சாலை வொண்பரித் தேர்விடு தன்மையர்
கோல வில்லை வளைத்துக் கொடுங்கணை
நீல மாமுகில் காரிடை நின்றுபெய்
யாலிபோல வமர்த்தலை சிந்தினர். (௧0௩)

ஏதி கூர்மழுத் தண்டயி ருப்பயில்
காது சூலங் கடுங்கணை தோமர
மேதிலா × வயிரங்க ளெறிந்தனர்
தாது லாந்தொடை வேய்சக டத்தரோ. (௧0௪)

வேறு.

பசும்பன் னிருதார் மாலைகொண் மார்பன் படைமேலே
விசும்பு கலங்கப் பொருதா னவர்கள் வெற்றிப்போர்
நசங்கு திறத்தை யகத்தின் மதித்தே கலிமாவின்
வசங்கொ டுயர்ந்தே பொருதான் மறவோர் வல்லோனே. ( )

வேறு.

வைவச் சுதனு நடுங்கச்சின மூற்றுவாளாற்
றெய்வப் புரவி பலசாரிகையிற் செலுத்தி
மைவைத்த கண்ணார் மனங்கொள்ளும் வலாரிமானப்
பொய்வைத்த சிந்தை யவுணேசனைப் போக்கினானே. ( )

கோணந்திரிந்து தயித்திரியர் வெள்ளங்களைக் குறைத்துப்
பேணுஞ்சினத்துப் பரிமீதி லிவன் பிறங்கல்
பூணுங்கடைநாட் கடல்வாரி புசித்தெழுந்து
காணும்வடவா முகந்தன்னைக் கடுத்ததம்மா. (௧0எ)

* உம்பல்=யானை. × வயிரம்=வச்சிரம்.

பலசாரிகையிற் சாமப்புரவி தனைப்பணித்துக்
குலவாநின்ற தானவர் வெள்ளங்களைக் குறைத்த
விலகாநின்ற மஞ்ஞையிலேறி யேற்றுனை
விலகாவண்ணங்கொன்றிடுவேனி னெழில்போலும்.(க0அ)

வேறு.

உயிர்நிலை தெரிந்து வாட்டி யுடற்றுதா னவரையெல்லா
மயினுனி வானிற் கூட்ட வவுணர்கள் கலங்கியேகப்
பயில்களத்தி டந்தவாறு காரண்ட வவுணன் பார்த்து
மயிலவ னெதிர்ந்த போரிற் சூரொனவலியின் வந்தான்.க0௯

பண்ணுறு மரிகள் பூண்ட பாய்மணி யிரதமூர்ந்து
மண்ணொடு விண்ணு மேங்கி மயங்குற வள்ளன்முன்னர்க்
கண்ணனற் பொறிகள் சிந்தக் கறுக்கொடு முனிந்து சொல்
வான், றிண்ணிய வரியிற் கையிற் செறிந்தகா ரண்டனென்
பான். (கக0)

* மனித்தருட் சிங்கமென்றே வாய்ந்ததான் மதத்துக் கை
யிற், குனித்தவில் லுடனென் முன்னர்க் குறுகினாய் தேவ
ர்கூற்றிற், கினித்த நின்னிதயத்திற்கே யெரியூட்டு கிறபன்
முன்னர்த், தனித் திரிந்திடுதி யன்றேற் *சல பத்திற்றீர்வா
யென்றான். (ககக)

* முந்தைமுப் புரத்தோர்சூர பன்மனே முதலாந் துட்டர்
நந்தலி லாதுபெற்ற வரங்களும் ஞாட்புஞ் சீருஞ்
சிந்துற வவர்கள் கெட்ட செயறமைத் தேர்கிலாயோ
வெந்தைத னடியர் தங்கட் கிழைதுயர் வீணிற்போமோ.()

* நீயுமத் தகைபதுன்ப நிலத்தும்வா னகத்துஞ் செய்தா
யாயதா லிறைவன் வாக்கா லடைந்தன னுன்னைக் கொல்வா
னேயு முன்னு யிரோடின்னு மிருந்திட வெண்ணுவாயேற்
றுயினு மினியானன்பர் தாள்களைப் பழிச்சுவாயால். (ககஉ)

---

* சலபம்=விட்டில். ௦ ஞாட்பு=வலி.

* இல்லையேற் குழலினோடிவ் வுலகினை யொருவி நீயு
மொல்லையின் மடியும்வண்ண முடற்றுவே னுணர்ந்துகோடி
வல்லையி னுனதெண்ணத்தை வகுத்திடா யென்றானன்னோ
ன், றொல்லைநாள் வினைபோல் வந்து தோன்றிய தோன்ற
லானோன். (ககச)

* மன்னர்மு வனைமருட்டு மாறுபோ லெனைமருட்டிச்
சொன்னதை விகவுன்றன்கு மௌலிக ளோடுந்துள்ளிச்
சென்னி வீழ்வுறச் செய்யென்றன் றிறலைநீ யறிதியென்று
வன்னியிற் கொதித்து வில்லைவளைத்துயர்கணைகடூர்த்தான்.

அப்பொழு தழலின்வந்த வரசனுந் தலைப்பெய் தேற்றுக்
கைப்பொலி கணைகடுவிக் கறுத்த வாள வுணனேவு
மொப்பிறு கணைகளெல்லா மொடிபட முறித்துச் சூழ்ந்த
தப்பறு படைகள் சிந்திச் சமர்விளை யாடினானே. (ககரு)

மூவுலகத்து நீண்ட முழுத்தசீர் வேந்தன்றானுந்
தேவரு நடுங்கச்சீறுஞ் செருக்கொள்கா ரண்டன்றானுந்
தாவிலா வமரியற்றுஞ் சமயத்தி னருணைப்பக்கன்
மேவுவல் லூரன்றா பத்தூதையின் மேவினானால். (ககஎ)

கடுந்திறற் றானைநாப் பணின்றகாரண்டன்பாதம், நெடுங்
கிரிக் குலங்கள்சூழப்பனிவரை நேர்ந்ததேய்ப்ப, வடுஞ்சமர
வுணர்சூழ வடைந்து தாழ்ந்தண்ணன்முன்னந், தொடுஞ்
சமர்முறையோவென்றுசொற்றமர் தொடங்கினானால். ()

வேறு.

ஏற்றவா ளரக்கர்கள் வெருக்கொடே யிரும்புய, வாழ்ம
லா லருஞ்சிலை குனித்தடுஞ் சரங்களைக், காற்றினோடு மின்
னுருங் கலந்து கார்பெய்மாரியின், பேற்றினான்குழுடிகொ
ள்சிங்க வோங்கன்மேற் பெய்தார்களே. (கககூ)

எங்கணும் பரந்துவா னிமிர்ந்துமுன் னெதிர்ந்திடுங்
கங்குலென்ர் கணைக்குமாங்கள் போன் காணாவகை

துங்கசாம பரிகொள் வெஞ்சுடர்க் கரங்கள் போலவே
சிங்கவேறன் வில்லினிற் பல்கணைகளைச் செலுத்தியே. ()

நெடியதீய ரிருவர் கோலு நீறுகண்டு பின்னரோ
கடகரிக் குழுக்களிற் கலந்தவேறு போலவுங்
கொடிய வல்லியம் மறிக்குழாம் புகுந்தபோலவு
மடிவிற்னவக்குழாத்து மன்னனும் புகுந்தனன். (கஉக)

பாற்கடற் கலங்குறப் படுத்துயர்ந்த மந்தரம்
போற்கதித்த வவுணருக புணரியைக் கலக்கிறு
ஞற்கடற் புவிக்கண் மெச்சு நாரசிங்கனென்றபே
ரேற்கவந்து பார்க்கவன் குலத்துதித்த வேந்தலே. (கஉஉ)

மாலைமார்ப னின்னசெய்து பின்னுமுழுந்த வஞ்சகர்
நீலமேனி மாலவானை நேருறும் படிக்குவெங்
கோலனந்த மோரிமைப்பி னேவிமிக்க × கொக்கறைப்
பாலனந்த மொலிதரக் குறித்தனன் பம்பமென. (கஉங)

* ஓரிமைப்பி னின்னவா றுடற்றிறு னெனத்தெரிந்
தேரிமைப்பிலா ரரக்க ரிருவர்தம்மை நோக்கியே
கரிமைக்களா நிறத்தி ரீதுகாறு மெங்கடஞ்
சீரிமைப்பழித்த வன்மை சிதையும் *வைகல்சேர்ந்ததே. ()

* இந்தவாறு சொல்லியும் பரிருகைகொட்டி நகுதல்கண்
டிந்தவாண வத்துடன் சினந்து ஏப்பியிளைபவன்
முந்துநின்ற முச்சிரத்த னைக்குறித்து மொழிகுவா
னந்தரத்தர் நகைகொள்வா யரத்தமோ டழுங்குற. (கஉரு)

அற்பமாக வெண்ணியே யலட்சி யஞ்செய்திட்டநம்
வெற்பின் வன்மை யுற்றமெய்கண் மீதுநொய்ய கணைவிடுத்
தற்புதங்கொ+ ளிப்பியூதி னுனையோர்க ணத்தினிற்
பொற்புடற் புதைப்பனிப் புவிக்கணென்று பொங்கியே. ()

---

× கொக்கறை=சங்கு. *வைகல்=நாள். + இப்பி=சங்கு.

வேறு.

* வல்லூரன் மூர்ந்த யனிடத்தில் வாங்கும் விறல்கொள்
கல்லூ ரொழிற்கதை கரத்திலேந்திப் புவிமீ
தெல்லூர் முடிச்சதுரன் முன்னுக வெய்தியிரு
மல்லூர் புயக்கிரிது ளங்கவசை பேசுவனே. (௧௨௭)

வேறு.

* திரணமென்றி யாங்கள்விட்டவரசர்மூவரைச்செயித்துத்
தரணிமும் முடிநன் ஞரசிங்கப்பேர் தாங்கலாலே
முரணுடையா யென்றுன்னி நொய்யவிந்திரன் மொழிந்த
சரணுடை வசனங்கேட்டுச் சார்ந்தனை சாவநேர்ந்தோ. ()

* இக்கதை யரிபாற்கஞ்ச னேற்றதை யேற்றேனுவிற்
றெக்கதை யுயிருக்கியந்துப்பினை யறிதி*போகி
சொற்கதை கேட்டுவீணிற் றொலையவந் துற்றுயந்தோ
நிற்கதை நிண்ணயித்தேன் விதியினிண்ணயந் தேறேனே.

* என்று வல்லூரன் சொற்ற தீரிருமுடியோன்கேட்டு
நன்றி மிக்கோர் கடம்மை நவிந்திடுவார்க் கென்ஞான்றும்
வென்றிநின்றிடுமோபெற்றவரங்களின்றிடுமோவெய்யோர்
பொன்றி னரன்றி நின்றோரியார் கொளீபுகறிமன்னே. ()

* விண்ணு ளாருங்கடுன்பின் வெருவிமெய்க் கோவன்
முன்று, கண்ணு ளார்கூழற் றொழும்பா யுரைமுறை கரு
தித்தநகு வெண்ணு ளார்மொழிக்கேயுங்க ளீடழித்திடுவா
னவந்தேன், பண்ணு ளாரரிதண்டத்தோ டெவைக்கு நான்
†பாறிடேனே. (௧௩௧)

வேறு.

* சொற்ற வீதுகேட்ட வுணனுந்தன் முடிதுளக்கிச்
சற்று மெங்களை மதித்திடா துரைத்த நின்றலையை
யெற்று வேறொரு கணத்தி லிக்கதையினு லென்று
சுற்றி மன்னவன் சேனையை யனலெனச் சூழ்ந்தான். ()

*போர்கி=இந்திரன். † பாறிடேன்=ஓடேன்.

* அயன் வரத்தினாற் கொண்ட வத்தணடினை யவுணன்
புயவலிக் கொடுதிரித்துப் பல்சாரிகை புரிந்து
சயமிகுத்ததை வீகனாற்றனையுஞ் சாய்த்து
வயமுறச் சொலியிமைப்பின் மன்னவன் முனம்வந்தான். ()

* கதைவரத்தினாற் கண்டுங் காணாதவனாகி
யிதயமாழ்கியே நின்றிடுமேந்தலை நோக்கித்
தகையும் பன்னிரு மாலையாய் நின்சயினியங்கள்,
சிதையுந்தன்மைகண்டின்னுமேனுயிர்ப்பொறைதீர்வாய். ()

* இன்ன பான்மை வல்லூரனு மிழிவுபாராட்டிச்
சொன்ன சொற்செவி வழிபுகுந்துட் சினந்தூண்ட
வன்னி வந்தவன் வன்னிபோற் கொதித்துநின் வலத்தைப்
பின்னமாக்குவ னென்றெண்ணில்பகழிகள்பெய்தான். (கஙௌ)

## வேறு.

* வில்விட்ட கொடுங்கணை வல்லூரன் வீசுதண்டின் மிசைப்படலுங்கருங், கல்விட்ட கலமெனலாயவை கண்டும்பின் பல்கணை விடுத்தானவை, யல்விட்ட சென்மினின் மறைதல்கண் டவுணனக்குன் சிரத்தையடற்கதிர்ச், × சொல்விட்ட தடியெனநூறுவே னென்றுசொல்லி நெருங்கியத்தோமிலா. (கஙச)

* ஆதியண்ண லருட்கொடு தித்தவம் மண்ணறன் சிரமீதினடற்கதை, மோதவெண்ணிக் கனைத்துருமேறென மொய்த்துவானி*னெறுடனைத்தூக்கினான், காதுகூரலனை யேயாசுதனுக்குமுன் காய்ந்ததொப்பக்கருணை கொண்டேயிளஞ் சிதவெண் பிறையானவன் பாலிவன் சேரொணாது செந்தீயின் விலக்கினான். (கஙஎ)

* ஆத்திரத்+தசியா லெயிற்சுட்டவ னன்புகொண் டனலாலெயிற்சூழுறச், சூத்திரத்தி னளித்தமை தேர்வுறுத்துட்

---

× சொல்=நெற்பயிர். * எறும்=கதை. + அசி=அவமதிப்புச்சிரிப்பு.

டன் கிட்டுறுந்தோறு மவன்வலிக், O காத்திரத்தைச் சுடும
வணிங்கி லோகிதத்த வாணவத்தீயுளத்தைச்சுடு, மாத்திரத்
துஞ் சலாயுங்கைச் *சீர்விட மனம்பொருந்திலன் வஞ்சக
நெஞ்சனே. (௧௩௮)

* இத்திறத்தி னிடருறுவான்பினு மெண்ணுவா னெண்
ணரும் வைகறேற்றுக்கொள், சித்திரக்கதை விட்டன்றித்
தீர்கலானென்று கொண்டயன் சீரருட்சிந்தித்துக், கைத்
தலத்து ளதண்டைச் சுழற்றிமெய் கண்டதைவிகன்மேல்
விட்டெரப்பினான், சுத்தநிர்க்குணத் தெம்பிறை சூழ்ச்சியாற்
சூழனற்கதை தோய்ந்து நொந்தெய்தியே. (௧௩௯)

* அயன்வரப்படி பன்னிருமாலை யானகலமோதிய னன்
கையின்மேவுற, வியன்மிகுத்த தெய்விகன் மயங்கியே மெ
ய்யுயிர்ப்பின்றி வீழ்ந்தனன் வையத்தே, நயன்மிகுத்து
வல்லூரன்முன்னோனொ டிந்ரன் புரந்தரனு மிறந்தானெ
ன்றே, வயமிகுத் திருவோரும் களிப்பொடு மருவினார்
புரையூர்முன் வணங்கவே. (௧௪௦)

* பைங்கதிர்ப்பரியானை வென்றேமென்றே பச்சிமத்தி
ருபேரோர் வரக்கண்டே, செங்கதிர்ச் +சவிதா வெருண்டே
கடற்சேர்ந் தொளித்தனன் வல்லிருள்சேர்ந்ததே, பொங்
குறுங் களிப்பால் வரும்வைகல்போய்ப்போகி நாடொறும்
பொன்றுவிப்போமெனுக், கங்குனீங்கக் கருதினர் தானவ
களத்தி னெண்ணலுக்காயகழறுவாம். (௧௪௧)

வேறு.

* கணணுத லருளாற்றீயிற் கருகிய வகையாற்றண்ட
நுண்ணாரங் குறைந்து நம்பியுரத்தினை நலிந்ததானு
ளெண்ணுறு முயிர்ப்புமாவி யடங்கியே யிறந்தார்போலப்
பண்ணுறு பரித்தேர்ச்சாயச் சூதனும்பரிவினேந்தி. (௧௪௨)

---

O காத்திரம்=சரீரம். * சீர்=கதை. + சவிதா=சூரியன்.

* எடுத்துமார் பணைத்துக்கூடு முபசார மியற்றியுந் *தொக் கடுத்தில வுணர்வுபாக னகம்வெரீ இயங்தோவந்தோ வடுத்தவிர் மன்னர்மூவர் தமைவென்ற வலிபோனாலுந் தொடுத்தமங்கல மாதர்க்குச் சோராது சோர்வுற்றாலும்.()

* முனிவரும் பர்கண் மற்றோர்கண் மொழிநிலை பொய்போ னாலு, மினிவரும் வழியிற்றெய்வ நிமித்தம் வீணெய்தினு லுந், துனிவரும் படித்தியோர்க்குத் தமியராற் சூழ்விக்கு ம், பனிவரு மிதழியெம்மான் பகர்சொல் வீண்போனதெ ன்னே. (கசச)

* எம்மொழி மாறுற்றாலு மெவ்விதத் தினுநம்மீசர் தம்மொழி மாறுதென்று தனிவலி தரித்துத்துன்ப விம்மொழிந் திரதந்தூண்டி மேவும்க்கணத்திலெம்மான் செம்மொழி வழியே ÷யூதை செறிந்ததுதைவீகற்கே. ()

* ஊதைவந் ததையவுள்ளே யுணர்வுண்டா யதனுளீசர் பாதபங் கயமலர்ந்த வுடன்பஞ்சாக் கரநற்பாநா வோதுதல் பாகன்கேட்டம்மலைச சார்பில் வையமுய்த்தே யுந்தர வோடுங்கோவை யவணிறங்குற வமைத்து. (கசரு)

* நின்னுட லாயமூன்று மன்னர்க ளொர்ந்திருந்தும் மன்னுயி ராய்வீரட்ட வள்ளலா ரிருந்தும்பல்லோர் துன்னுறு மவயவம்போ லிருந்துமோர் துணையுமின்றி யின்னவா றிருளினெந்தா யாதியான் செய்கேனென்றாய்:

* பலவிதம் வருந்திக்கூறிப்பார்த்திபபண்ணோர்விண்ணோர் மெலிவினை யகற்றவந்து மேவினபோதுங் கோவற் குலவும் வம்மின்றேர்மேற் கொள்குதி யென்றான்கேட்டு நிலவுலவுறுங் *கோடீரன முதுண்டா னிகழ்த்துவானால்.()

---

தொக்கு=உடல். ÷ ஊதை=காற்று.
கோடீரன்=சடையையுடைய சிவபிரான்.

* இமையவர்முறைக்கென்னத் தனிறையுரைப்படி யுரைத்த, வமைவுடைத்தொழில்வகுத்தோனந்தணனாகி யன்னச் சுமைகொடுவந் தெல்லோர்க்குந் தோயமோடளித்துகந்தே யமையொரு பொருட்டாக் கேட்டுக்கொண்ட தோரமைவு மென்னே. (௧௪௯)

* இந்தவெய்யோனைக்கொல்லவல்லவோ வதற்கெல்லோ ரும், வந்துமற் றேரிராது மாறுறக் கொடுத்துந்தியோ ருய்ந்தன ராகியேக விடுத்துமென் னுயிரோடின்னு, நந்த மூர் செலிற்காண்முந்த நகையரு மிகழுவாரால். (௧௫௦)

* ஈதன்றி வசையுமூன்று முலகமுள் ளளவுமெய்தக், கோ தன்றிச் சிறந்தோர்வாக்குங் குறைபடக்குறையாதுற்றோர் தீதுறவாற்றி யின்னு முட்டற்பொறை சுமக்கச்செல்லேன் சாதலிற்றுணிந்தேனீயூர்மனப்படி சார்கவென்றான். (௧௫௧)

* அவ்வுரை கேட்டசூதன கம்வெரீஇ யையவுங்கட் கெவ்வித மனமோவெற்கு மெய்துகவதுவே யென்று னெவ்வமோ டிறைதன்னான் மாநீங்குசூ மெண்ணுங்காலை நவ்விவா ழண்ணல்செய்தவிசித்திரநவிலற்பாற்றே. (௧௫௨)

நிணத்திடை குளிக்கும் வாளா னினைப்பினோ டறிவுநிற்கக் குணத்தொடு கரணமுன்னைம்புலன்செயற்குறுகித்துஞ்சக் கணத்துச்சாக்கிரத்துவந்தான்கனவெனக் கறையார்கண்டன் றுணித்தவ்வேணைசர்வெள்ளஞ்சுவற்றுமவ்வடவைபோன்றே.

நல்லவர்க்கடைந்ததீமை நாட்செல நில்லாதாங்குப் புல்லருக் கடைந்தவாழ்வும் பொருந்திநில்லாது கண்டாய், செல்விடை யுதித்தமின்போற்சிதையுநன் னெறிசேர்தேவ ருல்லலுங் கொடியசெய்கை யடையலார் புரமும்போன்றே.

மதனுருவெடுத்தோயுன்றன் மனத்துயர் தணப்பாய்மாண்டு கதிபெறுஞ் சயினியங்கள் கதித்தெழச் செய்வோந்தேவர்

---

துதிபெற வினியித்தெவ்வர் தொலைவுறப புரியித்துன்பிற்
கதைவரப்படியேயின்னைக்காட்டிமீட்டனம்வியப்ப. (கருரு)

அஞ்சனி யெழுந்துவையத் தடுகளமடைநி யென்று
நஞ்சணி கண்டன்கூறி மறையநான் முடிகொணம்பி
தஞ்சமுன் னடிக்கேயாரு மென்றெழுந்திரதனு சார்ந்து
துஞ்சின ரய..க்களத்திற் சூழ்ந்தனன் சூதனோடும். (கருசு)

* களத்திடை யமைச்சராதி மடிந்தசேனை யின்கணத்தை
வளத்திடைந *திகலனுதி கணமுண்டுமகிழக்கண்டே, யுளத்
திடையெரியானுக்கிற்சலமிகுத்தொழுகச சாாந்து, 0குள
த்திடைக் கணனோவெண்ண மோகனுக்குறித்த தென்றே.

விழுந்தவ ணிறப்பதன்றி யிவுண்வந்தீத் துயரின் வெம்பி
யொழிந்திட றகவோவென்றென்று யங்கினனப்போதெம
மான், கொழுஞசிகை "முந்நூல்வேய்ந்த குலமறைக் கிழ
வனுகிச், செழுங்கமண் டலங்கையிற்றண் டேன்றிமுன் சிற
ப்பின்வந்தான். (கருஅ)

வந்தமா மறையோரான காரண்ட வனத்துநாதர்
அந்தடக் கமண்டலத்திற் சார்புனற் கரத்திலேந்திச்
சந்தனுசலத்தோள்வேந்தன்றனைமேற் புரோக்கித்தன்பாற்
சிந்திய வுயிர்கண்மீண்டு சிறப்புற வெழுப்பினுரோ. ()

மறந்திக டானையெல்லா மறிக்கரத் தண்ணனீரா [சோகங்
லிறந்தசொல் லிறந்துதுஞ்சியெழுந்த போலெழுந்தாரு
துறந்தில் கண்டுமுன்போற் சொற்பொதி புருக்கலீந்தா
னறந்திக டெய்வீகன் போலார் பெற்றுரிவை தாமம்மா.

அரனரு ளமுதந்துய்த்தே யாவருமகிழ்ந்த பின்னர்த்
தாமுட னவரவர்க்குத் தகுஞ்சிலை படையுங்கேம
விரதமோ டெவையும் வேந்தற் கிதயதிற் களிப்புந்தந்தே
வரன்வினிந் காந்துங்க மன்னனுக் கிவைபுகன்றான். ()

* இகலன்=வலி. 0 குளம்=நெற்றி.

வருகதை விகவினக்கு வலிமிகத் தந்த மேலும்
பொருபடைக்கும் முனைக்குஞ் சகாயமாப் புரப்பதற்குத்
திருமலி நந்திதேவை யிவண்பார்க்கச் செய்வோமீயவ்
விருவர்தானவனோவென்றங்கெய்துவா யென்றுசொற்றான்.

எனவிறை யிசைத்தமாற்ற மிருசெவி கேட்டமன்னன்
மனமகிழ்க் கடலிற்புக்கு வாழ்த்தியங் கிறைஞ்சிநின்றான்
கனிவொடு மயன்மால்காணு வள்ளலைக்களத்திற் கண்டாற்
பினமினி யுறுவதென்னோபெரிதவன்பெற்றபேறே.(கரு௯)

* முக்கண னருளைவாழ்த்தி நரசிங்கபூபன் முன்னு
மிக்கதன் றுணையோடு மேம்பட முகிலினூர்த்தா
னக்கண மிதுகாண்பான்போ லலரிகீட்டிசை வந்தார்த்தான்
றெக்கவஞ் சிருஞ்மயானோர் மாற்றலரிருளுந் துஞ்ச. ()

இரண்டாநாட்போர்.

ஆர்த்தமை கேட்டுத்தீர்த்த ரதிசயித் தகந்தைகூறப்,
பேர்த்தொழிற் கிளையோன்போந்த போதவன் பொற்றாள்
போற்றிக், கூர்த்தவன்புடன் முன்னின்று குசம்பஞ்சம்
பனுமவ்வேந்தை, யீர்த்து வந்திடவே வென்றரவ்விடை
யீய்ந்தான் முன்னோன். (கரு௫)

காரண்டன் விடையைக்கொண்டகடும்படைத்தலைவர்வீரப்,
போரஞ்சா நூறுகோடிப் பொருனர்கள்சூழ் போங்காலைப்,
பாரெங்கும் வெருவுமன்னூர்க்குறும்பொல்லாச்சகுனம்பாய்
மாத், தேரின்கட் காகமேறிச் செயிர்படக் கூவிற்றம்மா.

கொடிமினிற் கொடிகண்மேவக் குறுகுதுன்னி மித்தங்
கண்டு, மடிவது தேறார்பொல்லா வழிபடர் விதிவசத்தார்,
ஒடிபட முழங்கிச்சென்று ரிருமுடியினன்மேற், கடலெ
னக் காலனேவுங் காலதூதுவர்களென்ன. (கருஎ)

வேறு.

கொண்டலுரு மொலிகொண்ட சம்பகுசம்பர் முதலிய
வெம்புகா, ரண்டனகல் படைகின்ற கிசராங்கணமர்க

டொடங்கினு, ரண்டர்குழு வுளமஞ்ச' நரபதியம்பினவர்
சமர்முந்திஞு, னெண்டிசையொ டரவங்கொள்க ணபண
மெங்குநெளிபட வன்றரோ. (கசுஅ)

அங்கணமர் தனினின்ற வசுரரிலண்டர் வெருவுறுசம்ப
ஞோர், துங்க கொடுமரமங்கை கொடுபல துன்றுகணை கடுற
ந்துசீர், பொங்குமட னரசிங்கனொடு வருபொன்றிலகல்
படைபொன்றவே, வெங்கணெரிபட மண்டிவிடலையை வெ
ஞ்சினமொடு பிணங்கினுன். (கசுகூ)

பொருமவ்வவுணனை வெருவநரபதி பொருதுவெகுகணை
கொளுவவே, யிருவரொதிர்விடு பகழிவிடுபொறி யிமை
யருலகம தடையவே, கரியபருவுட லிருளுமகமதுகபட
முடனடு மவுணனே, ரரிய்சரந்து கொளுவியிவனுட லரி
துபழிபட முடுகினுன். (கஎ0)

அவுணன்விடுசர முடலைபடைதனுமதிகசினமுட னூரா
யஞோர், விவிதகணை படுதனுவை விழியனல்விரவு புகைபு
ரை புருவநேர், கவினவளை வுறவலிய பலபல கணையினை
வன் விடுகணையெலா, முவகையிலதறவெகுளியவனுயி ரொ
ழியும் வகையிவை புரிகுவான். (கஎக)

இலகுமவி ரொளியசனி யழலென விரணகள மெதிர்ம
றிபடா, தலகில்பொறி யிடையவுணருயிர்கெட வமரர்பதி
கணையருளினுன், மலியுமழநனை யனையகணையவன் வலிய
முடியினை வயிரநீள், பொலியுமலையிற கரிவதெனவது புரி
ய யமபுர மருவினுன். (கஎஉ)

வேந்தன்விடுகணை யீண்டவுயிரது வீய்ந்ததினி சரனுய்ந்
ததீ, வாய்ந்த முனுவனுமேய்ந்த துயரொடுமாண்ட சினமிக்
கீண்டியே, யேந்தலுறு பரிபூண்ட விரதமுனேந்த லெ
னவுரு டாங்குதேர், சார்ந்துகொடுமர நாண்கொளு விவலி
தாங்குக[illegible]கொடு சார்ந்தனன். (கஎங)

விடகுசம் பனுமிர்தமேல்வரவிடலைசிங்கனும்வினைவினோர்,
தடமலைக்கிணையெனவுயர்ந்திடு சகடமங்கெதிர் கடவியே,
கொடுமொந்தனி வளையவம்பழல் கொளுவவெஞ்சமர் கொ
ளுவினன், மட்மடந்தையர் தெரியறங்கிய மதனமந்தர
மார்பினன். (கஎச)

வேறு.

வலியவொருகணை தனிலவன்விடு கணையறிய வொருகணை
யினிலனிகமுமிற, விலகுமொரு கணையினில் ரதம்வலவ
னொடிவுளி கெடவிடுமளவி னிலவுணனு, மலகில்சினமொ
டுவசி கொளவுடனுட லலறியுயிர்செல வடுகணை யுதவின
ன், குலவுமவுணர்கள் குலமுழுதழிவுறு குறிகொணரவரி
யெனுமொரு குரிசிலே. (கஎரு)

அசுராகுல முழுதழிதர வமர்புரியயில் கொள்பவனு
நல்வலவனு மிவனெனப், பிசிதமயில் பவருளமவைவெருவு
றி பிரசமயிலுற வெயில்வர விரிவுறு, குசுமன்வர மவை
கொளு மிருவர்கடிகை குறுகவெணியுறை யடுகளமொருவி
யவ், வசைகொள வுணர்கள் சமுகமதடைதர மறல்செய்வ
து மினிமுடிகில மெனவரோ. (கஎசா)

இனையவகையினி லசுரர்கண்முறை சொலியிழிவி னடை
தலுமவர் கடமதிபதி, மனனபவமுட னவர்களை வெகுளி
யின் வலியவுரை சொலவிளைய வனைகையொடு, சினமும்வர
நரனெருநொடி மடிவுறல் செயுதுமென வெழுமளவினில்
வெருவிய, வதிகதிசிரர் பினுமமருறவுரையறை யதிரி
சிரவவுணனீ மொழிகுவான். (கஎஎ)

வேறு.

மானவே லவுணரோ நீர்வலித்தேக மொழிவதென்னோ,
யூனவே லொன்னார் முன்னமுறு சமர்க்குடைந்துவந்த,
தீனநம்மரக்கர் போர்க்கென் றெய்துறிற் றெவ்வை
வெல்லற், கானவை யிலேயலங்கண் மடிந்தும்பரடையற்
பாலார். (கஎஅ)

என்றுகா ரண்டன் கூற வரக்கர்க் ளேந்தல் சாயக்
கொன்றிங்ங னடைவோ மென்று கொதித்துப்போர்க் கோ
லங் கொண்டார், வென்றிகொண் டடைந்த வல்லூ ரனுமு
னோன் விடைகொண் டேமுன், னின்றதேர் மேற்கொண்
டான்பண் டிருடிசா பத்தை நேர்ந்தான். (கஎகூ)

* கின்னுதி னுடன்வெந் தூசிக் கடன்முனந் துவன்றி
யேக, விண்ணினுள் ளோர்கண் டின்றென் விளையுமோ வெ
ன்றுநோக, வெண்ணுதம் பத்து ளோன்முன் னிரணிய
னெனவல் லூர, னண்ணுத லானுன் றெய்வ நரசிங்கனண்
ணுருழல். (கஅ0)

* ஏழிரு புவன மெல்லா நடுங்குறக் கொடுங்கோ லேற்றோ
னூழிகா லத்தின் மஞ்சே ழுதைத்தோ டுருமிழ் பெய்யுந்
தாழ்விலா மாரி யேய்ப்பச் சரமாரி பெய்து வந்தான், வா
ழிய புகழ்நற் செங்கோன் மரகத வரையான் மாட்டே. ()

வேறு.

* பகழி தூவி வருமொரு பாவிமுன்
னிகழில் தந்திர னென்னும மைச்சனும்
புகர்கு லத்தனைப் பொன்றல்செய் தெய்துனைத்
தகர்விப் பேனென் றெதிர்ந்தமர் தந்தனன். (கஅஉ)

* ஈயெ ழுந்து மலையொ டெதிர்த்தென
நீயெ திர்த்தனை போர்நிமி டத்தெவண்
போயொ ளிப்பைகொல் பொன்றுவை கொல்லெனக்
காயொ ளிக்கணை யெண்ணில் கடாவினன். (கஅங)

* இருவ ரிவ்வடு போரதி யற்றினர்
மருவத் தானவன் றனையு வள்ளறன்
கருவித் தானையு நேர்நேர் கலந்தன
விருளு மெல்லொளி யும்மெதிர்த் தாலென. (கஅச)

* வில்லெ டுத்துங் கதையெடுத் தும்விலங்
கல்லெ டுத்தும ரங்களெ டுத்துங்காய்

சொல்லெ டுத்துந் துதைந்தமர் துன்னினு
ரல்லடுத் திடுமொக்கயர் சேனையே. (கஅரு)

* இலைம லிந்தவெஃகேந்தறன் சேனைகட்
குலைமெ லிந்த வயமுறழ்ந் தேயுட
னிலைமெ லிந்து பலதிசை நீங்கின
கொலைம லிந்தவன் சேனைக்கு ழாங்களே. (கஅசு)

* அண்ண ராகைக்கொப்பின்றிய மைச்சன்போர்
நண்ண வல்லூரன் கண்டுநக் குங்களை
மண்ணு றுத்துவ னென்றடல் வன்கணை
யெண்ணி லேவவந் தேவரு மஞ்சுற. (கஅஎ)

* சமைய•தந்திர னுதிய•தீரனக•
டமைவ ருத்தவ ருந்தித்த யங்கல்கண்
டுமையைத் தந்தநல் லோங்கலங் கெய்திநோக்
கிமையிற் காக்க வெழிற்கணை யெய்தனன். (கஅஅ)

* வசையிற் சென்றவ் வசுரன்வி டுங்கணை
யொசியச் செய்துபின் முன்வெந்நிட் டோடிய
வசுரத் தானையருகுறக் கண்டவை
வசையிற் போக மறித்தங்கு மண்டின. (கஅகூ)

* இன்ன வாறுதை வீகனெய் யுங்கணை
சின்னஞ் செய்யத் தெரிந்துவல் லூரனும்
வன்னி போலெதிர் வந்துத ருக்கிநீ
சின்னல்பட்ட நினைந்திலை போலுமால். (ககூ0)

* இந்தி ரன்முத லோர்சொலி னெய்தியிங்
கந்த மெய்த வடைந்துமெந் நன்மையோ
வுய்ந்த னுய்ந்தனென் றாரொய்து ருதென்முன்
வந்து பின்னு மெதிர்த்தனை மாளவோ. (ககூக)

* என்று கூறிப்பினெண் ணிலவேலினை
மன்றற் புன்னிரு மாலையன் மேல்விட

நன்று நன்றென்று நம்பிய மூற்கணை
யொன்று கோடிய தாயெதி ருய்த்தனன். (ககஉ)

* இவன்வி டுங்கணை யாவுமெ திர்ந்ததா
னவன்வி டுங்கணை தம்மைய டற்கும்பார்த்
திவன்வி டுங்கணை தம்மைச்செ யிக்கும்வெய்
யவன்வி டுங்கணை யாவுமிவ் வாறரோ. (ககஙு)

**வேறு.**

வெம்புபோரி லிருவரும்வி ளைத்தவன்மை கண்டுமுன்
சம்பராசுரனுமனங்க னுந்தரித்த சமரினும்
பம்புதிவி ருத்திராசு ரனும்வலிப் +பலாரியும்
வம்புகொண்ட வமரினுஞ் சிறந்ததென்பர் மாகரோ. (ககச)

செங்களத்தி னிருவர்தேர்சு ழன்றுபோர்செய் கின்றசீ
ரெங்கணும்பல் வையமின்றி யற்றுபோனை யேய்ந்தன்
வங்குநின்ற வவுணர்சில்ல ரங்கமுஞ்சி தைந்துயிர்
பங்கமாய்நி ணத்தினிற்ப தைத்துவீழ்ந்தழுந்தினார். (ககரு)

வாளிழந்த கையொடும்வ லித்துநின்று வாள்பொரத்
தோளிழந்த மெய்யொடுந்து தைந்துவெங்கொ டோடினார்
காளமஞ்சு செக்கரைக் கலந்தபோல வெஞ்சின
மூளவந்து போர்புரிந்த வவுணசேனை முதல்வரோ. (ககசு)

மன்றன்மாலை யேந்தல்செய் மறங்கொள்போரின் வந்திடும்
வென்றிகொள்ப தாதியின்வெ ருக்கொளாத பேரிலை
நின்றபல்வி தங்கொடேர்க ணெரிபடாத தொன்றிலை
வன்றிறற்கொள்கயமயம்மடிந்ததன்றி யில்லையால். (ககஎ)

அரக்கர்வெள்ள வல்லிருட்ட கன்ற*வைக லாமென
விரத்தவெள்ள மெங்கணும் மியர்ந்தசெக்கர் வானெனக்
கருக்கொண் மெய்வல் லூரனிற்றல் காலகேய ராமென
வுரப்பசும்ப ரிக்கொண் மன்னனெனிருவானென்றாமென

+ பலாரி=இந்திரன். * வைகல்=விடியற்காலம்.

## வேறு.

அமர்கொண்டுநின்ற குமரன்கைவென்றி யளவின்றிவ் வண்ணமறியத், தமர்மண்டவந்து மவர்தங்கநின்ற தகுவன் வருந்திமுனிவா, ஸிமிர்கொண்டலூர்ந்து மிரதம்விலூர்ந்து நேராகவந்து நெடுவில், லமையும் பல்கோல்க டமையுந்திமாக ரகமஞ்சு மாறுபொருதான். (கககூ)

கன்மாரிபோல வெதிர்நின்றுவெம்பு காரண்ட வசுரனிலையோன், வின்மாரியான கணைசென்றுமன்னன் மிளிர்தீயி னேவுகணையி, னன்மாரிநாண மடையப்புரிந்து நணுகிப்பலோர்கள் புகழ்பூ, மன்×மாரிநீக்கு மிரதத்திறுழி வலிகொண்டு டைத்தனவரோ. (உ00)

இரதந்தகர்ந்த வுடனண்ணல்வேறோ ரிரதங்கொ டெண்டிசையெலாம், பரதன்றனண்ண னிவனென்னவெய்ய பதகற்குமுன் °னராணுகிச், சரதங்கொளுள்ள மனல்கொண்டு °துரோண சரமாரிபெய்து தணிவிற், சுரதங்கொளுள்ள வவுணன் *கொடிஞ்சி சோரப்புதைத்தனனரோ. (உ0௧)

※ தன்றேரழிந்த வுடனேவலூரன் மிகுகோபமோடுசாரும் பின்றேரதாதி யணுகாதுசெய்தல் பேசிக்கணத்தின் மாயை, வன்றேரமைத்து மேற்கொண்டெதிர்ந்து மன்னுவுனக்கு வாய்ந்த, புன்றேரதாதி பலவுந்தொலைந்து போகின்றதறிதியென்றே. (உ0உ)

※ முறையிற்செருச்செய் திவணைச்சயித்தன் முடியாதெனக்கருதியு, ணிறையுற்றமாயை தனையுற்றுநின்று நெடுவிற்கைகொண்டுகணைக, ளிறையிற்பல்கோடி தமையுய்க்கவெண்ணி லிரதங்களியானை பரியாள், குறையிற்றவாகி யிருளிற்பரந்து குகனெப்பனைக் குறுகியே. (உ0௩)

× மாரி=மேகம். °துரோணம்=வில்.
*கொடிஞ்சி=இரதம்.

## வேறு.

* எண்ணற்கரிய விதம்போரா யியற்றக்கண்ட விறைவ னைக்குத், திண்ணப்பகழி யொன்றலே யாவுஞ்சிதைப்பச் சினத்தவுணன், விண்ணைக்கடலை வடவனலைக் காற்றைக் கூற்றைப் போல்விரைந்து, கண்ணக்கண்ட நரசிங்கன் ஞானப் பகழி நல்கினனால். (உ0சு)

* கருமான் சருமந்தரித்தவிறை யிறையன்றென்று: கழறுவர்க்கு, வருமான் மனம்போற் பலவகையாய் விரிந்ததகுவன் மாயையினைப், பெருமான் பெருமா னென்றறிந்த வுடனம் மனமுற்பேதைமையு, ளருமா நெறிசென்றதுபோலச் சென்றதண்ணல விர்வாளி. (உ0ரு)

* ஆடு மரவ மஞ்சரவங் கண்ட வுடன்பா தலத்தடைய, வோடும் வகைபோற் றுறவிக ளொளிசேர் வாளி கண்டவுட, னீடு மாயை நாணியிரு ணிலத்திற் புகுத நீங்குதலும், கூடுந் துணையா ணவமன்றி வேறொன் றில்லான் கொடியோனே. (உ0சா)

* தனியே நின்ற வல்லூர னிவனோ டமர்செய் திடுந்தன்மை, யினியே தென்றென் றுளந்தளர்ந்தொன் றெண்ணித் துணிந்தோர் வாட்கொண்டே, பனிமால் வரையை மின்னொடுவான் பரவிவிரைவிற் சூழுதல்போற், குனி*மால் கரத்தன் றனைப்பல்காற் கோலியொன்று கூறுவனால். (உ0எ)

* முந்தக் கதைக்குப் பிழைத்ததுபோன் முடியா திதற்குட் பிழைத்தெய்த, விந்தைத் தரித்தோ னோராக வுனகுத் துணையா யெய்திடினுஞ், சந்தப்புயத்தை விகவுன்றற் கூடுஞ் சமரைத் தந்திடென்று, னந்தக் கடவு ளுநாப்படியே முடிய வந்தங் கடைந்தோனே. (உ0அ)

* ஈது கேட்ட தைவிக னைகைத்திங் கிவனோ டிரதத்தின் மீதுநின்று போர்புரிதல்விதியன்றென்று விளித்தமைச்சீர்

---

* மால் = மேகம்.

மோது நமது தானையைக்காத் திடுதி யென்றுமொழிந்துநனி
காது வாட்கொண் டெழிற்பசிய பரிமீதேறிக் கவினுற்றான்.

* மாவில் வாளோடிறையெழிலாய்வரக்கண் டவுணன் வாள்
வீசித், தாவி யெதிர்போ oயழுக்காறு தங்கு முளனாய்த் து
ங்க+வயத், தாவி தவிர்ப்பான் வாளோச்ச வதுகண் டனைய
னகன்றுபடு, பாவி தன்னை ×டேதிவிதிப் படிபோரங்குப்
பயின்றனனே. (உகഠ)

* இந்த வாறு சிலபோதங்கொருவர்க்கொருவரிளைப்பின்றி
விந்தை யாக வாளமனை விளைக்குங் காலை மெலிந்தரக்க
னந்து காலங் குறுகியவந்நடலை யுடையா னட*லசியைச்
சிந்து முடுக்கள்போனா சிங்கன் சிந்தச் செய்தனனே. ()

* அப்போ திறைவன் கொடும்போரையாற்றும் வகையா ல
வன்முதுகின், மைப்போ துகுத்த மதுப்போல வழிந்த
வேர்வை கண்டும்பர், கைப்போ துகுத்து வெரிந்வேர்த்த
ஆூமோன் றவண்பேர் கழறினரா, லிப்போ தினுமப் பேர்திரி
பான் முதுவேத் தூமொன் றிலங்கியதால். (உகஉ)

* வஞ்சன் oவஞ்சந் தனைவஞ்ச மில்லான் வஞ்சம் வஞ்சிக்க
நெஞ்சம் பெரிதுந் தளர்ந்தொருக்காறேறி நேராய் நின்ற
வொரு, மஞ்சு லாவு விருக்கத்தைப் பிடுங்கிச் சுழற்றி வா
வெதிர்போ, யெஞ்சு றுன்வா ளாற்சிதைக்க விதயங் கருகி
யிதுசெய்வான். (உகங)

* இனிநாமிவன்மு னின்றமரை யியற்றிற் கெட்டோ மென்
றெண்ணி, நனிநா ணடைந்து கரந்துநின்று நவிற்றற் கரு
மோர் வரைபிடுங்கித், தனிநா யகன்ற னருள்வலிசேர் தா
ரா பதிதன் றலைக்கிலக்காப், பனிநா கத்தி னின்றுவிழுப்
பான்மை யெறிந்தான் பான்மையிலான். (உகச)

---

o அழுக்காறு=பொறாமை. + அயம்=குதிரை. × எதி=வாள்.
* ...சி=...ாள். ∩ வஞ்சம்=வாள்.

* இன்ன வாறென் றிறையறியா தியாதோ வியற்றவிக்கொ
டியோன், மின்னின் மறைந்தா னெனவெண்ணி நிற்குங்
காலை வேந்தேயுன், சென்னி மேற்பா னொன்றோர்சொல்
வானிற் றெரிப்பத் தேர்ந்தரசன், பின்னரிப் பரியைச் செ
லுத்திமுன்போய் வாளாற் சிதைத்தான் பெருவளாயை. ( )

* கண்ட வவிணன் பின்னுமுருக்கரந்துநின்று கனவளைகள்
கொண்டங் கெறியச் சிதைத்தண்ணல் கொடியோன் மா
யை தனைநீக்க, வண்டங் குலுங்க வழற்பிழம்பாய் நின்ற
விறைதா ளகமுன்னித், தண்ட மொன்றே வலும்வலிதிற்
றருவன் மாயை தணந்ததுவே. (உகசு)

* உள்ள வலியெல்லாநீங்கி யொருவனுயு மொருவாத, வுள்
ள வலியொன் றுடையத்ஞ் ஞர்ப்பி மன்ன னெதிராக
*ஞெள்ள லில்லா தோர்மரத்தைக்கதையாய்த் திரித்து நில
ங்குழித்து, +ஞெள்ளல் வந்தான் மிருகண்ட முனிசொ
லுடனே ÷ஞெள்ளவந்தான். (உகஎ)

* வந்தா யாவென் றேமன்ன னுளைக்கு முன்னே வல்லூர
னந்தாய் பரியோ டென்றுதண்டை யெறிய நம்பி ௦நவிரத்
தாற், சிந்தாநின்றான் றைத்தியனுந் திருகிவடக்குத் திசை
சென்று, னெந்தா யுமையை யீன்றானு மிவுளி மேற்பின்
னெய்தினனே. (உகஅ)

* தொடர்ந்து நார சிங்கன்றன் னுயிரைத் தொலைப்பான்
சொலுஞ்சூளைப், படர்ந்த தகுவ னறிந்துவிரைந் தனிலன்
போலப் பாறிடப்பின், னடர்ந்து பரிமே லணல்வரக்கண்
டஞ்சி யவனோர் மலைமறைந்தான், மிடைந்த வாறு முகன்
சமரின் வெருண்ட †வேழ முகன்போல. (உககூ)

---

* ஞெள்ளல்=சோர்வு. + ஞெள்ளல்=சீக்கிரம்.
÷ஞெள்ள=உடன்பட. ௦ நவிரம்=வாள்.
† வேழமுகன்=தாருகாசுரன்.

வேறு.

* மூக்கொடி மன்ற வேலோடு முடிநான்கு கொண்ட கோமா
னக்கொடி யவனூற்றுது மறைந்ததையறிந்துசுற்று, மைக்
கொடி வனாயி னேடி வரவவ ணோர்வி டர்க்கண், டிக்கொ
டிஞ் ஞாலம் யானுஞ் செயிர்த்தவன் கிடப்பக் கண்டான்.()

* அம்மலை யுடனே சேர வவுணனை யசியா லும்பர்
விம்மலை யடையப் பண்டு விருத்திரா சுரனை நாகச்
செம்மலை வச்சி ரத்தாற் சேதித்த விற்சே தித்தான்
கைம்மலை முகனை யீன்ற கன்னியை யீன்ற காளை. (உஉக)

* தானவன் றன்னை வாளாற் றடிந்தமன் னவனைக்கண்ட
வானவ ரதிச யித்து மலர்மழை பொழிந்து வாழ்த்த
வூனதி லெழுந்த சோரி யுவரியோ லெழுந்தங் குள்ள
கானக வூரக லெல்லா மொன்றெனக் காட்டிற் றம்மா.()

* வல்லூரன் றனைக்க வர்ந்து வாட்டிய வனைக்கு நாமஞ்
சொல்லுவர் கவர்த்தி யென்றே யப்பெயர் ருர்க்குந் தோய்
ந்த, தெல்லுறழ் §கணக்க ணத்திற் கவனுடல் விருந்திட்
டேந்த, லல்லுறழ் களவீ ரட்ட னருட்டிற மகத்திற் கொ
ண்டான். (உஉஉ)

* குருதிதோய்ந் திவுளி மீது குலவுமெய் விகனைக் கண்ட
பரிதியுஞ் சிவந்து மேல்பாற் பாதலத் தொளித்தான் மன்
னன், வருதினி யமச்சர் தாமும் வருந்திவள் ளலைவல் லூ
ரன், பிருதிசெய் தனரோ கங்குன் மேவியு மேவி லானே

என்றல முற்றுச் சோர்ந்தங் கியாவருந் துருவி யெய்த
மன்றன்மா லையினான் செக்கர் வானெனப் பரியின் வந்தான்
பொன்றினர் வரிக்கண் டார்போ லெதிர்கண்டார் பொற்று
டாழ்ந்தா, ரின்றிது தகவோ வென்று ரியன்றகேட். டும்பி
ன் றாழ்ந்தார். (உஉரு)

---

§ கணக்கணத்திற்கு=பேய்க்கூட்டங்களுக்கு.

* அங்கிவந் தவனுக் கியாரு மகங்களித் துபசரிக்கப், புங்க
மோ டிருந்தான் சுங்குற் போதினைக் கழிப்பா னெண்ணி,
யங்குழுச் சிரத்த னான காரண்ட வவுணன் றூதர், செங்க
ளத் தியன்ற தன்மை செவிசுடச் செப்பக் கேட்டான். ( )

* வெம்பிழுச்சிரத்து மீதுமிகுமறுகரத்தான் மோதிக், கம்
பித மெய்டந்து வீழ்ந்து கதறிக்க ணீர்சொ ரிந்து, நம்பியா
னிருந்தே னெம்பீ நரன்கையின் றெப்பு வித்தே, னிம்பரி
னிருப்பும் விட்டே னிதோ வந்தே னென்று பின்னும். ( )

* உன்வலி யாலே மூன்று முலகவர் பணியப் பெற்றேன்
பின்வலி யொருவ ரேனும் பேசவு முளரோ வந்தோ
வென்வலி யிறந்த பின்னு மேனிருப் பேனென் றென்று
தன்வலி பொருந்த மூன்று வாயினுற் றயங்கிச்சொன்னான்.

## மூன்றநாட்போர்.

* அரக்கியர் குழுக்களங் கங்கலறிட வவுணர்யாரு
மிரக்கமோடலறக் கேட்டவிருள் பயந்தொளிப்பச் சூரல்
கரத்தினை நீட்டிவெம்பு காண்டனை யெடுப்பான்போல
வுரத்துட னெழுந்து கீழ்பாலுதய வெற்பேறினானே. ( )

* உதயனைக் கீழ்பாற்கண்ட வுடன்வல்லூரனை வெங்கண்ட
ததையளி முரலீராறு தாமமார் மார்பினான்றன்
சிதைவில்சேனைகள்களிப்பாற்○றிண்டியோ*டமுவமார்ப்பத்
துதையொலி திசைகளெல்லாம் வெதிர்படச்சூழ்ந்ததம்மா.

* தம்பியை யிழந்து பாரிற்றங்கு தறகவோவென்று
வெம்பிவல் லிருளிற்றுஞ்சாமிகு துயரத்தன் கன்னம்
பம்புமவ்வொலிபோய்த்தாக்கப்பதைத்தெழுந்தரியையானைக்
கும்பர்வந் தமர்க்கழைத்த கொள்கையீ தாயிற்றென்றே.( )

* கடுஞ்சினத் துடனெழுந்து காரண்டவவுணன் பொல்லா
வடுஞ்சமர்க்கோலங்கொண்டேயனிகமோடார்த்தெழுந்தான்

---

○ திண்டி=தம்பட்டம். * அழுவம்=முரசு.

கொடுங்கொழி லுடையோர் முன்பின் குறித்தறி யாது வாளாக், கெடும்படி தாமே செய்வா ரென்றசொற் கிழ் ப்படாதே. (உகஉ)

வேறு.

* வானைச் சினத்தெய்து மியானைக குழுக்கள் வழுக் கில்லதோர், கானத்து லூகத்தி னண்டதகை முதலேழு கதியுற்றிடுங், தேனுக குழுஉக்கள் செயததேர்க் குழுஉக் கள் செயிற்கொண்ட வாட, டானைக குழுஉகக டனைச சூழுறச் சந்தனத் தேழினுன. (உகங)

* எங்கும்பலிய சாலமாாபபத் தனுசர்தா னையிருபக் கமும், பொங்குங் களிபபோடு புகழுக களத்திற டொரு ப்பொத்தசிர், தங்கும புய்தீதா ன்வன்சென்று முவொ ன்று தனிவாய்களிற, சஙகங் தரித்தே பிளிாததான்பல ண்டனு சலிப்புறறவே. (உகச)

வேறு.

* அண்ண ருனையு மசுரன ருனையுங்
கண்ணரி நின்றமா கலந்து டற்றினா
கண்ணி ராறுடைக் கடவு டானையு
நண்ணு சூருடை *ஞாட்பும் போலவே. (உகரு)

வேறு.

* அடுத்ததா னவர்கண் மீதவ் வரசன்று னைகள்சினந்தே விடுத்தனர் சிலீமு கங்கள் வியன்பெருட் குழுவுமாவுங் கடக்களிற் றினமும் பன்மா காணுறுங் தேருநு சிந்தக் கெடுத்தன கண்டாங் கார சிததனுங் கெழுமி வந்தே.

குசிசிறன் றுனை மீது கொடுங்கனை யனந்தம் வாய்ப்ப யரிசிலே நிமிரா வண்ணம பெய்யவான் மாரி யேய்ப்ப ரிநிறத் தரச மைச்ச னனகசுந் தரனெ திர்ந்தே யரிகனையனந்தமுய்க்கவிருவருமுடன்றார்வெம்போர்.

* ஞாட்பு—படை.

* நாள்வலி யுடையோர் விற்போர் நானில நடுங்கச் செய்தும், வாள்வலி யுடனெ டுத்து மாதிரம் பொரு போர் செய்துந், தோள்வலி யாற்றண் டேந்திச் சுழற்றனற் கொளுவச் செய்துந், தாள்வலி மற்போர் செய்து மிருவருந் தளர்ச்சி கூர்ந்தார். (உ௩௯)

* அனகசுந் தரனிவ் வாறு யமர்புரிந் திளைத்தல் கண்ட கனகநாட்டவர் வியந்தக்காரண்டன் பொருநற்கொல்லு நனிவலியமச்சற் கீந்தா ருடனெழுந் துரப்பியன்னோன் றனுவிரு கூற தாக்கி யரியெனத் தருக்கி நின்றான். ()

வேறு.

* தருக்கி நின்ற சாமந்தனைத் தெரீஇக்
கருக்கொண் மெய்யுடைக் காரண்டன் வெகுண்
டுருக்கு செம்பிளேக் குடனடைந் தெதிர்
செருக்கு டன்றனன் றேவ ரஞ்சவே. (உ௪0)

* அலகி லாக்கணை யசுர னுய்த்திட
விலகி லாவலி மெய்ய மச்சனு
நிலை தளர்ந்து வெந்நிடவு நேர்ந்தனன்
றுலை நிகர்ச்சுகு ணேசன் றார்த்தன்றான். (உ௪௧)

* தன்றான் வந்துகூர்ச சரந்தொ டுத்திடு
மன்னன் மந்திரி வன்மை நோக்கியே
நென்ன லென்பினைக் கொன்று நீகிய
துன்னி யாணைவ முடனெதிந் திரோ. (உ௪௨)

* என்று கூறிவெஞ் சினமுட னெணிற்
றுன்று வெங்கணை தூறி யார்த்தனன்
மன்றல் பன்னிரு மாலை மார்பனுற்
பொன்ற வந்தெதிர் பொருது தீயனே. (உ௪௩)

இவன் விடேவெலா நூறி யெண்ணில்கோ
லவன் விடுத்தவு ணேசனூர்ந்த தேர்த்

துவச மற்று வீழத்தொ லேத்தன
னிவரு ளச்சுகு ணேச னென்பவன். (உசச)

*கண்டு வெம்பிக் காரண்டன் வேறொர்தேர்க்
கொண்ட னற்கணை கோடி யேவியே
மண்டு மந்திரி யாதி வாகினி
யெண் டிசைஇ யிரிந்திட வியற்றினன். (உசரு)

*வீறி நின்ற தானவனை மேவினார்
பாறு சேனையும் பண்டம கிபருந்
தேறி வந்தவர் தமைச் செயிர்த்துரை
கூறி யாரொடுங் கோவை யண்ணினன். (உசசு)

## வேறு.

படையொடு சூழ்ந்து பொல்லாக் காரண்ட வவுணன் பாய்மாக் கொடியிர தத்தை யுந்திக் கொடுமர நிமிரா வண்ண, மடுபடை மாரி தூர்த்தா னதுகண்ட வவுணராசூழ்ந்து, விடுகணை மாரி தூர்த்தார் வரைமிசை மேகம் போன்றே. (உசஎ)

* கடையுகத் தெழிலி யேழுங் கனன்றுபெய் மாரி போலுந், தடையிலா தேழு வாரி நாற்புறந் தகைந்த போலும், விடையிலங் குறுவீ ரட்ட னருள்வலி மேவு வோன்பா, லடையலர் படைக ளெல்லா மொருப்பட வடைந்த தம்மா. (உசஅ)

*கடைனு னிருபோர் தம்மின் மூவேந்தர் தமைவெ ன் கண்டோன், கொண்டனோர் கொடும ரங்கைக் கொண்டெனில பகழி கோத்தான், மண்ட சுரர்கடம் வாளி யவையெலாம் விழுங்கி வானி, லண்டர்க ணடுங்கச் சீறி யாசினை மூடிற் றம்மா. (உசகூ)

## வேறு.

உரத்த வெம்பனி மூடலை யரியொழித் தமைபோற்
கரத்து வாள்கொடு படைபடாந் துரிசறக் கடிந்தான்

விருத்த னாகிய மறையவ னாய்முன மேவத்
திருத்தகுனாசொலாற் சங்கரனருட்டிறனாசெறிந்தோன்

பொங்கு றாம்படைக் கலம்பினும் பினுமுறப் பொரு க்கென், றெங்க ளும்பரி மிசையிவன் வாள்கொடு மீண் டிச், செங்க ரங்களுன சிலைகளு சிரங்களுஞ் சிதறி, மங் க விட்டினா னவுணரைத் தைவிகன் வயிந்தே. (உருக)

அரிதி னேவிய கணைகளு மவயவங் களுமன்
பொருது வாளினா லபசயப் படப்படப் புகுந்து
விரவி யோடினர் சிலருயிா விடுத்தனர் சிலரச
செருவி னாருடல பின்னமாயக் கிடந்தனர் சிலரே. ()

இவ்வ ணம்படை யிரிதரப் புரிந்தெரி யரக்கன்
கைவ ணங்தளர்ந் தேங்கிட வாள்கொடு கடிதிற்
செவ்வி யார்கொடி குடையிர தங்களைச் சிதற
வல்வி யாங்கல னுடல்கெடச் சினந்தனன் மறவோன்.

செல்வப் போர்நர சிங்கனற் கரத்துவாட் டிறனான்
மல்விற் றனையு மூர்தியும் படையையும் வாட்டிக்
கொல்லத் தன்னையுங் குறித்ததை யறிந்தகா ரண்ட
னல்லற் பட்டுள மொருவகை தேறியீ தறைவான் ()

சித்த வெண்ணெழிற் றமபியைச் சிதைத்திடுந் திறலா ற, பார்த்தி பாவெனைத் திருணமா யெணிகொலப் பார் த்தாய், கோத்த விவவெரிக கணையினி னுடலெரி கொ ள்கை, பார்ததி டாயெனச சொலிககொளு வினனந் தப் பசழி. (உருரு)

சினத்தி னாலெட்டுத் திசைகளும் பொறிகள்போய்ச் சிதற, னைத்த செந்தழற் கணையினை வருணனத் திரத் தைகக, குனித்த வில்லினிற் கொளுவியங் கொழித்தன னிருபன், பினற்றயித்தியன்றமதாத்திரமனைழபெய்தான்

ஏய்ந்த தாமநுங் கைகதர விராசதக் கணையைப்
பெய்து பூபதி சூழ்ச்சியிற் கொடியையும் பிளந்தான்
வெய்திற் றீயவன் சண்டமா ருதக்கணை விடுத்தா
னெய்தி னங்கதை யுணப்பணிக் கணையினை கொடியின்.

* கோவ டுசெசெயுங் குரிசிலு முதவினன் குறையிற்
றேலடுச் செயுங தருவனு மதிர்ந்துடன் சென்று
காவ டுப்படச சிலவுரை கவிற்றிப் பின்னயர்ந்து
பூவ டுத்தவன் பகழிகை யெடுத்திவை புகல்வான். ()

* எனது பின்னவன் முதலெவரை யுந்தொலைத் திருந்து
மனது னைக்கொல வரவிலை யெனெனின் மதனன்
றனது சீரிளமை யுமறப நரனதாய்த் தரித்த
வுனதுருத்தனைக் காண்டொறுங் காண்டொறு முவந்தே

* இந்த வெண்ணரீ யறிவுரு தெனையெளி தாகச், சிந்தை கொண்டுகன் னிசசமா விளைத்திவை செய்தாய், ஷிந்தைச் சே*ரசப் பறழ் †புலை மருட்டிய விதம்போ, னிந்தை யின்னமும் பெறேனுனைக் கொலாதுநெஞ் சிரங்கி

* கஞ்ச னுன்முன மெனக்களித் திடுமிந்தக் கணைக்குத்
துஞ்சு வாரெவ ராகினு மீண்டுறார் தொடுக்கி
னஞ்சு றுதென்று னிற்கின்று யீதுனை யடுகிற்
பஞ்சு றுகின்ற தாகுவா யனலவந்து படினே. (உகூக)

* எனனக் காரண்ட னிசைத்தலுங் குசைப்பரி யேங்கல், மூன்னைச சூழ்வினை சூழ்ந்துனை முடிப்பதைத் தேறு, தென்னைப் பார்த்துநீ யிரங்கலே னறங்கொள்வோரியற்கை, தன்னைக் கூறுத றகுங்கொலே பழியவந் தரித்தோய். (உகூஉ)

வேறு.

* உன்றனாலே யாகும்வகை யொளியா தென்முன் புரிவாயா, லென்று வேந்த னகைத்துரைப்பக் கேட்ட லவு

---

* அசப்பறழ்—ஆட்டின்குட்டி. † புல்—புலி.

ண னிருமூன்றாய்த், துன்று நோக்கி னெரிப்பரம்பத் தெ ழித்துப்பிரமன் றுணையடியை, யொன்று படக்கொண் டவன்கணையை யுய்த்தான் வலியை யெய்த்தானே. ()

* விடுத்த பகழி யொன்றுபல கோடியாக விரிந்துல க, முடுத்த திசையெல் லாங்கால வனலைச் சிவணப் பல வசியாய்க், கடுத்து வரக்கண் டரசன்வெள்ளங் கலங்கி யோட நெறிகாணு, தெடுத்த துயரின் முறைகூறி யேங் தற் சூழ லீண்டியதே. (உ௯௪)

* பிரமன் பகழி யாலவிடப் பெருக்கிற் சூழ்ந்து வர க்கண்ட, நரமன் னதற்கின் னதுபுரிந்து நலித்த லென்ப தோரார்து, சிரம னுசசி யத்தறங்கொளீ சிகர சீகா ம ணிநாதப், பரம னருளுட் டியானிக்க வீதொன் றங்கு பதிந்ததுவே. (உ௯௫)

* எல்லாம் விடுத்தே யகோரமறை யினிதி னறிவி னிருந்திநின்றான், வல்லாண் மையினுல் வரும்பகழி யி வனைக் கண்ட மாத்திரத்திற், சொல்லா லடங்கா முத்த லைச்சூ லத்தன் போலத் தோன்றுதலான், மல்லார் புயத்தை வீகனடி வணங்கி யயன்பான் மருவியதே.

* தீது கண்டோன் விடும்பகழி யெவர்க்கு மோரீங் கின்றிச்செல், போது கண்ட தேவர்கணற் போதுகொ ண்டு போற்றிநின்றார், காது கண்ட தருவன் விண்செ ற் காது கொண்டங் கயர்ந்து நின்று, னீது கண்ட நா சிங்க னிரங்கித் தருவனுக கிசைப்பான். (உ௯௭)

## வேறு.

* யாதொரு குறையில் வாழ்வைநீ யடைந்து நிலை பெற நடந்திடா தந்தோ, மாதொரு பாக னடியவர் தம் மை வலித்துப் பல்வகையினும் புரியுந், தீதொரு வா தால் யாவையு மிழந்தே துவசமற் றிடுமிந்தத் தேரின்

மீதொரு வாது நின்றிடச் செய்த தினஞ் செய்யும் விதமுநீ தேர்தி. (உகூஅ)

*இதுவரையிலுநீ புரிந்ததீங்கெல்லா மிரிந்துமேம்பட வுரைத்திடுவன், விதிவலியதனாற் கொள்ளவுமாட்டாய் கொள்வையேல் விளம்புதற்கீதுந், ததியதுவாகுமென்றனனவன்முற் றன்மையும்வன்மையுந் தெரிந்தோன், பதியுரைத்திடுஞ்சொற் செவிசசுடவுளளம் பதைத்தவுணனு மிவைபகர்வான். (உகூகூ)

*அண்ணலேநின்சொ னன்னெறிக்கணியே யாயினுமமையொரு பொருட்டா, யெண்ணலேனஃதென் னென்னையேலுரைப்ப னென்னுயிர்த்துணைவனே முதலோர், மண்ணிலேமடிய வென்னுயிரோம்பி வானவர்நகைக்கமாநிலத்து, நண்ணலேன்மானங் கெடவிருந்தாலு நலத்தநித்தியமனு குறுமோ. (உஎ0)

*இன்னமென்வலியாற் கூடியவரைபோ ரியற்றிவெங்கொளாதி யானிறக்கின், மனுமுமூவுலகி னின்பெயருளள வரையினு மருவிசைபோதும், கொனுடையரசே கொன்னுடைவசனங் குறிகதிடாதினியமர் குறிக்கொண், டென்னுடன்புரிதி யென்றனனிமையோ ரிறைவஞைப்புறங்கண்ட விகலோன். உஎக

*கொடியிழுந்திடுந்தனி றேரிணையொருவிக் குந்தவேலசிகண்தயாதி, கடிதரும்படைகண் மூவிருகரத்திற் கவினுறவீரநின்ரேறு *ருழுவை, படிமிசைபாய்ந்த வகையினிற்றுவிப் பார்த்திப நினதுடலாவி, நொடிதனிலடையும் பான்மையையறிதி யென்றுகாரண்டனு நுவன்றே.

வேறு.

*காரத்தின்மிசையுள படைக்குழுவைநனி கதிர்க்கொள் பலவகைசுழற்றியு, முரத்தகருநிற மூயர்த்தவறுவ

---

* உழுவை—புலி.

ரை யுரத்தபுயமலை குலுக்கியு, மரத்தவிழிகளொ டிர
ப்புமொழிநகை யடுத்ததிரிசிர மசைத்துநீள், பரத்தவு
டகம தகிர்க்கவரவுகள் பதைக்கவிருநடை பதித்துமே.

*கதித்தவலியுள குசைப்பரியனெதிர் கதத்தவவுண
னுமதட்டியே, யெதிரொத்துநெடியி னுவட்டமாயிதி
யெனசசொலியிரத முடைத்தலும், விதுப்புடனரசி
ரதத்தையொருவிறல் விசைப்புரவிமிசை விறற்கொ
ளு, நிதிக்கடவுளென வசிப்படையிலக நிசித்தனுவன்
முனர் நெறித்தனன். ௨௭௪

*கடுத்தசுரனமுன ரடுத்தவிறைவனமெய்*கடுத்தலைமு
தல பண்டகல, மெடுத்தரவரியை மடுக்கவலமர லெ
னச்சுழலுறுவேல் விடுத்தலும், ‡வடுசசுழல்பனிறு மலர்
த்தெரியலிறை வசிக்கொடு கடிதினசித்தனன், விடக்க
யில்சுர னிடக்குடனமரை மிகசசெயவரசையடுத்தனன்

வேறு.

*இரண்டு கையினில் வாளொடு பரிசையு மேந்தி, யி
ரண்டு தோளிறை யுடனகொடும் போரியற் றிடமற், றி
ரண்டு கையிற்றோம ரமெடுத் தனிகமெய்த் திடசசெய்,
திரண்டு கையினற் குரோதமோ டெழிற்பரி மிசையே.

*சூட்ச மாகவே கதைகொடு மோதலுந் தோமின்
மாட்சி சேர்பசும் பரியுமெய் §யனுங்குற வள்ளல்
காட்சி வெம்பியப் பரியொரீஇக் காலகா லனைப்போ
னீட்சி கொள்சினத் துடனசு ரனைநெருங் கினனால்.

*அண்ண றன்னரு கெய்துமுன் னடற்கதை சுழற்றித்
துண்ணெ னும்படி மோதுறத் தூக்கிய காலை
வண்ண வாளினன் ‖மன்னவன் கரத்தொடு †வயிர
மண்ணின் வீழுற வெட்டினன் மட்டிலா வலியோன்

*கடுத்தலை—வாள். ‡வடு—வண்டு. §அனுங்குற—நடுங்க. ‖மன்னவன்—மன்-தெய்வீகன்; அவன்-காரண்டன். †வயிரம்—கதாயுதம்

*கரமி ரண்டறக் காரண்ட வவுணனுங் கனன்று
சுரர்க டுங்குற விருகரப் பரிசைவாள் சுழற்றி
விரவ நாரசிங் கனுமப்போர விரவினன் வெகுண்டே
யிரணி யன்றனே டரியம ரியற்றிய வென்ன. உஎக

*முரண்கொண் மாதிரப் பெயர்கொ*ளம் பொருள்களு
தரங்க வேலையும் பாதலத் தொடுநிலை தளர [முந்நீர்த்
வெருண்டு வானவா மானவா விழிபுதைத் திடவவ்
விரண்டு பேர்களு நகைத்தசி யமரியற்றினரால்.

*தத்து மக்குள விஞ்சையை வாளமர் தன்னில்
வித்த கம்படக் காட்டி நின்றெவர்களும் வியப்ப
வொத்த தன்மையிற் போர்புரி யளவையி னுமையா
ளத்தன் மெய் வலி கொண்டவ னடலினி தையர்வான்.

*தன் கரத்தின்மே வசியினற் றனிவ லித்தான
னின் கரத்தொடு வாள் பரிசையு மற வனுசின்
மின்க ரத்தொடு புவியில் வீழவின் வெட்டி வீழ்த்தே
கொன்க ரத்தினிற் சங்கெ டுத்தொலித் தனன் குரிசில்.

*அரிரண்டு கைத்தலங்களும் படைக ளோடிறவே
காரி யன்றமுக் குவடுடை வரையிற் செங்கலங்கல்
வாரி யாமெனச் சோரிமெய் யொழுகுற வலியா
லோரி ரண்டுகைத் தலத்திற் றேமா முடனுடன்றும்.

*அலகி லாதபன் மாயையின் விசையையா லரசன்
குலவு தானைமுன் பலவுரு வாயமர் குறித்து
மிலகு கோடா னெதிரின் முன்னுரு வெடுத்தியன்றுந்
சுலவி நின்றனன் வஞ்சனை யளிதகிடுந் தோன்றல்.

*எண்ணி றனையுந் துயரொடு பலதிசை யிரிய
வண்ண றன்றெடு பலவகை யவுணன்போ ரடர்க்கக்

---

* ஐம்பொருள்களாவன— ஆகாயம், திசை, பூமி, மலை, யானை.
* அபர்ஜன்—செப்பான்

கண்ணை னற்பொறி காலவங் கங்கடைந் தரியா
னண்ணு ருக்களைத் தடிந்தன னரசிங்க நம்பி. ௨௮௫

வேறு.

நரபதி யொருவ னோடு நவைநிசா சரன்பல் வாறாய்ப்
பொருதல்கண் டிஃதரன்கொ லோவெனப் புகன்றுநந்தி
விரிவிசும் பிடையே நின்று விளம்புவ னிவனை நோக்கி
யரனருட் பிரேர கத்தா லசரீரி வாக்கா லன்றே. ௨௮௬

வேறு.

அகில பாலன வேந்தனே புராரியை யகற்றிற்
றிகழுறத தியானஞ் செய்து செயிரில்வா டன்னைப்
புகலு மகண்ட பரசின்நன் மந்திரம் புகன்று
பகை நிசா சரன்முடி பொடிபட் டிடுவாயால். ௨௮௭

பரமநற் பிரசா தத்தா லிவனழி படுவான்
றிருவுளத் தொடுமிறை யவனுன் னிடஞ் செறிந்தா
னரைய னேயெனத் தைவிகன் கேட்டக மகிழ்ந்தான்
கருதுமவ் வணமரா னடி கருத்தினுட் கொண்டான்.

பிறையு லாஞ்சடைக் கடவுண் மந்திரஞ் சொலிப்பெரிது
மிறையு நல்லொளி வாளினை யெறிந்தன னிருப
னறைய மன்னவா ளழற்பொறி பரந்தமர்க் களத்திற்
குறுகி நின்ற தானவன்பல மாயையைக் கொளுத்தி.

சண்டமா ருதவேகமாய் வாள் வருந் தகைமை
கண்டுகா ரண்ட னீதுநம் முடிவெனக் கடிதிற்
கொண்டல் போலதிரந் தொருதண் டங் கைக்கொடு கு
லவி, விண்ட லங்களும வெருவுற வாளெதிர் மேவி.

நின்று ரப்பியத் தீண்டினுல் மோதுவா னெருங்கு
துன்று ரத்தகா ரண்டன்முச் சிரத்தையுந் துணித்தே
யன்று ரத்தகல் வரைமுடி மூன்றையு மளக்க
வொன்றுறச், செய்த வகையினிற் புவியிலுய்த் ததுவே.

*உரத்த காரணடன் கருவரை யனையபே ருடலங்
கரத்தி லோங்கிய கதையொடு பாதலங் கலங்க
வரத்த மாலையேய்ந் தணலுளம் வெருவமுன் னடைந்தே
பரத்தல் போற்புவிப் பாவைமேல் விழுந்தது பதைத்தே

*மண்டு மன்னனும் பின்சென்று நகைத்தனன் வூதியும்
விண்டு வாதியோர் படிபெண்ணை யாடியே வேந்தன்
பண்டுபோலவல மலாக்கைவந் தொளிர்ந்தது பண்ணோர்
கண்டொன்றா கடற்கரை கண்டாா கரியவ னோடும்.

வேறு.

*கரம்விரித் தளிசே ரகங்களித் தளிசேர் கற்பக மலர்
மழை பொழிந்து, முரசமே முதலாம் பல்லிய முழங்க
வரம்பையர் முதுநடம் புரியத், திருவருங் கான விசை
பல செய்யத் திக்கெலா மகிழ்வொடு திகழக், கிருது
சன் வலங்கொள் சுழியொடுங் கிளரக் கேழுடுக் கணங்
களவிரான் செறிய. ௨௯௪

*இந்திரன் புட்ப விமானமீ தெழுந்தே யேகவீரட்ட
ன்சீ ரியம்பி, யந்தரத் தெவருஞ் சூழ்வர வவுணனடற்
களை மீதுவந் தடைந்தே, கந்த டர்புயமும் வயமலி வா
ள்சேர் கரமும்பன் னிருதொடை யுரமு, நந்த விலாதா
ய் விளங்கு நான்முடிகொ ணரசிங்க பூபனைக் கண்டான்

*கண்டக சூரை யிருபிள வாகக் கண்டவன் றனைக் கண்
டபோற்றுக், கொண்டல் வாகனனு மிகுகளிப் பெய்திக்
குமரனை யெமர்களைப் புரக்க, மிண்டிய வரக்கரோட
மர் விளைத்து மிகுதுன்பை யெய்தினே மேலோர், விண்
டசொற் படியே யுனக்குக் கைம்மாறு விண்ணுலகத்
துமே யிலதால். ௨௯௫

*நாலிரு குணத்தா னைந்தொழி லுடையா னான்முகன்
மாலுந்தே டரியான், பாலிரு மருளை யிம்மை யம்மையி

னும் பழுதறக் கொண்ட பார்த்திபனே, யேனுற வுனக்
கொன் றியான்றர வுளதோ வென்றுநல வீரகை மாலை
யினை, மேலுறத் தரிதரப் பிரபந்தம் விரித்து விழிகளா
யிரங்களுங் களித்தான. உகூஎ

*படித்தினிற் சிறந்துமூ வுலகமு நின்வலிக் கொடு புர
க்கும் வாசவனே, சகதினிற் பிறந்து மும்மலம் புரக
குஞ சழக்கனேற் கிவைதகு மோபொன, னகத்தனுக
கோவல வீரட்ட நம்ப னருடகன்றி யெனறிறைை நவின்
று, னகத்தினின மகிழுத் தமரர்நாயகன் கேட்டட ன
ரசிங்கற் கிதறைவான. உகூஅ

*இன்ன மென்மேலாய்க் கோவல் வீரட்டத் திறை ய
ருள்கூட்டு வித்திடுநீ, நன்னசர் தனகருத் தானேயோ
டடைதீ யென்றுரை நவீறறியிந் திரனும, பொன்னகக்
கடைந்தா னனகசுந் தரனே யாதியோா பொலிவுடன்
பொருந்தி, மனன்வற் றொழுது புகழ்ந்துபைம பரிமே
ல் வள்ளலைக் கொளசசெய்து மகிழ்ந்தார். உகூகூ

*வானவர் பினனு மானக முழக்கி மலர்மழை சொரி
ந்தனர் மகிழ்வாற, றுனையந் தலைவர் வாகை மாலையை
யுசசரிக்கப் பல்லிய வொலிசால, தானவா கடலைச சுவ
ற்றுநல் வடவா முகமெனத் தானவாத் தொலைத்த, மா
னவே னிருபன் மாமிசை சென்று னரசமா வனத்தினை
மருவ. ௩00

வேறு.

*சிரண்டர் செல்வ மெல்லாஞ் சிதைத்திட வந்த வந்தக,
காரண்டனுடலிற்சோரிக்கடன்மூழ்கிசசிவந்துமேல்பா
கூரண்ட யோனிபானுங் குலவிருட் கடற் கரந்தான் [ற்
பாரண்ட நடுங்க வந்த வவுணன் மாய்ந்தும் பயந்தே

*துணங்கறலோடுமெல்லாத்துட்டனைவெட்டுங்காலை
தினங்கம ழுடலைக் கண்டு வெருவிய நிருபன் றன்னை

யணங்கு செய்திடவே பிர்மஹத்தி மெய்யடைய மாழ்கி
மணங்கமிழ் தெரியலான் பைம்மாவினை யொருவி நின்றான்.

* நின்றவன் முன்னர் மாண்டகாரண்ட வல்லூரார்நேர்போர்
துன்றினர் போலப் பிரமஹத்தி வேந்துடலிற் சூழ
நன்று நன்றென்று சொலலுங் கலகலவென நகைக்கும்
வென்றி கொண்டனையோ வென்னுமுரந் தட்டுங்கரமீ விரி
க்கும. (௫0௫)

* இதழ்மடித் தூரபபும் பல்லை நெறுநெறுவெனக் கடிக்கும்
பதமுறப புசிப்பேனென்று பையென வாயங் காக்குங்
சதமுற நடிக்குங்கேசங் களைவிரித் துலவுங கண்ணைச்
சிதறன லுடன்விழிகரு மினுமபல தீங்குஞ் செய்யும. ()

இன்னவா றிருளினூங்கு முடியுடை யிராசராசன்
றனனிடை புரியக்காணும போரெலாந தணிபபிலாத
வின்னலுற றுளமபேதித்தே யாதுசெய்வோ மென்றென்று
துன்னு சொற்றுணைவரேனை யோர்களுந துயரினெய்த்தார்.

* நாடட மூன்றுடை வீரட்டநம்பனு ரருளிருக்க
வாடட நாமுறுவ தென்றேவென்று மன்னவனைச்சூழ்ந்து
காடடக நடனனெண்ணி னுமங்கள கழறியென்றுங்
கோட்டமில் லரசைகொணடு *குஞ்சராசனக் காடுற்றார்.

வேறு.

* பன்னு தைவிகன் காரண்டன் முதலைாப்படுத்த
வன்ன காரணத்தாற பழியடைந் ததையகற்ற
வுன்ன முன்னரீந்திடு மாறபழிச் சியப்பழியான்
மன்னு மின்னலை நீக்கிய வாறினி வகுப்பாம். (௫0௭)

காரண்டவல்லூரார் வதைச்சருக்கம்
முற்றிற்று.

ஆக-செய்யுள்-அரு௨.

* குஞ்சராசனம்=அரசமரம்.

உ

சிவமயம்.

# தெய்வீகராஜன் பிரமஹத்தி நீங்கியசருக்கம்.

* அரசமாவன மடைதலு மண்ணலைத் தொடர்ந்து
விரசுறும்பழி விலகிநிற்றலுங் கொஞ்ச ○ மேதை
யரசற்கெய் தியவுட னமச்சனை விளித்தாசில்
பரசுச்செங்கரன் வாழிடத் தெழுமெனப் பணித்தான். (௧)

* அண்ண லாலயப்பாங் கராகு சத்தினாலே
நண்ணிக் கங்குலைக் கழித்தெய்த வதிந்தனர்நரேசற
றிண்ணத் தீப்பழி யிறைவனாற் றேசயனாலவனை
யண்ணக் கூடியதிலா தெதிரலந்து நின்றதுவே. (௨)

* மாகர் தந்துயரோ டிரண்டசுரனை வாட்டி
†நாகவேந் திருந்துய ரடைவதுநல மலவென்
றாகமிக்க னைய்ப்பரிதி யுங்குண கடலுதித்தான்.
சோக முய்க்குமப்பழி யிருள்விழி யிருடொலைய (௩)

* இருள் புலர்ந்தது மெவர்களு மிறைவனுமெய்தும்
வெருள் புலர்ந்தது வினாவினிலே வருமேவி
யருள் புலர்ந்திடா வண்ணனீர் விதியினோடாடி
மருள் புலர்ந்திட வயங்கினார் வெயிலொளிமான. (௪)

* அவ்வ னத்தினிற் பரசிவற் பரவியங்கயலே
செவவிதிற் றவமியற்றிடு மிருகண்டற் சேர்ந்து
கவ்வை நீங்குற வவனடி வணங்கி முற்கருது
தெவ்வை மாய்த்ததும் பழித்துயர் சேர்ந்ததுஞ்செப்பி. (௫)

* ஐயவண்ண லாருரைப்படி யெவரையு மளிக்க
வெய்யதீயரைக் கோறல் செய்தேற்கிது மேவிக்
* கையனுக் குதல்கடன தோவித்துயர் கடந்தே
யுய்யுமாறுள தோவென முனிவனு முரைக்கும். (௬)

---

○ மேதை=அறிவு. † நாகவேந்து=மலையரசன்.
* கையன்=இழிவுள்ளவன்.

* சொல்லு காரண்ட வல்லுரர் சூழுமுற்பிறப்பி
னல்லராகிய பூசுரர் குலத்தினி னண்ணிப்
பல்லவா மறைபடித்திடப் பிரமசாரி யத்தின்
வல்லசீடரா யெழுமிடை வதிந்திருந் தாரால். (௭)

* ஆதலா லவரைக்கொலு மரையவுன் றன்பாற்
காதலாற் பழியடைந்த தங்ககன்றிடக் கருத்தோ
டோதுவே னவர்க்கொல்லுற வுத்தர மளித்த
வாதியுற்றவிப ௦ பிப்பல வனத்தி னின்றமமா. (௮)

* அனுக்கை கொண்டுகௌசிக சுரநதிபடிந் தங்ங
னுனித்தவே தியர்மூன்று நானூறரை நூறு வன்றிங்
கினித்த தன்மையிற கொடுவந்து கோவலூரிருக்கக்
கனித்த வீரிருநூறு பேர்க்ககழு மிக்காவின். (௯)

* நாலிரண்டு நூற்றுவர்களுக் ககழுமே நல்கி
யேனுமானிய மவரவர்க் கியல்பிற்றே டீந்து
நீலகண்ட னல்லாலயஞ் சிறப்பினி னிறுவிக்
கேளுமிப் பழியணுகுறு வகையுங்கொள் வாயால். (௧௦)

* என்று நன்மிரு கண்டுமாமுனி யிசைத்திடவே
நன்று நன்றெனக் காசியினரபதி நணுகி
மிளாற யங்குமாநதி படிந்தங்ஙன மேவுங்
குன்ற விலலபன் மறையவர் குழாங்களைக் குறித்தே. (௧௧)

* ஏந்தல் கூறுவானீவி ரிங்கிருப்பதி னினிதாங்
காந்து சேடொழிற் பெண்ணைநா டடைதிரோற்கவின
ளாய்ந்த நாட்டொடு மில்லங்கள் வழங்குவன்வந்து
டீரொன்பின் னென்றவரடிமுடி சேர்த்தான். (௧௨)

### வேறு.

* ஆரியர் மகிழ்ந்தங் கெத்தனைபேர்க ளடைந்திடவே
ண்டுமென் றறைந்தார், சீரியன் மதியான் மதியினின்

---

௦ பிப்பலம்=அரசமரம்.

மதிசேர் செஞ்சடையவன் விஞ்சைத்திறனு, னேரியன் மு னிவனிசைத்த வெண்மறந் தெண்ணூறு பேசொய்து மென் றிசைத்தா, னேரியன் முதன்மூவரசர்களளித்த நேரிழை யவர்மகிழ் நிருபன். (கச)

* தத்தம் விர்த்திகளோ டெண்சத மறையோர் சதுர் முடியோனுட னழுந்தா, வித்தகன் கோவல வருடன் மேவி வீரட்டன் குகனடி விழைந்து, நித்திய பிறுகிருழு நன்றுட்டி னிகழ்கோவலூருந் தெள்ளாறு, மொததசீர் கு ழப்பலூருஞ் சித்தாங்கூ ரொன்னு¤ன் கூரினுமுரவோன்.()

* ஈரிருசதவி டெய்துற வமைத்தங் கீரிருசதமறை யோனை, யேருற வமைத்தங் கொவ்வொரு புரியுமீசனல் லாலயமமைத்துச, சீருறு வளமானியங்களும் விடுத்துத் தெய்விகன் பின்புரானூறு, பேருட னாசவன மஃதடைந் தான் பெருமை மூவுலகெலாம்பேச (கரு)

* முன்ன நாட்டனது விடாய்தணித்திட்ட முசிவிற் ர்த்தக் கரைப்பாறை, தன்னிடை வதிந்தெண் ணூறக்மண்ம ~~க்கச்~~ சமையதந்திரனை யாதியர்க்குச், சொன்ன வேந்தடி யை யாவருந்தொழுது தோன்றுமக் காடெலாந்தொலைத்து நன்ன கராக்கி வீதிகள் பொருத்தி நவிலுமெண் ணூறக மமைத்தே. (கசு)

* இதமுட னரசர்க்கிசைத்தனர் கேட்டோரொழிந் றி னங்குறித் தெணூறில்லில், விதிமுறை மறையோர் குடி புகவிடுத்தான் மேவுநானூறுபே ரொழியச், சதுசத வகத் துக்கந் தணரின்றித்தங்கிய தண்ணலுக் குறைத்தா, ரது தெரி யேந்தன் முனிமொழி யயர்ந்தது கொடும்பாவமே ன் றயிர்த்தான். (கஎ)

* சகச்சிர விருநூறந்தணர்க் கின்னீதருசெலு முனி யுரைத்தனந்தென். னகத்துரையாலே வந்தரும் வந்தாள்

வினையோவன்றி யரசின், மிகுத்தசோதனையோ வென்செ
ய்கே னந்தோமெய்யனே நின்செயலன்றி, யிகத்தினிலடி
யேற் கொருதுணை யுளவோவென் னபசார நின்னதுவே. ()

* அன்றுநா னனவிற்றோன்றிய தொட்டேற்கருளிய
வருட்டிறங்களைப்போ, லின்றி வணமைத்த விலங்கனிற்பா
தியிலங்கனு னூறறிஞனுக்கிசைய, நன்றிசேர் மறையோ
ரருளுநியன்றே றுனுயிருய்கவேனமபா, வென்றுநான் மூ
டியோ னிருகணீர்சொரிய விசைத்துக்கூற் பாறையெய்தி
னாறல். (கக)

* செல்லு மக்காலை யரியயனிருவர் தேடுதற்கரிய தீப்பி
ழம்பாய், வல்லை நீண்டிடுமென் வரதனுநான்கு முடியுடை
மன்னவன்றன்பா, லல்லலை நீக்கியாட் கொள்வான் வன்
றொண்டன் முனமலகிலா வருளா, லொல்லைசென் றென்
னச் செலவியப்பாகு மொப்பிலா வுருவினைமறைத்தே. ()

வேறு.

* நெறறி யின்கணே புண்ணிய நீறதுநிலவச்
சுறறு குஞ்சி விழுநதசைந்திடச 0சுவலினிற்காதிற்
பற்று குண்டலமிலங்கிட பரந்திடுமாாயிற
குற்ற மில்லுபவீத நறகண்டிகை குலவ. (உக)

* உத்த ரீயநதோள் கிடந்தசைந் திடவுய ‡ராத
பத்தி ரங்கரம் பொருந்திட,வளையினிற படிந்த
வத்தி ரங்கெகிழ்ந தசையவார்ந திடுபத நடையை
ய்த்த மாரிந்திடு *வேணுவங் ககலுறத் தள்ள. (உஉ)

* மிக்க மூப்புடை வேதிய வடிவத்தை விதுவார்
சேக்க ரஞ்சடைச் சிவன்கொடு தேவரும் புகழத்
தக்க நாரசிங் கன்முன மெய்தியித் தரணிக்
கக்க மேயென வறிஞர்கூ றரசவாழ் கென்றான். (உ௩)

---

0 சுவல்=தோள். ‡ ஆதபத்திரம்=குடை. * வேணு=மூங்கில்.

* வீடும் வெஃகினோர் வேண்டிய விளைநில மவையும்
0 மாடும யாவையு மன்னநீ மறையவர்க் கீந்
தோடி வந்தனன் வீட்டையெற் களியென நவின்றான்
வீட ருந்தவர்க் களித்திடு கருணையின் மேலான். (௨௪)

* என்று வேதியன் கேட்டலு மேந்தலு மியைந்து
நன்று நன்றென வணங்கினான் மறையவ னினக்குத்
துன்று மாநிதி யத்தொடு சூழ்புவி கிரக
மொன்று தந்தனன் கோடியென் றன்பினி னுரைத்தான். ()

* உரைத்த வாசகங் கேட்டலும் பங்கண னுரவோய்
நிரைத்த வீடுநா னூறுமெற் குதவென நிகழ்த்த
விரைத்த தாரணி வேந்தனும வேதிய ராறைச
தரைத்த லத்தினின் மிக்கவா றென்னெனச் சாற்றும். ()

* விருத்த னாகிய வேதிய னொருவனீ வினவும
பெருக்க மாகுநா னூறுமந் திரங்களைப் பேணி
யருத்தி யார்மனை மககளா தியரொடு மளவி
யிருக்க வந்தன ருளர்கொலோ வென்றன னிறையே. ()

* இறைவன் வாசகங் கேட்டலு நகைத்திறை வாநீ
யறையு மாறுநா னூறுமந் திரத்தினு மாய்ந்து
மறைக ளோதிய வந்தணர் மனைவியர் சுதரோ
டுறைத ருக்குதி நாளையென் றன்மறை யுரைத்தான. ()

* ஆற ணிந்தவ னருளிய மறையயா கமத்தைத்
தேறு மந்தணர் மனைவியா சுதரொடு செறிந்த
பேறு காண்குறி னாளையான் பெட்புட னினக்குக்
கூறு மக்கிர கங்களைக் கொடுப்பனென் றுரைத்தான். ()

* உரைக்கு மன்னவன் சென்றுழி யொப்பிலான் வெள்ளி
வரைக்க ணூற்றிடு கணர்களை நோக்கிநீர் மருவு
மரைக்க ணத்தினின் மறையவர் படிவங்கொ டரசன்
றரைக்க ணூற்றிடு கிரகங்க டங்குதி யென்றான். (௩௰)

---

* 0 மாடு—பொன்.

* அரவ ணிந்தவ னிவ்வணம் புகன்றபி னற்றை
யிரவு நீங்கிய பின்னர்வந் தேந்தலை விளித்து
விரவு வீடுக டொறுமறை தெரிந்தவே தியர்கள்
பரவி யுற்றமை யந்தணன் பண்பினிற் சுட்டி. (௬௧)

* பாச மேபசு வேபதி யெனுந்திரி பதார்த்த
மாசி லாவகை யாரியன் மொழிப்படி யாய்ந்து
வீசி மும்மல விருளினை வேரற விமல
தாச ரீய்நிட்டை யுற்றிடு ஞானியர் தமையும். (௬௨)

* செப்ப ரும்பர சிவத்தினைச் சிந்தையாங் குகையிற்
றப்பி லாதபே ரன்பெனுந் தளையினைப் பூட்டி
யிப்பு விக்கணெங் கேகுவை யெனப்பணிந் தெங்கு
மொப்பி கந்துறு மொருமையார் யோகியர் தமையும். ()

* படிக மேமுத லுருவினிற் பரசிவன் றனது
வடிவ மின்பினி னுட்டிநன் மஞ்சன மாட்டிக்
கடிபு றும்மலர் சூட்டியோ தனங்கறி தூட்டி
விடியு மெல்லையிற துதித்திடு விமலர்க டமையும். (௬௪)

* வேத நாயகன் றிருவுரு விளங்குற மனத்துக்
காத லாற்றியா னித்துயா கண்டிகை விபூதி
* பூதி யந்தனி லணிந்துபொற் புறுமெழுத் தைந்து
மோதி நாவினு லோங்கிடக் கணிப்பவர் தமையும். (௬௫)

* வித்த மேயெனுஞ் சர்வஞா னோத்தரம் விமலஞ்
சுத்த வாதுளம பவுட்கர முதலவாச் சொல்லு
மித்த கைப்படு மாகமங் களைவிரித் தறையுஞ்
சித்த ராகிய முதன்மையாா தேசிகர் தமையும். (௬௬)

* ஒப்பி கந்தமால் நீக்கிய மோங்குகை வலியந்
தீப்பி லாதசாங் தோக்கிய முதலவாச் சான்றோர்
செப்பு நல்லுப நிடதங்க ளுணர்த்தியச் சிவனை
யிப்பெ ருஞ்சக தீசனென் றிசைப்பவர் தமையும். (௬௭)

---

புறியம்=உடல்.

* மறை யுணர்ந்திடு மந்தண ரிலங்களின் மருவி
யுறைதல் கண்டிடு நாரசிங்கன் றனதுள்ளத்
தறைகுதற் கொளு வின்பு மாச்சரியமு மடைந்தங்
கிறைவ னுகிய வேதியற் கிலங்களை யீந்தே. (௩௮)

* கொள்ளு வாயெனக் கொற்றவன் கூறநற் குழையன்
விள்ளு முண்மையோடிச சுனைப்புனல் கரம் விடுவாய்
வள்ள லேயொரு பொருளினை யொருவற்கு வழங்கி
னெள்ளி னீர்கொடே யன்றியீவது மியல் பன்றால். (௩௯)

* நதிகரந்த செஞ்சடை மறைய வனிவை நவிற்றப்
பதிமிகக் களிப்புட னந்தப் பரமனீர்ப் படிந்து
விதியின் முந்திலா ளளித்தல்போல் விழலனற் கரத்திற்
றுதியுடன் னிதியாதி பெய்தந்த நீர் சொரிந்தான். (௪0)

* ஈந்த காலையின் வேதிய னேற்றனன் மறைந்தான்
சாந்த மாதிய குணங்களி னிறைந்த தைவிக
வேந்து வேதியற் கண்டிலன் வீடுக டோறும்
போந்த வற்றினந் தனனைக் காணுது துன்புறுவான் (௪௧)

* மோது தானவர் மாயமோ விதன்முடி வென்னுங்
காது காரண்டன் பழிகொலோ விதுவெனக்கழறு
மீது நம்பரசிவன் விளையாடலோ வென்னும
யாதென் றண்ணலா ரருளன்றி யறிவதோவென்னும். (௪௨)

* தீதிலாத சிற்சபையி னன்முடிகொடு செழித்த
கோதிலா நரசிங்க னங்காலயங் குறித்துக்
காதலா லடைந் தரன் றிருவுருச சிந்தை கருது
யேதமின்றிய வவன் கழலின்பினி னிறைஞ்சி. (௪௩)

* திரிபுரத்தினை யெரித்தருள் சிருறு புராண
பரம காரண தாபர நாரணர் பரவ
விரவு பூரண விரண விரியாரத் தரித்த
குர்வ கோர ரூபத்த நின் குணகழல் போற்றி. (௪௪)

பறது நின்பதத் துற்றிடாப் பாவியென்றன் மூன்
ற்ற வேதிய வடிவு கொடேய்ந்து கடடமுதை
வெற்றியோ டளித்திட வந்த வகையின் விப்பிரனு
புற்றி லேற்றது நீயன்றியுளது கொலுணர்ந்தேன். (௬௫)

ஐயவின்னமுஞ் சோதிபப தறனன்று லடியேன்
செய்ய கங்களைச செய்யுறு திறத்தினைச் செப்பி
வெய்ய பாதக மனுகுறுதுன் வினைகழற்றி
யுய்யுமாறருள புரிதியென் றுளநெகிழ்ந் துரைத்தான். ()

அனை மறைநதிட வருந்துறு மக நிகராகத்
தனை மறந்திவன் றுயகருந தளாச்சி கூர்வதனை
நனை மணங்கமழு வேணிய னறிந்து மிநநமபி
யினமென் செயகுவ னறிகுது மென விருந்தனனே (௬௭)

* வருந்தி நின்றிடு மன்னனுக கொருவகை யருளும
பொருந் துறுமையா னளவிலாத துயரொடும புகல்வான்
திருந்திடும முனதுத் தரபபடி செருவிற் கொல்
பொருந் தலாாபழி யெற்றொடர் வதுநிறகுப புகழோ. ()

* அனற் பிறந்திடு நாண்முத விறுவரை யைய
வுணக கடைக்கல மாகவென் னுடல பொருளாவி
நினைப புடன்னளித திருந்துமே பகருந் துயரந
தனைச செய்விபபது நினைருடகுத தகுங கொல்லோ. ()

* என்று தைவிகன் கண்கணீா கலுழ விதிசைத்து
மான் றெனுமமுறை யிலாதலே யோய்ந்த வாரிதிபோ
னின்ற காலையிற றன்னுயிா நிகருவான் கரத்திற்
றுன்று வாளெடுத் தடனமிட றணித்திடத் தொடங்க. ()

* ஈதறிந்த தேவரு முனிவரரு மிநதிரனுங்
கோதெறிநத நலலமச்சரு மேனைய குழுவுங்
கிதடைந்துள வுளத்தராய்க் கண்கணீா சிந்த
நாத நின்னருட் கிதுதகா தெனத்துதி கவின்றா (௭௰)

* சுந்தரச் செழுஞ் சோதி துண்ணென வுருக்கொடுநீ
தந்தவிற் கொண்டே னஞ்சலஞ்சல் விதோசார்தேன்
மந்தரப் புயா நில்லுநில் லென்றுரை வழங்கிக்
கந்தரத்தை யீர்ந்திடு கரங் கரத்தினாற் பிடித்தான். (௫௨)

* பிடித்த காலையில் வாளினை யெடுத்தனன் பெட்பா
லடித்திடுஞ் சிவனுரு வமு நாரசிங்கன்றன்
மிடற்றி னூற்றிடு வடிவுமேன் மறைந்தன வியப்புந்
துடிப்பு முற்றிட நிருபனு மவனரு டுதித்தான். (௫௩)

* கன்றை யொத்தவன் கரையமுக் கண்ணினன் வாக்குத
துன்று விண்ணினின் றெழுந்தது சுடர்முடி யுடையோ
யின்று நின்னிடத் தெய்திரா னூறில மேற்றுச
சென்ற வந்தணன்யான் ०செலறீர்குக வென்றே. (௫௪)

* இன்னுங் கேண்மதி யிச்சுனை படிந்திடி னிகலான்
மன்னுறுங் கொடும் பவங்களு மருவிய பிணியு
மின்னல் செய்திடா தேகிடு மியைந்திடு ஞானம்
பின்ன மில்லதோ ரட்டசித்தி கணன்கு பிறங்கும. (௫௫)

* விரும்பி யாமுறை யரசமா வனத்தினில் விரவி
யிருந்து ளோர்கள் சாமீபத்தை யெய்துவா ரொன்னி
லரும்பு மன்பினு லெமைத்தரி சித்தவரருளாற
கரும்பை யொத்த பேறடைவது கழறவேண்டிடுமோ. ()

* ஆதலா லெமைத் தரிசித்திங் காலயப்பணியைக்
காதலாற் செய்து வாழ்த்தியேற் கடும்பழி யணையர்
தேதிலாளர் போலஞ்சலை யஞ்சலை யென்றங
கோதி நின்றது சிவபிரா னருளுரை யும்பர். (௫௭)

* இசைத்த வாசக மன்னவன் செவியினி லெய்த
வசைத்த கச்சுடை யிறைவு னதருளை வந்தித்தான்
குசைக்கு நேர்மதிக் குரவரைக் கூவியன்னவ ரால்
வசைக்க ணுற்றிடா வாகம விதிவழி யறிந்தே. (௫௮)

---

० செலல்=துன்பம். செல்லல், செலல், என்றாயிற்று.

மோத முற்றிடு நரசிங்க னமரரை முன்னை
ரோத மார்கடல் விடமுண்டு காத்தவ ருறையக்
கோதி லாககர்பய கிருகம வான்கிரி யெல்குலவு
மேத மற்றிடு மண்டப மதின்முத லியாவும். (௫

வண்மை யாகச்செய விதந்து நாலேமுன மருவு
மொண்மை யாகிய காமிக முதலிய வுரைகட
கண்மை யார்ந்திடு பூசனை யியற்றுவித தரிய
தண்மை யார் விளைநில முதலிய வறைந் தந்தே.

நித்தநை மித்திகங்களு நிலைபெற நடத்து
வித்துயர்ந் திடுசிவ மறையவர் கட்கு விதியாம
நத்த மார்ந்திடு நிலங்களைத் துயரறச் செய்வித
தத்தரு ரருளாலவர் நன்மை போரடமா.

நெல் விளைந்திடு நிலங்களும் வேண்டிய நிதியுட
னலு மக்கிரகத் தொடுபொருந் துறவளித்தா
லது றழ்ந்த கண்டர்க்களி யகங்களு ளூறறைச
சொலலு மபபடி யடியர்க்குத் துன்னுறக கொடுத்தான்

பாரிற போந்திடு முயிரகளைப பருவரைப் புயத்தாற
காரிற் றூங்குதை வீகனெண் ணூறதாயக் கண்ட
சீருற் றோங்கு மில்லங்களிற் பாதிகொள் சிவனை
யூரிற் பாதிகொண் டவனென வுலகெலா மோதும். (௬௩

சிவனுக் காலய மியற்றலாற் சிறந்த வுறசவாதி
நவமுற் றோங்கிட நடத்தலா லில்லநா ளூற்றை
யுவனுக் கீதலா லவறறிச சித்தலா லவன்சொற்
செவியிற் கேட்டலாற் சென்றது தெய்விகன் பழியே.

எஞ்சிவன் றனதநுஞ் ஞையாற்றை யிகனிறைவன்
செஞ்சரண் டனைத்தினந் தொழுதவ ணுப்பில் செய்யா
டஞ்சமென் றடைந்திடு மரண்சேரி லஞ்சலிமப்பித்
துஞசவா கனன்பிதா வெனவறைய விற்றிருந்தான். (௬

அப்பதிக் கணேயமானன் மிருகண்டு வாதி
செப்பருந் தவவிருடியர் தமக்குநற் சேவை
யொப்பருந் திறத்துஞற் றியன்னவ ரருளுற்றிந் நல்
கப்பணிந் திடுசிவ னடிமுடி யதாவ னிந்து. (௬௬)

*மனு வுரைத்திடு நீதியான் மன்னுயிர் புரந்து
னனுவேற கராவசிக்க வோரசிவந் சிச்சேவை
பினிநற் கோவல வீரட்டனைபபோல விழிதாகக
துனமெய்ச சைவமா புரமெனக் கருதிவந் திததான் (௬௭)

* அக்கண மிறையாபுரி யெனத்தெளிந் தண்ணன்
துக்கணற் புதனருளி தென்றகத்தினின் முன்னித
பில்தாக்கு ௦ மக்குநீர் துளித்திட நரத்தழு தழுபப
சென்ம பன்றனருட் டிறமபல புலநவின்றே. (௬௮)

எங்கணுறு சிவபுரத்து நமதிவணுந் திருவருளே
தங்குகின்ற தெனறெவர்களு மறிவுறச சாற்றிப
பொங்கு மன்புடனவணுறீக் கோவலிற் பொருந்தி
யெங்கணுய கன்றிருவடி படிந்தன்பி னிசைப்பான. (௬௯)

* அண்ணலே யுன்றன ருளவண் குலாயதென் றகத்தி
னெண்ணவில் லதோரறி விலிநகறி வித்தவெந்தாய்
கண்ணொரு மூன்றுடைய *துருமமே யெனததுதி கழ்றி
மண்ணும் விண்ணுமபாதலமுஞ் சீர்புகழவாழ்ந்திருந்தான்

* மன்னு வீரட்ட சிகாமணி நாதனன் மாண்பாற்
றுன்னு தைவிகன் பழியது தொலைந்தவா சொற்று
மன்னவன் சத்தபுரி யடைந்த வணவணளித்த
பின்ன ரைாவேட் டடைவகை விருப்பொடுமுரைப்பாம்.

**தெய்விகராஜன் பிரமஹத்தி நீங்கிய சருக்கம்**

**முற்றிற்று.**

---

**ஆக-செய்யுள்-௩௦௬.**

---

தொக்கு=உடல். ௦அக்கு=கண். * துருமம்=விருட்சம்.

உ

சிவமயம்.

# தெய்வீகராஜன் சத்தபுரிசென்ற சருக்கம்.

* கோவலின் கணேசிவனருள் கொண்டு தைவீகன்
றேவர் போற்றிசெய் திடவுயா புகழொடு செறிந்திங்
காவ லோடுமூ வரசர்க ளளித்திடு மரிவை
மூவர் தம்மொடு முவந்துல களித்தனன் முன்னாள். (க)

வேறு.

கன்னிப்போரான் முக்கொற்றங் கண்டதோர் வகையுங்கோ
மன்னிப்பார்புரக்க வைத்தவகையுந்தம் முன்னர்மாறு [வன்
யுன்னற்கெண்ணிலதாமவிழ்ந்தைசகாட்டியவகையுமொப்பில்
கொன்னற் காரண்டற் கொல்லக்கூறிய வகையுமாகோ. உ

களத்திற் பல்விதமாய் மெய்மை காட்டி [illegible] வகையும் யாரு
துளககரும் கருணையோ [illegible] னீர் [illegible] சுரற றொலைத்த
வூங்கரி னருள [illegible]
[illegible] னன்றி யாசெயற் பாலாரொன்றென்
றுளத்தினி லுன்னியுன்னி யொருவலிலன்பாற் பின்னும்.

* யாதொரு சிவற்கம்ம வீறிழைத்தவா கட்கென்றும்
பாதகஞ் சூழ்ந்து பொல்லாப் படுநரக மிழ்த்து மென்றே
யோதிய பெருதேற்கெண்ணில் பழிகழீஇமேன்மையுய்த்த
மாதொரு பாகன்செய்த நன்மையை மறக்கற்பாற்றே.

*செய்நன்றி கொன்றூர்க் குய்வில்லாதலாற் சிவன்றன்பாத
மெய்வகையருச்சிப்பன்றி விள்ளகைம் மாறென்னொன்று
மைவண மிடற்றன் கோலசசதாசிவ வடிவிரண்டை
யுய்வண மழைத்துத் தாபித்தும்பரும் வியக்கமன்னன். (ரு)

வேறு.

* விதிவகை யுஷக்காலத்தினி லெழுந்துமல சலம்விடுத்
துப்பல்விளக்கி, நதியிடை படிந்து விமைமலரெடுத்து நம்ப
னற்குறிகள் பானண்ணிக், கதுமெனப் பாதேறுதியா யுடீ

டேகஞ்செய்து கந்தபுஷ்பாதி, துதிபெறச்சாத்தி நிவேதன மளித்துத் தூபதீபங்களுங் கொடுத்து. (சு)

* மெய்மயிர் சிலிர்ப்பவிழி புனல்பெருக விம்மிதங்கரண ங்கண்மேவக், கைமுகிழ்த்த நித்தவுடல் பெறுசிறிய கடையனை யொருபொருட்டாக, வுய்வகை யளித்தோயெனப் புகழ்ந்துள்ள மனலினின் மெழுகெனவுருக, நைவுடனுவுந் தழுழுப்புற மெய்நான்மறைத் துதிபலநவின்றான். (எ)

* இத்தகையாகச் சகச்செயல் சீவச்செயன் மறந்தெழிற் பரச்செயலே, மெய்த்தகை யென்றென் றறிந்திராறுண்டு விமலன்பூசனை விடாதிழைத்தா, னெத்தகை யண்டாண்டங் களைப் புரிவானின் றளிப்பவனை முன்னின்று, 0 தொத்தகைத் திமயம் புரந்தனலுாத் தெம்பிகைறதரு பெயர்கொண்ட (அ)

* இவ்வகைட ந்தற், செவ்விதின்னும மெய்விரு மிரண்டிலிங்கங்களுக் கே செப்பியவதுவுங், கௌவையி னடைந்த நரசர்கில்? ... கருதலர்க் கொலக்கழறியதுங், தௌவைமே லூரதேறகருளி யவதுவுந் தகுமெனவுளத்தினிற் றரித்தே. (கூ)

வேறு.

உவ்வகைக் காரணத்தா லொளிர்நர சிங்கநாதர்
செவ்விய சத்தியார்த்த நாதரொன் றிருபேர் செப்பித்
தைவிக னரிச்சித்தேத்தச சங்கரன் மகிழ்ந்தங்கெய்தி
யெவ்வமில் லரசைநோக்கி யினிதுரை யியம்புவானல்.(க0)

* இறைவ நின்பூசை தன்னையேற்றன மினிதுகேட்டி
துறையிலாப் புரிகளேழிற் குறுகியங்குள்ள தீர்த்தத்
துறைதொறு மாடிமேவுஞ் சுகங்களை யடைந்துசார்வாய்
நறைகமிழ் தாரோயென்று குறிப்பினினவின்று பின்னும்.

0 தொத்து=பழமை. அகைத்த=செலுத்தி.

ஆதிருமாலே மீரர்போயன் பினீபதிட்டை செய்த
வீறலைத் துறைசூழ் ராசிமேயவிவ் விலிங்கங்கட்கே
யீறில் சத்தியார்த்தகாரசிங்கப்பேரியல் பாய்க்கொண்டோர்
தேறுமிக் குறிகண்மேன்மை யார்கோலோசெப்பற்பாலார்.

அகத்திரு பெயர் நினைப்போர்க ககலுமூழ்ப்பாவமைய்யம்
பகத்திறைற் றரிசித்தார்க்கே பாலனுதிப்பே றெய்து
மிகுத்துள துதிசொல்வாரக்கே மேவுஞ்சொர்க்காதிபோகம்
வகுத்தவையொடு மர்ச்சிப்பார கைலையின் மன்னுவாரால்.

பாரட்ட திசையுமீ ரொன்பது புவிக்கர சென்றேத்தச்
சீரட்ட விதங்களோடித் திருக்கோவல் வாழ்தியென்று
வீரட்ட நாதன் கூறிவிழை விலிங்கங்கரந்தான்
சாரட்ட மங்கலங்க டழங்கமண் விண்ணுஞ்சாற்ற. (கசு)

வேறு.

இனையவரை பெற்றதற்பி னீரிருமா முடியுடையோன்
கனவிவொடு தவமறையோர் கணங்கணனி புடைசூழ
வினையகற்றுந் தீர்த்தயாத்திரை யதனில் விருப்புற்றுத்
தனிவளரும் புகழர்ந்த வடதிசையைச் சார்ந்தனனால். ()

வடதிசையிற் சிலகாத மருவியடைந் தங்குவருங்
குடவளையி னினந்தரளக் † குவாலுயிர்க்குஞ் சரயுநதித்
தடமலரிற புனன்மூழ்கித் தரணியினற் கதிசெயுமா
மடிவில்புக ழயோத்தியெனு மாநகரமினி தடைந்தான். ()

* அந்நகர மினிதளிக்குஞ் சுசிரமனங் கெதிர்கொள்ளப
பன்னுமறை யந்தணராசிகள் புகலப பரிவினொடு
நன்னகரத் துள்ளார் கணனிவிருப் புற்றடிபணியக்
கன்னியர்கள் காழுறநற் கலிகையர்க ணடமாட. (கள)

அடைந்தாண்டுச் சானகியோ டமருமிராகவனை மணி
தடந்தோட் டைவீகனெழி லறுசனொடு தரிஷசஞ்செய்

---

† குவால்=கூட்டம்.

துடன்பாங்கர் மறையவரோ டெங்கினிதி னன்னகரிற்
றிடஞ்சேருஞ் சுசிரமனற் றிருமணிமா ளிகைசேர்ந்தான்.

* மிருகளிப்பாற்றை விகனை யுபசரித்து விழைந்தவன்றன்
மருமெழி லாதியகண்டு தணிபபிறவத் தாற்பெற்ற
கைமுகத்த வொண்டொடியை நல்குவானன் னகரைப்
புகலருஞ்சீர்பெறப்புரிந்துபுலவர்கள் போற்றுறவளித்தான்.

ஏயில்வளையு மயோத்திநக ரினிதளிக்கு மிறையவனால்
லுயிரனைய மாமகளாங் கனகையெனு மொண்டொடியைப்
பயின்மணத்தின் விதிமுறையான்மணமபுரிந்துபார்த்திபனங்
கியல்பிறொடு மகன்றடைந்தா னெழிலவந்தி காபுரமே ()

அநங்காத் தீர்த்தத்தாடி யரனடியை யர்ச்சித்து
மன்னவனும் விசாலாககன் மகளகலா வதிதன்னை
... ரணியி னொடுமளிப்ப விதியின்மணம புணாந்தனனு
லொன்னலர்கண் முடிசிதற வுரிஞ்சுபத முடையோனே.

வேறு.

அங்ககன்று துவாரகையி லடைந்து நறும்புனலாடி யரி
யைப் போற்றித், துங்கமுடி மனாவணங்கச் சந்திரவன் மன்
னளித்த துவர்வாய்த்தீஞ்சொற், பைங்கொடி யுறபலமாலை
தனை விதியின்மணம புணர்ந்து பரிதிபோல்வான், மங்கலங்
கடனிவளர வாண்டகன்று வடமதுரை மருவினானால. ()

ஆண்டினி யபுனலாடி யிறையடியைத் தாழ்ந்தரசன் போ
சனென்பான், காண்டகைய நகர்புகுந்து விசயவருமன்றன
யை கமலக்கண்ணி, வேண்டியல் பின்மணம புரிந்து வியன்
மாயா புரத்தினிது மேவியாங்கு, மாண்டுறையி னீராடி யர
னடியை வந்தித்தான் மன்னர் மன்னன். (உக)

வழிபாடு புரிந்திறையை மகிழ்ந்தரசன் மாசேனன் வரத்
தில் வந்தங், கெழின்மேய வுற்பலலோசனையை மணம்புண
ர்ந்து தற்பினினிய காசி, யுழிமேவிச் சுரநதியிற் றிளைத்தாடி
விசுவேசற்கு வந்துபோற்றி, யுழியாத புகட்டைவீ கேச்சு
ரனென் றேரிலிங்க மரிச்சித்தானால். (உச)

## தெய்வீகராஜன் சத்தபுரிசென்ற சருக்கம்.

அன்பினொடு மவ்விலிங்க மரிச்சனைசெய் தருள்பெற்று ழிரண்டுதாரான், பொன்புனையுங் காசிபதி புதல்வியன்னப் பிரபைமணம் புணர்ந்துதூய, வின்பமுறும் பிரயாகை கயை படிந்து தருப்பணங்களி னிதிறைற்றித், துன்பமறு மாதவ ரைத் தொழுதேத்தி வியன்காசித் தொல்லூர்புக்கான். உடு

காசியெனு நகரகன்று பலதுறையும் படிந்தாட்க் தாஞ்சி புக்கு, மாசகற்றும் பலதீர்த்தங் குடைந்து மணியொருமா வினிறையை வந்தித், தாசகற்று மருளாழி யம்பிகை காமக் கோட்டத்தவளைத் தாழ்ந்து, பேசரையன் பேரிரதன்மகள் கமலாவதியை மணம்பெற்று னன்றே. (உசு)

வேதமுணர் மாதவர்க ளிதிகாச முதல்விளம்பும் விதியி னங்கங், கேதமறு புனல்படிந்து சங்கரனைப் பணிந்திறைஞ் சி யேத்திச்சென்று, பேர்தருஞ் தீர்த்தயாத்திரை புரிந்து சிவனடியார் புடையிற்சூழ, நீதியுடனெழுமர்திர் பேர் வரக் கோவனகர் நிருபன்புக்கான். (உஎ)

வேறு.

தீர்த்த யாத்திரை சென்றுவருந திருப்
பார்த்தி பன்றனைப் பான்மையிற் கோவலா
மூர்த்த யங்கு சனங்களு வகையி
னூர்த்தெதிர் கொண்டனை தனராங்கரோ. (உஅ)

சிறப்பினொ லசசிவ புரத்தா ரொதி
ருறத்தமைந்த வுவகை யுடன் பதி
யிறப் புரிந்தனன் மேவியல் வேந்தனன்
மறிக் கரத்தண றன்னை வணங்கியே. (உகூ)

செய்ய சத்தபுரி யினிற்சேர்ந் தெழு
தைய் லாரை மணந்ததுஞ் சாற்றினு
துய்ய சிங்கள மன்னவன் றேகையை
வைய முய்ய மணந்ததுங் கூறுவாம். (௩0)

**தெய்வீகராஜன் சத்தபுரி சென்ற சருக்கம்—முற்றிற்று.**

---

**ஆக-விருத்தங்கள்-௩௩௩.**

உ

சிவமயம்.

# தெய்வீகராஜன் அங்கவை

# திருமணச் சருக்கம்.

* ஓங்காரப் பொருளாய சிவபிரான் வீற்றிருக்க வுறையு
ளாய்முப், பாங்காருந் தென்கைலா சந்திருக்கே தீச்சரநற
பத்தர்தம்பா, னீங்காத வருடகுமா னிலவுசோ திட்காம
கிரியிந்நேமி, தாங்காநிற் கும்வரத்த சிவசோதி பதசைலந்
தங்கலானும். (க)

* பொன்மையவா மிமயகிரி போற்றுவிராட் புருடற்குப்
ரணி
புண்தமார்ந்த, தொன்மையாம் பிங்கலையாத் தோன்றியன்
றே பிறங்கல்போற சோதிமுன்று, நன்மையதாம் பிரமா
ண்ட மதையினிது படைத்தவன்றே நவிலவொண்ணு, றான்
மையதா மியல்புறுமவ் விடைநாடி யாப்பியங்கிமுற்றலா
னும். (உ)

* வலத்தியல்பாற் கைலாச வரையதனைத் தூக்கியமெய்
வன்மைசான்று, பலத்தினுயர் சாமமறை படித்துமைநா
யகனடிமேற் பத்திசெய்து, சலத்தினமர் நாராய ணன்முத
லா மமரர்தமைச் சாலவென்ற, புலத்தியனற் புத்திரனு தி
யராண்டே சுவர்க்கபலம் பொருநதலானும். (ங)

* மற்றையமண் டலங்களினின் றோங்கிலங்கை யெனப்
பெற்று † மாழைமேவு, ‡ பொற்றைவுதிந் திடுதலினல்
$ லீழமெனும் பெயரதனைப் புலவர்போற்றப், பெற்றுமுள
தாகலினற் சிங்களதே சஞ்சிவற்கும் பெருந்தவர்க்கும், கற்
றவர்க்கும்வியனுலகி லுற்றவர்க்கு மந்திரமாக்கவினுமன்றே.

* † மாழை=பொன். ‡ பொற்றை=மலை. $ ஈழம்=பொன்

* அத்தனையே தாய்க்கவினுஞ் சிங்களதே சத்தினுக்கே ரதனைச்செய்வ, தெத்தகைமயோ ருந்துதிக்குஞ் சதாசிவன தீசாறு திகளாமைந்து, வத்திரத்தி னின்றுதித்த வாதிசை வர் சிவாகமத்கீத மருவுசித்த, சுத்தியுள புத்திரர்க்குப் போதிக்குந் தூயமட மொருபாற்றுன்ன. (ரு)

* அருள்விரவு ஞானதே சிகர்சிவா கமத்தினம ரீரியவா மூப், பொருளெனுமப் பசுபதிபா சங்கட்குத் தடத்தவில க்கணமும்பொறப்பார், சொருபவிலக் கணமுமுறைத் தூயர்வ த்து நிச்சயமுஞ் செர்லக்கேட்டன்பிற், பெருமைபெறு சாதகர்கள் ஞானநிட்டை யுறுமடமோர் பாற்பிறங்க. (சா)

* வேதசிவா கமமன்றி மெய்ந்நூல்க ளிலையென்றும் விரி யாநின்ற, பேதமிலா வவைபிரதி பாதிக்குங் கடவுள்சிவ பி ரானேயென்றுங், கோதகன்முத் தியைக்கொடுப்பேயுரு வன்றி யிலையென்றுங் குழைந்துசால, வோதியிறு ஞபாய யுஞ்சஞ்செய்சம யிகள்சாலை யொருபான்மன்ன. (எ)

* காசினிநற் கருத்தாவை யுடைத்ததுகா ரியமாகலாற் கடம்போ, லாசிலெது காரியமா மதுகருத்தா வினையுடைத் தாலிதுவுமற்றே, நாசமுறு காரியமா தலிற்றரணி கருத்தா வை நண்ணிற்றென்று, பேசியவ யவமைந்தைப் பிரசங்கிப் போரவை யோர்பாற்பிறங்க. (அ)

* ஈசனில னென்றிகலி யகந்தநியா யங்கடமை யெடுத் தடுக்கிப், பேசிடுவார் குதர்க்கவுரை யறுவதித்து நிராகரித் துப் பின்னுந்தாமே, யாசகலப் பூருவபக் கஞ்செய்து கண் டித்தெண் ணனுமானத்தா, லீசனுள னென்றுசித்தாந் தப் படுத்தும் வாதசபை யெங்குமல்க. (கூ)

* விளங்கியுள தொப்பிலதாங் கண்டிநக ரங்கர்க்கவி ற்றிருந்து, வளங்குலவ வரசுபுரிந் துயிர்கடமக் குயர்கணை ன வயங்கா நிற்போன், றுளங்கலிலா வடமொழி தென்

மொழிகளுந் தூய்மையுறுந் தலமீதேயென், றுளங்கூடி கொண் டிடவவற்றை யுததிமடை திறந்ததெனவுரைக்க வல்லோன். (க0)

* விரவுறுவான் றனைநீக்க விபூதியுருத் திராக்கமவை மெய்யணிந்து, வரமுறுசீ ருமாபதியை மருவுபஞ்ச சுத்திசெய்து மலர்நீர்கொண்டங், கிரவுபக லபிடேகித் தரிசசித்து விதிமுறையா லெந்தாய்நின்றுள், பரவுறுமவ் வரமதனை யருளுகவெப் பொழுதுமெனப் பணியாநிற்போன்: (கக)

* விழுப்புண்கள் படாதநா ளெவற்றினையும் வீணாகக கழிந்தநாளா, வழுத்திடுபே ராற்றலம ரிறைவர்பலர் திறைகொணர்ந்து வாய்தனின்று, பழுத்தமனத் தோடுநரபதியேநீ யெமைப்பாது காவாயென்று, விழுத்துவணங் கிடமுடிகளுரோரசுதலி னனிமேசந்து விளங்குதாளான்:" (கஉ)

* விண்டலத்தி னமர்பரிதி மண்டலத்தி னுறுசலத்தை யிரவவாங்கிக், கொண்டுபினம் மண்டலத்திற் கேகொடுத்தல் போலவுயா குடிகடாங்க, ளெண்டிசையும புகழவாழ்ந்திடுமாறு சாலுமற நெறியாலீட்டிக், கண்டகர மதைவாங்கிக் கொண்டவாககே பினுமீயுங் கன்மம்பூண்டோன்.(கங)

* அன்னவனற் பேர்பாரி சாலனென்ப வவன்பாரி யவனையன்றி, மன்றுபிற தெயவத்தை வணஙகாதா ளஙகசனும் மயங்குமேரான், பன்னுமுயா நிறைக்காவ லுறுதலாற சிறைக்காவற் படுதலிலலா, டன்றெடுமன னவனுவாழ்ந்துழுநீதி முறைசெயது சாருநாளில். (கச)

* பாவைசூழ் தரணியைபபின் புரந்திடவுந் திலதருபபணுதிபண்ணி, விரவுறவு மொருமகபபே றிலாமையினை யகத்துன்னி விசாரமெய்தி, மருவுமதி மந்திரிக டமைவருவித் தவர்களொடு வுலத்தாலுற்ற, பெருமைபெறு நரபதியுஞ் சுருதிவிதி யினிதுணர்ந்தங் கிவைகள்பேசும். (கரு)

* புத்திரரி லாதார்கட் கம்மையினிற் போகமலை பொருந்தாவென்ற, லத்தனுரை யானுமுய ரனுமானத் தானுமிம்மை யறிஞராற்று, வித்தமலை பலபோகம் விளங்குபுகழாதியவை விரவாவென்ற, வுத்தமமாம் பிரத்தியக்கத் தானுநனி யுணர்ந்தனமா லுரைக்கினின்னும். (கசு)

* மன்னுலகிற் சுருதிகடா மகப்பேற்றின் பொருட்டு மணம் புரிகவென்றே, கண்ணியுரைத் திடுமதனு லியானுமகப் பேற்றின்பொருட்டொருகன் னிகையைவேட்டேன், பண்ணிடு நற் றவமுன்னைப் பிறப்பினி லாமையினு லென்பன்னிதம்பா, னண்ணியதன் றுயர்மதலை யாட்டினதர் போன்றனளா னன்னுபாரி. (கஎ)

* ஆதலினு லியானுமினி ( )ணிய மடைந்துநனி யகித் தமார்ந்து, யாதனைமூன் றையுமுற்றுச் சேதனற்கு வேருகி -முரா? புண்டரமுங் திநணனுகாகைக், கேதமேவரு மெனவுன்னு திழிவறவா —ாய ற்றியெலா மீயுஞானங், கோதகலப் பெற்றழியா முத்தியை —ரணியக் கொள்வேனென்றுன். (கஅ)

* என்றிவைக ணன்மதியங் நிருபனிசைத் திடலுமவணிருந்தோர்தம்முட், டென்றுமதி யொடுசுருதி யுணர்ந்தவையோர் மெச்சிடவே சொல்லுமாற்றல், வென்றியுள முதலமைச்சாஞ் சுபுத்தியெழுந் தண்ணலடி வியந்துதாழ்ந்து, கன்றலிலா வெம்மதிப நீகேட்டி யெனவுணர்ந்து கழறுமன்றே. (ககூ)

* மண்ணுயிரைப் புரந்திடுவோய் ‡ காந்தார நீபுகுந்து சரீரம்வற்ற, விண்ணவரும் புகழ்தவத்தைப் புரிந்துனுயிர் புரக்கினெமை யாவருகாக்க, நண்ணிடுவா ரிலையாக லானுனை தாகமிக நலிவையெய்தப், பண்ணுமஃ தீதனுலுமுயர் தவஞ்செய் திடச்சேறல் பழுதாமின்னும். (உ0)

‡ காந்தாரம்=வனம்,

* அத்தவத்தாற் பெறற்குறிய பலமவற்றை,யீண்டிருந்தே யரியவாய, வித்தகமாந் தானங்க ளானினிது பெறலாமீ னிழைந்தவண்ணம், புத்திரப்பேற் றின்பொருட்டுத் தவம்புரித லொல்லாது புரையிலாத, முத்தியையு மூறலாகு மில்லறத்தாற் றுறவறத்தை முயலல்வீணால். (உக)

* வீணாக லானடவி யடைந்துதவம் புரிந்திடேல் விரவா ரோத்துஞ, சேணுடர்க் கதிபதிமால விரிஞசருறு குறைநீக்கி யருளுஞசெவ்வே, ணுணதங் கவாபணிய வுரூடசோதிட் காமகிரி நண்ணியன்னான், றுணைஞமுறைவணங்கி னுயர் ஞானத் தருமகவைத் தருமாலின்னும். (உஉ)

பூ.ஏதரு நண்ணரிய போகங்க ளவற்றினையு மவனல்கும் நவில கொணா, லெண்ணறிய முத்தியையு மீநதிடுமாற் பின்னித யேநீ லிவருமேத்தும், பண்ணவனை யடைநதருஞ்செய் பெடிக றேனை ... மகாமபுரநது ப... யமன, மன்னனதனின் வயங்கிடுக வெனவுரைத்து வணங்கினுல் மதிவலோனை.

* வார்த்தையது செவியுறலும் வரதனருள் பெற்றுற்போன் மகிழ்ச்சிமிக்குத், தீர்த்தமலை யுறுசோதிட காமகிரிக் கேகிடவுஞ் செவ்வேள்பொற்று, 0ளார்த்தியொடு தரிசித்து வேண்டுவன பெறறிடவு மகத்தினெண்ணிட, பார்த்திபனு மெழுநதனனும் சதுரங்க தனைச்சூழ்நது பரவவன்றே. ()

* ஏறினனுற் பண்ணுறுத்தி யிவுளிபூண் டருமிரதத் தெஞ்சிவன்றன், மாறிலதாந திருவுருவை மனக்கிழியி னெழுதிமரு வைந்தெழுத்தைக், கூறிவிர வலர்பணியும் பாரிசாலக்குரிசில் குற்றநீங்க, †வாறறியாத தணராசி சொற்றிடமற் றையுர்துதிக்க வன்பினன்றே. (உ௫)

* பொன்னகர மும்விரும்பு மாநகரா யொருவியெழு புவித்தேர்மேன், மன்னவனற் ... தகணிரு பன்னுருவிற்

---

0 ஆர்த்தி=மகிழ்ச்சி. † ஆறு=வழி.

* என்றினைய வாறுதுதித் தெம்பிரா னடியூர்தமக் ○கிரணி யங்க, ளொன்றியபீ தாம்பரநற் சுவையுறுமன் னம்முதலாச் சொன்னதான, நன்றியோ டளித்தருந்தி னாருளத்தி லுறைகுமர னண்ணுங்கோயி, றனைமரீ இவலஞ்செய் தென்றுமிவ்வா றியற்றினனாற் றகைசான்மன்னன். (௩௨)

* இவ்வாறங் கநுதினமும் வழிபாடு புரிகாலை யேற்றநல் குளு, செவ்வானை யுறழுமேனிச் சிவகுமரன் சந்நிதியிற் சேவையைவேண்டி, யொவ்வாத சமயநூ லெலாமுணர்ந்தே யவற்றைமொரீஇ யுலகமேத்து, மவ்வாதன் றிருவடியை யன்பினனித் துயிலொருநா ளயாநதானன்றே. (௩௩)

* துயிலுதலுங் குமரனவ் வரதனங்க ளினிற்குயிற்றித் துலங்குகாந்தி, பயிலுறுநற் கிரீடமுமுப் புண்டரமுந் திலகமுமேய்ந் தோராபாதி, வயமுறுமா றமபுலியை நிரையாகப் பதித்தன்ன நுதலுமவாய்ந்த, நயமமாபங்கயமீரா றென்னவொளி பொழிகின்ற கருணைக்கண்ணும். (௩௪)

* சூரியர்க ளுதித்ததெனவொளிர்மகர குண்டலமுந் துலங்குமூர, லெரியனுந் திருவாயுஞ் செம்மவிடாய் நீக்குகின்ற வின்பவாகமுந், சீரியனு முலகவிரு ணீக்கவொளி தருமுகமுஞ் சிறந்ததொண்டா, நேரியவன் பினிற்றுதிக்க வர்க்குவர மளிக்குமுக § நிசாகரன்னும். (௩௫)

* வேதியர்தம் வேள்வியினை யளிக்கின்ற திருமுகமும் வேதார்த்தத்தை, யோதுதிரு வதனமுமுற் றிடுசூரா தியர்ச்செருக்கு முகமுமோரும், பேதமறு வள்ளிக்கு நேயமுளி த்திடுமுகமும் ‡ பிதிர்தேன் ¶ பில்கு, சீதமுறு கடம்புகுரா மலர்மாலை யணிந்துதிற றிகழுந்தோளும். (௩௬)

* அநதாத்தி னியங்குதவர்ப புரக்கவேந் திடுகரமு மருமருங்கிற், றநதிருக் கரமுமங்கு சந்தாங்கு திருக்கரமுங்

---

○ இரணியம்=பொன். § நிசாகரன்=சந்திரன்.

‡ பிதிர்=மகரந்தம். ¶ பில்கு=சக்கு.

பொருந்தாத வாறெமம்மை, தன்னறிய கரங்களினூற் றுன்
னுறவே தகைந்தாற்போற் றழைத்தொளிர்ந்த, பன்னமிக
வடைவிருக்க மன்னடவி யடைந்தனனூற் பண்ணுபாரி. ()

* பாரில்வளந் தருகான மலைமுதலா யினகடந்து பசைவ
ரைத்து, சீரியனற் பாரியவன் செய்மையினிற குமரனமர்
சிலம்பைநோக்கி, நேரியவன் பொடுவணங்கி மனவேகத் தி
னினதன்பா னெடிதுபோந்து, சூரியனுண் மதியளிக்கு மா
ணிக்கங்கைகையினிற் குலவமூழ்கி. (உஎ)

* எமூந்துசிவ சாதனமாம் விபூதியுருத் திராக்கமணிந்
தெம்பிரான்பா, லமூந்துமனத் தினினவன்ற னெழுத்தை
விதிப்படியுச் சரித்தாங்கண்டர், தொழுந்தகைய கிரிவலஞ்
செய் திலிறசந்தி தானத்திற் சோர்விலன்பால், விழுந்து வி
ழுந் துறவணங்கி மனமுருகித் தோத்திரத்தை விளம்பா
நின்றான். (உ.அ)

வேதனையார் சநமர ணங்களினிற் புக்குழலும் விண்டு
வாதி, யேதமுறு மமரர்தமை யேற்றமிலாப பசுக்களென
வெண்ணிநீத்துக், கோதகற்று பசுபதிநீ யெனத்தெளிந்து
நின்னடியைக் கூடும்வண்ண, மோதிதரு சிவகுமர வுயிர்
சோதிட் காமகிரி யொருவபோற்றி. (உகூ)

* போதினனை யுலகமெலாந் தன்னகத்தா லம்விதைபோற்
பொருந்தவைத்த, வாதியெழுத் தின்பொருளை வினவுதலு
மவன்றெரியா தயர்ந்தகாலை, பாதிமதி யணிபரனுக் கோ
ரெழுத்தின் பொருளருள்செய் பரனேமேலா, மோதிதரு
சிவகுமர வுயர்சோதிட் காமகிரி யொருவபோற்றி. (௩0)

* வேதமரு ளாரியவி ரியரோக நாசவிநிஞ் சனைப்புரந்த
காதலுறு குரவசுர நதிகுமர தாரகசங் காரசூர
நாதசரு வேசுரமா யாதார நாரணனு தியர்பராவ [ற்றி.()
வோதிதரு சிவகுமர வுயர்சோதிட் காமகிரி யொருவபோ

தொடையிற்றாழ்ந்து, வந்துகிடக் குங்காரமும் பரிசைதாங் கிடுகரமும் வலவாய்வேலே, நந்திடவே சுழற்றுகின்ற திருக் கரமும் மார்பினொடு நண்ணுங்கையும். (௬௭)

* தாரோடு பொலிகரமுங் களவேள்வி முத்திரையைத் தாராநின்ற, வேராருந் திருக்கரமும் மணியிரட்டு கரமும மை யெய்துவிக்குங், காராருங் காமுமர மாதர்க்கு மணமா லை சூட்டுங்கையும், பேராத விரோகைகளு முந்நூலுங் கண் மணியும் மிறங்குமார்பும். (௬௮)

* அரைஞாணும் பட்டுடையுங் கச்சுமினி தாமணையு மறிவோர்கேட்க, விளையாநின் றிடுநாதக் கழலும்முயர் பரி புரமு மியைந்ததாளும், விரியாத வராயிரகோ டியிர்விளங் கி யுதித்தன்ன மெய்யுங்கொண்டு, தெரியாத வுருவனெனி னுங்கனவின் கட்டோன்றித் தெரியநின்றான். (௬௯)

வேறு.

* தெரிய நன்றிடு சிவன்மகன் சேணின றிறைக்குங் கரிய மேனிய மாலிற்குங் கஞ்சமா ரயற்கும் விரியு நோன்புடை யறவர்க்கு முணரொணு வேத மருளு நேரிய வாக்கினு லரசனுக் கறையும். (௭0)

* மன்ன கேட்டிநன் மைந்தனை வேண்டினே மருவ முன்ன ராற்றிடு பவத்தினு லன்னது முற்று தின்னு நின்றனக் கியலுறு சிறுமிய ரிருவர் மன்னு வீரவ ராஜனைக் கெய்தும்பின் மகிமை. (௭௧

* எனறு தானறிய வருளினு னேந்தலுக் குறைத்துச் சென்ற காலையிற் பாரியு நனவினைச் சேர்ந்தே குன்றி னைப்பிளந் தவன்றிரு வருளினைக் குறித்து நன்று நன்றெனப் பாடின ளாடின ளயர்ந்தே. (௭௨)

* சத்தி தாங் கியோன் புத்திர னிலையெனச் சாற்றுஞ் [illegible] வாசகஞ் செய்திடு தன்மையும் புவியிற்

கத்து புன்சொலா ருணர்வுறுக் காங்கெயன் கனவி
லத்த மேயென வந்தவின் பகற்றிய தன்றே. (சங)

* சோதி சாநிதி வநதனன் றுளங்கிரு பாதப்
போதினைத் துதித் தானநத வாரிதிப் புக்குக்
காத லால்விடை பெற்றனன் கண்டியூ ரடைந்தா
னோது பாரிதன் பாரியுங் கருப்பம துற்றாள். (சச)

* உற்று வாழுநா ளன்னணன் னிமித்தங்க ளுறழ்வு
பெற் றெடுந்தன னிருமக வவ்வழிப் பெரிதுங்
கற்று வந்திடந் தணர்க்குயர் காஞ்சன மாதி
குற்ற நீங்குறக் கொடுத்தனன் விடுந்தனன் குரிசில். (சரு)

* பேசு மங்கலை சங்கலை யெனப்பெய ரிட்டே
பாச மங்கவ ரிடத்துறப் பன்னிடு கணிதர்
தேசு றுந்தம மதியினுற் றெரிநது மன்னவனுக்
காசி றெல்புக மாயிது கேளென வறைவார். (சசா)

* இனைய ரீண்டிறி னினதுநா டிறைவரா கிகநது
மனைவி யோடுகா னடைகுத றிண்ணநீ மதித்தே
யினைய லாருயிர் போன்றிடு மிவரை நீக்கிடுநல்
வினைய நாடுதி யென்றனர் கணிதரின் மிக்கார். (சஎ)

* வாச கஞ்செவி யுறுதலு மன்னவர் மன்ன
§ னாசு கஞ்செவி யுற்றென வருந்தியன் னவரா
னாச மிங்கெனக் குறிலுநற் சிறுமியர் தம்மை
நேச மென்கணே வைத்துநீக் கேளென நிகழ்த்தும். (சஅ)

* பொன்னை யும்புவி தன்னையும் பூவையர் தமையும்
மன்னு கல்வியை யும்மதி தன்னையும் மன்னர்
துன்னு வாழ்க்கை யையும்பெற லாகுமாற் ‡ றோகை
யன்ன விச்சிறு மியர்பெற லரியதா மன்றே. (சகூ)

---

§ ஆசுகம்=அம்பு. ‡ தோகையன்ன=மயில்போன்ற.

* மேலு மாலமுண் டவனரு ளறுமுகனை மேனாட்
சீல மேவிய கனவில்வந் திசசிறு மியராம்
சாலு மாலுனக் குயர்வுபி னெனத்தன தருளா
லேல வேயுரைத் தருளின னீதுபொய்த் திடுமோ. (௫௦)

* ஆத லாலிவ ணீக்கல னினையவர் தம்மை
நீதி யாயுள கூறினீர் நிற்கலிர் போதிர்
போதி ராமென வுரைத்தனன் புராரியி னெழுத்தைந்
தோதி னல்லதே யுறுதுணை யெனவெண்ணி யுற்றான். (௫௧)

* உற்று வாழுநா ளூழ்வினை வலியினொன் னலனுய்ச
சுற்று தானையோடடை †விர சேனற்குத் தோற்றுப
பெற்ற மக்களன் மனையொடு பெயர்ந்து வாரிதியை
யற்ற நோக்கியே கடந்தனன் குடதிசை யடைவான். (௫௨)

* துன்னு தற்கரி தாகிய வனங்களுந் தொக்கு
மன்னு § மத்திரி களும்பல வாய்வதி நதியும
பின்னு மேனைய ¶ வதரெலாம் வருந்தியே பெயர்ந்தான்
மன்ன வன்மனை மக்களோ டுறுவிதி மதித்தே. (௫௩)

* பொ ரு றும்வழிப் பசிப்பிணி பெரிதலைத் திடலா
லயரு றும்மவர்க் கத்திரி வாழ்குந ரரிய
றுயர கற்றிட வேண்டிநற் கனிமது துவன்றிச
செயிர றுஞ ||சகுனமாதிய யாவையுந் தெரிந்தே. (௫௪)

* நண்ணி யன்னவர் தமவயி னுமளிப் பவைக
ளுண்ணு மென்றவை கொடுத்திட வுண்டபி ‡னுதகங்
கண்ணி யெங்குள தெனவவர் காட்டிடக் கடிதி
னண்ண லாதிய ருண்டுத மயர்வுதீர்ந் தகன்றார். (௫௫)

* அகலு றும்பொழு தாற்றிலா சிவாலய மனைத்து
மிகுதி கொண்டிடு மன்பினாற் றரிசித்து வேண்டும்

---

† வீரசேனன்=விரசேனன் எனக் குறிகிற்று. § அத்திரி=மலை.
¶ அதர்=வழி. || சகுனம்=கிழங்கு. ‡ உதகம்=ஜலம்.

பகுதி யாயவை யளித்தருள் பரமனூர் யதத்தைத்
தகவொ டுந்துதித் தோங்குநற் குடதிசை சார்ந்தார். ()

* குடதி சைக்கணை யாற்றுயர் தீரத்தைக்குறுகி
யடவி யொன்றினிற் புக்கொரு சிறுகுடி லமைத்துக்
கொடிய தாகிய பசிநிக ருடலினைக் குறைக்க
§ வட்கு மூலநற பலமுத வியவயின் னமர்ந்தார். (௬எ)

* அமரு மேல்வையி னருமறை யாகம மவற்றிற
றிமிர நீக்கிடு ஞானபா தத்தினை சிறப்பா
லமரு னார்ந்துய விரித்துஞா னக்குற னென்னுஞ்
சுமயி லாதுல கத்தவிர் றூன்முத றந்தாள். (௬அ)

* கீர னேமுதற புலவர்தங் கிளையினை மூலத்
தாரு மேரமப னருளினல் வென்றவ னடியைச்
சார யாமெலாமவற்புக ழுகவலைத் தந்தாள்
பேர வில்லதோ ரன்பினுற் சிவன்கழல் பிணித்தே. (௬கூ)

* இட்டு நெஞ்சமாங் குகையினி லெய்தியே யிணையி
லட்ட சித்தியை யரிமுத லமரர்க ளாமச
சிட்ட ரோத்திடப் பெற்றிடு மௌவை சீர்க்காணி
னட்ட மாற்றினேன் றிருவரு ணன்குகூட் டிடலால. (எ0)

* கான மன்னதின் மழையினி னனைந்தனள் ரடிதி
னூன மின்றிய பாரிதன் குடிசையி னுறறு
வான மின்னனே ரங்கவை சங்கவை வருமத்
தேனு றழ்ந்தசொ லம்மையைக் கண்டனுந் திகைத்தே. ()

* கோல மேய்ந்தவன் னவளடி முடிமிசைக் கொண்டே
யாவி யானனைந் தணையமே யடியமோங் கொடுக்கு
‡ நீல மார்ந்தசிற் றுடையைத் தரியென விமலன்
பால தாகிய புணர்ப்பினுள் கையிற்பரிக் தளித்தார். (எஉ)

§ அடகு = இலைக்கறி. ‡ "நீலமார்ந்த சிற்றுடை" என்பனத
"பாரியரித்த" எனவரும் வெண்பாவினீற்றி னுணர்க.

* வாங்கி ளுடைரித் தாடரித் துங்குளிர் வலிகண்
டேங்கி யிந்தவ மிட்டெரி கொளுவ வேந்திழையார்
வீங்கு மூழ்வினைக் குளிர்கெடக் காய்ந்தவண் மெய்யிற்
றூங்கொ ளுக்குளிர் நடுக்கமுந் தணந்திடக் காய்ந்தாள். ()

* அன்ன காலையிற் கனிமுத லாயவை யடவி
மன்னி நேடமுற் சென்றிடு பாரியு மனையும்
பன்னு மூலநற் கனிமுத லாயின பறித்துத்
துன்னி யூர்சிறு குடிசையிற றுகளிலாட் கண்டார். (சுச)

* கண்டு விம்மிதங் கொண்டவள் கமலநோ பதத்தை
மண்டு காதலின் வணங்கிமற் றெமையளித் தருள்வான்
விண்டு வாதியோர் புகழ்சிவ னருளுரு விரவி
மண்டி வீந்தது வோவெனின் மனத்தினின் மதித்து. (சுரு)

* $ கந்த மேகனி முதலியூ யாவையுங் கருதி
முந்த வேகொடுத் தவளயின் றிடமுக மலர்ந்தா
ரந்த வேலையிற் .பாரியென் றெருவெண்பா வறைந்து
பந்த முற்றவுன் வாழ்வையெற் குரையெனப் பணித்தாள்.

வெண்பா.

பாரி பரித்த பரியும் பழையனூர்க்
காரி கொடுத்த களக்கொட்டுஞ்—சேரமான்
வாரா யெனவழைத்த வாய்மையு மிம்மூன்று
நீலச்சிற் றுடைக்கு நேர்.

அன்னை கேட்டரு ளுடையனேன் சிங்கள தேச
கோடியென்மனை யாட்டி
ப்பிர மணியன தருளால்
யர்களா யிவர்வதி யுங்கால். (சுள)

இலங்குபெரு
லங்கொளு

$ கந்தம்—கிழங்கு.

* ஊழ்வி னைப்பய னல்வரு மொன்னல மொருவன்
றாழ்வி லாதுறு மென்னொடு மமர்செயச் சார்ந்து
சூழ்ப டைத்தலை வனைநனி கொன்றுதொன் னகரைப்
பாழ்படச்சிதைத்தெனைக்கொலத்துரதஙினன் பயத்தால். ()

* ஈண்டு வந்தன னிச்சிறு குடிலினை யியற்றி
யாண்டு வன்றன தருளினுற காய்கனி யவைக
o டேண்டி யுண்டுநாட் போக்கியுற் றனனுயர் சிவன்பாற
பூண்ட வன்பினு யிதுநிகழ்ந் ததுவெனப் புகன்றான். (சுகூ)

* புகலு மெல்லையி னவ்வையும் புகரிலா நற்‡பா
வகன கத்தினி னுதித்தனன் கோவலூர் வலத்தா
லகம தைப்பதித் தரனிடத் தரசினைச் செய்வான்
சகம திற்பயி றயித்தியர்ச சாடிய சயத்தான். (எ0)

* மூன்று வேந்தர்தம முடிகளைப் பெற்றனன் முன்னாட்
டோன்று மன்னவர் கன்னிய ரைசசொல வேட்டரீ
னன்ற தேவரும் வந்தடி வணங்கிடு மருளா
னேன்ற நாரசிங் கப்பெய ரேய்ந்ததை விகனே. (எக)

* அன்ன தைவிகன் பேரழ கொடுகுக னருளாற்
றுன்ன லாற்புவி தன்னினீ தூயவே ளளியாற்
பின்ன மற்றிடப் பெற்றிடிச் சிறுமியர் தமக்கு
மன்ன வொத்துள ராதலான் மணம்புரி விப்பாய். (எஉ)

* மணமு வந்துசெய் திடுவனேல மற்றவ னின்றன்
குணம றுங்கொடும் பகைவனைக் கொடியவாளதற்குக்
கணம திற்கொடுத் திரையெனக் கடிநகர் காவல்
பணவு வந்துபின் கொடுத்திடு நினக்கெனப் பகர்ந்தாள். ()

வேறு. மயன ஙிமலன்

* உரைத்திடு காலை பாரி யோங்கரு ளம்பிக் தளித்தார். (சுவு
வரைக்கர சான நார சிங்கன்வா னவர்க்கு
முடை" என்பது

o தேண்டி=தேடி. ‡ பாவகனகத்தினில்=அக்கினிக.

றீனைத்தலத் தெரிவியேன் பெற்ற தையலார் தம்மை § மந்தி
யினைத்தார ணிந்தான்மன்றலியற்று மோவியம்பாவென்றான்.

* இயம்புகவென்ற மாற்றங் கேட்டது மேந்த லேநீ
பயந்திடு வோரை யெந்த விதத்தினு மன்னு மன்னு
னயந்துறு மன்றல் செய்ய வியற்றுவ னனீ சற்றுந்
தியங்கிடே லென்ன வன்னன் றிருவடி முறையாற்போற்றி.

* கொடுக்கன ளருளாற் பெற்ற குமரியர் தம்மைக் குன்று
வடுத்த [illegible] வைவை கையின் மலைமக ளென்றாய் நின்னை
யடுத்தவிச் சிறுமி யாருக் கம்மைநீ யேயென் றின்பு
மடுத்தன னென்ன நின்று னன்னளு மகிழ்ந்துகொண்டாள்.

* சிலபக லங்கு ஞூவகிச சிறந்திடு மகளிர் தம்மை
நிலவுற மணஞ்செய் வீக்க நினைந்தவ ளருளி னாலே
யிலகுற வழைத்துக் கொண்டே †விறும்புகா டவைக டந்து
குலமுறு கோவ லூரைக் குறித்தவ ணுற்று ளன்றே. ௭௭

* கோவலை யடைந்து வீரட டேசனைக் குறுகி யன்னன்
சேவடி படியின் மீது சிரமுறப் பணிந்து தெய்வப்
பாவினாற் பரவிப் பின்பு பாவையர்ப் பணிவித் தம்மை
தேவுரு நெருங்கிச் சூழுஞ் சினகர நீங்கிச் சென்றாள். ()

* சென்றவ ணுறுமோ ரில்லிற் றெரிவையர் தமை யிருத்தி
நன்றியை யுறுதை வீக னண்ணுபே ரவைக்க ணெய்தத்
துன்றினள்வாயில்காப்போர்துணுக்கிற்சென்றவ்வை வந்தா
ளென்றனரதனைக்கேட்டானெழுந்தெதிர்விரைந்துசென்றே.

* கண்டன னுலக மெல்லாம் புரந்தருள் கருணை யார்ந்து
முண்டக முகத்து டனை யடியவன் முன்ன ராற்று
மண்டிக டவமே யின்ன வுருவுகொண் டெய்திற்றென்னக்
காண்டனன் மகிழ்ச்சி யன்னு டிருவடி முடிமேற் கொண்
டான். (௮0)

---

† பொங்கர் — பாலை.

* துதித்தன னின்ப மென்னுந் தொடுகடன் மூழ்கி யம்மே மதித்தெளி யேனை யீண்டு வந்தருள் வுலத்தா னுனுங் கதிதநவென் கிளையு முதநிக் கரையினை யடைந்தா மிம் மைப், பதித்தவன் புடைய ரானேம பரமன்மாட் டெனபப ரிந்தே. (அக)

* தனிதரி யணையி ருந்தித தடமலர் கொண்ட ரிசசித் துனதுயா வரவை யமமே யுரைத்தரு ளென்றி றைஞசி வினவலு மதறகெ மமமை வீயகுதோள் விரவ ...
சினவுறு வாளோய் கேட்டி யென்றனள் செபபா நின்றாள்.()

* திருத்தனு ரோஙகு பாத நிதியநு தினமு மேத்துங் கருத்தனு யிலங்கு மீழ தேசநற காவல் பூண்டா னருத்தமா தியவெ லாமீ சன்றன தாகக்கொண்டா னொருத்தனு மத்தாற் பாரி சாலனென் றுரைக்க நின்றான்.

* அன்னவன் றவத்தாற பெற்ற வரிவைய ரிருவர் தெய்வ மின்னனு ரழகிறசெய்ய மதியினின் வென்றார் மேன்மை மன்னுமங கவையே சங்க வையெனு நாமம வாய்ந்தார் பன்னுமங் கவளா நீகைப பற்றலசெய் திடுவா னெண்ணி.

* வந்தன னவளாக கொண்டு மன்னநீ வதுவை செய்து கநதனை கோடி யென்றாள் காவலன் மூவா வேந்தர், தநத கன் னியரைச் சத்த புரியிறை யவாதந தோரை, முந்தவே வதுவை செய்தே னினிச்செயன் முறையொவென்றான்.()

* முறைமகா லென்றுரைத்த வாரத்தை முற்று முணர்ந் துண்டு, நுறைமலா மணித்தாரோயநத வகையினறியா நான் மூன்றென், றறையவோது யுலகதம ... கூறின மின் னுரைக், குறைவற க கோடி யென்றாள் குரிசிலு முண ர்ந்து கூறும. (அகூ)

* தினதெணப் படியான் மன்ற னோர்ந்துசெய் திடினுமன் னுய், கனமூழ்ந் பொதிய வெற்ப னுதியாங் காவன்மன்னர்,

மனமுவந் தங்கி யாரு செய்திடா ரதனுன் மாண்பன்,
றெனவுறைந் தனன்றை வீக ளிவ்வுரைகேட்டங்கவ்வை.()

* தனத்தினின் மிக்க போரநின் றூரவ ணிமபத் தாரோ,
னினத்தொடு மளிரு மூரரின் றூரவ னெனுமூ வேந்தர்,
மனத்தினி னுவந்து வந்துன் மன்றலை முடிக்கச செய்வா,
மெனத்துணி போடு மாஙகே யிசைததன ளதுகேட் டோ
தல். (அஅ)

* சிவிநதிமீ கரஙகள் சென்னி சோததுளத் துவகைதேங்
க, தவமபுரி வோாக ளேத்துந தையனின் னருளீ தாயி,
னவந்தரு மன்ற றன்னை யியற்றுவ னன்மை யோஙகச்,
சிவந்தர வருள்வா யென்றங கவளடி சென்னிசேர்த்தான்.

சிரத்துணி லடியைச் சேர்த்த சேவகன் றன்னை நோக்கி,
வரத்தினின் மிககா யென்றும வாழிய வென்று வேதச்,
சிரப்பொரு டேர்நது மேலாரு செநதமிழ நடையிற்செய
த, வுரத்தின ளுரைத்தா ளநத நிருபனு முவந்துநின்றான்.

* அதுபொழு தரசர் தஙகட் கவிர்மண வோலை தீட்ட,
விதுவணி வேணி யாய்நீ வருகென விநாய கன்றன், மது
மல ரன்னபாத மனத்தினிற் றியானஞ் செய்து, முதுசொ
லி .னொருகொமபென்றே. யெடுத்தனண் மொழிய வெண்
பா. (கூக)

வெண்பா.

ஒருகொம் பிருசெவி மும்மதத்து நால்வாய்க்
கரியுரிவை கங்காளன் காளாய்ப்—பரிவுடனே
கண்ணுலை வோலை கடிதெழுத வாராயேல்
தன்னுண்மை தீரப்பேன் சபித்து.

* இலங்குபொன் முடியும் வேழ முகமுமோரார் முக்கண்ணும்
நலங்கொளு லார்ந்த மார்பு நளினனோ பதமுந் தீமை

வலஞ்செய லுணர்த்த வோலை †யிலேகனி யுருவு கையுந்
துலங்குறத் தோன்றி னானங் குசபாசந் தரித்த தோன்றல்.

* எழுந்தரு ளுதலு மெம்மா னேதமொன் றில்லாவவ்
வை, விழுந்தன ளடியிற் றாழ்ந்து விளம்பின டோத்தி ரங்க,
ளெழுந்திய மனத்தா ளென்னானன்பினி னவனைநோக்கிச, செ
ழுந்தவ வறிஞர்போற்றுந் தேவவிங் கெமைக்காவென்றாள்.

* எனத்தவ ரோத்து மவ்வை யிசைத்தலு நரசிங்கன்
றனத்தினை நிகாத்த வேரம் பன்பதாந் தாழ்நதெந் தாயின்
மனத்தினின் மன்ற லோலை யெழுதவந் ததனான் மற்றெம்
மினத்தொடு நனிவாழ்ந் தேனன் றேவென விசைத்து
நின்றான். (கச)

* அதற்பின ரம்மைமிக்க வகமகிழ்வுட னீராறு விதப்ப
டிபுயத்தோய்கங்குல்விடியு முன்வருகவிங்கென், றிதத்துச்
செந்துவர்வா. யென்றங் கெடுத்தொர் வெண்பாப் புகன்
றான், மதுப்பொதி நீபத்தாரோய்மார் பினனஃதறிந்தான.()

வெண்பா.

செந்துவர்வாய்க் கன்னியனைத் தெய்வீகன் மன்றலியல்
சுந்தரவோ லைக்கிரறு தோளசையக்—கந்தன்
மயிலேறி யீங்குவர வாழ்கதிரோன் றோன்றி
வெயிலெழா முன்னே விரைந்து.

* எல்லறு கோடியென் னக்கோடீர மாறிலங்கு
மல்லறு வதனந்தம் மின்வாய்ந்த புன்முறுவறுன்ன
மெல்லிய ரிருவரோடும் விண்ணவர் வியந்துவாழ்த்த
வில்லியர் பணியமஞ்ஞை மிசையெமமான் மேவினானால்.(௭)

* மயினடம் புரியவங்ஙன் வருவதையுறிந்த வம்மை
௦யயின்மலி நரசிங்கனாதியோ டெதிர்ந்து தாழ்ந்து

† இலேகனி=எழுத்தாணி. ௦ அயில்=அழகு.

வெயின்மலி திவசினும்பா மேவுறவிருந்தி மாடே
0குயினிகர் மொழியாளணி நின்றிவை கூறினாளால். (கூஎ)

* எம்பிரானை வள்ளிங்கங் கிசைந்தநாயகனை தேவர், தம் பிரானை கற்றோகடலை வனைதமியாள் சொற்குத், தும்பி மா முகனொடுங்குதகோன்றலென்றவை மோவென்று, பம்பி னுள் குகபேர்கொண்ட முனிவனும பணிந்துசொல்வான்.

வேறு

* ¶ பயத்துட னீரேபோனின்னருட கலந்தபாவி யென்றனை ப்பிரித் தந்தோ, நயத்துட னுலகினைடனைச சுழலினனு குறவிடுத்த நான்முன்றும, புயத்துடை யரசேபோது மித் தொடக்கு நினதுபூவடி நிழபபொலிய, வியத்துட் னருள் வாயெனக் கனுழ்ந்துணர்த்தான் விமலனுமகிழ்ந் திவையுரை த்தான். (கூகூ)

* எவ்வித சித்தியெய்தினு மொவருமிகத்தின் மூவேடனை வழியே, யொவ்வி யொவ்வாது சருடநீ சொன்ன வுயாமதிப் புதல் வரைநிறுவிக, கவ்வை கூராதிக்கரும பூமியினைக்கட ந்து மேற்றிருவருட் கலப்பார், செவ்வி யோயுனக் கேய்ந் தவையின் மற்றவர்க்குச செப்பமுபபோதுநேர்நதிலையால்.

* இனஞ்சிறு ணீயீண்டுறைந்து நின்மகற்கே யெழிற ச தர்க்கிரு நிலமுய்யக், கனஞ்செறி விதிகள்சில வுரைத்தெ மை நீக்ருத நம்பால்வந்துகலபபாய், மனஞ்சிறி தயரேலெ னச் சொல்லியவ்வை மலாமுகநோக்கி வள்ளலுக்குத், தனஞ் செறி மினைவேண்டு மற்புதத்தாற் றருதியென் றுருக்கா த்னனால். (க0க)

வேறு.

* அதுபொழுதி லவ்வைதிருக் கோவலூர்க்கோ வுமங்க வை சங்கவை தம்மையன்பாக வீண்டு, வதுவைசெய வி

---

* 0 கு[illegible]ன் = மேகம். என்றும்-ஆம். ¶ பயம் = பால்.

சைந்தனுற் பதினெட்டாநாளின் மன்னிடுநேரியசேரமாற னிநீவீர், கதுமெனவே வருகவெனுங் கருத்ததனை யமைத்துக்காட்டிடு மூவெண்பாக்கள் கவிவலோர் புகழ, முதுமொழியாற் 'சேரலர்கோன். புகார். வைகை. யென்று முறையானே வரைவித்து மூவருக்கும விடுத்தாள். (க0உ)

## வெண்பா.

௪ .. சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவ
லூரளவுந் தான்வருக வுட்காதே—பாரிமக
ளங்கவையைக் கொள்ள வரசன் மனமிசைந்தான்
சங்கவையை யுங்கூடத் தான்.

ரு புகார்மன்னன் பொன்னிப் புனலுடன் சோழன்
றகாதென்று தானங் கிருந்து—நகாதே
கடிதின் வருகக் கடிக்கோவ லூர்க்கு
விடியப் பதினெட்டா நாள்.

௬ வைகைத் துறைவன் மதுரா புரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேமபாதே—தையலர்க்கு
வேணுமென கொணடு விடியவீ ரொன்பானு
ளீண்டு வருக விசைந்து.

## வேறு.

* ஒற்றுவர் தம்பாலம்மை யுய்த்தவெண்பாக் கடம்மைப பெற்றிடு மரசர்மூவர் பெடபிறை டேற்றுவநதார, கறறவ ருளையைநீக்கா தியாவருங்கைக் கொள்வாரோன், முறறுண ர்ந்திட்டவமமை மொழியையாா விலக்கற்பாலார். (க0ங)

* ஆண்டு மூவரசர் காமுமௌவை செய்மணத்தினுக்கு வேண்டி யபொருள்கள் கொண்டுமேவுற விழைவுபூண்டா ரீண்டு மேழ்புரிக்கு மற்றையி ராசர்தம் புரிக்குமோலை காண்ட கவிடுத்தாண் மூன்றுபுவனமுங் கழ[illegible]. (

* கருணையி னுருவாய்நின்ற வன்னைதன் கழல்பணிந்தே
பரவைசூ ழுலகின்னுள்ள பார்த்திப ரெவருமீண்டி
வருவரோ லவரையிந்த வறியனே னுபசரிக்க
வெருவரு கின்றதம்மே யினிச்செயல் விளம்பாயென்றான்.

* என்றிறை கூறக்கேட்ட § வகண்டதி நகைத்திங்கேந்தால்
கொன்றை யஞ்சடையான் கோவல்வீரட்ட னருள்சுலாவ
வொன்றினுங் குறைபாடுண்டோ வொழிகவுன் றுன் பென்
றோதி யின்றன ஞாலத்துக்கெல்லா நிதிமுதற் பொருளென்
றுள்கி. (க0சு)

* இருணிறத் தவுணன்றன்னை வாட்டுமெம்மிறை தாளு
ன்னிச், கருணையா மலர் நெடுந்துக்கனக நாட்டவர்கள்
போற்ற. வருணனைக் குறித்தோர் வெண்பாவழுத்தினள்
வழுத்துமந்தத், தருணமே யவனும் பொன்மாரியைத்
தருவிப்பானால். (க0எ)

வெண்பா.

கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையன் கோவற்—றிருமணத்து
முன்மாரி பெய்யு முதுவாரி யைமாற்றிப்
பொன்மாரி யாகப் பொழி.

* புட்கலா வர்த்தநோக்கிக் கூடாறும் புநலவெய்தின்
வெட்கவான் புவியுமிக்க சேதிநாட் டெம்பாமேவி
கட்கமார் கரன்கடிக் நாங்கனகங் கோவலைச்சூழ நாதத்
துட்கொளாவோர்முகூர்த்தரு மொரிவகை யுரைக்கற்பாற்றே.

* இம்பருள் ளோர்களின்பமெய்த † நால்வகையா லேய்ந்த
செம்பொனம்பரத்தைமேவச் $ சென்மிகப்பொழியக்கண்ட
வம்பாக டங்கணுட்டி னுவப்பொழிட திரய்நிற்க
நம்பியுநோக்கியை யன்றிருவரு ணயந்துநின்றான். (க0கூ)

---

§ அகண்டதி—நித்தியத்தைப்பெற்றவள் என்னுங் குறிப்பு. † நால்வகைப்பொன்.-ஆவண-ஆடகம்-கிளிச்சிறை-சாதரூபம்-சாம்பூநதம்.
$ செல்—மேகம்.

* சொற்குவை வல்லார்தம் மாலலகிடத் துணையிலாத
பொற்குவை தம்மையே வலாளர்கள் பொலியிற்சேர்த்து
விற்குவை கிடத்தைகாட்டி மேருவின் விளங்கமன்ன
னிற்குவை தம்மிற்சேர்த்தா ரியாவர்க்கும் வியப்பதெய்த.

வேறு.

* நார சிங்கனு மவ்வைதன் றுடனேநயந்து
தீர நெஞ்சுடை யமைசசரைத் திறதொடு விளித்தே
யேருறுங் நமதூரினை யேவரும் வியப்பச்
சீருறும் படியலங்கரித் திடுமெனச் செப்ப. (கககக)

* கேட்ட மந்திரிமார்க ளுங்களிப் பலேகிளர
வாட்ட டக்கரவள்ளலே யமமையை வாழ்தகி
நாட்ட மூன்றுடை நம்பன்வாழ் வீரட்டநகரைக்
கோட்ட மின்றியே யலங்கரித்திடும வகைகுறித்தார். ககஉ

* நகரமெங்கணும பறையறை வித்துநன் கமைவா
னிகரிலா தவிநகருளார் நெஞ்சக மகிழ்ந்து
புகரில் வீதிகளரங்கு களிலங்கவேப் புதுக்கப
புகர்மகன் மகன்மணப் பொருட்டென விதுபுகல்வீர் ககங

* குறித்த வேவலாகளிப பொடுதுண் ணெனக்கோவற்
செறித்த வீதிகளெங்கணுஞ் சென்றுசென் றெழிலி
னெறித்த வாதணிசெய் யுமினென நிகழ்கடியைப
பொறித்த வோலையின்படி பறையறை வித்துபுகன்றார்.()

* சொன்ன மாரிகண் டுவகையோ டுற்றிடுநதோமி
லநகர்க் கணூர்பவரி ஃதறைந்திடக் கேட்டங்
குன்னுதற் கருமின் பினையுறறனரு வநதார
கன்னல் பான்மதுவுண் டவாகளித்திடு பண்பின். (ககரு)

* பெண்ணை சூழ்ந்தப்பெரு நகரெங்கணும் பெட்பா
லண்ணன் மன்றலுக்காம் வகையலங் கரித்திடவே
யெண்ண முற்றவராகிப் பேரன்பினு வியற்றும்
புண்ணவன் படைப்பென வலங்காரத்தைப் பணுவார்.

பொன்னங் குன்றினைப் பொருவுறக்கோபுரம் புதுக்கி
மின்னு மாளிகை விதானங்கண் மேற்படவிளக்கிப்
பன்னு மண்டபந் தெற்றிநற்பண் புறத்துளக்கி
துன்னு மெண்ணிலா வோவிய மெங்கணுந்துலக்கி. (ககஎ)

* கதலிதோரண மெவணினுங் கவினுற நாட்டி
யிசமுறும்படி † யேம நற்பூரண கும்பம்
மிதமுறும்படி வைத்துநன் மணிகளால் விளங்கும்
பதமுறும் பலமாலைகள் பண்புற வீக்கி. (ககஅ)

* § காமனன் னகர்க்கவினொளி மழுங்குறக் கமலப
பூமனன் னகர்பொலிவது மழுங்குறப் பொற்பூ
¶ மாமனன் னகர்வயங் கொளிமழுங் குறவனைந்தார்
$ சோமனன் னகரன்ன கோவன்னகர் சூழ்ந்தே. (கககூ)

* இன்னவாறு மேனகரெலாங் கீழ்ப்பட வியற்றி
நன்னகர்க்கணோர் களிப்பெனு நதியின் மூழ்கினரான்
மன்னவன் னரண்மனையை யவ்வணியினும் வயங்க
நன்னயத் துடனியற்றி னரவண் மணநயந்தே. (கஉ0)

* வந்த மன்னவர் வதியநல்வைரத் தூணட்டுச்
சந்த மார்ந்த சாம்பூநதத்தான் மிகவெய்ந்தங்
கிந்து காந்தமேருறப பதித்திட்டிடு மிலங்கள்
பந்தி பந்தியாவியற்றினா ‡ புலவர்மெய் பனிபப. (கஉக)

* மங்கைமா ரிருவோர்தமை வதுவைசெய் திடுதற்
கங்கணு டகத்தாலு மாணிக்கமே யாதி
பொங்கு காந்திகொணவ மணியாலுமேர் பொருந்த
வெங்கு மில்லதோர் விவாகமண்டப மினிதமைத்தார். ( )

---

† ஏமம்=பொன். § காமன்=இந்திரன். ¶ மாமன்=இலக்குமிக்குத் தலைவனாகிய-திருமால். $ சோமன்=குபேரன்.
‡ புலவர்=தேவர்கள்.

* கமுகரம் பைந்தூரண கும்பங்கள் கவினுஞ்
சுமுகமாண் சபையியற்றி மேல்விதானமுந் தூக்கி
யமுதனு ரிருவரு மரசனுமுற வமைத்த
† குமுத முற்றிடு மரியணை நடுக் குயிற்றினரால். (கஉ௩)

* கந்தமார் பனிநீரையுங் கலவையோ டளவுஞ்
சந்தனக் குழம்பொடு முகவாச நற்றூமம்
விந்தைசோ கவரியுங்கொடு வினைகளைச் செய்ய
வெந்திரப்பதுமைகளெணி லவணியற றினரால். (கஉ௪)

* மணத்தினுக் கணிவேண்டுப வியற்றிமன் னவன்பாற்
குணத்துடன் னமைச்சர்கள் வந்துகூறவுங் கோமான்
றணக்கருங் களிப்பெய்தியோர் குறையுளத தாக்க
வணக்கமோ டவ்வைமல ரடிவணங்கிச் சொல்வழங்கும். ()

* மன்னர் மூவருமளித்திடு § நத்தமாநாட்டிற்
றுன்னுமாறி லொன்றுய்வரும் பணையினிற் றெக்க
செந்நெலிம் மணத்துறுபவர்க குணவுசெய் விக்க
மன்னுதற் கொருவகையினு மாருமோ வழங்காய். (கஉ௬)

* என்றுமன் னவன்வருந்தி நின்றேங்கவு மெந்தாய்
மன்றன் மார்பநீ வருந்துறேல் வேணடியவகுப்பேன்
மின்றயங்கு நின்னுடு நலமரிசியாய விளைய
வின்றுசெய் குவமவை கொடுமுடித்தி யென்றிசைத்தாள்.

வேறு.

* தாய்நிகரும் பெண்ணை யெனவெடுத்தொரு வெண்பாச்
சாற்றத்தணிவில் பண்ணை, யாய || பயம் வித்தின்றியுடன்
முளைத்தங்கெழுந்த ‡ பைங்கூழா ரத்தாம, மேயவாலரிசியா
ய் விளைந்தன கண்டெல்லோரும் வேந்தனபாங்கர்ப், போயீ
வாறுய் கண்டபுனிற்றிளங் கன்றெனமகிழ்ந்து புகலக்கேட்
டான். (கஉஅ)

---

† குமுதம்=ஒலி. § நத்தம்=கடு. || பயம்=ஜலம்.
‡ பைங்கூழ்=நெற்பயிர். ஆரத்தாமம்=முத்துமாலை.

வெண்பா.

அ... தாய்வரும் பெண்ணைத் தனிநாட்டுப் பண்ணையெலாம்
பாய்பயிர்க ளுண்டாய்ப் பகரரிசி—யாய்விளைய
வின்றேனா ரிடரகற்றி மெய்யமிழ்ந்தீ வீரட்ட
வண்ணலே நீயருளு வாய்.

* கேட்டவுட னகங்கெழுமி யமச்சர்களை முகநோக்கிக் கிளத்தவன்னோர், வாட்டமிலா மகிழ்ச்சியுடனவ் வேலோனைக் கொண்டு வயல்விளைந்த, நீடமுறு மரிசியைப் பண்டியிற் கொடுவந் $ திரசித மாமலைபோல் யாண்டுங், கோட்டமறக் குவித்திட்டார் கண்டோராக ளதிசயித்துக குறாகவிப்ப. ()

* பின்னுமவ்வை திருவருளாற்.றுவில்புகழென் றெடுத்துப்பெரிதும் வெண்பா, புன்னியிட நாரிங்கன் கடிக்கடையும் பார்த்திபர்பண ளியாபடாந்த, கன்னிய ராடவர்க்கிவை ந்தவகை பீதாம்பரமுதலாங் கலைகளாகப, †பன்னலக ளெல்லாஞ்சேர்ந் நந்நாட்டிற் பலங்கடமைய பண்பினியந்த. கக0

வெண்பா.

க . தாவில் புகழுர சிங்கள் றனதுகடிக்
கோவி லருட்சேர்ந் துயர்ந்ததிருக்—கோவற்
கருததி யுடனே யடைவோர்கட் கேற்பப்
பருத்திகலை யாய்க்காய்க்கற் பாற்று.

* எந்நாளினு மெந்தவுலகத்து மில்லாத வெழிலார் மேன்மை, கந்தமார செஞ்சடை வீரட்டேசன் றிருவருளாற் கலைகளாய்ந்தாள், சந்தமார் திருவாக்கா னடுநாட்டி லேராங் கல்கண்டோர் தைவிகன்றன், முந்தை நாட்டவ மன்றே யுயர்தவமென்றார் கவியின் மொழிந்திட்டாரால். (ககக)

* இந்தவகை கோவனக ரின்புறநன் மணவோலை யேற்ற வேந்தர், சிந்தைமிகக் களிப்புற்று வையமுதலுனல் வகைச

$ இரசிதம்=வெள்ளி. † பன்னல்=பருத்தி.

சேனைகளுஞ்சூழ, விந்து நுதன்மின்னரு ரவர்களொடும்
பல்லியங்க ளியம்பவீண்டி, வந்தடைந்தா ரைசவபுரம் வளை
கடலெலாஞ் செறிந்த வண்ணம்போல. (௧௩௨)

* செம்பியன் சேரன் மாறனென்னு மூவரசரவ்வை
தெரித்தபாவுக், கன்பியைந்திங் கங்கவை சங்கவை மணத்
துக் கன்னவை கொண்டவனிபோற்ற, பைம்பொனெடுந்
தேரேறிப் பல்லியங்க ளொலிப்பநதி பலவிரைந்தாங், கம்ப
ராசியை யடைந்தாற்போற் கோவனகரதை வந்தடைந்தா
ரன்றே. (௧௩௩)

* சத்தபுரி யரசருயர் பாரிசாலக் குரிசிறரணி போற்று,
முத்தர்களாய் நித்தியத்தைப் பெறுபிருகுகவி முதலமுனி
வர்பூவி, னைத்தகை யோருங் கேவலீண்டி னராவிமயமலை
தன்னிலெங்க, ளத்தனருடி ருமணத்திற தேவர்களுமடை
ந்தவைபோலாவலோடும. (௧௩௪)

* ஓரரசர் குழுவொடு மற்றோரரசர் நகர்புகிலே யுலாக்
கொளுது, பாரரசர் முனிவர்களு மவரவர்கள் குழுவோடு
படரும்வண்மை, யாரறிந்து சொலற்பா லாராங்கவா வுட
னெழிலோ டடைந்தோர் தத்தஞ், சீரறிந்துண் டனமுதல
செய்வித்து வசிப்பிடங்கள் சிறப்பினீந்து. (௧௩௫)

*முடிநான் கையுடையோன் பின்னவ்வைதிரு வடிபரவி
மூடனை, வடியேனை யொருபொருட்டா யகங்கொண்டு
மாழையுட னரிசியாடை, படியோர் விண்ணோர் வியப்பத்
தந்தனை யங்கவை மிகுதிபற்றுநிற்கு, நெடியகுழுக் களுக்
கெல்லா நெய்தயிர் பாலளிக்க நேர்ந்திலையென் செய்வேன்.

*எனக்கூறு மிறையவனை நோக்கியஞ்சேலேவலனை யேவிப
பெண்ணை, வனக்கூறு மாறிவரும் பாறயிர்நெய் வேண்டுவ
கொள்வாயென்றோதி, வினைக்கூறு செய்தவளு .முத்தெறி
புமென வெடுத்தவியன்சேர் வெண்பாத், தனைக்கூறுதலு
†மவி பாறதிபெருகிப் பெண்ணைநதி தழைந்தோங்கிற்றே.()

---

† அவி=நெய்.

### வெண்பா.

௪௦ முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
தத்திய நெய்பா றலைப்பெய்து—குத்திச
செருமலைதெ ய்வீகன் றிருக்கோவ லூராக்கு
வருமளவுங் கொண்டோடி வா.

* நந்திவரை தொட்டிருபாற் கரைபுரட்டி நகமுருட்டி நளிர்தருக்கள், சிந்துறவே வேரோடு பிடுங்கிநவ மணிகொழி[illegible]திரைகள்வீசி, முந்துறவே மூன்றாகியொருபெண்ணை மூவுலகத்தவருமேத்த, விந்துவளர முடியனருண் மூன்றாகிப் பெருகியபோலெய திற்றமமா. (௧௩௮)

### வேறு.

* வலமுபெறு மீரசிங்கனுக் குமைத்தமா மணத்தினுக்கவ்வை வலூநத, புலமபெறு கவிதைகேடட மாத்திரத்தோர் குடகனும பொருகவென வெழுந்து, குலமபெறு மணியு மலர்களு மணிநது குருகுசேராடையு முடுத்து, நலமபெறு சிலமபுபுலமபுறு பெண்ணைநறு நெய்பாறயிாதர விடுத்தான்.

* விரிநதிடு திருப்பாறகடலை யெமபெருமான் வியாக்கிர பாதனற சுதறகுப, பரிநதளித்திட்ட பண்பினுஙகோவற் பதிநிலவுறுமிறை தனககுந, தெரிநதிடற கரியகலைக் கடறொத் தெயவிகன மணததில வநதவாசகு, மருநதுற நெய் பாறதிநதியளித்த வவ்வைபண பதிகமாரறிவாா. (௧௪௦)

* ‡கயத்தடங கரையிலமுதிடுஞ சேயக்கே கருணையினுருக் கொடுவநது, பயத்தைமாததிர மீநதருளிய வமமைபண்பினுமவ்வை மேமபட்டாள், வயபபுயத் தைவிகனுக்கு மன்னுவாக்கு மன்னவர்ச் சேர்நதவர்தமக்கு, நயத்துடன பயமு ¶நேயமுந தநதியுமாகிய நதியைநல் குதலால். (௧௪௧)

* அந்தரவமரர் கூறுவாரமுதிற் கரியையாங் கொடுப்யோ ததியை, மநதாமதனற் கடைந்தெணிறு யமைமரீஇ யொரு

‡ கயம்=குளம். ¶ நேயம்=நெய்.

சிறு ‡ மருந்தயின்றுஞ், சிந்தையும் வருந்தாதொரு பெருங்
கவியாற் சிறியமான வருண்டுதேக்கத், தநதண்டயிர்பானெய்
யெனினவ்வை பெருமையார் சாற்றுவரொன்றூர். (கசஉ)

* அரிமுனந் திருப்பாற் கடலினை யரனல்லடியவற்களித்
திடவதனு, லெரிகொள வோர்காலூன்றி நின்றதனை வேண்
டியேயிருந்தவமியற்ற, நரியினைப் பரியாயளித்தவனுரசிங்க
னும் வியாசத்தை நாட்டி, யுரியபாலன்றித் ததிநெயுமுதவு
வித்தனன் பிறிதுபொய்யுரையோ. (கசங)

* திண்மைசேர் சத்தசாகர மவற்றுட் சிறப்புறு ததிநெய்
பாற்கடல்கள், தண்மைசேரேனை நாற்கடறங்கட் குரிமை
யிலலனவெனத்தணந்து, வண்மையார்கவ்வியவுரிமையாலொ
ன்றுய் வயங்குமென் னன்னைசொற் கேட்ட, வுண்மையாற்
கோவலடைந்து வியப்பன்றுலகினி லியல்பதாமன்றே. ()

வேறு.

* அவ்வை யன்போ டறைந்த வெண்பாவினுற்
பவ்வ மென்னநெய் பாற்பிற வந்தவென்
றெவ்வ மில்லவரோ வருந கேட்டவ
ணவ்வி நோக்கிய ரோடு நணுகினூர். (கசரு)

* வந்தித்தார் சில ரவ்வை மலரடி
சிந்தித்தார் சிலர்தை விகன் சீர்புகழ
நிந்தித்தார் சிலர் தேவர் நிலையினை
† யுந்தித் தாரன் மணத்தி லுற்றார்களே. (கசசா)

* பாலை யுண்டனர் சிற்சிலர் பாறினெய்
யேல வுண்டனர் சிற்சில ரொண்டயிர்
சால வுண்டனர் சிற்சிலர் தாவிலேழ்
வேலை யுண்ட முனியின் விளங்கியே. (கசஎ)

---

‡ மருந்து = அமிர்தம். † உந்தி = உயர்ச்சி.

* பொன் ‡ றாதரந் தந்ததும்பைம் $ புல
மொன்று பன்னை லுடை||யரி தந்ததுந்
துன்று மாற்றினெய் பாறதி சூழ்ந்தது
மென்றுங் கேட்டில மென்றனரோ வரும். (கசஅ)

* விரியுமைம் புலம் விட்டி யருந்தவம்
புரிதலான் மும்ம லத்தினை போக்கியே
பரம னல்லருளைப் பரித்தா ளுகதீ
தரி[illegible]றென்ற றைந்தனர் சிற்சிலர். (கசகூ)

* கண்டு நேர்மொழிக சின்னிய ராடவர்
மொண்டு வந்து குடித்தனர் மோதத்தால்
வண்டு கிண்டிய மாலையெம மக்களைக்
கொண்டு வந்தில மென்று குழைந்தனர். (கரு0)

* இப்பெருக்கினி நீங்கிலென் செய்வமென்
றப்பெருக் ¶ கிடங்கர்க் கொடையுடைத்திவின்
முப்பெருக் கடங்காமையின் மோதிநின்
றெப்பெருக் குடையோரு நின் றேங்கினர். (கருக)

* நீண்ட காலநெய் நிற்குமென் றெண்ணினோ
ரீண்டி ரண்டை யிகழ்ந்துமொன் றேடினார்
வேண்டு மாறுசெய் வித்திடு மூகமேற்
பூண்ட வுள்ளதர் பான்மொண்டு போயினார். (கருஉ)

* என்று மிப்பெருக் கெய்திட வீரட்டன்
றுன்று தாளைத் தொழுதனர் சிற்சிலர்
குன்ற லில்புகழ் கொண்டவெம் மவ்வையின்
மன்றற் பாதம் வழுத்தினர் சிற்சிலர். (கருங)

வேறு.

* இவ்வகைபெண்ணை யாற்றைக்கண்டவூ விறைவருள்ளஞ்
செவ்வையின் மகிழ்ச்சிமிக்குச்செழுங்குக முனிவன்றேர்ந்த

‡ தாராதரம்-தராதரமெனக்குறுகியது. தாராதாரம்=மேகம்.
$ புலம்=வயல். || அரி=அரிசி. ¶ இடங்கர்=குடம்.

வவ்வைசீர்ப் பதங்கள்போற்றி யருந்தவத்தீர் தைவிக
வெவ்வமி றிருமணந்தை யியற்றுதற் கருண்மினென்றார்.

* என்றலு மவ்வாறே செய்திடுமென வியம்பவேந்தர்
மன்றலங் குழலினாளை மணத்தினுக் கணிசெய்விக்க
மின்றயங் குறுமாமேனி மெல்லியர் தமமையேவ
வன்றவ் ரங்கணன்றா ரழகினுக்கழகு செயவார். (கருரு)

* நானமென் புனலாலாட்டி நறுமபுகை கூந்தற்கூட்டி
யீனமி 0றொய்யிறீட்டி யிமையெழி லணிகள் பூட்டித்
தேனவிர் மாலைசூட்டிச் செழுமணிக் கோவைத் † தூட்டி
யானது தரித்துக்காட்டி யணிநிலை நாட்டினார்கள். (கருகூ)

* காமனுங் காமுற்றெய்து மிரதியுங் காம்றபெற்று
வீமன்மா பகத்துமேவும விந்தையு நாணுநின்ற
வாமமே கலையினார் கண்மணத்தணி செயதுநோக்கி
‡ நாம மேகொள வராநிலவ ரொழினவிறற் பாறரே. ()

* நான்முடி யரசன்றன்னை நவிலுமஞ்சனஞ் செய்வித்து
மேன்மையா லலங்கரித்து வேந்தற குமரியாரும்
பான்மையாற கொண்டுவந்து $ பரிணயச் சாலைவைத்தார்
மேன்மையாற குமரனென் றங்கேவருநுவல மன்னே. ()

* புவிகைக்காவெழிலைபூண்டபொன்னறு ரிருவாதம்மைச்
சிவிகைக்கோ ரணியாவேற்றித் திகழ்ந்தபல் லியங்களார்ப்பக்
கவிகைக்கீ ழுலகங்காக்குங் காவலன பாங்காவைத்தா
செவிகைக்காபபுகழ்கொளவள்ளியானையிற்செறியமாதோ.

## வேறு.

* வேண்டு மன்னவர் வேண்டு முறைசெய
வாண்டகைக் கன்னியாரோ டமாந்தனன்

---

0 தொய்யில்=சார்ந்திறல் உடலினிடுங்கோலம். † தூட்டி=சீலை.
‡ நாமம்=அதிசயம். $ பரிணயச்சாலை=கலியாணமண்டபம்.

பாண்டியன் கூடலைப் பொன்னிப் பார்த்திப
னுண்டவள் சொற்படி மணமாற்றினர். (கசு0)

* அங்கண் முக்குல மூவரு மங்கவை
சங்கவைக்கு மணமிடச் சார்ந்தைப
புங்கமுற்றுப் புலவருய்யப் புவி
தங்குமம்மை யறிந்திவை சாற்றுவாள். (கசுக)

* பண்டை நூ லுணர்பாவலர் போற்றிடக்
கொண்டு திங்கட் குடையென வேயெடுத்
தெண்டரு மணப்பந்த ரியல்பனந்
துண்ட நோக்கிப் பழந்தரச் சொல்லினாள். (கசுஉ)

## கலிந்துறை.

கக .. திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும் பாண்டியனு
மங்கைக் கறுகிட வந்துநின்றார் மணப்பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்து
நொங்குக் கண்முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே.

* சொற்ற காலையி லப்பனைத் துண்டமுஞ்
சற்றுந் தாமத மின்றித் தழைத் தொன்பா
னுற்றிடும் பலமங்க ளுதிர்த்ததால்
சுற்றமும் மனாகண்டு களிக்கவே. (கசுந)

* அன்று காழியர் கோனொரு பதிகத்தா
லொன்று மாண்பனை பெண்பனை யாயுற
நின்றமேன்மையி னுந்துண்ட நீள்கனி
யின்றோர் பார்த்தந்த தேற்றமன்றோ வென்றார். (கசுச)

* பொற்பின் மிக்கவிந் நந்தப் புவிதனில்
வெற்பின் மன்னை யெந்நாளும் வியக்கவிக்
கற்பு மிக்கவள் காட்டுறு காட்சிக
ளற்புதம் மற்புதமென வார்த்தனர். (கசுரு)

* பிருகுவாதி முனிவரும் பெட்புறு
செருவில் வல்லமு வேந்தரு நதேவரு
மருகு நின்ற வனைவரு மவ்வவை
யுருகு முளளாத் துடன்புகழ்ந் தாரரோ. (கசுசு)

வேறு.

நகரமெங்கு மணமுரசறைந்திடவு நடனமாதர நனியாட
வுஞ், சிகரிநங்க மதினடுவிளங்கு மணிதிரழுமண்டப வின்
னீடவுங், ககனமெங்குமவெதிர்படுபவைந்து பஞ்சவியங்
களதிர்கூடவு, மருடமைந்தர்களு மறைசொல நதணருமரு
வி வேண்டுவன நாடவும. (கசுஎ)

வலம்படநகை யரும்பிளைய மைந்தர்களு மாரசிந்து வென
மறுகயு, மினமோ டண்டர்களு மூயாவிசும பினிடையி
னிதணங்கி னெடுசெறியவுங, கனகமெங்கு மழைபொழிய
நன்றதுயர சிவபுரங்க வினினமமியவு, மினிதுதென்று
சொலவரிய தன்பரசனினிது வந்தகடிமணமரோ. (கசுஅ)

நறியநாளதனி னறியவோரை யதுநணுகு போதுகுக
முனிமுத, னெறிகொண் மாதவர்களுடன் விவாகமறை
நெறியின்மா கிருதுபுரியவே, மறியின மேயவிழி யரிவை
மானைநனிமலித ரோறனையமதனவே, னறிவின்ஞாயறெனு
மணியீராறு தொடையரசன் மாலைமுறை யணிசெயதான்.

வேறு.

அங்கவை சங்கவை தமமையங் கநதணராசி முழங்கவே
சிஙகள மன்னனறு வந்துநீர செமபொனினொடு வழங்கவே
மங்களமாஃவியமெஙகனும வண்டொனி யோதைகறங்கவே
செங்கமலமபுனையங்கையைதநெயவிகனன்றுபிடித்தனன்.

பிடித்திரு மாதர்களோட னல்பெட்புறவே வலமவந்திட
வடுத்தவிர் கற்புடைமாதாதம் மாதவமேதென வாழ்த்திஞ

---

இயம்=வாத்தியம்.

தட்ப்புய மன்னனு மாமறை தருவிதி யின்படி சார்மண
முடித்திடு வேலையின் முனிவர்கள் சயசயவென்றுமுழங்கினர்.

* அண்ணலு மங்கவை சங்கவை தம்மொடு மவ்வைசெவ்
வடிகளை, நண்ணி வணங்கலு மன்னவ ணனிமகிழ் வெய்தி
நராதிப, வண்ணிய மாதொடு வாழ்கவென் றருள்செயுமாறு
ந.லாயனென், றெண்ணி யெடுத்தொரு பாவினலே வரு
மேத்திட் வாழ்த்தினள், (கஎஉ)

வெண்பா.

கஉ... ஆயன் பதியிலரன்பதிவந் துற்றளக
மாயனூ துங்கருவி யாறலுங்—தூயமணிக்
குன்றுபோல் வீறு குவிமுலையார் தம்முடனீ
யின்றுபோ லென்று மிரு.

* அங்கணிருந்திடு குகபிரு காதிநன்மாதவ ரனைவரு
மிங்கிவனுக் கொருகுறையுள சுதர்களென சொலியெய்துற
வங்கைகை யெடுத்தன ரரசருமக மகிழவெய்தின ரண்ணலு
மங்கையரோடுவெயங்கினன் மலர்மழை வானவர் பெய்தனர்.

வேறு.

* அதற் பினங்கரசனு மடைந்துளார்க் கெலாம்
விதச்சுவை யமுதங்க ளூட்டி மேற்கலை
யிதத்துட னளித்து நல்லின்ப மெய்துபொன்
முதத்தொடு கொடுத்துயர் முகமன் கூறினன். (கஎச)

* பன்னிய காலையிற் பாரைத தாங்கிடு
†சென்னிமே முதலமூ வேந்தர் தேர்ந்தருண்
மன்னிய குகமுனி வயங்கு தாள்களை
யுன்னரு மன்பினோடு வந்து தாழ்ந்தனர். (கஎரு)

* தாழ்ந்து நின்றேவிடை தருக வென்றலும்
வாழ்ந்திடு வேந்தர் காள்வம்மி னீண்டிருட்

† சென்னி=சோழன்.

போழ்ந்திடு வீரட்டன் பொருவிலா வடி
யாழ்ந்திடு மன்பினு லரிச்சிப்பீ ரென்றான். (களசு)

சாமமார் களத்த வீரட்டற் றூழ்ந்துபின்
பேமவேற் சேரலன் வழுதி யோதரு
கோமகன் செம்பிய னிவர் குணத்திற்றட
நாமமா ரிலங்கங்க ணட்டிடு ரரோ. (களஎ)

மூவரு மூவிலிங்கங் கணட் டியத்
தேவர்க டேவனை சிந்தை யன்பினாற்
கோவலி லருச்சனை குலவி யாற்றினர்
தாவருஞ் சிவாகம விதியின் சார்பினால். (களஅ)

தம்பெய ருற்றவிறை தன்னைப் பூசனை
செம்பியன் முதலமூ வரசாசெய்து முன்
னம்பிகை பாகனல் லருளபெற் றன்பொடு
மிம்பரிற றத்தம நிடங்கண் மேவினா (கஏகூ)

அன்னவர் பூசித்த விலிஙகங் தன்னையாண்
டென்னிநல் லரிச்சனை புரிற்ற வேண்டுமோ
டீன்னினுஞ் சிவகதி பெறுவா பாரினே
ரின்ன தீர்கோ வலத்திர ருணையால். (கஅ0)

* ஏழுமா புரிமுத லேயவவ் வவர்
தாழுறு விறையருள் கொண்டு சார்ந்தபின்
பாழுறு மதியுடைய பாரிசா லனும
விழுறு வவ்வை யினடி விருமபியே. (கஅக)

வேறு.

* அடியனேற் கன்னேமுன்ன ரறைந்தவாபோல வென்பூங்
கொடிகளைத் தைவீகற்குக் குவலயம் வியப்பவீந்தாய்
நெடியதுன் பகனல்வாடி நிலைதளர்வேற் கின்றுன்றெம்
படியினை யடையும் வண்ண முளததும் பாலிப்பாயால். ()

* எனப் ‡பரிசாலன் வெம்பி யிசைத்தவை கேட்டவம்மை
மனத்தினற் கருணைகூர்ந்து நரசிங்கமன்னை நோக்கி
வினைத்தொழி லுடனேயீழ தேயத்தின் மேவியின்றே—
மனைத்துரந் தரசியற்றுஞ் செறுநனைச் சாடிப்பின்னர். ()

பாரியை யரசனுக்கிப் பகர்முடி சூட்டிவைத்துச்
சீரியவீ ரொன்பானுச் சிறந்திடு நிலங்கடம்மு
ளேர்பெற வுனக்குவாய்ந்த வல்லன வெற்றியெய்தி
நேர்பெற வாழ்தி மேன்மே லின்குலந் தழைகவென்றாள்.

* சிங்களத் தரசே யஞ்சனீ நரசிங்கனோடுஞ்
சங்கையிலாது சார்வாயென் றுரைசாற்றி நாக
கங்கணமணிந்த கோவற்கண் ணுதலடியைப் போற்றி
யங்கணன் றட்டைநோக்கி யருளுருக்கொண்டு வந்தாள்.()

* பொன்மாரி யென்றெடுத்துப் புகழ்ந்து வெண்பாப்புகன்று
வின்மாரி சொரியுங் கொண்டன் மேனிவேந்தாதியோர்க
ளென்மா றென்மாறென்றேத்த வினியசொல்லுரைத்துச் சென்றாள்
சொன்மாரி சொரிவோ ரந்த நாளினுந் துதிக்கமாதோ. ()

வெண்பா.

க௬... பொன்மாரி பெய்யுமூர் பூம்பருத்தி யாடையா
மந்நாள் வயலரிசி யாகுமூ—ரொந்நாளுந்
தேங்கு புக ழேபடைத்த சேதிமா நாடதனி
லோங்குந் திருக்கோவ லூர்.

* பாரெலாம் பணியவவ்வை பாரிசாலன் மகார்க்கங்
கேரெலாந்திகழமன்ற லியற்றிய சொல்லினுமொன்
றோரெலாம் பணியக்கோவ னரசிங்க வரசிரொட்டுச்
சீரெலாங் கொண்டிரொன்பான் செழுநிலம்புரத்தல் சொல்வாம்

தெய்வீகராஜன் அங்கவை சங்கவை திருமணச்சருக்கம்
முற்றிற்று.

---

ஆ செய்யுள்-௧௧௨௦.
அவ்வையாரருளிச்செய்த-திருவருட்பா. க௬.
ஆ செய்யுள்-௧௧௬௬.

---

‡ பாரிசாலன்=பரிசாலன்-எனக்குறிகிற்று.

சிவமயம்.

# தெய்வீகராஜன் அரசாட்சிச்சருக்கம்.

* சிவனருட்டி யானஞ்செய்து திருத்தகு கோவறன்னி
லவமிலா துயிர்கடம்மை யறநெறியாற் புரந்துக்
குவிமுலைதாங் கொரறங்கனை கலைக்கூடி யின்புற்
றுவமையிலாத் தெய்வீக னரசுசின் ஞனுஞற்றி. (க)

* அம்மைமுன் கூறிப்போன வுரையமைந்தகத் துறுத்த
மும்மையு முணர்ந்தஞான முனிவிடை கொண்டுமாறுச்
செம்மையா சிவபுரத்தெம் மிறைதாளைச் சிந்தித்தேததி
யிம்மணவ் விணில்வசிபபோ ரேவற்றுங்களி துளும்ப. (உ)

* கோவலூர்ப பெருமாஞன்குகுறைகடலெழுந்தடூன்னத்
தாவுமா வாதிநான்கு தளங்களுங் குழுமியார்ப்ப
மேவலா தமைந்தநோமே ஞன்முடி யொளிகள்வீச
பூவிலான் போலக்கொண்டான் புரந்தரன் பகைமுன்வென்றன்.

* பாரிதனரியைக் கொல்வானவ ஞெடும்படைக ளீண்
டூசி சோரியையருந்தி யொன்ஞருயிரினைத் தொலைக்கும்
§ வாணன், மாரிபோலாசுகம் பெய்யுயர்தனு வாங்கி மன்னு,
வாரியைக்கடந்து செய்யாண் மருவுசிங்கள தேசத்தை.(ச)

* உற்றநான் முடியோன்முன் போற்சமய தந்திரனை
யாற்றுய்ப், பற்றலர் பணியும்வீர சேனன்பா லீபோய்ட்
டரிக், குற்றவிநகளை நீயும்விடுவையே லுய்வாயன்றேற்
சுற்றுநின்றனை யோடுமுடிவையாலெனச் சொல்வாயால்.

* அமைச்சனுங் கடிது சென்றங் கவனிட மீது செப்ட
யுமைப்பெறுவான் சீர்வெற்றியாவையுமுரைப்பக்கேட்டோ

---

§ வாணல்=வா ¹-நல்.

னிமைப்பொழு துள்ளே யானங் கெதியவ் விறைவ னோடு
முமைச்சம னூர்க்குச் செல்வா னுய்ப்பனென் றுரைத்தி
யென்றான். (௬)

* அண்ணன் மாட்டதை யமைச்சனடைந் துரைத்திடச்
சினந்தே, யெண்ணறுந தானையோடங் கமர்க்கள மெய்தி
னங்ஙன், பண்ணுறுத் திடுமாவைய மிவர்ந்தனன் பலகவன்
கேட்டுக், கண்ணற பொறிகள்சிந்தக் களத்தினாற் குழு
வோரேற்றான். (௭)

* ஆர்த்திருபடையும வெம்போ ரார்த்திட வீரசேனன்
கூர்த்தசேனைகள் பின்னிட்டே குலைந்திடக்கண்டு கோபம்
போர்த்திடக் கொடும்போர் செய்துபுகழ் நரசிங்கன்சேனை
பேர்த்திடக் கண்டெறுத்தங் கெதிர்த்தனன் கணைகள் பெ
ய்தான். (௮)

* அக்கணை களைமறுத்தே சிங்களமாண்ட கோவுங்
கைக்கணை யனந்தமேவிக் காரெனவார்த்தான் வேந்தன்
றிகலெலா நடுங்கச்சீறித் தீயவன்கொடிய கோனாறி
யுக்கிர வீரசேனனுப பலங்கெடுத்தா னன்றே. (௯)

* கெடுத்தலும் வீரசேனன் கேடிலா வேவாலன்றான்
பிடித்திடு தனுவைத்துண்ட மாக்கலும் பெயர்ந்துவாளை
யெடுத்தனன் கோபமிக்கங் கெய்திமற்றவனை நோக்கி
முடித்தலை துணிப்பெனென்றவனுமவ்வகைமொழிந்தே.

* மாசிலா வசிகொண் டேற்றனிருவரு மாறிமாறி
வீசினார் தாந்தாங்கற்ற விசித்திரம் பயிற்றிவீரம் [செய்தார்
பேசினார் நகைத்தா ரார்த்தார் தளர்வில்வாட் பெரும்போர்
கூசினார் மாகர்கண்கள் குவலய நடுங்கிற்றுமால். (௧௧)

* ஒருவருக் கொருவராக வாளமருடற்றுங் காலைக்
கருவருத் தம்பெறாத காளைதன் கரத்துவாளா
லொருவருக் கொண்டகோவ னூரெம்மானருளா லொன்னார்
வெருவரும் படியன்னானை யிருதுண்டாய் வெட்டினால்

* பழுதுபட் டிருகூறுக வீரசேனனுமப பாரின்
விழுதல்கண் †டீரைங்கிரீவன் சுதன் ¶வீவின் வியந்தாரார்
முழுதறிபுலவ ராதியேவரு முடிந்தோர் தாதுக் [த்தார்
கழுதகி கணம்புசித்துத் தேக்குடன் களித்தமர்ந்தோ. (௧௩)

* அன்னது தெரிந்தபாரி சாலனுமக மகிழ்ந்தே
தன்னிகரில்லா வவ்வைதாண் மலர்தமைச சிந்தித்த
நன்னல மிதுவேயென்று நாரசிங்கனைத் தழீஇத்தன்
றென்னகரடைந்தான்கணடோர்துதைந்தெதிர்தொழுதுசொல்வார்

* ஆயெனப் புரந்து நிங்கை யழித்தருளைய பண்டு
தீயினைப் பொருவும வீரசேனன்பா லெமைவிடுத்தே
போயினை யவனுறுங்கள் புன்கணை நனியடைந்தேம்
நீயிவண் வருதலானன் னிதிபெற்றா பேர்ன்றுமன்றே. ()

* எனத்துதி புகலக்கேட்ட வேந்தனு முவந்து நீவிர்
மனத்துய ரினித்தடிநது மயிலவ னருளான் மாண்ட
தனத்தினையவன்பாலன்பைத் தகுதியிறபெறறுநுங்க [தாள்.
ளினத்தொடு மின்மைச் சாலவேய்ந்துவாழ கென்றிசைத்

* கேட்டமு னமைச்சராதி யாவருங்கெழுமி யன்னன்
ஸ்ரீட்டினை யலஙகரித்து நரசிங்க பூபனோடு
கோட்டமில் பாரிதனனை யரண்மனை கொண்டுபுக்குத்
தொட்டணி மாலைவேய்ந்து சுடர்முடி சூட்டி யார்த்தார் ()

* ஆர்த்திடு காலைதன்னி லந்தணர்ாசி சொற்றார் [தார்
கூர்த்த வன்பொடு மேல்வாழும் புலவர்கொய் மலர்கடூர்த்
தீர்த்தனை தருளையுன்னிச் செந்தமிழ் மாலைபாடிப்
பேர்த்தனர் புளகபோர்வை யவணுறு புலவரெல்லாம்.

* ஈண்டுறு வீரசேன னிருளினை வாளாற்போழ்ந்து
மாண்டசீர்ப் பாரியென்னும் பொருடனை வண்மையோடு

---

† ஈரைங்கிரீவன்=இராவணன்.
¶ வீவின்=விவின்-எனக்குறிகிற்று. வீவு-இறப்பு.

காண்டகக் கரட்டும் பச்சைக் $கந்துக முற்றகூரப்
பூண்டகு மார்போயுன்றன் பெருமையார் புகலற்பாலார்.()

* இந்தவா றெவருமேத்த விரறுதா ராறுங்குச்
சந்தமே முதலவாய தருக்களம் பரத்தைமன்னுங்
கந்தவே ளுறையுஞ சோதிட்காம மாங்கிரியை யண்ணிச்
சிந்தை யன்புடன் மாணிக்க கங்கையிற்றிகழமூழ்கி. (உ0)

* ஏழுந்தமை யென்றுமாண்ட குமரவேள் கோயிலெய்திச்
செழுஙகமலத் தின்மேயான் சிரத்தினின் வைத்தபாத
மழுநதுறு மனத்தனுகிச சநநிதியடைந்தங கன்பாற் [ற்று.
றெழுநதொறுங கண்ணீர்வாரத் தோத்திரித் தருளைப்பெ

* மிக்கவர் புகழும்வேறனேக விமலனல் விடையுங்கொண்டு
செக்கரஞ் சடையுமஙகை திகழுறு புரமுஙகொண்ட
முககணனடியார்க்கெல்லா முத்தியையளித்து வாழுந
தகஇிண கயிலாயத்தைச சாநதனன் சரணமுளளி. (உஉ)

* சார்நதுசன முதஇியீயுந தகவுறு தீர்த்தமூழ்கிச [ய்தி
சேரநது மாதவாகள் வாழுநு சிலமபினை வலஙகொண்டெ
யார்ந்திடுங் கங்கைதஙகு மவிர்சடைப் புனிதன்றன்னை
கூர்நத வன்புடன் பணிநது குலவுதோததிரஙகள கூறி. ()

* கஙகண மாகநாக மணிநதவன காமறகாய்நத
செஙகண்ற றிருமால சாத்துமவிழி மலரோற்றுன் சேர்நத
திங்கணன் குறவேசாபந தீாததவன் திரிகோணேச
வங்கண னருளைபபெறறுச சிலபக லாணடுவைகி. (உச)

* மால்விடையாககொண்டான் விடைகொண்டு வளர்
கானீங்கி, வால்வளை திகழுமோத முறறமா தோட்டமெய்
தி, மேவுறு தன்மை செயபா லாவியின் மூழ்கி †மேதை
சாலுமன்போடு கேதீச்சரம் வலம்வந்து சார்நது. (உரு)

---

$ கந்துகம்=குதிரை. † மேதை=அறிவு.

* சந்நிதியடைந்து முக்கட்டாதைதன் னடியைத்தாழ்ந்து
மன்னுறு மன்பாலீச வரதவென் றெடுத்துவாழ்த்தி
யுன்னுதற் கரியபேரா னந்தமுற் றுயர்கேதீச்சு
ரன்னருள் பெற்றங்கன் பாலரிதினினீங்கிச் சென்று.(உசு)

* கண்டியிற் பாரிசால னெடுமனை கடிதடைந்தங்
கொண்டொடி மார்கண்முன் வந்துபசரித்திட வுயர்ந்த
வண்டமிழ் வாணர்வாழ்த்த வதிந்தனன் சிலநாட்பின்ன
ரண்டருந தொழுநல்லவ்வை யருளுறையுன்னி யண்ணல்.

* சிங்களத் தரசன்றன்பாற் றெரிவித்து விடையுங் கொண்டே,யெங்கணுங கருவியார்ப்ப வேந்திழை மார்களேத்தப், பங்கமில குளத்தான் மிக்கவைம்சசரும் படையுஞ் சூழச, சங்கரன் றுளேச்சிநதித் தெழுநதனன் படைதரித தான். (உஅ)

வேறு.

* செழித்த செநதமிழசோ நாடடையுமீண்டு சிங்களநாட்டையு மொழியக், கொழிசுதிடுஞ செல்வக்கடாரமே முதலாங் குலவுமீரொட்டு நாடவற்றின், வழுககலில் வலியோடிருபடையு மருவுறவ வணவண்மருவி, யிழுக்கலில் வெற்றி சொளுமவகை யெம்மாலியம புதறபாலலவமமா. ()

* உரைத்த வீரொட்டு நாடுளவேந்த ரொப்பிலா நரசிங்கன் போருக், கிரைத்த தானைகளோ டெய்தினனனு முன்னெதிர் சிலர்வணஙகின ரிதையங, கரைசதனர் சிலர் வெநகாட்டினா சிலர்நோ கலந்தபோா பலவிதமுடக்கி, தரைத்தலத் திறநதார் சிலரன்றி வெற்றிதரிதது நின்றவுரிலைச்சாற்ற. (கூ0)

* நாரசிங்கன் றனுமமீரொன்பா னொட்டினு நாட்டியெய்துறுதல், கீரமோர் கோவற்பதியுளோ ருணர்ந்து கெழுமிவந் தெதிர்கொளக் கிளர்ந்த, தீரமார் புயத்தை வீகனுமங்கட்

சேர்ந்து வீரட்டனாருள் சிந்தித், தாரமார் சடையற்றி யா
னஞ்செய் குகன்றனடியை வந்தித்தர ணடைந்தான். (௩௧)

* தண்மதி கண்டசந்திர காந்தக்கல்லெனத் தனிவிலன்
பூறி, யுண்மதி நெகிழ்ந்து பற்பலமாத ருபசரித்திட மனை
புகுந்தா, னெண்மதி யுடையகோவன் மாநகர விறையருள்
கொண்டுவிண்டிக்கு, மண்மதி புகழ்சேரிருமுடி சேர்மலர்
மகனெனவுரு மன்னன். (௩௨)

* வழுதிதன்மகளே யாதியாயுள்ள வனிதையர்பன் னிரு
வரையும், பழுதிலா வின்பமுறத்தழீஇ யூடிப்பகர்புனன்
முதல்விளையாடி, வழுவிலாவுடலுமுயிருமபோன்மருவி
மன்னவர் வணங்குறப்புவிபு, விழிவுடை யிருநாற்குற்றமு
நீக்கிக்கோன்முறை யரசுசெய்திருந்தான். (௩௩)

* அகமதிற்பதினெண் புவிக்கரசாக வணிமுடிதரிக்க
வண்ணலுக்குத், தகவுடனமச்சர் கருதியேகுமரன் றன்னரு
ளென்று மெய்த்தவஞ்செய, குகமுனிபாலே யுரைத்திட
வவனுங் குவலயத்தினி லுமைமன்னர்க, கெமதிவின்ப மெய்
துறநிருப மெழுதுகவென வெழுதினரால்.

* அங்கநற்கலிங்கங் கௌசிகருசீன மருணங்காம்போசஞ்
சாவகமக், கொங்கணகுசிந்துசோனகந் துளுவந்திரவிடங்
கோசலமகதம், வங்கருசிங்களமெய் மராடமபப்பரமா மரு
வுமுவாறுநாட்டவருரு, சங்கனைபண்ணைப் பெண்ணைந
டையான் சார்நிருபந் தலைக்கொண்டார். (௩௫)

* அவரவர்க்கண்மந்த விறைகொடு தானையண்ணுற வார்
போலார்த்தே, யிவருமெய்க் கோவலகமகிழ்வுடனே யெய்
துதற் கெழுந்தனரிப்பால், தவறறுகுக மாமுனிவிடைட்
படியே சமயதந்திரன்முத லமைச்சர், நிவரவங்கணை யிறை
தஞ்லயத்தை யலங்கரித்திட நியமித்தார். (௩௬)

### வேறு.

வச்சிரத் தூண்கணாட்டி மணியிற்போதிகைகள் சேர்த்துப்
பச்சையுத் திரங்கள்பாவிப பானிலாவரத னத்தா
லச்சமில் பலகைமீது பரப்பியாடகத்தின் மேய்ந்து
விச்சைசேர் சிறபரா ன்மின்விளங்குமண்டபமுஞ் செய்தார்.

அருமணி மண்டபஞ்செய் ததனிடை விவிதமான
திருமணி குயிற்றிப்பேழ்வாயச சிங்கநறவி சமைத்து
விரிபுநற் கங்கையாதி வியன்றுறைப் புனலழைத்தங்
குரிமையாற் கோவலூரர் யும்பரும் வியக்கச்செய்தார். ( )

தெற்றிகண் முதலாயெங்குஞ் செழும்பனி நீர்கள்சிந்தி
வெறறிசெய்ப தாகைநீட்டித் தோரணம் விளங்கச்செய்து
நற்றிரு வரம்பைநாட்டி நகரொங்கு மலங்கரித்தார்
கொற்றவற் காக்கங்கண்ட கோவலூர்மா நகரத்தோரே. (௩௯)

* சீரொன்பான் வடிவிறந்த செழுஞ்சுட ரருளுலாய
வோரொன்பான் கண்டமேலாயுயர் திருக்கோவ லூரி
னீரொன்பான் பதியோராதி யேவருமிறையோ டெய்தி
[illegible]ரொன்பான் மணிமிக் கோதலிணையடி யிறைஞ்சினார்.

* ஒப்புகொண் டங்கவரவர்க்கு முகமனுஞ் செப்பியண்ண
லிறைகொண்ட வருள்வீரட்ட நிமலன்றாள் புகழ்ந்துநின்று
லுறைகொண்ட பிருகுவாதி முனிவரருகந தெண்ணில்லா
துறைகொண்ட புனிதநீராற் றேன்றலுக் காட்டினரால்.

முனிக்குழாம் விதியினாட்டி முனையனுக் காடகத்தாற்
புனைத்திரு வாடைசாத்திப் பொன்மணி யங்கதத்தோ
டனைத்துள வணிகள்பூட்டி யலர்மழைபொழிந்து வாழ்த்தி
யினித்தநான் முடிகொண் ||மோலிக்கெழிற்றாபதீபமீய்ந்தே

---

|| மோலி=கிரீடம்.

மங்கள வியங்களார்ப்ப மாதர்பல்லாண்டு கூற
வெங்கணு மறையோரீட்ட மினிதுடனாசி சொல்லச்
சிங்கள முதன்மூவாறு சீர்நாட்டைப் புரப்பாயென்று
சங்கரனடியை யுள்ளிமுனிவர்க டரித்தார் மோலி. (௪௫)

மணிவளைத் தடஞ்சூழ் கோவன்மா நகரதனிலுள்ள
கணிகையர் கவிஞர்வேதர் காளைமால்வேந்தர் யார்க்கு
மணிதுகின் முடிகளாய வணியுமாடகமு நல்கி
மணிமுரசியம்ப வேந்தன் மடங்கலாதனத் திருந்தான். ()

தைவிகன் றனக்குமிக்க தவக்குகளுதி யோர்க
ளிவ்வண மௌலிசூட்ட வரியணையவ னிருந்த
வவ்வணங் கண்டோர்யாரு மகமகிழ்ந்துடல் கமபித்து
மைவ்வணக்கள வீரட்டனருள வியந்திவை வகுப்பார். ()

வேறு.

* வன்னிதனிற் பிறத்தலினால வலலசுரர்ச் செருத்தலினாற்
பன்னியர்பலா னிருவாகளை யுடைமையினாற் பன்னவர்த
மின்னலினை நீக்குதலா லெரியமான் மகனுறலான்
மன்னுகங்கை கொடுவரலால் வளைபினந்தா னிவனென்பார்.

எழிற்சாம வடிவத்தா லிகலரக்கர்க் கோறலினால், ‡ விழுப
பெயரா லரனடியினை மேன்மே லன்பேறலினா, லிழுக்கில்
சுதை கொளருதலா லிரட்சிக்கு மியல்புடைத்தா, லொழுக்
கமலர்த் திருவுறலா லிவன்புருடோத்தம னென்பார். (௪௭)

‡ பொருந்துபூ நான்முகமுநான் முடியின் பொற்புறலாற்
றிருந்துமறை ||வாணியங்களுஞ் செறிதலாற் §திருக்கோவ
லிருந்திடலாற் சீவர்களை வினைவழியி னியற்றுதலா
லருந்தொழிலை முற்றுதலா லயனிவனேயா மென்பார். ௪௮

---

‡ விழுப்பெயர்=நரசிங்கன். || வாணியங்கம்=சொல்லுறுப்பு.
§ திருக்கோவல்=திருக்கு, (சீவர்கள்)குற்றத்திற்கு. ஓவல்-வருத்தல்.

* ‡ கோவலத்தை யுடைமையினாற் கோவலத்தை யுடைமையினான், மாவலத்தை யுடைமையினான் மாவலத்தை யுடைமையினாற், றாவலத்தைக் கெடுத்தலினாற் றனிப்பாரத் தை யடுத்தலினாற், சேவலத்த னிலைபெறலாற் றேவர்கோ னிவனென்பார். (சகூ)

* பால்வெண்ணை யளைதலினாற் பலபெண்ணை யளைதலினாற் கோல்வலிக்கோத் துரத்தலினாற் கோக்குலத்தைப் புரத்த லினா, னூல்வழிசொல் லேறுதலா னுவல்பழிக் *ஞாலுத லாற், கால்வழிக ளடுத்தலினாற் கண்ணனிவ னென்பார்.

* சிரியலவ்வை யுனைக்குத் திருநாட்டை யொருவுதலால் வாரிதனைக் கடத்தலினான் மான்பின்னே நடத்தலினாற் பாரியுனைப் படிமீட்பான் பகைகெடவே தடிதலினாற் காரியலுங் தனுவுறலாற் காருத்தனிவ னென்பார். (ருக)

* அரியணை நான்முடியோனை யரசொலாந் தொழுதேத்தி யெரியணையா மதனுனு மெழிலுருவைப் பார்த்தபடிப்

---

‡ கோவலத்தை-வச்சிராயுத வெற்றியையும்-கோவலத்தை-காமதேனு (வசிக்கும்) வலபாகத்தினையும்-மாவலத்தை (வெள்ளை) யானையின் வலியையும்-மாவலத்தை (திரிலோகாதிபத்திய) மேன்மைவலியையும்-தனித்தனியுடைமையானும்-தாவலத்தை (மலைகளின்) பர [illegible] சிகெடுத்தலினாலும்-தனிப்பாரத்தை-ஒப்பிலாத தேவதாசிகளை அடுத்தலினாலும்-சேவல் அத்தன்-கோழிக்(கொடியையுடைய) குமாரக்கடவுளால் (சூரனைச்சயித்துக் கொடுக்கப்படும் தேவவுலக)-நிலையைப் பெறுதலினாலுந்-தேவேந்திரன்.

கோவலத்தை—அரசர்களுடைய வெற்றியை-கோவலத்தை-காமதேனு (வலம்வந்த) க்ஷேத்திரத்தை—மாஅலத்தை—பெருமைபொருந்திய கலப்பையை-மாவலத்தை குதிரைவலமாய்வந்த நாட்டைத், தனித்தனியுடைமையானும்—தாவலத்தைப் பகைவர்கள் வல்லபத்தைக் கெடுத்தலினாலும்-தனிப்பாரத்தை ஒப்பிலாத பரமசிவத்தை யடுத்தலினாலும்-சேவலத்தன் குமாரக்கடவுள் (கைவேல்காட்டிய) இடமிவனைப் பெறுதலாலும்—தைவீகனே—என்பார்.

பிரியவுளத் தினராகிப் பேசுமவர் தமைநோக்கிக்
கரியவற்கீ நைந்துபிறப் பளித்தமுனி கழறுமால். (௫௨)

* ஏதிவனுங்கவி னொருவனென வெண்ணிப்பல வாறுய்ச்
சீதரனை முதலோரை யவமானஞ் செப்புகின்றீர்
மாதொருபாகத் துடையான் மதியுடையா னதியுடையா
னேதவரு மெய்யருளின் விஞ்சையென வுரையாதே.(௫௩)

* எனவுரைக்கு முனிதானை யேவர்களும் பணிந்தேத்தி
மனதுவப்பை யுள்ளடக்கி யெங்களிலோர் மனிதனன்றி
நினைவதற்கென் னறிகுறிக ளெனவெளிதி னுரைத்துநின்று
ரனையவைகேட் டகம்வெம்பி யெழுந்துமுனி யறையுமால்.

* அண்டமெலா மோரிமைப்பிற் படைத்தளித்துத் துடை
த்தருளு, மொண்டொடியை மும்மையிற்பெற் றொருவனுக்
கங் களித்தலினாற், றொண்டர்பெருமா னுரைக்குச் சூர்
கடிந்தோன் வேல்காட்டுந, தண்டவிலாக்குக முனிவன்
றனி வேள்விதனிற் பிறந்து. (௫௫)

* ஈரொட்டு வயசுடனே யெழிற்பசிய முடிகுலவி
யோரொட்டுத் திசைபணிய வொப்பிலுப பலங்கொண்டு
காரொட்டும் பசும்புரவி மிசைகொண்டு கவினெம்மான்
விரட்ட னருள்பெயரை மேவுதலால் வியன்கங்கை. (௫௬)

* தினமாடிச் சேதுபாற் குடன்புனலாட் டித்தில்லை
வனமாடி யடியருளை மகிழ்ந்தாடி வந்ததனு
வினமாகு மூவரசர் தமைவென்றங் கெழின்முடிகள்
தனமார்கன் னியர்நாடு தமைமூன்றாய்ப் பெறுதலினால்.௫௭

* அமுதுண்டு நித்தியமே யண்டரா கண்டலனுங் [கொண்
கமைகொண்ட முனிவரருங் கசிந்துவப்ப விறையுமை
டமைதலினா லரசவனத் தண்ணலுண்ணீர் பொதிசோறு
தமையருளிப் போர்காண மேற்குமுகஞ் சார்தலினால்.௫௮

* வஞ்சனை கோவணத யளித்த வல்லூரகாரூண்டர்
அஞ்சமலர்த் தவிசுறைவான் றனைநோற்றுக் கைக்கொண்ட

காரோய்ந்த கரதலத்தி ரெல்லீரும் யான்கழறும்
பேரோய்ந்த கோட ¶ ரழுக்காறு பின்னிடவே. (எக)

* இத்தகைகா மம்பெருமை யிந்திரனே யயனன்று
னத்தனிவர் கட்குளவோ வந்தகனை வாட்டுறுமிவ்
வித்தகவீ ரட்டேசன் வியனருளே யிவ்வுருவென்
றுய்த்துணர்வீர் வேறுகு முறைமறமி னென்றுரைத்தான்.()

* பிருகுமுனி யிவையுரைக்கப் பெருமகிழ்ச்சி கூர்ந்துள
நன், குருகினராப் புகழ்ந்துரைத்தங் குயரரச ரெல்லோரும்
பெருமகிழ்ச்சி யொடுபின்னர் தத்நகர் பெயர்ந்தனராற்
கருகுகண்டர் கழலடியைக் கைதொழுது தோத்திரித்தே.()

கொலைகள்வு கட்காமங் குறுகாது மன்னுயிர்க
டலைமைபெற நல்லறிவு சாரந்தினிது கோல்வழியே
நிலைமைபெற வுலகளித்து நிருபரொலாந் திறையிடவிம்
மலர்தலைமா நிலம்புரந்தான் வண்கோவ லிறையருளால். ()

வேறு.

* இன்ன வாபதி னெண்புவிக் கும்முடி
தன்னைத் தைவிகன் பூண்டது சாற்றினும்
பின்னர் மைந்தர் கண்மூவரைப் பெற்றது
மின்ன ரவர் வேட்டதும் விள்ளுவாம். (எ௫)

தெய்வீகராஜன் அரசாட்சி சருக்கம், முற்றிற்று.

ஆ செய்யுள்-௩உ0அ.

---

¶ அழுக்காறு=பொறாமை.

உ

சிவமயம்.

# தெய்வீகராஜன் புத்திரப்பேற்றுச்சருக்கம்.

### வேறு.

எழிலரி வையர்கள் பன்னிருவ ரின்பந்துய்த்
தொழுகு காண்முதல மூவொண் டொடிக்குமெய்
மிழ்நிடை யாளனல் லருளின் வண்மையாற்
பழுதி லாக்கரு வுதரத்திற் பற்றின. (க)

* உருக்கொண் முக்கன்னிய ருதரத்துறுசெங்
கருக்கொளல் செவிவியா லறிந்த காவலன்
மருக்க மழிந்தழியா னருளாவந் திக்தே
யிருக்குரை விதிந புஞ்சக மெய்தாமலே. (உ)

*புங்கமார்ந் திடுபும்ச வனம் புரிந்துருப்
பங்கமுறு தெழில் பருகச் சீமந்த
மங்கல வியற்றியும் வள்ள லாலய
மெங்கணு நாடொறும் விழ வியற்றியும். (ங)

* மகம்பல புரிந்துந்தி வறுமை யார்கவி
புகுந்திடச் செய்துநற் புண்ணியந் திகழ்ந்
திகம்பதி னெட்டினு மியலச் செய்தன
$ னிகங்கொள் பொன் மாரியேய் நிருபரேறரோ. (ச)

### வேறு.

* இத்தகை யாகமுக் கொடிகளுக்கு மியல்கருப்பச் சடங்கிமற்றி, ¶முத்தகை யாகவிரு விதவறங்கண்முறையிற்செய் திறையடி முன்னி, மெய்த்தசீர்த் தைவீகன் னிருந்திடுங் காற் சண்பகமாலை மெல்லியலும், பத்துமாதாந்தம் பங்குனி யவிட்டம் பானுவாரந் தனிலம்மா. (ரு)

---

¶ முத்தகை=தன்னல்-தன்பரிசனத்தால்-தன்குடிகளால்.

$ நிகம்=பிரகாசம்.

* சீர்பெறுஞ் சரியையாதி யோர்புகழத் தேவர்கண் மகிழ்வொடு திகழ, வேர்பெறுஞ் சுதனை யளித்தனளப் போதிருவிசும்புலகு மெய்ப்பிருகு, கூர்பெறுங் குலத்தை விளக்கவந்துதித்தகுல §செகராவெனக்கூறப், பேர்பெறுஞ்சுதற்குமிகமகிழ்வடைந்தான் பெருந்தகை யிறையருள் பேசி. (௬)

* செந்திரு வினையசேரன் மாமகள் பத்மாவதி மாசியாந்திங்கட், புந்திரோகிணியிற்பூதி ருத்ராக்ஷம் புனைபவரிடத்தினிற் பொருந்து, நந்தவெள்ளாது கொளற்கொரீந்கரியர்ய்ஞாலமுள்ளளவு நாட்டுதற்கே, தந்தனளொரு மாமைந்தனைத் தரள்மொன் றினைத்தரு சததளம்போல். (௭)

* கயற்கணி யிவளென் றுசிதர்கள் போற்றுங் காஞ்சனமாலை யாடியினில், மயற்றவி ரத்தம் † பிருகுவாரத்தின் மறைமுதற் சின்னங்கள் வாய்ந்தோ, ருயிர்க்கிறுசெயினு மெய்ப்பொருளெனக்கொண் டுயர்கதிபெறுதற்குக் கரியர், யியற்குணமுடைய வோர்சுதனீன் றுளெழில் ‡ வயமாவின் போதகத்தின். (௮)

* ஒவ்வொரு சுதனும் பிறந்தநாளதனி லுயிர்த்திடு மனைபிதா சீவு, மெவ்வமிலாயுள் விருத்தியின் பொருட்டுக் குகமுனி ரீந்தலைக்கொண்டு, செவ்விதா யோமதானம் பத்திந்து சாதகன்மங்கள் செய்வித்து, நவ்விவாழ் கரவீரட்ட நாயகற்கு நவந்தருவிழா வயர்வித்தும். (௯)

* சூதகவுத் தாபனஞ்செய்வித்தப்பாற்றேன் றன்மூவருண்மூதற்றேன்றற், காதரவாய்ப் பேரமைந்தும் பேரமையாமற்றிரண்டழகிய சுதர்க்கு, மேதகுநாம கரணத்தின் விதியின் விளங்குமோ மாதிசெய் வித்து, மேதமில் செழியன் மகள் பெறுசுதற்கு மெழிற்கொங்கன் மகளளிசுதற்கும். ()

---

§ சேகர்ா-என்பது=செகராவெனக்குறுகியது. † பிருகுவாரம்=வெள்ளிக்கிழமை. ‡ வயமாவின் போதகம்—சிங்கக்குட்டி.

வேறு.

சிரத்தையாற்றை விகன்சிந் தித்தேத்திய
வருத்த சத்தியார்த் தர்தமுரிய நாமமுந்
திருத்தகுநரசிங்கச் சிவன்ற னாமமுங்
கருத்தொடு புனைவித்தான் காளைமைந் தர்க்கே. (கக)

வேறு.

* நம்பெரிய நாயகியை நயந்திடப்பால் கொண்டருளு
மெம்மிறை னருண்மலிவாற் பின்னடையு மியற்கேற்பப்
பைம்பொன் மாலையின் சுதற்குப் பகர்ந்தசத்தியார்த்தப்பே
ரிம்பரும்பர் மெய்ப்பொருளென் றிசைப்பமுனி யிசைத்த
னனால். (கஉ)

* நரசிங்கன் றனிச்சரப மாயடக்கு நம்பரனை
நரசிங்கன் றுதித்தே நயந்தருச் சித்திடுநாம
நரசிங்க நாதனென நவில்பெயரைக் குகமுனிவ
னரசிங்க முனையனென்றே நானிலம் போற்றுறவளித்தான்,

* செம்பொன் வளைவில்லான் றன்றிருக்கோயிற் சிறப்பளி
த்துப், பைம்பொன் மணிச்சிவிகை தனிற்பாலர்களைக் கொ
டுபோநதே, யெம்பெருமானைப் பசுவை யிந்துவைக் காண்
பித்துமுனி, யும்பர்வியந்திட விதியி † னுபநிட்டா[illegible]மு
டித்தான். (கச)

* வளவன் சேரன்மாறன் முதலான மன்னரையுந், தளாவற
வப்பிருங்காதி முனிவரையுந் தாமழைப்பித், துளமகிழக்கன்
னவேதன மைந்தர்க்கு ஞற்றிவலங், கிளர்கோவ லீணிவீதி
யியங்கவிப்பக் கெழுமிவந்தான். (கரு)

* மாதவர்கள் புகழ்ந்தேத்த மன்னவர்கள் பணிந்தேத்த
வோதுபுகழ்க் குகமுனியு மோமாதிக்கிரியை முற்றக்
கோதறுமுக் குமாருக்குங் கொற்றவர்க்கு நற்றவர்க்கு
மாதுலர்க்கும் § பயவசன மருமருந்தி னரசளித்தான். (கசு)

---

† உபநிஷ்கிரமணம்-என்பது=உபநிஷ்டானமீ-என்றாயிற்று.
§ பயவசனம்=பாலன்னம். அது-பாயசமெனவழங்குகிறது.

* பரிகரிவை யத்திடை நற்பாலர்களை யடைவித்தே
யெரியிடையாகுதி விண்ணோர்க்கீந் தருளன் முதலான
பிரியமுடன் முனியரசும் பிண்டவர்த்தனம் புரிந்தார்
விரியுலகி னுளதியோர் மெய்யுளமுந் திடுக்கிடவே. (௧௭)

* இந்தவிதக் கிரியைகளை மூவாண்டுளே யியற்றிச்
சந்தமுனி யோமாதிச் சடங்குசெய மனன்செள்ள
மைந்தர்கட்கு நடத்திமிக மனமகிழ்ந்தான் மாநிலத்தோர்
நந்தன நந்தன மென்றார் நரசிங்கநந்தனனை. (௧௮)

* ஐயாண்டு மைந்தர்க் கடைந்தமை கண்டறமுனியு
மெய்யாண்ட கையும் விதியி னுபநயனஞ்
செய்யா விழைந்துபல தேவர்களுந் தேக்குறவே
நெய்யாதி யாகுதிக ணெருப்பினிடை சொரிந்தே. (௧௯)

* தொன்னூ லறிந்தடங்குந் தோமில்குக முனிவன்
முன்னூ லெவைக்கு முதற்கா ரணமான
நன்னூ லுரைத்தளிக்க நான்மறைச் சைவத்தொடர்ச்சி
மன்னூல் வருஞ்சுதர்க்கு மார்பிற்பொன் னூலணிந்தான்.

* முத்திக்கை கட்குமுதற் றீக்கையு மோதி
[illegible] பஞ்சாக்கரமு மைந்தர் செவிக்கோதி
யெத்திக்கு மிகை பெற்றுஞ்சிவ தீக்கையில் லார்மெய்
[illegible] மொக்குமென் றுஞ் செப்பிமுனி களித்தான். ()

* இருக்குமுத லாரணங்க ளெழில்வேதாந்தம் முதலநம்
பெருக்கமுறுஞ் சாத்திரங்கள் பேசவரும் புராணங்க
ளருக்கனொளி யினுஞ்சிறக்க வக்கரலக் கணமளித்துக்
கருக்கடலைக் கடப்பார்க்குக் கலைக்கடலை யடைவித்தான். ()

வேறு.

நாமமே முதல்வா நயக்கச் செய்கருஞ்
சேமவேற் றனயர்கள் சிறப்ப விஞ்சையுங்
காமரு மவிதரக் கனிந்து போற்றினன்
சாமமா மூர்த்தியான் றனைப்பி லன்பினால். (௨௩)

### வேறு.

* வளர்வுற வளரநின்ற வாய்மையும் பொறையுமன்புங்
கிளருநல் லொழுக்குங் குன்றாச்சீலச் சைவக்கிளர்ச்சி
விளைவுறப் பாஙிரண்டா மெய்யுறுப்பின் கிளர்ப்பு
முளைநகை வேறுண்டா முன்முளைத்தன மேன்மேலாக. (

* கந்துகமடிக் குங்காலைக் கந்துகமேறக் கற்றுந்
தந்திரம் விரும்புங்காலைத் தந்திகளேறக் கற்றுஞ்
செந்துவரோடுங் காலைத்தேர் விடுந்திறலைக் கற்றுஞ்
சிந்துவிளுடுங் காலைச்சிலைமுத லாடல் கற்றும். (உ௫)

* ஈகையினென் பீந்தோனைப் புகழினி லிரவிதன்னை
வாகையின் முருகன்றன்னை வடிவினின் மாரன்றன்னை
யோகையி லுமையையுள்ளக் குளிர்ச்சியி ‡லுடுக்கோன்ற
ன்னை, †யூகையிற் சேடன்றன்னை யொப்பென வுயர்ந்தான்றே

* தம்பிற்றம்மக்கண்மேன்மேற் சமைவுறுந்தகைமைநோக்கி
விம்மிதவுளனா யண்ணன்மெய் முனிநாதனைப் போற்றிச்
செம்மைசேர்திறலையுற்ற சிறார்க்கிள வரசியற்ற
மும்மையுமுணரமைச்சர்க் குரைத்தனன் முகமலர்ந்தே.

### வேறு.

* அண்ணல் வாசகங் கேட்டலு மமைச்சருமஃதே
நண்ணவாற்றுது மென்றுநல் லோரையைக் குறித்துத்
தண்ணுலாம் பெண்ணைத் திருநகர்க் கணிக்கணிதந்தே
யெண்ணுறு மெவருபுவியு ளோரோவரு மீண்டி. (உ௮)

* அங்கணைய் துறவரவழைத்த சனியே றென்ன
வெங்கும் பல்லியசாலங்க ளிரட்டுற வெண்ணின்
மங்கலந்திகழ் பாடகர்முறை முறைவாழ்த்தப்
பங்கமில்லிள வரசனைப் பாரிரோன் பதுக்கும். (உ௯)

* ஆக்கினார் குலசேகரன் றனையணி கத்துக்
காக்கினார் நரசிங்க மாமுனையனை யரசா [லுண்

‡ உடுக்கோன்=சந்திரன். † யூகை=கல்வி.

யாக்கினார் கண்மெய்ப் பொருளெனுங் கதனையைத்தொழி
டாக்கினார் முதலாலயச் சிறப்பினை யளிக்க. (௭0)

* இன்னவாறு கண்டறிந்தனு மேந்தனு மிறைவன்
றன்னருட் டிறமுளங்கொடு மகிழ்ந ¶ துலோசனத்தை
நன்னயத்திமை காத்தலிற் காத்தனர் ‡ நவிரந
தன்னையொத்த மும்மைநதைத் தரணிவிண் வியக்க. (௭௧)

* செய்யவீ ரொன்பான் புவியின்மூக் குமரருஞ்சென்று
வெய்யதீ வினையெய்துறு தவணவண் விலக்கித்
துய்யகோன் முதலா † றமைதிகளைப்புந் துலக்கிச்
சைவநன்னெறி மெய்மையென் றெங்குந்தாபித்தே. (௭௨)

* அங்கநுள்ள பல்லரசர்பா லாறிலோர் கடமை
புங்கஞ்செய்துபின் குடிகளிற் பெறும்படி புகன்று
மெங்கணுயகனு லயவிதிகளை யிசைத்துத்
தங்களுக்குள விறைகொடு கோவலைச சார்வார். (௭௩)

* மைந்தர் மூவருந்திண்மை வண்மைகளின் மாநிலத்ந்த
யிந்தவாறு || நான்முடியுளோன் வியூகரை யெய்ப்ப
நந்தலின்றியே புரயபதை நாரசிங்கன்றன்
முந்நநாட செய்ததவந் தவமெனச சுரர்மொழிவார். ()

வேறு.

* கண்ணிசுழுநாளி லீரிருமுடிகொ ளெம்மான், செவ்வண மேனிமைந்தர் வளர்ச்சியுந் திறனுநோக்கிப், பைவணப் பாந்தள்வேந்தன் பொறைபரிப் பாருக்கேற்ற, மைவணக் குழலார்தம்மை மணஞ்செய மனத்துட்கொண்டான்.

* அமைச்சர்கடங் கட்குள்ளே யறிவுடை யாளியாவோர்
தமைக்குறித்து வகையோடு சமயதந்திரி காணீவீர

¶ உலோசனம்=கண். ‡ நவிரம்=மலை.

† ஆறமைதிகள் ஆவன=செல்வம்-விளைநிலம்-செங்கோல். நோயின்மை-வளம்-குறுமபின்மை. || நான்முடியுளோன் வியூகர்=பிரமாவின்றொழிலுக்குத் துணையாயுள்ளமூவர்.

மைச்செறி தநயருக்குக்கடிமணம் புணர்த்தும் வண்ணம்
துமைச்செறி மூலையினொங் குற்றனர் கூறுமென்றான். ()

என்றசொன் மகிழ்வாற்கேட்ட வியன்முதலறியமைச்சர்
நன்றுளர்பான் மைந்தர்க்கா நாரியர்க் கோடலன்றி
யின்றமி ழருமைதேறு ரிடம்பெறும் பரிசையேய்ப்பப்
புன்றொழிற் குலத்தார்பெற்ற பூவையைமணக்கற்பாற்றோ.

* தன்னிபூ ரெழிலினுக்குங் கதித்தபல் செல்வத்திற்குந்
துன்னிய பிரியத்தோர்கள் குலகுணத் தூய்மையோரார்
பன்னுநற்குல நாணுதிகுணச் செயலபலவும் பார்ப்போர்
மன்னுபல் செல்வத்தோடு ¶ வனப்பையு மதித்துப்பாரார். ()

* பாலொடு தேன்கலந்தபான்மையிற் றுளபம்வேய்ந்த
மாலொடு செய்யாள்சேர்ந்த மாண்பினற் குலத்துவந்த
வேலொடு பொருநோக்கத்த மேம்படுகுண நாணுதி
நாலொடுமெழில் சிறந்தநகையர் நம்பியருக் காமால். (௫௧)

* எனவுரைத்திடலு மீரொன்பது புவிக்கேந்தல் கேட்டு
மனமகிழ வெய்திநீர்போய் மன்னர்கன்னியரை யெல்லாம்
விநயமாய் நோக்கிநோக்கி மேம்பட்டோர் படங்கட்டி
யென்றிடைக் கொணர்மினென்றே யேவினு னேகினரே.

* சமயதந் திரனையாதி மூவமைச்சர்களுந் தக்க, விம்பமா
மலைதொடங்கிச் சேதுவின் வரையீறாக, வுமையினைத் திரு
வைவெண்டா மரையெம்மோய் தன்னை யொத்த, வமைய
மை தோளினார்தங் குலகுண மெழில்களாய்ந்து. (௪௧)

* ஓவியந்தேர்ந்த வங்கங்குள்ள ராலுருவின்மிக்க, பூவையர்
தம்மையெல்லாம் பொறித்துண்மை சொலக்கேட்டோர்
க்குக், காவலனோனுங் களிற்றுக்கே றெனுங்காவல் பூண்ட,
கோவனூ ருடையானீன்ற சுதர்க்கெனக் கூறிக்கூறி. (௪௨)

---

¶ வனப்பு=அழகு.

* இத்தகைப் படங்கடம்மை யெடுத்தன் ராகவெய்திச்
சித்தசற் குவகைகொண்ட திறலரியேற னான்முன்
வைத்தழ குடனே யாங்காங்குற்றன வளவனப்புஞ்
சுத்தநன் ஞமம்யாவுந் துலங்குறச சொற்றார்மன்னே. ()

* ஆயநற் படங்கடம்மி லழகொடு மிக்கதான
தூயருக் கன்னிநாமப் படங்களைத் தூக்கிநோக்கி
நேயமிக் குளனயண்ண லிவைவெயவ ணிகழ்த்துமென்றான்
காயநா லனைத்துங்கண்ட வமாத்தியர் கழறுவாரால். (௪௪)

* வாரியங் காதமுற்ற முலையினர் பறுகினெங்குந்
தூரியங்கொண்டு தீட்டுஞ் சித்திரச் சுவர்கடோறுஞ்
சூரியன் கரத்தைநீட்டிச் † சொக்கினை யெடுக்கலுற்ற
வாரிய தேசமாளு மரசனல் லாண்மையுற்றான். (௪௫)

* ஆரதனகிரி யிராசலிங்கத்தி னருளை வேண்டிப்
பரவிய காவிரிக் கண்ணுகமத் துறைபடிந்து
விரவபிடேக மாதிவிருப்பினி னியற்றிப் பின்னர்
வரமள விலதாய்ப் பெற்றமதி மரபதனில் வந்தோன். ௪௬.

* அன்னவ னிராச்சூடா மணியென வறையப்பெற்ற
நன்னவன் புரிதவத்தின் வந்திடு மதங்கமானி
யென்னுநன் ஞமம்பெற்ற விப்படத்தி னடன்னீர்மை
பொற்புலத் திலுக்குமேலாள் பொன்னெனப் பொற்பின்மிக்காள்.

* இவ்வுரு வுடையாள் கோமளாங்கியென் றிசைக்கும் பே
ராள், செவ்விதா மகதமன்னன் செயசூர சேனனென்பா
னவ்விவாழ் கரத்தன்பாக நவ்விதன்னரு ளாற்பெற்றான்
மௌவலங் குழலாண் மாரன்கரும்பென வளருமெய்யாள்.

* மற்றுமிப் படத்தண்மிக்க வளஞ்செறிமிச்ச நாடாள்
கொற்றவன் வனமாலப்பேர் கொண்டவன் குமரற்போற்று
நற்றவத்தா லுதித்தநங்கை நாமகளை யொப்பாள்
கற்றறி மதனசிந்தா மணியெனுங் கன்னியாமல். (௪௯)

---

† சொக்கு = அழகு.

* என்றுநல்லுரைகள்கேட்டவிறைவன்மிக் குவகைபூத்தம் மன்னர் மூவர்கள்பாற் சென்றுமதங்க மாணியனேயாதிக் கன்னியர்ப் பேசிவைத்த காலத்துக் கோலைகொண்மி னென்னலும் மணப்பெண் பேசுமுறைமையி னேகினரே. ()

படங்கொடுத் திருந்தவேந்த ரேவரும் பரிவாலுள்ள மிடங்கொடுத் திடவேறென் றங்கெய்துறு திருந்தர்பெண் ணைத், தடங்கொடுத்திடுங் கோடீரநான் குளோன் றனயர்க் கெய்துற்கு கடங்கொடுத்திடுஞ் ‡ சுவர்க்கக்கன்னிய ரெவரோ வென்றே. (௫௧)

* ஏகுமூவமைச் சர்மூன்றென்றி யம்பிய நாட்டினெய்தி வாகியல் வாகுமன்னர் மதிமுகமகிழ் விளைக்கி நாகியல் பெண்ணையாற் றினகர்க்கிறை யருண்மைந்தர்க்கே பாகியல் கிளவியாரைத் தருகெனப் பரிவிற்கேட்டார். ௫௨.

*கேட்டலும் வடிவேற்கையர் கிளர்ந்தெழு முவகைபொங்கி மீட்டுமீட் டன்னோர்கீர்த்தி விறலமு தள்ளாம்வாயி [தற் லூட்டவுண் டுடலம்பொங்கித் ததும்பியுள் ளுவட்டெடுத் காட்டிய தொப்பமூரன் முறுவலிற் கழறலுற்றார். (௫௩)

வேறு.

* உமைப்பெறு வானெம் மனேருய்யவந்தெண் ணருடம்பு கழ்க, டமைப்பெறுவான் மூவேந்தர்தந்தையர் தம்மைப்பெ றுவான், கமைப்பெறு வானேத்த சுதர்கையிலெங்கள் கன் னியர்கொ, § யமைப்பெறு வான்றவமுள தோவென்றென் றுரைசர்களும். (௫௪)

* குறிப்புவெளிப் படையாகக் கொற்றவர்க ளங்கங்கே மறிப்புரையா லுமையைக்கேட்ட மந்திரியர் மணவோலை நெறிப்படி மூன்குகமுனி வனியமித்த நாணடக்கப் பொறித்தன்று கன்னியொடு கோவலூர் புகுமென்றார். ()

‡ சுவர்க்கம்=மூலை. ○ அள்=காது.

§ அமைய-என்பது=அமை-யென்றீறுகெட்டது.

* அவ்வவணிற் குறித்தெழுதும் பத்திரங்கை யுடைந்தவரா
ய்ச, செவ்வண்ணற் கோவறிருப்பதி சேர்ந்துநா ரசிங்கன்,
றெவ்வர்தொழும் பதமிறைஞ்சி மணநிருபந் தெரிவித்தா,
ரெவ்வமிலா விறைக்கு ‡ மருத்துவர் நிகரோனுதியர்கள். ()

*கேட்டபதினெண்புவியான்கிளர்மகிழவோடமைச்சர்காள்
வாட்டட்ங் கணம்பெரிய நாயகியின் மணவாள, னட்டின்
மணத்தணியியற்றநவிற்று மென்றானதுகேட்ட, கோட்டமி
லார் முன்முறுவற கொண்டுபணிந் திவைபுகன்றா. (௫௭)

வேறு.

* எண்ணிய வெண்ணமெல்லா மிமைப்பினி லீயும்வண்மை
திண்ணிய காமதேனு சிந்தித்தப்படி யளித்த
கண்ணுதல் வீரட்டேசன் சருணைடிக் குலவுமிந்தட்
புண்ணிய நகருக்கியாது குறையென்று புகலற்பாற்றே. ()

* புத்தமுதாம் வெண்பாவா லௌவையாற் பொழிவித்திட்ட
மெய்த்தபொன் மாரியின்னும் விருக்கம் வீடதர்களெங்ஙனு
சித்திரபானு வெண்ணிறிகழ தல்போற்றி கழுங்காலை
நத்தநன் னாட்டிற்கென்ன வலங்கார நவிலற்பாற்றே. ௫௯.

* ஔவையாங் கனதையன்பா லரிவையா தனைமப்புணர்த்த
செவ்விப்பா யிவண்முன்னாட்டும் புதுமைகடெரிந்துநின்றுங்
கெளவைகூர் யாஙகண்மே லெவ்வலங்காரங் காட்டுகிற்போ
மெவ்விதஞ்செயினு§மென்முன் மதியெனவிழிந்துபோமால்.

* அன்னசொற் கேட்டவேந்த னகமிகமகிழ்ந்து நீவீர்
பொன்னி நாடாதியான நாடெலாமுடங்கல் போக்கு
மென்னஆ மணநிருப மெழுதினா ரெங்கும்விட்டார்
மன்னவர் சிரமேற்கொண்டு மகிழ்வுடன் வருவதானார். ௬௧.

* மன்றலிற் புறமகத்தும வகுத்தமுக் காவணிக்கி
மின்றயங் குறவிடுத்தே விளைசநதான் மெழுகிக்கோல

‡ மருத்துவர்=வயித்தியர். § எல்=சூரியன்.

நன்றுறத் திட்டிக்கும்ப மகரிகை நாட்டிமன்றந்
துன்றகிற் புகைவிடுத்து நறுமலர்த் தொடைகளேக்கி. (௬௨)

* பல்லிய முகிலினார்ப்பக் கோவலம் பதியுள்ளாரும்
வல்லிய முயர்த்தோ னாதிமன்னரு மகிழச்செய்து
சொல்லிய படியேநாளுஞ் சொல்லுழவர் கண்முவேந்த
ரல்லியங் குழலாரோடங் கடைவதை நோக்கினாரே (௬௩)

* ஈண்டிவ் வாறுயிருக்க விராசசூ டாமணிப்பே
ராண்டகை யாதியா மூவரசரு மகிழ்வாற்றத்தஞ்
சேண்டகு ட்டைமேன்மேற சிறப்புறுத்தோரைநோக்கிப்
பூண்டகு மகளிரோடு மெழுந்தனர் தெய்வமபோற்றி. ௬௪.

* தன்மதி யமைச்சரோடுந் தகும்பரிசனத்தரோடு
நன்மதி யாளரெண்ணி லாரொடு நண்ணப்பெற்று
ன்மதி யாதகானு நதிகளுமூற்று நீங்கிப்
ள்மதி லுடுத்தகோலக் கோவலூர்ப் புறம்பினுற்றார்.()

* கம்பந்த னிடையுதித்த கடவுட்பேர்க் காளைகேட்டுக்
¶ கம்பாத மில்லாதூதக் கடலெனப் பணைகளார்ப்பச
† சம்பந்த பரிசனங்கா ளெதிர்கொண்மி னென்றுசாற்றச்
சம்புநதஞ் செயவந்தோரை யெதிர்கொண்டு தழுவினாரால்.

* மங்கலங் கரத்திற்கொண்டு வனிதையர் ‡வரைத்தோடா
ங்கும், § பிங்கலச் சிவிகைமூன்றிற் பொன்னனார் பிறங்க
வேந்தர், சங்கலர் கரத்தரேனை யோர்களுந தருக்கிசூழக்,
கொங்கலர்தாரீரூன்றன்மிளிர்கோவி லிடைகொண்டுற்றார்.

* வந்தவ ராவர்களுக்கு மன்னவன் முகமன்கூறிச்
சுந்தரந் தருமோர்சாலை தோய்வுற விடுத்துத்தன்னைத்
தந்தசெம் முனிதாள்போற்றித் தனயர்மூ வருக்கிசைந்த
பைந்தொடி யவரைவைத்து மணவிதிப் படிசெய்யென்றான்.

---

¶ கம்பு=சங்கு. † சம்=சீக்கிரம்.
‡ வரை=மூங்கில். § பிங்கலம்=பொன்.

* கேட்டலு முனியமைச்சர் கிளர்முக நோக்கிநீங்கள்
வாட்டமின் மைந்தர்தம்மை மஞ்சனமாட்டித் துய்ய
நாட்டமூன் றுளவீரட்ட நம்பன்றாள் பணிவித்திங்ஙு
னீட்டமோடடைதிரொன்றுவேள்விசெய்வதற் கிசைந்தான்

* மங்கள வியங்களார்ப்ப மாகதர்புகழ்ந்து வாழ்த்தத்
துங்கமார்முனி சொல்வண்ணஞ் சுமதியர் சுதர்களுக்குப்
புங்கமோ டேற்றிவேந்தர் புதல்வர்கள் புனைதல்செய்யச்
சங்கமாய் மகளிர்வாழ்த்தப் பரிணயச்சாலை யுய்த்தார்.(௬௯)

* கருமண மில்லாதிந்தக் காசினியுய்ய வந்தோன்
பெருமணச் சுதர்கட்கேற்பப் பேதையர் மூவருக்கு
மருமண மாலைகந்தம் பணியாடை யால்வனைந்து
திருமணக் கோலஞ்செய்து சாலையிற்சேர்ப் பித்தார்கள்.()

* காலமூன் றையுமுணர்ந்த குகமுனி கடிதெழுந்து
பாலைநேர் மொழியார்தத்தம் விதிவகை பகுத்தறிந்து
சீலமார் கவிகுலத்தின் சேகரனென் பானோடு
மாலைதாழ் குழன்மதங்க மானியை மருவவைத்தும். (௭௨)

* நரசிங்க முனையனோடு நவில்கோம ளாங்கிதன்னைச
சுரசங்கீ மகிழவைத்துந் தோமிலாக் குணத்தனோக்
கரசங்க னொப்பாய்வந்த மெய்ப்பொருட் காளையோடம்
மரசங்க மதனசிந்தா மணியெனு மணங்கைவைத்தும்.௭௩.

* நம்மவ ருய்யக்கொண்ட நம்பன்வீ ரட்டநாதன்
மம்மர்நீக் கிமயவல்லி வரைபுகவெறிந்த வேலான்
செம்மல ரடிகளுள்ளிக் கடிவிதிசெய்யக் கண்டோர்
விம்மல்கொண் டவராய்மிக்க மகிழ்வலை வெள்ளத்துற்றார்.

* சாற்றுறும் விதிப்படிக்கு முனிவரர் சடங்கியற்றிப்
போற்றுமுத் தேவொப்பாரால் பூவையர் கந்தரத்தி
லேற்றுமங் கலநாண்பூட்டி யெரிவல மியையும்வண்ண
மாற்றியம் மியைமிதிப்பித் தருந்ததி காட்டினாரால். (௭௫)

* அரசெலா மவ்ன்னதானே யணியெலா மவணவார்க்கு
முரசெலா மவணமறைக் குழுவெலா மவணமுரித்
திரைசெய் வாரியினொலித்துச் சேர்ந்தவை யனந்தனுவா
லுரைசெயவடங்காவென் புன்னெருநாவா லுரைக்கற்பாற்றோ. (

* ஆயபின் வந்தவேந்த ராதியோர்க் கணிபூணுடை
நேயமோ டுண்டிகந்த முகவாச நிறைத்தனுப்பி
மாயன்மா வோடுறங்க மாநிலம் புரந்தானீன்ற
காயெனா நாரசிங்க னெம்பிரா னருளைத்தாங்கி. (எஎ

வேறு.

* கொற்ற மார்முக் குமரரைத் தைவிகன்
பெற்றவர்க்கு மணஞ்செய்தல் பேசினும்
முற்றுணர்ந்த முனிவனம் மூவர்க்குஞ்
சொற்றவா றுபதேசத்தைச் சொல்லுவாம். (எஅ

தெய்விகராஜன் புத்திரப்பேற்றுச்சருக்கம் முற்றிற்று.

ஆ செய்யுள்-௲உ௮௬.

உ

சிவமயம்.

# குகமுனிவன் உபதேசச்சருக்கம்.

* கன்னியரோடு மைந்தர் கலத்தலைப் புரிமுகூர்த்தந
துன்னுநா டெய்விகற்குக் குகமுனிசொலக் கேட்டன்பான்
மன்னவ ராதியோர்கட் கறிவித்தன் முதல்வகுத்தா
னன்னத்தி முன்னோர்மெய் நூலறிந்துலகடைவு நோக்கும்.

வேறு.

* மைந்தர்க ளறிந்திக்கன்னியர் புணர்ப்பால் வரும்பயனெ
வனெனமதிக்க, விந்தமாலுலகோ டுள்ளனவெல்லாஞ் சல
னமுற் றிறந்திறந்தென்றும், வந்துதோன்றின வென்றத்
தகையிந்த வனிதயர் மயன்முதன் மருவா, துய்ந்திடு நெறி
யைத் தனித்தனி கருதியுள மனன்மெழுகெனவுருகி. (உ

* ஒருவருக் கொருவருள முளவெல்லர் முசாவினருலிக வின்பத்தி, லருவருப் படைந்தெம்மேகவி நீட்டத்தடிகள் சேவடிகளைத் தொழுதே, யுருவருவென் றங்குரைப்பதற் கில்லோயுன தருளன்றி நோக்குதற்கு, வெருவரு கின்ற தென்செய் வோமென்று விழிபுனல் சொரியவீழ்ந்திசைத் தார். (௩)

* ஸ்ரீவந்தியன்பினுக்கோ ராளதாய் வந்த வள்ளலு மந்தர வாக்கான், மைந்தர்கா ளுங்கள் பிதாமக னுலே மனமயக் ககற்றுமென் றுரைத்தா, னந்தமெய்ம் மொழிகொண் டருங்குக முனிதா ளடைந்துதாழ்ந் திறையுரை யறைந் தார், கந்தவே ளருளான் கேட்டக மகிழ்ந்து கழறுமின் கருத்துள வென்றான். (௪)

*தரணியி லோரைம் பொறியொடு முதித்த விருதினையு யிர்கள் சஞ்சரித்து, மரணம தடைந்தங்கூசலின் மருவும் வகையினில் யாங்களுந்தக், கரணவைம்புலங்கள் காட்டிய வழியே கன்னிமண் பொன்னினைக்கருதித், திரணமா கா திங்குத் தமநிலையைச சேருதல் குறித்தனமென்றார். (௫)

* அன்னவை கேட்டமுனிவனு மகிழ்வுள்ளடக்கி யுங்களைத் தருமண்ணா, னன்னயந்தரு மீரொன்பது புவியுநவையறு பலவகைநிதியு, முன்னுதற் கரும்போகங்களும் முங்கட்கு தவுவான் கருதிமுன்னுதவு, மின்னுரோடு சுரதவின் பத் தின்மேவி யேனையவு மேவாது. (௬)

* இகச்சுகமடைதற் கேதுவிலா வெம்போவியர் போவிவை யுரைத்த, னைகப்பிட மாமென்றுரைத்தலு மைந்தர்நகை முகங்கோட்டியேகவில்வார், தொகைப்படுபூர்வபுண்ணியத் தாலேதோ மிலாநரசென்ம மெடுத்தோர், மிகசசெல்வம் பெற்றும்வீவிலாப் பதத்தைமேவுற விரும்புறுதந்தோ. ()

---

ஸ்ரீவந்தி—மதுரைச் சொக்கப்பெருமானை யேவல்கொண்ட பிட்டுவாணிச்சி.

* மெய்ம்மைசேர் கலைகடாமறியாது மறிந்தவரிரங்கி தாமே வி, யுய்நெறிசொலினு முளங்கொளா திழிவாமுரை பலவு ரைத் தவமதித்தும், பொய்தருசெல்வந் தனுவலியெழிலும் புகழ்ந்துபூஞ்வயர் சொற்குத்தாழ்ந்துங், ||கைதவருரையை மதித்திழிகுலத்துச் செல்வரை வலிதினிறகலந்தும். (௮)

* ஏழையாஞ் சுற்றத்தவர்களை யிகழ்ந்துமிழிகுலட் செல் வரைப்புகழ்ந்தும், பீழையாலேற ரோர்ககளுவள 0 வியா தும வெருநிதி யோர்ககிழிநதியந்து, மாழையொண் கண் ணியுமை யொருபாக வள்ளலாரடியர் நேர்வந்து, தாழுற நிற்பதறிந்திறுமாந்து தவிசிடையரு சுருதிருநதும். (௯)

* பெருமையைக் குறித்தோர்கால மீந்திடினுமுளாங் கலங் கியு நல்லபெரியோா, ரருமையையறியாத ரிவையரருமை யறிநதவிர்சொல்வகையடஙகுங், கருமையையடைந்துகாய நோயிடைந்து காலமபரழாகவே கடந்து, வருமைமெய்க் காலதூதர் கைப்புகுந்து மலிநரகங்களிறுழநதும. (௧0)

* திரிந்திடற்கான போகங்கடமமைசசிறப்பெனவெமக்குநீ சேப்பக், கரிந்திடுமெங்களுள மடைந்திடுமிக் கன்னியர்க் கலத்தலே முதலாம், விரிநதிடுமுலக வின்பமுஙகருதோ மெய்ந்நெறி காட்டுதியன்றே, லெரிநதிடுகானத்திருன்று நீங் குறுவோமென முனிதாள் பணிநதிசைத்தார். (௧௧)

* மூவருமுலக விச்சையையொழிக்க மொழிவதைமுனி. செவிகேட்டுத், தேவரும்பெறுதற் கருநிராசையைக் கொ ள்சிறுவரை நோக்கியேநீஙகள், யாவருமடைதற் கரியவோர் வீட்டையெளிதினி லடைந்திடக்கருதல், தாவருஙகாலாங் வாரியைக்கடக்குந் தன்மையாஞ் சாற்றுவன்கேண்மின். (

* நீங்கள் சொன்மார்க்க முலகினிற்பல்லோர் வாயினுனிக ழ்த்துவதன்றி, வீங்குதத்துவ சோதனைபரிந் திதயமேவுறு

|| கைதவர்=பொய்யர். 0 ஈயாது=இயாது-எனக்குறுகியது.

திருக்குகடணர்ந்து, தாங்குதற்கரு மெய்யோக நிட்டையி னைச் சாதித்தும் பேதிப்பொன்றில்லா, தோங்கறிவே யெ லாமெனு நினைவுமிறந்துள பிரமநிட்டையினை. (கங)

* சாதித்து நிற்றலெளி தலவென்று சாற்றியமுனி மொழி கேட்ட, கோதற்றமைந்த ரெழுந்துகைகு வித்துக்கூறிரு வகையநுபவமுந், தீதற்றொன்றாக வடையுமெய்ப்பதமுஞ் சிறுவரியா மறிந்துயஞான, போதத்தின்மிக்கோ யெளிதி னில்விளங்கப் போதியாயென வவன்புகலும். (கச)

* கருவிகடொண்ணூற்று றிலக்கணத்தைக் கரிசறத்தெரிக் கு மெய்க்குருவைத், தருவியேகண்டங்கவர் மனமிரங்கத் தொண்டுபன்னுட் புரிந்தவர்சொல், லருவியைச் செவிக் கொண்டகத்தினி னிரப்பியாற தாழுட்டலங்கோணம், பரு விதழ்க்கணிதம் பீடமக்கரங்கள் பகரைந்து மூன்றும் பதிகள். (கரு)

*தேர்ந்துமானதத்தா லொவ்வொரு பீடந்திகழ் விநாயகன் பிரமன்மால், கூர்ந்தருத்திரன் மகேச்சுரனோடு சதாசிவன் குறைகழல்களைக்கண், டார்ந்தவன் பலர்கள் விதிப்படியரு ச்சித்தவரருளூறி இ யொருமூன்றென், றார்ந்தமண்டலங் கண்டடி மூலாதாரவுற் பவக்காலெழுந்துலவி. (கசு)

* மேருவின் முட்டிநந்தியின் கொலுவைவிட் டிருவழிவந் துவீணைப், பாரியங்கிடுங் கால்கலந்தொரு நாளும்பாழதாய் போகுறுவகையே, சீரியன்மூன்று மக்காரத்தாலே ¶ரேசபூ ரகரும்பஞ் செய்து, கூருளக்கவலை யொழித்தொரு வழியி ற்கொள விடுத்தறிவினைக் கொடிதாம். (கஎ)

* புலன்பொறிகரண பேதகமற்றுப் புண்ணிய பவவினைய ற்று, மலஞ்சலமற்று மாயைகளற்று மனநினைவுகள் பலவ ற்று, நிலஞ்செறிய சலத்தடைவிற் செய்யோகநிட்டை யீ தாமிதுபோன்ற, குலஞ்செறியோகம் பலவுளவிவைகள் கு றித்தவரடையயன் கேண்மின். (கஅ)

---

¶ இரேசக=கும்பக=என்பவையிற்றுக் ககரங்கெட்டன

* கீாயகற்பங்களுண்டு பல்காலங் கறையறு வரைக்குகை புகுந்துந், தீயையொத்திடுஞ் செஞ்சடை யுடையருமாய்ச் செழுந்தவ மளவின்றிச் செய்து, மாயையற்றிட நூல்பலவு சாவியும்பின் மனுத்தினை நிறுவியுமெவர்க்குந், தாயமாயோ கசமாதி யையுற்றுஞ் சடத்தினைவிடுத்து நல்லோர்கள்.௧௯.

* உடற்புகுந்திலங்கு கருவுருவடைந்திங் கொருசிறுகுழவி யாயுதித்தே, யிடக்கறும் ஞானமெளிதினி லடைந்தெம்பி றையுடனிரண்டறக்கலப்பார், சடத்தவாவின்றிச் சமாதி யுற்றிருந்தோர் சகத்தின் வேண்டுவபகறங்கி, யடுத்தமெய் ஞ்ஞானமடைந்து வீடடைவாரல்லது மறுமையிலடைவார்.()

* பிரமநிட்டையினைப் பேசுவன்கேண்மின் பேசுமத்தத்துவ முணர்ந்து, பரமச்சற்குருவி னுருரையுளத்திற் பதித்துல குள பலவகையுஞ், சருமமாதிய வேழ்தாது வாருடலுஞ் ‡ சரலிகிதம் மெனத்தள்ளிக், கருமமொன் றுண்டென்றா ன்றுதலிலாது கதித்தெழு நிராசையைக்கலந்து.        (உக)

வேறு.

* † தொத்தனை மறுதிமாய்த்துச் சுகாசனந் தன்னினுளுஞ்
சித்திரத் தீபமென்னத் திகழுமெய்யினை நிறுத்தி
மெய்த்தசி ரறிவுதானே சிவமென மேவச்செய்த
வித்தகைப் பிரமநிட்டை யீதன்றிப் பிறிதுமுண்டே.(உஉ)

: கூறுமிந்நிட்டை யுற்றோர்குணம் புலன்கரணபேத
வூறுகளற்றங் காசானுரையு மற்றொன்றே யொன்றுய்த்
தேறியபின் னரிந்தச செகத்துடன் சேம்பினீர்போல்
வேறதாயிருப் பரன்னோர் செயலினும்விளம்பக்கேண்மின்.

* அகம்புறம் யாதோர்பற்று மடைந்திடா ரடைந்தோர் போல்ச், சகந்தனின் மனைவியாதி யேடனையினுந் தரிப்பார், நிகழ்ந்திரு வினையும்மற்றே யெங்கணுந் திரிவார்முன்பின், நிகழ்ந்திடார்நிகழ்காலத்திற் சேர்ந்தவைபுசிப்பார்மன்னோ.

---

† சரலிகிதம்=கீரிலெழுத்து. †தொத்து=பழமை. அளை—கலத்த.

* பேருட னூரு சொல்லார் பிறந்திடு மரபுசொல்லார்
யாரொடும் புகழ்ந்திகழ்ந்து கூறிடார் பகைகட்பாடார்
சீருடற்புநிதம் வேண்டார் செத்தவர் பித்தர்போல்வா
ருருடனொத்தும் வாழ்வாரோ ரிடத்திரா திருப்பார்.(உரு)

* அவர்கடம் பெருமையெம்மாலறைந்திடப்படுமோவந்தத்
தவறறுஞானம் பெற்றோர் சரீரத்தை மறந்தெஞ்ஞான்று
மிவறறு மனததீர் சுத்தசிவத்திரண்டறக் கலப்பா
ரவர்பிறப்பிறப்பற்றோர் மெய்யறிஞுமாண்டுமினுமொன்றே

* என்றுமா முனிவன்கூறக் கேட்டமைந்தர்களு மெந்தாய்
நன்றுநன்றி யாங்களுய்ய நவிற்றியகொண் டாமன்னோர்
சென்றபின் னுடலைத்தீ நீராதிநாற்பூதஞ் சேர்க்கா
தொன்றெனும் பிருதிவிக்குணுட் படுத்துவதே தென்றும்.

* மகன்மகார் கூறக்கேட்ட வரமுனிகளித்துச் சொல்லுந்
தகைவுட னுரைத்தயோக ஞானத்தின் சாப்புள்ளோருள்
ளகமுகத் தடைவார்ப்ராண வாயுவினடக்கங் கண்ட
சகமுளோ ரிறந்தாரென்று சரீரத்தைக் கெடுப்பரென்றும்.

* இயல்பதாய்ச் சிவத்தான்மாவு முடல்விடுத் தெய்திறனுஞ்
செயன்மறந் திருந்தமெய்யே சிவலிங்கக்குறியே யென்றுஞ்
சுயமதாந் தவத்தீமுன்னரு சுடச்சயித் திருந்த தென்றுங்
கயமனல் கால்வானன்னோர் காயத்தைக் காக்கா தென்றும்.

* திகழ்ந்தவன்னோர் பேரிந்தச்செகத் தென்று நிற்கவென்றும்
புகழ்ந்தீவரய வொழுக்கம் புலப்படுகை வெல்லவென்று
முகந்தறி வுடையோரன்னோ ருடலினுக் குரவுபூவென்
றிகழ்ந்தடக் கிச்சமாதி யாலயமமைப் பித்தார்கள். (ந0)

* வாய்ந்தவச் சமாதியன்றி மற்றவருடற் குக்கேடு
தோய்ந்திடச் செய்வரேவராயினுஞ் சுதர்பெண் டிரோ
டேய்ந்தநற் செல்வமற்றுங் கிழிவுகொண் டுடல்குறைந்து
மாய்ந்தவருடல் கெடுத்தவகை நரகழுந்து வாரால். (நக)

* இந்தயோகஞ் ஞானத்தை யியல்புறு வலியான்மாயை
சிந்துறவனந்தகோடி சென்மத்திற் கெடுத்துமேவன்
மைந்தர்கா ளெளிதேயன்றால் மானுடர் தம்மிற்சில்லோர்.
சிந்தனையிலாது தத்தமடமையே சிறப்புற்றோங்க. (௩௨)

* மெய்மைசேர் சைவசித் தாந்தப்படி மேவுவோரைப்
பொய்மைசேர்ந் தவர்களென்றும் புகலுநூல் பொய்யேயென்று
நைவிலா துரைப்பர்ஞான நூலெலா நவில்வாஞானச்
செய்கையி லிறையுநில்லாச் சிலரிவ்வாறுய்த் தூடித்தே. ()

* இருவகைத் துணையுமின்றி யெய்துவர் நரகதண்ட
மொருவ விலாதமுத்தி யடைவதற் குன்னுவோர்க
ளுரிமையாற் பத்திசெய்மெய்க் கடவுடனுபா சனத்தால்
வருதிருக் கெல்லா நீங்கி யெளிதனை மன்னுவாரே. (௩௪)

* உற்றதோ ருபாசனத்தை யன்றிதம் முகத்தாலே
பெற்றிட முயலுவோர்கட் கனந்தபேதகந் தடுக்கும்
நற்றவத்தா லாஞ்சன்மத்துயர் ஞானநூறுகுங் காலைப்
பற்றற முத்திசார்வ னெனவவன் பகரக்கேட்டே. (௩௫)

* புதல்வர்கள் மிகவெருண்டு பொருந்துமிப் பிறப்பின் மு
த்தி, யிதமுறவடையும் வண்ண மெண்ணிய விரைவாலிந்த
விதமெலா மறியாயாங்க ளெளிதினில் விளம்பன்மன்னித்
தெதிரிலல்லதரிற் செல்லக்காட்டுதி யிறைவவென்றார். ()

* ஒருநான்கு யோனியுள்ளு மோரெழுதோற்றத் துள்ளு
மிருநான்கோ டொன்று நூறுயிராநர சன்மத்துள்ளும்
பெருநான்கு மறைகளுண்மை பேசுமிக் கருமபூமி
வருநான்கு வருணமாந்தர் முதன்மையாய் மற்றுங்கேளீர்.

* அந்தணர் முதலாயுள்ள வறைந்தநால் வருணத்தோரா
யிந்தநல் லுலகினெம்மான் கோட்டக மிலங்குமூரில்
வந்துருக் குறைவிலாது மறுமதத் தோய்விலாத
தந்தைதாய்க்குப் பிறந்துதகு கலையறிந்து மெய்ம்மை. ௩௮.

* சேர்விதிப் படிக்காயுள்ள வாசிரியன் பாற்சேர்ந்து
பேர்பெறுசமய ‡ சேஷநிர்வாண தீட்சை பெற்றுக்
கார்பெறு களத்தெம் மண்ணலருள் யாவுமென்றுகண்டங்
கேர்பெறு புநிதத்தோடில் லறத்தினையோம்பினாளும். ()

வேறு.

* எண்குணத்தெம்மிறை பூசைமுறையியற்றி யாலயத்து
மெய்திப்போற்றித், தண்குணத்தவடியவரே பசுபதியென்
றுட் கொண்டன்னோர்கள் சாற்றும், பண்குணத்துக்கூட்டி
நாட்கழிப்பரே விறையருளாற் பகர்ந்தஞானக், கண்குணத்
துத்தோன்றவிருந்த மலவிடெளிதினிலே கலப்பர்மன்னோ.

* இந்தவிதிப்படிக்கு மேலிலக்கணங்களுங்கள் பாலிருப்பக்
கண்டே, னந்தலிலா திம்மையிலே நீங்கள்குறித்திட்டபடி
நவ்வியாகச், சுந்தரவீரட்டேசன் றிருவருள் பெற்றிகபோ
கந்துய்த் தெஞ்ஞான்று, மந்தமிலாச் சிவத்தொன்றுயங்
தத்திலடைவீ ரென்றறையக்கேட்டார். (சக)

* குகமுனிவ னகமகிழ்வாற் சொலக்கேட்ட முக்குமரர்குர
வோய்மால்கொள், ளிகமுனியாதரும் பதத்தை யெய்தவெ
ளிதன்றேனு மிகபரத்துந், தகவுடையோ யிறையுரையுத்
தரப்படி நீசாற்றியதாற் றவமெய்தாதென், றகமிகவுமகிழ்
வுற்றோ மினியாங்கள் செய்வினையு மறைதியென்றார்.(சஉ)

* அவ்வுரைகேட் டந்தணனுமகிழ்ந் தறைவானமலவாக மத்தின்விர்த்திக், கொவ்வுமுறைப்படியண்ணல் குறித்தநாட்
கன்னியரோ டொன்றுவீர்பின், னவ்விவாழ் கரனுங்கட்கிர
ங்கியருளத் திக்கைநவிற்றுவேன்வே, றெவ்விதமுங் கருதா
தீர் சூளென்றுன் மைந்தர்களவ்விசைவு பூண்டார். (சங)

* ஈங்கிவ்வாறிவர்தேற வண்ணலேவலின்படி நல்ருதுசாந்
திக்கே, யாங்கரசர் முனிவரர் மற்றவரெவருமண்மிவேண்டு
வவமைத்தா, ரோங்குமுக் கன்னியர்பூப் பின்றோட பரிகா
ரமுதலுடற் றிமைந்தர், பாங்கமளி தனிற்றனியே மாதர்
கண்மேவுற வைத்துப்பல தானங்கள். (சச)

‡ விசேஷம் = சேஷம்-எனவாயது.

* 'ஆகமத்திற் சொற்றபடி சேதுமுதனுன பலனடைவித் தொல்லைச், சோகமிலாப் புத்திரப்பே றடைதிரென்று சீர் வதித்துத் தோகைமாரோ, டேகமா யவரவர்நாயகரிருப்பக் கபாடபந்தன மிட்டார்கண், மோகமலியாடவர் கன்னியர் மறையோர் மங்கலங்கண் மொழியமாதோ. (௪௫)

* இவ்வுலகின் மாயையின்றன் காரணமாமரிவையர் சிற்றி ன்பமென்றே, செவ்வீதாய் மூவகையாலறிந்தவுளச் செய ன்மாற்றத் திகழிம்மார்க்க, மெவ்விதமா மோவென்றங்குள வொன்றையுங் கருதாதிருந்தார் மைந்த, ரொவ் † வுவதியு டன்றனியுற்றிவ்வெண்ணமுறுவர்போலுண்டோவுண்டோ.

* மாரனுடவர் கன்னியர்க்காசை மூட்டுவிக்கும் வாளியாதி யீரமார் மலர்க்கணையைந்தையு மாறிமாறிவிட்டு 'மியலார் மைந்தர், தீரமாருளந்தைமயு நாண்முதனுன் கரண்சூழத் தீவேட்டோர்கை, சேரவெழ வடங்குமினு ருளந்தமையும் வெல்லவலி திகழாதோய்ந்தான். (௪௭)

* மூவர்மைந்தரா யிருந்தும் விதிவலியாலுள வுள்ளமொன் றுய்மூவாத், தூவறுசீர் வீரட்டத்திறையுரையின்படி முனி வன் சாற்றுமாறுந், தேவர்குறை தவிர்த்தசெழும் பிதாநி ருமித்திடுமாறுஞ் சிலபேரன்றி, யேவர்களுமில் லாளோடு றுமாறு மெணவிழுதி னிளகிற்றம்மா. (௪௮)

* உள்ளவலிகாட்டி மிகவுளநாணி நின்றமதனெப்பி கந்த வள்ளன்மகா ருளநின்ற நிலைநெகிழ்தலறிந் திரதிவதனம் பார்த்தான், கள்ளவிழோதியமா மைந்தர்கடைக்கணித்தார் விற்கழையிற் கைவேள்வைத்தான், றெள்ளரிவையர்கடோ ளாங்கழைகண் மீதாடவருஞ் செழுங்கைவைத்தார். (௪௯)

* மதன்வில்லின்றலை வளைத்தான் மங்கையர் விற்றலைவளை த்தார் நாணும்வண்டை, யிதமுறவின் மாட்டினு னேந்தி ழையார் நாண்கண் வண்டையெழிற் $ புரூரங், தலையுட வின் மாட்டினார் சமமோக வசோகவ்ரின் சரத்தைவிட் டான், றகிபிதாமெனுங் குறிப்பிற்றத்தமாடவர் மேற்கட்ச ரத்தை விட்டார். (௫0)

† உவதி=பதினறுவயசுப்பெண். $ புரூரம்=புருவம்.

* மைந்தர்கள் செங்கரத்தினுன் மாதர்சிரநிமிர்த்தினர் மதன்
கையுற்ற, சுந்தரனின் னிமிர்த்திப்புன்ன மைகொண்டான்
ஞேரைகையரங்நகையே கொண்டா, ரந்தவுருவினி முளரிக்க
ணைதொட் டானவர்முளரிக்கணை தொட்டாய்ந்தா, ரொந்த
விதமதன் கருத்தோ வந்தவிதத் தாடலன்ஞரியற்றினரால்.

* காமமெனுங் கொடுநெருப்பி னிதையவளி கலத்தலன்றிக்
காமனும், வாமமேகலை யுடையவனி தையராலுங்கதிக்கா
வகைக்குச்சாட்சி, யேமவேற் குமரர்களே யாயிஞெரன்
பான்ஞர்மாஞரிச்சை, நேமமுலகின் விர்த்திக்கடஞகு மெ
னக்கொண்டார் நேர்மைகொண்டார். (ருஉ)

* சின்னாட்பின் குகமுனிவற் பரவியெங்கட் குறுதிநிலை
செப்பாயென்ன, முன்னாட்.செய் ,தவமன்றே வுள்ளபடி
யுலகவின்ப முனிந்தாரொன்று, நன்னாட்பாத் தத்தினத்து
வனிதையர்க்குமுன் சமயதீக்கைநல்கிப், பின்னாட்செய்
வானின்வருவான் மைந்தர்க்கம் முனிவன் பெட்பினேடே.

* புநிதமார்ந்திடு சைவசித்தாந்த நூற்களிஙிற் புகலுஞ்
சாரத், தினியவாம் விசேடமொடு நிருவாணதீக்கையெனு
மிரண்டைமுன்றூற், கனிவின்முனி மறையோடு காட்டி
மைந்தர்காளாசான் காட்டிம்மார்க்க, மினியுரைத்த விதி
ப்படி நம்மண்ணறனை வழிபடுவீரி லிங்கமார்க்கம். (ருச)

* இவ்விரண்டை நிலைபடுத்து மொருமார்க்கமுள வஃதுமி
யம்மக்கேண்மின், னவ்விமூன் றுடையபிரான் சின்னங்கள்
வாய்ந்தவரை நம்பனென்று, செவ்விதா யுபசரித்தங் கவர்
டுரையெஞுதன்பு திகழ்வீர்சங்க, மொவ்வுமார்க்கமு மெனு
மார்க்கமூ மூன்றுமெனு மிவற்றுனுய்குவீரோ. (ருரு)

* என்றுகளிப்புடன் முனிவனுரைத்தலு மைந்தர்களவன்
றனிருதாள் போற்றி, நின்றெங்கள் குறைதவிர்த்தோய்
நிமலனடியார் சின்னநிகழ்த்து கென்னத், துன்றுருத் திரா
க்க நீருதியவென்றுன் கேட்டோர் சித்தசுத்தி, யொன்று

போதாதோ மற்றவைவேண்டுமோ வவையு முரைத்தி யென்றார். (௫௬)

* கேட்டமுனி வனுநகைத்து விடலைகாளெக்காலுங் கேடி லாத, நாட்டமுடன் றுளவெம்மா னெவ்வொரு காரியத்தார் வநணுகப்பூண்ட, வாட்டமிரி கண்மணி நீறணிந்து பஞ்சா க்கர த்யானமருவுவோருட், கோட்ட மெந்தைதவிர்த்த லன்றி யெளிதாகச் சித்தசுத்தி கூடாதன்றே. (௫௭)

* நீற்றொடு கண்மணி பூண்டோர் நெறித்தவறன்னவர் ஞக ராகிற்பர் கண்டோர், தூற்றியவமதிப்பாரோன் மைந்தர்கா ளிவர்செயறந் தொலைந்துபாவ, வேற்றமடைந்துலக விர்த்தி க்குரியன வெல்லாங் கெட்டங் கிழிந்துவெய்ய, கூற்றனுல கத் தண்டங்கொண்டி வுலகிழிந்தசன் மங்குலவுவாரோ. ()

வேறு.

* ஆடவரோடில் லமர்ந்தகன்னியர் பல்லவரிகள் கந்தம்புனை ந்தாலும், நாடுமங்கலநா † ணரிசனமோடு நாயகத்தியான மில்லாரோ, னீடுமில்லறத்தி னெறிக்கிலார் போலநிமல பஞ் சாக்கரத்தியானங், கேடிரிபூதி கண்டிகையில ரோற்கிளர்சை வநெறிக் கலாதாரோ. (௫௯)

* அவசியஞ் சைவாகம நெறிக்கணித்தி தணிந்தியாஞ் சொ ல்வழி நடமின், சிவபெருமானற் சோதனைதவிராதிச் சென் மத் திறைபதஞ்சேர்வீர், கவலையுறு தீரொன்றனன் மூன்று காலமு முணர்குகமுனியு, மவமறு புதல்வரவனுரைப்படி யெம்மண்ணல் பூசனைமுறையாற்றி. (௬0)

* ஏந்தை வீரட்டத்திறையடி நாளுமேத்தியெய் துறுமடி யார்கள், சிந்தையின்படியே நடந்துமெய்ப் பத்திதிகழ மற் றியாதொன்றுக்ருதா, மைந்தர்கணெறியை யறிந்ததைவீக ம ்னுளமகிழ்வச் சமவியத், தந்தைமந்திரி கட்கிரு நிலப் பெ றையைத்த நயருக்களித்திடச் சாற்றும். (௬௧)

---

† அரிசனம் = மஞ்சல்.

### வேறு.

அரனடியார்க் கஞ்சலிசெய் தைம்பாதகம் பகைத்துக்
குரவனின்று ளருட்கொண்டு குலமறையோ ராசியிவர்க்
திருண்மேனி யந்தகனை யிகுத்தவனுக் கடிமைபுகுந
தொருநெறியிற் செலவுலகமோரொழு நாறுண்டாண்டும். ()

* திருவனைய பன்னிருமா தனைநாளுஞ் சேர்ந்திடவு
மருமருக்தை யனையவுண்டி நாளுளுமயின்றிடவும்
பெருமையுளீரினு முன்னல் பேதைமையல்லா துண்டோ
வுரிமையுட னுச்சிட்ட முண்டவகை யொப்புறவே. (௬௩)

* ஊன்பெற்ற வுடல்பெற்ற வுயிர்பெற்ற வுணர்வுரைத்த
மான்பெற்ற கரம்பெற்ற வள்ளறுண்டை மருவாதி
யான்பெற்ற வுலகவின்பத் திறுமாந்தயர்ந்து பிணக்
கான்பெற் றழியுங்கட னெனக்கேன் கட்டுரைமின். (௬௪)

* ஆதரவின் மைந்தர்க்கறு மூன்றுல்களித்து
மாதொரு பாகத்தன் மலரடியைச் $ சானித்து
தீதொருவு முற்பதத்தைச சேரும்வகை குறித்தே
னீதமுளீரொன்று னிடமிதனை முன்னின்முன். (௬௫)

### வேறு.

* அண்ணல் சொற்படிமுனியு முற்குமரன் பூவாளும்
வுண்ணமா முடிசூட்டு நாள்குறித்தி டவ்வகைகேட்
டுண்ணடுங்கித் தன்பிதா மகற்றெழுதிவை யுரைத்தா
னெண்ணுதற் கரும்புகர் குலசேகர னென்பான். (௬௬)

* ஐயவென்னுளத்தவா வின்னதென்பதை யறிந்தும்
பொய்யுதா மிந்தப்புவி கொளப்பொருத்துத லழகோ
துய்யவெம் பியர்க்கடை விப்பாயென் றுரைசொற்றான்
செய்யமா முனிகேட்டு முற்புதல்வ னீசெப்பல். (௬௭)

* முறைமையன்றென மொழிந்து பின்னவர்க் கவைமொழிந்தா
னிறைகுணக் கடலிருவர் பன்னீதிக ணிகழ்த்தி
யிறைவன் பின்னவராவ தென்வழக்கென விசைத்தார்
குறைவிலாத் தவமுனி யமைச்சர்க ளொடுகுழுமி. (௬௮)

---

$ சானித்தல்—தியானித்தல்.

* வேண்டு நீதிகளெடுத் தெடுத்தவர்க் கவர்விளம்ப
மீண்டு மைந்தர்கள் பசுபதிக்குரிய மெய்வேடம்
பூண்டு நாங்களோர் பதியெனப் பொலிவுறக் கருதோ
மீண்டு வற்புறுத்திடல் விடல்வேண்டு மென்றிசைத்தார்.()

* மைந்தர்மூ வருமுரைத்த வைகேட்ட மாதவத்தோன்
றந்தைசொல் வழிநடந்திடாப் புதல்வக டன்மை
யெந்தமேன்மை கொளினுஞ் சிறிதாமென விசைத்தங்
கிந்தமூவரு புவிமுக்கூறுயக் கொளீரொன்றான். (எ0)

* அன்னவாசகங் கேட்ட மூவருங் கடனுமென்
றுன்னியீரட்டத் திறையடி யுளங்கொளா வுவந்தார்
சொன்ன வந்தணன்றன் மகற்கறி வித்துத்தொல்பூ
மன்னராதிய ரொவரையும் வரவழைத் தம்மா. (எக)

வேறு.

* மூவறு புவியும்காவல நூடுமூன்று பங்காக்கிமேல் பாற்சேர்
தாவறுபுவிகட்கிறைநரசிங்கமுனியனுமெனத்தனிநடுப்பான்
மேவறு புவிகடமக் கிறையாமெய்ப் பொருளெனவின்னு
கீழ்பால்சே, ரோவறு புவிகடமக்கிறைகுல சேகரனென்பா
¶ ஓனுமென வுன்னி. (எஉ)

* குகமுனி யுரைத்தபடி நரசிங்கக்கொற்றவ னற்றவர் வா
ழ்த்தச், சகமெங்கும் புகழுமுப்புதல் வருக்கும் மும்மணி
முழ்முடி தரித்தங், ககமகிழ்வோடு பிதாவிடம் ஞானதீக்
கையை யறிந்தரண்டுறந்தம், பகமொரு மூன்றேனுலயத்
தேமம்படர் மடமமைத்ததில் வதிந்தான். (எங)

வேறு.

* தாவலில் குகமுனி தைவிகன் சீறூர்க்
காவலி னுணாத்திய தறைநது மன்னனு
மோவலில் சுதனு மூர்தியும் பதத்தினை
மேவலை யறிந்தவா விளம்பு வாமரோ. (எச)

துகமுனி உபதேசச்சருக்கம் முற்றிற்று.

---

ஆ-ச்செய்யுள்-கூஙகூ0.

---

¶ ஆம்=என்பது-ஓம்-எனமருவியது.

சிவமயம்.

# பதவிச்சருக்கம்.

க—வது தூகழுனிவன்.

* அந்தகவரியெம் மண்ணன்மெய் யுருவமகமுக மெழுதிநாற் கரணப, பந்தனமகற்றிச் சந்ததமவன் றாள்பணிந்தொரு நிலைநின்றான்பதினெண், விந்தைசேர் பாடைப்புவி யுளவரச மீனியாகிய விறல்வேந்தன், கந்தவேண் முந்துக்ழ்றியவீது காலமென்றெணிக் குகமுனியும். (க)

* மண்முகம் பணிதன்மைந்தனுதியர்க்கு மருவுதன்னிலை சொலிமகிழ்வாய், விண்முகக்குறைதீரொந்தை யென்னன்னை விரைமலரடிகளைத் தொழுது, சண்முகப்பெருமான் சந்நிதி யடைந்து தாழ்ந்தெழுந்திருந்த வனுருவை, யுண்முகத்தி ருத்தியாண்டவா நின்பாங்குறவிக்கதமைய மென்றுன்னு.உ.

* உன்னுமக் கணத்திற் குமரவேளறிந்தங் குறுமொரு வீ ரன்பாலோத, வன்னசொற்படியே யோர்விமானத் தோட னேகர்சூழ்ந்திட வியமார்ப்பக், கொன்னுறு கோவற்கம் பர ங்குலவிக் குகமுனியாற் சென்றவ்விமானத், தின்வரவோர் வீரன்பணிந்துரைப்ப விருந்தவன் களிப்புடனெழுந்தே. ()

* அண்ணலம்மையின் சீரடிதொழுதடைந்த வந்தணற்பார வுவேந்தாதி, மண்ணவரொவர்க்கு நன்னெறிபயிற்றி மைந்த நின்குலந் தழைத்திடவென், றுண்ணெகிழ்ந்துரைத் தங்கு ளர்கரைந்துவப்ப வொப்பிலாத்தவன் விமானத்தின், கண் ணெழுந்தருள வெழுந்தது விமானங்காசினி விண்ணெங் குங்களிப்ப. (ச)

* கணந்தனிற் கந்தமாதனத்தெந்தை † கற்கி முனிற்குமவ் விமானந், தணந்தறுமுகனை யெணில்வலங்கொண்டு தாளி

---

† கற்கி=கோயில்.

ரண்டையு முடிதரித்து, மணந்தருநீப மாலையாய் நீங்காவர மினி யருளுதியென்முன், குணந்திகழ் முனியே யினியென் றுநம் பாற்குலவுதியென வெம்மான்கூற. (௫)

* கேட்டமெய்ம்முனி வனகமகிழ்ந்தாசான் கிளர்வலப்பாக த்திலின்றும், வாட்டமிலாது வசித்திருக்கின்முன் வளர் சைவபுரத்திறை பிதாசெல், கோட்டமில் மீனமதி குருவா ரங்குலவ விட்டம் முதற்கொண்டங், கூட்டமாதிய வங் தோர்க்கெலா மோராண்டுதவுற நியமித்தானுரவோன். (௬)

உ—வது பச்சைக்குதிரை.

* அவ்விதநியமித் தைந்தவித்திறை சீரகமுளி மடத்தணை லமர்ந்தான், செவ்விதிற் பதினெண் புவிகண் முப்புதல்வர் திக ‡ மூவிநயர் களிற்புரந்தா, ரெவ்வமில் பச்சைப்பரிக்கு முற்பதவி யெய்துறுகால மெய்தியதாற், || றுவ்வுதல்வெறுத் தோர்வைகலப்பை மாசூழ்பல பந்தங்கணித்து. (௭)

வேறு.

* தெள்ளுதிரைமணி கொழிக்கும் வினைதகிக்கும் பெண்ணை நதித்தி நீராடி, வள்ளலம்மை யாலயத்தை யோரொழுநாள் வலங்கொண்டு வாயிறுேக்கி, யெள்ளளவு வேறென்றைக் கருதாதுறக்கமின்றி யிறைதாள்சிந்தித், துள்ளபடி நின்றுநோற்றிடச் சைவபுரத் தெநதையுள மிரங்கி. (அ)

* அருள்செய்த மாத்திரத்தங் கந்தரவாத்தியங் கலிப்பவவ னியெங்கும், பரிபவமுற்றிடக் கண்டோரதிசயித்துக் கண் பனித்தெம் பரனைவாழ்த்த, வெரிநாளு மொருசோதி பரி வலக்காதிருந்து மேலெழுந்தவக்கால், விரியொளிமா வுடல் படியின் மரகதமாமலை யென்னவீழ்ந்தம்மா. (௯)

* அச்சோதியெழக் கண்டோ ரதிசயித்தைந் தொழிற்குறு தியைவராக்கு, மெய்ச்சோதி திருவருளை விழைந்துவிழை ந்தன் பின்மேதினி மேவின்பங், கைச்சோதி வழிநின்ற

---

‡ அவிநயர்=நாடகர். || துவ்வுதல்=உண்ணுதல்.

தைவீக நரசிங்கக்கருணையானே, மைச்சோதிப் பரிவலக்கா
ளட்சோதியெழுந்தவகை வணங்கிக்கேட்டார். (௧0)

* ஆதிநாளடி யேற்கென்பிதா வுரைத்தவிதன் சரிதமறை
பக்கேளீர், பாதிநாண்மதி யிலைச்செம்பரற் சூரியநண்போ
டிருநிதி படைத்தோன், நீதிலாவச்சிர கேசரியூர்ந் துய்யா
னமெங்குந் திரிந்தம்மாவிட், டோதிமநன்னடைய ரொடுங்
கலந்து விளையாடல் பலவுடற்றி நின்றான். (௧௧)

* வனப்புடைய விஞ்சையர் மாமகளிரோடவன் சரசமவி
பக்கண்ட, கனப்பரியு நம்மினத்தோடிச் சரசம்புரிந்து சுக
ங்காண்டற் கில்லா, வினைப்பய னென்னமக்கென்று வெகு
ண்டுவெருவின்றி மதமீறிப்பெட்டை, யினத்துடனே கலக்
கவெணியவணீங்கிச் செலுநெறியோ † ரிராடநிற்ப. (௧௨)

* காண்டலுமவ் வச்சிரகேசரி சரசஞ்செய்ததனைக் கலந்தா
வேசம், பூண்டமதமழிந்த வுடன்பலவெண்ணி யொருவ
கையும் பொருந்தாநின்ற, நீண்ட ‡ கரங் கருக்கொண்டு மூதி
ர்ந்து குட்டியவ்வடிவினி யிடமீன்ற, தாண்டவுனண் பளகே
சன் பரிகாணுதோர் விஞ்சையவனுக்கோத. (௧௩)

* § வேசரிதன்னொடு வச்ரகேசரி நின்றிடக்கண்டான் மீட்
டும் வச்ர, கேசரிபோல் வடிவுளவோர் குட்டியுங்கண்டான்
பரியைக்கிட்டி நீயே, ஞசமுறுந்தொழில் புரிந்தாயென்று
மூன்றையுங்கொண்டு நரர்பிரான்முன், பாசுரைத்து விட்ட
னன் கண்டளகேசன் கொதித்தயத்துக் கறைவான்சாபம். ()

வேறு.

* கருமபூமியினிற் கருவுருவடைந்து கரியமெய்கொளு நா
ன்ஞருவன், பரியதாய்ப் பிறந்தங்கினந்தழுவாது பகர்ந்தவ
ன்பேருருச்சுமந்து, திரிதிபல் காலமென்று கர்த்தபமே
செகத்தினின் மிலேச்சர் கைச்சேர்ந்து, பெரியபாரங்கள்
சுமந்திளைத் தெய்த்துப்பேசரு மிழிவையும்பெறுதி. (௧௫)

---

† இராடம். ‡ கரம். § வேசரி—என்பவை—கழுதை.

* என்றுமக்குட்டி நோக்கிற் புரவியுடற்பெறினும் முனை யிகத்தோர், துன்றுறுங்கழுதை யென்றிழித்துரைக்குந் துணைச்செவி பெறுதியென்றுரைத்தா, னன்றுகேள் பரியா கிய தொழுதியாங்களறி விற்கூடா வொழுக்கத்தா, லொன் றுமிச்சாப விமோசன மருடியெனத் தனதனு நகைத் துரைப்பான். (கசு)

* வச்சிரவண்ண கேசரிகேட்டி மகத்தின்மா புருடனோடு இத்துப, பச்சைவாசிப் பேர்கொண்டு செம்பரிதிப்பரியின் மேல்விரைவு கொண்டவன்ற, னிச்சையின்படி யோர்பகன் மையத்துள்ளே காசிசேதெய்தி யம்பலங்கண், டச்சமிலா தங்கனந்த நாட்புரிந்தெண் ணரசர்முவரைவெற்றியடைந்து.

* இந்திரன் முதலோர் புகைகெடத்தடிந்தி ரோன்பதுபுவி வெற்றியெய்திச், சந்திரமோலி வீரட்டாகாசத்தற் பரனரு ளுறீச் சார்வா, யிந்தநல்லுருவ மெய்தியெம்பாலி லென்று பின்கரத்தினை நோக்கித், தொந்தரவனந்தம் பெறினுமாங்கா ங்கு சுகமுடனுணவையுந்துய்த்தி. (கஅ)

* பின்னுமெம் பெருமாற்குரிய கண்மணியின் பெரும்பொ றைசுமந்த கான்மேன்மை, துன்னுதியென்றுங் குட்டியை நோக்கிச் சொலுங்குசைத் தீவினையாளு, மன்னவன் † குசேந்த்ரனூர் பரியாகு மகிமையைப் பெறுதியென்று ரைத்தா, னின்னவைதிகத்தாற் பரியிடைச் சோதியெழுந்த தெம்பிரானருளென்றான். (கக)

## ௩—வது தெய்வீகராஜன்.

* ஏனநரசிங்க பூபதியுரைப்பக் கேட்டவர் பரவசத்தேந்தல் புனைகழலிறைஞ்சி வீரட்டத்தெநதை யருண்மலிவினும் புரிந்திடுமென், றனைவருமகன்றார் தைவிகவரசு மகிலநீங் குற வமலன்று, டனைவிழைந்தொரு மெய்நிலையின் மெய்ம றந்து சந்நிதிகின்றிவை சாற்றும். (உ0)

† குசேந்திரனூர் பரி=யென்பது-கோவேறுகழுதையெனற்பாலது.

வேறு.

* மாசின்முற் பதத்தைநீங்கி மாயைவல்லிருளா லோங்கிக்
காசினிதனிற் பிறந்து கன்னியன் னிருவரோடு
நேசமுற் றுழலுவேற்குன் னிகரறுமருளாலுன் மேன்மை
வாசகம் பரவச்செய்த வாறிலெந்தருள்வாய் மன்னே. (உக)

* செய்யனே போற்றிவேதச் சிரத்தினி னாடநபோற்றி
துய்யவே றார்ந்தசெல்வசுந்தராபோற்றி மானுர்
கையனே போற்றிமூன்று கண்ணுடைப் பரனேபோற்றி
மெய்யனே போற்றிமுத்தி வீரட்ட நாதாபோற்றி. (உஉ)

* ஆதியே போற்றிபோற்றி யனாதியே போற்றிபோற்றி
சோதியே போற்றிபோற்றி துரியமே போற்றிபோற்றி
நீதியே போற்றிபோற்றி நிமலனே போற்றிபோற்றி
வேதியா போற்றிபோற்றி வீரட்ட நாதாபோற்றி. (உங)

* ஈறிலா முதலேயோல மிறைவனே யோலமொப்பார்
வேறிலா யோலம்பொல்லா விடமுண்ட கண்டாவோல
மாறுசேர் சடையாயோல மகிலகாரணனே யோலம்
வீறுகொ ணடனுவோலம் வீரட்டநாதா வோலம். (உச)

* என்றிந்த வாறும்வேறு மெழிலுடை யிராஜராஜ
னின்றுரைத் துரைப்பக்கேட்ட நிமலனுங் கிருபைகூர்ந்து
குன்றவில் வியங்கவிப்ப விண்ணோர்கள்கொய் மலர்கடூவ
மின்றிகழ் விடையினும்பர் விமலையோர் பாகந்துன்ன. உரு.

* விளங்கினன் கண்டவேந்தன் மெய்மறந் திருகணுனுங்
களஞ்செறி களத்தெம்மான் றனுருவுண்டொன்றாய்க் களி
த்தான், குளஞ்செறி நயனனோக்கி வியந்துபுன் னகைகொ
ண்டான்மன், வளஞ்செறியுருவமாறிமலையவேந்தாகினானால்.

* முன்னுருவடைந்த நான்குமுடியுடை வேந்தனெந்தை
தன்னிக ருருவங்கட்குத் தனித்தனி துதிகள்கூற
வன்னகால் பூவிமானமடைய வொன்றதி னிவர்ந்து
மன்னவ நின்பதத்தின் மருவென்றங் கிறைமறைந்தான். ()

* கேட்டதோ ரிமையவேந்துங் கிளர்வீரட் டேசனம்மை
வாட்டமி லெழிலுருக்கண் மனக்கிழியெழுதிச் சாணித்
திட்டமாய்ச் சூழ்ந்தமைந்த ராதியரெவர்க்குங் கூறு
நாட்டமூன் றுடையவெந்தை பெரியநாயகியை நாளும். ()

* ஏவரும்விதி யன்போடிங் கேத்துவீராயி னென்னின்
மேவருஞ் சுகங்கடுய்த்து வேண்டுமேற் பதம்பெற்றுய்வீர்
யாவருங் கோடிரென் றங்கமர்விமா னத்திலேறத்
தேவரு மலர்கள்வீசத் தெய்வமங்கையர் கொண்டாட. (உகூ)

* ஆனக மாதியான கருவிகளெங்கு மார்ப்ப
வானக மெழவிமான மண்ணுளோர் விண்ணுளோராய்த்
தானகங் கரைந்துநையத் தனிமுதல்வியை யின்னேன்றன்
மாநகங் குறுகவங்ஙன் வசிப்பவரெதிர் கொண்டேற்றார். (௩0)

* ஆதிநா ளம்மைவேண்டற் காதிசொற் படியுதித்து
மேதினி யுய்வித்திங்ஙன் மேவெங்களரசே யென்றென்
றோதிரவேரடு போற்றி யரசுசெய்திட வமைத்தார்
கோதிலானருளின் விஞ்சிக்குளிர் வரைபுரந்தான் மாதோ.

* உம்பர்கடொழ விமானத் தும்பர்வேந் துறுமக்காலைச்
சண்பக மாலையாதித் தையலார் தழற்கலந்தா
ரிம்பரிற் கண்டோர் கேட்டோர் களியன்பாச்சரியமென்னு
மம்புராசி களமிழ்ந்திப் பலபல வறைவதானார். (௩உ)

* உலகினி லீதுகாறு முள்ளவ ரேவரேனு
கலமுறு ¶பேறீரெட்டு நவையிலா தற்றாரில்லைக்
குலமுறிப்பேறுரேனு மொருவர் கொண்டாலு மன்றே
ரிலகுமிவ் வேந்தல் போலுற்பவ பதமெய்திடாரே. (௩௩)

---

¶பேறு, பதினாறு—ஆவன: புகழ்-கல்வி-வலி-வெற்றி-நன்மக்கள்-பொன்-நெல்-நல்லூழ்-நுகர்ச்சி-அறிவு-அழகு-பெருமை-இளமை-துணிவு-நோயின்மை-வாழ்நாள்.

## வேறு.

* மகந்தனிற்றை மதியோணை நாள் வந்திவ்
விகந் தனிலேழ்; நூற்றறுப தாண்டிருந்
திகழ்ந்துபூ † சிராவண வவிட்டத் தெய்தினு
னுகந்து முற்பத நரசிங்க வோங்கலே. (௩௪)

மக்களு மாக்கமும் வளரமன் னவன்
றிக்கெலாம் புகழினுற் செறித்துக் கோல்வழித்
தக்கமா நிலம்புரந் தருளிச சான்றதோர்
முக்கணன் றொண்டினு முழுதும் வீறினன. (௩௫)

அந்த கன்றனை யடுமெரிய கோவலூ
ரிந்து வின்புனற் சடையிறை செந்தாளரு
ளுந்திமுற் பதத்தின் வேந்துயரச் செய்ததென்
விந்தை யென்றனை வரும் பலவிளம்பினுர். (௩௬)

இப்படி யின்னமு மளவிலார்க ளெம்
மப்பணி சடையனை யரியகோ வலிற்
றப்பற வருச்சனை புரிந்து சார்ந்தன
ரொப்பறுஞ் சிவகதி யுவந்து நாளுமே. (௩௭)

* குகமுனி மாநர சிங்கன் கோவனின்
றிகமுனிந் தரும்பத மெய்தல் கூறினுந்
திகழ்குல சேகரன் செழுநிலம் புரந்
திகழ்வென நீங்கிமே லேய்ந்த சொல்லுவாம். (௩௮)

பதவிச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள்-௧௩௯௮.

---

† சிராவணம்=ஆவணி மாதம்.

சிவமயம்.

# குலசேகரச்சருக்கம்.

## வேறு.

* நன்னயஞ்சேர் தைவிகநர சிங்கராஜ வுடை[illegible] மனைவ ரேறு, மன்னவனம் மிறையருளின் மலையரசனாயி மையம ருவத்தேர்ந்த, வன்னவன் முப்புத்திரர் மூவரும் வீரட்டேச னருண் மீளிவைநாரு, முன்னியுன்னி மூவாறு புவிபாகப் படிபுரந்தா ரொருவாற்க. (௧)

* முதற்புதல்வ னாகுலசேகரன் சித்தாந்தத்தின் முதிர்ந்து † மூன்று, விதந்தொடருக் கழிந்தமைச சர்பா லரசொப்பித் தெழுவுமெல்லி வெய்பி, யிதந்துடன் வந்துப சரித்தங்கி யானுமே வுபவருவ்வென் றிசைத்தா, னந்கண்ண லொரு தொடாபு மெனக்காகா வெனச்சொல்லி யகல்வதானான். (௨)

* அடியாருக் குனைவிடவோர் கதியுளவோ வெனச்சொல்லி யடியில வீழ்ந்தான், பிடியானை நடையாளே யான்றனியூர் திகழின்றிய பெயரா நின்றேன், கொடியாளே யென்புணர் ப்பை யுளங்கொளா தெழுந்தரணிற் குறுகாயென்று, படி யாளு மன்னவனுஞ் செலப்பின் சென்றரிவை பின்னும் பகருவாளால். (௩)

* உனைநீங்கு மற்றவைக்கோ ருய்வுண்டு வேறோர் வகை யும் விலாது, வெனைநீங்கு நெறியுண்டோ வாதலாற் கொடு போதி யிலையேற் சின்னாட், பினைநீங்கு வாயென்று மதங்கு மானிய னுள்ளம் பேதித் தேங்கி, யனைநீங்கக் கண்டவான் றன்றென்னக் கரைந்துரைத்தா ளவைகேட் டண்ணல். (௪)

* இன்னமு மெவ்வளவு முறையெடுத்து நீயுரைத்தாலு மென்ற னுள்ளந், தன்னையுன வசமாக்கல் கூடாது நிற்றிநீ

† மூன்றுவிதத்தொடர்=மண்-பெண்-பொன்.

யென்றுசாற்றி, மன்னவனுஞ் செலக்கண்ட வனிதைமிக வெருண்டொப்பாண் மண்வின் காண, பின்னிலைமை யறியாது புணர்ச்சி விருப்புடையே னென்றிழித்துக் கூறி.

* செல்லுகின்ற யெனைப்போன் றோர்க்கேயல் செய்வாண் மகளோடு சேர்வாயென்று, வல்லிமீண் டனள்வேந்தன் மங்கைசொலை மதியாது மகிமை மிக்கங், கெல்லையிலாப் பல தலங்கடரிசித்துக் காசிநகரெய்திக் கங்கை, புல்லுநதி படிந் தனந்த நாளிருந்தான் விசுவேசன் பொற்றாள் போற்றி. (சு)

* அண்ணனீங் குறவடைந்த வரிவையணி யுயராடை யக ற்றி நாளும், பெண்ணைநதிப டிந்துநறு மலரெடுத்துத் தொ டுத்துமிகு பிரியத்தோ டென், ணுண்ணிவரும் வீரட்டத் திறைபெரிய நாயகியு முவக்கச் சாத்திக், கண்ணருவி சொ ரியவுள நெகிழவம்மை கழல்விழுந்து கழறு வாளால். (எ)

வேறு.

* தேசுருவிலிக்கே யுராவுஞ் செயிருடை யனவா யெய்ந்துங்
காசினிவினு மயங்கக் கண்ணருள் புரிந்தாய் போற்றி
வாசவ னயன்மால் தேவர் மறைமுனிவரர் மற்றோரும்
பேசரும் பொருளே போற்றி பெரியநாயகியே போற்றி. ()

* என்ன துன்புறினுங் காந்தனுலது சுகமேயென்று
கன்னியர்க்கமைதல் தேர்ந்துங்குல நலங்கடக்கும் வண்ண
மன்னனுக் கறிவிலேன் சொல்வண்மை யாக்குவையாலன்பர்
பின்னநீக்கன்னே போற்றி பெரியநாயகியே போற்றி. (கூ)

* திருந்தயா வுலகுநோக்கும் பொதுநோக்கிற் சிறியேனுக் காய், வருந்‡திறந்தன்றுலுய்யற்கில்லேனுன்மலர்விழிக்கட் பொருந்துசீர்ச் சொந்தநோக்கஞ் சிறிதருள் புரிகியண்டப் பெருந்தகையிடத்தோய் போற்றி பெரிநாயகியே போற்றி

* விதுவணி யிறைபான்மேவி மிளிர்கடைக் கண்ணுனேக்கு மதுபொழு துலகமைந்து தொழிற்படுமானு லுன்றன், கது

‡ திறம் = மேன்மை.

மெனு மகிமைகண்டு கழறுதற்பாலோ நாயேற், கிதுபொழு திரங்கியாட் கொண்டிச் சென்மங்களதி யென்று. (கக)

* பலவகை நைந்திகத்தின் பற்று விட்டிசைத்தல் கொண்ட வலகிலா வருள்சே ரம்மையவள் சன்மவினையை நீக்கி யிலகுமெய்ப் பதத்திலாகச் செய்தனளிகம் விண்போற்றக் குலமறைச் சிரத்தானந்தங் கொளுநடங் குலவுங் கோதை.

* காசியிற் பன்னீராண்டு கழறுமன்னவ னிருந்து மாசிலாக் கங்கைகொண்டு மாவலக்கோவல் புக்கான் றேசுடைமனைவி யம்மைதிருவருள் சேர்தல் கேட்டங் கேசறு தம்பிமார்க ளிருவர்க்குந் தன்றுடைந்து. (கங)

* கங்கை கொண்டேகிக் சேதுக்கண்வளர் கருணைமிக்க மங்கையோர் பாகற்காட்டி மன்னனும் பலதலங்க ளெங்கணுந் தரிசித்தப்பா லீன்றுளையின்றன் சேய்வாழ் துங்கமார்குடந்தைமேல்பாற்சோழமாளிகையைச்சார்ந்தே.

* ஞான தீக்கையைப்பெற்றெண்ணகணுகிடஞ்சிவமேயன்றி யீன மற்றெல்லா மென்றங்கிருந்த காலபயன்கூறு, மூன மி லாதோய் கன்னியொருத்தி நாயகன் வேண்டாது, மோன முளோர்கள்போல விருக்கின்றுளென மொழிந்தான். (கரு)

* அன்னவள் வியப்பைக் கேட்டவண்ணனு மறிவோமென் றம், மன்னவனுடனே சென்று வனிதைக்கு வரவுணர்த்த முன்னந்தாய்த் திரைவிட்டுள்ளே மொய்குழலிருந்து வந்த தென்னகாரணமோ வென்றுள் கோவல்வேந் திசைப்பதானன். ()

* மாதுங் புருடன்வேண்டா வகையெனக் குணர்த்தாலென் னத், தீதொரு வாதகன்மஞ் சேருதல் வேண்டேனென்றுள் காதலர் தொண்டையன்றிக் கன்னியர் கருமநீக்க யாதொரு வகையினுலு மாகுமோ வறைதியென்றன். ()

* அற்பமாங் காமவிச்சைக்காடவர் கீழ்ப்படிந்தோ, ரிற்புகுந் துயந்தேன் வாமனூற்படிக்கீ றிலாத, சிற்பூஜாத் தொண்

டாற்சென்ம தோடங்கடேய்த் தெஞ்ஞான்றும், பொற்ப மை யுருவத்தோடு பொருந்துவனெனப் புகன்றாள். (கஅ)

* அன்ன சொற்கேட்டவேந்தனரிவையேநீ தொண்டாற்றுந் தன்னிகரில்லா வம்மைக் காடவனிலையோ சாற்றாய் முன்னவ னுலகவிர்த்தி முன்னி யாண்பெண் புணர்க்கப் பன்னகப் பணியானோர்பால் வதிந்தனளெனப் பகர்ந்தாள்

* நீதொழு நிமலவம்மை யிறைபானிங்கா திருக்கப் பூதலத் தனந்தமாயை யுற்பவம் பொருந்தித் தோன்று மாதுநீ புருடன்வேண்டா வகைநிலைப்படுமோ வுன்ன வோதவனுக்கு மேலாயுறுவையே யுன்ன மாட்டாய். (உ0)

* அல்லதுகீழ்ப்படிந்தங்கவள் தொண்டையாற்றுவாயேல் வல்லவள் வருத்தமார்க்கந் தவறியே மருவமாட்டாய் மெல்லியே தோன்றுமிந்த விஞ்ஞைக்குத்தரங் கூறென்றான் † செல்வியல் கோட்குலத்தின் சேகரனென்பான் மாதோ.

* கேட்ட நங்கையுந் தியங்கிக் கேழ்கிளரரசே நீமுன் வாட்டடங் கண்ணினாளை மணந்துவிட் டேகலென்னை கோட்ட மில்லறிவோர் நாரிநீங்கியுங் குலவலாகுந் தோட்டணி மகளிர்கொண் கன்றுணையன்றிவாழ்தறாய்தோ.

* திடவறிவுடன் வாழ்ந்தாலுஞ் செகத்துளோர் ரிழிவுங்கூறப், படிவர்கள் துறந்தோரோனும் பழிமொழிக் கஞ்சுவாரான், மடமிலாத் துருபதன்றன் மகள்ஞான மகத்துட்கொண்டு, மடலைவர் புலன்போற்கொண்ட தறிந்திலாய்போலு மென்று. (உரு)

* பதிவிரதையர் பல்லோர்கள் சரிதங்கள் பகர்ந்துஞானத் திகமுளபுருடற் கூடியிருந்து மெய்ப்பதம் பெற்றுய்தி ததியிதா மென்றுவேந்தன் சாற்றிய கேட்டாணக்கிங் கதிபதியார்கொ ளின்னையன்றி யென்றவ ளறைந்தாள். ()

---

† செவ்வியல்கோள்=சக்கிரன்—செல்-மேகம்.

* அவ்வுரை கேட்டவேந்த னகங்கொளாத ரிவையேநீ
யிவ்வுரை யெனைவிரும்பிச் சொல்லுத லேலாதென்று
னெவ்வுரை வேறோர்பாலி லியம்பினுங்கொளெனீ கொள்
ளுஞ், செவவுளா யிலையேல்யானுந் தீயிடைபுகுத றிண்ணம்.

* என்னு மவ்வுரையைக் கேட்டவேந்தனு மதங்கமானி
தன்னுரை பலிதமாகுந் தருதியோவென வுட்கொண்டு
முன்னொருத்தியை வெறுத்துமொய்குழா லுன்னைச்சேர்தன்
மன்னும்றதொழுவெறுத்துவல்விலங் கேய்தலென்று. (உ௬)

* விதிவலியாலே யுள்ளந் திரிந்தொருவாறு வேந்தன்
கதுமெனும் பழிக்குநாணிக் காமாரி யருளையன்றி
யெதுவரு மெனவூகித் தங்கிருந்தனன் மௌனமாக
வதுபொழு திருவருள்ளக் கலேவலி யளவிற்சொற்ற. (உ௭)

* யாவையுங் கேட்டிருந்த வபயனுங் களித்துக்கூறுந்
தேவெனச் சருதிக்கேற்பச் செப்பியுவைய நின்னைப்
பூவையந் சருதிமன்னென் றுரைத்திடப் பொருந்துமிந்தப்
பாவைப்பாரதியென்றேதப்படுந்தொடர் பழுதன்றென்றன்.

வேறு.

* அன்ன வாசகங்கேட்டலும் பெண்ணை நாட்டதிப
னின்ன கன்னியாரிசைத்திடு மெனவது கேட்ட
பொன்னி நாடனு மையவிப் புகழுடையாட
னன்னை யென்குலத்துதித்த வளம்புவி மாயில். (உ௯)

* வந்த பாண்டியகுலத் துதிபட்டு வாமத்தோற்
சுந்த நாளினற்பாரியா யடைந்தவற் றழுவி
யிந்த மாதினையீன்றபி னவனிறந் திடவே
சிந்தை யாருலம்பெற மகளுடனிவண் சேர்ந்தாள். (௩0)

வேறு.

* மங்கலை யெனுமம்மாது மானினியெனப் பேர்பெற்ற
கொங்கலை குமுதவாயிக் குமரியுங் குறைபாடின்றிச்

சங்களை பழனவிங்கு புரந்திடவரண் டரித்தா
ரங் ¶களைவுட னெம்மாதர்க் கன்னையி னுபசரித்தே. (௫௧)

* அணியாடை மாலைகந்த மணிந்தவப் போதிலஃது
தணியாத கற்புநீதி மங்களசாத்தி வந்தாள்
கணியாத வன்புகண்டோ ரெவர்களும் பரிகாசத்தாற்
றுணியாகத் தாதியம்மை யென்றுமுன் சொலி நகைப்பார்.

* அத்தகைக் காரணப்பேரிடு குறியாயிற் றின்னுண்
மெய்த்த சீரிளமைதன்னிற் கலையறிந்தொடுக்க மேவு
மித்தகை கண்டோர் $மூப்பியெனும் பெயர்தந்தார் ஞான
வித்தக வீதறிந்தோர் விளம்புறவிழிவு முண்டோ. (௫௨)

* இந்த வேந்திழையா ளாடிவருமடவார்களை யெல்லாஞ்
சிந்தனை கொளாதிகழ்ந்தாள் செயிரறு நின்மேலன்பு
வந்ததிம் மரபோர்செய்த மாண்டவமாகு மீண்டிப் [றுன்.
பைந்தொடிதனை மணந்தென்றேனும் பரிந்திருத்தி யென்

அன்னைபின் னவனுங்கூறக் கேட்டவேந்தங் ஙனாட்பார்
சொன்ன சாபத்தைக்கூறி வீரட்டன் றனைத்தாள் சிந்தித்
தென்ன நின்மனமோ வேந்தேயவ்விதமியற்றுயென்ன
வன்ன சொற்கேட்டசோழ னகங்களித்தோர் நன்னாளில்.

* மடந்தையாம் பருவத்துற்று மனவொழுக்கத்தான் மூப்பி
னுடந்தையாம் பெயரைக்கொண்ட வொண்டொடியாளை
மன்றற், சடங்கியற்றித் தைவீகத்தராபதிதனயர்க்கீந்தான்
றடங்கடலுலகும் வானுஞ் சயசயவென்று வாழ்த்த. (௫௬)

*'பாரதியெனப் பேர்பெற்ற பாவையுஞ் சுருதிமன்னுங்'
கூருளமொன்றாய்ச் சோழன்குறித்த வோரிடத் திருந்தெம்
மீரமார் சடையற்றியான மிடைவிடா தியற்றிவந்தார்
சீரியன் மதங்கமானி செப்புரை பலிதத்தாலே. (௫௭)

---

¶ அளைவு=குழைவு. $மூப்பி=(கல்வியறிவொழுக்கங்களின்) முதிர்ந்தாள்—என்னுங்குறிப்பு.

* சிலவநாட் பின்னரந்தத் தெரிவையுங் கருப்பமானாள்
கலைவலான் மாதின்காதல் ‡குகுமதிகடுப்பத் தேய்ந்தெம்
மலகிலாவருள் வீரட்டத்தடிகள் சேவடிகள் காண்பான்
றலைவிலாநனைசு முன்னீர்ப்பவன்பு பின்புறமேதள்ள. ()

* கோவலம் பதியின்மேவக் கனிட்டர்கள் குறைத்தாள்போற்ற, வாவலோ டண்ணலம்மை யடிமலரக நிரப்பி•
நாவலான் முனமடத்து ஞானநிட்டையி லிருந்தான்
பாவையுங் கருமுதிர்ந்தோர் பாலனைப் பயந்தாண்மாதோ.

* கண்டனுஞ் சுதற்குச்சாத கருமமாதிய வியற்றி
யொண்டொடியோ டுள்ளன்புபெறவு வந்தளித்தா னங்கு
கண்டவரெவரு மன்பான் மூப்பியாங் கனைதையீன்ற
தண்டலின் மகற்கு மூப்பனெனும்பெயர் சாற்றினரால். ()

* பொன்னியங் துறைவன்மைந்தற் பொற்பொடு குணங் கட்கேற்ற, தன்னிகரிலா வப்பேரோ தகுந்தகுமெனக் களித்துக், கொன்னுறு மறைகளாதி கொளுத்துவித்தே றன்னை, மன்னுறத் தம்பாலென்றும்வைத்தனன் மருவிலாது.

வேறு.

* வளர்கலை மதியின்மைந்தனு நாளுண்மனுமுதலிய வல்லிலமெய், இளர்கலை பலவுமறிந்தரசவையிற் கெழுமுநீதியின் விதிகிளத்தக், தளர்வறு வளவன்கேட் டுளமகிழ்ந்தங் கமைச்சரிற்றலைமையுந் தந்தான், றுளவகலான்போற் சதுவுபாயத்தால் வசுந்தரைகோன் முறைதுலக்கி. (௪௨)

பாலனு முதன்மைக் ககமகிழ்வுற்ற பான்மையைக்கண்டு பாரதியா, கூலமுற்றவளாய் மைந்தநின் னரசுக்குட்படு மரசனுற்கொடுத்தம், கேலவே மகிழ்ந்தா யுன்பிதாமகன் றனியல்லவிகேட் டிலைபோலுங், காலமீ தென்றுளவனு நம்முன்னோர் காதையைக் கழறுதியென்றான். (௪௩)

---

‡ குகுமதி=அமாவாசிச்சந்திரன்.

* மைந்தகே ளென்றுரைத திகனளவில் வந்ததுமுதலிய சரித, நந்தலிலாது கூறினள்கேட்டே நாணமுற்றவ னென்றன்பிதமே, வந்தநன் னகரமடைந்திட வெழுதியென்றன னவ்வுரைகேட்ட, செந்திருவனையா ணகைத்தவண்டானுஞ் சேர்வுறுவிதிவகை செப்பி. (சச)

* நீசென்று வருதியென விடைகொடுத்தா ணோர்மையனேரியற் குரைக்க, மாசொன்றிலாத மதியுளாயென்றன் வண்மைநின் முதாதை வண்மையதே, யேசென்றதுண்டோ விவணென்று மிருத்தியெனப்பலவிறை யுரைத்திடக்கேட், டாசென்று மிலாதோய் பிதாக்கள்பா லடைந்திங்கடைவனென்றெழச் செம்பியன்றான். (சரு)

* கலைவழியினு நற்கண்வழியினு மெய்காட்டுறு வழியினுங் கதித்த, சிலைவழியினு மெய்த்திடவழியினு †மூழ்ச்சேர்ந்தவர் வலி கொளச்சினத்து, மலைவழியினு மற்றையவழியினு மேம்படுகுதிமருவு முப்பப்பேர், நிலைபெறு மிவனுநீங்கவிங்குறு மொழிறை புகழெனவெணி நிகழ்த்தும். (சசா)

* உனைத்தனியாகப் போகவிட்டிங்கி யானுமேறுமூடற காதினிர்சின்றுட், பினர்ச்செல்வோமிருத்தி யென்றுபசரித்துப் பேசுறவிருந்தனன் பண்டை, வினைத்தொட ரறுக்கக்கோவலெம்மான்றாள் விழைகுலசே கரமேலோ, னினைப்பொடு மறப்பிலாத மெய்ஞ்ஞானநிட்டையை விட்டிவைநிகழ்த்தும்.

* மெய்த்தசீர்ப்புகழ்கொள் வீரட்டநாதன் மெய்யருள் கொளுமுடற் றுணைகாள், பொய்த்த விவ்வுலகநீங்கி நற்சிவத்திற் பொருந்துவ னீங்களும் பொருவி, லுத்தம நெறியைக்கைக்கொண்டு ரதனையுய்குவீரஞ் சன்மினென்றே, வித்தகச் சுருதி மன்னனும்விளம்பி மேடமாமதி புனர்பூசம். (சஅ)

* ஆதிவாரத் தெம்பிறையடி பணிந்தங்கமல நிட்டையிலிருந்திடுங்காற், பாதியாம் பகலிலுடல் விடுத்தான் மாபரவெளி

---

† ஊழ் = பகை.

யடைந்து சாரூப்ய, சோதியானுருக் கொள்பதவி யெய்திய
தாற் றுணைவர்களே னையோர் சூழ்ந்தங், காதியானுடலைச்
சமாதியுட் பொருந்தி யாலயமமைத்தன ரம்மா. (௪௯)

* சுருதிமன்னவ னற்பதவி மேவினதைத் தோகைசேய்
கேட்டுளமிகவு, முருகினர் மகிழ்ந்தா ரன்னையங் கிருக்க
வுயர்சுதனொடு பலர்சூழப், பரிதிமா மரபோன் கோவலூ
ரடைந்து பார்த்திபர்க்கண்டு மிப்பாலன், புரிவலி சொலக்
கேட்டவ்வன் சிறுபிதாக்கள் புகலுவர் மன்னவிப் புவிக்கு. ()

* அரசர்க்கோ ரரசபுதல்வனை நின்னுளமச்சனு யமைத்தனை
யதுவெம், பரசுக்கை யண்ணலருள் கொலோவிங்கிப் பால
கனரசுரியானென், றுரைசொலக் கேட்ட $ வெலுவனுண்
ணடுங்கியுங் கண்மெய்ப்பிதா வருளரசென், வரையுற்ற
வதுவுமிவன தாமென்றான் மறுத்துமெய்ப் பொருளண்ண
ல்வகுப்பான். (௫௧)

* உண்மை யோராதவறிவிலா ரிவனைமுப்பியின் புதல்வனெ
ன்றுன்னி, வெண்மையா யிழிவுகூறுவ ராங்குமேவுதற கா
தென விளம்ப, வெண்மைசேர் சோணாட்டிறைவனு நகைத்
தியான் மருகனாய்க் கொளினிழி வென்னென், றிண்மையு
மிவனே யன்றிபூரேகே னென்றுபல்கூ றுரைசெய்தான். ()

* கேட்டவேந்தோர் நாட்குறித்திதின் மகளைக்கிளருமித்த
நயனுக்கலங்கல், சூட்டுவிப்பாய் முன்போகென விடுத்தூக்
குறித்தநா ளவரொடுஞ் சோழ, நாட்டினி லடைந்து விதி
ப்படி மூப்பிநம்பிக் கந்நரபதி சுதையை, வேட்டங்குச் சின்
னாளிருந்து கோவலின் பான்மேவினன் விடலை மெல்லி
யொடும். (௫௩)

* கோவலிற் புதல்வன் காந்திமாமதியாங் கொம்பனையொடு
மிருந்திடுங்கா, லாவலோ டெம்மானருட் டிறங்களைக்கேட்
டகமுல கயிர்த்திறையமலச், சேவடிபடிந் தங்கிருந்தனன்

---

$ எலுவன்=சோழன்.

வருந்திச்செம்பியன்றன் னகர்குறுகப், பூவையோடவனைய
ழைத்தனனினியான் பொன்னிநாட்டடைவுற்றனென்றான்.

### வேறு.

* கேட்ட கண்டனும் வருந்திமெய்ப் பொருளுடன் கிளத்தி
வாட்ட முற்றிடக் கண்டவம் மன்னனு நகைத்துக்
கோட்டமில் சுதவங்கு சின்று ணின்றிக் கோவன்
மீட்டும் வந்திடா யெனச்சொல வேய்ந்தமெய்ச் சிறுவன். ()

* தந்தை சொல்லின்மேன் மந்திரமிலை யென்றுட் டரித்தே
யெந்தை தன்றிருச் சேவைவிட் டேகுதற் கில்லாச்
சிந்தை யாதரந் தணிந்தொரு வகைசெலற் கியைந்தான்
விந்தை யார்ந்த கண்டனு மவனுட னகர்மேவி. (௫௬)

* குமரவென்னை மாமுடியுள கொற்றவ னெனப்பே
ரமரவைத் துலகைப் புரந்தருளு நியவுணர்
சமரவென்றி யான்மகன் றகவென் றுரைதந்தான்
விமலமிக் கவனவனன்னை யன்னையும் வியக்க. (௫௭)

* கிள்ளிசொற்படி யிலகிலென் குறும்புகள் கெடுத்துத்
தெள்ளிதிற் செழுங்கோன் முறையரசினைச் செலுத்திக்
கொள்ளுநற் பொருட்பவ நசிவிடயத்திற் கொடுத்து
வள்ளல் சேதிமமுறை குறையின்றியே வழங்கி. (௫௮)

* மன்னுயிர்க் குடறன்னுட லெனவுமாற் கரியான்
றன்னுயிர்க் குயிரென்னவு மெய்யகந் தரித்தே
பொன்னிநாட்டை யம்மூப்ப நம்பியுங் கணிற்புரந்தா
னுன்னுதற் கருமிவன் செயல்பின்னரு முரைப்பாம். (௫௯)

### வேறு.

சிவபுர மூர்த்திதாள் சிந்தித் தேத்தினோ
ருவகையோ டடைந்த பேறுரைத்தனம் மினித்
தவமுனி யுரைப்படி யடியர் சார்பினா
லவமறுத் தரும்பத மடைவர்க் கூறுவாம். (௬0)

### தலசேகரச்சருக்க முற்றிற்று.

ஆ செய்யுள்-௯௪௫௮.

சிவமயம்.

# நரசிங்கமுனையர் சருக்கம்.

சிவன்கழற் கடிமைபூண்ட தெய்விக நாரசிங்க
னவன்குலந் தழைக்க வந்தசுதரின்மேன் மலைநாடாளு
நவிலருஞ் சீர்த்திவேந்த னரசிங்க முனையனென்பான்
கலின்மலி மாலைமார்பன் காரணமுரைக்கற் பாற்றே. (க

* முனிவருத் தருணுடாறு முன்னவனருளோர் மூன்று
மினியவவ் வொன்பானுட்டை நரசிங்கமுனைய னென்பான்
மனுவிதிப் படியாங்காங்கு வலியவரெளியோர் தம்மைத்
துனியுற நலியாவண்ணஞ் சொல்வலி நிருபம்போக்கி. (உ

திருமுனைப்பாடி நாட்டி லிருந்து சீருறப் புரந்தாங்
கரனடித் தொண்டர்தம்மை யரனெனமனத்துட் கொண்டு
விரிபுனற் குமிழியென்ன மேதினிவாழ்வை யெண்ணி
யருநெறி யவர்கடொண்டே யாமெனவாற்றிப் பின்னும். (

தெய்விகற் கருள்கூர் வென்றிதிகழ்மழுப் படையினுன்றன்
சைவமா புரத்தையாகித் தலங்களா லயங்களெல்லாஞ்
செவ்வனே நடாத்திச்சைவ நெறியிகழ்வார்ச் செயித்துத்
தெவ்வரிலா தங்கன்பர் செயிர்கனவினுங் கொளாதே. (ச

* கைப்போதிற் கனிபோற்றலங் காத்திடுங்காற் புரக்கச்
செப்போதுந் தனவிலாட் கோர்சிறுவன் சேர்கிலையேசேர்ந்தான்
முப்போதும் வீரட்டேசன் முளரித்தாட்ரிசித் துள்ள
மெப்போது மடியார் தொண்டையியற்றிட நலமாமென்றே

* அல்லதன் னியருக்குள் ளிவ்வரசை நீதியினோம்பும்
வல்லவோர் சுதன்கிடைத்தான் மணிமுடி சூட்டிவைத்திங்
கெல்லையில் லருள்வீரட்டத் தெந்தையோ டடியார்தொண்டை
யல்லொடு பகல்வீண்போகா தாற்றலாமெனவுட் கொண்டு

### வேறு.

* எந்தவித மிந்தணிவா னருளோவென் றேந்தலரசியற்றுங் காலம், விந்தையார் திருநாவலூரின் வேதியர்குலத்து விம லன் றொண்டு, சந்ததமாற்றுஞ் சடையனாருக்கு மவர்மனை யாந் தணிவில் கற்புப், பைந்தொடியாரிசை ஞானியார்க்கு மெம்மனோருய்யப் பாலனாக. (எ)

* எம்பெருமான் றிருவருளா லவதரித்த செம்மலுக்கங்கின் றாரன்பா, னம்பியாரூர னெனநாம மளித்தணிக லொளிநல் கச் சாத்திப், பைம்பொனெழிற் சிறுதேர்வீதியிற் சிறுவ ரொடு முருட்டபாத்திருப்பா, ரிம்பரின் மெய்ச்சுகம் புதல் வரன்றியுண்டோ வுண்டோவென் றெண்ணி யெண்ணி. ()

*இத்தகையா யணிவீதிவிளையாடு மிளம்பரிதியனை யான்செ ய்ய, மெய்த்தகையை நரசிங்கமுனைய னொருநாட்கண்டு வி ழைந்திரண்டு, கைத்தலத்தா லெடுத்தணைத்தெம் பரனருள் காதலனோவிக் காளையென்றங், குய்த்துணைர் வாற்பெற்றோர் பாலடைந்து பணிந்திவனரசுக் குரியானென்றான். (கூ)

* அதுகேட்ட சடையனாரந்தணர்க்கே னரசுரிமை யமைவ தென்னப், பதிகேட்டேற் கன்புளத்திக் குழவியையென்பா லளிக்கப் படுவீரென்ன, வெதுவரினுங் குலநலம் விட்டெ ணில் சுதரையுளரொருசே யீயாரானால், மதுமலர் மார்போ யரசர்வலிகொண்டு புரிவதற்கென் வகைசெய்வாரார். (க0)

*என்றும்மறையவன் கூறக்கேட்ட வேந்துவரி சூழுலகமெல் லாம், வென்றரசு புரிபவரும் தம்முரையை மறுப்பவர்கள் வேறில்லென்று, துன்றுநெறிக் கல்லனவுஞ் சொல்வரோ சொல்வரேற் சொல்லுண்டோர்நெஞ், சொன்று மனலவர் செல்வங்குலந் தகித்துற்பவனிலையுய்க்காதோ வந்தோ. (கக)

* என்ன வழுமையிற் றாழ்மையெய்தினுந் தத்தமியல்கு லத்து, மன்னுநெறி யினிற்றவறார் செல்வமாதியவுன்னிமதி

யில்லாதோர், துன்னுபல செல்வமொடு குலமிருந்தாலு மற் பசுகமேற்கொண்டு, பன்னரியகுலநலங் கெட்டிகபரத்தும் பழிமொழி பாராட்டுகிற்பார். (கஉ)

* இனுமபல ஞாயங்களெல்லாங் கவிகுலவெம்பிரா மகனு விசைக்கக்கேட்டேன், மனஞ்சிறிதுமிச்சுதனை மறையோர்க ணெறிபிழைக்க வைத்தற்கில்லேன், முனம்பாசு ராமனென முடிசூட்டி யரசிருத்த முன்னினேனும், மினந்தவிர்தலன் றின்றே யரண்சேரக் குழவியையு மீவீரென்றான். (கங)

* இச்சுதனை யன்றியெங்கட் கொருதுணைவே றிலையேனு மிறையேயுன்ற, னிச்சைமறு த்தனங்கோ டீயென்றார் வணங்கிவேந் திருகையாற்கொண், டுச்சிமிசை வைத்து மோந்தானந்த பரவசனாயுளங்குளிர்ந்து, நச்சுபிறவிக் குரு டன்விழி பெற்றாற்போற் கோவானந்தினுற்றான். (கச)

* எண்ணரும் பல்வியநதுவைப்ப வேவர்களுங்கொண்டாட விறைவிரட்ட, வண்ணலம்மை தானீபரவி யரண்புகுந்து கோமளாங்கி யின்கரத்து, நண்ணருஞ்சீர்ப் பதம்பெற்று நம்மவருய்யப் பிறந்தநம்பி தன்னை, யுண்ணெகிழ்ந்தங் கர சிந்தான் வாங்கினுளத்து வகையுடலிற் பூத்த. (கரு)

* இருவருடனுயிருணர் வொன்றாயிருத்தனைவ் வீரட்டே சன்மிக்க, திருவருளே நாமுய்ய விவ்வுருக்கொண் டெழுந் ததெனச் சிந்தித்தன்னார், பருவமைந்தற்கேற்க வுபநயன முதலின்றேனாற் பண்ணுவித்தங், கருமறை யாகமமாதி கலைகளெலாம் பயிற்றுவித்து ளகமகிழ்ந்தார். (கசா)

* வெம்பியசீ வப்பைங்கூ ழுய்யப்பண்மாரி பெய்யமேவு மீறி, னம்பிரொண்மு நரசிங்கமுனையர் திருமனைவளரு நன்மையாலு, மெம்பிரானருளாலுங் கோமளாங்கியு மொர் சுதனீன்று ளண்ணல், பம்பியசீர் நம்பியார் தம்பியென்ற பெயர்பகர்ந்தான் பரிவாலன்றே. (கஎ)

* மகன்பிறந்து மரசுநம்பி யாரூரற்கென் றுள்ளமருவ வே
ந்த, னகஞ்சிறந்த சடையனூர் தமைநோக்கிக் கன்னிகை
யொன்றணிமைந்தற்குத், தரும்படிபார்த் துரையுமெனப்
புத்தூரிற் சடங்கவியார் தம்பாற்பேதை, யிகந்துமணம் பே
சுவித்துச் சடையனூர்முனையர் பாலுரைத்தார் மன்னே. ()

வேறு.

* அந்தவாசகங் கேட்ட வேந்தக மிகமகிழ்ந்து
விந்தைசேர் மணவோலை மேதினியெங்கும் விடுக்க.
வந்தகாவல ரந்தணர் மற்றையோர் மகிழச்
சந்தமிக்கதோர் நம்பிக்கு மணவணி தரித்தே. (கக)

* எங்கும் பல்லிய சாலங்களிரட்டுற வேந்தல்
பொங்கு மன்பொடு நம்பியாரூரனைப் பொற்புத்
தங்குமொண் பரிமிசை யெம்மானெனக் கொடுசாற்று
மங்கலத் துவைகலி லெவ்ரொடும் புத்தூர்வந்து. (உ0)

* வன்மைசேர் சடங்கவியர் மாமனையிடை வதுவை
யொண்மையோடு நம்பிக்கவனு ஞற்றிடுமமையத்
துண்மை யோடிறை கையிலையின் முன்னுரைப்படியே
யெண்மைசேர் வயோதிக மறையவ னெனவெய்தி. (உக)

* இந்த நம்பியாரூரன் றன்பிதாமக னெனக்குத்
தந்த சாதனம் வழிவழியடிமை யாந்தகமை
முந்திருந்திட வெனையலாதி வன்மண முடித்தற்
கந்தணீ ரரசீரெந்த விதங்கொலோ வறையீர். (உஉ)

* என்றியாவரு நமைத்தடுத் தாளுமோ வென்று
துன்றருந் தவம்புரியினு மறிவுறுத் தொல்லோ
னன்றுகூறக் கேணம்பியு மந்தண ரடிமை
யின்றுகேட்டன மந்தணர்க் காவதென் றிசைத்து. (உங)

வேறு.

* நக்கனைநோக்கிப் பித்தனீகொலோ வெனநகைத்திங்
கிக்கணத்தடிமை யோலையென்றதை யெடுப்பாயென்னு

மக்கணத்திறை நான்பித்தனுங்கண்டவுடன் தொண்டாற்றத்
தக்கணத்து மாமென்றோர் சாதனங்கயி லெடுத்தான்.(உச)

### வேறு.

* நகைக்கெடுப்பக் கண்டநம்பி வெகுண்டெழவும் வெருண்டோடு நம்பன்கையாற், றகைத்தவோலையைப் பிடுங்கிக்கிற வந்தோவென்றவனைத் தான்பிடித்து, வகைப்படுமென் ஞாயமதைக் கண்டுரைப்பா ரில்லையோ மாநிலத்து, மிகைப்புடுசெல்வம்முதலவலிக்கஞ்சிநீதிசொலார் மேன்மையென்றே.

* என்றெம்மான் கூவுதல்கேட் டங்கிருந்தோ ரிருவரையும் விலக்கவேந்தல், பொன்றுவார்போல நின்றுதளர்ந்து கூவீசன்முனர்ப் போந்துபோற்றி, நின்றுநின் பதியாது நிகழ்த்துகென வதுகேட்ட நிமலன்மெய்ம்ம, துன்றுதிருவெண்ணெய் நல்லூரா மென்றுருவ லூர்ச்சு குணன்சொல்வான்.()

* பொய்வழக்கா லிவனரசே பல்லோரைக் கொண்டவனைப் போலுமீது, மெய்வழக்காவது வெண்ணெய்நல்லூர்க்கே கிட விளங்குமெனச் சினத்தா, னுயவழக்கி தென்றறியாயவனெழுக மூலசாதன மொப்பித்துன், னைவழக்கால் வென்றுதொண்டெற் காற்றலறிவாயென முன்னவின்றெழுந்தான். (உஎ)

* நடந்திடு முன்னவன் பினம்பிகாந்த சூசியின் விரைவினண்ணக்கண்ட, தடம்புயவேந்தாதி மறையோர் தொடரவெண்ணெய்நல்லூர் தன்னிற்புக்கம், மடந்தையோர் பாகனங்கு வேதியர் பாலாதிமுதல் வகுத்திடக்கேட், டுடந்தையிலா வுன்வழக்கை யாருரவுரைத்தியென்று ருரைக்கலுற்றான். ()

ஆதிசைவ குலத்துதித்த வெனையென்று மறிவீரிவ் வந்தணுளன், சாதனையாஞ் சொல்லோடு சாதனங்காட்டிய மாலென் சாற்றுகிற்பே, னீதியுளீரிவைக ளுண்மையெனக் கொன்றுந்தோன்ற விலெநிகழ்த்தீரென்றான், தீதொருவா வெம்மனே ருளங்கரைக்கும் பண்சொரியச் செனித்த கொண்டல். (உகூ)

* ஆண்டுரைத்த மொழிகேட்ட வான்றேருமதி சயித்தந்த ணனைநோக்கி, யீண்டுரைப்பா யாரூதலா வணஞ்சாட்சி மூன்றிலொன்றங் கென்றார்கேட்ட, § காண்டவிலான் மூல சாதன மிருக்கென்றான் காட்டாயென்றாரஞ்ஞான், மீண்டும் வலிசெய்யாமற் காப்பீரே லளிப்பனென்றான் மேலாய்நின் றான். (௬0)

* நீங்கொன்று மடையாது செய்குவோங் காட்டென்றார் சிரோங்காரப், பூங்கொன்றை முடியானே ராவணத்தை யெடுத்தொருவன் புகலவீந்தா, ஞங்கொருவர் மறுத்து ரைக்கா துரைத்தவதற் கனந்தநிலை யையன்காட்டப், பாங் கடைந்தோ ராரூரவந்தணற்கு நீயடிமைப் படுதியென்றார்.

வேறு.

* அன்னது கேட்ட நம்பியாரூரா னதற்கிசைந்தான் றுன்னிய மறையோ ரீங்குதுகளிலாய் நீவசிக்கு மன்னிய † வகரமெங்கே காட்டுதியென்றார் வள்ளன் மின்னிலை ‡ நிகேதனத்துண் மேவினனுருக் கரந்தான். ()

* உருமறைந்திடலு நாவலூரனு மயங்கிக் கூவப் பெருமறை முடிநடங் கொள்பெருமையன் விடையினும்பர் திருவுரு விளங்கி நம்பியாரூர சென்றகாலத் தொருவலினந் தொண்டாற்றிறுவொரு வேட்கையாலே. ()

* இப்புவிதனிற் பிறக்கவிசைத் தனமிசைத்த வாறே தப்பிலா துதித்தாய் துன்பவாழ்க்கையிற் சாராதியாரு மொப்புறும் வழிதடுத்தாட் கொண்டனமென் றுரைத்தா னெப்பொழுதுந் தன்றொண்டர்க் கெளியவனீறில் சோதி.

* உம்பரின் விடைநின் றெம்மானுரைத்தவாசகங்கள்கேட்ட நம்பியாரூர னுள்ளநவிலரு மன்பான் மிக்கு வெம்பியாவையும் வெறுத்துவிழி மலர்ந்திருகை கூப்பி யெம்பிரான் வலியவந்தென் றனையாண்டவிய லென்னென்றான். ()

---

§ காண்டம்=மலை. † அகரம்=வீடு. ‡ நிகேதனம்=கோயில்.

* எங்கணுங் கரிவியார்ப்ப விண்ணவ ரிரங்கிநின்று
கொங்கலர் சொரியவேந்தர் குலமறைய வருமேத்த
வங்குவந்தடிமை யோலைகாட்டி நின்றானுங் கோமான்
புங்கவனுவிலூரோம் புநிதனைநோக்கிக் கூறும். (௩௬)

* என்னிடம் வன்மைபேசு மியல்பால் வன்றொண்டனுமந்
தன்னைநீ பெறுகபல்லாறிழி வெனைச்சாற்ற லேற்று
நன்னயமாகக் கொண்டேனு னிலத்தமிழா லென்னைப்
பன்னுதியென்றான் வேதமாதிய பகர்ந்த வாக்கான். (௩௭)

* விண்ணவரயன் மாலாதியே வருவிழைந்து வேதப்
பண்ணிசை நாத்தழும்பு படத்துதித்தாலுங் காண்டற்
கொண்ணாத சோதிதானே வலியவந்திழி சொல்லோம்பிக்
கண்ணுதிங் கெனைப்பாடென்றல்கேட்டநம்பியுங்கைகூப்பி.

* மறையவனாய் வந்தென்னை வழக்கினால் வென்றுபண்டைக்
குறையறி வுறுத்தியுய்யக் கொண்டவா கோதிலாது
பிறையுயக் கொண்டோயாரும் பேசரும்புகழை நாய்ய
சிறியனே னறிந்துபாடுந் திறமனுவுளவோ வென்றான். (

* நித்தனு மன்பானோக்கி நிகழ்த்துவன் முன்னமென்னைப்
பித்தனென் றுரைத்தாயஃதெற்கேற்கும்பித்தாவென்றே
யுத்தம வடியெடுத்துப் பாடுதியெனலு முரா
னத்தமதெடுத்துப் பித்தாபிறை சூடியென வடுக்கி. (௪0

## திருவெண்ணெய்நல்லூர்த் தேவாரம்.

பண்—இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பித்தா பிறைசூடீ பெருமானே யருளாளா ... ... ... ... ... ...
வெத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை ... ... ...
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையு*
ளத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே. ... ... ... ... (க

திருச்சிற்றம்பலம்.

* பண்பத்தும் புகலக்கேட்ட பரன்மகிழ்ந் தினிமைந்தாவிம்
மண்பற்று முலகமீதென் வண்புகழ் பாடாவென்று [டோர்
கண்பத்தொ டைந்துளானுங் கரந்தனன் கண்டோர்கேட்
விண்பற்ற நெஞ்சங் கண்ணீர் பொழிந்திடவியந்துநின்றார்.

* இனையவை யுரிந்தானந்த மெய்திய நாரசிங்க
முனையனு மினியாதொன்று முன்னுதலி லாதிச்சென்ம
வினையகலுறு மக்காலவள விவருடனே மேவிப் [டான்.
புனையடித் தொண்டாற்காலம்போக்குதுமென வுட்கொண்

* கொண்டவக் குறிப்பறிந்தவன் றொண்டர்கோவே நின்பா
லுண்டவெற் கடைந்தவெம்மா னருளுனக் குண்டஞ்சேல்
பாற், றெண்டிரைப் பெண்ணைசூழுந் திருக்கோவலூர் வீர
ட்டத், தண்டர்நாயகன் றொண்டாற்று யென்றசொல் லண்
ணல்கேட்டு. (சரு)

* இந்தவற்புதத்தை விட்டங்கேகிலே னென்றான்சேர
சுந்தரமூர்த்திநக்குத் தோன்றலே கோவற்புக்கு
விந்தையா திரைநாடோறு மேவிறையடி யார்க்கன்னந்
தந்திடாய்பொன்னேடற்றிற்றனிப்பதம்பெறுவாயென்றே.

* சாற்றிவேந் தாதியோடு திருநாவ லூரைச்சார்ந்து
கூற்றுதை யிறைமுன்னின்று கூறியபதிகந் தன்னி
லேற்றினிறைதனுக் கூரென்ற பண்ணிடை யெடுத்து
போற்றினனார சிங்கமுனையனைப் புகழ்ந்து மாதோ. (சரு)

## தேவாரம்.

பண்—நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நாதனுக்கூர் நமக்கூர் நரசிங்க முனையரைய
னாதரித்தீ சனுக்காட் செயுமூரணி நாவலூரெ
ன்றோதநற் றக்கவன் றொண்டனாரூர னுரைத்ததமிழ்
காதலித்துங் கற்றுங்கேட்ட வர்தம்வினை கட்டறுமே. (உ)

திருச்சிற்றம்பலம்.

* வென்றிகொள் வேந்தேகோவன் மேவாயென் றனந்த ஞாயம், வன்றொண்டர் கூறிப்போக்க மன்னனு மறுத்தற் கஞ்சி, யன்றுகன் றீன்றவாவி னுளங்கரைந் தாரடைந்தான் குன்றவில் லவனுட்கொள்ளுங் கோலங்களகத்திற்கொண்டு.

ஒன்னலர்க் கடிந்து மன்னுமுரியரைப் புரந்துவையத் தின்னறீர் புகழையீட்டி யிறைதிருவெண் ணீறென்று நன்னயமென வுட்கொண்டு நம்பிசீரறிந்து போற்றி யென்னிறை மருவுங்கோவ லிடமெலாம் விளங்கச்செய்து.

அன்பினுரூரன் சொற்றவிதி முறையாக வண்ணன் மன்பெருந் திருநாள் காட்டுமேகேசனுதிரை நாடொட்டங் கின்பமுற்றிறை தன்பூசை குறைபடா திழைத்துநித்தன் பொன்பொலி தொண்டர்வந்தோ ரனைவர்க்கும் பூசையாற்றி.

நீறணியன்பர் தம்மைநிமல னுயகத்திற்கொண்டு நூறுபொன் னொருவர்க்காங்குக் குறைபடாதளித்து †நோன்றன் மாறிலா வன்புபோன்று மகிழினிதன்னந் தன்னை யாறணிசடையா னுண்பதாமென நுகருவிப்பான். (சக)

* மலையமன் கோங்கனென்பான் வளர்நாட்டை யுடையான் மிக்க, சிலைவலியுடையானெங்கடெய்வீகனளித்த செம்மல் கலைமலியுளத்தான் பூதியணிபவர் கழலைப்பேணு, நலமிகு முனையற்றன்மை நாயினே னுரைப்பதென்னே. (ருo)

உலகளந்த வனுங்காணு வுறுபதநோவத் தூது செலவ்விற் பரவைபாலிற் றேவதே வனைவிடுத்த கலைமலி யாவலூரன் றனையிளங் காலம்பேணி யிலகுமுன் மகவாய்க்கொள்ளவ்விறையிய லுரைப்பதென்னே.

* அண்ணலாலயஞ் சிறப்பித் தடியரை யுபசரித்து, நண்ணருஞ் செல்வந்துய்த்து நவநிலம் புரக்குநாளில், வண்ணமெய்க்கோமளாங்கி யொருமைந்தன்பெறவன்றொண்ட, னெண்ணமிக்காட் கொண்டானென் றேந்தல்பேரிட்டழைத்தான்.

† நோன்றல் = நிலைநிறுத்தல்.

* நம்பியார் தம்பியென்று நவிலுமாட் கொண்டானென்று
மெம்பிரானுவலூரற் கிசைந்தபேரிட்டு நாளுந்
தம்பிரான் றேழனோரோர் தலம்பெறும் பேறுகேட்டு
ளன்புமாச்சரியம் விஞ்சியத்திசை நோக்கித் தாழ்ந்து. ()

* மைந்தர்களிரு வருக்குமாநிலம் புரக்கும் விஞ்சை
வந்துறக்கொளுத்தி யேற்றமன்னர் கன்னியரைத்தீமுன்
றந்தொன்பா னுலகங்காக்குந் தலைமையுந் தலைவற்கிந்து
தந்தைமுன்னுறு மடத்துத்தரித்து முற்பணிகள்செய்தான்.

இத்திறமொழுகு நாளிலிறை வனுதிரையினோர்கா
ணித்தன தடியார்க்கெல்லா நீதியால்வந்த பொன்னை
பத்தியினுதவும் போதுபவ நெறிக்காமஞ் சூர்ந்து
மெத்தமேனியிற் புண்சீழுமுதிரந் துர்க்கந்தமேவ. (ருரு)

புன்னெறிபடருங் காமக்குறிமுதன் மானம் போக்கி, மன்
னுவா னொருவனீறு புனைந்தங்கு மருவனாங்கர், துன்னுவா
ரிகழ்ந்துநீங்கச் சொலநாணி யொதுங்குவானை, மன்னவனெ
திர்போய்த் தாழ்ந்துமணிக் கரங்குவித்துப்போற்றி. (ருசா)

*. அண்ணல் சோதனை கொலோவீ தம்மையிம்மையினுமா
ற்று, மண்ணுளோன் கருமத்தா லிவ்வகைபெற்றான் கொல்
லோவென்றுள், ளெண்ணிலெத் தன்மையோராயினும் வெ
ண்ணீறிட்டாரீறில், கண்ணுதலெம் மானன்றே வென்ற
கங்க சிந்தங்கேந்தல். (ருஎ)

ஆதனமன்பினீந்து முகமனுங் குரைத்துமேனிக்
கோதிரிசுகந்தந்தந்து குணமிகவு வந்துசிந்தை
தீதடர் நெறியினோர்கள் வெருவுறச் சிறியோர் ஞானம்
போதரவுற விவ்வாறு புகலுவன் புகர்குலத்தோன். (ருஅ)

பொடியணிந்தவர்கண் மேவக்கண்டு காணார்கள் போல
மடமுறவிருந்த வீனமனத்தவர் குருடராவா

ரீடமுறவெழுந்து போற்றாதிருப்பவர் முடவராவார்
கடிதவர் தம்மையேத்தார் மூகராய்க் கலங்குவாரே. (௫௯

பின்னுமந்நீரணிந்தார் நுவன்மொழி பெரிதாய்க்கேளார்
கன்மன ‡ வெதிரராவரவர்க் கொருகளங்கங் கூறிற்
றுன்னருஞ் செல்வஞ்சிந்திச் சூழ்பல நோயிற்றாழ்ந்து
பன்னருங் காலம்பெரில்லாப் படர்நிறையத்துளாழ்வார். (

மறைமுடி நடனமேய வள்ளனீறணிந்தார் தம்மை, முறை
யினால் வேண்டிப்போற்றி யெதிர்சென் றங்கிறைஞ்சிமுத்தி,
யிறைவனென் றவர்கட்காய வீபவர்தமக்குவேண்டுஞ், செ
றியருள் குறைபாடின்றிச் சிந்தையிற் புகவேநண்ணி. (

* இகத்திலீரெண் பேறுந்துயத் தெம்பிரானருளான்ஞான
மகத்தினிற்பெற்று நித்தியத்தினை யடையா நிற்பார்
தொகைப்படு சனனநீக்க விரும்பியிற் றுறந்தநீவிர்
வகைப்படுவது நீற்றோரையிகழுறும் வண்மை கொல்லோ.

* மின்னனோர் செல்வமேற் கொள்வேந்தர் களதிகாரத்தின்
சின்ன மூளோர்களென்ன தாழ்வினை சேர்ந்தாரேனு
மன்னவர் தமைமேற்கொண்டு மலகில் பேரின்பச்செல்வந்
தன்னெம்மான் சின்னத்தோரை மேற்கொளாதது மென்றாய்தோ.

இனையனமொழிந்து வேந்தனவரவர்க்கீந்த பொன்னிற்
றனியிரட்டியு நோயூர்வான் றனக்களித்து வந்துபோற்றிக்
கனிவுடனமுதளித்து விடைகளிப்புட னளித்தா
னினியுலகடியார் குற்றமெனுமைக் கோர்கரியாய் மாதோ.

வேறு.

* ஆங்கடியார் மற்றோருமுனையர் தொண்டைவியந்து விய
ந்தன்பினீங்க, வோங்குமாதிரைப் பணியையவள்ளல் சின்னு
ளன்புமலிந்துட்டிச்சன்மத், தீங்ககற்றி வீரட்டத்திறை
யருட்செஞ்சேவடிக்கீழ்ச் செறிந்தநீழற், பாங்கு $ பாத்திர
மாதச்சதையநாள் வினைவெய்யிற் படாதடைந்தான். (௬௫)

‡ வெதிரர்=செவிடர். $ பாத்திரமாதம்=புரட்டாசிமாசம்.

* காரூருங்களத் தெம்மான் றிருவருள்பெற் றுய்ந்தவர் தங் கழலைப்போற்றி, யாரூர னுரைத்த தொண்டத்தொகையுள் ளு $ மெய்யடியென் றன்பிலேனு டில், வேரூரு நரசிங்க முனை யரையர்க்கடிமையென விசைக்குங்கால் யானு, பாரூரர் தமக் கறியமுனையர் புகழுடைமை யெடுத்துப்பகர்வ தென்னே. (௬௬)

* தேறுமிவர் மரபிலாட் கொண்டா னென்பான் மேல்பாற் சேர்ந்துவெற்றி, மாறுதலிலாது கொங்கர்கோ னென்றும் பெயர்வாய்ந்து மறைநான்காகக், கூறுமுனி பாரதத்தைச் செந்தமிழில் வில்லிபுத்தூர்க் கொண்டலைக்கொண், டாறு படக் கூறுவித்தந் நூனிலைபெற் றுன்கு லச்சீர் றைவதென்னே.

* வண்மைசெறி பிருகுகவி வெள்ளிகுக முனிவரன் றைவி கவள்ள, வுண்மைசெறி நரசிங்கமுனையர் வரைக்குலப் பெயருமுரைத்தற் கொண்ணுத், திண்மைசெறி மலைமன் னர்மலாடர் கொங்கர்முதற் சாதிப்பெயருஞ் செல்வத், தொண்மைசெறி ராயருடையார் ,, முதலசிறப்புப்பேருங் கொண்டம்மா. (௬௮)

* எம்பெருமான் குகமுனிவ னருள்வாக்கின் வலியானுமிய லார்வெண்மை, யம்புயாசனிநிகர்நம்மௌவை திருவாக்கின் வலியானும் விர்த்தி, பம்பியெங்கும் பூவினையார் செல்வர்க் ளாயெவர்க்குங் கீழ்ப்படியாதியாண்டு, நம்பனடியார்க்கடிய ராய்வாழ்வார் குலப்பெருமை நவிலற்பாற்றே. (௬௯)

## வேறு.

* மலையமன்னென்று மூவகைகொண்டான் புக
ழுலகிலவாகினு மறிந்தவா சொற்றுந்
தலமதிற் புகழ்கொண் மெய்ப்பொருட்டரசர்ப்பதி
யிலகுமெய்ப் பத்திசெய் தேய்ந்த கூறுவாம். (௭0)

நரசிங்கமுனையர் சருக்கமுற்றிற்று.

ஆக செய்யுள்-௲௫௨௮.

தேவாரம் ௨. உள்பட-௲௫௩0.

---

$ மெய்யடியன் நரசிங்கமுனையரையர்க்கடியேன் என்றார்.

சிவமயம்.

# மெய்ப்பொருணாயனார் சருக்கம்.

### வேறு.

மருமலர்த் துணர்கமழ் சினைமலய மிர்த்துயர்ந்த
கரையலைத்தகல் §வசுமதி கிண்டௌவை கவிகேட்
டிருநிலத்தர் மெச்சிழுதை பாறதியையீ பெண்ணைத்
திருந்திப் புறந்திகழ்ந்து மேம்படுஞ் சிவபுரமே. (௧)

வழுத்துமிச் சிவபுரத்தெம் வீரட்டரை வழிபட்
டழுக்கின்மா மனுவழியொன் பாணிருநிலம் வாய்மை
யொழுக்கி னீடியமாட்சிய னொன்னலர் கடிந்த
முழுத்தவென்றி யன்மலைய நத்தமனெனு முதல்வன். (௨)

* இமயவேந்து தெய்விகனு யெய்திய தானு
மமையுமா மலையுடைய நாடுகளுள தானும்
விழலநாடு பங்கொடு நடுவென விள்ளலானு
மமலவேந்தனை மலைய நத்தமனென வறைவார். (௩)

வென்றியேபுரி மலைய நத்தமனெனும் வேந்த
னென்று மன்பினால் வழிவழியடிமை யென்றிறைதன்
பொன்றிலாப் பணிகோ வன்மாநகர் புரிந்தருளு
நன்றி மேயதோர் சேதிநாடுடை நரேந்திரனே. (௪)

சேதிநாடுடைத் தெய்விகன் குலமகன் சிறந்த
நீதியாளன் மெய்ப்பொருண் மன்னனிலவணி பெருமாற்
காதரம்பெறவாலய மெங்கணும் பூசை
காதலாற் புரிந்தரசிய லளித்தனனன் காமன். (௫)

அறநிலைக் கணின்றுக்கிய பொருள்களு மாண்மை
மறநிலைக் கண்வந்துற்றன பொருள்களு மற்று
மிறைவனல் லடியவர்க்கென வகத்தினி லெண்ணி
முறையினங்கவர் மகிழ்தரவளித் ¶ துரன் முதிர்ந்தான். ()

§ வசுமதி=பூமி. ¶ உரன்=ஞானம்.

### வேறு.

திருக்கோவலூரின் மன்னுஞ் சிவனடிக் கடிமைபூண்டு
கருக்கோலம் புகுதும்பாதை கடிந்தரனடி யார்க்கென்றும்
பெருக்கோதை வழியினின்று பேருலகளிக்கு நாளி
லிருக்கோதை முனிவாக்காலு மெம்மிறை யருளாலும்.

* ஒப்பருமதன சிந்தாமணி கருக்கொண் டுரைக்கு
மெய்ப்புவன முங்களிக்க வீன்றனை னொன்றொன்றாக
முப்புதல்வரைக் கண்டேந்தல் முடிவின்முக் கண்வீரட்டத்
தப்புதமுள்ளிச் சாதகரும மாதியவு மாற்றி. (அ)

* அந்திவண்ணனை மதிக்காதாணவ மேலாய்க் கொண்ட
சிந்தையரெவரு முன்னஞ்செயிர் படச்செய்த வண்ணல்
விந்தையெத் தகைமையோருமக்கொடி யவ் ரின்மேவி
நிந்தையை யடையாவண்ணம் வியாபகநிலை பெற்றுய்ய. ()

* நூமாரிக்கொண்முவொப்பானூரெத்துச்சுதர் மூவர்க்குங்
காமாரிபுராரியந்த காரியென்றருட் பேர்தந்து
தேமாரியக்தை யாதிப்பாடைக டெரிவித் தெஞ்சா
மாமாரியெனவே வேவின்மறவலி பயிற்று வித்தான். (கo)

*"ஆதிநாட் சிந்துதேய வதிபனும் புத்திராதன்
மீதுதைவீக வேந்துபோர் செய்துவெற்றி கொள்ளப்
போதுதொட் டனுகற்றில்லா திருந்தவன் புகன்றநாட்டுக்
காதிபனாகப் பாகமெய்ப் பொருட் கண்ணலியந்து. (கக)

* பதவிபெற்றதுமேல்வேந்துபரமனல்லடியார் தொண்டை
யிதமுறப்புரிந் திராசாங்கத்தி னிலிச்சை யில்லா
விதமெலா மறிந்திக்காலம் வெற்றிநாம் பெறலாமென்று
கதமுடன் கோவல்சூழ்ந்தான் கடலெனப் படைகளார்ப்ப.

* ஆண்டவன் வரவுணர்ந்த மெய்ப்பொருளணல் வீரட்டத்
தாண்டவ னருளெலா மென்றக்குமா மணியுநீறும்
பூண்டவன் சதுரங்கத்தோ டெழிலமர் பொருந்தும்வேடம்
பூண்டவன் செருக்களத்துப் புகுந்துபோர் புரிவதானான்.()

ஓடைவா ணெற்றிவெங் கணும்பறேர் காலாள்வேகக்
$ கோடைநீ ணணிகளோடும் வாண்மறக் குமரரோடு
ஓடிவந்தவனுங் கோவனிருபனை வெலற்காஞ் சூட்சி
நாடியெண்ணரும் போர்விஞ்சை பலபலநணுகிச் செய்தான்.

அகத்தழுக் காறுகூரு மவன்புரி யமருக்கேற்ற
வகைத்திறல் புரிந்துமா வோடடுபடை பாறவீட்டி
மிகுத்தகா ருறுமேறென்ன மெய்ப்பொருள் வேந்தனார்ப்ப
நகைத்தமர்க் கழைக்கவந்தோ னடுங்கியுண் ணாணிநின்றான்.

* தன்வலி யிழந்துவெள்கித் தனிநின்ற வரசைநோக்கி
யென்வலிக் கிறையிருப்ப தோர்கிலா தெய்தினாய்கொல்
லுன் §வலித்தலையூர் போய்வந்துடற்றுதி போதியென்று
முன் † வலிப்படையனோர் வான்மொழிந்து தன்கோயில் புக்கான்.()

* மன்னுநெஞ்சழன்று சிந்துமறிபன் பல்லணிகள் கூட்டிப்
பின்னும் வீரச்சொற் கூறிப்பேசும் வேந்தொடு போராடிப்
பன்முறை வலியிழந்து போயுளப்பதைத் தெவ்வண்ண
மின்னவன் றன்னைவெல்வதெனுஞ்சூட்சியெண்ணிநின்றான்.

* இதுநிற்கக்கோவல்வேந்துமிசைத்தமுப் புதல்வர்கட்கும்
பதுமச்செல்வியின் மூவேந்தர் பாவைமூவரை விவாக
விதிமுற்றி யுலகமெங்கு மெய்ப்பத்தி வலிகொண்டாட
நதியுற்ற முடியான் றொண்டுமாற்றி நானிலம் புரந்தான்.()

பலமுறை வெரிந்தந்தேகப் பார்த்திபனிவனை வெல்லுஞ்
சலமதாற் பலவுநாடிச் சதித்துவஞ்சனையால் வெல்வான்
மலிபுகழ் மலையநத்தன் மாறிலாச்சீல முன்னி
நிலவணிபெருமான் வெண்ணீற்றால் வெலநினைவுகொண்டு.

மேனிவெண்ணீறு சாத்திவேணிகள் பொதிந்து சென்னி
கூ||னசிப்படைகரந்த ¶கோசமுந் தரித்துப்பொல்லாக்
கானிமிர்புலி ‡கோவேடங்கலத்தல் போன்றெம்மானன்பர்
போனிறையுருவு முத்திநாதனும் பெயரும் பூண்டு. (௨௦)

---

$ கோடை=குதிரை. § வலித்தல்=உயுத்தம். † வலிப்படையன்=வானரப்படையையுடைய-இராமன். || அசி=வாள். ¶ கோசம்=புத்தகம். ‡ கோ=பசு.

பொய்யணியகமுங் கையிற்கோசமும் புறத்து நீண்ட
மெய்யணி மணியுநீறும் விளங்குறும் படிவமாக
மையணி களத்தான் கோவன்மா நகர்வீதி புக்கு
செய்யணி மணியிற்செய்த சேதிபன் வாயில்சேர்ந்தான்.()

மணிக்கடைக் காவலாளர் வந்தனைபுரிந்து பெம்மா
னணித்தனை னென்றுவாழ்த்தியகத்தெழுந்தருளுமென்னப்
பணிப்பச்சென் றங்கங்குள்ள பலதடைகடந் துற்றுனைத்
தணிப்பில்வாட் படைகொடத் தனையுற்று தடுத்துச்சொல்வான். ()

துயில்கொளுமிறைவனுங்குத்தெரிந்துபின் றுருகவேண்டு
மியல்பினென்றுரைப்பத் தீபத்திருண்மனத் தவனுங்கேட்டுப்
பயிலருமுறு தியுங்கள் பார்த்திபற் குணர்த்தவேண்டித்
தயவினால் வந்தவெற்குத் தடையுண்டோவென்றுபோந்தான்.(உ௩)

* அல்லிவ னடைந்துமிக்க வாணவத்தொடு பல்வார்த்தை
சொல்லுவ தாலேயுற்றுந் தடைசொல்வ தரசனீறு
புல்லுனர லாரையென்று புகன்றதாற் போகாதேநீ
நில்லெனை மறுத்தற்கஞ்சி நின்றனன் றத்தனம்மா. (உ௪)

போந்தவன் பள்ளிக்கட்டிற் புனையிழையிருப்ப ஞாங்கர்
வேந்தனு முறங்கக்கண்டும் விரைவினுற் புகுந்தவன்று
ணுந்திருவே டங்கண்டே யையெனை விரங்கித்தேவி
மாந்தரின் மதித்தசீர்த்தி மன்னனை யெழுப்பினாள். உ௫

திகழ்மலரவணோர் சிந்தாமணி வெருண்டெழுப்பத் தேர்ந்து
நகையினுற் புரத்தைவென்ற நாதனார் தொண்டராமென்
றிகல்புயநிருபனன் பற்கெதிரெழுந் திறைஞ்சி நின்று
மகிழ்வுடனெனது மாட்சிவாழ் வுவந்தணைந்த தென்றான்.()

* முனிவரண் டர்கள்ளாறுலு மொய்குழலி யர்களோடு
தனியுறு மிடத்திலெந்த மேலோர்கள் சார்ந்தாரேனு
நனிவருங் கோபமின்றே னரராசா யிருந்துங்
கனிவுடனெழுந்து போற்றுஞ் சாந்தம்யார் கழறற்பாலார்.

ஊள்ழ்புரி தவமோவென்று முகமன்சொற் றுளமகிழ்ந்து
தாழ்விலா வடிகளீங்குத் தனிப்புகப் பெற்றதென்கொ
லாழ்துயர் நீங்கவென் பாலருளுவி ரெனலுமீசன்
கேழ்வுற வுரைத்த சைவாகமத்தொன் றுளத்தவந்தேம்.

அரனதாகமத்தி லொன்றாயுலகினி லறிந்திலாத
திருமுறை யறிவான் மிக்கநினக்கது செப்பவந்தே
நிருபவென் றறையப்போற்றி நெடிதில்யான் பெறும்பேறுண்டோ
பரமன்றானுரைத்த மாறிலாகமம் பகர்வீரென்றான். (௨௯)

படித்தருள் செய்வீரென்று பார்த்திப னுரைப்ப வன்னான்
மடக்கொடி தவிரநீயும் யானுமோர் மருங்கிருந்து
திடத்தினி லுரைக்கவேண்டு மெனத்திறற் சேதிவேந்தன்
பிடிக்குறுநடையாயந்தப் புரத்தினிற் பெயர்கவென்றான்.

* மாதுவேந்தடி வணங்கி வள்ளலாகமத்தை யிம்மைப்
போதிவண் சொலக்கேட்டற்கும் பொருந்துமோ பகலிற்றாய்தா
மேதுதானென மேலோர்வந் துற்றதன்னலமே நீயுட்
போதுதி யெனக்கோ கூறப்பொற்றொடி நைந்துட்புக்காள்.

தவமணி வேடத்தானைத் தவிசினிலிருத்தித் தானும்
புவியினிற் குனிந்துநின்று புகல்செவி கொடுத்துக்கையா
லுவகையோ டிறைஞ்சுங் காலையுட் படிற்றவனுங்கோசக்
கவளிகையவிழ்ப்பான்போலக்கத்திகைக்கொண்டானன்றே.

* படையது கரத்திற்கொண்டு பகைத்திற முடித்தற்காக
விடறுதல் செய்யவன்னா னெத்தனிப்பதை யறிந்த
வடலுடை யரசனென்றீங் குடலுக்கிங் கடைவுற்றாலும்
பொடியணியிவர்க்குத்தீங்கு புரிவனோவெனவுட்கொண்டான்.

பத்திரங்கையிற் கொண்டோ னினைத்ததே பதறிச்செய்ய
மெய்த்தவ வேடமேமெய்ப் பொருளெனப் பணிந்துவென்றான்
பொய்த்தவன் புகுங்காலையம் பொருந்திநோக் கங்குவைத்த
தத்தன்கைத் தலத்திலங்கு வாளோங்கிக் கணத்திற்சார்ந்தான். (௩௪)

அன்னவன் வருதல்†சோரி சொரியவீ ழரசறிந்து
மன்னுறும் கரமமைத்து வாள்வலியுடையோய் சூழ்வோ
ரின்னவரெமக் கென்றேதிப்படி விழவிறைஞ்சித் தத்தன்
றன்னிலைதளர்ந்து தேம்பியினிப் பணிசாற்று மென்றான். ()

* தன்னுருச்சிதைந்துந்தீங்குசிதைத்தவர்தமக்குச்செய்யா
மன்னௌ டதங்கள்போலும் வாண்முதற் கருவியால்வான்
றுன்னுருக் குறைக்குங்காலுந் துண்டுதுண் டாக்கியில்லந்
தன்னிடைப் பொருத்துங்காலு நிழலருடருக்கள்போலும்.

* எனக்கிவர் கொஞ்சமேனும் பவமொறு தீறுசெய்தார்
மனத்தவர்க் கீறுசெய்ய வெணம்வரப் படுமோவாய்ந்த
வினைத்தொட ரீதோவெந்தை மிக்கசோ தனையோவென்று
நினைத்திடலோடு முள்ளத்துள்ள நிண்ணயமுங் கேளாய். ()

* எம்பிதா மகனீற்றேடு கண்டிகை யெழிற்குப்பூண்டோ
ரெம்பிரா னவரேயென்று மவர்செய்தீங் கெனுதேயென்று
நம்பனூர் போலவர் நாணவிற்றவை யீதுகாறு
நம்பலீற் றினுங்கெடாது நடத்தனின் கடமைத்தாமே. ()

எம்பிரா னடியார்தம்மை யெவராலுந் தீங்குசெய்யா
வெம்பணி தவிராதீண்டு கொண்டுபோய் விடுதி §மன்றி
லும்புகழ் மலியுமென்ன வுரைத்தசொற்றலைமேற்கொண்டு
தம்பிரான் வேடத்தானைத் தத்தனுங்கொண்டு போந்தான்.

இச்செயலறிந் தாரெல்லா மிறைவனைத் தீங்குசெய்த
பொய்ச்செயல் வேடத்தானைக் கொல்லுவோ மென்னப்புக்கு
மச்செய லவரையெல்லா மரசனதாணை கூறி
மெய்ச்செயல்விளங்கத்தத்தன் றடுத்திட வெம்பிச்சொல்வார்.

வேறு.

* என்ன வாச்சரியம் மிவனிவ் வுருத்
தன்னைக் கொண்டெணி லாததடை கடந்
துன்னற் குமரிதா முள்ளிடம் புகுந்
தின்னற்செய்த வியற்கை யென்பார் சிலர். (சுக)

---

† சோரி=இரத்தம். § மன்று=வெளி.

* கொலைத் தொழிற்புரியத் தருங்கொள் கையான்
கலைக்கை யண்ண லடியரிற் காண்பது
நலத்த மெய்யடி யாரையு நம்பொரு
விலக்கணமினியாய தென்பார் சிலர். (சஉ)

* என்னபுத்தி நம்வேந்தனுக்கே யிவன்
றன்னைக் கொல்ல வெணுதது தன்மறால்
தன்னைக் கொல்லவருங் ‡குரஞ் சாடலா
மென்னுக்கூற லறிந்துமென் பார்சிலர். (சங)

* பழுது பட்டுப்பின் னிட்ட பகைவர்கள்
தொழுது வெல்லவுஞ் சூழ்வரொன்பார் தன்னைத்
தொழுது வேண்டச்செய் யிக்குலைச் சூட்சிகண்
முழுது மாச்சரியம் மொழிவார் சிலர். (சச)

* எண்ண மெய்யடி யாரென் றிளகியே
யண்ணலைக்கொலை யானைக்கொண் டானுநம்
மண்ணல் வீரட்டத்தை மெய்யடியர்நீங்
கொண்ணக்கண்டதென் னென்றுரைப் பார்சிலர். (சரு)

* பண்டு சன்மப் பழிகழித் துய்விக்கத்
தொண்டற் கிறிவன் சூழ்வித்தக் காவிறை
கண்டிருந்ததொ ராதுகழறுதன்
மிண்டதென்று விளம்பினை வார்சிலர் (சசா)

நம்முயிர்க் குயிராகு நரபதி
தம்முயிர்க்குத் தறுகண்புரிந்தவன்
வெம்முயிர்க்கெட வீட்டியபின்னுடல்
விம்முயிர்ப்பு விலகுமென்பார் சிலர். (சஎ)

* வஞ்சவேடங் கொண்டானை மடித்துநந்
நெஞ்சங்கொண்ட துயரினை நீக்கவென்
றஞ்சலின்றி வந்தாரரசானைகேட்
டென்செய்வோ மென்றுள்ளேங்கிச் செல்வார்சிலர். (சஅ)

---

‡ குரம்=பசமாடு.

* நீறுகொள்வர் நிமலனென் றுட்கொளு
மாறுதேறன் மறுமிம்மையிற் றனக்
கீறதெய்தினுமென்றுங் கொளேந்தல்சீர்
கூறுகிற்பதென் னென்று கொண்டார்சிலர். (௪௯)

* இன்னவாறும் பிறவுமங்கெய்தினோர்
பன்னிப்பன்னி மெய்யுள்ளம் பதறிநொந்
துன்னற்கும் மரிதாந் துயரூர்கட
றன்னிற்புக்க தறிந்தென்கொல் சாற்றுகேன். (௫௰)

வேறு.

அரசனதாணை யஞ்சியடைந்தவர் மறுகிநிற்ப
விரைவினிற் றத்தன்றானும் விழிக்கிமை யென்னசூழ்ந்தங்
கிருகரத்தேதியேந்திக் காத்துச்சென் றடவியெய்தி
கரவடத்தானை விட்டுப்போ வென்றுகடிதின் மீண்டான். ()

* இவ்வணம்வெளி செல்தத்தனெறியொடு மியற்றவுள்ளே
யுய்வணமிலாத விச்சையுடைய மெய்ப்பொருளமோங்கல்
செவ்வணல் வேடத்தார்கோர் தீங்கின்றிவிடவிடுத்த
தெவ்வணமாமோ வென்றுளையமுற்றீது வேண்டும். (௫௨)

அங்கவன்கொண்டுபோன வாள்வினைவேடத்தான்மேற்
பொங்கிவந் தடுவார்நீக்கிப் போற்றுநன் னெறியின்விட்ட
மங்களவுரையைக்கேட்கும் வரையிவ்வுடலிலாவி
தங்குறவருடியென்று வீரட்டன்றாள்சிந்தித்தான். (௫௩)

* சிந்தித்தலோடு மற்றையாவையுந் தெரிந்திருந்த
வந்திச்செஞ் சடையானன்பு மவ்வகைகூட்டுகிற்ப
ந்திந்த சோரிசிந்தப் பத்திமைசிந்தா வேந்தன்
முந்துற்றுத்தத்தனன்பான் முளரித்தாள்வணங்கினானல். ()

வந்தடியிறைஞ்சிநின்றான் வாழ்தவவேடம்பூண்ட
மைந்துகூரவற்கிவ்வாறு மருவிடாநெறியின்விட்டே
னெந்தையேயென்னக்கூற விறைவன்கேட்டுவகைபூத்தே
யிந்தநற்சமயன்மைய நின்போல்யார்செய்வரென்று. (௫௫)

மிகுதுயரோடெழுந்து மேவுமெல்லியன்மைந்தர்க்குந்
தகுமிதுவோவென்றேங்கிச் சார்பரிசனத்தருக்கும்
புகுமிதுதக்கதென்று ஞாயங்கள் புகலக்கேட்டன்
புகுமவர்தம்மைநோக்கி யொள்ளியன் குலக்கோகூறும். ()

அன்பினுற்கனுட்சிசெய்திங் கண்ணுநீர்கேண்மினென்பா
னம்பெருநாட்டைக் காமாரிக்கு நன்மகுடஞ்சூட்டி
நம்பியரிருவரன்ஞேன் சொல்வகை நடக்கப்போதித்
திம்பரும்பரும் வியப்பவரசுசெய்வித் தெல்லீரும். (ருஎ)

* கண்மணிவெண்ணீறஞ்சக் கரம்புரமகத்திற்கொண்டிங்
கண்ணல் வீரட்டத் தெந்தை யாலயமுதலா யெங்கு
நண்ணுமாலயச் சிறப்பு நம்பஞாடியார் தொண்டு
மெண்ண மாற்றியற்றீ ரிறைநிருவருள் பெற்றுய்ந்திர். ()

என்றவர்க் கினிதுகூறி யிரும்புனற் பெண்ணைசூழ்ந்த
வென்றியங் கொடிகளோங்கு மேனிலை மாடவீதி
நன்றணி விழவுகுன்றுக் கோவன்புரிநகரவேந்தன்
குன்றலி லுளத்திற்கொண்ட கொள்கையை நாவாற்கூறும்.

* ஈறிலா முதலே வெண்ணீறிட்டவ ரெவராஞலுங்
கூறுநின் வடிவமென்றேகொளுமென் கொள்கையினீங்குற்று
வேறுதாழ் வுரைப்பாரென்று நாணுறவிரிந்த வன்பு
வீறுநின் பதந்தந்தாள்வாய் விமலவீரட்ட வாழ்வே. (கூ0)

* மைவனமைவயகனிபோன்றூந்து முனிவரன்கருணைகூர்ந்தேற்
குய்த்துணர் வளித்தவாறே யுன்னடித்தொண்டேயாற்றுஞ்
சித்தமா தியகளிக்க வற்பமெய் சிதையிக்கால
மெய்த்த நின்பதந்தந்தாள்வாய் விமலவீரட்ட வாழ்வே. ()

* ஒண்ணுதலுமையாள்பாகா வுலகளிந்தவனுங் காணுக்
கண்ணுதற் பரனேமூல காரணுநின்னை யன்றி
யெண்ணுதற் குளவோவேறிங் கெளியனை யாதரிப்பார்
நண்ணுதற் குளரோ கோவல்வீரட்ட ஞான்வாழ்வே. (கூஉ)

* எனப்பரிபாகத் தோடவ்வேந்த னொந்துரைப்பத் தேர்ந்த்
வினைத்தொட ரறுக்குங்கோவல் வீரட்டத்தெம்மானின்னோ
னனைத்துல கிற்குஞ்சாட்சியானு னம்மடியார் தொண்டா
வினித்தடை யென்னோநாமங் கேகுதற்கெவ்வுட் கொண்டே.

அக்கணங் கௌரிபாகத் தவிரொளி வீரட்டேச
முக்கணன் கடிதுசென்று முன்றமைக் கண்டவாறே
நற்கணிற் காணத்தோன்ற நரேசன்கண் டுளத்துருப்போ
லெற்கணித் தாய்ப்புறத்திங் கெய்தியுமெழுந்து சூழ்ந்து.()

*அந்தோவென்செய்கேன்போற்றுவச்சடனேனேயென்று
நைந்தோது மொழியைக்கேட்டநம்பனுமிவனற்றொண்டின்
மைந்தோதப் படுமோவென்றுவரையிலாவருண்மிக்கேந்தா
னொந்தோ தேல்யாமுன் றொண்டைவியர் தனநுவலக்கேன்மோ.()

* உன்போலக் குவலயத்துண் முக்காலு மொருவரேனு
மின்போலுமுடலென்றுன்னி வெண்ணீற்றோ ரெவரானு
மென்போலு மென்னக்கொண்ட தொண்டிலிவ் விடரைப்பெற்றும்
பின்§போலக்கொலையற்காக்கமுயலல்போற்பேசவுண்டோ.

* ஈண்டுநின் னுடற் புண்மாறச்செய்குவே னினிச்சின்னாட்பூ
வாண்டுநின் மகற்களித்துன் னரும்பத மடைதியென்று
பூண்டவன் பெம்மான்கூறக் கேட்டவேந்துடல் பொருந்த
வேண்டுமோவுலகினென்றுவிழிபுனல்சொரியச்சொல்லும்.

* ஐயவிவ்வுலகை விட்டுன்னடி யென்றுந்தொழுந் தொண்
டேற்குத், துய்யனே பணிக்கினுய்ந்தேன் மற்றொன்றுந்
துன்னற்கில்லேன், மெய்யனேயென்று தன்னைமறந்து மெ
ய்ப்பொருளிருப்ப, மையுலாங்கண்டன் றொண்டன் பத்தி
வண்மைக்குநைந்தே, (சா அ)

எக்குவலயத்தும் வெண்ணீறிட்டார் நாமென்று நம்ப
லுக்கொருகரி நீயானையஞ்சற்க வுன்னும் வண்ணங்

§ ஓலம் = இக்கக்குறிப்பு.

தொக்கநற் காட்சிதந்தோ மென்றவணயன் மால்தோயா
மிக்கநற்கழலை யென்றுங் கும்பிடுமேன்மை யீந்தான். (சுகூ)

பின்பெறற்கரியவாவி பெயர்தரச் சிந்தக்கண்டு [முன்னி
மன்பிறைலெம்பிரான் வெண்ணீறணிவர் மெய்ப்பொருளென்
முன்பெற வரியபேறு முந்தினான் முனைத்தைகவீக
னன்குலத் தழைக்கவந்த மெய்ப்பொருணரேசனம்மா. ( )

வேறு.

* தவவேடக் குகமுனிவன் சாற்றுபதேசப்படிக்குத் தணி
விலுள்ளஞ், சிவவேடமதுவே மெய்ப்பொருளென்ன வுன்
னும்வகை செயிர்சேர் தெவ்வன், பவவேட முட்கொண்டு
தற்கொல்வதறிந்தவனைப் பாதுகாத்தா, னவவேடங்கொள்
ளாது தாபித்தவண்மையார் நவிற்றற்பாலார். (எக)

* அரவினிடைத் துயில்வோன் றேடத்தேட வரியசேவடிக
ளேணுப், பரவைவாயிலிற் றாதுகொண்டோன் முன்பகர்
தொண்டத் தொகையினுள்ளே, விரவுவதாய் § வெல்லுமா
மிகவல்ல மெய்ப்பொருளுக் கடிமையென்றே, யுரைசெய்
யக் கண்டுமிந்த மெய்ப்பொருள் வேந்தியலையா ருரைக்கற்
பாலார். (எஉ)

* அமலநான் முடிவேந்த னரிச்சித்த விலிங்கப்பேரதையூகி
த்து, முமலநீக்கருண் முனிவன்மெய்ப் பொருளென்றுரை
த்தபெயர் முறைதப்பாது, கமலன்மாலறியான் மெய்ப்பொ
ருள் வடிவமடியனொன்றே கருத்துட்கொண்ட, விமலமீற்றி
னுமாருதப் பெயர்கொள் பெருமையார் விளம்பற் பாலார்.

* புனிதமாருச்சைவ நெறியிகழ்புன்மை யருள்ளந்துணி
பொருந்தி, யனிதமாறப்பேர் கொண்முப்புதல்வர்க ளின்
மூத்தவடன்மைந்தற்கே, யினிமைசேர் பரிசனத்தா ரோவர்
களும் பரிவாலெம் மிறைதானுன்னிக், கனிவுமாறுதேந்தல்
சொற்றபடி முடிசூட்டிக் கவினவைத்தார். (எச)

§ வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்-என்றார்.

* காமாரியெனுங் குமரன்றுணைவரோ டொன்பானிலமுங்
கதித்தசீர்த்தி, மாமாரிசொரிய நீதியிற்சொற்படி புரந்து
மருவாரெல்லா, மேமாறி யொளிப்பச்செய் வலிகண்டோ
ரேவர்களு நாரசிங்கக், கோமானென் றடிபரவக் கொண்ட
வுன்றன் குலப்பெருமை குறிப்பகென்றே. (எரு)

* பண்டைநாட் பிருகுகுகமுனி யௌவை முதலான்றோர்
பகர்ந்தவாக்கா, னெண்டிசையும் புகழுறுமெய்ப் பொருணா
யனூரீன்ற வியலார்வர்க்கங், கொண்டவிர்த்தி குறையாமற்
குலங்கல்வி செல்வம்வலி குறைபடாமற், றண்டமிழாதிய
நாடெங்கணுந் திகழ்ந்தபொன்னி நதித்தன்மை யேய்ப்ப.()

* பிருகுகவி வெள்ளிகுக முனியொடு தைவீகவிறைபெரி
யோரன்புக், குருகுளமெய்ப்பொருள்வேந்தன்வரையுரைத்
தவிவ் வறுவர்க்குளுற்றும்பேராற், பெருகுகுலப் பேயர்
யலைய நத்தமன்னனெனுஞ் சாதிப்பெயருங் கொண்டங், கரு
குதவிலா வுடையார் ‡ நாயனூர்பண்டாரி யாதியானூ (எ௬)

* மிக்கசிறப்புப் பெயர்கொண்டந்த கற்செற்றனருளான்
மிடலின்விஞ்சி, யெக்குவலயத்து முளதுட்டர்களை யடக்
கியின மிசையைநாட்டி, மைக்கள நம்மண்ணலடி யார்க்க
ன்றித்தாழாது § மகியின்விர்த்தி, புக்குமிந்தக் குலப்பெரு
மை யெவராலுமளவிட்டுப் புகலற்பாற்றே. (எஅ)

* நரசிங்கபூபனருண் மெய்ப்பொருடன் புதல்வர்கிளைநனு
கியெங்கும், பரவவைபச் சொன்னீக்கி நத்தமன்னனென்
றுசகம் பகரும்பான்மை, விரவியவப்பெயரு நத்தமான்
மன்னென்றுஞ்சுருங்கிவிளங்குமுன்ன, ருறைசெய்மற்றை
யிருசாதிப்பெயரிதுபோற்சுருங்கியெங்கு மொளிருமாதோ.

---

‡ நாயனூர்=நயினூரெனத்திரிந்து வழங்குகிறது. இப்பெயர் மெய்ப்பொருணாயனூருக்கேற்பட்ட ஒழுக்கச்சிறப்புப்பெயர். § மகி=பூமி.

குகமுனிதைவிக விறைகுலசேகரப் பெருமான் கொன்
றையான்சீ, ர்கமுடைய நரசிங்கமுனையன் மெய்ப்பொரு
ளோங்க லாதியானே, ரிகல்வலி செல்வங்களெச்ச விருத்
திகண்மெயபபதங்கண்மற்றுமேய்தன்முன்றம், பகமுடைய
கோவல்வீரட்டனருண் மலிவன்றிப் பகரவுண்டோ. (௮0)

வேறு.

இவ்வகை கோவல்வாழு மிறைவனுக்கடிமை பூண்ட
செவ்விய வன்பர்தம்மைத் தினந்தொறும் பூசைசெய்து
† கைவல மெளிதிற்பெற்றோர் பலரவைசுறுறத் பாற்றோ
கொவ்வைவா யுமைதன்கேள்வன் கூறுவதன்றி யும்மா. ()

சதகோடி கற்பத்தோனுஞ் சாற்றுதற் கரியவான
பதிவெணிக் கோவலண்ணன் மூர்த்தியின் மகிமைதன்னை
யிதமாகச் சிறிதுசொன்னே னினியெம்மான் மகிழ்ந்துவாழும்
பதிகளாகுங் கோவற்றுன மான்மியம் பகருவாமே. (௮௨)

மெய்ப்பொருணாயனார் சருக்கமுற்றிற்று.

ஆகச்செய்யுள்–௩௬௧௨.

உ

சிவமயம்.

# தானவிசேடச்சருக்கம்.

வேறு.

செழித்த புண்ணிய பலத்தினை யருளித் தீதகற்றி
விழித்திருத் தனிவீட்டினை யருள்வது கண்டாய்
பழிப்பினில் லருளந்த காந்தகனுறை பதியாய்
விழைத்த நற்றிருக் கோவன்மா நகரமேன்மேலும். (௧)

முன்னஞ் சொல்லிய வீரட்டமெட்டினு முதிர்ந்த
வன்னதன் பெருமைத்திற மறிவதற் கரிதா
முன்னுதற் கரிதுத்த மோத்தமமிடை யூற்றின்
றன்னந்தீ யினைத்தணித் தருண்மேகமே சாலும். (௨)

சூதமாமுனி யிவ்வண முரைத்தலுந் தொழுது
காதலான ஏகூபரன் காளசந் தரனார்
யாதுகோ வல்வீரட்ட நற்பெயர்முதற் பான்மை
போதவிங் கெனக்குணர்த்தென வம்முனி புகல்வான். (௩)

இமயமால் வரையீன்ற பைங்கொடி யெழில்பூத்த
வுமைமணாளனுக் கன்னவீரட்ட மொண் கயிலை
தனிலுமாசை கொண்டன்பொடு சார்ந்துறை குதலாற்
றிமிரமாற்றிய சிவபுரமெனப் பெயர் திகழும். (௪)

திருக்கை யீரறுவன்கை வேனின்ற செய்கையினாற்
றிருக்கை வேளூராம் புரமெனத்திகழ் பெயர்மூன்று
புரத்தினும் பிரசித்தமாய்ப் பொலிந்தது சைவ
புரத்தினுக் கரனருளினா லெனமுனி புகன்றான். (௫)

தாமரைத் தவிசணங் கொடுதாவில் வானமுதக்
காமதேனுவே முதலவாங் கபிலையின் கணமுந்
தாமமாபலி தானுமர்ச் சனைசெயுந் தகையா
னாமமொண் டிருக்கோவல மெனநயந் ததுவே. (௬)

---

† கைவலம்=முத்தி.

*நேமமோடு ரோமச முனிவனு மிகுளேயங்
தாமரைக் $ குசுமங்கொளுந் தபனனு நான்கு
தாமமார் முடித்தை விசனும் மருச்சித்த
நாமமொண் டிருக்கோ வலமென நயந்ததுவே. (௭)

* தாமரைக் கணான்ற விசினானும் முலகளித்த
வாமமே கலையுமையும் வானகமு மெண்டிசையும்
பூமிவேந் தர்களனேகரு மருச்சித்த பொலிவா
னாமமொண் டிருக்கோ வலமென நயந்ததுவே. (௮)

கண்ணுவன் னருச்சனையினாற் கண்ணுவ புரமாய்
மண்ணினின்மீ தொளிர்ந்தது பினர்மாமுனி கபிலன்
பண்ணு பூசையாற் கபிலமாபதி யெனப்பரவும்
பெண்ணைமா நதிவலம் பூகுஞ்சிவ புரப்பெயரோ. (௯)

ஐந்தலர்க் கணையவ னருச்சனை செயுமதனால்
வந்ததூர்பெயர் காமநற் புரமென மலியுந்
தந்திமா முகன் பூசனைபுரிந்த தன்மையினாற்
கந்தநீள் பொழிற்கணேச மாபுரமெனக் கவினும். (௧0)

கிருட்டிணன் றனதருந்தவங் கிளர்தலா லதன்பேர்
கிருட்டிணா ரணியம்மெனக் கிளத்தச்சேர்ந்தது மெய்த்
திருத்தருஞ் சிவபுரமு ருத்திர ரருச்சிப்பாற்
பிருத்தரு முருத்திர புரமெனச் சொலத்திகழும். (௧௧)

பின்னுமிப் படிப்பெட்டி னாலங்கெழிற் பூசை
துன்னியாற்றி னோர்பெயரினாற் பதிப்பெயர் துலங்கு
மன்ன புண்ணிய கேத்திரத்தருந்தவ மிழைத்து
மன்னினார்பலர் பெறலரும் பெற்றினை மன்னோ. (௧௨)

ஆதவன் சதுயுகமு மைந்துறைந் தனனாங்கு
வேதியன் சதுயுகமு மூன்றிருந்தனன் விருப்பான்
மாதவன் சதுயுகமு மேழ்வதிந்த னன்பாக
சாதனன் சதுயுகமு மைந்தமர்ந் தனன்சார்பால். (௧௩)

---

$ குசுமம்=மலர்.

வருசுவேண் முனிமூன் றிரண்டுரோம சன்காளி
பொருவிலா தொன்றுமாகர் போற்றுறுங் குருவொன்றே
கரிமுகத்தவன் மூன்று சண்முகன்கவி னுன்கு
வனமடந்தை யைந்திவை சதுயுகமுமாய்மதியே. (௧௪)

சேடனுன்குமா கபிலனங் கிரண்டுசெங் கோற்றே
வாடுமூன்று ‡ பார்க்கவ னிரண்டணி மிருகண்டு
நாடுமொன்று நற்சதுயுகமா மவணண்பாற்
றேடிவாழ்ந்தன ரருந்தவப் பேற்றினிற் சிறந்தே (௧௫)

பிரமஞானியாங் கபிலன் கண்ணுவன் குகன் பெருமை
மருசுவேண் முனிகுண்டி வச்சிரன் மிருகண்டு
கருதுமுத் தமவிம்முனி யெழுவருங் காம
புரமருந் தவத்தினில் வசித்தருங் கதிபுகுந்தார். (௧௬)

ஆயுளுந் திடபலமுட னுட்கத் திருவு
மேயவின்பமும் புதல்வரும் வென்றியும் விளங்குந்
தூயவிஞ்சையு மேற்கவி முகத்தனுய்த் தோன்று
நாயகன் சிவபுரத் தடைந்தவரொலா நயந்தார். (௧௭)

வேறு.

பூருவவுததிமேற்கு யோசனையோர் மூன்றினிற் பொன்னி
யின் வடபாற், சேருறுமைந்தியோசனையினி லருணபூதரத்
தினுக் கழற்றிசையி, லோருயோசனையிற் காஞ்சிமாநகரத்
துற்ற தென்பாலி னுன்காகச், சூரும்யோசனையிற் சிவபுர
மதனிற் சார்ந்தவர் மடந்தணந்திடுமே. (௧௮)

இசைத்தருடானம் யோசனைதூர மியற்றரும் புநிதமாமங்கு
வசித்தவர் பாவக்கடலது சுவற்றிக்கை வலம்வழங்கு கேத்
திரமா, முசித்துடன் மெலிந்து பிறவியிற்றிரிந்து முடிவி
லா வறுமையிற்றாழ்ந்து, பசித்தவரெல்லா மவ்விடம்புகுத
விட்டகாமியமெலாம் பலிப்பார். (௧௯)

---

‡ பார்க்கவன்=பரசிராமன்.

இவ்விடத்தணுகியாவரோயெனினுமைந்தெழுத் தொருதாஞ் செபித்தாற், கைவலம் புகுவார் காமியமெல்லா மிகத்தினிற் றுய்த்தது கடிந்தே, செவ்விதினிறையை யருச்சனை புரிந் தார் சேர்கதி மதித்திடப்படுமோ, வெவ்வினை தவிர்க்கு மத் தலத்தொன்று கோடியாய்விளையும் புண்ணியமே. (உ0)

சூலபாணியனற் றரிசனமுதல வல்லது சொற்றதோ வலத் தில், வேல்பொரு விழியார் மையலாதிய தீவினைகளைக் கு றித்தன்ட்டவாரங், கேலவே யொருநாளிரவு தங்குவரோலவர் கடமிருவினைத்துயர்தீர்ந், தாலமுண்டவனாருளினாற் பரம மாஞ் சிவலோகத்தை யடைவார். (உக)

வேறு.

அந்தகன்றனை யடர்த்தவீ ரட்டனை யன்பாற்
முந்து வேதிய ரோழுபத்தோ டிருமூவர்
சிந்தையன்பிறு லருச்சனை சிவபுரத்தியற்றி
நந்திலாத்தனி ‡ விபூதியை நணுகினாரன்றே. (உஉ)

அன்ன சைவமா கேத்திரத்தர னருச்சனையைத்
தென்னல் வேழ்வியைத் தவத்தினைச் சிறிதுஞாற்றிடினும்
பின்னர்நாயக னருளினாற் பெருக்கவு முற்றி
நன்னயந்து நற்சிவகதி நணுகுவ ரன்றே. (உ௩)

வேறு.

தவத்தோருமற்றேருமக்கோவலத்தேதாவாதுவியரவெருக் கொண்டிடாம, லுவப்போடிம்மைக்குண் மனதோடுகூட வுற்றுறொன்றத்தங்கிஞலங்கணுற்று, ரவப்பேறுமேமன்சினப் பேறுமாகா வம்மைக்கு ளூழுக்குளாழும் பழிப்பாம், பவப் பேறு மெய்தாது வீரட்டநாதன் பதப்பேறு பேறென்ப தென்கொல் வியப்பே. (உ௪)

கண்டார்கள் வீடெய்து வீரட்டநாதன் கழற்சேவையுங் கண்டு பெண்ணைக்கு ணீரா, யுண்டார்க டேவாவ ரோண்

‡ விபூதி=அட்ட ஐசுவரியம்.

ணீரதுறையு முலவாதகாவுந் தவத்தேறு ஞானங், கொண்
டார் வதிந்தெங்கு மெங்கும் பொலிந்தகோவற் புரங்கண்ட
பேருக்குமுண்டோ, பண்டோதுமற்றோர் தலந்தாமையும்
பின்பாவங்களுந் தீயலோகங்களும்மே. ௨௫

### வேறு.

* ஈடிலாதவத்தலத்தினி லெய்துவ தன்றி
நீடுவீரட்டத் திறைநகர்ப் பெயரினை நிறுவிக்
கூடுமன்பொ டெங்காகினும் பூசனைகுறிப் பார்
தேடுதற்கருஞ் சித்தியுற்ற மலன்றாள் சேர்வார் (௨௬)

* என்றுகூறக் கேளியக்கர் கோன்மதலையு முனிவன்
றுன்றுசீரடி வணங்கி நின்னையநீ சொற்ற
னன்றவ்வா றெவர்நணுகினர் நவிற்றுதி யென்றான்
பொன்றிலாத் தவச்சூதனுண் மகிழ்ந்திவை புகலும். (௨௭)

* முன்னஞ் சொற்றவோர் மூப்பநம்பியு மியற்சோழன்
றன்னை யொப்புற வரசுசெய்தும் முளஞ்சசிசேர்
பின்னையொத்த செஞ்சடை கொளெம்வீ ரட்டன்சேவை
துன்னவந்து வந்தடிக்கடி தொழுது போங்காலை. (௨௮)

* மைந்தன் வண்மைக ளறிந்தமெய்ப் பொருளண்ணன
விந்தை மிக்கவித் தலப்பெய ராதியவிளங்க [மகிமேல்
வந்தமா நகர்தனி லமைத்தண்ண றெண்டாற்று
இந்தமேம் படுதலத் தியற்றியவரு ளெய்தும். (௨௯)

* ஆதலா லவண்புரிதி யென்றரசனும் விடுப்பக்
காதலோ டேழின்மூப்ப நம்பியுங் கடிதபயன்
நீதில்பொன்னி நாடடைந்து சீர்க்குடந்தையைச் சேர
வாதரத்தொ டெம்பிராற் கியையாலய மமைத்தே. (௩0)

எம்பிரானிமா சலவல்லி வரைபுக வெறிந்தோன்
றும்பிமா முகன்றந்தை தாடுணித்தவன் முதலாம்
எம்புசீர்ச் சிவாகம விதிப்படியுளார் பதிட்டை
பும்பரிம்பருந் தொழுந்தகை செய்தரு ளோங்க. (௩௧)

வேறு.

* நலஞ்சிறந்த வந்நகர்க்குக் கோவலென்ற பெயர்நாட்டி நானுட்பூசைக், குலஞ்சிறக்க வுற்சவங்கள் புரிவித்துப் பத்திநெறி குலவலானுன், வலஞ்சிறந்த பன்னிருதார் நான் முடியோன் குலப்பேரன் வண்மைகண்டோர், தலஞ்சிறக் கத் திருமூப்ப கோவலென வோர்பெயருஞ் சாற்றினுரால்.

* அத்தலத்தின் மூப்பநம்பி திருக்கோவல் வீரட்டத் தம் மான்சேவை, யெத்தகையோ வத்தகையிற் றரிசித்துப் பொன்னிநதிக் கிறைவனுட்டை, மெய்த்தகையாகப் புரந்து விண்மண்ணும் புகழ்நிறுவி மிக்கசெல்வந், துய்த்திரண்டு சுதரளித்து நம்பெருமா னடித்தொண்டைத் துணையாக் கொண்டு. (கூகூ)

* இகழ்வெறுத்தங் கமைத்ததிரு வாலயத்திலிருந்து பணி யியற்றிமாசி, மகதினத்துற்சவ விழ்றிவுடன் மறந்தெந் தையைத் தந்திக்கவள்ளலுள்ள, மிகமகிழ்வாற் றரிசனந்தந் திரடிநிழலி லென்றுமே வத்தந்தான், றகவுடையோர் புகழ் ந்தேத்தும் வெள்ளிகுல சேகரன்றன் றனையற்கம்மா. (கூச)

* அயனளித்த சுதபிருகு முதற்குல சேகரன் வரையாமறு வர்பேரால், வியனுள மெய்க்குலப் பேருஞ்சுருதி மானெ னுஞ்சாதிப் பேருமேம்பட், டுயர்மூப்ப னெனுஞ் சிறப்பு ப்பேருங் கொண்டெழிலவலிசெல்வத்தோ டுண்மை, யம் ல்புடையத்தா யென்றுஞ் சிறப்புளவக் குலப்பெருமை யி சைப்பதென்னே. (கூரு)

* இந்தவிதம் பல்லோர்கள் வீரட்டன் றிருவருள் கண்டிச் சைவைத்தே, யந்தநகர் தனிலெம்மானைத் தாபித்தரிச்சிப் பதன்றி மற்றை, யெந்தவெந்த விடங்களினுங் கோவலெ ன்ற பெயர்நாட்டி யிறையைப்பூசித், தந்தமிலா முத்தியோ டிட்டகா மியமெல்லா மடைந்தாராமால். (கூசு)

* அவரவர்தங் குலமாதிப் பெயர்களின்பின் கோவலென் றே யறைந்தநாமங், கவருலகிற் கோவிலென்றே திரிந்து வழங்குறுந் தன்மைகாண்டி கோலத், துவணவிறைக்கெம் பெருமானகமகிழ்ந்து முன்முனைத்த வுண்மையிருக்கத், தவ மலிகோவலின் மகிமையெவராலு மளவிட்டுச் சாற்றற் பாற்றே. (௩௭)

வேறு.

திருநதீ இயுங்கச நதியுந்தின
மருவு சங்கம மாயபி ளுகியிற்
பொரு புனற்படிந்தே தர்ப்பணுதியை
யொருதரம் புரிந்தோர் கதியோங்கு வார். (௩௮)

மேன்மை மேன்மையு மிக்கதோர் புண்ணியப்
பான்மையும் பெறும்பான்மை கருதினோர்
வேன்மை யங்கண் மணுளன்றன் வீரட்டந்
தான் வசிக்கத் தனிக்கதி சாருவார். (௩௯)

யாது வேண்டினு மெந்தை சிவபுரத்
தோது பெண்ணை முழுகியொருதரம்
பாதிமாமதி யானைப் பணிந்தொரு
போதுவைகி லடைகுவர் போதமே. (௪0)

சீர்த்தி விஞ்சிய சீர்கொளி யக்கர்தம்
பார்த்திப திருக்கோவற் பதிப்பர
மூர்த்திதான மொழிந்து மறிந்தவா
தீர்த்தமும் மினியாஞ் சில கூறுவாம். (௪௧)

தலவிசேடச்சருக்க முற்றிற்று.

ஆகச்செய்யுள்-௩௬௩.

# திருக்கோவலூர்

# தீர்த்தவிசேடச்சருக்கம்.

பாரும் விண்ணும் பணியும் பரிசினாற்
சீரு நீரு மிலைந்த செருக்கினாற்
பேரும் வையம் பிணாகியென் றோதலா
லாரும் பெண்ணை யெம்மை யனைமாணுமே. (க)

* உலகை யூட்டியுய் வித்துறங்கிச் சங்கோ
டிலகு மாழியை யேய்ந்து திருமலிந்
தலகில் பாலவி யண்மி விளங்கலாற்
கலைசெகொண்கன் றனைப்பொரும் பெண்ணையே. (உ)

* தூமலிந் தரியுந் திச்சுழிவயின்
பூமலிந் துலகுக்கிதழூட்டிப் பொற்
றாமலிந்து விளங்கலிற் பன்னு நா
மலிந் தவனொனு நதி யறிரா. (ங)

* நம்ப னாரிடை நண்ணலியு நந்தியூர்ந்
திம்பரோர் வரையிற் பிறந்துந் தமிழ்
பம்புபா லவரித்தும் விண பாறியு
மும்பரோத்த நிற்கு முமை பெண்ணையே. (ச)

* அய்யன் பாலுதித்தும் மமைபால் கொடும்
வெய்ய தீவினை வீட்டியும வேல்கொடு
செய்ய வாரிக லக்கியுஞ் சேர்ந்தவ
ருய்ய வாற்றி யுயர்வரை மேவியும். (ரு)

* எண்ணி னாவாய் கொடும் மெதிர்த்தார்களை
மண்ணின் மாய்த்தும் வரைகட கர்த்துழக்
கண்ணெம்மானை வலம் வந்துங் காணலாற்
பெண்ணை யாழுறு கப்பெரு மானரோ. (சா)

வேறு.

* குளிர்வரைபுரந்து கொடுவரைபிளந்து கோடைமேற்பர
ந்து செஞ்சடிலத், தளிர்விரிகொன்றை யரனுரைப்படியே
தணந்துபன்மலர்க் கொடிதழுவி, மிளிர்தரு வானிற்றிரு
கை நீண்டிமைப் பின்வேண்டு காவதஞ்சென்று விமல,
னளிர்மலரடிகள் வலங்கொடு பணிந்துநந்தி மால்வரை வ
ரைகொண்டு. (எ)

* பாதிரிப்புலியூர்க் குணகடல் படிந்து பார்த்தவர் வெருவு
றப்பரந்து, கோதிரித்தளவின் மணிகொடு புவனங் குனிய
மேம்படுத்து மாழ்கொண்டு, கேதிரித்தரசர் மூவர்கன்னி
யர்தங் கேண்மைகொண் டெழிற்பிரமரங்கள், தாதிரித்
துலவுமலங்கற் றைவிகன்றூனைவரும் பிறங்கியுமே.(அ)

வேறு.

பிருத நீக்கி விளங்கு புநிதத்தா
ஒருவம் வாவிய வொண்ணிற லாற்
சுரரும் வந்து துன்னுந்து தொழுதலா
லரிய பெண்ணை யமுநமு மாமரோ. (௯)

கங்கை யாதி நதிகளுங் காதலி
னங்க ணீத்த மமரும் பிறங்கிமிற்
றுங்க வார்புனற் றெட்டவ ருண்டவர்
பொங்கு வாரருள் புந்திகொண் டாருமே. (௧0)

மக்களு மக்கண் மக்களுங் கரந்திபு
மொக்கலு நிதி யோங்கிய செல்வமும்
புக்கு வாழ்ந்து புராந்தகன் பாதமே
தொக்கு வார்பெண்ணை யாற்றினிற் றோய்குவார்.(௧௧)

சித்திரைத் திங்கட் சித்திரை நாளினி
லுத்த மஞ்செய்யு வாவினில் வீரட்ட
வத்தன் மென்முகத் தார்ந்த பிறங்கிமிற்
சித்தி சேரு முருத்திர தீர்த்தத்தில் (௧௨)

நான மாடி நவிலுஞ் சிவபுரத்
தான வண்ணலை யன்பிற் றொழுதர்ச்சித்
தேனை யோரு மிறைஞ்ச விசையுடன்
ஞான நாதன் செய்நல் லவிதியினால். (௧௩)

கோவ னுதனை யாட்டினர் கோறல்போய்த்
தாவி லாமுதற் பாவந் தணந்தகல்
பூவில் வாழ்ந்திட்ட காமம் பொருந்தியே
தேவருந் தொழச் சேர்வர் கயிலையே. (௧௪)

ஏவ ராகினு மெத்தினத் தாகினும்
வாவு முத்தர வாகினிப் பெண்ணையின்
மூவர் நாதனை யுன்னி முழுகினோர்
தேவ ராகுவர் திண்ண மிதேதரோ. (௧௫)

மறுறு மந்த மகேசனை யக்கினி
யுற்ற பெண்ணையி லோங்கு கபிலர்த
நற் றுறைக்க ணனைந்து பணிந்தவர்
பெற்ற பேறம ரர்க்கும் பெரிதரோ. (௧௬)

அத் துறைக்கு வடக்கி லமர்ந்தருட்
சுத்த கண்ணுவ தீர்த்தமுந் தோன்றுமாற்
பத்தி யாக விசாக பருவத்தி
னுத்த மத்தரதிற் குடைந் தோங்குவார். (௧௭)

வழுத்து காலத்தி னாயவத் தீர்த்தத்தின்
முழுத்த வன்பொடு மூழ்கி முதல்வனைப்
பழுத்த நெஞ்சிற் பணிபவர் காமங்கள்
செழித்து முன்னர் தினந்தின மோங்குமே. (௧௮)

இதற்கு மேற்கி லிராகவ தீர்த்தத்தின்
மதித் திலக்குவன் சீதைசெய் வாழ்தடத்
திதத்தி லாடின ரீட்டிய பாவம்போய்க்
கதிக்குண் மேய கதியிற் கலப்பரோ. (௧௯)

### வேறு.

இசைத்தநல் லிராமதீர்த்தத் தப்புறத் தியைந்த மேல்பான்
முசிப்பறு பரசிராம னற்றுறை மூழ்கினோர்கள்
வசைத்தபொய் மறையோர்க்கீறு மற்றுமா பாவந்தீர்ந்து
நசைத்தவ ரோடிங்கரம நற்பொரு டானுஞ் சேர்வார்.

அப்பரசி ராமதீர்த்தத் தடுத்ததென் றிசையின்மன்னுந்
தப்பறுதரும தீர்த்தத் தனிப்புனன் மூழ்கினோர்க
ளொப்பறு மறங்கள்பொன்று தோங்கிநித் தியத்துமேவிச்
செப்பிய நிறைந்தவாயுட் சேர்ந்தினி தூடுவாழ்வார். (௨௧)

இறையவன் வடபாலோங்குந் திருநதி யிசைந்துநின்ற
துறையினிற் பத்ரசங்கமெனும் பெயர்சூழ்ந்த தீர்த்தத்
தறையுந்தென் புலத்தார் தீர்த்தமரிதினில் விளங்குமாங்குக்
கறையிலாக் கயைக்குமேலாய்க் கதிவழங் குறையுளாமே.

அன்னநற் றுறையின் முன்னுளருஞ் சலக்காருவென்பான்
மன்னிநீர் குடைந்து தென்பால் வருநதி மருவிஞ்ஞான்
றின்னறீ ரதனீராடி யியைந்துமா ளயத்திற்பிண்டந்
தன்னையங் கிறந்தார்க் காற்றிலவர் பயன்சாற்றலாமோ. ()

அனந்தகாலமும் பிதிர்க்கண் மகிழ்வராற் கயையின்வானீர்
நனைந்தருள் பயனுங்கங்கா ஸ்நானத்தின் பயனுமேவிக்
கனம்படு கதியிற்சேர்வார் கழுமத்துறைக்குக் கீழ்பாற்
றினந்திகழ்ந் திலங்குசத்த விருடியுந் தீர்த்தமன்றே. (௨௪)

பங்கள நிறைந்தவன்ன மாதட மூழ்கினோர்கள்
பங்கமில் சுத்தான் மாவாயீசுர பதத்தைச் சார்வா
ரங்கணற் றுறைக்குக்கீழ்பா லாதவதீர்த்த மாகுங்
கங்கையிற் படிந்தோர் நாளுங்கண்டிடார் பிணிநோயம்மா.

இரதசத்தமியிற் றோய்ந்தோ ரிரவிதன் னுலகஞ்சேர்வார்
பரவுமத்தடத்திற் றென்பாற் †பாவகதீர்த்தந் தோய்ந்தோர்

† பாவகன்—அக்கினி.

கருதறிவுட னன்மைந்தர் பவுத்திரக்கணங்கள் சார்வார்
மருவிய துட்க்குத்தீர்ந்து மனம்புநி தத்திறுலே. (௨௬)

அவ்வழி தீர்த்தத்தோங்கு மாவணியுவாவிற் றேய்ந்தோர்
திவ்விய பிரமதேசு செறிந்தயன் பதத்தைச்சேர்வார்
வெவ்வினை தவிர்க்கும் பத்ரசங்கமே மேவியன்பாற்
செவ்வியதை யுவாவிற் சிரத்தையிற் படிந்தோரம்மா. (௨௭)

வினையெவன் றவன்றன்மேய கருணையாற் றிருமேதக்க
தனிமகிழ் கதியைச்சார்வர் சாற்றுமப் புநிதமான
புனிறை தடங்கடம்மிற் போற்றியமாகத் திங்கண்
மனியமத் தோடாடு மனித்தருந் தேவராவர். (௨௮)

அதிகநன் னியமத்தோடு மாகமாத்தி லன்பால்
விதிமுறை நானமாடி விளம்புதீர்த் தங்களெல்லா
மதியுனி கோவமேசன் மலரடியருச்சித் தேத்திற்
சிறுதவிலா வீடுசேர்வார் சிவநிசிமுறையுஞ் சேர்வார். (௨௯)

மாதரா ணங்கைநேர வாழிராகவ் புரத்து
காதலை வலஞ்சூழ் பெண்ணைநதி குளித்திறையை யன்பா
லோதுமார்கழி மாதத்தி ற்ற வாதிரையிற் பூசை [வார்.
போதவங்கிழைப்பார் நம்பன்பொற்பதந் தமதாய்க் கொள்

ஆயுளு மிசையுமாரு தணுகிரு செல்வமோடு
மேயநல் லறிவுமின்மை மிறுமையும் பயனைமேவித்
தாயினுங் கருணைமேய சங்கரனடியி னீழற்
றூயநன் முத்திசேர்வார் சொற்றதீர்த் தங்கூடேறய்வார். ()

இச்சிவபுரத்து மேயகபிலாதி யெண்ணி றீர்த்தத்
துச்சிதப் புனலிற்றோய்வா ருயர்பவமென் செய்வோமென்
றச்சமாம் விசாரத்தேங்கி யடைதர வழியுமின்றி
நச்சயில் பவனாப்போல நாசத்தை நணுகுமன்றே. (௩௨)

வேறு.

பார்புகழ் பத்திர சங்கமத் துறை
யாரொனும் படிந்தபேர்க் கினிய மங்களஞ்
சேரு மங்கதற் குள்ஞ்சேர் கிலாதென
வோருவோ ரிவ்வுல குழியி னில்லையே. (௯௩)

வேறு.

* கூறுபெண்ணையி லெண்ணரும் பேர்கண்முன் குடைந்தே
வேறுவேறு செய்பாவங்க டீர்ந்து மேம்பட்டா
ரீறிலாதவர் நதித்தகை யளவில தெனினுந்
தேறுமாறினு மறிந்தவா சிறிதுசொற் றிடுவோம். (௯௪)

* விரதுவிஞ் சியாசன் பணிமேவுறுந் தன்மைப்
பிரகலாதன னக்குரு மஞ்ஞுயிர் பிரீத்த
நரகுறும் பவம்விலக்கி மெய்ஞ்ஞானத்தை நணுக
வுரமுட னளித்ததுமந்த வொப்பிலோர் நதியே. (௯௫)

* கங்கை யாதியா நதிகள்பலாங் காசினியோர்செய்
பொங்குபாவங் கடணத்தழாற் காளிமம் பொருந்தி
பங்கயாசன னுரைப்படிப் பிணுசியிற் படிந்து
புங்கமாரொளி பெற்றுறின் புகலுவ தெவனோ. (௯௬)

* காமமாபுரி யெசுவையர் வேழ்விக்கா வின்பா
னேமமோ டபையெடுக்க வுட்கன்றிறந் திடத்தீ
வீமமா ரிருங்கத்தியால் வெம்பிமெய்ப் பெண்ணை
நேமமார்நதி யாடிமேம் படினென்னோ நவில்கேன். (௯௭)

வேறு.

அலகில்சீர்ச் $ சொன்னநதி சாருராரூரி
லந்தணன் பதுமயோ னியனும்
அலகிலா நிதிகள்பல வகையீட்டி
யணுக்கணு பிரர்க்குமீ யான்பால்

---

$ சுவர்ணம்=சொன்னம்-என்றாயது.

நலமறிதே வதத்தனு மறையோன் வறுமையா
　　ணலிந்தனை விற்கு
நணுகியன் றேனென்சொல் லேவலி னடந்து
　　•முணைவரிதாய் வந்தோனவிலும்
நிலையென்று கொளுமுன் செல்வமுநீயுங்
　　கேடுண்டு•நிரையமும்பெற்று
நிலத்தினில் வேதாளத் துருவடைதி யென்று
　　சாபப்படி நேர்ந்தே
யுலவுகால் பிரகச்சோ மனன்மனைவி
　　யுடன்றொடர்ந்த வண்மெய்மையெமலிக்க
வுயர்பெண்ணை தோயமுன் னுருவடைந்தே
　　யொளிர்ந்தனர் தனித்தனிமாதோ. (௩௮)

* காசிப நதிசார் பிரமதேசத்தைக்
　　காவல்செய் சுதவன் மனிகத்தைக்
காதலர்க் களித்து மனையொடு வனத்துக்
　　கருதருந் தவம்புரிந் திடுங்கா்ற்
றேசிகன் வசிட்டனுதி ஞானமுனிவர்
　　சேரவேந் துபசரித்திண்ணச்
செப்புபோ தாசமுனிவநீ யுலகாள்
　　செய்கையில் பசுத்தொழுப் புகுங் †கான்
பூசையார் வங்கேட்டாயனும் வெகுண்டு
　　புகலிருளிற் குறிப்பாகப்
§ புங்கமொன் றேவப் பூனைமேற்படாது
　　பொருந்தொராவிற் பட்டங்கொழிந்த
வசிஷுக் கிழையாப் பராமுகமடைந்த
　　வப்பழி யுன்னைவிட்டகல
வாடுதி பிணுகியென வவ்வாருடி யருநெறி
　　கொளினென்றே வறைவேன். (௩௯)

---

† கான்பூசை=காட்டுப்பூனை. § புங்கம்=பாணம்.

வேறு.

* இவ்வினையுலகி னுள்ளனவெல்லாந் தனதெனக் கொண்டுசீர்கெட்டுப், பாவியென் றன்னையாதியோர் நீக்கப்படுங் கொடுநோயினால் வருந்திப், *பூவினிலேற்றுச் சேதுவுமின்றிப் புலம்பிக் கான்சென்று வீழசுத்த, னுவிபோங் காலைப் பெண்ணைமாநதி நீராடிச்செல்படிக னென்பானும். (௪0)

* எண்ணறு $முறவியீக்கண் மொய்த்திருப்ப வேனஞ்சேனா†மெகின்சூழக், கண்ணும்பஞ் சடையவாய் பிளந்தவனுங் கிடந்தமைகண்டு கைக்கடங்கொள், பெண்ணைநீ ரவன்வாய்ப் பெய்தலும் புசிக்கப் பிரிந்தவான் மாவினைக்கொள்ள, நண்ணெமதூதர் சிவகணத்திருந டுவன்பாலடைந்திவை சொற்றார். (௪௧)

* யாங்கள் தீண்டுவதற் கருவருப்படைந்த விக்கொடும் பதகனை யரன்சீர், தாங்குவார்கொளுந் தகுதியுமுண்டோ சாத்துதியென விறைகணத்த, ரோங்கனோர் பன்னற்கொரு சிறுபுலிங்க முறலன்றி வேண்டுமோவதுபோற், நீங்கள் விலவாயினும் பிறுகியிவ்வூர் திவலைமேல் வேண்டுமோதீர.

* என்றுரைத்திடக் கேட்டிருவெவ்வி யிதயமிதமுடன் களித்தெத மான்கணத்தீர், நன்றிவற்கொடு போமென விடுவிக்க நம்பன் மெய்யடியரிற் கொடுபோய்த், துன்றுசீர்ச் சிவலோகத்தி னிலென்றுந் துலங்குறவ சுத்தனைவைத்தார், வென்றியோய்பிறுகிப் பெருமையை யயன்மால் விளம்பரிதெனிலென்னோ விரிப்பேன். (௪௩)

வேறு.

* மெச்சுறு மறைகிளர் வியாதனே நிகர்
குச்சமாமுனி கௌசிகப்பேர் கொண்டமெய்
யிச்சையா லிருவரு நோற்றன் மிக்கிட
நச்சியா வுலகினு நணுகித் தேடினார். (௪௪)

---

$உறவி=எறும்பு. † எகின்=நாய்.

* மண்ணை நீக்காதி யாமகிமை மீக்கொளும்
பெண்ணையை யறிந்தன் னோராடிப் பெட்பினி
லெண்ணருந் தவமெளி தெய்த மேம்படி
னுண்ணிய நதிச்செய னுவலும்பான் மைத்தோ. (சரு)

வேறு.

* நின்மலனெனு மோரந்தணன்பான் மண்டுகனென்பானி
றைகலை கற்றுட், டின்மலமகலா தாணவமலங் கொண்டா
ரியற்றூற வோரவன்வெஞ், சொன்மலப் பிரமராக்கதனாகித்
துயரொனில் கொண்டுநாரதனாற், பொன்மலர் திகழும்
பிநாகியிற்படிந்து பூசுரனாயினென் புகல்வேன். (சசு)

வேறு.

* அக்கநியன் காக்கடத்தினைக் குளிழ்த்திட வதனூன்
மிகுத்த கோபத்தான் மகோதரம்பெறச் சொலவேழ
முகத்தெமா னதிலாடவத்துயர் கெடின்முடிவின்
முகத்துவஞ் செறிபிநாகியின் பெருமையார் வகுப்பார். ()

* வினைப்பிணிமிக்க தன்றமையனன்/மனைவியை மருவ
நினைப்பில் வைத்தொரு நாளிரவசுர ரின்னேரக்
கனக்கருங் குழலறிந்து கடிபகற்றக்கொள் கருத்தோய்
நினக்குவாய்க் கத்தீநிரயங்கோர் நோயென நிகழ்த்த. (சஅ)

* கேட்டுவெள்கி நின்மலனிறந் தெணிற்கிளர் நரக
மூட்டுதுன் பத்தினுழன் றுலகிடை முன்போன் முளைத்தூழ்
கூட்டும்ராச ரோகமும்பெற வவையவங் குறைந்து
நாட்டுமெய்த் தவரோம சன்சொலப் பெண்ணைநணுக. ()

வேறு.

* ஆடியோ ராண்டுட் செய்யமெய்யினை யடைந்தானந்தங்
கூடின னிவனின்றிச் சனந்தனன் மனைவியோடு
நீடுகண் ணிலாதிருக்க வவர்க்குப சரிக்கனோரா
† தூடுதறவத் தாற்கொண்ட சுதற்கிரு வருமுறைப்பார்.

---

† ஊடுதல்=நீங்குதல்.

* தந்தைதா யிருவர்செல்வ னிருப்பினுந் தணந்துபோகன்
மைந்தர்கட் கிலாதிருக்க நயனுதிவலி யொன்றின்றிச்
சிந்தைநொந் துழலுமெங்கடமைவிட்டுச்செலனீதூய்தோ
வெந்தமேன்மையுநீயெங்கட்பின்னெய்தியெய்தாயென்றார்.

* அச்சொலை மதிக்காதன்றோ னகன்றருந் தவமியற்ற
மெச்சுமத் தவங்கெடுக்க விண்ணவர்க் கிறைவனேவா
‡ லச்சுதன் கவானுதித்தா ளடைந்தவன் றனைமருட்டி
நச்சுறுதவத்தைப் பின்னுநணுகாது செய்து சேர்ந்தான்.

* சின்னாட்பின்னன கனந்தத்தெரிவை யின்பம் வெறுத்து
முன்னாற்சொன் னதைமறுத்துத்தவமுயன் றிடுங்காலீன்றோர்
சொன்னடா வகைகளாதித் தோடங்கடொடர்ந்து மெய்
யின்னன் னீர்மை குறைபடமேக ரோகமாய் நணுகிற்றம்மா.

வேறு.

மனம்வெறுத்துப் பராசனடிவணங்கி வருத்துவதுனாக்க
மைந்தரிய, வினைவெருத் தேகப்புரியும் பெண்ணைப்பாரதி
யென்றான் விதித்தவண்ணம், தினம்விதியா லோராண்டு
வரையாடிக் குட்டநோய் சேர்ந்துய்ந்தானுற், றனதசுதமு
னைநபிச வனமுனிவர் தாங்கேட்டுத் தமியேம்பண்டு.

வதிட்டனியிச் சக்கரவர்த்திக் கன்பால் வகுத்தபடி விரித்
துவண்மை, கதித்திடவுங் கூறினும்பிரமாண்ட புராணத்துங்
களைத்தயாவு, மதித்திடத்தா லறிந்தவன்னோர் யாவருமங்
நரியாடி மகிழ்வாலுள்ளத், துதித்தபடி சித்தியுற்றே கினர
வையுட் சிறிதுசிறிதுனக் குரைத்தேன். (௫௫)

* கூறுமிந்தப் பிறுகிநதி தனக்கடைந்த கொள்கையெல்லாங்
குமரற்பெற்ற, வாறுடையெம் வீரட்டத்தம்மான் றனரு
ண்மலிவையன்றியுண்டோ, வீறுகருமக்கழிப்பாற் பூவுலக

---

‡ அச்சுதன்கவான் உதித்தாள்—திருமாலின்
றொடையிற்பிறந்த உருவசி.

தீதுள தீர்த்தமேன் மேலென்று, தேறும்வகை புகன்றாந் நதிகள் படியிந்நதியின் செயலென் சொல்வேன். (௫௬)

செந்துவர்வாயீக் கௌரிதவம் பெருக்கும்வரை யிருந்து நந்தி செய்தவத்த, நந்தவிறை பிஞகத்தாற் சடைநீவிக்கங் கைநந்தி சிரத்தினல்க, வந்தநெடிம புனல்பொங்கி யெவ்வு லகத்தையு முய்வித்தருள்வதற்கே, வந்ததும் பாறநிநேயம வந்ததாதியமகிமை வகுக்கற்பாலார். (௫௭)

தண்ணுறைந்தபிஞகி பாறநிநேயதரங்கிணிவே கவதிகங் கை, யுண்ணிறைந்த வருளவ்வை வாக்கனுசாரியு நந்திநீத் தமொப்பில், கண்ணிறைந்த சருவதிரகருணியகண் டகுடி ஞை களைப்பரின்னு, மெண்ணிறந்த கொளுநமப் பெண் ணைநதி பெருமையாரிசைக்கவல்லார். (௫௮)

வேறு.

* பன்னுநந்தி மால்வரை முதற்பிற திரிப்புலியூர்
நன்னுபெண்ணை யாறெவண்படியினு மிடட்ந்துய்க்கு
மன்னுமையுமை தாயினுங் கோவலில் ரட்ட
முன்னுமா னடியுள்ளி நானஞ்செய்து மகிழ்வால். (௫௯)

அன்னங்காஞ் சனமாநிலத்திலந்துகில் கன்னி
யின்னதே முதற்றானங் ளேனுமா றீய்ந்தோர்
பன்னுமொன்றொரு கோடியாய்ப் புண்ணியம பலித்துத்
துன்னுவார் பரகதியினை யெளிதினிற் றொடர்ந்தே. (௬௦)

கோவலுறதனைக் கூவிள மர்திபோ ரிலேயா
லாவலாலுருச்சித்தவ ரகண்ட பேறடைவார்
தேவர்கட் கரும்பதத்தினை யெளிதினிற் திகழ்ந்தே
நாவிமான் மதமணிந்தவர் நகரமே கைலை. (௬௧)

சாதிசண்பகம் பாடல மல்லிகை தழைந்த
கோதில்புன்னை மாமலரினுற் கோவலத் திறையைக்
காதலா லருச்சித்தவர் கயிலையை யடைவார்
யாது மங்கவர்க ளரிதிலை யையமுமிலையே. (௬௨)

பரவுபெண்ணை நீராடியே பரம வீரட்ட
னிருகழற் கமலங்களுக் கருச்சனை யியற்றி
யொருபகற் றிருக்கோவலி லுறைந்தவ ரன்றிக்
கருதுமற சிவன்வே றிலையென்றுநீ காணே. (௬௩)

அறிவினாய் நளகூபர யாழனைக் கின்று
சிறிதிசைத் தனந்தீர்த்தங் களங்குரோச மதா
தறியிக்ஷேத்திரக் கோவலூர நயந்தநீ றொல்லா
முறுமவத்தை தீரகங்கை யென்றுள்ள மீக்கொள்ளே. ()

உரைத்த தீர்த்தங்கள் வைகறை துயிலெழுந்துள்ளுந்
திருத்தினு லிருங்கங்கை யாடியபல னெய்தும்
விரித்துரைப் தென்னிசைய மிஃதென விரித்தான்
றிருத்தகுந் தவச்சூதமா முனிமகிழ் சிறந்தே. (௬௫)

வேறு.

கோவன்மாநகர் சூழ் தருபஞ்சகுரோச புண்ணிய க்ஷேத்தி
ரமதனில், யாவரோனு மங்கிறந்தவர் காளகண்டமும்மதிவே
ணியுமிலகத், தேவதேவனாஞ் சிவனுருத்திகழ்வ ரிதுண்மை
மிங்கிஃதுண் மகிழ்ந்தறிவாய், தாவிலா வருட்சுரர்த் வீரட்
டன் சரித்திரந்தனை வினவியதவனே. (௬௬)

* என்றுசூதபுங்கவ னுரைத்துள்ள மிழுதையொத்து மெ
ய்கம்பிதமெய்தத், துன்றுநோக்கி லானந்தநீர் சொரியத்
துணைக் கரஞ்சிரமுகிழ்த் தெழுந்தசல, நின்றபான்மையிற்
றெற்றிசைநோக்கி நிற்றல்கண்டிரு நிதியுளான்றனய்,
என்றம்மா முனிக்கதிதவானந்த மடைந்துதாழ்ந் தெம்மா
னருண் மலிவடைந்தான். (௬௭)

* வெய்யவேலையில் வீழ்ந்துழல்வேனை மீட்கவெண்ணியிவ்
வேலையைக்கொடுத்திங், கையவேலை நீங்குறககரியறிவித்
தருந்தமிழ்ச் செயுளமைத்திடும் வலிதந், துய்யுஞ்சீரடி
யாரொடு தானுமுகந்து கொண்டருள் வீரட்டத்தெமமான்,
செய்யசேவடிக் காருதகாதல் சோவதன்றி யான்செய்வ
தென்மன்னே. (௬௮)

வேறு.

எண்ணலா னன்ப ரெண்ணலா னெண்ணலா ரிதைய
நண்ணலான்பர வெளியொளி நண்ணலா னவின்று
கண்ணலான் புறக்கண்ணலான் கண்ணனெங் கணற்கு
மண்ணலா னண்டத் தண்ணலா னென்னுளே யமர்ந்தான்.

வேறு.

வினையை வென்றார் திருக்கோவன் மான்மியமுமாமிக்குதை
யை மெய்ஞ்ஞானத்தாற், கனிவினொடாகினு மஞ்ஞானத்
தெனும் வினைவினோ கற்றோர்சொன்னோ, ரினிதிம்முறை
வரைந்தோர்கள் சுமந்தோர்கள் நினைந்தோர்க ளியாருமிம்
மை, தனிலதிக செல்வமெலாந் துய்த்திறைவ னடிநிழற்
கீழ் சாருவாரோ. (௭0)

வேறு.

* திருநீறு பஞ்சாக்கரம் ருத்திராக்கந் திகழ்ந்தென்றும்
வாழிசூழாழி சீகாழி, வருஞானசமபந்தா வாகீசராரூர் வா
தர்மணி வாசகரை யாதியாசொல்வாழி,குருஞானகுகமுனி
திருப்பீடவேந்தா திக்குலசேகரன்வாழி நரசிங்கமுனையர்,
தெருமாறு முளமார்மெய்ப் பெருமுனைப் பெருமானார் சீர்சேர்கோ
வலம்பதியுள்ளார் வாழி வாழி.

வேறு.

மறைவாழி மறையாகமமும்வாழி மதியிரவி மழைவாழியிம்
முறைவாழிமகிழ்கோவனகர்வாழிமுத்திக்கண்முதுசைவநூ
னெறிவாழி சிவநாமமிகவாழி யிந்நூலி னிறையன்பினோ
ரறிவிழியுடனுளுமிகவாழி வீரட்டனருள் வாழியே

தீர்த்தவிசேஷச்சருக்கம்-முற்றிற்று.

---

ஸ்ரீ வீரட்டேசுரர் திருவடிவாழ்க.

தெய்வீகபுராணமென்னும்

# திருக்கோவலூர்ப்புராணமுற்றி

---

உ

சிவமயம்.

மாயூரம் சைவசித்தாந்த பாடசாலை தலைமை உபாத்தியாயர்
மகா-ள-ள-ஸ்ரீ குஞ்சிதபாதம் பிள்ளையவர்கள்
இயற்றியது.

வண்மையார் மூன்செய்யுளைந்து சதமிருவத் தொன்பானும் வாக்
கின், றின்மையா றௌவை நிருப்பாபதின் மூன்றூரன் நிருப்பா
ரண்டு, மூன்மையோர் இறைநிருபர் சௌந்தரராஜன் கவியா
யிர்நூற்றெண்பத், தன்மை யொன்றியாவுஞ் சேரவாயிரத் தேழ்
சதமிருபத் [illegible] ... ... ... ... ... ... ... (க)

---

## [illegible] புராணத்தடங்கிய செய்யுட்டொகை.

| | | | | செய்யுள். |
|---|---|---|---|---|
| சிறப்புப்பாயிரம் | ... | ... | ... | 27 |
| [illegible] | ... | ... | ... | 7 |
| [illegible] | | ... | ... | 10 |
| [illegible] | | | | 9 |
| [illegible] | | ... | ... | 25 |
| நூலின் கூடுதல் | | ... | ... | 1725 |
| | | | ஆகூ | 1803 |

## பிந்தியகப்பட்ட பிழைதிருத்தம்.

| பாட்டு. | அடி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| அவையடக்கம். | | | |
| 5 | 3 | தெருளிருக்கும் | தெருளிருக்கா. |
| [illegible]7 | 2 | வாழ்த்தி. | வாழ்தி. |
| 28 | 2 | தொடன்றல். | தோடன்றல். |
| [illegible]5 | 4 | வீற்றிருந்தான். | வீற்றிருந்தான். |
| கா | 2 | அன்புளத்திக். | அன்புளதிக். |
| | 1 | பேறுகூயத்து. | பேறுக்குய்த்து. |